தெய்வச் சேக்கிழார்

அருளிய

சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்.

(மூலமும் உரையும்)

உரை:-
கோக்கலை ஜேராஜன்

தெய்வச் சேக்கிழார் அருளிய

சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்

(மூலமும் உரையும்)

உரை :

கோக்கலை ஜோராஜன்

மகராணி

W-146, அண்ணாநகர் மேற்கு விரிவு

சென்னை - 600 101.

நூலின் பெயர் : Thalve Chekkizhar Arulla
Sundaramoorthi Nayanar Puransm

முதற்பதிப்பு : 1998

பக்கங்கள் : 612×10=622

வெளியீடு : Maharani
W-146, Anna Nagar West Extn
Chennai - 600 101

அச்சிட்டோர் : Cnithra Pirinto Graphi
Ponnu awami Street,
Chennai - 14.

விலை ரூ. : 80-00

இதுவரை உரையிசைத்த பாடல்களுக்கான விவரம்

நூலின் பெயர்	பாடல்கள்
1. பேரறிவுக் கலஞ்சியம் பட்டினத்தார் பாடல் (விருத்தியுரை)	573
2. தாயுமானவர் பாடல்	1452
3. அதிவீரராம பாண்டியனார் அருளிய நைடதம்	1172
4. புகழேந்தியார் அருளிய நளவெண்பா	428
5. திருமங்கை மன்னர் திருவாயமுதிர்த்த சிறிய திருமடல்-பெரிய திருமடல் (கண்ணிகள்)	226
6. திரு ஆண்டாள் அருளிய திருப்பாவை	30
7. தெய்வச் சேக்கிழார் அருளிய திருஞானசம்பந்தர் புராணம்	1256
8. நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் (திறனாய்வுரை)	100
9. தெய்வச் சேக்கிழார் அருளிய திருநாவுக்கரசர் புராணம்	429
10. தெய்வச் சேக்கிழார் அருளிய சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்	986
மொத்தம் பாடல்கள்	6652

ஆசிரியரின் பிற நூல்கள்

மொழி இலக்கியம் உரை நூல்கள்

1. தெய்வச் சேக்கிழார் அருளிய திருநாவுக்கரசர் புராணம்

2. தெய்வச் சேக்கிழார் அளியரு திருஞான சம்பந்தர் புராணம் (மூலமும் உரையும்) முதற்பாகம்.

3. —do— இரண்டாம் பாகம்

4. நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் (மூலமும் திறனாய்வுரையும்)

5. பேரறிவுக் களஞ்சியம் பட்டினத்தார் பாடல் (விருத்தியுரை) முதல் நூல்

6. —do— (இரண்டால் நூல்)

7. அதிவீரராம பாண்டியனார் அருளிய நைடதம் (மூலமும் ஆசிரியர் உரையும்)
   "NAIDATHAM" is a good piece of literary work, Mr. KOKKALAI J. RAJAN had made the work available to the present day Tamil Literary world. The Commentator cum Publisher has to be congradulated on this good venture. The Hindu Dt. 19-5-92

8. புகழேந்தியாரின் நளவெண்பா (மூலமும் ஆசிரியர் உரையும்)

9. தாயுமானவர் பாடல் (முதல் நூல்) (மூலமும் ஆசிரியர் உரையும்)

10. தாயுமானவர் பாடல் இரண்டாம் நூல்
(மூலமும் ஆசிரியர் உரையும்)
.........The present commentary by J. Rajan is simple and unassnming. He gives the word-to-word meaning for the correct and easy understanding of all. The Hindu Dt 6-3-96

11. திருமங்கை மன்னர் திருவாயமுதிர்த்த
சிறிய திருமடல் பெரிய திருமடல்
(மூலமும் ஆசிரியர் உரையும்)

12, திருஆண்டாள் அருளிய திருப்பாவை
(மூலமும் ஆசிரியர் உரையும்)

.........Thruppavai the sacred work of Andai, is published by Kokkalai J. Rajan with his elabarate cemmentaries. Every poem is presented in the prose form and it is followed by necessary interpretations and glossary. This Bock is Quite useful to the devotaes and to those who are Interested in Tamil literature The Hiudu Dt, 6-2-96

மொழி இலக்கியம் திறனாய்வு நூல்கள்

13. இலக்கியத்தில் கடவுள் வாழ்த்து
ஒரு ஆழ்ந்த சிந்தனையின் விளைவாகப் படைக்கப்பெற்ற ஆராய்ச்சிப் பெருநூல். பாராட்டுக்குரிய பைந்தமிழ் ஆய்வுத்திரட்டு.
அமுதசுரபி டிசம்பர் 1991

The author has made a sincere attempt to collect and ennotate the pcems on devotional themes rhat are found in the

tamil apics narrative idylls anthoiogits. ethicai work and some prabandha.........on the whole the book has a reference value

THE HINDUIES Dt. 24-12-91

14. நறுந்தொகை விருந்து (இரண்டாம் பத்தி)
''அழகின் சிரிப்பைச் சற்று வித்தியாச மான கோணத்தில் ஆயவு செய்யும் இந்நூல் இலக்கியச் சுவைஞர்களுக்கு நல் விருந்து''

அமுதசுரபி

''பெண்மையின் பேரெழிலை மூன்று இலக்கியக் கட்டுரைகளில் சித்தரிக்கும் நூல், தமிழின் செழுமை நூல் முழுவதும் தித்திக்கிறது. ''ராஜம் மாதர் மாத இதழ்''

15. தோலாமொழியாரின் சூளாமணி சுவைகள்

16. நறுந்தொகை விருந்து (முதற் பத்தி)

நாட்டுப்புற இலக்கிய வரிசை

1 . நல்லதங்காள் (நாடகம்)

18. சீதா கல்யாணம் (நாடகம்)

19. பாதுகா பட்டாபிஷேகப் (நாடகம்)

20. ஜடாயு மோட்சம் (நாடகம்)

21. வாலி வதம் (நாடகப்)

......For creating this Valivatham, Kokkalai Rajan has followed the Valmiki Ramayanam Version. The auther has presented the story

in the prose form. He has successfully made ali attempt to preaent the story in the readable manner. This tiny volume will be useful to all Ramayana lovers and the common readers as well. The Hinbu Dt 18-3-97

22. சூடாமணி (நாடகம்)

The book, the fourth in a series, is a dramatic presentation of the sundarakandam of Valmiki Ramsyana in simple and readable Tamil. The idea is that a villager must be able to understand not only what is written but be proud that he or she is an enviable Inheritor of the greatest classic.

The author has an innate gift to build a play with all its elements in the right proportion. The language has a certain austerity that it is really a nice religious experience to read. Ir is thoroughgoingly honest, chaste and no character is denigrated. What is greatly satisfying is that the author neither blow his trumpets any where, nor distorts the original in the guise of interpretation.

He must be complimented on bringing the classic in adramatic form to an average Tamil reader. The book deserves to be recommended at the school level as an additional text-book It will come in handy as a good text giving exercises in loud reading in a Tamil.

The book carries on the front cover a relevant and pious illustration of Lord Hanuman meeting Sito Devi. The earnest-ness and utter piety of the author is laudatory. The Hindu Dt. 12-8-97

23. இராமர் பட்டாபிஷேகம் (நாடகம்)

பயன்தரு அகர வரிசை நூல்கள்

24. இந்து சமயச் சொல் அகராதி
'இந்து சமயம் பற்றிய நூல்களைப் படிக்க விரும்புகிறவர்களுக்கு இது ஒரு நல்ல அறிமுகமாக அமையும்' 'ஞானபூமி அக்-1992

"The work under review must be con idered as valuable work in Tamilology The author has done a valuable service to the religlous world by compling this dicitionary." The Hindu Dt. 8-2-92

25. உண்பொருள் குண அகராதி

கைவசமிருந்தால் நோயில்லா நல்வாழ்வு பெறலாம். ராஜம் மாதர் மலர்

26. கனவுக் கையகராதி

".....The author has taken pains to compile a dictionaty on dreams and their impact on day today life- A noval experi-ment. Readers should find the book interesting." THE HINDU Dt. 21-2-88

—: o :—

உள்ளுறை

—: o :—

முன்னுரை

பெரிய புராணம் என்றாலே அதை யாராலும் படிக்க முடியாது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுவதுண்டு. அத்தகைய பெரிய நூலை எல்லோரும் படித்து இன்புற வேண்டும் என்று ''பிள்ளையார் பாதி புராணம் பாதி'' எனும் பழமொழிக்கு ஒப்ப முதலில் திருஞான சமபந்தர் புராணம் 1256 திருவிருத்தப் பாக்களுக்கு உரை எழுதி வெளியிடப்பட்டது. திருஞான சம்பந்தர் புராரணத்தைப் பயில்வதென்பது திருநாவுக்காசர் புராணத்தைப் பயிலாது நிறைவு பெறாது ஆதலின் திருநாவுக்கரசர் புராணம் 429 பாடல்களுக்கு உரை எழுதி வெளியிடப்பட்டது.

சேக்கிழார் பெருமான் பாடிய பெரிய புராணத்துக்குக் காப்பிய நாயகன் சுந்தரமூர்த்தி சுவாமிகளாகும். சைவப் பெருங்குரவர் நால்வருள் மாணிக்கவாசகர் நீங்கலாக, சேக்கிழார் பெருமான் பாடிய மூவருள் சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் 986 பாடல்களுக்கும் உரையிசைத்துத் தமிழ் கூறும் நல் உலகம் பெரிய புராணத்தைப் பயின்று பயனடைய வேண்டும் எனும் பெருநோக்குடன் கொடுக்கப்படுகிறது. இந்த மூன்று நூல்களையும் பெரிய புராணத்துக்கான மீதமுள்ள உரைநூல்களையும் அனைவரும் வாங்கிப் பயனடைய வேண்கிறேன்.

உப்பில்லாக் கூழும் உரையில்லா நூலும் பாழ்

சென்னை-600 101.

கோக்கலை ஜேராஜன்.

சுந்தர மூர்த்தி நாயனார் வரலாறு

திருக்கயிலையிலே பரமசிவனார் தமது அருட் சக்தியாகிய பார்வதி தேவியுடன் எழுந்தருளியிருக்க அந்த இறைவனுக்கே திருத்தொண்டு செய்யும் அடியார்களுள் ஆலால சுந்தரர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு நாள் திருக் கயிலையிலுள்ள மலர்ச் சோலையொன்றில் பரமசிவனுக்கு என்று மலர் கொய்து கொண்டிருக்கையில், பார்வதிதேவியின் தோழியருள் அனிந்திதை கமலி எனும் இரு மகளிர் ஆலால சுந்தரரின் ஆண்மையில் தங்களைப் பறிகொடுத்து அவரை அடைந்திட இருவரும் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் கொண்டு மனதால் காமுற்றனர். ஆலால சுந்தரும் அம்மகளிரின் பேரெழிலில் தம்மை மறந்து அவர்கள் அருகில் சென்றார். ஆலால சுந்தரர் அவர்களை நோக்கி வருவது கண்ட கமலினி அவர் அருகில் சென்று, ''ஐயா! தாங்கள் யார்? இது பார்வதிதேவியின் அந்தப்புர நந்தவனம். ஆடவர் இங்கு வரக்கூடாது'' என்றாள். ஆலால சுந்தரர் அப்பெண்ணின் தேன் மொழி கேட்டு, ''பெண்ணே! நான் கயிலாய நாதன் சர்வேசுவரனுக்கே தொண்டாற்றும் அடிமை. என் இறைவன் சிவபெருமானின் பாதங்களை அலங்கரிக்க மலர் கொய்து செல்ல இங்கு வந்தேன். இங்கு வந்ததே

என் பெரும் பாக்கியம்'' என்று சொல்லிக் கொண்டு கமலினியைக் கடைக் கண்ணால் பார்த்து இன்புற்றார். ''அப்படியென்ன பாக்கியம்? இங்கு என்ன புதையலா கிடைத்து விட்டது?'' என்றார் கமலினி. கமலினியின் கேள்வி ஆலாலசுந்தரரை ஆனந்தக் களிப்பிலாழ்த் தியது. ''ஆம் புதையல்தான். குபேரனது சங்கநிதி பதும நிதியினும் மிகச் சிறந்த புதையல்'' என்றார். அப்பொழுது அனிந்திதையும் அருகில் வந்து ''பொன் னுக்கு ஏங்கும் பேராசைக்காரர் போல் தெரிகிறது'' என்றாள். ''இல்லையில்லை பொன்னே உருவான பெண் நீங்கள் இருவரிருக்க எனக்குப் பொன் எதற்கு?'' என்று சொல்லிக் கொண்டு கமலினியை வலது கையி லும் அனிந்திதையை இடது கையிலும் அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டு நடந்தார். இரு பெண்களும் ஆலால சுந்தரரின் ஆண்மையைச் சமமாகப் பங்கிட்டு இரு தோள்களிலும் சாய்ந்து நடந்தாலும் ''விடுங்கள், ஐயா! எங்களை விட்டு விடுங்கள், நாங்கள் பார்வதி தேவியின் தோழிகள் அவர்களுக்குத் தெரிந்தால் உங்களையும் எங்களையும் சபித்து விடுவார்'' என்றனர். ஆனால் கமலினி, ஆலால சுந்தரரின் தோள் வலிமையில் தன்னையிழந்து ஏதோ பிதற்றிக் கொண்டே அசைந்து சென்றாள்.

மாலைப் பொழுது நீங்கி முழுமதியின் ஒளி பாலாவியன்னப் பரவியிருந்தது. ஆலால சுந்தரர் அம் மகளிரை ஒரு நீரோடையருகில் அசோக மரத்தடியில் படுக்க வைத்தார், மலர்ச்சோலையாதலின் மலரின் மணமும் வண்டுகளின் ஒலியும் அவருக்கு இன்பம் சேர்த்தது.

மகளிர் இருவரும் முதலில் யாரிடம் இன்பம் துய்க்கப் போகிறான் எனக் கண்மூடிக் கிடந்தனர். அப் பொழுது மான் ஒன்று தன் பேடையைப் புணர்ந்து

இன்பம் துய்த்துக் கொண்டிருக்கக் கண்டார். அது அவரது காமப் பசியை மேலும் தூண்டியது. கமலினி யின் அழகில் முதலில் மனதைப் பறிகொடுத்தவராதலின் அவள் அருகில் சென்றார். அனிந்திதை புறமுதுகு காட்டிப் படுத்தாள். ஆலாலசுந்தரர் கமலினியை அள்ளி எடுத்தார். பசுமையான புல்வெளியில் அவளை மிதிக்கவிட்டார். அவரும் அவளுள் மூழ்கி இன்பம் துய்த்தார். இன்ப வெள்ளம் அவர்களை எங்கோ அடித்துச் சென்றுவிடடது எனக் கண்டனர். எவ்வளவு நேரம் இன்பக் கடலினுள் மூழ்கிக் கிடந்தனர் என்பது தெரியவில்லை. ஆனால் கமலினி கண்விழித்தபோது அந்தக் காமக் கடல் அங்கு இல்லை. ஓடையில் தன்னைத் தூய்மைப் படுத்திக்கொண்டு அனிந்தியை அனுபவித்துக் கொண்டிருக்கிறான் என்பது மட்டும் தெளிவானது. சற்று நேரத்திற்கெல்லாம் மூவரும் மயக்க முற்றுக் கண் துஞ்சினர். அப்பொழுது கதிரவன்தான் தோன்றி விட்டானோ என்று பேரொளிப் பிழம்பு தங்களைச் சூழ்ந்திருக்கக் கண்டனர். "ஆலால சுந்தரரே! எமக்கு அடிமை செய்யக் கயிலாயத்தில் இடம்பிடித்து இன்று காமக்கடலில் மூழ்கிக்கிடக்கும் நீர் பூமியில் பிறந்து இம்மகளிரைப் புணர்ந்து இன்பம் துய்த்திடும்" என்ற ஈசன் சொல் காதில் விழுந்தது. "ஈசுவரா! சர்வேசுவரா! அனாதையான என்னைக் காத்தருள வேண்டும். இந்தச் சாபத்தினின்றும் எனக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும்? ஐயனே! உனக்கு அடிமை செய்வதே பேரின்பம் அந்த இன்பத்தை எனக்கு மீண்டும் தந்தருள வேண்டும்" என்று ஆலாலர் மன்றாடினார். பார்வதிதேவியார் ஆலால சுந்தரரின் ஆற்றாமை நிலையை நினைந்து, 'சுவாமி! ஆலால சுந்தரர் நமக்கு என்றும் அடிமை செய்யக் கடமைப் பட்டவர். அவரை ஆட்கொண்டருள வேண்டும் என் றார். அதற்கு ஈசன், "ஆலால சுந்தரரே! நாமே வந்து

உம்மை ஆட்கொண்டருளுவோம்'' என்று அருளுரைத்தார். பார்வதி தேவியார் தனது தோழியரைப் பார்த்து, நீங்கள் இருவரும் இவருக்கு முழுமையான இன்ப சுகத்தைக் கொடுக்க பூமியில் பிறப்பீர்களாக'' எனச் சாபமிட்டார். ஆலால சுந்தரரும் அம்மகளிர் இருவரும் திருக்கயிலை நீத்து பூமியில் பிறந்தனர்.

ஆலால சுந்தரர் தென்தமிழ் நாட்டிலே திருமுனைப் பாடியில் திருநாவலூரென்னும் திருப்பதியிலே ஆதி சைவர் எனும் பிராமண குலத்தில் சடையனாரென்னும் சிவாசாரியாருக்கும் அவரது மனைவி இசைஞானியார் என்பவருக்கும் புதல்வராகப் பிறந்தார். அவருக்கு நம்பியாரூரர் எனத் திருப்பெயரிட்டு வளர்த்து வந்தார்கள். ஒருநாள் அக்குழந்தை வீதியிலே சிறுதேர் ஓட்டி விளையாடிக் கொண்டிருக்கையில், அந்தத் திருமுனைப் பாடிக்கு அரசனான நரசிங்கமுனையரென்பவர் அவ் வீதி வழியே வந்தார். குழந்தையின் அழகைக் கண்டு சடையனாரிடம் சென்றார். அரசர் தங்கள் இல்லத்திற்கு வரக்கண்ட சடையனாரும் அவர் மனைவியும் ''அரசே! எங்கள் இல்லத்திற்கு எழுந்தருளியது எங்கள் பூர்வஜென்ம புண்ணியம்'' என்றனர். அரசன் அதற்கு, 'சடையனாரே புண்ணியம் செய்தவர் நாங்களல்ல நீங்கள்தான். உங்கள் புதல்வன் போன்ற ஒரு பேரழகுக் குழந்தையை நாங்கள் எங்கும் கண்டதில்லை. நான் அரசனாயிருந்தும் என்ன பயன்? குழந்தைச் செல்வமில்லாது தவிக்கிறேன். சடையனாரே! நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் குழந்தையை நாங்கள் வளர்க்க அனுமதி கொடுத்திட வேண்டும். உங்கள் குழந்தை அரண்மனையில் வளர்ந்தாலும் அந்தணர் ஒழுக்க நெறியிலேயே வளர்க்கப்படுவார்'' என்றார். அரசன் சொற்கேட்ட சடையனார் மறுப்பு எதுவும் கூற

மணமில்லாமல், 'அரசே! இனி இது உங்கள் குழந்தை அழைத்துச் செல்லுங்கள்' என்று அனுப்பி வைத்தார். அரசனும் மகிழ்ச்சி பொங்க அக்குழந்தையை வளர்த்து உரிய பருவத்தில் உபநயனமும் செய்து வைத்தார். வேதம் ஓதுவதிலும் மற்றுமுள்ள சகல கலைகளிலும் சிறந்தவராக வளர்ந்து திருமணப் பருவம் அடைந்தார்.

தன் மகனுக்குத் திருமணம் செய்துவிட எண்ணிய சடையனார், தமக்கு உறவினராய்ப் புத்தூரில் வாழ்ந்து வரும் சடங்கவி, சிவசாரியார் மகளை நிச்சயித்து, மண நாளன்று நம்பியாரூரர் மணக்கோளங்கொண்டு குதிரை மீதமர்ந்து புத்தூர் சென்று மக்கள் வெள்ளம் நிறம்பி வழியும் மணப்பந்தலுள் நுழைந்து ஆசனத் தமர்ந்திருந்தார். வாத்தியமும் வேதமும் முழங்கிக் கொண்டிருந்தது.

அப்பொழுது திருக்கயிலை நாதன் ஒரு வயோதிக அந்தணர் உருவம் கொண்டு திருமணப் பந்தலுக்குள் நுழைந்தார். அவர் யார் எனத் தெரியாது ஒவ்வொருவரும் திகைத்திருக்கும் சமயம், திருக்கயிலை யில் ஆலால சுந்தரருக்கு வாக்குக் கொடுத்தபடி நம்பி யாரூரரை ஆட்கொள்ளக் கருதி, அங்கு குழுமியிருந்த மக்களைப்.பார்த்து, அந்தணர்களே! ஆன்றோர்களே! சான்றோர்களே! கேளுங்கள். இதோ இங்கு திருமணக் கோலத்தில் அமர்ந்திருக்கும் நம்பியாரூரருக்கும் எமக் கும் ஒரு வழக்கு.உண்டு. அதைத் தீர்த்துக் கொண்டு திருமணம் செய்து போகட்டும்' என்றார். நம்பியாரூரர் உடனே சினந்து எழுந்து, அந்தணரே! உனக்கும் எனக்கு வழக்கு உண்டாயின் அதனை முடித்துக் கொண்டே நான் திருமணம் செய்து கொள்கிறேன். உனக்கும் எனக்கும் வழக்கு என்ன என்பதை உடனடி யாகச் சொல்லவும்' என்றார். அந்தணர் உருவில் எழுந் தருளிய ஈசன், அங்கு இருந்த அந்தணர்களைப் பார்த்து, பிராமணர்களே! இந்தத் திருநாவலூரானாகிய நம்பியாரூரன் எனக்கு அடிமை'' என்றார். ஈசன் சொற்

கேட்ட நம்பியாரூரர் கைகொட்டிச் சிரித்து, ஐயரே! என்ன வேடிக்கையிது. நான் உனக்கு அடிமையா? இதனை இவர்களனைவரையும் நம்பச் சொல்கிறீர் களா?'' என்றார். அந்தண, உருவிலிருந்த ஈசுவரன், 'நம்பியாரூரனே!' ஒரு ஓலைச் சுவடியைக் காட்டி, ,'இதோ உன்பாட்டன் அக்காலத்தில எழுதிக்கொடுத்த அடிமையோலை. நீ இதற்குக் கட்டுப்பட்டவன். அப்படியிருக்க என்னைப் பார்த்தா நகைக்கிறாய்?' என்றார். நம்பியாரூரர் மேலும் நகைத்து, ஏய் ஐயரே! பிராமணன் ஒருவன் பிராமணனுக்கு அடிமையாதல் இப்பொழுதுதான் கேட்கிறேன். உனக்கு என்ன பயித்தியமா பிடித்துவிட்டது. நீ என்ன பித்தனோ?'' என்றார். சிவபெருமான் கடுஞ்சினங்கொண்டவராய் ''நான் பித்தனேயாகுக, அல்லது பேயனேயாகுக. நீ எமக்கு இப்பொழுதே அடிமையாகுக' என்று நகைத் தார். அந்தணன் சொன்னபடி அப்படியொரு அடிமை சாசனம் இருக்குமோ என்று நம்பியாரூரர் சிந்திக்க லானார். பிறகு, ''ஐயரே! அந்த ஓலையைக் காட்டும்'' என்றார். அந்தணன் உருவிலிருந்த ஈசன், ''உனக்கு என்ன நான் ஓலையைக் காட்டுவது? இந்த சபை யோருக்குக் காட்டுகிறேன். அவர்கள் பார்த்துவிட்டுச் ''சரி'' என்று சொன்னால் நீ எனக்கு அடிமை செய்ய வேண்டியதுதான்'' என்றார். ஐயரின் பேச்சைக் கேட்ட நம்பியாரூரர் கோபங்கொண்டு அவர் கையி லிருக்கும் ஒலையைப் பறிக்க அருகில் சென்றார். ஐயர் சுந்தரமூர்த்தி ஓலையைப் பறிக்கவருகிறார் எனக்கண்டு ஓட நம்பியாரூரர் அவரைப் பின்தொடர்ந்து ஓலையைப் பிடுங்கி ''பிராமணர்கள் அடிமை செய்தல் முறையோ'' என்று கூறிக் கிழித்தார். ஐயர், ''ஐயோ இது என்ன கொடுமை'' என்று கத்தினார். ஆங்கு இருந்தவர்களிடம் முறையிட்டார். அப்பொழுது அங்கிருந்த ஒரு அந்த ணர். ''ஐயரே! நீர் எங்கிருந்து வருகிறீர்'' என்றார்.

அதற்கு அவர். "நான் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து வருகிறேன். இவன் என் ஓலையைப் பிடுங்கிக் கிழித்தது முறையோ?" எனக் கூச்சலிட்டார். உடனே நம்பி யாரூரர், "ஓய் ஐயரே! நீர் திருவெண்ணெ நல்லூர் வாசியானால் உமது வழக்கை அங்கேயே வைத்துக் கொள்வோம்" என்றார்.

ஈசுவரன் ஒரு தண்டை ஊன்றிக்கொண்டு முன் செல்ல நம்பியாரூரரும் மற்ற அந்தணர்களும் பின் தொடர திருவெண்ணெய் நல்லூரடைந்து ஆங்கு அந்தணர் அவையில், "அறிவு சால் பெரியோர்களே! சான்றோர்களே! திருநாவலூரில் இருக்கும் இந்த நம்பியாரூரன் என்னும் பிராமணன், "நீ எனக்கு அடிமை" என்று கூறிக் காண்பித்த ஓலையைப் பிடிங்கிக் கிழித்துவிட்டு, உங்களிடம் வந்திருக்கிறான்" என்றார். அதனைக் கேட்ட அவ்வூர் அந்தணர்க,ள் "பிராமணர்கள் அடிமையாதல் இவ்வுலகில் இதுவரை யில் இல்லை. ஐயரே! நீர் என்ன தப்பு வழக்காடு கிறீர்?" என்றனர். "நான் பொய் வழக்குத் தொடுக்க வில்லை. எனது வழக்கு மெய்வழக்கே" இவன் என் கையிலிருந்து பறித்துக் கிழித்த ஒலை இவன் பாட்டன் தானும் தன் சந்ததியினரும் எனக்கு அடிமை என்று எழுதித் தந்த அடிமை ஓலை" என்றார். உடனே அந்த ணர்கள் நம்பியாரூரரை நோக்கி "ஓய் திருநாவலூராரே! இந்த பிராமணன் உன் பாட்டன் எழுதிக் கொடுத்த ஓலையை உம்மிடம் காட்டியபொழுது நீர் அதைப் பிடுங்கிக் கிழித்துப் போட்டுவிட்டால் நீ வெற்றி யடைந்ததாக அர்த்தமா? இவர் தம்முடைய வழக்கை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி விளக்கமாகக் கூறி யிருக்கிறார். நீர் என்ன சொல்கிறீர்? உடனே அதைச் சொல்லும்" என்றார்கள். வேதவித்தகர்களே! கேளுங் கள். நான் ஆதிசைவன் என்பது உங்களுக்குத் தெரி

யும். அப்படியிருக்க இந்த பிராமணன் என்னை அடிமையென்று சாதித்தால், அதையும் இந்த அந்தண ரவை சரியான வழக்கு என்றால் இந்த வழக்கை என் மனத்தால் கூட நினைத்துப் பார்க்க முடியாததாக இருக்கிறது'' என்று கண்ணீர் வடித்தார். நம்பி யாரூராரின் நிலை கண்ட அந்தணர்கள் ஈசனை நோக்கி' ''ஓய் ஐயரே! இந்த பிராமணன் உமக்கு அடிமை என்பதை நிரூபிக்க, இவன் சந்ததியர் உமக்கு அடிமை செய்ததற்கான முன் அனுபவம் அதற்கான கடிதம் சாட்சி இவற்றில் ஏதாகிலும் ஒன்றைக் காட்டு'' என்றனர். ''இவன் கிழத்த ஓலை யின் மூலஓலை என்னிடத்தில் இருக்கிறது அதைக் காட்டுகிறேன்'' என்றார். ''அப்படியானால் அந்த மூல ஓலையை எங்களுக்குக் காட்டு'' என்றனர். ''நான் காட்டுவேன். ஆனால் இந்த ஆரூரன் அதையும் பிடுங்கிக் கிழித்து விடுவான் படுபாவி'' என்றார். ''நாங்கள் அவனைக் கிழிக்க விடமாட்டோம். எங்களுக்கு அந்த மூல ஓலையை எடுத்துக் காட்டு'' என்றனர். அதன் பின்பு ஈசன் துணியில் சுற்றி வைத் திருந்த ஒரு ஓலைச் சுவடியை அந்தணரவைக்குக் காண்பித்தார். அந்தணர்களில் ஒருவன் அந்த ஓலையை வாங்கி யாவரும் கேட்கும்படி படிக்கத் துவங்கினான்.

''திருநாவலூரில் இருக்கின்ற ஆதிசைவனான ஆரூரன் என்கின்ற நானும் எனது சந்ததியினரும் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கின்ற பித்தனுக்கு அடிமை செய்ய உள்ளும் புறமும் ஒப்ப உடன்பட்டு எழுதிக் கொடுத்தது'' ''இப்படிக்கு ஆரூரன்'' என்று வாசித்து முடித்தான்.

அதில் சாட்சியாகக் கையொப்பமிட்ட இருவர் அந்தச் சபையினிலிருந்ததால் அவர்கள் சாட்சிக் கை யெழுத்து தங்களுடையதே என்று ஒப்புக் கொண்டார்

கள். அந்த சபையிலிருந்த ஓர் அந்தணன் எழுந்து "சபையோரே! இந்த பிராமணன் வைத்திருக்கும் ஓலை இச்சிறுவனது பாட்டான்தான் எழுதிக் கொடுத்தான் என்பதை இச்சிறுவன் எவ்வாறு ஏற்றுக் கொள்வான்? அதற்கு சான்று வேண்டுமே" என்றான். அதற்கு சபைத் தலைவர் "ஆரூரானே உன்னிடம் ஏதாகிலும் உன் பாட்டன் எழுதினது இருந்தால் அதை வரவழை யும்" என்றான். அதன்படியே ஆரூரார் வரவழைத்த ஓலையின்எழுத்தும்ஈசன் கைவசமிருந்த கையெழுத்தும் ஒப்பாக இருக்கக் கண்ட அவையினர். "சிறுவனே! நீ இந்த பிராம்மணனுக்குத் தோற்றுப் போனாய் இனி அடிமை செய்ய வேண்டியதுதான் அதில் சந்தேக மில்லை" என்றனர். நம்பியாரூரரும், "என் தலைவிதி இப்படியானால் நான் என்ன செய்ய முடியும்?' என்று தமது ஆற்றாமையைக் கூறினார்.

அப்பொழுது அந்த பிராமணர்கள் ஐயரைப் பார்த்து, ஐயரே! இந்த ஓலையில் காட்டியுள்ளபடி நீர் எங்கள் ஊரைச் சேர்ந்தவராகவே தெரிகிறது. ஆதலால் உமக்கு இந்த ஊரில் பரம்பரையாக இருக்கக் கூடிய வீடும் நிலமும் இருக்கக் கூடும். அவை எங்கே இருக் கின்றன?" என்றனர். பிராமண உருக் கொண்டிருந்த ஈசன் முதியோராகிய நீங்கள் எனது வீட்டைப் பார்க்கா திருந்தால் வாருங்கள் காட்டுகிறேன்' என்று சொல்லி, நம்பியாரூரரும் அந்தணர்களும் பின்தொடர அவ்வூரி லுள்ள திருவருட்டுறை என்னும் சிவாலயத்தின் கருவறையில் நுழைந்தார். நுழைந்தவர் திரும்பி வராதது கண்டு ஆரூராரும் அந்தணரும் அதிசயித்தனர். ஆரூரர் ஐயர் சென்ற இடம் சென்று அவரைக் கூப்பிட, ஐயர் பரமசிவனாய், இடபவாகனத்தில் பார்வதியுடன் வெளி வந்து, நம்பியாரூரரே! நீர் முன்பு எமக்குத் தொண்ட னாய் இருந்தாய். அப்பொழுது நீ பெண்ணாசை

யிலிருந்தபல் எமது ஆணையின்படி பூமியில் பிறந் தாய். இப்பொழுது இப்பிறவித் துன்பத்தினின்றும் உம்மைத் தடுத்தாட் கொண்டோம்'' என்ற ஒலி கேட்டு நம்பியாரூரர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிய, கைகளை திலைமேல் சாத்தி. ''ஈசுவரா சர்வேசுவரா கைலாச நாத! கனக சபையில் திரு நடன மாடும் தேவா! படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலும் செய்து எக்காலமும் இருக்கும் எம் பிரானே! சிறுவனாகிய என்னைத் தடுத்தாட் கொண்ட பரமனே! பெருங்கருணைப் பெருங்கடலே! உமது மகிமையை என்னவென்று எடுத்துரைப்பேன்?'' என்று அழுதுதொழுது நின்றார். ஈசனும் ''அப்பனே? நீ எம்மு டன் வென்சொற்களைச் சொல்லி வன்தொண்டன்''என் றும்பெயர் பெற்றாய்.எமக்கு நீர்செய்யத்தக்கஅர்ச்சனை உமது தமிழ்ப் பாடலேயாகும் என்றார். ''ஆண்டவ! தேவரீர் பிராமண வடிவம் கொண்டு என்மேல் வழக்குத் தொடுத்கு அதில் வெற்றி கண்டு என்னை அடிமை கொண்ட ஐயனே! சிறயனாகிய நான் தேவரீரது தெய்வ குணங்களில் எதையறிவேன்? எதைப் பாடுவேன்? என்றார். ஈசனும் புன்முறுவல் பூத்து. ''நம்பியாரூரரே! முன்பு என்னை நீர் 'பித்தன்' என்று வசைபாடியதால் ''பித்தன்'' என்றே பாடு'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பரம சிவனும் பதிகம் கேட்டு ''மனம் மகிழ்ந்து'' ''தொண்டனே! நீ இன்னமும் நம். புகழை உலகுக் குணர்த்தப் பலவகையாகப் பாடு'' என அருள் கூர்ந் தார். ஆரூரரும், ''ஐயனே! ஈசனே! உம்மை யாரென்று தெரியாமல் என்னென்னவோ பேசிவிட்டேன். வசை பாடிய சொல்லாலே உனக்கு இசை பாடவைத்த வள்ளலே! என் அப்பனே! உன் அருள் பொங்கும் உள்ளத்துள் எனக்கும் ஓர் இடம் தந்த சுத்தனே! சன்மார்க்கனே! நன்மார்க்கனே! நாயினும் கேடனான

எனக்கு அருளி இந்நாள் இனி உன்னையே பாடித் துதித்துக் கொண்டிருக்கும்''என்று சொல்லி மனமுறுகிக் கண்மூடித் திறக்கும் முன் இறைவன் மறைந்தார்.

நம்பியாரூரர் தவக்கோலம் கொண்ட செய்தி கேட்டுப் புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியார் புதல்வி தன் திருமணம் நின்றதால் சுந்தரமூர்த்தி சுவாமிகளையே நினைந்திருந்து சில நாளில் சிவபதமடைந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன் திருப்பணியைத் தொடர்ந்தவராய்த் திருநாவலூருக்குச் சென்று திருப்பதிகம் பாடினார். திருத்துறையூருக்குச் சென்று பதிகம் பாடி விட்டுப் பெண்ணை நதியைக் கடந்து சிதம்பர தரிசனம் காண விழைந்து, திருநாவுக்கரச சுவாமிகள் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்த இடமாதலால் அதன் மீது தன் பாதங்கள் படக் கூடாதென்று, அருகிலிருந்த சித்தவட , மடத்திற்குச் சென்று திருவதிகை வீரட்டானேசுவரரை மனதில் தியானித்துக் கொண்டே கண் துஞ்சினார். அப்பொழுது வீரட்டனேசுரர் ஒரு வயோதிக அந்தணர் வேடம் பூண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தூங்குமிடத்தில் அவர் தலையின் மேல் தன் பாதங்கள் படும்படி நித்திரை செய்வது போல் கிடந்தார். தம் தலைக்கு மகுடம் சூட்டியிருப்பது போன்ற உணர்வால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண் விழித்து, "ஐயா பெரியவரே! உமது பாதத்தை ஏன் என் தலை மீது வைத்தீர்? வேறு இடம் இல்லையா?'' என்று கேட்டார். விரட்டானே சுரர் அதற்கு, 'அந்தணரே! தள்ளாத வயது தலை கால் தெரியவில்லை நீர் தலை வைத்திருப்பது தெரியாமல் என் காலை நீட்டி விட்டேன்! என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "பாவம் முதுமையால் இவ்வாறு செய்துவிட்டார்' என்று மனதில் கொண்டு வேறு பக்கம் தலை வைத்துப் படுத்தார். விடுவாரா வீரட்டானேசுரர். மறுபடியும் அவர் தலை

யின் மேல் தன் பாதங்களை வைத்து உறங்குவது போல் கிடந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மீண்டும் கண் விழித்து "என் தலையில் பலமுறை உதைத்த நீர் யார்?" என்று வினவினார். "ஆரூரரே! என்னைத் தெரியவில்லையா!" என்று கூறி ஈசன் மறைந்தார். தன் தலைக்கு ஈசன் பாதங்கள் மகுடமாகத் தரித் தருளினார் எனக் கண்டு வியந்து விரட்டானேசுரர் மேல் பதிகம் பாடி மகிழ்ந் தார். பின்பு திருக் கொடில நதியில் நீராடி அந்நதியின் தென் கரையிலுள்ள திருமாணிக்குழியடைந்து வணங்கித் திருத்தினை நகர் சென்று பதிகம் பாடியபின் சிதம்பரத் தின் எல்லையடைந்து, கோபுர தரிசனம் செய்த பின்பு, கனக சபையுள் ஆனந்த நடனமாடும் சபா நாயகரைத் தரிசித்து, பக்திப் பெருக்கால் பதிகம் பாடி மகிழ்ந்திருக் கையில். "நீர் திருவாரூரில் நம்மிடத்துக்கு வாரும்" என அசரீரி கேட்டுத் திருஞான சம்பந்தர் திரு அவதாரம் செய்த அதன் எல்லையை அடைந்து, அங்கு சிவபெருமான் காட்சி தந்தருளிட ஆங்கொரு திருப் பதிகம் பாடினார். பின்னர் திருக்கோலக்காவுக்கும் திருப்புன்கூருக்கும். சென்று பதிகம் பாடி, காவிரியில் நீராடி, மாயூரத்துக்கும். அம்பர் மாகாளத்துக்கும் சென்று, திருவாரூரை நெருங்குகையில் வன்மீக நாதரின் ஆசியால் அங்கு பெரும் அலங்காரத்துடன் வந்து கொண்டிருக்கையில் தம்மை எதிர்கொண்டு வந்த பக்தர்களுடன் கோயிலிற் பிரவேசித்து வன்மீக நாதரை வணங்கிப் பதிகம் பாடினார். அப்பொழுது ஒரு அசரீரி "வன்மீகரது திரு அருளினால் நாம் உமக்குத் தோழ ரானோம். முன்பு நாம் உம்மை ஆட்கொண்ட பொழுது இருந்த மணக்கோலத்தை எப்பொழுதும் கொண்டு இவ்வுலகில் விளையாடுவாயென்று" கூறியது. அன்று முதல் அடியார்களெல்லாரும் சுந்தரமூர்த்தியைத் தம்பி ரான் தோழர் என்றே சொன்னார்கள். சுந்தரமூர்த்தியும்

ஆடை அலங்காரத்துடன் வன்மீக நாதரைத் தினமும் தரிசித்து வந்தார்.

சுத்தரமூர்த்தி தினமும் மணக்கோலமுடன் அலங்காரமாக இருந்துவர, முன்பு திருக்கைலையில் கமலினி என்பாள், அந்தத் திருவாரூரில் உருத்திர கணிகையர், குலத்தில் பிறந்து பரவையார் எனும் பெயரைப் பெற்றுப் பெதும்பைப் பருவம் அடைந்திருந்தாள். அவளும் தினமும் தன் தோழியருடன் கோயிலுக்குச் சென்று சிவதரிசனம் செய்து வருவது வழக்கம். அவ்வாறு ஒரு நாள் பரவையார் சுவாமி தரிசனம் செய்யப் போகும் பொழுது சுவாமி தரிசனம் செய்யச் சென்ற சுந்தர மூர்த்தி சுவாமிகளின் கண்ணில் பட்டதால் அவளிடம் காமம் கொண்டு நின்றார். பரவையர் சுவாமி தரிசனம் செய்து கொண்டிருக்க சுவாமிகள் தன் சீடரைப் பார்த்து ''என் உள்ளம் கவர்ந்த அந்தப் பெண் யார்?'' எனக் கேடடார். ''அந்தப் பேரழகி உருத்திர கணிகையரில் ஒருவர், பெயர் பரவையார்'' என்றனர். உடனே சுந்தரமூர்த்தி நா.யனார் கோயினுள் நுழைந்து பரவையார் வணங்கி நின்ற சுவாமியை வணங்கி நின்று, அவள் மேல் எழுந்த பேராசையால் அவளை அடைந்துவிட வேண்டும் என்று சுவாமியை வணங்கி, ''வன்மீக நாதர் பரவையாரை எனக்குத் தருவார்'' என்று மனதில் மகிழ்ந்து சென்றார்.

சுவாமி தரிசனம் செய்துவிட்டு புறப்பட்டுச் சென்ற பரவையார் தமது மாளிகையை அடைந்து மலர்படுக்கையில் படுத்துத் தன் மனதைக் கவர்ந்த அந்த மகான் யார் என்பதைத் தெரிந்து கொள்ளத் தன் தோழியரைப் பார்த்து, 'நாம் சுவாமி தரிசனம் செய்யப் போன பொழுது மணக்கோலம் பூண்டு நம் எதிரில் வந்தவர் யார்?' எனக் கேட்டார். 'அவரே ஆதி சைவரான சுந்தரமூர்த்தி நாயனார்' என்று மறுமொழி செய்தனர்.

அன்றிரவு முழுதும் பரவையார் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நினைவாகவும் சுந்தரமூர்த்தியார் பரவையர் நினைவாகவும் இருக்க இறைவன் நாயனாருக்குத் தொண்டாற்றும் சீடர்களிடம், 'பரவையரைச் சுந்தர மூர்த்திக்குத் திருமணம் செய்து வைத்திடுக' என்று ஆணையிட்டார். அதனபடியே சுந்தரமூர்த்தி சுவாமிகளிடமும் இதனை தெரிவித்ததோடல்லாமல் பரவையரிடமும் 'சுந்தரமூர்த்தி சுவாமிக்கும் உனக்கும் திருமணம் நடக்கும்' எனச் சொல்லியருளினார். அதன்படியே மறுநாள் காலை சுந்தரமூர்த்தி சுவாமிக்கும் பரவையாருக்கும் திருமணம் நடத்திவைத்தார்கள்.

பரவையருடன் இல்லற இன்பம் துய்த்து வருகையில் ஒருமுறை கோயிலுக்கு எழுந்தருள ஆங்கு சிவனடியார்கள் இருக்கக்கண்டு 'அடியார்களுக்குத் தொண்டு செய்யும் நாள்' எந்நாளோ?' என்று ஏங்கி இறைவனை வேண்டினார். இறைவனும் அவர் முன்தோன்றி சிவனடியார்களைப் பாடும்படி ஆணையிட்ட ஈஸ்வரன், "தில்லைவாழ்அந்தணர் தமடியார்க்குமடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரிய மண்டபத்தையடைந்து, அடியார் திருக்கூட்டத்தை பலமுறை வணங்கி,"திருத்தொண்டத் தொகை" எனும் திருப்பதிகம்பாடி அவர்களை வணங்கினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் பரவையோடு இல்லற இன்பம் துய்த்திருக்க, நாயனாரது மகிமையைக் கேள்வியுற்ற குண்டையூர்க் கிழார் என்பவர் சுந்தரருடைய திருவடிகளைத் தொழுது நாயனாருக்காக பரவையருடைய விட்டிற்கு நெல்லும் பருப்பும் மற்ற உண் பொருட்களும் தவறாது அனுப்பி வந்தார். ஒரு சமயம் மழையின்மையால் நெல்விளையாது போக

சுந்தரருக்கு நெல்லும் பருப்பும் போதுமான அளவு அனுப்ப முடியவில்லையே என ஏங்கியிருக்க, அன்றிரவு பரமசிவனார் அவர் கனவில் தோன்றி சுந்தரனுக்கு அனுப்ப ,நாம் நெல் தந்தோம்' என்று கூறி மறைந்தார். பின்பு ஈசன் குபேரனையழைத்து குண்டையூர் முழுதும் நெல் மலைகளாகக் குவிக்க ஆணையிட்டார். அதிகாலையில் எழுந்து பார்த்த கிழார் ஊர் முழுதும் நெல் மலைகளாகக் குவிந்துகிடக்கக் கண்டு சிவபெருமானைப் போற்றித் துதித்து, சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சிவபெருமான் கொடுத்த நெற்குவியல் என்று சுந்தரமூர்த்தி நாயனாரைக்காணத் திருவாரூருக்கு ஓடினார். நாயனாரும் சிவனருளால் தகவல் அறிந்து குண்டையூர்க் கிழாரைக் காணவந்தார். இருவரும் வழியில் சந்தித்த பொழுது கிழார் நாயனார் பாதங்களில் விழுந்து வணங்கினார். இருவரும் குண்டையூர் சென்று அங்கு குவிந்து கிடக்கும் நெல்மலைகளைப் பரவையார் வீட்டுக்கு எடுத்துச் செல்ல ஆட்கள் வேண்டும் என்று அருகில் உள்ள திருக்கோளிலி எனும் இடத்தில் உள்ள சிவாலயத்தில் நுழைந்து திருப்பதிகம் பாடினார். அப்பொழுது பரமசிவன் அருளினால் ஓர் அசரீரி ‘‘இன்று பகல் நீங்கிய பின் நமது பூதங்கள் பரவையர் வீடு மாத்திரமன்றி திருவாரூர் முழுவதும் நிறையும்படி நெல் மலையைக் கொண்டு வந்து தரும்'' என்று கூறியது. அது கேட்ட நாயனார் திருவாரூர் திரும்பி பரவையரிடம் நடந்ததை மகிழ்வுடன்கூறியிருக்கையில் அன்றிரவு வீடு முழுவதும் நெற்குவியல்களாகியது மட்டுமன்றி திருவாரூர் முழுவதும் நெற்குவியல்களாயின.

ஒருநாள் நாட்டியத்தான் குடியில்வாழும் கோட்புலி நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் வந்து தமது ஊருக்கு எழுந்தருளும்படி வேண்டினார். நாயனாரும் வன்மீக நாதரை வணங்கி நாட்டியத்தான் குடியை அடைந்தபொழுது கோட்புலி நாயனார் எதிர்கொண்டு

வந்த தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று முறைப்படி அர்ச்சனைசெய்து அமுதுபடைத்து வணங்கி, சிங்கடியார், வனப்பகையார் என்கிற தமது மகளிரை அவர் முன் நிறுத்தி, "சுவாமி! நான் பெற்ற இம்மகளிர் இருவரையும் தங்களின் அடிமையாக ஏற்றருள வேண்டும்" என்று மன்றாடினார். சுந்தரரும், 'இப்பெண்கள் இருவரும் எனக்கு புத்திரிகள்" என்று சொல்லி, அவர்களைத் தன் தொடையின்மீதமர்த்தி அணைத்து உச்சிமோந்து அவர் விரும்பியவற்றைக் கொடுத்த பின்பு சிவாலயம் சென்று துதித்து கோட்புலி நாயனாரைச் சிறப்பித்துப் பதிகம் பாடினார். பிறகு அங்கிருந்து திருவலிவலம் சென்று, அங்கிருந்து மீண்டும் திருவாரூரை அடைந்து பரவையார் வீட்டிலிருந்தார்.

பரவையார் இல்லத்திலிருக்கையில் பங்குனி உத்திரம் வந்தது. பரவையாரின் திருவிழாச் செலவிற்குப் பொன்கொடுக்க வேண்டுமென்று திருப்புகலூரையடைந்து சிவாலயம் சென்று திருப்பதிகம் பாடி அருகில் ஓர் மடத்தில் திருப்பணிக்காக வைக்கப்பட்டிருந்த செங்கற்களைக் கொண்டுவரச் சொல்லி அதனையே தலையணையாகக் கொண்டு நித்திரை செய்தார். காலையில் கண்விழித்துப் பார்க்கச் செங்கற்கள் பொன்கற்களாயிருக்கக் கண்டு திருவருளைத் துதித்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

சுந்தரர் அதன்பின்பு திருப்புனையூர், திருநன்னிலம், திழிவிழிமிழலை, திருவாருயசித்தி, திருச்சித்தச்சாம், திருப்புத்தூர், திருவாவடுதுரை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், திருக்கலையநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருமழபாடி, திருவானைக்கா, திருப்பாச்சிலாசிரமம், திருப்பைஞ்ஞீலி, திருபாண்டிக்கொடுமுடி, திருவெஞ்சமாக்கடல், திருக்கற்குடி' திருப்புறம்பியம், திருக்கூடலையாற்றூர், திருமுதுகுன்றம் ஆகிய சிவ தலங்

களை தரிசித்துப் பதிகம் பாடியருளினார். பின்னர் பழமலை நாதரை வணங்கித் தமக்குப் பொருள் வேண்டிய கருத்தை மனதுள் வைத்துப் பாடினார்.

“பொன்னார் மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை
யணிந்தவனே
மன்னேமாமனியே மழபாடியுண் மாணிக்கமே
யன்னே யுன்னையல்லாலினியாரை நினைக்கேனே”

எனப் திருப்பதிகம் பாடியருளினார். இச்செய்யுளை அடியேனது முதல் நூலான “நறுந்தொகை விருந்து” (முதற் பந்தி) எழுத்தறிவித்தவன்” எனும் கட்டுரையில் எடுத்தாண்டிருப்பது கண்டுமகிழ்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேண்டியபடியே சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தருள, சுந்தரரும் சுவாமியை வணங்கி “ஈசுவரா! தேவரீர் கொடுத்த இந்தப் பன்னீராயிரம் பொன்னெல்லாம் திருவாரூரில் உள்ளவர்கள் கண்டு வியக்கும்படி அங்கு வரவேண்டும்” என்று வேண்டினார். ஈசுவரனும் அதற்கு, ‘சுந்தரனே! நீ இந்தப் பொன்னெல்லாவற்றையும் மணிமுத்தா நதியிலே இட்டு திருவாரூர்க் குளத்திலே போய் எடுத்துக்கொள்” என்ற அசரீரி மூலம் அறிவித்தார். அதைக் கேட்ட சுந்தரர் மச்சம் வெட்டி வைத்துக்கொண்டு பொன் முழுவதையும் மணிமுத்தா நதியில் விட்டுத் திருகடம்பூரை வணங்கிச் சிதம்பரம் வந்து சபாநாயகரை வணங்கித் திருப்பதிகம் பாடினார்.

அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கருப்பறியலூர் திருப்பழமண்ணிப்படிக்கரை, திருவாழ்கொளிபுத்தூர், திருக்

காணாட்டு முள்ளூர், திருஎதிர்கொள்பாடி, திருவென்விக்குடி ஆகிய சிவ தலங்களில் பதிகம் பாடினார், பின்னர் திருவாரூரை அடைந்து பரவையரை நோக்கி, ''பெண்ணே! எனக்குத் திருமுதுகன்றர் தந்தருளிய பொன்னை மணிமுத்தாற்றில் புகவிட்டு வந்தேன். இப்பொழுது இந்த தலத்திலே இருக்கின்ற கோயிலுக்கு மேற்றிசையில் உள்ள குளத்தில் போய் எடுத்துக் கொண்டு வருவோம் வா'' என்றார். பரவைய்யர் அதிசயித்து ''இது எப்படி சாத்தியமாகும்?'' என்றார். ''பெண்ணே! நமது இறைவன் திருவருளினால் பொன் முழுவதும் குளத்திலிருந்து எடுத்து உனக்குத் தருவேன் இது சத்தியம்'' என்று சொல்லிப் பரவையரை அழைத்துக்கொண்டுவந்து வன்மீக நாதரை வணங்கி, திருக்குளத்தையடைந்து அதன் வடகீழ்கரையில் சென்றுக் பரவையரை நிறுத்தி சுவாமியை வணங்கி நீரில்இறங்கித் தேடினார். பொன் கிடைக்கவில்லை- பரவையார் ''ஆற்றிலே விட்டு குளத்திலே தேடுகின்றீரா?'' என்று கேட்டார். சுந்தரர், திருமுதுகுன்றரை வணங்கி, ''சுவாமி! பரவையர் நகையாதபடி பொன்னைத்தாரும்.'' என்று திருப்பதிகம் பாடினார். அப்பொழுது வந்தெழுந்த பொன்னைக் கரைக்குக் கொண்டுவந்து அந்தப் பொன்னையும் மச்சத்தையும் உரைத்துப் பார்க்க அது தாழ்ந்து இருக்கக் கண்டு மீண்டும் கடவுளைப் பாடினார். பின்பு உரைதாழாத பொன் கிடைக்கப் பெற்று மாட்டின்மேல் சுமத்தி பரவையர் வீட்டுக்குச் சென்று இன்புற்று வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில் திருவாரூரில் புற்றிடமாக வீற்றிருந்தருளிய பரமனை 'பாறுதாங்கி'' என அடியெடுத்துப் பதிகம் பாடினார்.

சுந்தரர் மீண்டும் சிவதலங்களைத் தரிசித்து வரும் ஆவலில் திருநள்ளாறு, திருக்கடவூர், திருவலம்புறம், திருநனிப்பள்ளி, திருநின்றியூர்''

திருநீடூர் திருக்கோலக்கா, ஆகிய சிவ தலங்களில் பதிகம் பாடினார். பிறகு சுவாமி சீர்காழி வந்து குருகாவூருக்குப் போகும் பொழுது இறைவன் அவர் பசியையும் வெப்பத்தையும் போக்க வழியில் ஒரு தண்ணீர்ப் பந்தலை அமைத்து ஒரு அந்தணர் உருவில் அமர்ந்திருந்தார். சுந்தரர் அந்த பந்தற் கீழ் அமர்ந்து ஐந்தெழுத்து மந்திரம் ஓதிக் கொண்டிருக்க ஈசன் அவரை வணங்கி, "சுவாமி! நீங்கள் மிகவும் பசித்திருக்கிறீர்கள் இந்தப் பொதிச் சோற்றையும் நீரும் உண்டு சற்று இளைப்பாறும்" என்று சொல்லியருளி னார். சுந்தரரும் அவர் தொண்டர்களும் அங்கு இருந்த பொதிசோற்றை உண்டு மகிழ்ந்திருக்கையில் அந்த பொதிசோறு குறையாதிருந்தது, வழிப்போக்கரும் அதனை உண்டு பசி நீங்கிச் சென்றனர். சுந்தரர் உண்ட களைப்பில் தொண்டர்களுடன் சிறிது நேரம் கண் துஞ்சி விழித்துப் பார்க்கையில் இறைவன் பந்தலுடன் மறைந்தார். இந்த அதிசயத்தைக் கண்டு ஒரு பதிகம் பாடினார். அதன் பின்பு திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர், திருக்கழுங்குன்றம் ஆகிய இடங்கள் சென்று பதிகம் பாடியருளினார்.

பின்பு திருக்கச்சூரில் தன் பசியைப் போக்கிய ஈசனைப் போற்றிப் பதிகம் பாடி, காஞ்சிபுரம் சென்று திருவேகாம்பர் சுவாமியைப் போற்றிப் பதிகம் பாடி னார். காஞ்சியிலிருக்கையில் காமக்கோட்டத்திற்கும் சென்று காமாட்சியை வணங்கி, திருமேற்றளி சென்று வணங்கிப் பதிகம் பாடிய பின், திருஓணகாந்தன்றளி யடைந்து பொன் வேண்டிப் பதிகம் பாடினார். பொன் பெற்று ஈசனைப் போற்றி திருப்பனங்காட்டூர், திருக்காளத்தி, ஸ்ரீசைலம், திருக்கேகதாரம் திருவொற்றியூர் சென்று பதிகம் பாடினார்.

சுந்தரர் சிவதலங்களை வலம் வந்து கொண்டிருக்கையில் கைலையில் சுந்தரர் ஆலவந்தாராகஇருக்கையில் காமுற்ற அனிந்திதையர் என்பவர் நாயிறு எனும் ஊரில் நாயிறு கிழவர் என்பவருக்கு மகளாகப் பிறந்து சங்கிலியார் எனும் பெயர் பெற்று வளர்ந்து உமையம்மையிடம் பக்தி கொண்டொழுகி வந்தார். மகள் பருவமெய்தியதும் தன் மகளுக்குத் திருமணம் செய்து வைக்க நாயிறுகிழார் தன் மனைவியைக் கூப்பிட்டு, "நம் மகள் பருவமடைந்து விட்டாள். அவள் அழகிலும் அறிவிலும் அவளுக்கு நிகரான ஒரு ஆண் பிள்ளை எங்கு கிடைக்கப் போகிறானோ? தெரியவில்லை." என்றார். "என்ன அப்படிச் சொல்லிட்டீங்க. நம்ம பொண்ணுக்குத் தகுந்த மாதிரி அழகிலும் அறிவிலும் சிறந்த ஒரு ஆண்மகன் வந்து நம் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு போவான்" என்றாள் அவர் மனைவி. இவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருப்பதை சங்கிலியார் கேட்டு மனக் கலக்கம் அடைந்தார். 'இவர்கள் பேசுவது எனக்கு எவ்வாறு பொறுந்தும்? சிவபெருமான் அருளைப் பெற்ற ஒருவருக்கன்றி நான் மனைவியாகேன். அப்படியிருக்க இவர்கள் ஏன் இப்படிப் பேசிக் கொள்கிறார்கள்" என்று தனக்குள் எண்ணி மயக்கமுற்று விழுந்தாள். மகள் மயங்கி விழுந்தது கண்ட பெற்றோர் ஓடோடி வந்து அவளைத் தூக்கித் தங்கள் மடியின் மீது கிடத்தி முகத்தில் பன்னீர் தெளித்து, "மகளே! கண்ணே' என்ன நேர்ந்தது உனக்கு? மகளே! ஏன் மயக்கமுற்று விழுந்தாய்? சொல்" என்றனர். சங்கிலியார் மெல்லக் கண் திறந்து, "அப்பா நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்பா! நான் சிவபெருமானின் திருவருளைப் பெற்ற ஒருவருக்கே மனைவியாகவிரும்புகிறேன். இனி நான் திருவொற்றியூர் சென்று சிவநெறியில் நிற்பேன்" என்றார். மகளின்

மனதைத் தெரிந்து கொண்ட பெற்றோர் கவலையும் அதிசயமும் அடைந்து நிகழ்ந்தவற்றை யாரிடமும் சொல்லாமல் மறைத்து விட்டனர். அதன் விளைவு சங்கிலியாரைப் பெண் கேட்க ஒருவன் ஆள் அனுப்பி னான். சங்கிலியரின் தந்தை நிகழ்ந்ததை மறைத்து வேறு ஒரு விதமாகச் சொல்லி அவர்களை அனுப்பி விட்டார். வந்தவர்கள் வீடு சேர்ந்த பொழுது பெண் கேட்க அனுப்பியவரும் பெண் கேட்டு வந்தவர்களும் இறந்து போயினர். இச்செய்தியறிந்த சங்கிலியரின் தந்தை மிகப ப்யந்து அவர் விருப்பப்படியே திருவொற்றியூரில் கொண்டு போய் விட்டு விட வேண்டு மெனத் துணிந்து, ''மகளே நீ உன் விருப்பப்படியே திருவொற்றியூரை அடைந்து கன்னிமாடத்தில் சேர்ந்து சிவத் தொண்டாற்றி வருவாய்'' என்றனர். சங்கிலியாரும் மகிழ்ச்சி பொங்க, தந்தை தாய் உற்றார் உறவினர் புடை சூழ திருவொற்றியூர் கன்னிமாடத்திலிருந்து தினமும் மூவேலையிலும் கோயில் சென்று சுவாமி தரிசனம் செய்து, பூக்கட்டும் மண்டபத்தில் திரையிட் டிருக்கிற ஒரு இடத்திலிருந்து மலர்மாலை கட்டி சுவாமிக்குச் சூட்டக் கொடுத்து வந்தார்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் சுந்தரர் கோயில் சென்று சுவாமி தரிசனம் செய்த பின்பு புறப்பட்டு மலர் மண்டபத்தினுள் நுழைந்தார். அப்பொழுது வழக்கம் போல் திரை மறைவிலிருந்து தொடுத்த மாலை யினைச் சிவனுக்கு சாத்தக் கொடுத்துக் கொண்டிருந்த சங்கிலியாரைக் கண்கள் குளிரக் கண்டார். கண்டவர் அப்படியே அதிசயித்து நின்று விட்டார். பின்பு தன் சீடர்களைப்பார்த்து''மலர் மண்டபத்தில் திரைக்குள்ளே மறைந்திருந்து ஒரு பெண் என் கண்களைக் கவர்ந் தாள். அவளும் என்னைப் பார்த்தும் பார்க்காதவள் போல் சென்று விட்டாள், அவள் யார்?'' என்றார்.

"சுவாமி! பரமசிவனுக்குத் திருத் தொண்டாற்றுவதற் கென்றே நாயிறு என்ற ஊரிலிருந்து திருவொற்றியூர் வந்து கன்னிமாடத்தில் சேர்ந்தார் சங்கிலியார் என்பவர்" என்றனர். சுந்தரமூர்த்தி நாயனார் உடனே கோயிலுனுள் புகுந்து இறைவனை வணங்கி, "சுவாமி! நான் மலர் மண்டபத்தில் கண்ட சங்கிலியார் என்ற அழகு தேவதையை எனக்குத் தந்தருள வேண்டும்" என்றார். அப்பொழுது பொழுது போனது. அன்றிரவு பரமசிவன் நாயனாரிடம், "இவ்வுலகில் உள்ளவர்கள் யாராலும் செய்ய முடியாத பெருந்தவத்தைச் செய்து வரும் உத்தமப் பெண்ணாகிய சங்கிலியை உனக்குத் தருகிறோம் நீ கொண்டுள்ள கவலையை விடு" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன் பிறகு கன்னிமாடத் தில் சங்கிலியாருக்குக் கனவில் தோன்றினார். கனவில் சிவ தரிசனம் பெறப் பெற்ற சங்கிலியார் தரையில் விழுந்து வணங்கி, "சுவாமி ஈசுவரா! இந்த ஏழைக்கும் இரங்கி எழுந்தருளி வந்த வள்ளலே!" என்று மனம் கசிந்து, "நான் செய்ய வேண்டியது என்ன எம் பெருமானே" என்றார். ஈசுவரனும் "பெண்ணே. நீ செய்த பெருந்தவப் பயனை அடையப் போகிறாய்! என் மீது பேரன்பு கொண்டவனும் திருவெண்ணெய் நல்லூரில் நான் ஆட்கொண்டவனுமாகிய சுந்தரன் எனும் ஆணழகன் உன்னைத் தனக்கு மனைவியாகத் தரும்படி என்னை வேண்டிக் கொண்டான். அதற்கு யாம் ',மனமகிழ்ந்து அவன் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டோம். நீயும் சுந்தரனுக்கு மனைவியாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்" என்றார், "சுவாமி! தங்கள் ஆணையினை அடியேன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். தேவரீர் சொல்லியருளிய நாயனாருக்கே மனைவியாக உரியேன். என்றாலும் அவர் திருவாரூரில் இன்ப வாழ்க்கை நடத்தி வருபவர் என்பதை இறைவன் அறியாததல்லவே!" என்றார்.

''பெண்ணே! அந்த சுந்தரன் உன்னைப் பிரியேன் என்று சத்தியம் செய்து தருவான்'' என்று கூறி மறைந்தார். பின்பு சுந்தரனிடம் சென்று சுந்தரனே! நீ சங்கிலியரைப் பிரிவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தால் உன்னைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புவாள்'' என்றார். சுந்தரரும் சிறிது சிந்தித்தவராய் சிவபெருமானை வணங்கி, ''சுவாமி நான் அவ்வாறு சத்தியம் செய்து கொடுக்க அவளுடன் ஆலயத்துக்குள் வரும் பொழுது தேவரீர் ஆலயத்தை விட்டு நீங்கி மகிழின் கீழ் இருக்க வேண்டும்'' என வேண்டிக் கொண்டார். ஈசுவரனும் ''அப்படியே ஆகுக'' என்று மொழிந்து, சங்கிலியாரிடம் சென்று, ''பெண்ணே! சுந்தரன் உனக்கு சத்தியம் செய்து கொடுக்க உன்னைக் கோயிலுக்கு அழைத்து வருவான். நீ அதற்கு உடன்படாமல் மகிழின் கீழ் சத்தியம் செய்து தர வேண்டும் என்று சொல்லி விடு'' என்று கூறி மறைந்தார். சங்கிலியார் நித்திரை கலைந்தெழுந்து ஈசன் திருவாக்கை எண்ணியெண்ணி மனங்கசிந்து தனது தோழியரிடம் பரமசிவன் அருளிச் செய்த யாவற்றையும் அவர்களுக்குத் தெரிவிக்க, மற்ற பெண்கள் ஆனந்தமும் அதிசயமுமடைந்து சங்கிலியாரை வணங்கினர்.

பின்பு அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுத்துக் கொண்டிருக்கையில் ஒரு பசுவரக் கண்டு கோயிலினுள் தன்தோழியரோடு நுழைந்தாள். சங்கிலியாரின் வரவை எதிர்பார்த்திருந்த சுந்தரர் சங்கிலியார் அருகில் சென்று ''ஈசன் திருவருளால் நாம் இருவரும் ஒன்று சேர்ந்து வாழ்வோம் என்றார். சங்கிலியார் நாணம் கொண்டு ஒன்றும் பேசாமல் கோயினுள் நுழைந்தார். சுந்தரர் மேலும் சங்கிலியாரைப் பார்த்து, ''பெண்ணே; நீ விரும்பியபடி ஈசன் சந்நிதானத்திலேயே சத்தியம் செய்து கொடுக்கிறேன் வா''

என்றார். அதற்கு சங்கிலியரின் தோழிகள். "சுவாமி இது போன்றவற்றை ஈசன் சந்நதியில் சத்தியம் செய்து கொடுப்பது நல்லதல்ல என்பது தங்களுக்குத் தெரியாத தல்ல" என்றனர். சுந்தரர் அதற்கு "நீங்கள் எங்கே சத்தியம் செய்து தரச் சொல்கிறீர்களோ அங்கு வந்து செய்து தருகிறேன்" என்றார். அந்தப் பெண்கள் "மகிழின் கீழ் சத்தியம் செய்து தரவேண்டும்" என்றனர். சுந்தரர் திடுக்கிட்டார். இப்பொழுது மறுப்பது சரியாகாது எனக்கண்டு "சரி அப்படியே செய்கிறேன் வாருங்கள்" என்று அவர்களை அழைத்துச் சென்று, அந்த மகிழை மூன்றுமுறை வலம் வந்து. "பெண்ணே! நான் உன்னைப் பிரியேன்" என்று சத்தியம் செய்து கொடுத்தார்.

சுந்தரர் சத்தியம் செய்து கொடுத்துவிட்டுத் திருக் கோயிலினுள் நுழைந்து பிரார்த்தனை செய்து விட்டுத் திரும்பி விட்டார். அதன் பிறகு சங்கிலியார் மலர் மண்டபம் புக்குத் தன் பணியை முடித்துக் கொண்டு, இறைவன் தனக்கு அருளிய கணவனை நினைந்து கன்னிமாடம் புகுந்தார். அன்றிரவு பரமசிவன் தம் அடியார்கள் கனவில் தோன்றி "என் அடியார்களே! என் அன்பர்களே! யாம் தடுத்தாட்கொண்ட சுந்தரனுக்கும் சங்கிலியாருக்கும் திருமணம் செய்து வையுங்கள்" என்று மொழிந்தருளினார். அடியார்கள் ஆண்டவன் கட்டளையைக் கேட்டு அடுத்த நாள் காலையில். திருவொற்றியூர் மக்கள் சூழ அலங்காரமாகத் திருமணம் செய்து முடித்தனர். சுந்தரரும் திருவெற்றியூரிலேயே சங்கிலியாருடன் இன்பம் துய்த்து வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு சங்கிலியாருடன் இன்பம் துய்த்திருக்கையில், ஒருநாள் திருவாரூரில் இருக்கும் வீதிவிடங்கப் பெருமாளுடைய வசந்த விழா நெருங்கியது கண்ட சுந்தரர் வன்மீக நாதரை இவ்வளவு காலம் மறந்திருந்

தோமே என்று மனம் வருந்தி, ஒரு பதிகம் பாடினார். பின்பு வன்மீகநாதரைக் காணவேண்டுமென்கிற அவா மேலோங்கி நின்றதால் திருவொற்றியூர் திருக்கோயிலில் நுழைந்து வணங்கித் திருவாரூர் போக வெளிப்பட்டார். உடனே அவருக்கு கண் ஒளி போனது. நாயனார் திகைத்துத் தான் செய்து கொடுத்த சத்தியத்தின் காரணமாகவே கண் இழக்க நேர்ந்தது என்று, "இக் கொடுந்துயரை நீக்கப் பாடுவேன்" என்று திருப்பதிகம் பாடினார். திருப்பதிகம் பாடியும் இறைவன் இரங்க வில்லையெனக் கண்டும் திருவாரூர் போக வேண்டும் என்னும் அவா ஆட்கொண்டிருந்ததால், தன் அடியார்கள் சிலர் முன் வழிகாட்டிச் செல்லத் திருவாரூருக்குப் புறம்பட்டார். வழியில் திருமுல்லை வாயில் சென்று ஆங்கு எழுந்தருளியிருக்கும் சிவனை நோக்கி ஒரு திருப்பதிகம் பாடினார். பின்பு திருவெண்பாக்கம் சென்று திருப்பதிகம் பாடினார். பின்பு பழையனூர் சென்று காரைக் காலம்மையார் தன் தலையாலே ப்ரதட்சணம் செய்த திருவேலங்காட்டுக்கு அருகில் நின்று பதிகம் பாடியபின்பு திருவூறலிற் சென்று வணங்கி, காஞ்சி காம கோட்டத்தையடைந்து காமாட்சியை வணங்கி, பிறகு திருவேகம்பத்தை யடைந்து ஏகாம்பரநாதசுவாமியை வணங்கி, "முன்பு திருப்பாற்கடலைக் கடையும்பொழுது அதினின்றும் தோன்றிய ஆலகால நஞ்சைத் திருமிடற்றில் அடைத்து தேவர்கள் அமுதம் உண்ண அருளிய கருணாநிதியே! சிறியேனாகிய நான் செய்த பிழையைப் பொறுத்து, சிறியேன் தேவரீரைத் தரிசிக்கும்பொருட்டுக் கண் தந்தருளுவாய்" எனறு பிரார்த்தித்தார். அப்பொழுது இறைவன் இடைக்கண்ணை மட்டும் கொடுத்துத் தமது திருஉருவைக் காட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் தரையில் விழுந்து பதிகம் பாடினார். அங்கி

ருந்து தொண்டை மண்டலம் சென்று திருவாமத்தூர் திருவாடுதுறை ஆகிய தலங்களில் பதிகம் பாடினார்.

தொண்டைமண்டலம் சென்றபொழுது அவருக்கு உடல் நோய் பெரிதும் வாட்டியது. திருத்துருத்திக்குச் சென்று சுவாமிகள் உடல் நோய் நீங்கக் கண்ணீர் சிந்திக் கதறியழுது வேண்டினார். கடவுள் மனமிரங்கி அவர் முன் தோன்றி "நீ இக்கோயிலுக்கு வடபுறத்தில் இருக்கும் குளத்தில் நீராடினால் உன் உடல் நோய் தீரும்" என்று மலர்ந்தருளினார். சுந்தரர் கைகளைத் தலைமேல் கூப்பித்தொழுது, புனிதகுளத்தையடைந்து உள்ளமெல்லாம் இறைவன் பாதங்களில் பதிந்து கிடக்கக் குளத்தில் இறங்கி மூழ்கி எழுந்தபொழுது அவரை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த உடல் நீங்கப் பெற்று ஒளி வீசும் உடலுடன் குளக்கரையை அடைந்தபொழுது கண்டோர் களிப்புற்றனர். கேட்டோர் வியந்து இறைவன் திருவருளைப் போற்றினர். சுந்தரர் திருத்துருத்திப் பெருமானைப் போற்றிப் பதிகம் பாடினார். பின்பு திருவாரூர் சென்று தனக்கு வலக் கண்ணும் தந்தருளும்படி பதிகம் பாடினார். அப்பொழுது வான்மீகநாதர் மனமிரங்கி வலக்கண்ணையும் கொடுத்தருளினார். சுந்தரர் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் மூழ்கினார். ஆடினார். பாடினார். வன்மீக நாதருடைய திருக்கோலத்தைக் கண்டு துதித்தார். பின்பு தேவாசிரிய மண்டபம் சென்று தங்கினார்.

திருவாரூர் சென்றும் பரவையர் வீட்டுக்குப் போகாது சுந்தரர் தம் சீடர்கள் சிலரை அனுப்பினார். அவர்கள் வருவது கண்ட பரவையர் அவர்களை வாயிலேயே நிறுத்தி அவர்களைக் கோபித்து அனுப்பி விட்டார். சென்றவர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் வந்து, "சுவாமி! திருவொற்றியூரில் தாங்கள் சங்கிலியரைத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருவது

தெரிந்து மிகவும் சினம் கொண்டுள்ளார். எங்களை வாசலிலேயே நிறுத்திச் சினந்து அனுப்பி விட்டார். நாங்கள் அவர் வீட்டுக்குள் செல்ல முடியாமல் திரும்பி வந்துவிட்டோம்'' என்றனர். நாயனார் மனம்கலங்கி ''இதற்கு என்ன செய்யலாம்'' என்று கேட்க, அதற்குச் சீடர், ''சுவாமி! மனநலம் காப்பதில் வல்ல ஒருவரை அவரிடம் அனுப்பலாம்'' என்றனர். சுந்தரர் அதன் படியே அந்த ஊரில் இருந்த மனோதத்துவர் ஒருவரை பரவையாரிடம் தன்னைப் பற்றிப் பரிந்துரைக்கும்படி அனும்பினார். பரவையார் அவரைப் பார்க்கவும் விரும் பாதவராய்க் கோபம் மேலிட, ''எனக்குத் துரோகம் செய்துவிட்டு வேறொரு பெண்ணை மணந்து இன்ப விளையாட்டுகள் விளையாடி வந்த அந்த சுந்தரரைப் பற்றிப் பேசினால் நான் உயிர் வாழேன் உடனே உயிர் நீத்து விடுவேன்'' என்று கூச்சலிட்டு அனுப்பி விட்டார். பரவையர் சொன்ன சொற்களை சுந்தர மூர்த்தியாரிடம் சொல்ல அவர் மனமுடைந்து, இரவில் மற்றவர்கள் ஆழ்ந்து நித்திரை செய்யும்பொழுது ஆண்டவனைத் தொழுது, ''ஆன்மாக்கள் செய்யும் கன்மங்களை தொலைத்தருளும் இறைவா! அடியேன் பூர்வத்தில் செய்த கர்மத்தினால் அடியேனுக்கு தேவ நீரால் சேர்த்து வைக்கப்பட்ட பரவையின் ஊடலைத் தேவரீரே இந்த அர்த்தசாமத்திலேயே எழுந்தருளி வந்து தீர்த்து வைத்தருளவேண்டும்'' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டு கண்களை மூடிக் கண்ணீர் விட்டு மண்ணில் சாய்ந்தார். அப்பொழுது ''சுந்தரனே! உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படிக் கலங்கிக் கிடக்கிறாய்? என்று கேட்பது காதில் விழுந்தது. மெல்லக் கண் விழித்துத் தலையை மெல்ல மெல்லத் தூக்கிப் பார்த்தார். அருட் பெருஞ்சோதி ஒளிப்பிழாம் பாய்த் தன் முன் எழுந்தருளியிருக்கக் கண்டார். சுந்தரருக்குக் கண்கள் கூசின. உடல் நடுங்கியது.

உடலிலுள்ள மயிர் உடலெங்கும் சிலிர்த்து நின்றது. பேச நா எழவில்லை. கைகள் மட்டும் தானாக தலைக்கு மேல் எழுந்து ஈசனைக் கும்பிட்டன. ஈசன் மறுபடியும், "சுந்தரரே! நான்தான் நீ என்னை அன்றாடம் பூசித்து வருகிறாயே அந்த உன் அன்பன் வந்திருக்கிறேன். உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் கவலையுற்றுக் கவிழ்ந்து கிடக்கிறாய். நான் உன் தோழன் சொல்", என்றார். 'சுவாமி! தேவரீரின் திருவருளால் திருவொற்றியூரில் சங்கிலியாரை நான் திருமணம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தேன். அது பரவையருக்குத் தெரிந்துவிட்டது. நான் பரவையரிடம் சென்றால் உடனே உயிர் மாய்த்துக் கொள்வேன் என்று சொல்லிவிட்டாள். சுவாமி! சிறியேனாகிய நான் தேவரீருக்கு அடியானும் தேவரீர் இந்த அடியானுக்குத் தோழனுமானால் சிறியேன்படும் பெரும் துயரைப் போக்கப் பரவையர் வீட்டுக்குச் சென்று அவளுடைய ஊடலைத் தீர்த்து என்னை அவளுடன் சேர்த்து வைத்தருளவேண்டும்" என்றார். நண்ப! நீ விரும்பியபடியே இப்பொழுதே பரவையின் வீட்டுக்குச் செல்கிறேன். நீ உன் கவலையை விடுக" என்று திருவாயமுதுதிர்த்தது. ஈசனும் பூத கணங்களை அழைத்துக் கொண்டு அவைகளை வெளியே நிறுத்தி விட்டுத் தான் மட்டும் ஒரு ஆதிசைவன் உருக்கொண்டு பூட்டிக் கொண்டிருக்கும் கதவின் முன் நின்று, "பரவையே! கதவைத் திற" என்றார்; தூக்கமின்றிக் கிடந்த பரவை அது கேட்டு, சுவாமிக்கு அர்ச்சனை செய்யும் சைவர் வந்திருக்கிறார் என எண்ணியவர் அந்தப் பெரியவர், இந்த நேரத்தில் இங்கே வருவதற்குக் காரணம் யாதோ எனப் பயந்து பதபதைத்துப் போய்க் கதவைத் திறந்தார். ஆதிசைவர் உருவில் இருந்த ஈசனைப் பார்த்து "சுவாமி! இந்த நேரத்தில் இங்கு எழுந்தருளக் காரணம் யாது?" எனக் கேட்டார்.

''பெண்ணே! நான் சொல்வதை நீ தவறாது செய்தால் சொல்லுவேன்'' என்றார். ''ஐயா பெரியவரே! நீர் முதலில் சொல்லும். பிறகு அதனை என்னால் செய்ய முடியுமா முடியாதா என்பதைச் சொல்கிறேன். என்னால் செய்ய இயலுமானால் செய்வேன்'' என்றாள். பரவையே! சுந்தரமூர்த்தி இங்கு உன் வீட்டுக்கு வர நீ உடன்பட வேண்டும்'' என்றார். சுவாமி! உமது பெருமை நன்றாக இருக்கிறது. திருவொற்றியூர் சென்று ஆங்கு சங்கிலியரால் பிணிப்புண்டவருக்கு இனி இங்கு என்ன வேலை. நீர் பேசாமல் உமது வேலையைப் பார்த்துக்கொண்டு போம்'' என்றார் கோபத்துடன். ஈசனும் தன் உண்மை உருவைக் காட்டாமல் சுந்தரரிடம் சென்றார்.

பரவையரில்லம் சென்று திரும்பும் ஈசுவரனைக் கண்டு சுந்தரர் மகிழ்ச்சிப் பெருக்கில் அவ்வரை எதிர் கொண்டு போனார். ''சுவாமி! அன்று என்னை ஆட் கொண்ட இறைவனே! இன்று என் ஆசையைத் தீர்த்து வைத்த எம்பெருமானே! பரவையாரின் கோபம் முழுவதும் தீர்த்து வைத்து வந்த பரம்பொருளே!'' என்று போற்றினார். ''பரவையர் வீட்டுக்குச் சென்று வந்தோம். ஆனால் அவள் சிறிதும் இசைந்து கொடுக்க வில்லை'' என்றார் இறைவன். சுந்தரர் நடுக்கமடைந்து ஈசன் பாதங்களில் விழுந்து ''சுவாமி! நான் பரவையரிடத்தில் போய்ச் சேருதற்கு அருள் செய்யாவிடில் நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்று கலங்கியழுதார். பரமசிவன் சுந்தரவர நோக்கி, ''நாம் மீண்டும் பரவையரிடம் சென்று உம்மை ஏற்றுக் கொள்ளச் செய்வோம். நீர் கலங்க வேண்டாம்'' எனத் தேற்றிக் கணங்களோடும் முனிவர்களோடும் பரவையர் வீட்டுக்கு மீண்டும் சென்றார். பரவையரும் முன்பு தன் வீட்டுக்கு வந்து சென்றது சிவபெருமானே என்பதை ஊகித்துப்

பயந்தவளாய் சிவபெருமான் மீண்டு வருவாரோ என்று வழிமேல் விழி வைத்து நின்றிருந்தார். ஈசனும் தன் கணங்களுடன் பரவையர் வீட்டினுள் நுழைந்தார். பரவையார் கடவுள் திருவடிகளில் விழுந்து வணங்கி நின்றாள். "பரவையே! நாம் சுந்தரன் மீண்டும்அனுப்ப வந்தோம். நீ முன் போலிராமல் காமமயக்கில் வருந்தும் அவன் உன்னிடம் வருவதற்கு உடன்பட வேண்டும்" என்றார். "ஆண்டவனே! ஆதிசைவன் உருவில் வந்த தங்கள் சொல்லை ஏற்காததற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன். இறைவா! இப்பொழுது உமது திருக்கோலத்தோடு என் இல்லத்திற்கு எழுந்தருளியிருக்கிறீர்கள். பிரம்மாவாலும் விஷ்ணுவினாலும் அறியப்படாத தங்களது திருவடிகள் எனது குடிலில் பதிந்தது என் பெரும் பாக்கியம். தேவரீர் சொல்லுக்கு மறுவாக்கு ஏது. இதற்கு உடன்படாமல் நான் என்ன செய்வேன்''' என்றார். "மகிழ்ச்சி மங்கையே! மகிழ்ச்சி நான் வருகிறேன்" என்று சொல்லி சுந்தரரிடத்திற்குத் திரும்பினார். இப்பொழுது சுந்தரர் இறைவன் என்ன செய்தி கொண்டு வருகிறாரோ என்றஞ்சி, "சுவாமி! என் உயிரைக் காத்திடப் பரவையிரிடமிருந்து அவள் சம்மதத்தைப் பெற்று வந்தீரா?" என்று வினவினார். 'அன்பனே! சுந்தரனே. பரவையருக்கு உன் மேலிருந்த சினத்தைத் தணித்து வந்தோம். மகிழ்ந்து வாழ்ந்திடுக" எனக் கூறினார், சுந்தரரும் இன்பம் பொங்க. "சுவாமி! போகமும் மோட்சமும் இரண்டையும்கொடுத்தருளிகிறவர். தேவரீர் என்று உலகுக்குப் புலப்படுத்தினீர். எனக்கு இனி இடர் ஏது" என்று ஈசன் பாதங்களில் விழுந்தார். அப்பொழுது ஈசன் மறைந்தார்.

சிவபெருமான் சொன்னபடி பரவையர் சுந்தரரை வரவேற்கத் தன் இல்லத்தை அலங்கரித்தார். ஆடை

அணிகலன்கள் பூண்டு அழகு மயிலென வாசலில் நின்றிருந்தா. சுந்தரர் தம் சீடர்கள் புடைசூழத் தேவர்கள் பூமாரிமொழியப் பரவையர் வீடு வந்து சேர்ந்தார். தன்னை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பரவையரை இரு கைகளால் அணைத்துக் கொண்டு வீட்டினுள் புகுந்து கட்டிலில் புரண்டு ஒருவர் மேல் ஒருவர் ஒதுங்கி இன்பம் துய்த்தனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வாறு பரவையரோடு இன்ப வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கையில், திருப்பெருமங்கலத்தில் இருந்த ஏயர் கோன் கலிக்காம நாயனார் என்பவர் கேள்வியுற்று ஈசுவரனைப் பரவையரிடம் தூதனுப்பியது தவறு என்று தம் மேல் கோபம் கொண்டிருக்கிறார் என அறிந்த சுந்தரர் பரம சிவனிடம் அக்காலிக்காம நாயானாரின் சினத்தைப் போக்க வேண்டினார். பரமசிவன் கலிக்காம நாயனார் குலை நோயினால் வருந்தச் செய்து அவரிடம் எழுந்தருளி கலிக்காம நாயனாரே! உமக்கு வந்திருக்கும் குலைநோயைத் தீர்க்க வல்லவர் அந்த சுந்தரமூர்த்தி நாயனாரே'' என்று கூறி மறைந்து பின். சுந்தரரிடம் வந்து, ''நீ சென்று கலிக்காம நாயனாரின் குலை நோயைத் தீர்த்து வா'' என்று சொல்லி மறைந்தார். ஆண்டவன் கட்டளைப்படி சுந்தரர் தாம் குலை நோயைத் தீர்க்க வந்து கொண்டிருப்பதாகக் கலிக்காம நாயனாருக்கு ஆளனுப்பியிருந்தார். சுந்தரர் தன் குலைநோயைப் போக்க வருகிறார் என்றி தெரிந்ததும் ஒரு உடைவாளை எடுத்துத் தன் வயிற்றில் குத்திக் கொண்டு இறந்து போனார். கலிக்காம நாயனார் இறந்து கிடப்பதை அங்கு வந்து கண்ட சுந்தரர், ''நாயனாரே! என்னால் நீங்கள் உங்கள் உயிரை மாய்த்துக் கொண்டதால் நானும் அதே வாளால் என் உயிரை மாய்த்துக் கொள்

கிறேன்'' என்று சொல்லி அந்த வாளை எடுத்துத் தன் வயிற்றில் குத்திக் கொள்ளப் போகும் பொழுது பரமசிவன் திரு அருளினால் கலிக்காமநாயனார் உயிர் பெற்று அந்த வாளை பிடித்துத் தடுத்து நிறுத்தி விட்டார். கலிக்காமநாயனார் சுந்தரர் பாதங்களில் விழுந்து வணங்கினார். பிறகு சுந்தரர் திருப்புன்கூர் சென்று பதிகம் பாடினார்.

சில நாட்கள் சென்ற பின்பு திருவாரூரை அடைந்தார். பின் திருநாகைக்காரோணத்துக்குப் போய்ப் பதிகம் பாடிப் பொன்னும் மணியும் ஆடை ஆபரணங்களும், குதிரையும் உடைவாளும் பெற்று மீண்டும் திருவாரூர் சென்று தங்கினார். அப்பொழுது சேர மண்டலத்திலுள்ள கொடுங்கோலூரிலுள்ள சேரமான் பெருமாணாயனார் சுந்தரைத் தரிசிக்க திருவாரூர் வந்தார். சுந்தரரும் அவரை எதிர் கொண்டழைத்து நட்பு கொண்டொழுகியமையால் சுந்தரர் 'சேரமான் தோழர்' எனும் சிறப்புப் பெயர் பெற்றார்.

சுந்தரர் பின்பு திருநாகைக்கோரணம் திருமறைக்காடு (வேதரணியம்), குழகர் கோடி ஆகிய திருப்பதிகள் சென்று திருப்பதிகம் பாடி, சோழ நாடு கடந்து பாண்டி நாட்டையடைந்து, மதுரைக்கு வந்து அங்கு பாண்டிய மன்னன் மகளைத் திருமணம் செய்து கொண்டு இரத்தின மாளிகையில் தங்கி மகிழ்ந்திருந்தார். பின்பு மதுரை நீங்கி' திருப்பூவணம் சென்று பதிகம் பாடினார். பின்பு மதுரை திரும்பி அங்கு சிலநாட்கள் தங்கியிருந்து திருப்பரங்குன்றம் திருக்குற்றாலம், திருநெல்வேலி முதலிய தலங்களை வணங்கி இராமீச்சரம் சென்று, ஈழத்தில் உள்ள திருக்கேதீச்சரத்தை மனதில் கொண்டு வணங்கித் திருப்பதிகம் பாடி, திருச்சுழியால் ஈசன் காளை வடிவம் கொண்டு கையில் பொற் செண்டும் முடியின் மேல் சுழியுடன்

காட்சியளித்தார். திருக்கான்பபேர் திருப்புனவாயில் ஆகிய தலங்களைத் தொழுது பாடினார்.

சுந்தரர் பாண்டி நாட்டைக் கடந்து சோழ மண்டலமடைந்து திருவாரூரில் பரவையர் வீட்டிலிருந்து வன்மீக நாதரை வணங்கியிருக்கையில் அவருடன் நீங்கா அன்புடன் தங்கியிருந்த கோமான் பெருமா நாயனார் சுந்தரரைத் தம் ஊருக்கு வரும்படி வேண்டிக் கொண்டார். சுந்தரரும் அதற்கு ஒப்புதல் கொடுத்து இருவரும் காவிரி நதியின் தென்கரை வழிசென்று திருக்கண்டியூரரை வணங்கிச் செல்கையில் வடகரையில் திருவையாறு எதிரே தோன்ற சேரமான் பெருமாணாயனார் "திருவையாற்றை வணங்கிச் செல்வோம்" என்றார். அப்பொழுது காவிரி பெருக்கெடுத்தோடிக் கொண்டிருந்தது. ஓடங்கள் எதுவும் செல்லா நிலையில், சுந்தரர் திருப்பதிகம் பாடத் தொடங்கினார். அப்பொழுது கடவுள் தோன்றி யாவரும் கேட்கும்படி 'ஓலம்'' என்று சொல்லியருளினார். உடனே காவிரி நதி பிரிந்து மேற்றிசைநீர் பளிங்குமலைபோல் நிற்கக் கீழ்த்திசை நீர் வடிந்து நடுவழி மணற்பரப்பாய் இருந்தது. அதனைக் கண்ட அடியார்கள் மெய் சிலிர்க்கக் கடவுளைத் துதித்துக் கொண்டே ஆற்றின் மத்தியில் மணல்வழி சென்று திருவையாற்றையடைந்து சிவ தரிசனம் செய்தபின் மறுபடியும் மணல் வழியே திரும்பிக் காவேரி நதியின் தென்கரை வந்து சேர்ந்ததும் மலைமேல் நின்றிருந்த நதி தொடர்ந்து பாய்ந்தோடியது. சேரமான் பெருமாணாயனாரும் சுந்தரரும் அதிசயித்து ஈசனைத் தொழுது பின் கொங்கு நாட்டை அடைந்து, கொடுங்கோளூர் சென்று, பின்பு சேரமான் பெருமாணாயனர் சுந்தரரைத் திருவஞ்சைக் களத்துக்கு அழைத்துச் செல்கையில் யானையின் மீது

சுந்தரரை அமரவைத்துப் பின் தாமும் ஏறி வெண் சாமம் வீசிக்கொண்டு சென்று மாளிகையில் புகுந்து அவரை அரியணையில் அமர்த்தி அவருக்கு அர்ச்சனை பண்ணி அமுது படைத்தார். ஆங்கிருக்கையிலேயே திருவாரூரில் வான்மீக நாதரை நினைந்து ஓர் பதிகம் பாடினார்.

சுந்தரர் திருவாரூருக்குத் திரும்ப விருப்பம் கொண்டு எழுந்தருள, சேரமான் பெருமாணாயனார் அவரைப் பிரிந்திருக்க மனமில்லாதவராய்த் தடுத்து நிறுத்தியும் கேளாதவராய்ச் செல்வது கண்டு அமைச்சர்களைக் கூப்பிட்டுத் தன் களஞ்சியத்திலுள்ள பொன் இரத்தினம் அத்தனையும் ஆட்கள் தலைமேல் சுமத்திச் சுந்தரர் முன் செல்ல அனுப்பினார். சுந்தரர் மலைநாடு நீங்கி, காடுகளையும் காட்டாறுகளையும் கடந்து திருமுருகன் பூண்டி தாண்டிச் செல்கையில்பரமசிவன் தன் பூதகணங் களை நோக்கி "எமது பூதகணங்களே! எமது தோழன் செல்வங்களைச் சுமந்து சென்று கொண்டிருக்கிறான். நீங்கள் வேடவடிவம் கொண்டு அவைகளைக் கவர்ந்து விடுங்கள்" என்றார். பூதகணங்கள் வேடர் வடிவம் கொண்டு திடீர் என்று வில் அம்புகளுடன் அவர்கள் முன் தோன்றினர். "நீங்கள் எடுத்துச் செல்லும் செல் வங்களை உடனே கீழே போட்டு விட்டு ஓடிப் போய் விடுங்கள். இல்லையேல் ஒருவர்கூட உயிர் தப்ப முடியாது" என்றனர். சேரமான் பெருமாணாயனாரின் ஆட்கள் "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று சுமந்து வந்த செல்வங்களனைத்தையும் அப்படியே போட்டு விட்டு ஓடிப் போய் சுந்தரரிடம் அடைக்கலம் புகுந்த னர். பூதகணங்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகளை நெருங்க வில்லை. சுந்தரர் திருமுருகன் பூண்டி கோயில் சென்று பதிகம் பாடினார். உடனே வேடுவர்கள் தாம் கவர்ந்த செல்வங்களையெல்லாம் கோயிலின் முன் கொண்டு

வந்து குவித்தார்கள். சுந்தரர் அவைகளை ஆட்கள் தலைமேல் ஏற்றித் திருவாரூர் சென்றடைந்து செல்வம் கொழிக்க வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் சுவாமிகள் தமது நண்பர் சேரமான் பெருமாணாயனாரைக் காண விழைந்து எழுந்திருளி கொங்குநாடு கடந்து திருப்புக்கொளியூரில் சென்ற பொழுது ஆங்கோர் தெருவில் ஒரு வீட்டில் மங்கல ஒலியும் மற்றொரு வீட்டில் அழுது ஒலியுய் கேட்க, சுந்தரர் ஆங்கிருந்த அந்தணர்களைப் பார்த்து, அந்தணர்களே! இது என்ன வியப்பாக இருக்கிறது. இந்த அகத்தில் மங்கல ஒலியும், அந்த் அகத்தில் அழுகை ஒளியும் கேட்கிறதே! அதன் காரணம் என்ன?'' என்றனர். ''சுவாமிகளே! இந்த இரண்டு அகத்துப் பையன்களும் குளத்தில் நீராடப் போனார்கள். அவர்களில் ஒருவனை அக்குளத்தில் இருந்த முதலை தின்றுவிட்டது. அதனால் அந்த வீட்டில் அழுகை ஒலி. இந்த வீட்டுப் பையன் தப்பித்து வந்துவிட்டான். அவனுக்கு மார்புநூல் அணியும் விழா நடத்துகிறார்கள். அதனால் இங்கு மங்கல ஒலி'' என்றனர். அதற்குள் சுந்தரர் எழுந்தருளியுள்ளார் என்ற செய்தி கேட்டு அழுகையை நிறுத்திவிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு, மகனை இழந்த பிராமணனும் மனைவியும் ஓடோடி வந்து சுவாமிகளின் பாதங்களை வணங்கினர். ''புதல்வனை இழந்த பெற்றோர் நீங்கள் தானே!'' என்றார். சுவாமி அந்த அபாக்கியவான்கள் நாங்கள்தான். அது அப்பொழுது நடந்தது. ஆனால் நாங்கள் சுவாமிகளைத் தரிசிக்கப் பேரவாக் கொண்டிருந்தோம். அது இப்பொழுதுதான் நிறைவு பெற்றது'' என்றனர். 'அந்தணனும் மனைவியும் தங்கள் துன்பத்தையும் மறந்து என்மேல் அன்பு செலுத்துகிறார்கள். ஆதலால் இவர்கள் புதல்வனை முதலை வாயினின்றும் மீட்டுக் கொடுத்திட வேண்டும்'

என்று நினைந்து, 'அந்தணரே! உங்கள் மகனை விழுங்கிய முதலை வசிக்கும் குளம் எங்கே இருக்கிறது? அங்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்'' என்றார். அந்தணர் சுந்தரரை அழைத்துச் செல்ல, அவிநாசியில் விற்றிருக்கும் ஈசனைப் போற்றி ஒரு திருப்பதிகம் பாடினார். ''உரைப்பாருரை'' எனும் பாடலை சுந்தரர் பாடிமுடிக்கும் முன்னரே எமன் அந்தப் பையனது உயிரைக் கொண்டு வந்து அக்குளத்திலுள்ள முதலையின் வயிற்றினுள்ளே புகுத்தி விட்டான். உடனே முதலை அச்சிறுவனைக் கரையில் கொண்டுவந்து உமிழ்ந்தது. அப்பொழுது சிறுவனின் தாய் ஓடோடி வந்து தன் மகனை அள்ளி எடுத்து முத்தங்கள் பொழுந்து சுந்தரர் திருவடிகளில் சேர்ப்பித்து வணங்கினாள். இந்த அதிசயத்தைக் கண்ட தேவர்கள் ஆகாயத்தினின்றும் மலர் மாரி பொழிந்தனர். பிராமணர்கள் தமது மேலாடைகளை ஆகாயத்தில் வீசி ஆர்ப்பரித்தனர்.

சுந்தரர் அப்புதல்வனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு அவிநாசிக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து திருப்பதிகம் பாடிப் பின் அச்சிறுவன் வீட்டிற்கு வந்து அவனுக்கு உபநயனம் செய்வித்துப் பிறகு கொங்கு நாடு கடந்து மலை நாட்டையடைந்து சேரமான் பெருமாணாயனாருடன் சிலகாலம் தங்கியிருந்தார்.

ஒருநாள் சுந்தரர் திருவஞ்சைக் களத்துக்குப் போய்' அங்கிருக்கு சிவாலயத்தினுட் புகுந்து சந்நிதியில் விழுந்து கண்கள் நீரைப் பெருக்க' ''சுவாமி! இறைவா! நான் இந்த உலக வாழ்க்கையில் உழன்றது போதும். இந்த உலக வாழ்க்கையை நீத்து உன் திருவடிகளில் சேர்ந்திட வேண்டும்'' என்று திருப்பதிகம் பாடினார்.

சுந்தரர் பாடிய திருப்பதிகம் கேட்டருளி சிவ பெருமான், பிரமன் முதலான தேவர்களைக் கூப்பிட் டனுப்பினார். "சர்வேசுவரா! ஈசுவரா! மூவர்க்கும் முதல்வனே! முத்தொழில் நாயகா! எங்களை அழைத்தன் காரணம் என்னவோ" என்றனர். சர்வேசு வரன் தேவர்களைப் பார்த்து, "பிரமன் முதலான தேவர்களே! கேளுங்கள். எமது அடியானாகிய சுந்தரன் உலக வாழ்க்கை இனி வேண்டாமென்று சொல்லி விட்டான். அவனை நீங்களனைவரும் இந்திரனுடைய வெள்ளையானையை அழைத்துக் கொண்டு போய் அவனை எல்லா மரியாதையுடனும் அழைத்து வரவேண்டும்" என்றார். தேவர்களனை வரும் வெள்ளை யானையை அழைத்துக் கொண்டு திருவஞ்சைக் களத்தை அடைந்து கோயிலை வலம் வந்து வாயிலை அடைந்தார்கள், அப்பொழுது சுந்தரர் எதிர்கொண்டு வந்தார். பிரமன் முதலான தேவர்கள் சுந்தரரை வணங்கி, "சுவாமி நாங்கள் தேவர்கள். சிவபெருமான் ஆணையின் வடி நாங்கள் உங்களை தேவர் உலகுக்குஅழைத்துச் செல்லதேவேந் திரனின் ஐராவதம் எனும் வெள்ளையானையையும் கொண்டு வந்துள்ளோம். ஐராவதியின் மீது எழுந் தருள வேண்டும்" என்றனர். சுந்தரர் வேதங்கள் முழங்க, தேவர்கள் மலர் பொழிய வெள்ளை யானை மீதமர்ந்து தனது நண்பர் சோமான் பெருமாணா யனாரையே நினைந்துகொண்டு தேவர் உலகுக்குப் பயனமானார்.

தன் நண்பரும் குருவுமான சுந்தரர் ஐராவதியின் மீதுமர்ந்து தேவர் உலகுக்குச் சென்று கொண்டிருக் கிறார் என்பதைபறிந்த சோமான் பெருமாணாயனார் அருகில் நின்ற ஒரு குதிரையில் அமர்ந்து திருவஞ்சைக் களத்துக்குப் போய் அங்கு வெள்ளையானையின் மீத மர்ந்து ஆகாயத்தில் செல்லும் சுந்தரரைக் கண்டு, தான்

சவாரி செய்து கொண்டிருக்கும் குதிரையின் காதில் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினார். உடனே அக் குதிரை ஆகாயத்தில் பறந்து சுந்தரர் சவாரி செய்யும் வெள்ளையானையினை வலம் வந்த பிறகு அதற்கு முன் சென்றது. சேரமான் பொமாணாயனாரின் படை விரர்கள் தங்கள் அரசன் ஆகாயத்தில் சுந்தர ருக்கு முன் செல்வதைக் கண்ணுக்கு எட்டிய தூரம் கண்டு, பிறகு காண இயலாமையால் தங்களது வாளால் தங்களை மாய்த்துக் கொண்டு' வீர உடலுடன் சோமான் முன் சென்று அவருக்குச் சேவை செய்து கொண்டே சென்றார்கள். சேரமான் முன் செல்வதைப் பார்த்து சுந்தரர், "தானெனை முன் படைத்தான்" எனும் திருப்பதிகம் பாடிக் கொண்டே கைலாய மலை யின் தெற்கு வாயிலுக்கு முன் போனார்கள்.

இருவரும் வாயிலையடைந்து தத்தம் வாகனங் களினின்று இறங்கி, பற்பல வாயில்களைக் கடந்து திருவனுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். அப் பொழுது அங்கு காவலிலிருந்த கணங்கள் சேரமான் பெருமாணாயனாரைக் கண்டதும் அவரை உள்ளே விடாமல் தடுத்து நிறுத்தி விட்டனர். சுந்தரர் தேவர்கள் புடைசூழ சிவபெருமான் சந்நதி சென்று விழுந்து வணங்கினார். "சுந்தரனே! வந்தனையோ?" என்றார். சுவாமி அடியேன் தங்களின் அடிமை. இந்த ஏழை செய்த பிழைகளை மன்னித்து என்னை அடிமை யாகக் கொண்டு உலகப் பற்றினின்றும் நீக்கி அடியே னுக்குத் திருவடிகளைத் தந்தருளிய கருணாநிதியே, உமது கருணையே கருணை" என்று இன்ப வெள்ளத் தில் மூழ்கினார். பின்பு, "சுவாமி! தங்கள் திருவடி களை அடைந்து விட வேண்டுமென்று எனக்கு முன் வந்த சேரமான் பெருமாணாயனார்' திருவனுக்கன் திரு வாயிலில் காத்துக் கிடக்கிறார் என்றார். சிவபெருமான் உடனே நந்தி தேவரை அழைத்து "நந்தி தேவரே!

சேரமான் பெருமாணாயனாரை உடனே நம் சந்நதிக்கு அனுப்பி வைக்கவும்'' என்றார். சேரமானும் சிவ பெருமான் சந்நதியில் விழுந்து வணங்கி மெய்சிலர்க்க நின்றார், உடனே சிவபெருமான், ''சுந்தரரே! நீயும் உனது நண்பன் சேரமானும் எமது இரு கண்களாகத் திகழ்வீர்கள்'' என்றருளினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சுவாமியை வணங்கி எழுந்திருந்து முன்போல ஆலால சுந்தராகித் திருத்தொண்டில் மூழ்கினார். சேரமான் பெருமாணாயனாரும் ஈசனை விழுந்து வணங்கி எழுந்து, கணநாதராகி முன்போல் சேவை செய்யத் தொடங்கினார். பர்வையரும் சங்கிலியரும் முன்போல், கமலின் அநிந்திதையாகி பார்வதி தேவி யாருக்குத் திருத்தொண்டு செய்து வந்தார்கள். சுந்தரர் தாம் அருளிய திருப்பதிகத்தை வருணனுக்குக் கொடுக்க அவன் அதைத் திருவஞ்சைக் களத்தில் கொண்டு போய் யாவருக்கும் தெரிவித்தார்.

—: o :—

சேக்கிழார் பெருமான் வரலாறு

ஆதியில் நந்தி மலையில் வசிட்டர் ஆசிரமத்தில் இருந்த காமதேனு பொழிந்த பால் பெருகிப் பாய்ந்த காரணத்தால் பாலாறு எனும் பெயர் பெற்ற புனித நதி பாயும் தொண்டை நாட்டில், புலியூர் கோட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில், சேக்கிழார் மரபில் அருண் மொழித் தேவர் அவதரித்தார், இவர் கல்வியறிவு மிக்க வராய் விளங்கினார். அந்நாட்டு மன்னன் அனபாய சோழன் இதையறிந்து அவருக்கு முதலமைச்சர் பதவி யும், உத்தம சோழப் பல்லவராயன்,' எனும் பட்டமும் கொடுத்துச் சிறப்பித்தான்.

அனபாய சோழன் சைவனாயிருந்தும் சமணப் பெரு நூலாகிய சீவக சிந்தாமணியில் மிகுந்த ஆர்வம் கொண்டு அதனை மகிழ்ந்து பயின்று போற்றலானான். இதையறிந்த அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமான், ''நம்முடைய சைவ சமயக் கதைகள் இருக்க இந்தச் சமண சமயக் கதை படிக்கலாமோ?'' என வினவினார். அதற்கு மன்னன் ''சைவத்தில் இது போன்ற கதை இல்லையே, அப்படியிருந்தால் விவர மாகச் சொல்லுக'' என்றார். அருண் மொழித் தேவரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவாரூரில் சிவபெரு மான் கருணை கூர்ந்து, ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக்

கொடுத்ததும், அதன்படி நம்பி ஆரூரர் பாடிய திருத்தொண்டத் தொகைக்குத் திருநரையூர் நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையார் பொருளுரைக்கத் திருத்தொண்டர்களுடைய பெருமை தோன்றக் கலித்துறையந் தாதியாகத் திருத்தொண்டர் திருவந்தாதி செய்ததும் எடுத்துரைத்தார்.

அரசன் அதுகேட்டு மகிழ்ந்து சேக்கிழாரை நோக்கி திருத்தொண்டர் பெருமைகளை விளக்கும் பெருங் காப்பியம் ஒன்று செய்ய வேண்டினார். அதன்படி அருள் மொழித்தேவர் சிதம்பரம் சென்று தெண்டனிட்டு திருத்தொண்டர் பெருமைகளைப் பெருங்காப்பியமாக்க அடியெடுத்துக் கொடுக்க வேண்ட, ஈசனும் ''உலகெலாமுணர்ந்து'' என்று அடியெடுத்துக் கொடுக்க அது கேட்டு மகிழ்ந்து ஆயிரங்கால் மண்டபத்தில் அமர்ந்து பெரிய புராணத்தைப் படைத்து முடித்தார்.

செய்தியறிந்த அனபாய சோழன் சேக்கிழார் செய்த புராணத்தைத் தில்லையில் சென்று கேட்டு வணங்க வேண்டும் என்று கனகசபையில் திருத்தொண்டர் வரலாற்றையும் சேக்கிழாரையும் யானை மீதமர்த்திக் கவரி வீசிவந்து பின் சிற்சபையில் சேர்த்தனர். மன்னர் இவருக்குத் ''தொண்டர் சீர்பரவுவார்'' எனும் பட்டமும் கொடுத்தார். சேக்கிழார் திருத்தில்லையிலேயே தங்கியிருந்து நடராசர் திருவடிகளையடைந்தார்.

★

நூல் அறிமுகம்

தமிழ் மொழியில் தோன்றியுள்ள பன்னிரண்டு திருமுறைகளுள், பன்னிரண்டாம் திருமுறை என்று வைத்து எண்ணப்படுவதும் பெரிய புராணம் என்றழைக்கப்படும் திருத்தொண்டர் புராணமாகும். பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று, இடங்களைத் திருஞானசம்பந்தர் பெற்றுள்ளார். நான்கும், ஐந்தும்,ஆறும் அப்பர் சுவாமிகளுடையது. ஏழாம் திருமுறை வன்தொண்டருடையது. எட்டாந் திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும், திருக்கோவையுமாகும். திருமாளிகைத் தேவர் முதல் ஒன்பதின்மன்மர் அருளிய திருவிசைப்பாவும், சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறை, திருமுலர் திருமந்திரம் பத்தாம் திருமுறை, திருவாலவாயருடன் பன்னிருவர் அருளியது பதினோராம் திருமுறையாகும்.

திருத்தொண்டர் புராணம் தோன்றக் காரணமாயிருந்தவர் வன்தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகளாகும். இப்பெருங்காப்பியத்தின் நாயகனும் சுந்தரமூர்த்தி நாயனாரேயாகும். ஈசன் மறை அளித்த திருவாயால் ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்துப் பாடச் சொன்ன போது, வன்தொண்டர் தான் பாடிய ''திருத்தொண்டத் தொகை''யில் தன்னை ஒவ்வொரு அடியார்க்கும்

அடியனாகவே காட்டியருள்கிறார், ஆனால் திருத்தொண்டத் தொகைக்குப் பொருளுரைக்கப் போந்த திருநரையூர் நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையார் வன்தொண்டரின் பெருமை தோன்றத்தான் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் ஆங்காங்கு சிறப்பித்துப் பாடியருள்கிறார். திருத்தொண்டர் வரலாற்றைப் பெருங்காப்பியமாகச் செய்த சேக்கிழார் பெருமானும் இதனைத் தழுவியே தன் காப்பிய நாயகரான சுந்தர மூர்த்தி நாயனாரை நான்கு இடங்களில் சிறப்புற அமைத்துப் பரடிக் காட்டுகிறார்.

முதல் இடமாக சுந்தரர். ஆலால சுந்தரராகத் திருக் கயிலையில் சிவபெருமானுக்குத் தொண்டாற்றியதும் பார்வதி அம்மையின் சேடியர் அநிந்திதை, கமலனி ஆகியோரிடம் காமுற்றுத் திருக்கயிலையிலிருந்து இம் மண்ணுலகுக்கு அனுப்பப்பட்ட செய்தி "திருமலைச் சிறப்பு" அறிவிக்கிறது. அவர்கள் இம்மண்ணில் தோன்றியதன் முன்னோடியாக நமக்குத் தெரிவிப்பது திருநாட்டுச் சிறப்பு, திருநகர்ச் சிறப்பு, திருக்கூடச் சிறப்பு ஆகிய பகுதிகளாகும். இப்பகுதி 134 திரு விருத்தப்பாக்களைக் கொண்டது.

இரண்டாவதாக இறைவன் திருக்கைலையில் வாக்களித்தபடி நம்பி ஆரூரரைத் திருமண பந்தத்தினின்றும் விடுவித்து ஆட்கொண்டு பின்பு கமலனியாகிய பரவையருக்கு அளித்தது தடுத்தாட் கொண்ட புராணமாகும். இப்பகுதி 203 திரு விருத்தப்பாக்களைக் கொண்டது.

மூன்றாவதாக நம்பி ஆரூரர் தனது இரண்டாவது காதலியான அநிந்ததை, சங்கிலியார் என்ற பெயரில் அவதரித்திருக்க அவரைத் திருவொற்றியூரில் அடைந்து இன்பம் துய்த்ததும். இதன் காரணமாக ஏயர்கோன்

கலிக்காம நாயனார் பகைமை கொண்டு அந்தப் பகைமை தீர்த்ததும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில்கூறப்படுகிறது. இப்பகுதி 409 திரு விருத்தப் பாக்களைக் கொண்டது.

நான்காவதாகச் சேரமான் பெருமாள் நாயனாருடன் நட்பு கொண்டு அவர்கள் இருவரும் ஈருடல் ஒருயிராக வாழ்ந்த செய்தி கழறிற் றறிவார் நாயனார் புராணத்தில் கூறப்படுவது 175 திரு விருத்தப்பாடல்களாகும்.

கடைசியாக வன்தொண்டர் திருக் கயிலைக்கு மீண்டும் திரும்பியது வெள்ளானைச் சருக்கம் அறிவிக்கிறது. இப்பகுதி 53 திரு விருத்தப்பாக்களைக் கொண்டது.

சேக்கிழார் பெருமான் தான் பாடிய பெரிய புராணத்துக்குப் பாயிரமாகப் 10 பாடல்களைத் தந்துள்ளார். பெரிய புராணத்தின் காப்பிய நாயகன் நம் சுந்தரர் ஆதலின் இந்தப் பாயிரம் பத்தையும் இந்நூலுக்குப் பாயிரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது, பெரிய புராணத்திற்கு முழுமையாக உரை செய்யும் பெரும்பேறு கிடைக்கப் பெறின் இந்நூலையே முதல் நூலாகக் கொள்ளலாம் எனும் பேராசையும் பாயிரத்தை இந் நூலில் சேர்த்த தன் காரணம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது.

1.	பெரிய புராணத்துக்கான பாயிரம்	10
2.	திருமலைச் சிறப்பு	40
3.	திருநாட்டுச் சிறப்பு	35
4.	திருநகரச் சிறப்பு	50
5.	திருக்கூட்டச்சிறப்பு	11
6.	தடுத்தாட் கொண்ட புராணம்	203
7.	ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	409
8.	கழறிற் றறிவார் நாயனார் புராணம்	175
9.	வெள்ளானைச் சருக்கம்	53
	மொத்தம் திருவிருத்தங்கள்	986

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் புராணங்கள் போன்று சுந்தரமூர்த்தி நாயனார் புராணமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது கற்போர் மனத்தைக் களிப்பில் ஆழ்த்த வல்லது, ஆய்வாளர்கட்குப் பெருவிருந்து, பெரிய புராணத்துக்கு முழுமையான உரை இல்லாத நிலையில் தமிழ் கூறும் நல் உலகு இந்நூலையும் விரும்பி வரவேற்றுப் பயின்று மகிழும் என நம்புகிறேன்.

பெரிய புராணத்தில் உள்ள மொத்தம் 4286 திருவிருத்தங்களில் இதுவரை திருஞான சம்பந்தர் புராணம் 1256, திருநாவுக்கரசர் புராணம் 429, சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் 86 ஆக மொத்தம் 2671 திருவிருத்தங்களுக்கு உரை செய்யப்பட்டது. இனிச் செய்ய வேண்டியது மீதமுள்ள 1615 திரு விருத்தங்களுக்கும் உரை எழுதி வெளி வரும்போது தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பெரிய புராணத்துக்கு முழுமையான உரை பெற்றுப் பெருமையடையும் என நம்புகிறேன்.

சென்னை 600101
நாள் 27-5-1998

கோக்கலை ஜேராஜன்

தெய்வச் சேக்கிழார் அருளிய

சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்
(மூலமும் உரையும்)

உரை : கோக்கலை ஜேராஜன்

பாயிரம்

கடவுள் வாழ்த்து
தில்லை நடராசர்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்! 1

விளக்கவுரை:- உலகின் பேரறிவாளர்களெல்லாம் உணர்ந்து கூறுதற்கு அரியவன். நிலவொளி வீசக் கங்கை ஆற்றைச் சடையில் தாங்கியவன் எல்லையற்ற பரஞ்சுடராய் பொன்னம்பலத்தில் ஆடும் இறைவனது சிலம்பணிந்த மலர்ப்பாதங்களை வாழ்த்தி வணங்குவோம்.

அரும்பதவுரை:- உலகெலாம்—உலகின் உயர் திணைப் பொருட்களெல்லாம். "உலகம் என்பது

உயர்ந்தோர் மாட்டே'' ஆதலின் உலகின் பேரறிவாளர் எல்லாம். நிலவு உலாவிய—நிலவு ஒளி படர்ந்த. நீர்—கங்கை. வேணி—முடி, சடை.

ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர் பொற் றாள்தொழ. 2

வி.ரை:- தேன் சிந்தும் மலர்ச் சோலைகளால் சூழப்பட்ட திருத்தில்லையுள் பெருநடம் செய்யும் வரதப்பரது திருத்தாள்களைத் தொழுவதே ஊன்உடம்பை எடுத்த இப்பிறவியின் பயனாகும்.

அ.ரை:- ஊன்—மாமிசம். உடம்பு. பிறவி—மானிடப் பிறவி. ஏகாரம் தேற்றமாகக் கொள்க உறுதி—பேறு, பயன். சாரும் — அடைவதாம். ஆல்அசை அடைந்த—மிகுந்த. வாதர்—வரம்தரும் நடராசர்.

விநாயகர்

எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம் 3

வி.ரை,- எடுத்துக் கொண்ட பெரியபுராணம் எனும் இக்கதையை இனிய தமிழில் செய்யுளாய்ச் செய்திடும் சிறப்பினை நமக்கு அருள் செய்திடப் பருத்த கைகள் ஐந்துடையதும் தாழ்ந்து தொங்கும் செவிகளும் நீண்ட மணிமுடியுடன் மதம் ஒழுகும் யானை முகக் கடவுளை மனத்துள் வைத்து வணங்குவோம்.

அ.ரை:- எடுக்கும்—எடுத்துக்கொண்ட. நடக்க—செய்திட, அமைத்திட. தடம்—பருத்த. கை ஐந்து—நான்கு கைகள், துதிக்கைகள் சேர்த்து ஐந்து கைகள். கடம்—மதம். களிறு—யானை, ஆண் யானை.

நாயன்மார்கள் அவை

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே 4

வி.ரை:- பிறையணிந்த சபாநாயகரை முன்பு நாயன்மார்கள் தூய சொல் மலர்மாலைகளால் துதிசெய்யும் பக்திச்சுவை நுகர்தற்கென்று புனிதர்களது பேரவையானது உலகின் விதிமுறைகளில் சிறந்து விளங்கிச் சிறப்பதாக.

அ.ரை:- மன்றுளார்—சபாநாயகர். முன்—ஆதியில். சொன்மலர்—திருத்தொண்டத் தொகையை முதலாகக் கொண்ட நாயன்மார் கூட்டம். வரலாறு. பொதிநலன்—தேன்சிந்தும், பக்தி நலன். புனிதர் — நாயன்மார். வெல்க—சிறக்க. ஏகாரம் அசை.

அவையடக்கம்

அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவி லாசை துரப்ப அறைகுவேன். 5

வி.ரை:- அளவில்லாத பெருமையை உடையவராகிய எண்ணற்ற அடியார்களது புகழைக் கூறுவேன்

என்று சிறிதளவுகூடச் சொல்லுதற்கு அரியதாயினும் நான் அளவில்லாப் பேராசையால் ஒளமிட்டுக் கூவு வேன்.

அ.ரை:- அளவுகூட — சிறிதளவுகூட. துரப்ப — உந்த. தூண்ட.

தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கடல் உற்றுண் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்குந் தகைமையேன். 6

வி.ரை:- முழுமையாகப் பெருக்கெடுக்கும் குளிர்ந்த கடலை அடைந்து ஒரு நாய் ஒன்று அதனை முற்றிலும் நக்கி உண்ணுதல் போன்று அறிதற்கரிய பெருமை மிக்க திருத்தொண்டர்களது ஒப்பற்ற சிறப்பைக் கூறலுற்றேன்.

அ.ரை:- தெரியவரும்—தெரிந்துகொள்தற்கு அரிய அறிதற்கரிய. பொருவருஞ்சீர் — ஒப்பற்ற சிறப்பு. பொருவு—ஒப்பு. அருஞ்சீர்—அரியசீர். புகல—சொல்ல. முற்றப் பெருகும்—முழுமையாக அலை வீசும். தெண் கடல் தண்கடல் எனக்காண்க. உற்று—சென்று. பெருநசை—பேராசை. சுணங்கு—நாய். ஒக்கும்—ஒத்து. தகைமை—தன்மை.

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால் 7

வி.ரை:- சொல்லப் பட்ட பொருளின் சிறப்பினால் அப் பொருளுக்கு அமைந்த சொல்லைப் பலரும் ஏற்

றுக் கொள்வர். அது போன்று. இந்தப் பொருளுக்கு என்னுடைய உரையானது மிகவும் சிறியதாயினும் அந்தப் பொருளின் சிறப்பினால் உண்மைப் பொருளை அறிஞர் உணர்ந்தறிவர்

அ.ரை:, செப்பலுற்ற — சொல்லப்பட்ட. மெய்ப் பொருட்குரியார்—உண்மைப் பொருளை அறியும் திறம் கொண்ட அறிஞர்.

மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன் திருப் பேரம்ப லம்செய்ய
தூய பொன்னணி சோழன்நீ டுழிபார்
ஆய சீர்அன பாயன் அரசவை. 8

வி.ரை:- சிவந்த திருமேனியையுடைய தில்லைக் கூத்தன் திருவருளால் சிவந்த தூய பொன்னாலான அணிகலன்கள் பூண்ட, நீண்ட காலம் உலகில் மிகுந்த சிறப்பினையுடைய சோழன் அனபாயன் அரசவை யானது பொருந்திய இப்பெரியபுராணத்தை விரும்பி ஏற்கும்.

அ.ரை:- மேய - பொருந்திய. இவ்வுரை—இந்தப் பெரியபுராணம். சேயவன்—பொன்னாற் மேனியன். செய்ய—சிவந்த.நீடுழி பார் ஆயசீர்—நீண்டகாலம்·உலகில் நிறைந்த சிறப்பினையுடைய. அனபாயன் —ஒரு சோழ அரசன். இவனை இராசேந்திரன் என்றும் குலோத்துங்கன் என்றும், இரண்டாம் குலோத்துங்கன் என்றும் கூறுவர்.

அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவரும்
தெருளில் நீரிது செப்புதற் காமெனின்
வெருளில் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளின் ஆகும் எனப்புகல் வாம் அன்றே. 9

வி.ரை:- அறிதற்கு இயலாததும் 'அருட்தன்மை உடையதுமான நாயன்மார்களின் திருத்தொண்டினைத்

தெளிவு இல்லாத நீர் செல்லுதற்கு ஆம் என்றால், மயக்கம் இல்லாத உண்மை மொழியை ஒரு அசரீரியானது வானிலிருந்து கூறியதின் பொருளின் தன்மையதாகும் என்று கூறலாமன்றோ.

அ.ரை:- அறிவரும்—அறிதற்கரிய. நீர்மை—சிறப்பு தெருளில்—தெளிவில்லாத. வானிழல்கூறிய—வான்ஒலி. அசரீரி.

திருத்தொண்டர் புராணம்

இங்கிதன் நாமங் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்
என்பாம் 10

வி.ரை:- இங்குஇந்நூலின் பெயரைச் சொல்லுமிடத்து இவ்வுலகத்தில் முன்பு ஒருகாலத்தில் அவரவர் மனத்தில் தங்கிய இருள் இரண்டினுள் மன இருளையுடைய மாக்களது மனத்துள் சென்று சார்ந்திருந்து அக இருளையும் மற்றும் புற இருளையும் போக்கும் சிவந்த கதிர்களையுடைய ஞாயிறு போன்று திருத்தொண்டர் புராணம் என்று கூறுவாம்.

அ.ரை:- தங்கிருள் இரண்டு—அக இருள் புறஇருள். பொங்கிய இருள்—மன இருள், அக இருள். ஞாயிறு புற இருளைப் போக்கும். திருத்தொண்டர் புராணம் அக இருளையும் புற இருளையும் போக்கும் தன்மையது. திருத்தொண்டர்—வன்தொண்டர். வன்தொண்டர் பெருமான் வரலாற்றைக் கூறுமுகத்தான் அப்பெருமான் அருளிய திருத்தொண்டர் தொகையை முதலாகக் கொண்டு பாடப்பட்டது. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் வன்தொண்டர் என்பதாம்.

முதற் காண்டம்

திருக்கைலாயச் சிறப்பு

திருமலைச் சருக்கம்

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை. 1

வி.ரை:. பொன் போன்று ஒளிறும் வெண்மையான திருநீறு அணிந்த பரமசிவன் திருவோலக்கமாக எழுந்தருளியிருக்கும் பெரிய மலையானது நீண்ட பனிமலையாகிய இமய மலையின் பக்கத்தில் உள்ளது.

அ.ரை:. நீள்பனி மால்வரை—இமயமலை. தன்னை யார்க்கும் அறிவரியான் என்ற—திரு அத்தாணித் தோற்றம் திருவோலக்கமாக எழுந்தருளியிருத்தல்.

அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணு மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது. 2

வி.ரை:- அம்மலையில் அண்ணல் எழுந்தருளி யிருக்கப் பெற்றமையால், பொருந்திய மூன்று உலக

மும், நான்கு வேதங்களும், எண்ணற்ற மாதவம் செய்ய வந்து சேர்ந்த புண்ணியம் திரண்டு வந்து சேர்ந்தது போன்று ஒளிவிசியது.

அ.ரை:- மூன்று வரும்—மூன்றுலகில் உள்ள முனிவர்கள் புண்ணியவான்கள். புண்ணியம் திரண்டுள்ளது. மூவுலகின் புண்ணியங்களும் திரண்டு வந்து ஒளிவீசுவதானது.

நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆகவெ ழுந்ததோர்
உலகம் எனும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல் வதம் மால்வரை. 3

வி.ரை:- அங்கு இருக்கும் எண்ணற்ற இடங்களும் நீண்டு ஒளிவீசும் மென்மையான குளிர்ந்த தளிர்களாகவே எழுந்ததாகிய ஒளி வீசும் மணிவல்லிக் கொடியின் மீது மலர்ந்த வெண் மலர் போன்று இருப்பது அந்த கைலாயமலை.

அ.ரை:- நிலவும்—விளங்கும். மால்வரை—பெருமை மிக்க மலை. கொடியாகவும், தளிராகவும், வெண் மலராகவும் உருவகிக்கப்பட்டுள்ளது.

மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம். 4

வி.ரை:- அம்மலையின் பக்கங்களில் எல்லாம் மேன்மையான நான்கு வேதங்களையும் ஓதும் ஓசையும், வித்தியாதரர்களின் வீணையின் ஓசையும் மேகத்துக்கு மாறாக யானைகளின் முழக்கமும்; குற்றமற்ற சிறந்த தெய்வீக வாத்தியங்களும் முழங்கும்.

அ.ரை:- நான்மறை—தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம் ஆகிய நான்குமாம். இவைபிற்காலத்தில் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என வகுக்கப்பட்டன. கார் எதிர்தான மாக்கள்—யானைகளின் கூட்டம். மேகத்திற்கு பதிலாக மதம் பொழியும் யானைகள். தாவில்—குற்றமற்ற. வானதுந்துபி—தேவர் உலக வாத்தியங்கள்.

பனிவி சும்பில் அமரர் பணிந்துசூழ்,
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெலாம். 5

வி.ரை:- குளிர்ந்த பனி தோய்ந்த வானில் வாழும் தேவர்கள் வணங்கிப் போற்றிச் சூழ்ந்திருக்கும் கோடான கோடி முடிவரிசையும் அத்தேவர்கள் அணிந்த மாலைகளும், புனிதமான கற்பகத்தின் வாடா மாலைகளும், முனிவர்கள் அஞ்சலி செய்யும் பொழுது சிந்திய மாலைகளும் எங்கும் நெருங்கிக் கிடக்கின்றன.

அ.ரை:- பனி—குளிர்ச்சி. விசும்பு—வான். அனித கோடி—அனேக கோடி. பலகோடி. அனிதம்—எண்ணற்ற. பொன்னரி மாலை — வாடாமலர் மாலை. அஞ்சலி—கை குவித்து வணங்குதல்.

நீடு தேவர் நிலைகளும் வேண்டின்
நாடும் ஐம்பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம். 6

வி.ரை:- நீடுயர்ந்த வேண்டியபடி வாழிடங்களும் வேண்டிய போது வேண்டியபடி படைக்கவல்ல ஐம்பெரும் பூதகணங்களும், கோடான கோடியா

யமைந்த குள்ளமான சிறிய பூதங்களும் ஆடிப்பாடி எங்கும் பரந்துகிடந்தன.

அ.ரை-- நிலைகள் — வாழிடங்கள். நாட்டுவன— படைக்கவல்லன. குறள்—குள்ளம். பரப்பது—பரந்த இடத்தில் எங்கும் இருப்பது.

நான் முகன்

நாய கன்கழல் சேவிக்க நான்முகன்
மேய காலம் அலாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியில் மூழ்கியொன்
றாய அன்னமும் காணா தயர்க்குமால். 7

வி.ரை:- கயிலை நாயகன் திருத்தாள்களைச் சேவிக்கும்நேரம் கிடைக்காமையினால் திரும்பியபிரமன் அந்தக் கைலாய மலையின் தூய வெண்மையான ஒளிப்பிழம்பில் ஒன்றாக மறைந்துபோன தனது அன்ன வாகனம் காணாது மனந்தளர்வான்.

அ.ரை:- மேய காலம்—தக்க காலம். அயர்க்கும்— மனம் தளரும், மயங்கும். கயிலாய வெண்மை மயமான சோதியில் அன்னம் கண்ணுக்குப் புலப்படாமையின் நான்முகன் மனந்தளர்ந்தான்.

நெடியோன்

காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்
காலம் பார்த் திருந்ததும் அறியான்,
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செஞ்சுடர். இன்று வெண்சுட
ரானதென் றதன்கீழ்,
ஆதியே னமதாய் இடக்கலுற் றானென்
றதனைவந் தணைதரும் கலுழன் 8

வி.ரை:- காதில் வெண்மையான குண்டலங்களை அணிந்த பிரானின் வெற்றிக் கழல்களைத் தொழுவதற்கென்று தக்க நேரம் பார்த்து வந்த திருமால் ஊர்ந்து வந்த கருடன். அந்தக் குறிப்பிட்ட காலம் பார்த்திருந்தது அறியாதவனாய் வெண் ஒளிவிசும் சோதிப் பிழம்பாகிய கயிலாயத்தின் அடிவாரத்துக் குகையில் விநாயகப் பெருமானின் ஊர்தியாகிய எலி கண்ணில் பட,-பண்டைக் காலத்தில் செஞ்சுடராயிருந்தது இன்று வெண் சுடரானது என மயங்சி, ஆதியில் பன்றியாய் பூமியைக் குடைந்து செல்கின்றான் என்று அதனை வந்தடைந்தது.

அ.ரை;- குழை—குண்டலம், தாழ்வரை — அடிவாரம், முழை—குகை. துதிக்கையோன்—பிள்ளையார். ஊர்தி—வாகனம். பெருச்சாலி. பண்டைச் செஞ்சுடர்—பண்டைக் காலத்தில் முகுந்தனும், முண்டகனும். சினந்து போரிட்ட காலத்தில் அவர்களை ஆட்கொள்ளச் சிவபெருமான் கொண்ட செஞ்சுடர் உருவான அக்கினி மலையை. வெண்சுடர்-கயிலை மலை. ஏனம்—பன்றி. இடக்க—குடைய, கலுழன்—கருடன்: திருமால் சிவபெருமான் தரிசனத்துக்காக கயிலையில் காத்துக் கிடக்கக் கருடன் கைலாய மலையின் ஒளி வெள்ளத்தில் மயங்கி அடிவாரக் குகையில் விநாயகரது வாகனமாகிய எலியைப் பன்றி என மயங்கி அதன் பக்கம் வந்தது என்பதாம்,

புரந்தரன் முதலிய தேவர்கள்

அரம்பைய ராடல் முழவுடன் மருங்கில் அருவிகள்
எதிரெதிர் முழங்க,
வரம்பெறுங் காதல் மனத்துடன் தெய்வ மதுமலர்
இருகையும் ஏந்தி,

நிரந்தரம் மிடைந்த விமானசோ பான நீடுயர் வழியினால் ஏறிப்,
புரந்தரன் முதலாம் கடவுளர் போற்றப் பொலிவதத் திருமலைப் புறம்பு.

விரை:— திருமலையின் புறம்பானது, அரம்பை மகளிர் ஆடுவதற்கான தேவர் உலக மத்தள ஓசை யுடன் கயிலாய மலையின் இருபக்கமும் விழும் அருவி களின் ஓசையும் எதிர் எதிராக முழங்க, சிவபெருமானி டம் வரம் பெறுவதற்கான அன்பு மனத்துடன் தேன், சிந்தும் கற்பகமரத்தின் மலர்களைத்தமது இருகைகளில் ஏந்திக் கொண்டு, இடைவெளியின்றி எப்பொழுதும் விமானங்கள்ின் கீழுள்ள படிகளின் மேல் ஏறி நின்று கொண்டு தேவேந்திரன் முதலான தேவர்கள் போற்றும் பொலிவ்வையுடையது,

அரை:— அரம்பையர்— தெய்வமகளிர். முழவு— தெய்வ வாத்தியம். நிரந்தரம் மிடைந்த—எப்பொழுதும் நெருங்கி நின்று. விமான சோபனம்—விமானத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள படிகள். இடமின்றிப் படிகளில் நின்று காத்துக் கிடந்தனர். புரந்தரன்-இந்திரன்,

நந்தியெம்பெருமான்

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவர் எண்ணிலார் மற்றும்
காதலால் மிடைந்த முதற்பெருந் தடையாம் கதிர் மணிக் கோபுரத் துள்ளான்,
பூதவே தாளப்பெருங்கண நாதர் போற்றிடப் பொதுவில் நின்றாடும்,
நாதனார் ஆதி தேவனார் கோயில் நாயகன் நந்தியெம் பெருமான் 10

விரை:— வேதங்களைப் படைத்த பிரமனும், திருமாலும், தேவேந்திரன் முதலான எண்ணற்ற விண்ணவர்களும் மற்றும் பூதவேதாளப் பெருங்கண நாதர் தொழுது போற்றிட அம்பலத்தில் நின்று ஆடும் நாதன் ஆதிதேவன் கோயிலிக்கு நாயகன் நந்தி தேவனாகும். அவன் நவமணிகள் பதித்த ஒளிவீசும் முதற் கோபுர வாயிற்தலைவராகக் காதலால் நின்று காத்து வருபவன்.

அரை:— வேத நான்முகன் – வேதங்களைப் படைத்த பிரம்மன். மிடைந்து—செறிதல், காத்தல். பொதுவில்—சிற்சபையில், பூதவேதாளப் பெருங்கண நாதர்—அமரர்களுடன் சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், காந்தருவர், கிந்நரர், நிருதர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முநிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர் என்னும் பதினெண் கணங்கள்.

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர் நீறணி மேனியர் அநேகர்,
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார் பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்,
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும் மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்,
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான் காப்பதக் கயிலைமால் வரைதான். 11

விரை:— நெற்றியில் கண்ணும் நான்கு பருத்த பெரும் தோள்களும் திருநீறு பூசிய மேனியும் இடபத்தை வாகனமாகக் கொண்ட தலைக்கோல முடைய சிவபெருமானிடம் அருள்பெறக்காத்துக் கிடக்கும் அநேகர் மற்றவர்கட்கெல்லாம் தலைவனாய்ப் பணியாற்றும் நந்தியெம்பெருமான் மலர்க்கையில்

உடைவாளையும், பிரம்பையும் கற்றையாக சடையை யுடைய சிவனார் அருளினால் திருக்கைலாய மலையைக் காப்பதற்காகப் பெற்றான்.

அரை:— பெற்றம்—இடபம், காளை. பிஞ்ஞகன்—தலைக்கோலமுடைய சிவன். சுரிகை—உடைவாள். வரை—மலை.

அநபாயன் உள்ளம்

கையில்மான் மழுவர் கங்கை சூழ்சடையில் கதிரிளம்பிறை
நறுங்கண்ணி,
ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும் அளப்பரும்
பெருமை யினாலும்,
மெய்யொளி தழைக்குந் தூய்மை யினாலும் வென்றி வெண்
குடைஅந பாயன்,
செய்யகோல் அபயன் திருமனத்தோங்கும் திருக்கயிலாய
நீள் சிலம்பு 12

விரை:— ஒரு கையில் மானும் மற்றொரு கையில் மழுவும், சடையில் கங்கையும், ஒளிவீசும் பிறையும் கொன்றை மாலையும் அணிந்து இறைவன் எழுந்தருளி யிருக்கும் தன்மையினாலும் சொல்லுதற்கரிய பெருமையினாலும், உண்மைச் சைவநெறி ஒளி தழைத்தோங்கும் தூய்மையினாலும், வெண்கொற்றக் குடையையுடைய அநபாயன், செங்கோலை உடைய அச்சமில்லாத அவனது திரு உள்ளம் போன்று ஓங்கி உயர்ந்திருக்கும் திருக்கயிலாய மலை.

அரை:— மழு—சிவபெருமான் கையில் உள்ள ஒரு ஆயுதம். கண்ணி—தலைமாலை. கொன்றை மாலை. செய்யகோல்—செங்கோல். அபயன்—அச்ச

மற்றவன். திருமனத்து — திருஉள்ளம் போன்று. சிலம்பு—மலை.

உபமன்னிய முனிவன்

அன்ன தன்திருத் தாழ்வரை யின்னிடத்
தின்ன தன்மையன் என்றறி யாச்சிவன்
தன்னை யேயுணர்ந் தார்வந் தழைக்கின்றான்
உன்ன ருஞ்சீர் உபமன் னியமுனி 13

விரை:—இத்தன்மையதான கைலாயத்தின் அடிவாரத்தில் எக்கடவுளினும் பரமசிவனே மெய்க் கடவுள் என்று உணர்ந்த அன்பில் மூழ்கித் தழைத்த சொல்லுதற்கு அரிய சிறப்புகளையுடைய உபமன்னிய முனிவர் இருந்தார்.

அரை:—அன்ன—அத்தகைய. தாழ்வரை—மலையடிவாரம். இன்னதன்மையன்—இத்தகையவன். ஆர்வம்—அன்பு. உன்ன—சொல்ல.

யர்த வன்துவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்
பூத் நாதன் பொருவருந் தொண்டினுக்
காதி அந்தம் இலாமை அடைந்தவன். 14

விரை:—இடையன், துவாரகைக்கு அரசனாகிய கண்ணபிரான் முடியின்மேல் தன் அடிகளை வைத்துத் தீட்சை செய்தவன், எல்லா உயிர்கட்கும் இறைவன், ஒப்பற்ற சிவத் தொண்டினுக்கு ஆதியும் அந்தமும் இல்லாச் சிறப்பை அடைந்தான்.

அரை:— யாதவன் — இடையன். துவரை — துவாரகை. மாதவன்— கண்ணபிரான். பூதநாதன்—

எல்லா உயிர்கட்கும் தலைவன். ஆதி அந்தம்—முதலும் முடிவும்.

அத்தர் தந்த அருட்பாற் கடலுண்டு
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்
பத்த ராய முனிவர்பல் ஆயிரர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி. 15

வி.ரை :- சிவபெருமான் தந்த திருஅருட் பாற் கடல் உண்டு மனம் மகிழ்ந்து தெவிட்டத்தெவிட்ட உண்டு வளர்ந்த அந்த முனிவன் ஆயிரம் சித்த யோகிகள் சூழ இருந்த நாளில்.

அ.ரை :- அத்தர்—சிவபெருமான். அருட்பாற்கடலுண்டு—உபமன்னிய முனிவர் குழந்தையாய் இருக்கையில் திருப்பாற்கடல் பருகத் தந்தருளினார் என்பது புராணம். சித்தம் ஆர்ந்து—மனம் மகிழ்ந்து. யோகிகள்—முனிவர்கள். இருந்துழி—இருந்த நாளில்.

பொங்கு பேரொளி தோன்றியது

அங்கண் ஓரொளி ஆயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்றுமுன் தோன்றிடத்
துங்க மாதவர் குழ்ந்திருந் தாரெலாம்
"இங்கி தென்கொல் அதிசயம்" என்றலும் 16

வி.ரை :- அவ்வாறு முனிவர் தன் அடியார் முனிவர்கள் சூழ இருக்கையில் அங்கு ஓரொளி ஆயிரம் ஞாயிறு பொங்கும் பேரொளி போன்று தோன்றிடத் தன்னைச் சூழ்ந்திருந்த முனிவரெல்லாம் "இதென்ன அதிசம்" என வினவினர்.

அ.ரை :- துங்க மாதவர்—தூய பெருந்தவர்.

''வன்தொண்டன்'' என்றது

அந்தி வான்மதி சூடிய அண்ணல்தான்
சிந்தி யாஉணர்ந் தம்முனி ''தென்திசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்தொண்டன்
எந்தை யார்அரு ளால்அணை வான்''என. 17

வி.ரை :- உபமன்னிய முனிவர் பிறைசூடிய சிவ பெருமானைத் தியானித்துத் தெரிந்து, தென் திசையில் திருநாவலூர்க்கிறைவன் புகழ்மிக்க வனதொண்டன் எம் இறைவன் ஆணையின்படி வருகிறான் என்று.

அ.ரை :- அந்திவான்மதி—மூன்றாம்பிறை. சிந்தயா உணர்ந்த — சிந்தித்துத் தெளிந்து. நாவலர்—திருநவ லூரில் அவதரித்த. வன்தொண்டர் — சுந்தர மூர்த்தி நாயனார்.

கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர் 18

வி.ரை :- கைகளைத் தலைமேல் குவித்த அத் தென்திசை நோக்கித் தொழுது, ஆனந்தக் கண்ணீர் உடலை நனைப்பச் சிவந்த நீண்ட சடை மாமுனிவன் செல்லும்போது, தங்கள் ஐயம் நீங்குதற்கு முனிவர்கள் வினவினர்.

அ.ரை :- ஆனந்தவாரி — ஆனந்தக் கண்ணீர். விரவிட—பரவிட, பெருக. செய்ய—சிவந்த. மாமுனி— உபமன்னிய முனிவர்.

நம்பி ஆரூரன்

"சம்பு வின் அடித் தாமரைப் போதலால்
எம்பி ரான் இறைஞ் சாயிஃ தென்'' எனத்
''தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்'' 19

வி.ரை :- எம்பிரானே! சிவபெருமானுடைய தாமரைத் தாள்களல்லால் வணங்கமாட்டீர். இது என்ன? என்று வினவ, தம்பிரான் சிவபெருமானைத் தன் உள்ளத்தில் தழுவிய இவன் நம்பி ஆரூரன் நாம் தொழுதற்குரியவன் என்றார்.

அ.ரை :- சம்புவின் — சிவபெருமானுடைய. எம்பிரான்—உபமன்னிய முனிவர். இறைஞ்சாய்—தலை வணங்காய். தம்பிரான் — சிவபெருமான். உள்ளம் தழீஇயவன்—உள்ளத்தால் தழுவிய இவன்.

என்று கூற இறைஞ்சி இயம்புவார்
''வென்ற பேரொளி யார்செய் விழுத்தவம்
நன்று கேட்க விரும்பும் நசையினோம்
இன்றெ மக்குரை செய்தருள்'' என்றலும். 20

வி.ரை :- என்று முனிவன் சொல்ல அந்தணர்கள் வணங்கிக் கூறுவர். "ஐம்புலன்களையும் வென்ற பேரொளியார் வன்தொண்டர் செய்த விழுத்தவம் யாது என்று கேட்கும் விரும்பும் உடையோம். இன்றே எங்களுக்குக் கூறுக'' என்றதும்.

அ.ரை :- இறைஞ்சி—வணங்கி. இயம்பு—சொல். வென்ற பேரொளி—ஐம்புலன்களையும் வென்றதால் பெற்ற பேரொளி. நசை—ஆசை.

கைலையில் ஆலால சுந்தரர்

உள்ள வண்ணம் முனிவன் உரைசெய்வான்
''வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய
வள்ளல் சாத்து மதுமலர் மாலையும்
அள்ளு நீறும் எடுத்தணை வானுளன் 21

வி.ரை :- ''கங்கையாற்று வெள்ளத்தைச்சடையில் அணிந்த மெய்ப்பொருளாகிய வள்ளல் சிவபெருமானுக்குச் சாத்தும் முறைமையால் தேன்ததும்பும் மலர் மாலையும் அருவி நீரும் கொண்டு செல்பவன் ஒருவன் உளன்'' என்ற நடந்தவண்ணம் முனிவன் கூறலுற்றான்.

அ.ரை :- உள்ளவண்ணம்—நடந்தது நடந்தபடி. வெள்ளநீர்—கங்கைநீர் சாத்தும்—முறைப்படி செய்யும்.

அன்ன வன்பெயர் ஆலால சுந்தரன்
முன்னம் ஆங்கொரு நாள்முதல் வன்தனக்
கின்ன ஆமெனும் நாண்மலர் கொய்திடத்
துன்னி னான்நந் தனவனச் சூழலில். 22

வி.ரை :- அத்தகையவன் பெயர் ஆலாலசுந்தரன். அக்கைலாயத்தில் முன்னம் ஒருநாள் முதல்வன் சிவபெருமானுக்கு என்று இத்தகைய மலர்கள் தகுந்தவை என்று அன்றலர்ந்த மலர் கொய்வதற்கு என்று சுற்றுப் பக்கமுள்ள மலர்ச்சோலையினுள் சென்றான்.

அ.ரை :- முதல்வன் — சிவபெருமான். இன்ன ஆமெனும்—இத்தகையது தகும் எனும். நாண்மலர்— அன்றலர்ந்த மலர். துன்னினான்—சென்றடைந்தான். நந்தனவனம்—மலர்ச்சோலை.

அனிந்திதையும், கமலினியும் காவினுட் புகுந்தது

அங்கு முன்னெமை ஆளுடை நாயகி
கொங்கு சேர்குழற் காமலர் கொய் திடத்
திங்கள் வாள்முகச் சேடியர் எய்தினார்
பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார். 23

வி.ரை :- அங்கு அதற்கு, முன்னதாகப் பார்வதி தேவியார் இயற்கையாக மணம்வீசும் கூந்தலுக்கென்று மலர் கொய்திடத் திங்கள் போன்று ஒளிவீசும் முகப் பொலிவுடைய தோழிகள் நாகணவாய்ப் பறவையின் மொழியையுடைய பொங்கும் அழகுடைய மகளிர் இருவர் பூங்காவினுட் சென்றனர்.

அ.ரை :- ஆளுடை நாயகி—பார்வதி தேவியார். கொங்கு சேர்குழல்—இயற்கையாகவே மணம் கமழ் கூந்தல். ஆமலர்—தக்க மலர். சேடியர்—தோழியர். கவினுடை — அழகுடை. பூவைமார் — நாகணவாய்ப் பறவை போன்ற மொழியினர்.

அந்த மில்சீர் அனிந்திதை ஆய்குழல்
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவர் ஈசர் அருளென. 24

வி.ரை :- எல்லையில்லாப் பேரழகுடைய அனிந்ததை என்பவளும் கோதிவிடப்பட்ட மணம் வீசும் கூந்தலாள், மாலை அணிந்த கமலினி என்பவளும், கொத்துக்களாக உள்ள புதுமலர் கொய்திட வானவர் தலைவன் சிவபெருமான் அருளால் வந்தனர்.

அ.ரை :- சீர்—அழகு. ஆய்குழல்—அழகிய, ஆய்ந்த கூந்தல். கந்தம்—மணம். கொந்து—கொத்து.

காதல் மனங்கலந்தது

மாத வஞ்செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வான்அவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதருங் காட்சியில் கண்ணினார். 25

வி.ரை :- பெருந்தவம் செய்த தென்நாடு வாழ்ந்திட, குற்றமற்ற திருத்தொண்டத் தொகை தந்திடச் சொல்லும் அம்மகளிர் மேல்மனமானது சென்றிடக் காதல் மயக்கம் தரும் மங்கையரும் ஆலாலசுந்தரரைக் காண்பதே காடிசியினராயினர்.

அ.ரை :- தென்திசை—தமிழ் நாடு, போதுவான்—போவாராகிய மலர் கொய்ய வந்தவராகிய ஆலால சுந்தரர். அவர்மேல்—சேடியர்மேல். காட்சியில் கண்ணனார்—ஆலால சுந்தரரைக் காண்பதே காட்சி என்றாயினர்.

முன்னம் ஆங்கவன் மொய்ம்முகை நாண்மலர்
என்னை யாட்கொண்ட ஈசனுக் கேய்வன
பன்ம லர்கொய்து செல்லப் பனிமலர்
அன்னம் அன்னவ ருங்கொண் டகன்றபின். 26

வி.ரை :- முதலில் ஆலால சுந்தரர் என்னை ஆட்கொண்டவராகிய இறைவனுக்குப்பொருந்தும் பலவகையான நெருங்கிய அரும்புகளாயிருந்து அன்றலர்ந்த மலர்களைக் கொய்து செல்லக் குளிர்ந்த மலர்களுடன் அன்னம் போன்ற நடையுடைய சேடியரும் சென்ற பின்பு.

அ-ரை :- மொய்முகை — நெருங்கிய, கொத்தாக உள்ள மொக்குகள். ஏய்வன—பொருந்துவன.

இறைவன் ஆணை

ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
'மாதர் மேல்மனம் வைத்தனை, தென்புவி
மீது தோன்றிஅம் மெல்லிய லாருடன்
காதல் இன்பங் கலந்தணை வாய்' என. 27

வி.ரை :- அந்தக் காதல் காட்சியைக் கண்டிருந்த சிவபெருமான் ஆலாலசுந்தரரின் எண்ணத்தை அறிந்து, மாதர்மேல் உன் மனத்தைச் செலுத்தினையாதலின் தென் தமிழ் நாட்டில் பிறந்து அந்த மெல்லியலார் இருவருடனும் காதல் இன்பம் துய்த்து மீண்டும் இங்கு வந்து சேர்வாய்'' என்று கூற.

அ.ரை :- ஆதிமூர்த்தி — சிவபெருமான். அவன் திறம்—ஆலால சுந்தரரின் மனம்.

ஆலால சுந்தரர் விண்ணப்பித்தது

கைக ளஞ்சலி கூப்பிக் கலங்கினான்
'செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னே!தடுத் தாண்டருள் செய்,என 28

விரை:— இறைவன் ஆணை கேட்ட ஆலால சுந்தரர் கைகளைத் தலைமீது கொண்டு வணங்கிக் கலங்கி, 'ஐயனே! அழகிய உன் சிவந்த அடிகளை நீங்கும் சிறுமையேனாகிய நான் மயக்கம் தரும் மானிடப் பிறவியில் மயங்காமல் என்னைத் தடுத்தாட் கொண்டருள வேண்டும்' என்றலும்.

அ.ரை:— செய்ய—அழகிய. சேவடி—சிவந்த அடி மையல்—மயக்கம்.

இறைவன் தடுத்தாட் கொள்ள இசைவு தந்தது

அங்க ணாளன் அதற்கருள் செய்த பின்
நங்கை மாருடன் நம்பிமற் றத்திசை
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாரு'' மென்
றங்க வன்செயல் எல்லாம் அறைந்தனன். 29

வி.ரை:— அழகிய கண்ணோட்டமுடைய சிவபெருமான் அதற்கு இசைவு தந்தபின், அனிந்திதை, கமலினியாருடன் ஆலாலசுந்தரர் தென்திசையில் மானிட உடலில் தோன்றி. மானிடப் பிறவி எடுத்து இன்பம் துய்த்து மீண்டும் இங்கு வருகிறார்'' என்று சுந்தரர் செயல் எல்லாம் கூறினார்.

அ.ரை:— அங்கணாளன்—அழகிய கண்ணையுடையவன். நங்கைமார் — அனிந்திதை கமலினி. நம்பி—ஆடவிரில் சிறந்தவன். அத்திசை—தென்திசை. தோற்றத்தில்—மானிடப் பிறவியில்

தென்திசை செய்த புண்ணியம்

அந்த ணாளரும் ஆங்கது கேட்டவர்
''பந்த மானுடப் பாற்படு தென்திசை
இந்த வான்திசை எட்டினும் மேற்பட
வந்த புண்ணியம் யாதெ''ன மாதவன் 30

வி.ரை:— முனிவர்கள் அது கேட்டுப் பந்தபாசத்தில் அகப்பட்ட மானிடப்பிறவி நீக்குதற்கு இடமான தெற்குத் திசையானது இந்த எட்டுத் திசைகளிலும் மேம்பட்டதாக இருக்கச் செய்த புண்ணியம் என்ன? என்று கேட்க உபமன்னி முனிவரும்.

அரை:— பந்தமானுடம்—பந்த பாசத்தால் கட்டப். பட்ட மானிடப் பிறவி. வான்திசை — உயர்திரை. மாதவன்—உபமன்னி முனிவன்.

புலியூரின் சிறப்பு

''பொருவ ருந்தவத் தான்புலிக் காலனாம்
அருமு னியெந்தை அர்ச்சித்தும் உள்ளது
பெருமை சேர்பெரும் பற்றப் புலியூரென்
றொருமை யாளர்வைப் பாம்பதி ஓங்குமால். 31

வி.ரை;— ஒப்பற்ற தவத்தினன் வியாக்கிர பாதர் என்னும் என் தந்தை போற்றி வணங்கிய பெருமை யுடைத்து, தன்னை வந்தடையும் உயிர்கட்குத் தன் னிடத்தே பெரும் பற்றை விளைவிக்கும் புலியூர் என்று புலன்களை ஒருவழிப்படுத்தி மனத்தை ஒரு வழியில் நிறுத்தும் சீவன் முத்தர்கள் வாழும் இடம் எனும் பெருமையுடைத்து.

அ.ரை:— பொருவரும்—ஒப்பற்ற. புலிக்காலனாம் அருமுனி எந்தை—வியாக்கிர பாதர் எனும் என் தந்தை. பெரும்பற்ற—தன்னைப்பற்றப் பற்றும். ஒருமையாளர்— புலனடக்கமுடையோர். வைப்பு—தங்குமிடம்.ஓங்கும்— சிறக்கும்பெருமையுடையது.

அத்தி ருப்பதி யின்னமை ஆளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புடன்
அத்தன் நீடிய அம்பலத் தாடுமற்
றித்தி றம்பெற லாந்திசை எத்திசை. 32

வி.ரை:— அத்திருப்பதியில் அமைந்த ஆளுடைய மெய்த்தவக்கொடி சிவகாமவல்லியைக் காணும் விருப்ப

முடன் சிவபெருமான் நிடுயர்ந்த அம்பலத்து ஆடும் அத்திசை பெற்ற திறம் வேறு எத்திசை பெற்றது?

அ.ரை,— மெய்த்தவக்கொடி — சிவகாமவல்லி. அத்தன் — சிவபெருமான். இத்திறம் — இத்தன்மை. இதன் மேன்மை.

திருவாரூர்

பூதம் யாவையின் உள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதல் மங்கை இதய கமலமாம்
மாதோர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால் 33

வி.ரை:— எல்லா உயிரினங்களிடமும் அலர்கின்ற செந்தாமரை இதயக்கமலம் போன்று, வேத வித்தாகிய சிவம் வெளிப்படும் பூமகளின் இதய கமலமாகப் பெண்ணை ஒரு பாகமாக உடையவரது ஆரூர் மலர்ந்தது.

அ.ரை:— பூதம் யாவையின்—எல்லா உயிரினங்களின். உள்ளலர்போது—இதய கமலம், வேதமூலம்—சிவன். மேதினிக் காதல் மங்கை—பூமிப்பிராட்டி. மாதொரு பாகனார்—சிவபெருமான். ஆரூர்—திருவாரூர்.

காஞ்சி

எம்பி ராட்டிஇவ் வேழுல கீன்றவள்
தம்பி ரானைத் தனித்தவத் தாலெய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சியென்
றும்பர் போற்றும் பதியும் உடையது. 34

வி.ரை:— இந்த ஏழு உலகங்களையும் ஈன்ற எம்பிராட்டி உமையம்மை சிவபெருமானை ஒப்பற்ற

தவத்தால் அடைந்திடக் கம்பையாற்றில் வழிபடும் காஞ்சி என்று தேவர்கள் போற்றும் திருப்பதியும் உடையது.

அ.ரை:—எம்பிராட்டி— உமையம்மை. தம்பிரான்— சிவபெருமான். உம்பர்—தேவர்.

திருவையாறு

நங்கள் நாதனும் நந்தி தவஞ்செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கன்மலர்
செங்கை யாளர் ஐயாறுந் திகழ்வது 35

வி்ரை:—எங்கள் நாதனாகிய நந்திதேவன் தவம் செய்து பேரருள் பெற்ற பொலிவுடைய கங்கையாற்றை முடியில் அணிந்த தீ மலரும் சிவந்த கையையுடைய சிவபெருமானது திருவையாறு விளங்குவது.

அ:— பொற்பது—பொலிவுடையது. வேணி—சடைமுடி. கனல் மலர்—தீ மலர்.

தோணிபுரம்

தேசம் எல்லாம் விளக்கிய தென்திசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூச னைக்குப் பொருந்தும் இடம்பல
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை.'' 36

வி.ரை,— உலகில் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும் தென்திசை ஈசர் அமர்ந்த திருத்தோணிபுரத்துடன் எத்தகைய பூசனைக்குப் பொருந்தும் இடம்பல பேசினாலும் தென்திசைக்குப் பிறதிசைகள் ஒப்பாகா.

அ.ரை.—தேசம் எல்லாம்—உலகில் எல்லாம் தோணிபுரம்—சீர்காழி.

என்று மாமுனி வன்தொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றென் ஆதர வால் இங் கியம்புகேன். 37

வி.ரை:— அன்று உபமன்னிய முனிவன் வன் தொண்டர் சுந்தரமூர்த்தி நாயனார் பற்றிக் கூறியவை களை அன்று சொன்னபடியே அடியார்களது மிகவும் பழமையான சீர்மிகு திருத்தொண்டர் தொகையை விருப்பமுடன் இன்று விரித்துரைக்கிறேன். இது புலவர் கூற்று.

அ.ரை :- மாமுனி — உபமன்னிய முனிவர். தொன்று—பழமையான. ஆதரவால்—விருப்பால்.

மற்றி தற்குப் பதிகம்வன் தொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகை எனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம். 38

வி.ரை :- மேலும் இதற்குப் பதிகம் வன்தொண்டர் தான் புற்றிடத்துப் பிரான் அருளினால் சொன்ன உண்மைத் திருத்தொண்டத் தொகை கிடைக்கப்பட்ட நற்பதிகம் என்று தொழப்படுவதாகும். இதுவும் புலவர் கூற்று.

அ.ரை :- புராணர்—பழையவர் தியாகேசர். புற்றிடத்து—திருவாரூரிற் புற்றிடம் கொண்ட புராணம். சொற்ற—சொன்ன. பெரிய புராணத்துக்குப் பதிகம். ''திருத்தொண்டத் தொகை'' என்றவாறு.

அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்த நாதனும் நமபியாண் டார்நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம். 39

வி.ரை :- அந்த உண்மைப் பதிகத்தில் கூறப் பட்டுள்ள அடியார்களை நம்தம் நாதனும், நம்பி யாண்டார் நம்பி மனம் ஆரச் சொன்ன வகையினால, சொன்னவாறு வழுவாமல் கூறுவம். இதுவும் புலவர் கூற்று.

அ.ரை :- நந்த நாதனும்—நமது இறைவனும். புந்தி ஆர—மனமார. வழாமல்—குறைபடாமல்.

உலகம் உய்யவும் சைவம்நின் றோங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொண்டர்தங் கூட்ட நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம். 40

வி.ரை :- உலகம் மேன்மையடையவும் சைவம் நிலை பெற்றுத் தழைத்தோங்கவும், அளவில்லாத சிறப்புகளையுடைய நம்பி ஆரூரர் பாடிய பொருந்தும் தொண்டர்களது கூட்டம் நிறைந்து வாழ்ந்த், குளிர்ந்த நீர்வலம் குலவும் நாட்டின் சிறப்பு கூறுவாம். புலவர் கூற்று.

அ.ரை :- அலகில்—அளவு இல்லாத. எண்ணற்ற. நிலவு—பொருந்தும். நிறைந்துறை—நிறைந்து வாழும். நாட்டணி—நாட்டின் சிறப்பு.

நாட்டுச் சிறப்பு

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனம். 41

வி-ரை :- இசையுடன் கலந்த இயற்றமிழ் மொழி பன்னெடுங்காலம் பழகிய தமிழ்நாட்டின் எல்லையுள், பனியால் மூடப்பட்ட மலைச்சிகரமாகிய இமய மலையின் உச்சியில், ஓங்கி வளரும் சிறப்பையுடைய புலிக் கொடி நாட்டிய காவிரி பாயும் சோழ நாட்டின் இயல்பை நான் கூறுகின்றேன்.

அ.ரை :- பாட்டியல் தமிழுரை இயல்—இசை இவ்விரண்டும் கலந்த தமிழ் பேசப்படும் தமிழ் எப்பொழுதும் இசையுடன் கலந்து ஒலிப்பது போன்று இன்பம் சேர்ப்பது ஆதலின் பாட்டு இயல் தமிழ் உரை என்றனர். இயலும் இசையும் சேர்ந்தது கூத்து ஆதலின் இதில் கூத்துத் தமிழும் அடங்கும். பயின்ற பன்னெடுங் காலம் பேசப்படும். வழக்கில் உள்ள ஆரியம் இந்தியாவினுள் நுழைந்ததற்கு ஒரு காலகட்டம் உண்டு. சுமார் கி.மு. 3000 ஆண்டு எனலாம். ஆனால் தமிழ்மொழி அதற்கு முன்பே வளம்பெற்ற வழக்கு மொழியாக இருந்தது. ஆதலின் "பயின்ற" என்றனர். கொடு—சிகரம். தமிழ்நாடு ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தது என்பதற்கு அரப்பா, மகேஞ்சதாரோ நாகரிகம் ஒரு எடுத்துக்காட்டு. அது குறுகி விந்திய

மலைக்குக் கீழ் நகர்ந்து வடவேங்கடத்தில் நின்று பின் மேலும் நகர்ந்தது என்பது வரலாறு. புலி—புலிக் கொடிக்கு ஆகுபெயர். காவிரி நாடு—சோழநாடு. நவிலல்—சொல்லல்.

காவிரியாற்றின் சிறப்பு

ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு
பூதநீர்க் கமண்டலம பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால். 42

வி.ரை :— ஆதியில் தோன்றிய பெருந்தவ முனிவன் அகத்தியன் தனது புனித நீர்க் கமண்டலத்தி லிருந்து சிந்திய காவிரி ஆறானது அழகிய நிலமங்கை யின் பொன்போன்ற மார்பகத்தில் தாழ்ந்து தொங்கும் கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்து மாலை போன்ற தாகும்.

அ.ரை :- அகத்தியன்தரு—அகத்தியனது. பூதநீர்— புனிதநீர், முதலில் தோன்றிய நீர். ஓதம்—கடல். மாதர்—அழகு. நித்திலத்தாமம்—முத்து மாலை.

சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்ந்து நாள்தோறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது. 43

வி.ரை :- சைய மலையில் தோன்றும் தலைக் காவிரி அழகிய நிலமகளுக்கு ஒரு வளர்ப்புத் தாய் போன்றது. உலகில் பல உயிரினங்கள் நாள்தோறும் வளர்ந்து வாழ்வதற்கு பரந்து பாய்ந்து உயிரூட்டும் தன்மையுடையது.

அ.ரை :- செய்ய—அழகிய. செவிலி — வளர்க்கும் தாய். சுரந்தளித்தூட்டும்—பரந்து பாய்ந்துஉலகூட்டும்.

மாலினுந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினால் பல்லுயிர் தருதன் மாண்பினால்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையால்
போலும்நான் முகனையும் பொன்னி மாநதி. 44

வி.ரை :- பொன்னி மாநதிர திருமாலின் உந்திக் கமலத்தின் மேல் வரும் தன்மையினால் எல்லா உயிர் களையும் படைத்துத் தரும் பெருமையினால் அழகிய குண்டிகையைத் தாங்கும் சிறப்பினாலும் நான்முகனை யும் ஒத்தது.

அ.ரை :- பொன்னி — காவிரி. மால் — திருமால் உந்திச்சுழிமலர் — உந்தியில் தோன்றிய தாமரை. சால்பு—மேன்மை. மாண்பு—மாட்சிமை. கொள்கை— கோட்பாடு, சிறப்பு. நான்முகன்—பிரம்மன்.

திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்
எங்கள்நா யகன்முடி மிசை நின் றேயிழி
கங்கையாம் பொன்னியாங் கன்னி நீத்தமே. 45

வி.ரை:- பிறை சூடிய சிவபெருமானது முடியின் உச்சியில் வெண்மையான சிவபெருமான் கையில் ஏந்திய பிரமனின் கபாலம் போன்று கங்கை ஆற்றின் நீரின் நுரை மோதிப் பாய்வதால் எங்கள் நாயகன் சிவபெருமானின் முடியினின்றும் இறங்கும் கங்கை யாகிய காவிரியாறு என்றும் கன்னித் தன்மையுடைய என்றும் உயிருள்ள ஆறாகும்.

அ.ரை:- திங்கள்சூடிய முடிச்சிகரம்—சிவபெருமா னுக்கும், மலைக்கும் பொது. சிகரத்து உச்சி—சைய மலை உச்சி. வெண்தலை—கங்கையாற்று நுரையுள்ள நீர். சிவபெருமான் கையில்தாங்கிய கபாலம். பொருது— மோதும். கன்னி நீத்தம்—உயிருள்ள ஆறு. சீவ நதி என்றும் நீங்கா வெள்ளம்.

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில் பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது. 46

வி-ரை :- அழகிய நீண்ட சைய மலையில் தோன்றியமையால், எண்ணற்ற பெரிய அறநெறிகளை வளர்க்கும் சிறப்பினால் இறைவனின் ஒரு பாகத்தைக் கொண்டவளாகிய மலைமகளின் உள்ளத்தில் நெகிழ்ந் திடும் கருணையின் தன்மை போன்றது காவிரி.

அ-ரை :- வண்ணம்—அழகு. நீள்வரை—நீண்ட மலை. காவிரி உற்பத்தியாகும் சையமலை, காவிரியும் உமையம்மை போன்று மலையில் தோன்றியமையின் உமையம்மை காஞ்சியில் வளர்த்த அறங்களுக்குக் கவரியின் காத்தல் தொழில் ஒப்பிடப்படுகிறது.

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால். 47

வி-ரை :- குளிர்ந்த காவிரி மணம் கமழும் மலர்கள் நிறைந்த நீரால், செம்பொற்பொடிகள் நிறைந்த எண்ணற்ற இருகரையிலும் உள்ள சிவாலயத்துள்ள எம் பிரானை வணங்கி அஞ்சலி செய்வதால், தேவ நாயகர்க்கு அன்பர்களை ஒக்கும். தேவர்கள் நாள் தவறாது தேவருக்கு அஞ்சலி செய்வது போன்று காவிரியும் செய்வதால் என்க.

அ-ரை :- வம்பு உலா—மணம் கமழும். செம்பொன் வார்கரை—செம்பொற் பொடிகள் நிறைந்த நீண்ட கரை. இது மகரந்தத் துகள்களையும் குறிக்கும். ஈர்ம் பொன்னி—குளிர்ந்த பொன்னி, ஈரம். உம்பர் நாயகர்—தேவர்கட் இறைவன்.

வாசம் நீர்குடை மங்கையர் கொங்கையில்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்திரை மீதிழிந் தோடுநீர்
தேசு டைத்தெ னினுந்தெளி வில்லதே. 48

வி-ரை :. மணம் வீசும் நீரில் குடைந்தாடும் மகளிர் தங்கள் முலைகளில். மேல் பூசிய குங்குமமும் புனைந்த சந்தனமும் குளிர்ந்த அலைகளின்மீது கலந்து ஓடும் காவிரி நீர் தெளிவுடையது எனினும் தெளிவில்லாததே.

அ-ரை :- வாசம்—மணம். நீர்குடை—நீரில் மூழ்கி. புனை—அணியும். தெண்திரை — தெளிந்த அலை. தேசு—தெளிவு.

மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால் 49

வி-ரை :- வண்டுகள் விரைந்து எங்கும் பறந்து ரீங்காரம் செய்ய, மலைகளில் மரங்களிலிருந்து கழிந்த மலர்களிலிருந்த தேன் எங்கும் பொங்கி வழிந்திட- நீர் நிலைகள் எங்கும் பொலிந்து வளம்மிக்க காவிரியின் நீர்க் கால்வாய்கள பரந்தெங்கும் செழித்தோங்கும்.

அ-ரை :: மாவிரைந்து — வண்டுகள் விரைந்து பறந்து. ஆர்ப்ப—ரீங்காரம் செய்து ஒலிக்க. வரைதரு—மலைகளில் உள்ள மரங்கள். மது—தேன். வாவி—நீர் நிலை. புனல்கால்—நீர் வாய்க்கால். பரந்து—பரவி.

உழவர் எழுப்பும் ஓசை

ஒண்து றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வய லுள்புக வந்தெதிர்

கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்
அண்டர் வானத்தின் அப்புறஞ் சாருமால் 50

வி-ரை :- சிறந்த நீர்த்துறைகளில் உள்ள பெரிய மதகுகளின் வழியாகச் சென்று பாயும் மிகுந்த நீர்வயல்களில் பாய்ந்திட அதுகண்ட உழவர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் எழுப்பும் ஒலி தேவர் உலகுக்கு அப்பாலும் சென்றடையும்.

அ-ரை :- ஒண்துறை—சிறந்த நீர்த்துறை. ஆற்றங்கரை. மதகு—நீரைத் தேக்கி வைத்து வயல்களுக்குப் பாய்ச்ச உதவும் கதவு. மண்டுநீர்—விரைந்து பாயும் மிகுந்த நீர். ம்ள்ளர்—உழவர். அண்டர்—தேவர். சாரும்—சேரும்.

நாற்று பறிக்கும் காட்சி

மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் யுழநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்தவே. 51

வி-ரை :- அழகிய நாற்றைப் பறிப்பவர்களது மாட்சியும், குளிர்ந்த தன்மையனவாகிய நாற்றுக்களை அதன் முடியைப் பிடித்து ஒழுங்குபடுத்திக் கட்டுவதும் வயல்களில் வேலை செய்யும் உழவர்களின் ஓசையின் சிறப்பும், காண்போர் கண்களில் காதலைத் தோற்றுவிக்கும் காட்சி நிறைந்ததெங்கும்.

அ-ரை :- மாதர் நாறு — அழிய நாறு, பருவமடைந்த நாற்று. மாட்சி—பெருமை. சீத நீர் முடி சேர்ப்பது—பிடுங்கிய நாற்றுக்களை நீரில் தோய்த்து அவற்றைக் கற்றையாக அதன் முடியைப் பிடித்து

உதறி பக்குவமடையாத நாற்றுகளை நீக்கிக் கட்டுவதாகும். ஓதை — ஓசை. காதல் செய்வதோர் காட்சி— அன்பைப் பெருக்கும் காட்சி.

நாற்று நடும் மகளிர் கூட்டம்

உழுத சால்மிக வூறித் தெளிந்தசே
றிழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். 52

வி-ரை :- உழுத படைச்சால்களில் நன்றாக ஊறிய சேற்றுக் குழம்பு நிறைந்த வயல்களில் உழவர்கள் மருத நிலத் தெய்வத்தைத் தொழுது நாற்று நடும், உழவர்கள் கூட்டமே குற்றமற்ற சோழநாட்டில் எங்கும் பரந்து கிடக்கும்.

அ-ரை :- சால்—படைச்சால். நிலத்தைக் கலப்பை கொண்டு உழுவதால் நிலம் பிளந்த பகுதி. செய்யினுள்—வயலிலுள். இந்திரத் தெய்வதம்—மருத நிலத் தெய்வம். தொகுதி—கூட்டம்.

களைகளையும் கடைசியர்

மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையுங் கடைசியர்கள்
தண்தரளஞ் சொரிபணிலம் இடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையுங் குழல்அலைய மடநடையின் வரம்பணைவார். 53

வி-ரை :- மிகுதியாகப் பாயும் நீர் வயல்களிலெங்கும் பரவிப் பயிர்களின் இலை விரிந்து வளரக் கண்ட உழவர், களையெடுக்கும் நேரம் இது என நாள்காட்ட.. உழவர் மகளிர் களைகளைய வயலினுள் நுழைய

அங்கும் குளிர்ந்த சங்குகள் முத்துதிர்த்திட அந்த முத்துக்களின் மேல் கால் வைத்து இடறி நடை தளர்ந்திடும் மகளிரின் வண்டுகள் மொய்க்கும் கூந்தல் அசைந்திட மென் நடையினராய் வரப்பினைச் சென்றடைவர்.

அ-ரை :- மண்டு — செறிந்த, மிகுந்த. சுருள் விரிய—நாற்று நட்டுச் சில நாட்களில் நெற்பயிர்கள் தழைத்துச் சுருண்டு கிடந்த தாள்கள் விரிந்திட. பதங் காட்ட—களை எடுக்கும் பருவம் காட்ட. கடைசியர்கள்—உழவர் மகளிர். தரளம்—முத்து. பணிலம்—சங்கு. மட்நடை—மென்நடை, அன்னநடை.

செங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேல்
சிறைவண்டை
அங்கைமலர் களைக்கொடுகைத் தயல்வண்டும்
வரவழைப்பார்
திங்கள்நுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவல் தள்வரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார் 54

வி-ரை :- சிவந்த நிறமுடைய குவளை மலர்களைப் பறித்துத் தம் கருத்த கூந்தலின் மேல் அணிவர். அந்த மலரை மொய்ப்பதற்காகச் சிறகடித்துப் பறந்து வரும் வண்டினங்களைத் தமது அழகிய மலர்க்கை கொண்டு ஓட்டுவிப்பர். பக்கத்துள்ள வண்டுகளையும் வர ஒலிப்பர். பிறை போன்ற நெற்றியில் வியர்வை அரும்பப் புன்முறுவல் முல்லைச் சிறிப்பென உதிர்த்து நன்றாக விளைந்து மலர்ந்த தாமரை மலரிலுள்ள புதிய தேனைக் குடித்து மயங்குவார்.

அ-ரை :- செங்குவளை — செங்கழுநீர்ப்பூ. அம் கைமலர்களைக் கொடு—அழகிய மலர்க் கைகொண்டு ஓட்டி. அயல்வண்டு—சென்றது போக வரும் வண்டு.

அழைப்பார்—ஒட்டிட ஒலிப்பார். திங்கள் நுதல்—பிறை நெற்றி. தளவு அரும்ப—முல்லைச் சிரிப்பு, முல்லை போன்ற பற்கள்.

கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்னச்
சுரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன அமுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங்கடைசி மடந்தையர்கள் வயலெல்லாம் 55

வி-ரை :- பகலெல்லாம் வயல்களில் நன்றாக வளர்ந்தோங்கி நிற்கும் நெற்பயிர்களைக் கண்டு கரும்பு என மயங்கியவருக்கு இது கரும்பல்ல நெற்பயிர் என்றும், அதேபோன்று கமுகு போன்று வளர்ந்தோங்கி யிருக்கும் கரும்புகளைக் கண்டு மயங்குவோருக்கு இது கமுகல்ல கரும்பு என்றும், நீலப்பூவின் இதழ்களைக் குடையும் வண்டுகளை அவற்றின் துகள்கள் என மயங்குவோருக்குத் துகள் அல்ல வண்டுகள் என்றும் மகளிரின் முலைகளைக் கண்டு அரும்பு என மயங்கு வோருக்கு இவை அரும்பு அல்ல முலைகள் என்றும், வயல்களில் பேசும் உழவர் மகளிர் பேசும்மொழி கேட்டு அமுது என மயங்குவோருக்கு இவை அமுதமல்ல மங்கையர் மொழி என்றும், பேசவரும் பல்லாயிரம் உழவர் மகளிர் வயல்களெங்கும் நிரம்பிக் கிடக் கிறார்கள்.

அ-ரை :- கமுகு—பாக்கு. சுரும்பு—வண்டு. துகள்-மலர்த்தாது. கடைசி மடந்தையர் — கடைசியர், வேளாண் மகளிர்.

வேளாண் சிறு மகளிர்

கயல்பாய்பைந் தடநந்தூன் கழிந்த பெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரி உலைப்பெய்தங்

கயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்பூதும்
வயல்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம். 56

வி-ரை :- கெண்டை மீன்கள் துள்ளி விளையாடும் வளமுள்ள தடாகத்தில், தசை நீங்கிய பெரிய சங்கு, பெரிய பானையாகவும், அகன்ற வாயினையுடைய வெண்சங்குகள் ஈன்ற முத்துக்கள் அரியாக மலர்த் தேனை உலைநீராக, அங்கே பக்கத்துள்ள ஆமை ஓடுகள் அடுப்பாகச் செவ்வாம்பல் மலர் தீயாக அடுப் பூதிக் கூட்டாஞ்சோறு சமைத்து வேளாண் சிறு மகளிர் வரம்பெல்லாம் விளையாடுவர்.

அ-ரை:- பைந்தடம்—நீர்வளம் மிக்க தடாகம். ஊன் கழிந்த நந்து—தசை நீங்கிய சங்கு. நந்து—சங்கு குழிசி—பானை. தரளம்—முத்து. வேரி—தேன். உலை—உலைநீர். அயல் ஆமை—பக்கமுள்ள ஆமை. அரக்கு—சிவப்பு. வரம்பு—வரப்பு.

நீர்நாட்டின் செழுமை

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக் கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னம் குளமெல்லாம் கடலன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனை ஒவ்வா நலமெல்லாம் 57

வி.ரை:- காடுகளிலெல்லாம் மூங்கில் போன்று வளர்ந்த கரும்பு, சோலைகளிலெல்லாம் தளிர்க்கின்ற அரும்புகள், பக்கங்களில் எல்லாம் கருங்குவளை மலர்கள், வயல்களில் எல்லாம் நெருங்கிக்கிடக்கும் சங்குகள், நீர் நிலைகளில் அமைந்த கரைகளில் எல்லாம் இளம் அன்னங்கள், கடல்போன்ற குளங்கள், நலங்கள் எல்லாவற்றிலும் பிறநாடுகள் எல்லாம் நீர்வளம் மிக்க சோழ நாட்டினுக்கு ஒப்பாகா.

அ.ரை:- கழை—மூங்கில். குழை—தளிர். மாடு—பக்கம். வளை—சங்கு. கோடு—கரை. நீர்நாடு—சோழ நாடு.

கரும்பாலைகள்

ஆலை பாய்பவ ரார்ப்புறும் ஓலமும்
சோலை வாய்வண் டிரைத்தெழு சும்மையும்
ஞாலம் ஓங்கிய நான்மறை ஓதையும்
வேலை ஓசையின் மிக்கு விரவுமால். 58

வி.ரை:- ஆலையில் கரும்பைப் பாய்ப்பவர் எழுப்பும் ஆரவார ஒலியும், சோலைகளில் வண்டினங்களின் இரைச்சல் ஒலியும், உலகில் ஓங்கிய நான்மறை ஓதும் ஓசையும் கடலின் ஓசையினும் மிகுந்து முழங்குமாம்.

அ.ரை:- ஆலை — கரும்பாலை. சும்மை — ஒலி. ஓதை—ஓசை. வேலை—கடல். பிரவும்—மிகும்.

பொய்கைகளின் வளம்

அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னு மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேல் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால் 59

வி.ரை:- அன்னப் பறவைகள் மகிழ்ந்து ஆடும் இடம் அகன்ற பொய்கையில் விரும்பி வந்து எருமைகள் நீரில் படிய அங்கு விளையாடிக் கொண்டிருந்த இளம் வாளை மீன்கள் பாய்ந்து எழுந்து கமுகின் மேல் பாய்வது பொருந்திய வானில் தோன்றும் வானவில் போன்றதாகும்.

அ.ரை:- துன்னும்—பொருந்தும். மேதி—எருமை. படிய—மூழ்க. துதைந்து—புதைத்து. கன்னி—இளம்.

காவி னிற் பயி லுங்களி வண் டினம்
வாவி யிற்படிந் துண்ணு மலர் மது
மேவி அத்தடம் மீதெழப் பாய்கயல்
தாவி அப்பொழி லிற்கனி சாடுமால். 69

வி.ரை - மலர்ச் சோலைகளில் மகிழ்ந்து வாழும் களிப்பு மிக்க வண்டினங்கள், தடாகத்தில் விழுந்துகிடக்கும் மலர்களில் உள்ள தேனைவிரும்பி உண்ணும் அத் தடாகத்தில் உள்ள கெண்டை மீன்கள் மேலே பாய்ந்து அம்மலர்ச்சோலையின் கரைகளில் உள்ள மரங்களின் கனிகளின் மீது குதித்து வீழ்த்தும்.

அ.ரை:- கா — பூங்கா. மலர்ச்சோலை. களி— மகிழ்ச்சியுள்ள. மயக்கமுள்ள. மேவி—பொருந்தி. சாடும்— அடித்து வீழ்த்தும்.

நெல் விளைந்து விரிந்தது

சாலிநீள் வயலின் ஓங்கித் தந்நிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினாம் வளத்தவாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தரனுக்கன்பர்
ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்க ளெல்லாம். 61

வி.ரை:- நெல்வயல்களில் உள்ள நீண்ட நெற் பயிர்கள் நிகரற்றவனாகி ஓங்கி வளர்ந்து இயற்கையி னாலே வெண்மையான அதன் மகரந்தத்தாலே கரு வுற்று வளம் மிக்கவையாகி அக்கரு முற்றிப் பசலை நிறங்கொண்டு ஒன்றோடொன்று ஒட்டிக்கிடந்த கதிர் விரிந்து சிவபெருமானுக்கு அவர்தம் அடியார் மன மலர்ந்ததே போன்று விரிந்தன கதிர்களெல்லாம்.

அ.ரை:- சாலி—நெல், வாலிதாம்— இயற்கையாய் அமைந்த. சூல்—கரு. பசலை—பொன்நிறம். சுருள்—நெல்மணிகள்ஒட்டிச்சுருள் எனக்கிடந்து. அரன்—சிவன் ஆலினசிந்தை—மலர்ந்த மனம்.

முதிர்ந்து தலைசாய்ந்த நெற்பயிர்கள்

பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம் 62

வி.ரை:- இறைவனுக்கு அடிமை கொண்ட அன்பர்கள் பக்திவயப்பட்டு ஒன்று கூடித் தலையால் வணங்குவது போன்று, பாத்திகளில் வரிசையாக நடப்பட்ட நெற்பயிர்களில் விளைந்த நெல் மணிகள் முதிர்ந்து வளைந்து வணங்கி மற்ற சிவனடியார்கள் தன்மை போன்று விளைந்தன நெல் வயல்களெல்லாம்.

அ.ரை:- பாலராகி — வயபபட்டவராகி. மொய்த்த நீள் பத்தி—நெருக்கமாக நடப்பட்ட நீண்ட பயிர்களின் வரிசை. வித்தகர்—சிவனடியார்கள்.

நெல் அரிந்து குவித்தது

அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்பெரும் பொருப்பு யர்ப்பார்
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார் 63

வி.ரை:- அரிவாளால் அரியப்பட்ட செந்நெல் கற்றைகளை மலைபோல் அடுக்குவர். விருப்பமுடன் பல்வகையான மீன்களைப் பிடித்துஅகன்ற குன்றெனக்

குவிப்பர். சுரி சங்குகள் ஈன்ற முத்துக்களைச் சுடர் விடும் ஒளிவீசும் மலையென உயர்த்துவர். இதழ்விரிந்த மலர்க்கற்றைகள் பொழிந்த தேன்அருவி அம்மலைகளி லிருந்து பாய்ந்தோட வைப்பார்.

அ.ரை:- அரிதரு — அரிவாளால் அரியப்பட்ட சூட்டு—நெற்கட்டு. அடுக்கல்—அடுக்குமலை. பரிவுற— விருப்பமுடன். தடிந்த—பிடித்த. சுரிவளை—சுரிசங்கு பொருப்பு—மலை. வேரி—தேன்.

எருமைகளை விட்டுப் போரடித்தது

சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்குங் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்
ஆலிய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்
மேல்வலங் கொண்டு சூழுங் காட்சியின் மிக்க தன்றே. 64

வி.ரை: நெல் கற்றைகளைத் துவைத்து மலை போன்று வைக்கோல்களைக் குவித்துச் சாய்த்து அவற் றைப் பெரிய கால்களையுடைய எருமைகளை விட்டுச் சுழல ஓட்டுவதால் உண்டாகும் பெரிய வட்டத்தின் எருமைக் கூட்டமானது, அரிய மலை உச்சியின் சார லில் அசைகின்ற மேகங்களின்கூட்டமான மேலே வலங் கொண்டு சுழலுவதினும் மிக்கதானது.

அ.ரை:- சாலி — செற்பயிர். துற்ற — துவைக்க. முகடு சாய்த்து—நெற்போர், வைக்கோல்போர் குவித்து. காலிரும் பகடு—பெரிய கால்களையுடைய எருமை, பாண்டில்—சுழற்சி. ஈட்டம்—கூட்டம். ஆலிய—அசை யும் அருவரைச்சிமயச்சாரல்—அரிய மலை உச்சிச்சாரல்.

செந்நெல் தூற்றிக் குவித்தது

வைதெரிந் தகற்றி ஆற்றி மழைபெயல் மானத்தூற்றிச்
செய்யபொற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பும் என்னக்
கைவினை மள்ளர் வானங் கரக்கவாக் கியநெற் குன்றால்
மொய்வரை உலகம் போலும் முளரிதீர்மருத வைப்பு. 65

வி.ரை:- வைக்கோலை ஆராய்ந்து உதறிக் குவித்துப் பின் நெல்மணிகளை மழைத்துளிகள் விழுவது போன்று காற்றுள்ளபோது தூற்றிப் பதர்களை நீக்கி சிவந்த பொன் மலை போன்று செந் நெல்மணிகளையும், மற்ற நெல் வகைகளையும் மலைகள் போன்று கைத்தொழில் செய்யும் உழவர்கள் வானம் மறைந்து போகும்படி நெருங்கிய நெல் குன்றுகளால் அமைந்த தாமரை நீர் நிலைகளையுடைய மருத நிலம், குறிஞ்சி நிலத்தை ஒக்கும்.

அ.ரை:- வைதெரிந்து-வைக்கோல்களை ஆய்ந்து. ஆற்றி—உதறி. பொற்குன்றம்—செந்நெற் குன்றம். நவமணிச் சிலம்பம்—மற்ற கருந்தாணியங்களின் குவியல். வானம் கரக்க—வானத்தை மறைக்க மொய் வரை உலகம்—குறிஞ்சி நிலம்.

பகிர்ந்துண்டு வாழ்தல்

அரசுகொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி மலர்ந்துள பதிகள் எங்கும் 66

வி.ரை:- அரசனுக்குக் கொடுக்க வேண்டியதை முதலில் கொடுத்து மிகுதியானவற்றைக் கொண்டு ஈதல்

முதலிய அறங்கள் பேணி, போற்றும் கடவுளுக்குப் படைத்து, பெரியோரையும் விருந்தினரையும், பண்பில் சிறந்த சுற்றத்தையும் தாங்கி நின்று, இத்தகைய அறவினைகளால் குடிகள் ஓங்கி, மலை போன்றுயர்ந்த மாடங்களையுடைய நீண்டு மலர்ந்துள்ள ஊர்கள் நாடெங்கும்.

அ.ரை:- அரசு கொள் கடன்—அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரி. ஆறில் ஒரு பங்கு என்பர். குரவர்—பெரியோர். கிளை—சுற்றம், வரைபுரை—மலை போன்ற. பதி—ஊர்.

வேள்விப் புகை

கரும்படு களமர் ஆலைக் கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும் 67

வி.ரை:- உழவர்களது கரும்பாலையில் எழும் புகையோ, மாதர்கள் சுரும்பு வண்டுகள் ஓட அகில் துண்டுகளால் இட்ட தூபமோ, யூபத் தூண்களில் நிறுத்திச் செய்யப்படும் வேள்விச் சாலைகளில் எழும் புகையோ வானில் வரும் கருமுகில் சூழ்வது போன்று மாடங்களையும் சோலைகளையும் சூழ்வன.

அ.ரை:- களமர்—மள்ளர், கரும்பாலையில் வேலை செய்வோர். சுரும்பெழ—வண்டுகள் அஞ்சி ஓட. யூபம்—யூபத்தூன், வேள்வித்தூன். பிறங்கிய—எழுந்த.

அழகின் சிறப்பு

நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலங் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும் 68

வி.ரை:- தென்னை, அழிஞ்சில், நறுமலர் நாரத்தை, அரசும், ஆச்சாமரமும் பச்சிலை மிகுந்த மரங்கள் குமாமரங்கள், அடிபெருத்த பனை சந்தனம் குளிர்ந்த மலருடைய நாகமாகும் எங்கும் நீண்ட இலைகளுடைய வஞ்சியும் காஞ்சியும் மலர்கள் நிறைந்த கோங்கும் எங்கும் நிறைந்து கிடக்கும்.

அ.ரை:- நாளிகேரம்—தென்னை. செருந்தி—அழிஞ்சில். நரந்தம்—நாரத்தை. கோளி—பூவரசு. சாலம்—ஆச்சாமரம். தமாலம்—இலை மிகுந்த மரங்கள் குரவம்—குராமரம் தாளிரும் போந்து—அடிபெருத்த பனை. சந்து—ச்ந்தனம். நாகம்—நாகமரம்.

சூதபா டலங்கள் எங்கும் சூழ்வழை ஞாழல் எங்கும்
சாதிமா லதிகள் எங்கும் தண்தளிர் நறவம் எங்கும்
மாதவி சரளம் எங்கும் வகுளசண் பகங்கள் எங்கும்
போதவிழ் கைதை எங்கும் பூகபுன் னாகம் எங்கும் 69

வி.ரை-- மா. பாதிரி, பரவிய சுரபுன்னை, குங்கும மரங்கள், சாதி, சிறுமல்லிகை, குளிர்ந்த அனிச்சம் குறுக்கத்தி, மகிழ மரங்கள், சண்பகங்கள், மலர் விரிந்த தாழை மற்றும் புன்னை மரங்கள் எங்கும் நிறைந்து கிடக்கும்.

அ.ரை:- சூதம்—மாமரம். பாடலம் — ப்ாதிரி. வழை—சுரபுன்னை. ஞாழல்—குங்கும மரம். சாதி—சிறு

செண்பகம். மாலதி—மல்லிகை, முல்லை, நறவம்—அனிச்சம். மாதவி—குருக்கத்தி. சரளம்—வரிசை. பகுவம்—மகிழ மரங்கள். போது—மலர். கைதை—தழை. பூகம்—கமமுகம், புன்னாகம்—புன்னை.

வாழ்க்கை நலம்

மங்கல வினைகள் எங்கும் மணஞ்செய்கம் பலைகள் எங்கும்
பங்கய வதனம் எங்கும் பண்களின் மழலை எங்கும்
பொங்கொளிக் கலன்கள் எங்கும் புதுமலர்ப்பந்தர்எங்கும்
செங்கயல் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும் 70

வி.ரை:- மங்கலகரமான செயல்களும். மணம் செய்யும் முழக்கங்களும், மகளிரின் தாமரை முகங்களும் அவர் பேசும் இசைபோன்ற மழலைகளும், ஒளிவீசும் ஆபரணங்களும், புதிய மலர் பந்தல்களும் சிவந்த கயல்கள் மிகுந்த வயல்களும் திருமகள் எங்கும் வாழுமிடம்.

அ.ரை:- கம்பலை — முழக்கம். பண் — இசை. கலன்—அணிகலன். பழனம்—வயல். உறையுள்—வாழிடம்.

மேகமும் களிறும் எங்கும் வேதமும் கிடையும் எங்கும்
யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும்
யோகமும் தவமும் எங்கும் ஊசலும் மறுகும் எங்கும்
போகமும் பொலிவும் எங்கும் புண்ணிய முனிவர் எங்கும். 71

வி.ரை:- மேகங்களும், யானைகளும், வேத மோதுதலும், வேதமோதும் இடங்களும்,யாகமும் யாகச் சடங்குகளும், இன்பமும் மகிழ்ச்சியும். யோகமும், தவமும், ஊஞ்சலும் சுழலும், போகமும் அழகும், ண்ணிய முனிவர்கள் எங்கும் நிறைந்திருப்பர்.

அ.ரை:- கிடை—வேதம் ஓதும் இடம். ஊசல்—ஊஞ்சல். மருகு—வட்டமாகச் சுழலும் ஆட்டம். போகம்—இன்பசுகம்.

பண்தரு விபஞ்சி எங்கும் பாதசெம் பஞ்சிஎங்கும்
வண்டறை குழல்கள் எங்கும் வளரிசைக் குழல்கள்எங்கும்
தொண்டர்தம் இருக்கை எங்கும்சொல்லுவ திருக்கைஎங்கும்
தண்டலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும் 72

வி.ரை:- இசைதரும் விபஞ்சியாழும். செம்பஞ்சுக் குழம்பு பூசிய பாதங்களும், வண்டுகள் மொய்க்கும் கூந்தல்களும், இசையை வளர்க்கும் புல்லாங்குழல் களும், சிவனடியார்கள் வாழிடமும், இருக்கு வேதம் ஓதும் இடங்களும், சோலைகள் பலவும் அத்தியும், பலா வும் எங்கும் நிறைந்து கிடக்கும்.

அ.ரை:- விபஞ்சி—ஒருயாழ். வண்டறை—வண்டு வந்து மொய்க்கும், ஒலிக்கும். இசைகுழல்—புல்லாங் குழல். சொல்லுவதிருக்கை—சொல்லும் இருக்கு வேதம். தண்டலை—சோலை. தாதகி—அத்தி. பலவும்—பலாவும்.

மாடுபோ தகங்கள் எங்கும் வண்டுபோ தகங்கள் எங்கும்
பாடும்அம் மனைகள் எங்கும் பயிலும்அம் மனைகள்எங்கும்
நீடுகே தனங்கள் எங்கும் நிதிநிகே தனங்கள் எங்கும்
தோடுசூழ் மாலைஎங்கும் துணைவர்சூழ் மாலை எங்கும் 73

வி.ரை:- பக்கங்களிலெங்கும் யானைக் கன்றுகள், வண்டுகள் மொய்க்கும் மலரிடங்கள், இல்லங்களெங் கும் இசையும் அம்மானை விளையாடும் சிறுமியர், நீண்டுயர்ந்த கொடிகள் கருவூலங்கள், இதழ்விரிந்த மலர் மாலைகள், துணை வருடன் செல்லும் மகளிரும், எங்கும் நிறைந்திருந்தது.

அ.ரை:- மாடு—பக்கம். போதகம்—யானைக்கன்று போது—மலர். போதகங்கள்—மலர் விற்குமிடங்கள். அம்மனை—அழகிய வீடு. பயிலும் அம்மனை—அம்மனை ஆடும் சிறுமியர். கேதனம்—கொடிகள். நிதிநிகேதனம் — கருவூலம் தோடுசூழ்மாலை — இதழ் விரிந்த மலர்மாலை. துணைவர் சூழ் மாலை—கணவருடன் செல்லும் மகளிர்.

வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்
சாதிகள் நெறியில் தப்பா தனயரும் மனையில் தப்பா
நீதிய புள்ளு மாவு நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும் 74

வி.ரை:. வீதிகள் தோறும் விழாக்கோலம், விரும்பி வந்த விருந்தினர் ஆரவாரம் செய்வர். சாதி முறைப்படி அவரவர் நெறியில் நின்று வழுவாதவரும். பெற்றோர் சொல் தப்பாத பிள்ளைகளும். பறவைகளும், விலங்குகளும் அவையவை பகைமை நீங்கியிருக்க இலக்கிமி அங்கு வசிக்க விரும்புவாள். அஞ்செழுத்து ஓதி உறு பிணியும் அகப்பிணியும் வருவதற்கு அஞ்சும்.

அ.ரை:- சாதிகள்நெறி—ஒவ்வொரு சாதிக்கும் வகுக்கப்பட்ட நெறி. சேக்கிழார் காலத்தில் சாதிமுறை வெகுவாக வழக்கில் இருந்தது என்பது தெரிகிறது. தனயர்—பிள்ளைகள். சிறுவர், சிறுமியர். புள்ளு—பறவை. மா—விலங்கு. புள்ளும் மாவும் நீதிய—பறவைகளும் விலங்குகளும் பகைமை நீங்கி நீதியுடையனவாகும். மாவும்—இலக்குமியும், நிலத்து இருப்பு உள்ளும் —அந்நாட்டில் இருக்க விரும்பும். உள்ளும்—விரும்பும். உறுபிணி—உற்றபிணி. அகப்பிணி, புறப்பிணி.

நற்றமிழ் வரைப்பின் ஓங்கு நாம்புகழ் திருநா டென்றும்
பெற்றடங் தோளால் வையம் பொதுக்கடிந் தினிதுகாக்கும்

கொற்றவன் அநமா யன்பொற்குடைநிழற் குளிர்வதென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புறவிளம்ப லாமோ 70

வி.ரை:- தமிழ் கூறும நல்லுலகின் எல்லையுள் நாம் புகழும் ஓங்கு திருநாடு என்றும் தனது பொன் போன்ற பெரிய தோள்களால் உலகம் பொதுவானது என்பதை நீக்கி இனிதாகக் காத்துவரும் மன்னன் அநபாயனின் பொற்குடை நிழல் குளிர்ந்து காப்பது என்றால் மற்று அதன் பெருமையை நம்மால் வகைப் படுத்திக் கூற முடியுமோ?

அ.ரை:- வரைப்பு—எல்லை. வையம் பொது கடிந்து—எல்லாருக்கும் பொது என்பது நீக்கி.

நகரச் சிறப்பு

சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்தி வாரூர்த் திருநகர் 6

வி.ரை:- மேலே சொன்ன சோழநாட்டில் மிகப் பழமையானதும், பெருமையுடைய திருமகள் வழி பட்டதும், தனது பொதிந்த சடையில் வன்னி ஆற்றை யும் பிறையையும் கூடிய செஞ்சடையுடைய தலையர் எழுந்தளிய திருவாரூர்.

அ.ரை:- மாமலராகள்—இலக்குமி, பூமிப்பிராட்டி-

வேத ஓசையும விணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ வோசையும்
கீத ஓசையு மர்ய்க்கிளர் வுற்றதே 77

வி.ரை:- வேதங்கள் ஓதும் ஓசையும், வீணையின் ஓசையும், ஒளிவீசும் பாணர்களது தோத்திரம் செய் யும் ஓசையும், மாதர் ஆடல் பாடலும், அவர்கள் அணிந்த ஆபரணங்களின் ஓசையும், மத்தளங்களின் ஓசையும், இசைப் பாட்டுக்களின் ஓசையுமாகக் குளிர்ந்தது.

அ.உரை:- முழ—மத்தளம். கீதம்—பாட்டு. கிளர்வுற்றது—ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றியது.

பல்லி யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை இன்றி எழுந்துள எங்கணும் 78

வி.உரை:- பலவகையான வாத்தியங்கள் எங்கும் பரவிய ஒலியும் செல்வம் கொழிக்கும் வீதிகளில் அழகிய மணிகள் பதித்த தேர்களின் ஒலியும், வளம்மிக்க யானைகளின் ஓசையுடன், குதிரைகளின் ஓசையும் எல்லையின்றி எங்கும் எழுந்தன.

அ.உரை:- பல்லியங்கள் — வாத்தியங்கள், தேர்—வாகனம் செல்வந்தர். செல்லும் தேர் எனவும் காண்க மல்லல்—வளம்மிக்க போர் புரியும். மா—குதிரை.

மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளர நீடரங் கெங்கணும்
ஆடல் மாதர் அணிசிலம் பார்ப்பன 79

வி.உரை:-மாடங்களும் மாளிகைகளும் அதனினும் உயர்ந்த சூளிகைகளும்; மண்டபங்களும் கூடும் சாலைகளும் கோபுரங்களும் திண்ணைகளும், நீண்ட சாளரங்களும் நீண்ட அவைக் கூடங்களும், ஆடல் மகளிரின் அழகிய சிலம்பின் ஒலி பெருகும்.

அ.உரை:- சூளிகை—மாளிகைகளிலும் பெரியன கூடசாலை—சாலைகளின் சந்திப்பு. தெற்றி—திண்ணை சாளரம்—தாள்வரைகள். அரங்கு -நடன அரங்கு முதலியன.

அங்கு ரைக்கென் னளவப் பதியிலார்
தங்கள் மாளிகை யின்னொன்று சம்புவின்
பங்கி னாள்திருச் சேடிப் பரவையாம்
மங்க யார்அவ தாரஞ்செய் மாளிகை 80

வி.ரை:- அந்தத் திருவாரூரின் சிறப்பைக் கூறு தற்கு அளவை என்னவெனின்; அங்கு உள்ள இல்லங் களில் வாழ்பவர் தங்கள் மாளிகைகளில் ஒன்று சிவபெருமானின் அருளினால் கயிலையிலிருந்த அழகிய கமலினியார், பரவையார் எனும் பெண்ணாக அவதாரம் செய்யும் மாளிகையுள்ளதாம்.

அ.ரை:- அங்கு உரைக்கு—அதனை உரைத்தற்கு திருவாரூரின் திறப்பைக் கூறுதற்கு. சம்பு—சிவன். பங்கு —அருள்.

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார்
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால் 81

வி.ரை-: நிலத்தைத் தொண்டிச் சென்ற பன்றி யாய்த் திருமாலும், வானை நோக்கிப் பறந்து சென்ற அன்னமாய்ப் பிரம்மனும் தேடும் சிவபெருமான் தொடர்ந்து சென்று ஆட்கொண்ட வன் தொண்டருக் காய்த் தூதுபோன படர்ந்து பேரொளி வீசும் பல் வகை யான மணிகள் பதித்தவீதியில் இறைவனதுசெந்தாமரை யடிகள் பதித்த இடங்கள் மணம் கமழும்.

அ.ரை:- இடந்த—தோண்டிய. ஏனம்—பன்றி. வன்தொண்டர்—சுந்தரமூர்த்தி நாயனார். நாறும்—மணக்கும்.

செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்
பொங்கு சோதையின் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி அளறு புலர்த்துமால் 82

வி.ரை:- சிவந்த கண்களையுடைய மகளிர் தெருவில் தெளித்த சிவந்த குங்குமத்தை அவர்களது கூந்தலில் இருந்த மலர்களிலிருந்து சிந்திய மகரந்தந்துகள்கள் அங்கு சேர்ந்து சேற்றை உளர்ந்து போகச் செய்யும்.

அ.ரை:- குழல்—கூந்தல். பூந்துகள் — மகரந்தப் பொடி. அளறு—சேறு. புலர்த்தும்—உலர்த்தும்.

உள்ளம் ஆருரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள் பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள் 83

வி.ரை:. விடையேறி ஊர்ந்து மகிழும் வள்ளளார் தியாகேசப் பெருமானின் திருவாரூரின் பக்கமெல்லாம் திருப்பதிகங்களின் தெளிந்த ஓசையும் பசிய கிள்ளைகள் பாடுவதும் நாகனவாய்ப் பறவைகள் கேட்க அது கண்டு உருகாதார் யார்?

அ.ரை:- விடை—காளை வள்ளல்—தியாகேசப் பெருமால் கிள்ளை—கிளி. பூவை—நாகணவாய்ப் பறவைகள்.

விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல ஆறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள் 84

வி.ரை:- அழகிய ஆபரணங்கள் கலத்தலாலும் நீங்காத பேரொலியுடன் நெருங்கிய பண்டங்கள் வளம் மிக்க பல அறுகள் வழியாக வந்து நிறைதலாலும் கடைத் தெருக்கள் கடல் போன்றதாயின.

அ.ரை:- விளக்கம்-தெளிந்த, அழகிய, கலன்கள்-ஆபரணங்கள். விரவல்—கலத்தல், துளக்கல—நீங்காத துன்னு—நெருங்கிய, ஆறு மடுத்தலால்—ஆறுகளின் வழியாக வருதலால், அளக்கர்—கடல், ஆவணவீதி—கடைத் தெரு. கலன்கள் என்றதைக் கப்பல்கள் என்று பொருள் காணினுமாம்.

ஆர ணங்களே அல்ல மறுகிடை
வார ணங்களும் மாறி முழங்குமால்
சீர ணங்கிய தேவர்க ளேயலால்
தோர ணங்களில் தாமமுஞ் சூழுமால் 85

வி.ரை:- தெருக்களில் வேதங்கள் ஓதும் ஒலி யல்லாமல், யானைகளும் மாறிமாறி ஒலிக்கும் அழகாகப் பின்னப்பட்ட தேவர்களின் மாலைகளேயல்லாமல் கட்டித் தொங்கவிடப்பட்ட மாலைகளும் சூழ்ந்து காணப்படும்.

அ.ரை:- ஆபரணங்கள்—வேத கீதங்கள். மறுகு—தெரு. வாரணம்—யானை, சீரணங்கிய—சிறப்பாகப் பின்னப்பட்ட, தாமம்—மாலை.

தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்ததத் தொல்நகா. 86

வி.ரை:- அந்தப் பழம்பதி தாழ்ந்த சடையினரும், சைவர்களும், தபயோகிகளும், அறநெறியில் வாழ்ந்த சிந்தையர், முனிவர்கள், அந்தணர்கள், விரும்பிய இன்பத் துறைகளில் சூழ்ந்த பல்வேறிடங்களை யுடையது.

அ.ரை:- வேணி—சடை. மறையவர்—அந்தணர் வீழ்ந்த—விரும்பிய இன்பத்துறை—இன்பமான இடங் கள். விரவுவார்—பொருந்தியிருப்பர்.

நிலம கட்கழ கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்
தலகில் சீர்திரு வாரூர் விளங்குமால். 87

வி.ரை:- நிலமகளுக்கு அழகு சேர்க்கும் திருநீள் நுதலில் அமைந்த திலகம் போன்றது, மலர் மகளுக்கு அழகிய தாமரை போன்று மலர்ந்து அளவில்லாத சிறப்புகளைபுடைய சோழர் வாழும் பதியாகிய திருவாரூர் விளங்கும்.

அ.ரை:- நுதல்—நெற்றி, திலகம்-நெற்றிப்பொட்டு, செம்பியர்—சோழர்; மலர் மகள்—இலக்குமி

மனுநீதிச் சோழன்

அன்ன தொல்நக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரேரான்வழித் தோன்றினான்

மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே 88

வி.ரை:- அத்தகைய பழமையான நகருக்குப் பொருந்திய சூரியவமிசத்து அரசனான ஒளிவீசும் பெரிய மணிகள் பதித்த ஆபரணங்களை அணிந்த அநபாயன் வழியில் பெருஞ்சிறப்பு களையுடைய மனு எனும் மன்னவன் தோன்றினான்.

அ.ரை:- அன்ன—அத்தகை. தொல்—தொன்மை பழமை, செங்கதிரோன் வழித் தோன்றினான்—சூரிய வமிசம். மனு—மனு நீதிச்சோழன்.

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண இயற்றினான். 89

வி.ரை:- மண் உலகில் வாழும் பொருந்திய உயிர் களுக்கு எல்லாம் கண்ணாகவும், உயிராகவும் ஆகிய பேரரசன், தேவர்கள் மகிழ்ந்திட, எண்ணிலாத வேள்வி கள் மாட்சிமையுடன் செய்தனன்.

அ.ரை:- மன்னுயிர்—பொருந்திய உயிர். ஆவி—உயிர். விண்ணுலார்—தேவர். மாண—மாட்சிமை.

கொற்ற ஆழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெயர் ஆக்கினான். 90

வி.ரை:- வெற்றி கொண்ட் சக்கரம் உலகைச் சூழ்ந்திடச் சுற்றி இருந்த மன்னர்கள் தாம் செலுத்த

வேண்டிய கப்பங்களைக் கொண்டு வந்து வாயிலில் குவித்திடப் பகைமை இல்லை யென்றாக்கிய சிறப்பின் உண்மை மனு பெற்ற நீதியை தன் பெயரக்கு ஆக்கினான், "மனுநீதிச் சோழன்" எனப் பெயர் பெற்றான்.

அ.ரை:- கொற்ற ஆழி—வெற்றி பொருந்திய சக்கரம். குவலயம்—உலகு. திறை—கப்பம், கடை—வாயில் செற்றம்—பகைமை. மனுப்பெற்ற நீதி—மனு நீதி.

புற்றிடங் கொண்டவர்

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால். 91

வி.ரை:- பெருகும் சைவ சமயம் புற்றிடங்கொண்ட பிரான்தியா கேசப்பெருமான் எங்கும் நிறைந்தவராகி யிருந்த அவருக்குப் பூசனை ஆங்காங்கு வேண்டிய கட்டளைகளை ஆராய்ந்து பொருந்திய ஆகம விதிப்படி நின்றனன்.

மகன் பிறந்தான்

அறம்பொரு ளின்ப மான அறநெறி வழாமல் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகங் காக்கும் நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவிதிருமணி வயிற்று மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேர்அரிக் குருளை
அன்னான். 92

வி.ரை:- அறம், பொருள், இன்பம் ஆகிய அறநெறி தவறாமல் தழுவியிருந்து, பகைமை நீக்கி அரசர்

கள் போற்ற வையகம் காக்கும் நாளில், செய்த சிறப்பான தவவேள்விகளால் அரசியாரின் திருமணி போன்ற வயிற்றில் பெரிய சிங்கக்குட்டி போன்று உலகம் போற்ற ஒரு மகன் பிறந்தனன்.

அ.ரை:- மான—மிகச் சிறந்த, வழாமல்—தவறாமல் புல்லி—தழுவி. மறம்—பகைமை. அறம் அல்லாதது. அரிக்குருளை—சிங்கக் குட்டி.

தவமுயன் றரிதில் பெற்ற தனிஇளங் குமரன் நாளுஞ்
சிவமுயன் றடைந்து தெய்வக் கலைபல திருந்த ஓதிக்
கவனவாம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயஞ் றதுவும் பேறே எனவரும் பண்பில் மிக்கான். 93

வி.ரை:- தவங்கிடந்து மிக அரிதாகப் பெற்றெடுத்த ஒப்பற்ற இளங்குமரன் நாளும் சிவ நெறியில் வளர்ந்து தெய்வக்கலைகள் பல குற்றமற ஓதி விரைந்து செல்லும் குதிரை ஏற்றம், யானை ஏற்றம், தேர் ஏற்றம் ஆகிய தொழில் பல கற்றுப் பிறவி எடுத்தது பெரும் பேறே எனும் பண்பில் மிகுந்தவனானான்.

அ.ரை:- தவமுயன்று—தவம் செய்து. சிவமுயன்—சிவநெறி. கவன வாம்புரவி—பாயும் குதிரை ஏற்றம். பவமுயன்றது—பிறவி எடுத்தது. பேறு—பிறந்ததன் பயன்

அளவில்தொல் கலைகள் முற்றி அரும்பெறல் தந்தைமிக்க
உளமகிழ் காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி
இளவர சென்னுந் தன்மை எய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநாள் ஒருநாள் மைந்தன் 94

வி.ரை :- அளவில்லாத கலைகளை முழுமையாகக் கற்று, அருமையாகப் பெற்ற தந்தை மிகவும் உள்ளம்

மகிழ்ந்து மேலோங்கிய குணநலன்களால் உயர்வு பெற்று "இளவரசன்" என்னும் நிலை அடைதற்குத் தகுந்தவனாகக் காலை இளங்கதிரவனென்று உயர்ந்து வாழும் நாளில், இம்மைந்தன் ஒருநாள்.

அ.ரை :- முற்றி — முழுமையாகக் கற்று. அரும் பெறல்—அருமையாகப் பெற்றெடுத்த. அணியன்— தக்கவன், தகுதி வாய்ந்த நிலையடைந்து. பரிதி— ஞாயிறு.

இளவரச உலா

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர்கோயில் நின்று
மங்குல்தோய் மாடவீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமக் குலவுத் தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசை பொலிந்து போந்தான். 95

வி.ரை :- வெண்கொற்றக் குடையுடைய மன்னவன் அரணமனையிலிருந்து இருண்ட மேகம் சூழ்ந்த மாட வீதியில் தனது தோழர்கள் சூழத் தொங்கும்அன்றலர்ந்த மணம்கமழ் மலர் மாலைகளுடன் குங்குமமும் கலந்த தோள்களையுடைய இளவரசன், திரண்ட சேனே சூழ்ந்துவரத் தேர்மீது அழகுடன் சென்றான்.

அ-ரை :- கவிகை-குடை. திருவளர் கோயில்-அரண்மனை. மங்குல்—மேகம். கொங்கு—வாசனை. தானை—சேனை. பொலிந்து—அழகுடன்.

பரசுவந் தியர்முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி 96

வி.ரை :- இளவரசன் உலா வரும் அழகிய மாட வீதியில் மங்கல இசை பாடுவோரும், ஆங்காங்கு நின்று ஏத்திப் போற்றுவோரும், மற்றும் குழுமியிருந்து ஏத்து வோரும் ஒரு பக்கம் அருகே மணங்கமழ் கூந்தலை யுடைய மகளிர் சிந்தும் வெண்சங்கங்கள் ஒரு பக்கம் பெரிய முரசுகளுடன் சங்குகள் ஒலிக்க முழங்கும் பேரொலி ஒருபக்கம் முழங்கும்.

அ-ரை :- பரசுவந்தியர் — மங்கலப் பாடல்கள் பாடும் பாணர்கள். சூதர்—சூழ்ந்து நின்று பாடுவோர். மாகதர் — இருந்து துதிப்போர். இம்மூவகையினரும் பாணர்கள் எனத் தெரிகிறது. பாங்கர்—பக்கம். விரை நறுங் குழலார்— மணம் கமழ் கூந்தலார். வெள்வளை— வெண்சங்கு. வளையல். இளவரசனைக் கண்டு இளம் மங்கையர் தங்களது வளையல்கள் கழன்றுவிழ நின்றனர் என்பதாம்.

கன்று ஒன்று துள்ளி வந்தது

தனிப்பெருந் தருமந் தானோர் தயா இன்றித் தானை
மன்னன்
பனிப்பில்சிந் தையினில் உண்மைப் பான்மைசோ தித்தால்
என்ன
மனித்தர்தன் வரவு காணா வண்ணமோர் வண்ண
நல் ஆன்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகி னுடே. 97

வி.ரை :- தாளைத் தலைவன் மன்னவன் செய்த ஒப்பற்ற தனிப்பெரும் தருமம் தயவு எதுவுமின்றி நடுக்கமில்லாத தன்மையினில் மன்னன் உண்மைத் தன்மையை சோதிப்பதே போன்று, தான் ஓடி வரு வது யாரும் காணாவண்ணம் ஓர் அழகிய நல்ல பசு அப்பொழுதுதான் ஈன்ற கன்று இளவரசன் உலாவரும் தெருவினுடே துள்ளி ஓடிவந்தது.

அ.ரை :- தயா-தயவு, இரக்கம். பனிப்பு-நடுக்கம், அச்சம். பான்மை—தன்மை. மனித்தர்—மனிதர். ஆன்—பசு. புனிற்றிளம்—மிக இளம், அப்பொழுது ஈன்ற. மறுகு —தெரு.

கன்று இளவரசன் தேரில் அடிபட்டிறந்தது

அம்புனிற் றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால்மீது விசையினால் செல்லப்பட்டே
உம்பரின் அடையக் கண்டங் குருகுதாய் அலமந்தோடி
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந்நடுக் குற்றுவீழும். 98

வி.ரை :- அந்த இளங்கன்று ஒருஆபத்தினிடையே பாய்ந்து செம்பொன்னாலான தேரின் காலின் மீது ஓடிய வேகத்தினால் செலுத்தப்பட்டு உயிரி நீத்தது கண்டு அங்கு உருகி அழும் தாய்ப்பசு மனம் வெந்து அலறி உடல் நடுக்கமடைந்து சோர்ந்து விழுந்தது.

அ.ரை :- விசையினால்—சென்ற வேகத்தினால். உம்பரின் அடைய—உயிர்நீத்து விண்ணேக. அலமந்து—மனம் நொந்து.

இளவரசன் வருந்தி வீழ்ந்தது

மற்றது கண்டு மைந்தன் "வந்ததிங் கபாயம்" என்று
சொல்தடு மாறி நெஞ்சில் துயருழந் தறிவ ழிந்து
"பெற்றமுங் கன்றும் இன்றென் உணர்வெனும் பெருமை மாளச்
செற்ற, என் செய்கேன்" என்று தேரினின் றிழிந்து வீழ்ந்தான் 99

வி.ரை :- தாய்ப்பசு அடைந்த துன்பத்தைக் கண்ட இளவரசன் "இனி வந்தது அபாயம்" என்று

சொல் தடுமாறி மனத்தில் துயருற்று என்ன செய்வ தென்றறியாது கன்றும் அதனைப் பெற்ற தாயும் இன்று எனது உணர்வு எனும் பெருமை அழிந்து போகச் செய்தன இனி நான் என் செய்வேன்?'' என்று தேரி னின்றும் இறங்கி விழுந்தான்.

அ.ரை :- பெற்றமும்—கன்றை ஈன்ற பசு. செற் றன—அழித்தன. தாய்ப்பசு விழக்கண்டு தானும் தன் நிலை குலைந்து விழுந்தான் என்பதாம்.

இளவல் தன்னை இகழ்ந்துரைத்தது

அலறுபேர் ஆவை நோக்கி ஆர் ஊயிர் பதைத்துச் சோரும்
நீலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த்திரங்கி நிற்கும்
''மலர்தலை உலகங் காக்கும் மனுவெனும் என்கோ மானுக்
குலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா ஒருவன்''
என்பான். 100

வி.ரை:- அலறிக் கத்திக் கொண்டிருக்கும் பசுவை நோக்கி இனிய உயிர் பதைத்துச் சொர்வான். நிலத் தின்மீது செத்துக் கிடக்கும் கன்றை நோக்கிப் பெரு முச்சுவிட்டு வருந்தி நிற்பான். ''இந்த வளரும் தன்மை யுடைய உலகங்காங்கும் மனு எனும் என் அரசனுக்கு உலகில் இந்தப் பழி வந்து சேரப் பிறந்தான் ஒருவன்'' என்று தன்னை இகழ்ந்து பிதற்றுவான்.

அ.ரை:- மலர்தலை உலகம்—மலர்ந்து வளர்ந்து செழிக்கும் உலகம்.

''வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறை நூல்
வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமே ஆகில்
எந்தைஈ தறியா முன்னம் இயற்றுவன்'' என்று மைந்தன்
சிந்தைவெந் துயரந் தீர்ப்பான் திருமறை யவர்முன்
சென்றான். 101

வி.ரை:- நேர்ந்த இந்தப் பழியினை நீக்கும் வகையினை வேத நூல்களில் கூறப்பட்டுள்ளபடி அந்தணர்கள் விதித்த வழிமுறையால் செய்வது அறமானால் எந்தை இதனை அறிந்து கொள்வதற்கு முன் அந்தப் பாகாரத்தைச் செய்திடுவேன் என்று இளவரசன் தன் மனவேதனையைத் தீர்க்கும் அந்தணர்களிடம் சென்றான்:

அ.ரை:- மாற்றும் வகை—பழிநீக்கும் வகை. விதித்த் ஆற்றல்—வேதங்களில் விதிக்கப்பட்ட மாற்று. பிரயாச்சித்தம்.

பசு சென்று ஆராய்ச்சிமணி அடித்தது

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்த ஆத் தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோல் மனுவின் பொன் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே. 102

வி.ரை:- தனது உயிருக்கு உயிரான கன்று விழத் தளர்ந்து போன அத்தாய்ப்பசு தளர்ந்து அத்துன்பத்தைத் தாங்க முடியாததாகி, நெருப்புப் பொரி பறக்கப் பெருமூச்சுவிட்டு விம்மி அழுது முகத்தினில் கண்ணீர் ஒழுக இவ்வுலகங்களைக் காக்கும் செங்கோல் ஏந்திய மன்னன் மனுவின் பொன்னலான கோயில்புர வாயிலில் கட்டடப்பட்டிருந்த மணியைத், தன் கொம்புகளால் அடித்து ஒலி எழுப்பியது.

அ.ரை:- தரியா—தாங்காத நெருப்புயிர்த்து—பெருமூச்க விட்டு, கோட்டு—கொம்பு.

மன்னன் மணி ஓசை கேட்டு மயங்கியது

பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோவேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவிகொள வரு மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ என்னத்தன்
கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்க போது 103

வி.ரை:: தன் கடைவாயிலில் முன்பு எப்பொழுதும் கேட்டறியாத அதட்டி எழும் ஓசையானது மன்னன் காதினுள் புகுந்தபோது, பழிச் சொல்லின் முழக்கமோ? அல்லது பாவத்தின் ஒலியோ? அல்லது வேந்தனது வழித்தோன்றல் திருமகனின் ஆவி கொள்ள வந்த எமனின் வாகனமாகிய எருமைக் கடாவின் கழுத்தில் அணிந்த மணியின் ஒலியோ என்று மயங்கினான்.

அ.ரை:- பழிப்பு அறை—பழிச்சொல். பறை என முழங்கிற்று எனினுமாம். மறலி—எமன். தெழித்து—அதட்டி. இரைத்து. செவிப்புலம்—காதினுள்.

ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை இழிந்து போந்து
பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி
"ஈங்கிதோர் பசுவந் தெய்தி, இறைவ! நின்கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கிய"தென்று
சொன்னார். 104

வி.ரை:- அதனைக் கேட்ட மன்னன் அரியணையிலிருந்து இறங்கிச் சென்று மலர்க்கொடிகள் சூழ்ந்த வாயிலை அடைந்திடக் காவலர் எதிரில் வந்து போற்றி, "மன்ன! இங்கு ஒரு பசு வந்து, உன் வெற்றியுடைய வாயிலில் தூங்கிக் கொண்டிருந்த மணியைத் தன் கொம்பினால் அசைத்தது" என்றனர்.

அ.ரை:- கொற்றவாயில் — வெற்றியைத் தரும் வாயில், தூங்கிய மணி—இது காறும் அடிக்கப்படாத மணி. துளக்கிய—அசைத்த, ஆட்டிய.

"பசுவுக்கு நேர்ந்தது என்ன" என்றது

மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
"என்னிதற் குற்ற" தென்பான் அமைச்சரை இகழ்ந்து
நோக்க
முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன் தாளிணை தொழுது
சொல்வான் 105

வி.ரை:- மன்னவன் அதனைக் கேட்டு வருந்திய பசுவைப் பார்த்து "இதற்கு நிகழ்ந்தது என்ன" என்று அமைச்சரை இகழ்ந்து நோக்க, முன்பு நிகழ்ந்தன எல்லாம் அறிந்தபடி முதிர்ந்த கேள்வியுடையவனும், பழைய நெறியினின்றும் தவராதவனான அமைச்சன் மன்னவன் காலினை தொழுது கூறுவான்.

அ.ரை:- கேளா—கேட்டு, தொன்னெறி அமைச்சன்—பழைய நெறி தவறாத அமைச்சன்.

அமைச்சன் சொன்னது

"வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளைய ஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை"
என்றான். 106

வி.ரை:- சோழ மன்ன! உனது மகன் ஆங்கு ஓர் மணிகள் பதித்த பெரிய தேரின் மீது, அளவில்லாத

தேர்ப் படைகள் சூழ அரசுலவாகியதெருவில் போம் போது, இளைய பசுங்கன்று தேர்க்காலின் இடையே புகுந்து இறந்ததற்குத் தளர்வு அடைந்த இந்தத் தாய்ப் பசு வந்து இதனை விளைவித்தது.

அ.ரை;- வளவன்— சோழ மன்னன். தேர்த் தானை--தேர்ப்படை. தளர்வுறும்—தளர்ச்சி; துன்ப மடைந்த.

மன்னன் கொண்டதுயரம்

அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயரம் எல்லாம்
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேத்னை
அகத்து மிக்"கிங்
கிவ்வினை விளைந்த வா'றென் றிடருறும் இரங்கும் ஏங்கும்
"செவ்விதென் செங்கோல்!" என்னும் தெருமரும்
தெளியும் தேறான். 107

வி.ரை:- அமைச்சர் சொன்னது கேட்ட மன்னன் பசு அடைந்த துயரம் எல்லாம், கொடிய நஞ்சாகத் தலைக்கு ஏறினது போன்று வேதனை மனத்தில் மிகுதியாக, இங்கு இத்துன்பம் விளைந்தது எவ்வாறு என்று துன்பமடைந்து வருந்துவான். என் செங்கோலின் சிறப்பு நன்றாக இருக்கிறது என்று மனம் சுழலுவான், தெளிவான், பின்னர் தெளிவு பெறாது கலங்குவான்.

அ.ரை:- ஆ உறு—பசு அடைந்த, இடருறும்— துன்பமடைவான். செவ்விது என் செங்கோல்—என் செங்கோலின் முறைமை சிறப்பாக உள்ளது என்று இகழ்ந்துரைத்தல். தெருமரும்—மனம் மயங்கும்.

"மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும்
என்னெறி நன்றால்" என்னும் "என்செய்தால் தீரும்"
என்னும்

தன்னிளங் கன்று காணாத் தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை அரசன் உற்ற துயரம்ஓர் அளவிற் றன்றால் 108

வி.ரை.- உலகம் பொது என்பது நீக்கித் தனதாக்கிக் கொண்டு மண்ணில் வாழ் உயிர்களைக் காத்து அறத்தில் நீடுயர்ந்த என் நெறி நன்றாயிருக் கிறது என்ற இழிச்சொல் என்ன செய்தால் தீரும் என்று கூறித் தனது இளங்கன்றைக் காணாத தாய்ப் பசுவின் முகத்தைக் கண்டு வருந்தும் மன்னவன் அந் நிலையில் அடைந்த துயரத்துக்கு அளவேயில்லை.

அ.ரை:- மன்னுயிர்—மண்ணில் வாழும் உயிர் புரந்து—காத்து. பொதுக் கடிந்து—பொதுமை என்பது நீக்கித் தனதாக்கி. சோரும்—வருந்தும்.

"அந்தணர் விதித்த முறை அறம்" என்றது

மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச்
"சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்
கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்' என்றார். 109

வி.ரை:- மன்னன் உற்ற துயர் கண்ட மந்திரிகள், மன்னவனை வணங்கி "மனம் தளர்ந்து வருந்துதல் இதற்குத் தீர்வாகாது. கொத்தான மலர்களால் அமைந்த மாலை அணிந்த மகனை முன்பு பசுவதை செய்தவர் கட்கு வேதங்களில் அந்தணர்கள் விதித்த முறைமை யின்படி நிலைநாட்டல் அறமாகும்" என்றனர்.

அ.ரை:- கோவதை—பசுவதை. வழி நிறுத்தல்—நிலை நாட்டல்.

மன்னன் மறுத்துரைத்தது

''வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ
இழக்கின்றேன் மைந்தனை என் றெல்லீருஞ் சொல்லியஇச்
சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ.'' 110

வி-ரை :- வழக்கு என்று நீர் சொன்னால் மற்று அது தான் வருத்தமுற்றுத் தன் குழந்தைக் கன்றை இழந்து அலறும் பசு உற்ற நோய்க்கு மருந்தாகுமோ? தவறவிடுகின்றேன் என் மகனை என்று எல்லோரும் சொல்லிய இந்தப் பொய்யினுக்கு நான் இசைவு தந்தால் தருமம் நலிந்து போகாதோ?

அ.ரை :- வழக்கு—பசுவதை வழக்கு. வலிப்பு—வருத்தம். சழங்கு—பொய். இழக்கின்றேன்—தவற விடுகின்றேன். சலிதல்—நீத்துப் போதல், சாய்தல்.

''அறங்காப்பான் மன்னன்'' என்றது

''மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ'! 111

வி.ரை :- இப்பெரு நிலத்துக்குக் காவலனான அரசன் இம்மண்ணில் தோன்றிய உயிர்களைக் காக்கும் போது, தான் அதனக்கு அதாவது அந்த மன்னுயிர்க்குத் தன்னால் தன் பரிவாரங்களால் பகையின் வகைகளால், கள்வர்களால், விலங்கு முதலிய கொடிய உயிரினங்களால் உண்டாகும் அச்சம் ஐந்தும் தீர்த்து அறங் காப்பவன் அல்லவோ.

அ.ரை :- இடையூறு — துன்பம். பரிசனம் — பரிவாரம் முதலியன. ஊனம்—குற்றம். உயிர்—கொடிய விலங்கு முதலியன.

மனு தர்ம சாத்திர முறைமை

என் மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செய இசைந்தே
அன்னியன ஓர் உயிர்கொன்றால் அவனைக்கொல் வேனானால்
தொன்மனுநூல் தொடை மனுவால் துடைப்புண்ட தெனும் வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்''கென்றான் 112

வி.ரை :- ''என் மகன் செய்த பாதகச் செயலுக்குப் பெரிய தவங்கள் பல செய்ய நான் இசைந்து, வேறு ஒருவன் ஒரு உயிரைக் கொன்றால் நான் அவனைக் கொன்றால், பழைய மனுதர்மசாத்திரத்தின் ஒழுங்கு முறையானது மனுநீதிச் சோழனால் அழிந்தது எனும் சொல்லை நான் அடைய மொழிந்தீர்கள். இது அமைச்சர்களது வழக்கம்'' என்றான்.

அ ரை :- பாதகம்—பாவம். இருதவங்கள்—பெரிய தவங்கள், மகன் பசுவதை செய்ததால் அந்தணர்களது அறநெறிபின்படி பெருந்தவம்செய்து அந்த பாபத்தைப் போக்கிக் கொள்வதாம். தொடை—வழிமுறை. துடைப்புண்டது —அழிந்தது.

மதி அமைச்சர் சொன்னது

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதி நிற்ற மதிஅமைச்சர்
''நிறைநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்நததால்

பொன்றுவித்தல் மரபன்று மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ தொனனிலங்கா வல!''
என்றார். 113

வி.ரை :- என்று அரசன் இவ்வாறு இகழ்ந்து கூற, எதிரில் நின்றிருந்த மதிமந்திரி தொன்னிலங்காவலா! நிலை நாட்டப்பட்ட நெறி இதுபோன்று முன்பும் இருந்தது. ஆதலால் மகனைக்கொல்லுதல் மரபு அன்று. வேதங்களில் சொல்லப்பட்ட அறத்தின் வழி நிற்றல் தொன்று தொட்டு வரும் நெறியாகும்'' என்றார்.

அ.ரை :- நின்றநெறி—நிலைப்படுத்தப்பட்ட நெறி. பொன்றுவித்தல் – கொன்று விடுதல்.

மன்னவன் மேலும் கூறியது

அவ்வண்ணந் தொழுதுரைத்த அமைச்சர்களை முகநோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவெனனும் விறல்
வேந்தன்
''இவ்வண்ணம் பழுதுரைத்தீர்'' என்றெரியின் இடைத
தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போல் முகம்புலர்ந்து
செயிர்த்துரைப்பான் 114

வி.ரை :- அவ்வாறு தொழுது கூறிய அமைச்சர் களது முகம் நோக்கி, உண்மை நிலையைத் தெரிந்து உணர்ந்த மனு என்னும் வெற்றி வேந்தன் ''இவ்வாறு தவறாக உரைத்தீர்'' என்று தீயிடைப்பட்ட சிவந்த கமலம் போன்று முகம்வாடி வருந்திச் சினந்துரைத் தான்.

அ.ரை :- மெய்வண்ணம் — உண்மை நிலை. விறல்—வெற்றி. எரி—தீ. தோய்ந்த—சிக்கிய. புலர்ந்து—வாடி. செயிர்த்து—சினந்து.

"அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க அறநெறியின்
செவ்வியஉண் மைத்திறநீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெறறித் தாமிடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழ்ந்தது' விளம்பீர்.
115

வி.ரை :- நீவிர் கூறியவற்றில் வரும் நெறிகள் கிடக்கட்டும். இந்நெறியின் மேன்மையான உண்மைத் திறத்தை நீங்கள் சிந்தை செய்யாது உரைக்கின்றீர். எந்த உலகில் எந்தப் பசு இதுபோன்று தன் துன்பத் தால் பெருமூச்சு விட்டுக்கதறி மணி அடித்து விழுந்தது? சொல்லுவிர் என்றான்.

அ.ரை :- செவ்விய—சிறந்த. பெற்றம்—பசு. இப் பெற்றி — இது போன்று. இடர் — துன்பம். வெவ் வுயிர்த்து — பெருமூச்சுவிட்டு. மணி எறிந்து — மணி அடித்து.

"கொன்றானைக் கொல்லுதல் முறை" என்றது

"போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்
திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர்கொன்றான் ஆதலினால் துணி
பொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாம் என நினைமின்.'
116

வி.ரை :- "இந்திரன், திருமால், பிரம்மன் முதலா னோர் போற்றிப் புகழ்ந்து பாடி வணங்க எழுந்தருளி யிருந்த பெருமானார் சிவபெருமான் விரும்பி வாழும் திருவாரூரில் தோன்றிய உயிரைக் கொன்றான் ஆதலி

னால் அவனைக் கொல்லுவது மிகவும் துணிந்து செய்யத்தக்க செயலாகும் என நினைமின்'' என்றான்.

அ.ரை :- புரந்தரன்—இந்திரன். மால்—திருமால். அயன்—பிரமன். மேவியுறை—விரும்பி அமர்ந்தருளும் தோற்றமுடை. உயிர்—தோன்றிய உயிர். திருவாரூரில் தோன்றி உயிரினங்கள் சிவகணங்கள் என்றபடி, துணி பொருள்—துணிந்து செய்ய வேண்டியது.

''பசு அடைந்த துயர் நான் அடைவதே தருமம்'' என்றது

எனமொழிந்து ''மற்றிதனுக் கினியிதுவே செயல்இவ் ஆன்
மலம் அழியுந் துயர் அகற்ற மாட்டாதேன் வருந்தும் இது
தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம்'' என
அநகன்அரும் பொருள்துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர்
அகன்றார். 117

வி.ரை :- என்று மன்னன் மொழிந்து, ''இனி இந்தப் பழிக்குச் செய்யத்தக்கது இந்தப் பசுவின் மனம் அழியும் துயரினை அகற்ற மாட்டாதவனாகிய நான், வருந்தும் இதற்கு வந்த துயரை நானும் தாங்குவதே தருமம்'' என்று பாபமற்றவனான மன்னன் செய்யத் தகாதது செய்யத் துணிந்தான். அமைச்சரும் அச்சம் கொண்டு அகன்றனர்.

அ.ரை :- உறுதுயர்—உற்றதுயர். அநகன்—பாவமற்றவன்

அமைச்சன் அரசாணை ஏற்காதுயிர் நீத்தது

மன்னவன் தன் மைந்தனை அங் கழைத்தொருமந்
திரிதன்னை
''முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்க'' என

அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன் ஆர்உயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான். 118

வி.ரை :- மன்னவன் தனது அமைச்சர் ஒருவரை அழைத்து "முதலில் இவனை அந்த வீதியில் தேர்க் காலில் செலுத்துக" என்றதும் அவனும் அரசாணையை நிறைவேற்றாதகன்று தன் அரிய உயிரை மாய்த்துக் கொள்ள மன்னவன் தன் குலமகனைத் தானே அழைத்துக் கொண்டு தெருவுக்கு வந்தான்.

அ-ரை :- முன்—முதலில். முரண் —வலிய. ஊர்க— அவன்மேல் செலுத்திடுக. மறுகு—தெரு.

மகன் மார்பில் தேரைச் செலுத்திக் கொன்றது

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதும்உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான் 119

வி.ரை :- ஒரே மகன் தன் குலம் வளர என்பதை உணராமல், அறத்தின் வழிச் செல்லல் கடன் என்று தனது மகனின் மார்பின்மீது தேர்ச்சக்கரத்தைச் செலுத்தினான் மனுநீதிச் சோழன். அருமருந்து போன்ற அரசாட்சி அரிதோ மற்று எளிதோ.

அ.ரை :- மருமம்—மார்பு. ஆழி—சக்கரம். அருமந்த—அரிய. அரிதோ மற்றெளிதோ.

வானவர் மலர்மழை பொழிந்தது

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை
சொரிந்தா

அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப்பெருமான்
120

வி.ரை :- குளிர்ந்தஒளிவீசும்வெண்கொற்றக் குடையையுடைய மன்னவனது செயலைக் கண்டு செய்வதறியாது கண்களில் மக்கள் மழை பொழிந்தனர். வானவர்கள் மலர் மழை சொரிந்தனர். அண்ணல் மனுநீதிச் சோழன் முன்னே அழகிய வீதியில் இளம் எருதின்மீது தேவர்கள் தொழ வீதிவிடங்கப் பெருமான் காட்சியளித்தார்.

அ.ரை :- தரியாத — தாங்காத. அண்ணல் — சோழன். அணிவீதி—அழகிய வீதி. விடங்கப்பெருமான்—உளிபடாத பெருமான். வி—இன்மை. டங்கம்—உளி.

சடைமருங்கில் இளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடை நெருங்கும் பெருமையும் முன் கண்டரசன்
போற்றிசைப்ப
விடை மருவும் பெருமானும் விறல்வேந்தற்கருள்
கொடுத்தான். 121

வி.ரை :- சடையின் பக்கம் பிறைநிலவும் அருள் நோக்குக்குத் திருநெற்றியும் இடதுபக்கத்தில் உமையம்மையும், எங்கு பார்த்தாலும் பூதகணங்களும் புடை சூழ்ந்திருக்கும் பெருமையும் கண்ட மன்னன் போற்றி இசை பாட விடைமேலமர்ந்த பெருமானும் வெற்றி வேந்தனுக்குக் காட்சி தந்து அருளினார்.

அ.ரை :- தனி விழி — அருட்கண், நெற்றிக்கண் இடமருங்கில் — இடப்பக்கம். விடைமருவும் — காளை மேலமர்ந்த. விறல்—வெற்றி.

இளவரசனும், கன்றும், அமைச்சரும் உயிர் பெற்றெழுந்தது

அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன் எழலும்
இன்னபரி சானான் என் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ. 122

வி.ரை :- ஈசன் காட்சி தந்த அப்பொழுதே உயிர் நீத்த பசுவின் கன்றும், அவ்வரசனின் தனிக்கன்றாம் இளவரசனும், மந்திரியும் உடன் உயிர்த்தெழுந்திட இன்ன தன்மையானான் என்று அறிந்திலன். மன்னவனும் யாவருக்கும் முன்னவனே முன்னின்றருளினால் முடியாத பொருள் உளதோ'' என்றான்.

மன்னன் மகனை மார்புறத் தழுவியது

அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைந்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே. 123

வி.ரை :- உயிர்பெற்றெழுந்து வந்து கால்களில் விழுந்து வணங்கிய திருமகனை மார்புறத்தழுவி எடுத்து இணைத்து மிகவும் மகிழ்ந்து பெருந்துயரம் மன்னன் நீங்கினான். பசுவும் மடிசுரந்து நிலம் நனைய தீம்பால் பொழியக், கன்றும் ஓடிவந்து மகிழ்ந்துண்டு துன்பம் அப்பொழுதே நீங்கியது.

அ.ரை :- ஆகமுற — மார்பிற் தழுவி, படி—நிலம் பருவரல் —துன்பம்

பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்

சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
கென்றும்எளி வரும்பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும் 124

வி.ரை :- பொன்மயமான மதிலால் சூழப்பட்ட திருவாரூர்க் கமலாலயம் அமர்ந்தபிரான் வெற்றிமனு மன்னனுக்கு வீதியிலேயே காட்சி கொடுத்தருளிச் சென்ற பெருங் கருணைத் திறத்தைக் கண்டு தன் அடியார்கட்கு என்றும் எளியனாக வரும் பெருமை யினை உலகங்க ஏழும் எடுத்தோதிப் போற்றும்

இனையவகை அறநெறியில் எண்ணிறந் தோர்க்கருள் புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்று டைய மூதூர்மேல
புனையும் உரை நம்மளவில் புகலலாந் தகைமையதோ
அனையதனுக் ககமலராம் அறவனார் பூங்கோயில் 125

வி.ரை :- இத்தகையன அறநெறியில் எண்ணற்ற வர்கட்கு அருள்புரிந்து.சிவபெருமான் மகிழ்ந்து அருளப் பெற்றுடைய திருவாரூர் சிவபெருமானுக்கு மனத் தாமரையாம் கமலாலயம். அத்தகைய ஊரின் மேல் சொல்லப்படும் உரையானது நாம்மால் சொல்லத் தக்கதாமோ

அ.ரை :- இனையவகை — இத்தகையன. முனைவர்—சிவபெருமான். மூதூர்—திருவாரூர். அறவனார்—சிவபெருமான். பூங்கோயில்—கமலாலயம்.

திருக் கூட்டச் சிறப்பு

பூத நாயகர் புற்றிடங் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலில்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூதெ யில்திரு வாயில்முன் னாயது. 126

வி.ரை :- உயிர்கட்கெல்லாம் மூலமானவர், புற்றிடங் கொண்டவர். ஆதி இறைவன் அமர்ந்த கமலாலயம் ஒளி வீசும் பெரிய மணிகள் பதித்த நீண்ட சுடர் ஒளி வீசும் முன்றில் சூழப்பட்ட பழைய மதிலின் திருவாயில் முன்னையது.

அ.ரை : பூதநாயகன்—உயிர்கட்குத் தலைவன்—சிவபெருமான். முன்றில் — முற்றம். முன்னாயது—தேவாசிரிய மண்டபம் முன்னயது.

பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை
மாவாழ் அகலத்து மால் முதல் வானவர்
ஓவா தெவரும் நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரியன் எனுந்திருக் காவணம். 127

வி.ரை :- இவ்வுலகையெல்லாம் படைக்கும் நான்முகன், இந்திரன், மலர்மீதமர்ந்தஇலக்குமிப்பிராட்டியை மார்பில் அணிந்த திருமால் முதலாக மற்ற தேவர்கள் யாவரும் வந்து நீங்காது நிறைந்து தங்கியிருக்க இடமாயுள்ளது தேவாசிரியன் எனும் திருமண்டபம்.

அ.ரை : பூ ஆர் திசைமுகன்—உலகைப் படைத்த பிரம்மன் மலர்மீதமர்ந்தவன் எனினுமாம். பூமிசை—மலர்மிசை. மாவாழ் அகலம்—இலக்குமி தங்கிய மார்பு. உறைந்து—நெருங்கி நிலைபெற்றிருப்பது.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது 128

வி.ரை :- உலகத் துன்பத்தைத் தீர்க்கும் அடியவர்களது கூட்டத்தால் சீராகப் பூசப்பட்ட திருநீற்று ஒளியால் அடைந்த தூய்மையால், காக்கும் அஞ்செழுத்து ஓசை எங்கும் மிகுவதால், பரந்துகிடக்கும் பாற்கடல் ஆயிரமானது போன்றதாம்.

அ.ரை :- அரந்தை—துன்பம். உலகில் தோன்றும் துன்பங்களையெல்லாம் போக்க வல்லது. மேனி—கூட்டம். நிரந்த—சீராக, சிறப்பாக. புரந்த—காக்கும். பரந்த ஆயிரம் பாற்கடல்—பாற்கடல் ஒன்று, அது ஆயிரமாகப் பரந்து விரிந்தது போன்றது.

அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற் குரியர்என்
றகில லோகத்து ளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வ ததனிடை 129

வி.ரை :- இந்த எல்லா உலகங்கட்கும் காரணராகிய சிவபெருமானின் திருத்தாள்களை வணங்கும் சிவனடியார்கள்தான் எல்லா உலகங்களையும் ஆளுதற்கு உரியவர்கள் என்று எல்லா உலகத்தில் உள்ளவர்களும்சென்றடைவராதலின் அகிலலோகமும் போல்வது அந்த மண்டபம்.

அ.ரை :- அகில்காரணர்—எல்லாவற்றிற்கும் மூல மான சிவபெருமான். அடைதலின்—சென்றடைதலின்.

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்த ழைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார். 130

வி.ரை :- சிவபெருமானே பூர்வத்தில் விரும்பி வேண்டி ஆட்கொள்ளப்பட்ட அவர்கள் இறைவனது அன்பினால் மெய்சிலிர்த்து, உடல் நடுக்குற்று என்றும் இறைவன் சிந்தையினராய் திருத்தொண்டு செய்யும் கடமைப்பட்டவர் ஆகிய இவர்களும் மற்றும் எண் ணற்றவர் உறையுமிடம்.

அ.ரை :- அத்தர்—சிவபெருமான். ஆண்டவர்—ஆட்கொண்டவர். கைத்திருத்தொண்டு—சிறு வேலை கள். கடப்பாட்டினர்—கடமையுள்ளவர்.

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார். 131

வி.ரை:- குற்ற மற்ற உருத்திராக்க மணி மீது பூசப் படும் திருநீறு போன்று உள்ளத்தாலும் புனிதர்களது கூட்டத்தின் ஒளியினால் எப்பக்கமும் சொல்லுதற்கு அரிய பெருமையில் விளங்கினார்கள்.

அ.ரை:- மாசு—குற்றம், அழுக்கு. மணி—உருத்தி ராக்க மணி. இது சிவபெருமான் கண்ணிலிருந்து தோன்றியது என்பர். புனிதர்கள் தேசினால்—புனிதர் களது ஒளியினால். தேசினால்—தேஜேசினால் என்றதன் தமிழாக்கம் பிறங்கினார்—விளங்கினார்.

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதே ர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார். 132

வி.ரை:- ஐம்பெரும் பருப்பொருட்களும் தத்தம் நிலையில் கலங்கி உலகம் அழிந்தாலும் மங்கையை ஒரு பாகமாக உடைய சிவபெருமானது திருவடித் தாமரைகளை மறவாதவர். சொல்லப்பட்ட அன்பு உறைப்பவராயின், குற்றமற்ற குணப் பெருங்குன்று என சிவநெறியில் நின்றவராவார்.

அ.ரை:- பூதம் ஐந்து—ஐந்து பருப் பொருட்கள். ஐம்பெரும் பூதங்கள். காதல் உறைப்பின் நெறி—அன்பு நெறி. கோதிலாத—குற்றமற்ற.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் குப்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். 133

வி.ரை:- வறுமையும் செல்வமும் இல்லாத் திரு நிறை செல்வர், ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகவே நோக்குவோர் ஆகிய இவர்கள் ஒன்று சேரும் அன்பின் காரணமாக இறைவனை வணங்குதலே அன்றி சுவர்க்க மும் வேண்டாம் எனும் வெற்றியில் விளங்கினார்.

அ.ரை.- கேடும்—வறுமையும். ஆக்கம்—செல்வம். கெட்ட—நீக்கிய, இல்லாத ஓடு—மண் ஓடு. செம் பொன்—தங்கம். விறல்—வெற்றி.

ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ. 134

வி.ரை:- மாலை என்பது உருத்திராக்கம், ஆடை கந்தல், இறைவனுக்குத் திருப்பணி அல்லது வேறு தொழில் எதுவுமில்லாதவர்களது குளிர்ந்த அன்பினை யுடையவர் குறைபொன்று மில்லாதவர். இதுவே வீரம் என்றால் வேறு எதுவும் சொல்ல உள்ளதோ?

அ.ரை:- ஆரம்— மாலை. கண்டிகை— உருத் திராக்கை. பாரம்—செயல்.

வேண்டும் ஆறு விருப்புறும் வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்
நீண்ட தொலபுக ழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன். 135

வி.ரை:- விரும்பியபடி ஆறு வகையான வேடம் தாங்குபவர்கள். தாண்டவப்பெருமான் நடராசன் பெரு மானின் ஒப்பற்ற தனித் தொண்டர்கள். நீண்ட நீங்காத பழம் புகழையுடைய இந்தச் சிவனடியார்களது தன்மையை இங்கு என்னவென்று வாழ்த்துவேன், என்னவென்று போற்றுவேன்.

அ.ரை:- ஆறு விருப்புறும் வேடத்தர்—இடத்துக் குத் தக்கவாறு ஆறு வகையான வேடம் தரிக்கும் சிவனடியார்கள். தாண்டவப் பெருமான்—நடராசர்.

இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்
அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம. 136

வி.ரை:- இத்தப் பெருந்தவத்தவர் பெருங் கூட்டத்தை எம் தலைவன் எல்லையில்லாப் புகழ்மிக்க ஆலால சுந்தரன் பாடியருளிய அழகிய திருத்தொண்டத் தொகையைத் தமிழில் மகிழ்ந்து பாடியபடி கூறுவோம்.

உ.ரை:- ஆலால சுந்தரன்—சுந்தரமூர்த்தி நாய னார். திருத்தொண்டத் தொகையே இந்நூலக்குப் பதிகம் என்பதாம்.

தடுத்தாட் கொண்ட புராணம்

திருக்கைலாயத்தில் அகண்ட பரிபூரண சச்சி தானந்த உருவாகிய பரமசிவனார், தமது அருட்சத்தியாகிய பார்வதி தேவியோடு வீற்றிருப்ப, அக்கடவுளுக்குத் திருத்தொண்டு செய்து வந்த ஆலால சுந்தரர், பார்வதி தேவியாரின் தோழியர் கமலினி, அணிந்திதை என்னும் மகளிர் மீது மோகம் கொண்டமைக்காகப் பரமசிவனால், இப்பூவுலகில் தோன்றி அம்மகளிரிருவரையும் முழுமையாக அனுபவித்து இன்பம் துய்த்து மகிழ்ந்திட இறைவன் பணித்ததின்படி, ஆலால சுந்தரர், சுந்தர ராகப் பூமியில் அவதரித்ததும், இறைவன் தான் கொடுத்த வாக்கின்படி சுந்தரனை ஆட்கொண்டதும் இப்பகுதியில் சிறப்பிக்கப்படுகிறது.

திருமுனைப் பாடி நாடு

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதி இழி மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு 137

வி.ரை :- கங்கை ஆற்றையும், பிறையையும், பாம்பையும், கொன்றையையும் முடிமீது சூடிய அழகிய கண்ணர், ஒரு ஓலைச் சுவடியைக் காட்டி ஆட்கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு, முகமாகிய குளிர்ந்த

நிலவின் இரு பக்கங்களிலும், கண்களாகிய அழகிய சிவந்த கயல் மீன்கள் ஓடிக் காதுகளைத் தாவும் மகளிர் நிறைந்த திருமுனைப் பாடி எனும் நாடு.

அ.ரை:- கடுக்கை — கொன்றை, அங்கணர்—சிவ பெருமான். ஓலைகாட்டி—அடிமை சாசனம் காட்டி. வதனம்—அழகு. குழைகள்—காதுகள்.

திருநாவலூர்

பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவத ரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்கள் நீடும் திருநாவ லூராம் அன்றே. 138

வி.ரை: நலம் பெருகும் அப்பெரிய திருநாட்டில் அழகிய வேதத்தின் சாரமாகிய சைவ சமயம் ஓங்க, சிவ பெருமான் அருளினால் சுந்தரர் அவதாரம் செய்யப் பொருந்திய தவம் செய்த வளமை மிக்கதும், வாய்மை குன்றாத திருமறையவர்கள் அந்தணர்கள் பெருகியது மான ஊர் திருநாவலூராம்.

அ.ரை:- மறைச் சைவம் — வேதசாரமாகிய சைவம். மருவிய—பொருந்திய. மறைவர்—அந்தணர்.

திரு அவதாரம்

மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னாருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருவவ தாரஞ் செய்தார் 139

வி ரை:- உமையம்மையைத் தனது இடதுபாகத்தில் கொண்ட சிவபெருமானுக்குப் பரம்பரை பரம்பரையாக அடிமை செய்யும் அந்தணர் குலத்துள் தோன்றி மேன்மையுடைய சடையனாருக்கும், குற்றமில்லாக் கற்பின் வாழ்க்கைத் துணைவி இசைஞானியாருக்கும் உலகின் தியவைநீங்கி உயர்வுபெற ஆலால சுந்தரர் இவ் வுலகில் அவதாரம் செய்தார்.

அ.ரை :- ஏதம்இல்—குற்றம் இல்லாத. மனை— இல்லம். வாழ்க்கைத்துணை. உய்ய—மேன்மையடைய.

நம்பியாரூரர் தேருட்டியது

தம்பிரான் அருளி னாலே தவத்தினால் மிக்கோர் போற்றும்
நம்பியா ரூரர் என்றே நாமமுஞ் சாத்தி மிக்க
ஐம்படைச் சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொன்நாண் அரையில் மினனத் தெருவில்தேர்
உருட்டு நாளில் 140

வீ.ரை :- சிவபெருமான் அருளினால் தவத்தில் சிறந்தவர்கள் போற்றும் நம்பியாரூரர் என்ற திருப்பெயர் சூட்டி ஐம்படை ஆபரணம், சதங்கை முதலிய அணி வித்து சுட்டி சாத்தி பொன்னாலான அரை நாண் கயிறு இடுப்பில் மின்னத்தெருவில் தேர் உருட்டி விளையாடும் நாளில்.

அ.ரை ;- நம்பி—அடவரில் சிறந்தவன், புருஷோத் தமன். ஐம்படை—ஐம்படைத்தாலி என்பர். திருமாலின் சங்கு, சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் ஆகிய ஐந்தின் வடிவாய் அமைந்த ஒரு ஆபரணம். சுட்டி—நெத்திச் சுட்டி.

நரசிங்க முனையர் மகன்மை கொண்டது

நரசிங்க முனையர் என்னும் நடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினால் மகன்மை கொண்டார். 141

வி.ரை:- அந்நாட்டை ஆண்டு வந்த நரசிங்க முனையார் என்னும் அரசர் குழந்தை விளையாடக் கண்டு சொல்லுதற்கரிய அன்பின் மிகுதியினால் குழந்தையை ஈன்றவர்களிடம் சென்று, முன்னே கலந்த நட்பினாலே "அரசிளங் குமரன் போன்று மகனை வளர்ப்போம், தாங்கள் பெற்ற குழந்தையைத் தந்திடுக" என வேண்டினர்.

அ.ரை:- பரவருங்—சொல்லுதற்கரிய. கூர—சிறக்க. பயந்தவர்—ஈன்றவர். விரவிய—நிலவிய. மகன்மை—மகனாகக் கொள்ள.

வளர்ந்து திருமணப் பருவம் எய்தியது

பெருமைசால் அரசர் காதல் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
வருமுறை மரபில் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி அளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். 142

வி.ரை ;- பெருமை மிக்க அரச குமாரனான பின்னும் தங்கள் பரம்பரை மரபின் முறையினில் வளர்ந்து மங்கலத்தைச் செய்யும் அழகிய வேதமுறைப் படி முப்புரிநூல் சாத்தி அளவில்லாத தொன்மையான கலைகள் பலவும் ஆய்ந்து கற்றுச் செல்வம் மிகுந்த

சிறப்பில் மிகுந்து சீர்மிகு திருமணப் பருவம் அடைந்தார்.

அ.ரை :- வைகி—நிலைபெற்று. முந்நூல்—முப்புரி நூல். மலி—மிகுந்த, மலிந்த

திருமணம் பேசியது

தந்தையார் சடைய னார்தந் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரும் மரபுக்கேற்ப
வந்ததொல் சிறப்பின் புத்தூர்ச் சடங்கவி மறையோன்
செந்திரு அனைய கன்னி மணத்திறஞ் செப்பிவிட்டார். 143

வி. ரை :- தந்தையாராகிய சடையனார் தனது ஒப்பற்ற ஒரே மகற்குச் சைவ பிராமணர் குலத்துள்ளாகத் தங்களது அரிய பெரிய மரபுக்கு ஏற்ப வந்த தொன்மையான சிறப்பினைபுடைய புத்தூரில் உள்ள சிவாச்சாரியார் சடங்கவி எனும் அந்தணனிடம் இலக்குமியை ஒத்த அழகிய கன்னியைத் திருமணம் பேசி முடிக்க ஆள் அனுப்பினார்.

அ. ரை :- செந்திரு அனைய—இலக்குமிபோன்று அழகிய பெண்.

பெண் தர இசைந்தது

குலமுதல் அறிவில் மிக்கோர் கோத்திர முறையும் தேர்ந்தோர்
நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்தான் ஆகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த பண்பினால் அன்பு நேர்ந்தான். 143

வி.ரை :- குலம் முதலாகச் சொல்லப்பட்டவர்களில் அறிவில் சிறந்தவர்களும், கோத்திரங்களின் முறைமை தெளிந்தவர்களும், நலம் பேணும் பெரியோர்கள் சொல்லப் பெண்ணின் தந்தை சிவாச்சாரியார் சடங்கவி அவர்கள் சொல்வதன் நன்மையை அறிந்து ஏற்றுக் கொண்டு மலர்ந்து முகத்தினராகி, மணம் செய்து வைக்கும் உண்மை பற்றிப் பலருடன் பேசி ஒத்த நலனும் அன்பும் கொண்டார்.

அ. ரை :- குலமுதல் கோத்திரமுறை—திருமணத்தின்போது முதலில் குலம் பற்றியும் பின்பு கோத்திரம் பற்றியும் பேசுவது மரபு, ஒத்த பண்பு—மனம் ஒத்த நிலையில்.

திருமண ஓலை விட்டது

மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர், வள்ளல்
தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்து நாள்
ஓலை விட்டார் 145

வி. ரை : சடங்கவி சிவாச்சாரியார் விருப்பம் தெரிவித்ததைக் கேட்டவர்கள், வள்ளல் நம்பி ஆரூராரைப் பெற்றவர்களிடம் சென்று சொன்ன பிறகு, மனத்தில் பெருமகிழ்ச்சி கொண்டு மணவினையை விரும்பி நடத்த மன்னன் விருப்பத்திற்கு ஏற்ப மணநாள் குறித்து ஓலை அனுப்பினார்.

அ. ரை :- மணவினை—திருமணம், உவந்து—விரும்பி, சாற்ற—செய்ய, சொல்ல, கொற்றவர்—

மன்னன், திருவுக்கு—மனவிருப்பத்துக்கு, ஓலை—திருமண அழைப்பிதழ், விட்டார்—அனுப்பினார், வெளியிட்டார்.

மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயல் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கோங்கலர் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து
கொண்டார். 146

வி. ரை :- மங்கல பொலியும்படி தீட்டப்பட்ட ஓலையை அழகிய கண்களையுடைய மகளிரும் ஆடவரும் வாங்கி ஒன்று சேர்ந்து மணம் கமழ் சோலைகள் மிகுந்த பழமையான புத்தூர் செல்ல எதிரே தாமரை மலர்போன்ற மகளிரும் ஆடவரும். பணிந்து பெற்றுக் கொண்டனர்.

அ. ரை :- ஈண்டி—கூடி, கூட்டமாகக் கூடி கோங்கு—மணம், குறுகினார்—சென்றடைந்தார்.

நீள்முளை சாத்தியது

மகிழ்ச்சியால் மனமீக் கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலர் ஆகி
இகழ்ச்சியொன் றானும் இன்றி ஏந்துபூ மாலைப்பந்தர்
நிகழ்ச்சியில் மைந்தர் ஈண்டி நீள்முளை
சாத்தி னார்கள். 147

வி. ரை :- மகிழ்ச்சிப் பெருக்கால் திருமணம்! திருமணம்! என்று மேலும் மேலும் அறிவித்து மங்கல கரமான காரியங்கள் யாவும் எல்லோரும் புகழ்ந்து போற்றும்படி அழகுடன் தோன்றச் செய்த பெருமை மிக்க தொழிலாளி என்றாகி, இகழ்ச்சி எதுவும் இன்றி

உயர்ந்த மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தலும் உள்ளக் கிளர்ச்சியால் ஆடவர் கூடி நவதானியம் முளைக்கச் செய்தனர்.

அ. ரை :- மண மீக் கூறி—திருமணம் என்று பல முறை அறிவித்தது. நிகழ்ச்சி—நெகிழ்ச்சி, மனக் கிளர்ச்சி. நீள்முளை சாத்தி—நவதானியம் முளைக்க வைக்கும் ஒரு சடங்கு.

காப்பு நாண் கட்டியது

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தோர் செய்யத்
துணைமலர்க் கோதைத் தாமச் சுரும்பணை தோளி னானைப்
புணர்மணத் திருநாள் முன்னாள் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன் நாண் காப்புச் சேர்ந்தார் 148

வி. ரை :- திருமணத்திற்கான செயல்கள் பெண்ணைப் பெற்றோர் செய்ய, வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை அணிந்த மென்மையான இரு தோள்களையுடைய நம்பி ஆரூரருக்குத் திருமணத்திற்கு முன் தினத்தில் நியமிக்கப்பட்ட சைவ நெறியினால் பெரிய முரசு ஒலிக்க சமாவர்த்தனம் செய்து, பசிய பொன்னாலான காப்புக் கயிறு கட்டினர்.

அ. ரை :- துணை மலர்—ஒரே வகையான இரு மலர், இருபுயங்கள், கோதை தாமம்—கோதையாகிய தாமம், மலர் மாலை, கோதை மலர் எனக் கொண்டு தாமம் மாலை எனப் பொருள் காண்க. சுரும்பு அணை—வண்டுகள் மொய்க்கும். பொருந்திய விதி—சைவ

சமய விதிமுறைகள், சமாவர்த்தனம் ரட்சாபந்தனம் முதலியன. பணைமுரசு—பெரிய முரசு, நாண்காப்பு—காப்பு நாண், காப்புக் கயிறு.

காலைக் கதிரவன் எழுந்தது

மாமறை விதிவ ழாமல் மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குல் மங்கலம் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம்
செய்தான். 149

வி. ரை :- வேதங்களில் விதிக்கப்பட்டுள்ளவைகள் வழுவாமல் திருமணச் சடங்குகள் செய்து, தூய்மையான மறையவர் வாழும் பழம்பெரிய ஊராகிய திருநாவலூரில் அந்த இரவில் மங்கல வாத்தியங்கள் பொங்கி முழங்கத் தேன் ததும்பும் மலர்களால் அமைக்கப்பட்ட மாலை அணிந்த மார்பன் நம்பி ஆரூராரின் திருமணக் கோலங் காணவேண்டும் என்று காமுற்ற மனத்தன் போன்று காலைக் கதிரவன் எழுந்தான்.

அ. ரை :- மாமறை விதி—வேத விதிமுறை, வழாமல்—வழுவாமல், நீங்காமல், தூமறை—புனித வேதம், கங்குல்—இரவு, துவன்றி—பொங்கி, தேமரு—தேன் தங்கும், தொடை—மாலை, காமுறு—மோகம் கொண்டு.

திருமணப் பந்தர் புகுந்தது

காலைசெய் வினைகள் முற்றிக் கணிதநூல் புலவர்
சொன்ன
வேலைவந் தணையா முன்னர் விதிமணக் கோலம்
கொள்வான்

நூலசைந் திலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சனச் சாலை புக்கான். 150

வி. ரை :- காலைக் கடன்களை முடித்துவிட்டுக் கணிதநூல் வல்லுநர்கள் வகுத்துச் சொன்ன முகூர்த்த நேரம் வந்திட முன்பு விதித்தபடி திருமணக் கோலம் பூண்டு பூநூல் அசைந்தாட விளங்கும் மார்பினையும், மனத்தில் வேத ஞானம் உடைய் மேலோனாகிய நம்பி ஆரூரர் மாலையும் கழுத்துமாகத் திருமஞ்சன நீராட்டும் பந்தலினுள் புகுந்தார்,

அ. ரை :- காலை செய்வினை—காலைக் கடன். கணிதநூல் புலவர்—சோதிடர், வேலை—முகூர்த்த நேரம், பூநூல்—பூணூல். நுணங்சிய கேள்வி—வேத ஞானம் சேர்ந்த, கேள்வி—வேதம் மாலை—தலை மாலை, தார்—மார்பில் அணியும் மாலை, கழுத்தில் அணியும் மாலை. மஞ்சனச் சாலை—திருமணப் பந்தல். மஞ்சல் நீராட்டுமிடம்.

மஞ்சன நீராட்டியது

வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத் தமைத்த பாங்கர் பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தனிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கினியான் மேனி எழில்பெற விளக்கினார்கள் 151

வி.ரை :- வாசனை கலந்த எண்ணெய் தேய்த்து மிகுந்த மணம் கலந்த மலர் நிறைந்த தூய நீர் உள்ள பாத்திரத்தின் பக்கத்து அமைக்கப்பட்டிருந்த மணிகள் பதித்த பெரிய கால்களையுடைய பொன் ஆசனத்தின் மீது அமர்த்தி மஞ்சள் நீராட்டி, ஈசனுக்கு இனியனான நம்பிக்கு அன்பால் உடல் அழகுபெறச் செய்தனர்.

அ.ரை :- பாசனம்-பாத்திரம். பாங்கர் — பக்கம். அணி—அழகு. அரிசன்ம்—மஞ்சள்.

குடுமி முடிந்தது

அகில் விரைத் தூபமேந்த அணிகொள்பட் டாடை சாத்தி
முகில் நுழை மதியம் போலக் கைவலான் முனைகை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி
ஆர்த்தான் 152

வி.ரை :-. அகிலின் மணம்கமழ் தூபம் காட்டி அழகிய பட்டாண்ட அணிவித்து நிலவின்மேல் மேகம் தவழுவது போன்று ஒப்பனை செய்வதில் வல்லவன் துணி கொண்டு குடுமியில் உள்ள ஈரத்தை உலர்த்தித் தன் சிவந்த கையின் நக நுனியில் கோதிவிட்டுப் போக்கி ஒளிவீசும் மணம் வீசும் குடுமி முடித்தான்.

அ.ரை :- அகில்—அகில் துண்டுகள். கைவலான்—ஒப்பனை செய்வதில் வல்லவன். உகிர்நூதி முறை—கை நகத்தால் கோதிவிட்டு உலர்த்துதல். சிகழி—சிகை, குடுமி.

முந்நூல் மின்னியது

தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்த சந்தனச்சேறாட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பானமறை முந்நூல் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான்.
153

வி.ரை :- தூய மணம் வீசும் பச்சைக் கர்ப்பூரப் பொடியுடன் அழகிய மலர்கள் நிறைந்த குளிர்ந்த பனி

நீர் சேர்த்த சந்தனக்குழம்பிடன், கஸ்தூரிக்குழம்பு சேர்த்த மற்ற நற்காரியங்களுக்கான கலவைகளையும் பூசி பாலும், வெட்கி மறையும் படியாக முப்புரி நூல் மின்னும்படி ஒப்பனைக்காரன் செய்தான்.

அ.ரை :- சுண்ணம்—பொடி. போது—மலர். மான மதச் சாந்து—கஸ்த்தூரிச்சாந்து. பால்மறை—பாலும் வெட்கித்தன் வெண்மைமறைந்து. பவித்திரம்—தூய்மை பூணூல். முந்நூல்—முப்புரி நூல்.

திருமணக் கோலம் கொண்டது

தூமலர்ப் பிணையல் மாலை துணர்இணர்க் கண்ணி
கோதை
தாமம்என் றினைய வேறு தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்த தூய வளர்ஒளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலம் கொண்டார்
154

வி.ரை :- தூய மலர்களின் பிணையலால் அமைக்கப்பட்ட மாலையுடன், கொத்துக் கொத்தான மலர்களால் அமைந்த கொண்டை மாலை, தாமம் என்று இவ்வாறு வேறு வேறான வகைகளாக அமைத்து அணிவித்து, இருளை நீக்கி, ஒளி வீசும் தூய பெரிய மாணிக்க மணிகள் பதித்த ஆபரணங்களை அணிவித்து மிகவும் புகழ்பெற்ற அணிகலன்கள் பூட்டி நல்ல திருமணக்கோலம் அடைந்தார்.

அ.ரை:- பிணையல்—பின்னப்பட்டது. துணர் இணர்க்கண்ணி—கொத்துக்கொத்தாக உள்ள மலர்களை அமைத்த தலைமாலை. தாமம்—ஒருவகையான மலரலங்காரம். கோதை—மாலை. நாமநீள்கலன்—புகழ் பெற்ற அணிகலன்கள்.

புரவிமேல் அமர்ந்து போந்தது

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவுகொள்ள நம்பியா ரூரர், நாதன்
தன்னடி மனத்துள் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேல் கொண்டு
போந்தார். 55

வி.ரை :- மன்னவனுடைய சிறப்புக்களுடன் வைதிக சைவ சமயச் சிறப்புக்களும் எங்கும் மிகுதியாக நல்ல அந்நகர் விழாக்கோலம் கொள்ள, நம்பி ஆரூரர் இறைவன் திருவடித் தாமரைகளை மனத்துள் துதித்துத் தகுந்த திரிநீறு பூசிப் பொன்னால் அலங்காரிக்கப்பட்ட நல்ல சுப சுழிகள் உள்ள குதிரை மேலமர்ந்து சென்றார்.

உ.ரை:- மன்னவர் திரு—மன்னனைச் சுற்றியுள்ள தேர், யானை, குதிரை, படை, குடை, முரசு முதலியன. வைதிகத்திரு—வைதிக ஆடை அலங்காரங்கள். யோகப் புரவி—சுப சுழியுள்ள குதிரை.

இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் வண்டு போற்ற நான்மறை ஒலியின் ஓங்க
வியந்துயிர் விரும்ப வந்து விரவினர்க்கின்பஞ் செய்தே
உயர்ந்தவா கனயா னங்கள் மிசைகொண்டார் உழையர்
ஆனார் 156

வி.ரை:- எங்கும் வாத்திய ஒலி முழங்கப்போற்றும் ஒலி மேலோங்க, மகளிர் விரும்பி பல்லாண்டு பாட நான்கு வேதங்களின் ஒலியினிது ஓங்க உலகம் வியந்து வந்து திரண்டவர்களுக்கு இன்பம் சேர்க்கும் உயர்ந்த வாகனம் சிவிகைகள் பக்கத்தில் உள்ளவர்கள், சுற்றத்தார் முதலியோர் கொண்டனர்.

அ.ரை :. இயம்—வாத்தியங்கள். துவைப்ப—அடித் தொலிக்க. ஏத்தொலி—போற்றும் ஒலி. விரவினர்—திரண்டிருந்தவர். யானங்கள்—பல்லக்கு, சிவிகை. உமையனார்—பக்கத்தில் இருந்தவர். உற்றவர் சுற்றமும்.

கொங்கை தாங்கிய மங்கையர் கூட்டம்

மங்கல கீத நாத மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துவன்றிச் சூதும்
பங்கய முகையும் சாய்த்துப் பணைத்தெழுந்தணியில் மிக்க
குங்கும முலையி னாரும் பரந்தெழு கொள்கைத்தாகி 157

வி.ரை:- வேதம் ஓதும் அந்தணர்களின் கூட்டத் தோடு மங்கல வாத்தியங்களின் ஓசையும், மாலைகளும் மணமும் எங்கும் சூழ்ந்து ஆடவரும் நெருங்கிச் சூழ்ந்து தாமரை அரும்பும் தோற்கச் செய்யும்படி பருத்து எழுந்த அழகில் சிறந்த குங்குமம் பூசிய முலைகளை யுடைய மகளிரும் எங்கு நிறைந்தவராகி.

அ.ரை:- குழாங்கள்—கூட்டம். தொங்கல்—மாலை விரை—வாசம். மைந்தர்—ஆடவர். துவன்றி–நெருங்கி சூதும்—சூழும். பங்கய முகை—தாமரையின் மொக்கு. சாய்த்து–வீழ்த்தி, தோற்கடித்து, பணைத்து—பருத்து. அணியில் மிக்க—அழகுமிக்க. பரந்தெழுங்கொள்கை—எங்கும் பரவி, நிரம்பியிருந்த.

திருமணக் கூட்டம் எழுந்த காட்சி

அருங்கடி எழுந்த போழ்தின் ஆர்த்தவெள் வளைகளாலும்
இருங்குழை மகரத்தாலும் இலங்கொளி மணிகளாலும்

நெருங்கிய பீலிச் சோலை நீல்நிறத் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியில் பொலிந்த
தன்றே 158

வி.ரை:- திருமணக்கூட்டம் எழுந்தபோது ஒலித்த வெண்சங்குகளாலும், பெரிய மகர குண்டலங்களாலும் விளங்கும் ஒளிவீசும் இரத்தினாபரணங்களாலும், நெருங்கிய அலங்காரத் தொங்கல்களாலும், நீல நிறத்து வரிசைகளாலும் கருங்கடல் எழுந்தது போன்று காட்சி யளித்துப் பொலிந்தது.

அ.ரை:- அருங்கடி—திருமணக்கூட்டம். வெள் வளை—மகளிர் கை வளையல்கள் சங்குக்கும், இருங் குழை மகரம்—ஆடவர் அணிந்த மகர குண்டலங்கள், மகர மீன்களுக்கும், இலங்கு ஒளி மணிகள்—முத்துக் களுக்கும், அரங்கத்தாலும்—வரிசையாலும் சிலேடை.

மணம் வந்த புத்தூர்

நெருங்குதூ ரியங்கள் ஏங்க ரிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிகள்
ஆட
அருங்கடி மணம்வந் தெய்த அன்றுதொட் டென்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூர் ஆமால்.
159

வி.ரை:- நெருக்கமாக வாத்தியங்கள் ஒலிக்க, வரிசையாக சாமரைகள் வீசு, பெரிய குடைகள் நெருங்கிச்செல்ல, நெருங்கிய மலர்க்கொடிகள் ஆட, திருமணக் கூட்டம் வந்து சேர, அன்று தொட்டு என்றும் அன்பில் வரும் குல புத்தூர் அந்தணர்கட்கு

மணமவந்த புத்தூர் ஆனது திருமணம் நிகழவில்லை என்றபடி.

அ ரை:- தூரியம்—வாத்தியம். நிரைத்த — வரிசையாக அமைந்த — மிடைந்து — நெருங்கி. பிணங்கு நெருங்கி. மணம் வந்த புத்தூர் — மணம் வந்தது. திருமணம் நிகழவில்லை என்பதை உணர்த்துகிறார்.

மணம் எதிர் கொள்ள வந்தவர்

நிறைகுடம் தூபம் தீபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி
நறைமலர் அறுகு சுண்ணம் கூறும் பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம் எதிர் கொள்ள
வந்தார். 160

வி.ரை :- நிறைகுடம், வாசனை தூபம், தீபம், மற்று நெருக்கமான நவதானியங்கள் ஏந்திக் கொண்டு மணம் வீசும் மலர், அறுகம்புல், பொடி, நல்ல பொரியும் பலவும் வீசி, பனிநீர் மிகுந்த சந்தனக் கலவையினின்றும் தெளிந்த நீரைத் தெளித்து அந்தணர்கள் வீதியில் மடவார் அந்தப் பெண்ணுக்கும் நம்பி ஆருரருக்கும் திருமணம் செய்விக்கத் தலைப்பட்டார்.

அ-ரை :- பாலிகை—நவதானியங்கள். மூளைக்க வைத்தது., நரைமலர்—வாசனையுடைய மலர். அறுகு—அறுகம்புல். சுண்ணம்—பொடி. உறை மலி—உறைத்தல். சாந்தின் உறுபுனல்—சாந்திலிருந்தும் தெளிந்த நீர். மடவார்—பெண்கள். வள்ளல்—சுந்தரர்.

பாடுவாரும் ஆடுவாரும்

"கண்கள் எண் ணிலாத வேண்டும் காளையைக் காண"
என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை" என்பார்

மண்களி கூர வந்த மணம் கண்டு வாழ்ந்தோம்'' என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடுவார்கள் 161

வி.ரை :- நம்பி ஆரூராரைக் காணக் ''கண்கள் கோடி வேண்டும்'' என்பார். பெண்களில் பெறுதற்கு அரிய சிறப்பு அடைய என்ன நோன்பு சடங்கவி பேதை நோற்றாள் என்பார் சிலர். இம்மண்ணில் பிறந்ததின் பேறு இந்தத் திருமணங் கண்டு பெற்றோம் என்பார் சிலர்; சிலர். சிறந்த இசையுடன் பாடல்பாடி மகிழ்ந்து ஆடுவார்.

அ-ரை :- காளை—நம்பிஆருரர். பேதை—பெண். நோற்றாள்—தவம் இருந்தாள். மண்களிகூரவந்த—இம்மண்ணில் பிறந்ததன். வாழ்ந்தோம் — பேறு பெற்றோம்.

''ஆண்டகை அருளின் நோக்கின் வெள்ளத்துள்
அலைந்தோம்'' என்பார்
''தாண்டிய பரியம் நம்பால் தகுதியில் கடந்த'' தென்பார்
பூண்தயங் கிவனே காணும் புண்ணியமூர்த்தி'' என்பார்
ஈண்டிய மடவார் கூட்டம் இன்னன இசைப்பச்
சென்றார். 162

வி-ரை :- ஆண்தகை இவர் அருள் நோக்காகிய வெள்ளத்தில் சிக்கி அலைந்தோம் என்பார் சிலர். பாய்ந்து செல்லும் குதிரையும் நமக்காக நடந்தது என்பர் சிலர். ஆபரணங்களுக்கு அழகு சேர்க்கும் புண்ணியமூர்த்தி காணும் என்பர் சிலர், ஒன்று கூடிய மகளிர் கூட்டம் இவ்வாறு பேசிச் சென்றனர்.

அ-ரை :- ஆண்தகை—நம்பி ஆரூரர். வெள்ளத்துள் அலைந்தோம் — அருள் வெள்ளத்துள் சிக்கி அலைந்தோம். தாண்டிய பரி—பாயும் குதிரை.

தகுதியால்—நமக்காக. பூண் தயங்த இவன்—பூணுக்கு அழகு சேர்க்கும் இவன். ஈண்டி—கூடிய. மடவார்—பெண்கள். இசைப்ப—சொல்ல.

வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்று வெண் சங்கம் எங்கும்
பெருமழைக் குலத்தின் ஆர்ப்பப் பரிமிசை இழிந்து பேணும்
ஒருமணத் திறத்தின் ஆங்கு நிகழ்ந்தது மொழிவேன்
உய்ந்தேன் 163

வி-ரை :- திருமணக் கோலத்தில் வரும் எங்கள் வள்ளலாரின் இனிய மணம் வீசும் திருமணப் பந்தர் முன்பு பெரிய மழை மேகங்கள் இடித்து முழங்குவது போன்று சங்குகள் எங்கும் ஒலிக்கக் குதிரை மீதிருந்து இறங்கி நடக்க இருக்கும் ஒப்பற்ற திருமணத்தின் தன்மை ஆங்கு நடந்தவாறு மேன்மைபெறக் கூறுவேன். இது புலவர் கூற்று.

அ-ரை :- தெள்ளும்—இனிய. மழைக்குலம்—மேகக் கூட்டம். பரி—குதிரை. இழிந்து—இறங்கி. பேணும்—நடக்கும். ஒரு மணத் திறம்—ஒப்பற்ற திருமணத்தின் சிறப்பு. தன்மை. உய்ந்தேன்—மேன்மை பெற்றேன்.

மாலும் அயனும் அறியா இறைவன் வந்தது

ஆலுமறை சூழ்கயிலை யின்கண் அருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற எழுந்து மிகு கீழுற அகழ்ந்து
மாலும் அயனுக்கும் அரி யார் ஒருவர் வந்தார் 164

வி.ரை :- வேதங்கள் முழங்கும் கயிலையில் அருள் கூர்ந்து சொன்னபடி தடுத்தாட்கொள்ளும் நோக்குடன்

மாலும் பிரம்மனும் வான்வழி எழுந்தும் மிகவும் கீழே தோண்டிச் சென்றும் கண்டறியாத ஒருவர் அங்கு வந்தார்.

அ-ரை :- ஆலும்—ஒலிக்கும். சாலும் மொழி—சொன்ன சொல். மேலுற எழுந்தது—பிரம்மன். கீழுற அகழ்ந்தது—மால்.

இறைவனின் அந்தணர் கோலம்

கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய நுதல்புனித நீறு பொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்து கதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. 165

வி.ரை :- ஒளிவீசும் நெற்றிக் கண்ணை மறைத்த வெண்பட்டு போன்று. புண்ணியர் சிவபெருமான் நெற்றியில் பூசப்பட்ட புனித நீறு அழகுடன் பொலிய குளிர்ந்த பிறை நிலவு முழு நிலவாகி ஒலி பொழிவது போன்று வெண்மையான நரை முடி தாழ்ந்து சுழன்று தொங்க வந்தார்.

அ-ரை :- கண் — நெற்றிக்கண். வெண்படம்—வெண்பட்டு. மதி முதிர்ந்து—பிறை வளர்ந்து. கதிர் சாய்வதென — நெற்கதிர் சாய்வது போன்று. வெண்ணரை—வெண்மையான நரைமுடி. சழங்க—தளர்ந்தாட.

காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பின் அசை நூலினொடு தோளின்

மீதுபுனை உத்தரிய வெண்துகில் நுடங்க
ஆதப மறைக்குடை அணிக்கரம் விளங்க. 166

வி.ரை :- காதணி, கழுத்தணி, நன்றாக வடித்தக் குழை. மார்பில அசைந்தாடும் முப்புரி நூலுடன் தாழ்ந்து தொங்கும் ஒளிவீசும் உருத்திராக்க மணி மாலை. தோளின் மீது போடப்பட்ட மேலாடை இடுப்பில் சுற்றப்பட்ட வெண் ஆடை அசைய வெய்யிலை மறைக்கக் குடை அழகிய கையில் விளங்க.

அ-ரை :- காதில்லணி — காதணி. கண்டிகை—கழுத்தில் அணியும் பொன் மாலை. சோதி மணி—ஒளி வீசும் உருத்திராக்கம். உத்தரியம் — மேலாடை நுடங்க—அசைய. ஆதபம்—வெய்யில். அணிக்கரம்—அழகிய கை.

பண்டிசரி கோவண உடைப்பழைமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்துகில் உடனகுசை முடிந்து விடுவேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடை கொள்ள 167

வி.ரை :- வயிறு தொங்க அணியும் கோவண ஆடை பழம்பெருமை கூர உடுத்த நழுவும் உடை அழகு பொங்கும் வெண் ஆடையுடன் தருப்பைக் கட்டு மூங்கில் தண்டு ஒருகையில் கொண்டு கால் தள்ளாட நடை போட்டு வந்தார்.

அ-ரை :- பண்டி—வயிறு. சழுங்கலுடை—நழுவும் உடை. ஆர்ந்தழகு—நிறைந்த அழகு. குசை—தருப்பை. வேணும்—மூங்கில். கழல்—கால்

மொய்த்துவளர் பேர் அழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவமேயோ

மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடம்என ஐயமுற எய்தி 163

வி.ரை :- இளமை முதல் பொருந்தி வளர்ந்த பேரழகு தான் முதிர்ந்து இந்த வடிவானதோ! அத்தகைய முதுமை எனும் அதன் வடிவம் இதுதானோ! உண்மை நெறியான வைதிகம் விளைவித்த முதற்கரு இதுவோ? இத்தகைய வேடம் என்று ஐயம் எழ வந்தடைந்து.

அ.ரை:- படிவம்—வடிவம், முதல்—முதல் குரு. சிவபெருமான.

"இந்த மொழி கேண்மின்" என்றது

வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பிஎதிர் பன்னுசபை முன்னின்று
"இந்தமொழி கேண்மின் எதிர் யாவர்களும்" என்றான்
முந்தைமறை ஆயிரம் மொழிந்ததிரு வாயன். 169

வி.ரை:- வயோதிக அந்தணர் உருவில் வந்த இறைவன் வேத விதிப்படி திருமணம் நடத்தத் தொடங்கும் பந்தலில் நம்பி ஆரூரர் எதிரின் வந்திருந்த சபை முன்நின்று முன்பு வேதம் ஆயிரம் மொழிந்த திருவாயை யுடைய இறைவன் "எதிரில் உள்ள யாவரும் நான் சொல்வதைக் கேளுங்கள்" என்றார்.

அ.ரை:- பன்னுசபை—திருமணக் கூட்டம். மறை ஆயிரம்—பல்லாயிரம் மறைகள்

"நீர் மொழிவ மொழி" என்றது

என்றுரைசெய் அந்தணனை எண்ணில்மறை யோரும்
மன்றல்வினை மங்கலம் மங்கலனை யானும்

"நன்றுமது நல்வரவு நங்கள்தவம் என்றே
நின்றதிவண் நீர்மொழிமின் நீர்மொழிவ" தென்றார். 170

வி.ரை:- என்று சொன்ன அந்தணனை ஆங்கிருந்த எண்ணற்ற அந்தணர்களும் திருமணம் செய்து கொள்ளும் சிங்கம் போன்ற நம்பியும், "நன்று. உமது வரவு நாங்கள் செய்த தவப்பயன். இங்கு நீர் வந்து நின்றதன் காரணம் யாது? நீர் சொல்ல வேண்டியதைச் சொல்லும்" என்றனர்.

அ.ரை:- மன்றல்—திருமணம். மடங்கல் அனையான்—சிங்கம் போன்றவன. நங்கள் தவம்—நாங்கள் செய்த தவப்பயன்.

வந்த அந்தணன் வழக்குரைத்தது

பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
"என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீ முயல்தி" என்றான். 171

வி.ரை:- சடையப்பர் நாவலூரில் அவதரித்த பெருந்தகை நம்பியாரூராரை நோக்கி, "நம்இருவருக்கு மிடையே நேர்ந்த விருப்பினால் முன்பு ஏற்பட்ட ஒரு வழக்கினை முடித்த பின்பே உன்னுடைய திருமணத்தை நீ முயன்று செய்வாய்" என்றார்.

அ.ரை:- பிஞ்ஞகன்— சடையன் சிவபெருமான். பாவலர்—நாவலூரில் அவதரித்தவர், இசைவால்—விருப்பால், வேள்வி—திருமணம். முயல்—நடத்து, முயன்று செய்.

"வழக்கு முடிந்த பின் வதுவை செய்வேன்" என்றது

நெற்றிவிழி யான்மொழிய நின்றநிகர் இல்லான்
"உற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலது யான்வதுவை செய்யேன்
முற்றஇது சொல்லு"கென எல்லைமுடி வில்லான். 172

வி.ரை:- நடக்கவிருக்கும் திருமணம் என்ன ஆகப் போகிறது என்பதை அறியாத தன்னிகர் இல்லா நம்பியும் நெற்றிக் கண்ணனார் சொற்கேட்டு "உமக்கும் எமக்கும் ஒரு வழக்கு உள்ளது என்று நீ சொன்னால் அந்த வழக்குத் தீர்ந்த பின்பே நான் திருமணம் செய்து கொள்வேன்" என்றுரைத்தார்.

அ.ரை:- நெற்றி விழியான்—சிவபெருமான், நின்ற நிகர் இல்லான்—நம்பி ஆருரன். வதுவை—திருமணம். எல்லை முடிவில்லான்—முடிவை அறியாதவன். இதனை. ஆதியந்தம் இல்லாத எனக் காணினுமாம்.

"நாவலூரன் எனக்கடிமை" என்றது

ஆவதிது கேண்மின்மறை யோர்! என் அடி யான்இந்
நாவலர்நகர் ஊரன் இது நான்மொழிவ" தென்றான்
தேவரையும் மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான் 173

வி.ரை:- திருமால், அயன் முதலாகத் திருவிற் சிறந்த யாவரையும் தனக்கு அடிமையாக உடைய எம் இறைவன் சிவபெருமான் "அந்தணர்களே! உண்மையிது கேளுங்கள். இந்த நாவலூரன் என் அடிமை இது நான் சொல்லும் வழக்கு" என்றார்.

அ.ரை:- ஆவதிது—அறியத்தக்கது. உண்மையானது நான் மொழிவ—நான் சொல்லும் வழக்கு. திருவின் மிக்கோர்—திருவிற் சிறந்தோர். திரு நீங்கலாக எனக் காணினுமாம்.

கேட்டவர் வெகுண்டு நகைத்தது

என்றான் இறையோன் அதுகேட்டவர் எம் மருங்கும்
நின்றார் இருந்தார் "இவன் என்நினைந் தான்கொல்" என்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார் திருநாவ லூரர்
நன்றால் மறையோன் மொழி" என்றெதிர் நோக்கி நக்கார். 174

வி.ரை:- திருமணப் பந்தலில் எப்பக்கமும் இருந்தவர்களும் நின்றிருந்தவரும் இறைவன் சொற் கேட்டு "இவன் என்ன நினைத்தான்" என்று வெளியே சென்றனர் சிலர் சினந்து சிரித்தனர். திருநாவலூரர். "இந்த பிராமணன் சொல்வது நன்றாக இருக்கிறது!' என்று இறைவன் முன் நின்று நகைத்தார்.

அ.ரை:- எம்மருங்கும்—எப்பக்கமும், நன்றால்—நன்றாக இருக்கிறது. இது ஒரு இகழ்ச்சிச் சொல்.

"உன் பாட்டன் தந்த ஓலை" இது எனக்காட்டல்

நக்கார் முகநோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரிகத்துகில் தாங்கி மேற் சென்று
"அக்காலம்உன் தந்தை தன்தந்தை ஆள் ஓலை ஈதால்
இக்கா ரியத்தை இன்றுநீ சிரித்ததென் ஏடா" என்ன 175

வி.ரை:- நகுவார் முகம் நோக்கி நடுக்குற்றுத் தள்ளாடி, யாவர்க்கும் மேலோனாகிய இறைவன்,

நழுவும் மேலாடையைத் தூக்கி மேல் போர்த்தி. அக்காலத்தில் உன் பாட்டன் எழுதித் தந்த அடிமை ஓலை இது. இதனை இன்று நீ கண்டு சிரித்தது என்ன ஏடா'' என்றார்.

அ.ரை:- நக்கார்—சிரித்தார், நுடங்கி—தள்ளாடி, வளைந்து. தரிகத்துகில்—நழுவும் மேலாடை. அக்காலம்—முன் ஒரு காலத்தில். ஆள் ஓலை—அடிமை சாசனம் ஈதால்— இதுவாகும். ஏடா— ஏன்னடா அடிமை.

''மறையோய்! நீ பித்தனோ'' என்றது

மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
''ஆசில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமை ஆதல்
பேசஇன் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோய்'
என்றார். 176

வி.ரை:- குற்றமற்ற மரபில் தோன்றிய வள்ளல் நம்பியாரூர், கைலாயத்தில் முன்பு இறைவனுக்கு அடிமை செய்த தன் அன்பு மேலீட்டால் மனம் நெகிழ்ச்சியடைந்து நகுதல் நீத்து வேதியராகிய இறைவனை நோக்கி, குற்றமற்ற அந்தணர்கள் வேறு ஒரு அந்தணருக்கு அடிமை எனும் பேச்சை இன்று உன் மூலம் கேட்டோம். அந்தணனே? நீ என்ன பித்தனோ? என்றார்.

அ.ரை.- மான்—குற்றம். வள்ளல்—நாவலூரர். ஆசு இல்—குற்றமற்ற. பித்தன் பைத்தியக்காரன்.

"வித்தகம் பேசாது பணிசெய்க" என்றது

பித்தனும் ஆகப் பின்னும பேயனும் ஆக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னால் யாதும்மற் றவற்றால்
நாணேன்
அத்தனைக் கென்னை ஒன்றும் அறிந்திலை யாகில் நின்று
வித்தகம் பேச வேண்டாம் பணிசெய வேண்டும்" என்றான். 177

வி.ரை:- "பித்தனே ஆகுக மற்றும் பேயனே ஆகுக நீ இன்று எத்தனை தீயது சொன்னாலும் அவற்றால் நான் எந்த விதத்திலும் நாணமடையேன். இத்தனைக்கும் என்னை நீ ஒன்றும் அறியவில்லையானால், வித்தாரம் பேசிக் கொண்டிருக்க வேண்டாம் எனக்கு அடிமை செய்ய வேண்டும்" என்றார்.

அ.ரை:- யாதும்—எவ்வகையிலும். நாணம்—வெட்கம். வித்தகம்—வித்தாரம், சிறு பிள்ளைகள் பேசும் பேச்சு.

"ஓலை காட்டுக" என்றது

"கண்டதோர் வடிவால் உள்ளங் காதல்செய் துருகா நிற்கும்
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும்
உண்டொராள் ஓலை என்னும் அதன்உண்மை அறிவேன்"
என்று
தொண்டனார் ஓலை காட்டு கென்றனர் துணைவ னாரை 178

வி.ரை :- இறைவன் அந்தணர் வடிவம் கொண்டு வந்தமையால் அந்தத் தோற்றத்தைக் கண்டு அன்பு கொண்டு மனம் உருகியும், அவர் சொன்ன பைத்தியக்

காரத்தனமான சொல் கோபத்தை மூட்ட, என்ன செய்வதென்று சிந்தித்து அடிமை சாசனம் என்பது ஒன்று எழுதப்பட்டிருந்தால் அதன் உண்மை அறிந்து கொள்வது நலம் எனக்கருதிய நாவாலூரர் ''ஓலை காட்டுக'' என்று தனது உயிருக்குத் துணைபுரியவந்த அந்தணரைப் பார்த்துக் கேட்டார்.

அ-ரை :- கண்டதோர் வடிவு—அந்தணர் உருவம், கொண்ட கோலம். பித்த வார்த்தை—அடிமை என்ற சொல். வடிவம் அன்பு சேர்க்க, வார்த்தை சின முட்டியது. தொண்டனார்—நம்பியாரூரர்.

ஆவணம் பறிக்கத் தொடர்ந்தது

''ஓலைகாட்''டென்று நம்பி உரைக்க ''நீ ஓலை காணற்
பாலையோ அவை முன் காட்டப் பணிசெயற் பாலை'' என்ற
வேலையில் நாவ லூரர் வெகுண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் தொடரா தானை வலிந்துபின் தொடர லுற்றார்
179

வி.ரை :- ''ஓலை காட்டுக'' என்று நம்பி உரைக்க நீ ஓலை காண்பதற்குத் தகுதியுடையனையோ! அவை முன் காட்டுகிறேன். உன் வேலை பணி செய்து கிடப்பது'' என்றுரைக்க, நாவலூரரும் தன் சினத்தை அடக்க மாட்டாமையால், மாலும் அயனும் தொடர்ந்து செல்ல முடியாத இறைவனை விரைந்து சென்று பறிக்க வருவது கண்டு அவர் ஓட இவர் பின் தொடர்ந்தார்.

அ.ரை ;- காணற் பாலையோ—அடிமைக்கு ஓலை காணும் தகுதி உடையதோ? பணிசெயற்பாலை—பணி செய்தல் உன் தகுதி. வலிந்து பின் தொடர—நாவலூரர்

தன்னை நோக்க வருவது கண்ட இறைவன் மெதுவாக நகர்வது கண்ட நம்பி அவரைப் பின்தொடர்ந்தார் என்றபடி-

ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக் கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்றார் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார் 180

வி-ரை :- அடிமை ஓலையைப் பறிக்கச் சென்ற போது, அந்தணரும் அத்திருமணப் பந்தலில் ஓடிடக் கடிதுபின் தொடர்ந்து ஓடினார். மலர் போன்ற மென்மையான அழகுடையவரை அடைந்தவராகிய நம்பி அவரல்லாமல் முப்புரங்களையும் அழித்த அம்பு தாங்கி மேரு எனும் வில்லையுடையவரை வேறு யார் தான் தொடர வல்லார்.

அ.ரை :- ஆவணம்—அடிமை சாசனம். காவணம்-திருமணப் பந்தல், பூவணம்—மலர். போன்ற அழகு. திருப்பூவணத்து எழுந்தருளிய பிரான் எனினுமாம். ஏவணம்—அம்பு.

ஓலையைப் பிடுங்கிக் கிழித்தது

கறைசுளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும் ஆள் ஓலை வாங்கி
அறைகழல் அண்ணல் ''ஆளாய் அந்தணர் செய்தல் என்ன
முறை ''எனக்கீறி யிட்டார் முறையிட்டான் முடிவி லாதான் 181

வி.ரை :- முன்பு வேதங்கள் மலர்ப்பாதம் பற்றிப் போற்றி நின்ற இறைவனைத் தொடர்ந்து சென்று

ஆளுகைக்கு எழுதப்பட்டிருக்கும் ஓலையை வாங்கி, ஒலிக்கும் வீரக்கழல்கள் அணிந்த நாவலூரர், "அந்தணன் அடிமை செய்தல் என்பது என்ன முறை" என்று ஓலையைக் கிழித்தெறிய இறைவன் சபையில் முறையிட்டான்.

அ.ரை :- எழுதும் ஆள் ஓலை—ஆளுகைக்கு என்று எழுதப்பட்ட ஓலை. அறைகழல்—ஒலிக்கு கழல். ஆளாய்—அடிமையாய் கீறி—கிழித்து.

"நீர் எங்குளீர் செப்பும்" என்றது

அருமறை முறையிட் டின்னும் அறிவதற் கரியான் பற்றி
ஒருமுறை முறையோ என்ன உழைநின்றார் விலக்கி "இந்தப்
பெருமுறை உலகில் இல்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீர் எங்குளீர் செப்பும்" என்றார் 182

வி.ரை :- வேதங்கள் முறையிட்டும் இன்னமும் அறிவதற்கு அரியான் நம்பி ஆரூரானைப் பிடித்துக் கொள்ள இத்தகைய ஒரு முறைபானது முறையாகுமோ என்று குழுமியிருந்த அந்தணர்கள் அவர்கள் இருவரையும் விலக்கி, நீர் சொல்லும் பெருமுறை அதாவது ஒரு அந்தணனை அடிமை கொள்வதென்பது உலகில் இல்லாத நெறி. இதனைக் கொண்டு சண்டையிடும் திருமுறை முனிவரே. நீர் எங்கு குடியிருக்கிறீர்? சொல்லும்" என்றனர்.

அ-ரை :- அருமறை முறையிட்டு — இறைவன் முறையிட்டு, வேத நாயகன் முறையிட்டு. பற்றி—நம்பியாரூரானைப்பற்றி. ஒரு முறை முறையோ—இத்தகைய ஒரு முறைமையானது முறையான செயலோ.

உழை நின்றார்—அக்கம்பக்கம் இருந்தவர். பெருமுறை—இறைவன் சொல்லும் பெருமுறை, அந்தணனை அடிமை கொள்வது என்பது இல்லாத ஒன்று ஆதலின் பெருமுறையானது. பிணங்கு—சண்டை.

''திருவெண்ணெய் நல்லூர்'' என்றது

என்றலும் நின்ற ஐயர் ''இங்குளேன் இருப்புஞ் சேய
தன்றிந்த வெண்ணெய் நல்லூர், அதுநிற்க, அறத்தா றின்றி
வன்திறல் செய்தென் கையில் ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை''
என்றான் 183

விரை :- என்று கூற நின்று இருந்த ஐயர், ''இங்கு இப்பொழுது இருக்கின்றேன். இருக்கும் இடமும் வெகு தூர மன்று திருவெண்ணெய் நல்லூர். அது இருக்கட்டும். அறத்தின வழிமுறையின்றி இவன் தன் வலிமையைப் பயன்படுத்தி என் கையில் இருந்த ஆவணத்தைப் பிடுங்கிக் கிழித்துத் தானே அடிமை என்பதை நிருபித்தான்'' என்றனர்.

அ.ரை :- ஐயர்—சிவபெருமான். இருப்பு — குடியிருக்குமிடம். சேயது—தூரம். வன்திறல்—பலாத்காரம். நிரப்பினான்—நிருபித்தனன்.

''திருவெண்ணெய் நல்லூர் போதாய்'' என்றது

குழைமறை காதி னானைக்கோதில்ஆ ரூரர் நோக்கிப்
''பழையமன் றாடி போலும் இவன்'' என்று பண்பில்
மிக்க

விழைவுறு மனமும் பொங்க ''வெண்ணெய்நல்
லூராயேல் உன்
பிழைநெறி வழக்கை ஆங்கே பேசநீ போதாய்'' என்றார்
184

வி.ரை :- குண்டலத்தை மறைத்து வந்த காதை யுடைய இறைவனைக் குற்றமற்ற ஆரூரர் நோக்கி, ''வழக்காடுவதில் பழம் பெருச்சாலி போலும் இவன்'' என்று குணத்தில் மிக்க விருப்பம் மிக்க மனம் பொங்க ''திருவெண்ணெய் நல்லூரானால் உன் பிழை நெறி யான வழக்கை அங்கேயே பேச நீ வருவாய்'' என்றார்.

அ.ரை :- குழை—காதில் அணியும் குண்டலம். கோது இல்—குற்றம் இல்லா பழைய மன்று ஆடி—பழைய மன்றில் ஆடும் இறைவன், வழக்காடுவதில் வல்ல. விழைவுறு மனம்—விரும்பும் மனம். பிழைநெறி—அந்தணன் அடிமை எனும் பிழை நெறி. போதாய்—வருவாய், போவோம் வருவாய்.

''மூல ஓலை காட்டி அடிமை சாதிப்பன்'' என்றது

வேதியன் அதனைக்கேட்டு ''வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினும் நன்று மற்றப் புனிதநான் மறையோர் முன்னர்
ஆதியில் மூல வோலை காட்டிநீ அடிமையாதல்
சாதிப்பன் என்று முன்னே தண்டுமுன் தாங்கிச் சென்றான்
185

வி.ரை :- வேதியன் அதைக் கேட்டு வெண்ணெய் நல்லூரில் நீ சென்றாலும் நன்று. அங்குள்ள புனித அந்தணர்களின் முன்னால் ஆதியில் மூல ஓலையைக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேன்''

என்று சொல்லிக்கொண்டே தண்டை ஊன்றிக் கொண்டு சென்றார்.

அ.ரை :- போதினும் — சென்றாலும். ஆதியில் — ஆதியில், கைலாயத்தில் நடந்தது. தண்டு—ஊன்று கோல்.

வெண்ணெய் நல்லூர் சென்றது

செல்லுமா மறையோன் தன்பின் திரிமுகக் காந்தஞ் சேர்ந்த
வல்லிரும் பணையு மாபோல் வள்ளலுங் கடிது சென்றார்
எல்லையில் சுற்றத் தாரும் "இது என்னாம்" என்று செல்ல
நல்லஅந் தணர்கள் வாழும் வெண்ணெய்நல் லூரை நண்ணி
186

வி.ரை :- காந்தத்தின் முன் வைக்கப்பட்ட இரும்பு போன்று அந்தணன் பின் நம்பியாரூரரும் விரைவாகச் சென்றார். எண்ணற்ற அவர் சுற்றத்தாரும் "இது என்ன விந்தை" என்று அவர்களும் பின் தொடர்ந்து நல்ல அந்தணர் வாழும் வெண்ணெய் நல்லூரை நோக்கிச் சென்றனர்.

அ.ரை :- திரிமுகக்காந்தம்—ஈர்க்கும் முகமுடைய காந்தக்கல். கடிது—துரிதமாக.

வேத பாரகர் பேரவை முன் முறையிட்டது

வேதபா ரகரில் மிக்கார் விளங்குபேர் அவைமுன் சென்று
நாதனாம் மறையோன் சொல்லும் "நாவலூர் ஆரூ ரன்தான்
காதலென் அடியான் என்னக்காட்டிய ஓலை கீறி
மூதறி வீர்முன் போந்தான் இதுஎன்றன் முறைப்பா"
என்றான். 187

வி.ரை :- மிகச் சிறந்த அந்தணர்கள் கூடிய பேரவையின் முன் சென்று நாதனாகிய அந்தணன், "நாவலூர் ஆரூரன் என் அன்புக்குகந்த அடிமை என்று காட்டிய ஓலையைக் கிழித்து இங்கு வந்தான். மூதறிஞர்களே இதுவே என் முறையீடு" என்று சொன்னான்.

அ.ரை :- வேதபாரகர்—வேத வல்லுனர். நாதன்—சிவபெருமான். காதலென் அடிமை—அன்பால் அடிமையானவன். முறைப்பாடு—முறையீடு.

"நடந்தது நடந்தபடி வழக்குரைத்தேன்" என்றது

அந்தணர் அவையில் மிக்கார் "மறையவர் அடிமை ஆதல்
இந்தமா நிலத்தில் இல்லை என் சொன்னாய் ஐயா"என்றார்
"வந்தவா றிசைவே அன்றோ வழக்கிவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்தது" என்றனன் தனியாய்
நின்றான் 183

வி.ரை :- "அந்தணர் அடிமையாவது என்பது இவ்வுலகிலில்லை" இதற்கு என்ன சொல்கின்றாய் என்று அந்தணர் அவையின் தலைவர் சொன்னார். அதற்குத் தனிப்பெரும் பொருளாய் நின்ற இறைவன், நிகழ்ந்தது நிகழ்ந்தவாறு உரைக்கின்றேன். வழக்கில் இவன் கிழித்த ஓலை இவன் பாட்டன் எழுதிக் கொடுத்தது என்றான்.

அ.ரை :- வந்தவாறு—நடந்தவாறு. இசைவேன்—உண்மை கூறுவேன். நேர்ந்தது—செய்தது. எழுதிக் கொடுத்தது. மிக்கார்—முதல்வர், அவைத்தலைவர்.

அவைத்தலைவர் கேட்டது

இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ?
தசையெலாம் ஒடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச் சொன்னான்
அசைவில்ஆ ரூரர் எண்ணம்என்'' என்றார் அவையில் மிக்கார் 189

வி.ரை :- அதற்கு அந்தணர் அவைத்தலைவர், ''உடன்பாட்டின்படி எழுதப்பட்ட ஓலையைக் காட்டி இன்று விரைவாக பலாத்காரமாகப் பிடுங்கிக் கிழிப்பது வெற்றி ஆகுமோ? தசையெல்லாம் ஆட இந்த முதியவர் வழக்கினை பொருத்தமாகச்சொன்னார். இளமையுள்ள ஆரூரர் எண்ணம் என்ன? என்று கேட்டார்.

அ.ரை :- இசைவு—உடன்பாட்டின்படி. விசை—வேகம். ஒடுங்க—நடுங்க அசைய. சார—சரியாக அசைவில்—அசையாத, இளமையுள்ள. மூத்தான்—முற்றறிவாளன்.

நம்பியாரூரர் தன் நிலை கூறியது

''அ ளத்து நூல் உணர்ந்தீர்! ஆதி சைவனென்றறிவீர் என்னைத்
தனக்குவே றடிமை என்றிவ் அந்தணன் சாதித் தானேல்
மனத்தினால் உணர்தற் கெட்டா மாயைஎன் சொல்லு கேன்யான்
எனக்கிது தெளிய வொண்ணா தென்றனன்'' எண்ணம் மிக்கான் 190

வி.ரை :- எல்லாக் கலையும் கற்ற அவையோர்களே! என்னை ஆதி சைவன் என்று நீங்கள் அறிவீர்கள். ஆனால் இந்த அந்தணன் என்னைத் தனக்கு வேறு அடிமையென்றும் சாதிக்கிறான். இது மனத்தினால் உணர்தற்கு எட்டாததும் மாயை என்றே சொல்லுவேன் நான். வேறு எதுவும் சொல்லுதற்கு எனக்குத் தெரியவில்லை என்று சிந்தனைச் செல்வர் சொன்னார்.

அ.ரை :- மனத்தினால் உணர்தற்கெட்டா மாயை-ஒரு அந்தணன் அடிமை என்பது எண்ணத் தகாத ஒரு மாயை.

''சான்றிதழ் காட்டுக'' என்றவையோர் கேட்டது

அவ்வுரை அவையின் முன்பு நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர், நின்ற திருமறை முனியை நோக்கி
''இவ்வுல கின்கண் நீரி வ் றிவரைநும் அடிமை என்ற
வெவ்வுரை எம்முன் பேற்ற வேண்டும்'' என றுரைத்து
மீண்டும். 191

வி.ரை :- அவ்வாறு நம்பியாரூரர் அவையின் முன்பு சொல்லச் சிறந்த அவையின் அந்தணர் தலைவர் நின்று கொண்டிருந்த அந்தணமுனியை நோக்கி, ''இந்த உலகில் இவன் உம்முடைய அடிமை என்ற கொடிய சொல்லுக்குச் சான்று எம்முன் வைக்க வேண்டும்'' என்று மீண்டும் உரைக்கலாயினர்.

அ.ரை :- செவ்விய—சிறந்த. வெவ்வுரை—கொடிய சொல். தீய சொல். ஏற்ற—சபையில் ஏற்றி உறுதிப் படுத்த.

"ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்" என்ன "முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை

வல்லான். 192

வி.ரை :- "அநுபவத்தில், எழுதிய ஓலையில், அல்லது யாராகிலும் ஒரு சாட்சி ஆகிய மூன்றில் ஒன்று இந்த அவை முன் காட்டுவாய்" என்று அவைத் தலைவர் சொல்ல "முன்னே கோபங்கொண்டு கிழித்தது ஒரு படிமம், மூல ஓலையைப் பெருமையுடன் காட்டுவதற்கு வைத்துள்ளேன்" என்று மாயைகள் செய்வதில் வல்லவனான அந்தண வேடம் கொண்ட சிவபெருமான் கூறினார்.

அ.ரை :- ஆட்சி — அநுபவத்தில். அந்தணன் அடிமையாகும் அநுபவம் ஏதாகிலும் ஒரு முன் அனுபவம். ஆவணம்—எழுதப்பட்ட ஓலை. அயலார் தங்கள் காட்சி—நேரடியாக ஒரு ஆளின் சாட்சியம். மூட்சியில்—சினத்தில். மூண்டெழுந்த சினத்தில். படி ஓலை—படிமம். ஒரு நகல். மாட்சி—மாட்சியமையுடன்.

மாயை வல்லான் மேலும் சொன்னது

"வல்லையேல் காட்டிங்" கென்ன, மறையவன் "வலிசெய்

யாமல்

சொல்லநீர் வல்லீ ராகில் காட்டுவேன்" என்று சொல்லச்
"செல்வநான் மறையோய்! நாங்கள் தீங்குற ஒட்டோம்"

என்றார்.

அல்லல்தீர்த் தாள நின்றான் ஆவணங் கொண்டு

சென்றான். 193

வி.ரை :- அதற்கு அவைத் தலைவர். "ஆவணம் காட்ட வல்லையாகில் கட்டுக" என்று கூற, இறைவனும் "முன்பு போன்று இவன் வலிசெய்யாதிருக்கச் சொல்ல நீவீர் வல்லவராகில் காட்டுவேன்" என்று சொல்ல, "நான்கு மறையறிந்த அந்தணரே! நாங்கள் உங்களுக்குத் தீங்கு ஏற்பட அநுமதியோம்" என்று அவைத் தலைவர் சொல்ல, உலகின் துன்பங்கள் தீர்த்து ஆட்கொள்ள நின்ற பிரான் ஆவணம் எடுத்துக் காட்டினார்.

அ.ரை :- வல்லையேல் — காட்டவல்லையேல். காட்ட முடியுமானால். மறையவன்—சிவபெருமான். வலிசெய்யாமல்—தன்வலிமையை மீண்டும் பயன்படுத்தாமல். தீங்குற ஒட்டோம்—தீங்கு வந்துசேர அநுமதியோம்.

கணக்கன் ஆவணம் வாங்கிப் படித்தது

இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண்
டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும் ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சவையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான்.
194

வி.ரை :- ஒளிவீசும் இருள்கழுத்தோன் கையில் ஓலையை அவையிலுள்ளோர் கண்டதும், அவைத் தலைவன் ஏவலினால் அருள் பெற்ற கணக்கனும் அந்த ஓலையைத் தொழுது வாங்கிச் சுற்றியிருந்த மடிப்பை நீக்கி விரித்து அதன் பழமையைப் பார்த்துத் தெளிவு பெற்று அவையோர் கேட்கப் படிக்கலுற்றான்.

அ.ரை :- இருள் மறைமிடற்றோன் — உலகின் இருளைப் போக்கத் தன் கழுத்தில் இருளை ஏற்றவன். கரணத்தான்—கணக்கன். தெருள்—தெளிவு.

வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக் கொடுத்தது

"அருமறை நாவல் ஆதி சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என்எ ழுத்து." 195

வி.ரை :- "பெருமை மிக்க அழகிய வேதம் ஓதும் ஆதி சைவனான ஆரூரன் எழுதிக் கொடுத்தது. திருவெண்ணெய் நல்லூர் பித்தனுக்கு நானும் என்பின் வரும் சந்ததியினரும் வழிவழித் தொண்டாற்றுதற்கு அகத்தாலும், புறத்தாலும் விரும்பி என் கைப்பட எழுதிக் கொடுத்த ஓலை இது" என்று ஏட்டில் இருந்த படி வாசித்தான்.

அ.ரை :- நாவல்—பெருமைக்குரிய. இருமையால்-அகமும் புறமும் விரும்பி. நேர்ந்தேன்—எழுதிக் கொடுத்தேன். என் எழுத்து — என் கைப்பட எழுதிக் கொடுத்தது.

"உன் பாட்டன் கையெழுத்தா எனத்தெளிமின்" என்றது

வாசகங் கேட்ட பின்னர் மற்றுமேல் எழுத்திட் டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி "அவையொக்கும்" என்ற பின்னர்
மாசிலா மறையோர் "ஐயா! மற்றுங்கள் போனார்தம்
தேசுடை எழுத்தே ஆகில் தெளியப்பார்த் தறிமின்" என்றார். 196

வி.ரை :- ஓலை வாசிக்கக் கேட்ட பிறகு அந்த ஓலையில் சாட்சிய இட்டவர்களது குற்றமற்ற எழுத்தை நோக்கி அலவ ஏற்றுக் கொள்பவையாக இருக்கக் கண்ட பின்னர் குற்றமற்ற அந்தணர் தலைவர் நம்பி ஆரூரரைப் பார்த்து "ஐயா! இது உங்கள் பெயரை யுடைய பாட்டனாரின் ஒளிவீசும் எழுத்தே என்று தெளிவாகப் பார்த்தறிந்து கூறும்" என்றார்.

அ.ரை :- வாசகம்– படிக்கப்பட்டது. மேல் எழுத் திட்டவர் --சாட்சிக் கையெழுத்திட்டவர்கள். ஆசிலா— குறையில்லா. மாசிலா—குற்றமற்ற. பேரன்—பெயரை உடைய பாட்டன். தேசுடை—தேஜேசுடை, ஒளி யுடைய.

"ஆள் ஓலை இவனோ காணவல்லான்"என்றது

அந்தணர் கூற 'இன்னும் ஆள்ஓலை இவனே காண்பான்
தந்தைதன் தந்தை தான்வே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும் எழுத்துநீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின்'' என்றான் வலியஆட் கொள்ளும்
வள்ளல். 197

வி-ரை :- அந்தணர் இவ்வாறு கூற, நம்பி ஆரூரை வலிய ஆட்கொள்ளும் வள்ளல். ஆவணம்காண இவனோ வல்லன்? இவன் பாட்டன் கையெழுத்தை வேறு ஏதாகிலும் உண்டானால் கொண்டு வந்து இந்த அவணத்துடன் ஒப்பு நோக்கி உண்மை கூறுங்கள் என்றார்.

அ.ரை :- இவனே காண்பான்—இவனோ காண வல்லான். கைச்சாத்து—கையெழுத்துச் சான்று.

வேறொரு ஓலை ஒப்பிட்டுப் பார்த்தது

திரண்டமா மறையோர் தாமும் திருநாவ லூரர்கோமுன்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை

அரண்தரு காப்பில் வேறொன் றழைத்துடன் ஒப்பு நோக்கி
"இரண்டும்ஒத் திருந்த தென்னே! இனிச்செயல் இல்லை"
என்றார். 198

வி.ரை :- திருநாவலூரர் கோமான் முன்பு கொண் டிருந்த மயக்கம் தெளிய, நம்பி ஆரூரரின் பாட்டனார் எழுதிய ஓலை ஒன்று அவரது வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து கொண்டுவந்து ஒப்புநோக்கிக் காண, இரண்டும் ஒத்திருக்கக் கண்டு திரண்டிருந்த அந்தணர்கள் யாவரும் "இது என்ன?" என்று வியந்து "இனிச் செய்வதற்கொன்றும் இல்லை" என்றனர்.

அ.ரை :- திருநாவலூர் கோ—நம்பிஆரூரர். மருண்டது—மயக்கம். சந்தேகம். அரண்தரு காப்பில்—பாதுகாப்புப் பெட்டியில்.

"நம்பியாரூரர்! தோற்றீர்" என்றது

"நான்மறை முனிவ னார்க்கு நம்பியா ரூரர்! தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்" என்று பண்பில் மிக்க
மேன்மையோர் விளம்ப, நம்பி "விதிமுறை இதுவே ஆகில்
யானிதற் கிசையேன் என்ன இசையுமோ" என்று நின்றார்
199

வி.ரை :- "நம்பி ஆரூரரே! நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த இந்த முனிவருக்கு நீர் தோற்றீர், இனி இவருக்கு விதிப்படி ஏவல் செய்வது கடன்" என்று. சிறந்த மேன்மையான அந்தணர்கள் சொல்ல, நம்பியும் "என் தலைவிதி இதுவேயானால் நான் இதற்கு இசையேன் என்றால் இயலுமோ" என்று செய்வதறியாது நின்றார்.

அ.ரை :- பான்மையில்—விதியின்படி

அந்தணர் அடிமையாதல் இல்லை என்னும் விதி முறையை இறைவன் தகர்த்து வீழ்த்தியதை இங்கு நோக்குக.

"அருமுனி! இவ்வூரில் நும் வீடு காட்டு" என்றது

திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
"அருமுனி! நீர்முன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய துமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டு" கென்றார். 200

வி.ரை :- சிறப்புமிகு அந்தணர்கள் அங்கு நின்று கொண்டிருந்த சிவ முனியை நோக்கி "அருமுனி! நீர் இங்கு காட்டும் ஓலை அதனில் பெருமை மிக்க எங்கள் ஊரே உமக்கும் ஊர் என்று பேசிய நீர், இவ்வூரில் தலைமுறை தலைமுறையாக அமைந்த உமது விடும், நீண்ட காலம் வாழ்ந்ததற்கான சிறப்புமிகு வாழ்க்கையும் எங்குளது? காட்டு" என்றனர்.

அ.ரை:- திருமிகு—செல்வம்மிகு. வருமுறை—பரம்பரையாக வந்த வீடு. நீடு வாழ்க்கை—செல்வச் செழிப்பான வாழ்க்கை.

திருவருட்டுறை கோயில் புகுந்து மறைந்தது

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர்" என்னை
ஒருவரும் அறியீ ராகில் போதும்"என் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார், கண்டிலர் திகைத்து நின்றார். 201

வி.ரை:- ஒப்பற்ற வழக்கில் வெற்றியடைந்த புண்ணிய மூர்த்தி "என்னை ஒருவரும் அறியவில்லை யென்றால் என் வீடு செல்வோம் என்று அழைக்கச் சூழ்ந்து நின்றிருந்த அந்தணர்களும் நம்பி ஆரூரரும் பின் தொடர இறைவன் திருவெண்ணெய் நல்லூரின் கோயிலினுட் சென்று மறைந்திடக் காணாது திகைத் தனர்.

அ.ரை:- பொருவரும்—ஒப்பற்ற, போதும்—போ வோம். திருவருட்டுறை—திருவெண்ணெய் நல்லூர் கோயில்.

விடை மீதமர்ந்து நம்பிக்குக் காட்சியருளியது

எம்பிரான் கோயில் நண்ண இலங்குநூல் மார்பர் "எங்கள்
நம்பர்தங் கோயில் புக்க தென்கொலோ" என்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு தனித்தொடர்ந் தழைப்ப மாதோ
டும்பரின் விடைமேல் தோன்றி அவர்தமக் குணர்த்தல்
உற்றார். 202

வி.ரை:- இறைவன் கோயில் சென்ற நம்பி ஆரூரர் "எங்கள் அன்பர் கோயிலினுட் புகுந்தது என்ன காரணத்தாலோ என்று நம்பி தாங்க முடியாப் பேராவ லுடன் தொடர்ந்து இறைவன் சென்ற வழியே அழைத் துக் கொண்டு செல்ல இறைவனும் உமையம்மையுடன் வானத்தில் காளை மீதமர்ந்த கோலத்துடன் தோன்றி அவருக்கும் மட்டும் தன்னை யார் என்று உணர்த்தக் காட்டினார்.

அ.ரை:- நண்ண-சென்றடைய. இலங்கும்—விளங் கும். நம்பர்—நம் இறைவன். அன்பர், நண்பர். உம்பர்— வானம்.

"தடுத்தாட் கொண்டோம்" என்றது

"முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப
பின்புநம் ஏவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நி -னைத் தொடர்வறத் தொடர்ந்து
வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோம்"
என்றார். 203

வி.ரை:- "முன்பு நமக்கு நீ தொண்டன். மனத்தால் எழுந்த காம வேட்கை நீங்க நம் ஏவலாலே பிறந்தனை பின்பு மண்ணின் மீது, பிறவி எனும் பெருந்துயர் உன்னைத் தொடராதிருக்க உன்னைத் தொடர்ந்து வந்து நல்லறிவுடைய அந்தணர் முன்பாக நாமே தடுத்தாட் கொண்டோம்" என்று கூறினார்.

அ. ரை :- தொண்டன்—கயிலையில் அணுக்கத் தொண்டர். முன்னிய வேட்கை கூர—மனத்தால் சேடிமார்மீது எழுந்த காமம் நீங்க. நன்புலம்—நல் அறிவு.

ஓசை கேட்டுக் கதறி அழுதது

என்றெழும் ஓசைகேளா ஈன்றஆன் கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசர ணாதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேல் ஆக
"மன்றுளீர்! செயலோ வந்து வலியஆட் கொண்ட"
தென்றார். 204

வி.ரை:- வானிலிருந்து எழும் ஓசை கேட்ட நம்பி ஆரூரர் தாயைப் பிரிந்த கன்று அதன் கனைப்புக் கேட்டுக் கத்திக் கொண்டு ஓடுமாப் போலே கை கால்களுடன் அங்கம் எல்லாம் சரண் அடைந்து, மெய்

சிலிர்த்துப் போக கைகளைத் தலைமேல் கொண்டு தொழுது ''வலிய வந்து ஆட்கொண்டது மன்றில் ஆடும் இறைவா! உம் செயலோ'' என்றார்.

அ.ரை-- ஆன்—பசு. கனைப்பு—ஒலி. கரம்சரண் ஆதி அங்கம்--கைகளை மேலே தூக்கி உடலை முழுமையாகத் தரையில் விழும்படி விழுந்து வணங்குதல். துன்றிய—துடித்து. புளகம்—உடல் சுலிர்ந்து.

வானிடை தேவ துந்துபிகள் முழங்கியது

எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார். 205

வி.ரை:- அங்கு கூடியிருந்தவர்கள் யாவரும் அறிந்து கொள்ளுமாறு தேவர்கள் பொழிந்த மலர் மழை உலகெலாம் நிறைந்து கிடக்க ஐந்து வகையான வாத்தியங்கள் ஆகாயத்தில் முழங்கிக் கொண்டிருக்க; மண்ணில் உள்ளோரின் மகிழ்ச்சி மேலோங்க, வேதங்களின் முழக்கம் எங்கும் கேட்கப் பெருமைக்குரிய நம்பியாரூரரை ஓலை காட்டி இறைவன் அருளிச் செய்தார்.

அ.ரை:- எண்ணிய—எல்லோருக்கும் தெரியும்படி. ஓசை ஐந்து—தோற் கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவி, துளைக் கருவி, கஞ்சக் கருவி ஆகிய ஐந்து வகை வாத்திய ஓசை. மண்ணவர்—மண்ணுலகில் வாழ்வோர். அண்ணல்—நம்பி ஆரூரர். ஆண்டவர்—சிவபெருமான்.

"வன்தொண்டன்! சொற்றமிழ் பாடு" என்றது

"மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு" கென்றார் தூமறை பாடும் வாயார். 206

வி.ரை:- மேலும் நீ என்னிடம் வன்மை பேசி "வன் தொண்டன்" எனும் பெயர் பெற்றனை. எமக்கு அன்பால் பெருகிய சிறப்பு மிக்க அர்ச்சனை என்பது பாட்டே ஆகும். ஆதலால் இவ்வுலகில் எம்மைப் போற்றி தமிழால் பாடு" என்று தூயவேதம்பாடும் வாயராகிய சிவபெருமான் சொன்னார்.

தமிழில் அர்ச்சனை செய்வதையே இறைவன் விரும்பி ஏற்றுக் கொள்கிறார் என்பது இதனால் புலனாம்.

நம்பி ஆரூரர் அஞ்சலி செய்து நின்றது

தேடிய அயனும் மாலும் தெளிவுறா ஐந்தெ ழுத்தும்
பாடிய பொருளாய் உள்ளான் "பாடுவாய் நம்மை" என்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரர், மன்றுள்
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று. 207

வி.ரை:- மாலும் அயனும் தேடியும் தெளிவு பெறாத அஞ்செழுத்தும் பாடிய பொருளாய் உள்ள பிரான், "பாடுவாய் நம்மை" என்று சொன்ன தன் மனத்தினரான நம்பி ஆரூரர், மன்றத்துள் ஆடுவாரது சிவந்த தாள்களை அஞ்சலி செய்து நின்று, கூறுவார்.

அ.ரை:- தெளிவுறா—தெளிவு பெறாத, செய்ய—சிவந்த,

"என்ன சொல்லிப் பாடுவேன்" என்றது

'வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா அமுதே! இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகேன்" என
மொழிந்தார் 208

வி.ரை:- தேவரீர் பிராமண வடிவங் கொண்டு என்னை வழக்கினால் வெல்லுதற்கு எழுந்தருளி வந்தமையை அறியாத சிறியேனாகிய எனக்குப் பழைய அறிவைத் தந்து உலக வாழ்க்கையில் மயங்காமல் உய்யும்படி செய்தருளிய குற்றமற்ற அமுதம் போன்ற கடவுளே! அடியேன் தேவரீரது அனந்த குணங்களில் எதையறிவேன்? என்ன சொல்லிப் பாடுவேன்? என்றார்.

அ.ரை:- ஊதியம்—சிறப்பு, பயன். கோதிலா—குற்ற மற்ற, குறைவு படாத.

"பித்தன் என்றே பாடுவாய்" என்றது

அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
"முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார், நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடல்
உற்றார். 208

வி.ரை:- அதற்கு அன்பன் நம்பியாரூரரை அருளு டன் அழகிய கண்ணனார் நோக்கி, "முன்பு என்னைப் பித்தன் என்றே சொன்னாய். ஆதலால் என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்று அருளிச் செய்தார். நின்றிருந்த வன்பெருந் தொண்டரும் தன்னை ஆட் கொண்ட வள்ளலைப் பாடலுற்றார்.

அ.ரை:- அங்கணர்—அழகிய கண்ணார்.

"பித்தா பிறைசூடி" என அடியெடுத்துப் பாடியது

கொத்தார்மலர்க் குழலாளொரு கூறாய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ் வியன்நாவலர் பெருமான்
"பித்தாபிறை சூடி" எனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உய எடுத்தார். 210

வி.ரை:- கொத்தாக மலர் அணிந்த கூந்தலாள் உமையம்மையை ஒரு பாகமாக உடைய பிரான், அடியவர்களிடம உண்மைத் தாயினும் இனியானை, அப்பெருமை மிக்க நாவலூரர் "பித்தா பிறைசூடி" எனப் பெரியதாம் திருப்பதிகம் இவ்வுலகு முதலாக எல்லா உலகங்களும் உயர்வு பெற எடுத்துப் பாடினார்.

அ.ரை:- கொத்தார் மலர் குழலாள்—பார்வதி தேவி. கூறாய்—ஒரு பாகமாய், மெய்த்தாயினும் இனியானை—சிவபெருமானை. வியன் — பெருமை, நாவலர்—நாவலூரர்.

மதுர இசை பாடியது

முறையால்வரு மதுரத்துடன் மொழி இந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்
நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாநிகர் இல்லான். 211

வி.ரை:- முறைப்படி படிப்படியாக எழும் இனிமையுடன் இந்தளம் என்னும் பண்ணை முதலில் குறையா நிலையில் மும்மைப்படியின் முறைமைப்படிபொருந்தும் சிறப்பினால் அமைந்த பாணியில் மேலே கூறிய பண்ணுடன் இயைந்த தாளம் சேர்த்து யாவரும் புகழும் வண்ணம் சிவபெருமான் மகிழ யாருக்கும் நிகரில்ல நம்பியாரூரர் இசைபாடினார்.

அ.ரை:- முறையால் வரும் மதுரம் — ஒருபாட்டு பாடிக் கொண்டிருக்கையில் அதன் இனிமை இசையில் தடு பிடிக்கப் பிடிக்க மிகும் என்பதாம். இந்தளம்— ஒரு பண். மும்மைப்படி—பாடும் முறைமையின் மூன்று நிலைகள். இதனை நலிதல், படுத்தல், எடுத்தல் என் பர். கூடுங்கிழமை—பொருந்தும் சிறப்பு, நிறைபாணி— பண் அமைந்த பாணியில். இசைகோள் புணர்—இசையுடன் மேற்சொன்ன பண்ணுக்கு ஏற்பத்தாளம் சேர்த்து. நீடும்புகழ்—யாவரும் புகழ, புகழ்மிகுதியாக. இறையான் —சிவபெருமான்.

"பல்லாறுலகினில் இன்னும் நம்புகழ் பாடு" என்றது

சொல்லார்தமிழ் இசைபாடிய தொண்டன்தனை "இன்னும்
பல்லாறுல கினில் நம்புகழ் பா" டென்றுறு பரிவில்
நல்லாவெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புரம் எய்தான் அருள் செய்தான் 212

வி.ரை:- அழகிய சொற்களால் அமைந்த தமிழில் இசையுடன் பாடிய வன்தொண்டரைப் பார்த்து "பலவாறு வேறுபட்ட இந்த உலகினில் இன்னும் எம் புகழ் பாடு" என்று உற்ற அன்பினில் நன்மக்கள் வாழும் திருவெண்ணெய் நல்லூரில் அருள்தங்கி எழுந்தருளிய நம்பன், எல்லா உலகும் உய்ய முப்புரம் எரித்த இறைவன் அருள் செய்தார்.

அ.ரை:- சொல் ஆர் தமிழ்—அழகிய சொற்களால் அமைந்த தமிழ். பல்லாறு உலகில்—பலவாறு வேறு பட்ட இவ்வுலகில். உறுபரிவில் — உற்ற அன்பில். நல் லார்—நன்மக்கள். நல்லூர் அருள்உறை மேவிய நம்பன் —அருள்கூர்ந்து திருவெண்ணெய் நல்லூரில் எழுந் தருளிய இறைவன்.

சடங்கவியார் மகள் சிவபதமடைந்தது

அயலோர் தவ முயல்வார்பிறர் அன்றேமணம் அழியும்
செயலால் நிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயாநாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியில்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம்வகை பெற்றாள். 213

வி.ரை:- நிகழ இருக்கும் நாள் அன்றே திருமணம் தவறியது எனும் செயலால், அயல் இடம் சென்று தவம் இயற்றுவர் பிறர். ஆனால் புத்தூரில் தோன்றிய சிவாச் சாரியார் சடங்கவியின் மகள் உயர்வுபெற்ற நாவலூரா ரது தனி நாதனான நம்பி ஆரூராரை நீங்காது மனத்தில் வைத்துத் தியானித்து அந்நிலையினின்றும் பெயரா திருந்து எளிதாக சிவலோகம் அடைந்தார்-

அ.ரை:-அயலோர் தவம் முயல்வார் பிறர் — மற்ற வர்கள் வேறு ஒரு இடம் சென்று தவமிருப்பர். மணம் அழியும் செயல்—திருமணம் நின்று போகும் செயல்.

திருநாவலூர் சென்று பதிகம் பாடியது

நாவலர்கோன் ஆரூரன் தனைவெண்ணெய் நல்லூரில்
மேவும்அருட் டுறையமர்ந்த வேதியரால்
கொண்டதற்பின்
பூவலரும் தடம் பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார். 214

வி.ரை:- நாவலர்கோனாகிய நம்பி ஆரூரானை திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளி அருள் தங்கி அமர்ந்த சிவபெருமான் ஆட்கொண்டதன்பின் மலர் பொதிந்த பெரிய பொய்கைகளையுடைய திருநாவலூர் சென்றடைந்து தேவர் தேவனைப் பணிந்து போற்றித் திருப்பதிகம் பாடினார்.

அ.ரை:- வேதியர் — சிவபெருமான், மேவும்— பொருந்தும். அருட்டுறையமர்ந்த—அருள்தங்க எழுந் தருளிய.

திருத்துறையூர்

சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து
தீவினையால்
அவநெறியே செல்லாமே தடுத்தாண்டாய் அடியோற்குத்
தவநெறிதந் தருள்என்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம் பாடினார். 215

வி.ரை;- சிவபெருமான் எழுந்தருளிய திருத்துறை யூர் சென்றடைந்து "தீவினையால் பாவ வழியில் செல் லாமல் தடுத்தாண்டாய்" என்று தம்பிரான் இறைவன் முன்நின்று "அடியேனாகிய எனக்குத் தவநெறி தந்தருள் வாய்" என்று பிறப்பறுக்கும் பெருநெறிக்கு இலக்காகும் திருப்பதிகம் பாடினார். இதனைப் பாவ நெறியினின்றும் விலக்கும் திருப்பதிகம் பாடினார் எனக் காணினுமாம்.

அ.ரை:- அவநெறி—பாவநெறி. பவநெறி—பிறப்பு எனும் பாவநெறி.

புலனொன்றும் படிதவத்தில் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர்
அமர்ந்தருளும்

நிலவுந்தண் புலனும் ஒளிர் நீள்சடையோன் திருப்பாதம்
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்தொண்டர் 216

வி.ரை:- புலன்கள் ஐந்தும் ஒன்றுபடும்படி தவம் செய்யும் மார்க்கம் கொடுத்தருள அன்றலர்ந்த மலர்கள் நிறைந்த மணம்கமழ் சோலைகளுடைய திருத்துறையூரில் அமர்ந்தருளும், நிலவும் குளிர்ந்த நீரும் ஒளிவீசும் நீண்ட சடையோனாகிய சிவபெருமான் திருப்பாதம் தமிழ்மலர் கொண்டு போற்றி இசையுடன் பாடி வன்தொண்டர் தங்கியிருந்தார்.

அ.ரை:- புலன் ஒன்றும்படி — ஐம்புலன்களும் அடங்கும்படி. ஐம்புலனும் ஒன்றித்துச் சிவபெருமானில் நிற்கும்படி. தவத்தில் புரிந்த நெறி—தவம் புரியும்வழி. அலர் — அன்றலர்ந்தமலர். வந்தித்தார் — வந்தனை செய்து தங்கியிருந்தார்.

பொற்புலியூரில் மனங்கொண்டது

திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமாம் இடம்பலவும் புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்
திருத்தினார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினால் வழிக்கொள்வான் மனங்கொண்டார் 218

வி.ரை:- திருத்துறையூரீசனைப் பணிந்து அங்கிருந்து கொண்டு சிவபெருமான் பொருத்தமாக அமர்ந்தருளும் இடம்பலவும் சென்று கோயிலினுட் புகுந்து வணங்கியிருக்கையில், பொற்புலியூர் நடராசனாரின்

திருக்கூடத்தைத் தொழுவதற்கு என்று நினைவு பெற்று, ஆற்றாமை மிகுந்த அன்பினால் அங்கு செல்ல மனங் கொண்டார்.

அ.ரை:- திருத்தினார்—சிவபெருமான். வருத்தமிகு ஆற்றாமையின் மிகுதியான அன்பினால்.

திருவதிகைப்புறத்தணைந்தது

மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனல்பெண்ணை யாறுகடந் தேறியபின்
நிலவுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலில்
செலஅணையும் பொழுதணையத் திருவதிகைப்
புறத்தணைந்தார். 218

வி.ரை:- மலையில் பிறந்த சந்தனம், அகில், மயிலிறகு இவற்றுடன் மலரை மேலே பரப்பி முத்து மணிகளை அடித்துக் கொண்டு வரும் அலைகளை யுடைய குளிர்ந்த நீர் நிறைந்த பெண்ணை ஆற்றைக் கடந்தே பின்பு, விளங்கும் பசிய ஏழு குதிரைகளை யுடைய தேரின் மீதமர்ந்த ஞாயிறு மேற்கடலில் சென்று மறையப் பொழுது போகும் போது திருவதிகைப் புறத்து வந்து சேர்ந்தார்.

அ.ரை:- சந்து-சந்தனம். நிலவு-விளங்குகின்ற பசும் புரவி-சூரிய பகவானின் ஏழு குதிரைகள். இரவி-ஞாயிறு. பொழுதணைய—பொழுது போகும் நேரம்.

சித்தவட மடம் புகுந்தது

"உடையஅர சுலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும்
பதியைமிதித்

தடையுமதற் கஞ்சுவன்'' என் றந்நகரில் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையில் சித்தவட மடம் புகுந்தார். 219

வி.ரை:- ''உலகம் போற்றும் அடியவர் திருநாவுக்கரசு நாயனார் உழவாரப் படையினாலே பரமசிவனுக்குக் கைத்தொண்டு செய்த இந்த இடத்தில் கால்மிதிக்க அஞ்சுகிறேன்'' என்று அந்நகரில் புகாமல் நீர்த்தேக்கங்கள் நிறைந்த குளிர்ந்த புறப்பகுதில் உள்ள சித்தவட மடம் புகுந்தார்.

அ.ரை:- உடைய— அருளுடைய, சிவனடியார். உழவாரப்படை—புல் செதுக்கும் கருவி, களைக்கொத்து விடையவர்—சிவபெருமான், மிதித்தடையும்—மிதித்துச் செல்லுதற்கு, மடை—நீர்மடை. நீர்த்தேக்கங்கள் நிறைந்த என்பது பொருள். புறம்பணை—வயற்புறம்.

வீரட்டானரை நினைந்து துயில் கொண்டது

வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்தொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடைஎங்கும் மிடைகின்ற
பரிசனமும் துயில்கொள்ளப் பள்ளியமர்ந் தருளினார். 220

வி.ரை:- வரி வண்டுகள் ரீங்காரம் செய்யும் சோலைகளால் சூழப்பட்ட மடத்தில் வன்தொண்டர் மிகுந்த அலைவீசும் நீரையுடைய கெடில ஆற்றின் வடகரையில் உள்ள திருவீரட்டானத்திறைவன் திருத்தாள்களை விருப்பமுடன் மனத்தில் கொண்டு பக்கமெங்கும் நெருங்குகின்ற தொண்டர் படை துயில் கொள்ளத்தானும் துயில் கொண்டார்.

அ.ரை:- வரி-வரிவண்டு, விரிதிரை-மிகுந்த அலைகள். கெடிலம்-கெடிலநதி. புரிவு-விருப்பம். புடை-பக்கம். மிடை நெருக்கம், பரிசனம்-தொண்டர்படை

இறைவன் அந்தணராய் வந்து முடிமேல் திருத்தாள் வைத்துப் படுத்தது

அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய் முன்னொருவர் அறியாமே
பொதுமடத்தி னுள்புகுந்து பூந்தாரான் திருமுடிமேல்
பதும மலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போல்
பயின்றார். 221

வி.ரை:- திரு வீரட்டானத் திறைவனும் வன்தொண்டர் தன் நினைவாகவே நித்திரை செய்வது கண்டு ஒரு வயோதிக அந்தணர் உருக் கொண்டு யாரும் அறியாமல் மடத்தினுள் புகுந்து மலர் மாலையணிந்த வன்தொண்டரது திருமுடியின் மேல் தன் கமல மலர்ப் பாதம் வைத்துப் பள்ளி கொள்வார் போன்று துயில் கொண்டார்.

அ.ரை:- அங்கணரும்-வீரட்டானத்தீசுவரன். முதுவடிவு-வயோதிக வடிவு. பூந்தாரன்-மலர் மாலையணிந்த வன்தொண்டர். பதும மலர்த்தாள்-தாமரைத் தாள். பள்ளி கொள்வார் போல்-நித்திரை செய்வார் போன்று.

"மூப்பு செய்த வினை" என்றது

அந்நிலைஆ ரூரன்உணர்ந் "தருமறையோய்! உன்னடிஎன்
சென்னியிலலவைத் தனை" என்னத்"திசை யறியா
வகைசெய்த

தென்னுடைய மூப்புக்காண்'' என்றருள அதற்கிசைந்து
தன்முடிஅப் பால்வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன். 222

வி.ரை:- ஒரு முதிய அந்தணன் தலைமீது தன் கால்களை வைத்துத் தூங்குவதைக் கண்ட ஆரூரர், "அந்தணரே! உன் பாதங்களை என் தலைமீது ஏன் வைத்தாய்?'' என்று கூற, அந்த அந்தணரும் "எனது மூப்பின் காரணமாகத் திசையறியாது வைத்து விட்டேன்'' என்று சொல்ல, ஆரூரரும் தன் தலையை வேறு பக்கம் வைத்துத் துயின்றார்.

அ.ரை:-அந்நிலை-அந்தணன் கால் தன் தலைமீது பட்டிருந்த நிலை. மூப்பு-முதுமை. தமிழ்நாதன்-வன் தொண்டர். நம்பியாரூராரைத் 'தமிழ்நாதன்' எனச் சிறப்பித்திருத்தல் காண்க.

மீண்டும் தலைமீது தாள் பதித்தது

அங்குமவன் திருமுடிமேல் மீட்டும் அவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவ லூராளி
"இங்கென்னைப் பலகாலும் மிதித்தனைநீ யார்'' என்னக்
கங்கைசடை கரந்தபிரான் "அறிந்திலையோ'' எனக்
கரந்தான். 223

வி.ரை:- இறைவன் மீண்டும் ஆரூர் தலைமீது தன் திருத்தாள்களைப் பதிய வைத்துறங்குவது போல் கிடப்பது கண்ட, செங்கயல் மீன்கள் பாய்ந்து துள்ளும் நீர் நிலைகளால் சூழப்பட்ட திருநாவலூர் "இது என்ன மறுபடியும் தலைமீது மிதிக்கின்றாய், நீ யார்? என்று கேட்கக் கங்கையைத் தலைமீது மறைத்து வைத்து பிரானார் "என்னை நீ அறியாயோ'' என்று கூறி மறைந்தார்.

அ.ரை.- மீட்டும்-மீண்டும், கரந்த-மறைத்து

"அம்மானை அறியாத சாதியார் உளரே" எனப் பாடியது

செம்மாந்திங் கியானறியா தென்செய்தேன்" எனத்தெளிந்து
தம்மானை அறியாத சாதியார் உளரேஎன்
றம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினார். 224

வி.ரை:- "செருக்குற்று இங்கு இறைவன் எழுந்தருளியதை அறியாது என்ன காரியம் செய்து விட்டேன்" என்று சற்று மனம் தேறி 'பெருமையுடை இறைவனை அறியாத சாதியினர் உளரே' என்று அம்மானைத் திருவதிகை வீரட்டானத் தமர்ந்த யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவனைப் போற்றிப் பாடினார்.

அ.ரை:- செம்மாந்து-செருக்குற்று. என் செய்தேன்-என்ன காரியம் செய்து விட்டேன். இறைவன் என்பதறியாது பேசிய சொற்கள், அம்மான்-எம் இறைவன் அறியாத சாதியார்-என்னைப் போன்று இறைவனை அறியாத இனத்தினர், கைம்மா-யானை. உரியானை-உரித்துப் போர்த்தியவன்.

திருக்கெடில ஆற்றில் நீராடியது

பொன் திரளும் மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளும்
மின் திரண்ட வெண்முத்தும் விரைமலரும் நறுங்குறடும்

வன்திரைக ளால் கொணர்ந்து திருவதிகை வழிபடலால்
தென்திசையில் கங்கையெனும் திருக்கெடிலம் திளைத்தாடி.
225

வி.ரை:- திரண்டு வரும் பொன்னும், மணியும் போரிடும் யானைகளின் வெண் தந்தங்களும் ஒளிவீசும் வெண் முத்துக்களும் நறுமணம் வீசும் மலர்களும் மணங்கமழும் சந்தனக் கட்டைகளையும் அடித்துக் கொண்டு வந்து வழிபாடு செய்யும் தென் கங்கை எனும் திருக்கெடிலம் ஆற்றில் மூழ்கி நீராடினார்.

அ:ரை:- திரள்-திரட்சி. பொரு-போரிடும். கரி-யானை. வெண்கோடு-தந்தம். மின்-ஒளி விரை-வாசனை. நறுங்குறடு-சந்தனக் கட்டை, வழிபாடலால்-அலைகள் வழிபாடு செய்தலால். திளைத்தாடி. மகிழ்ந்து நீராடி.

திருமால் வாமனனாய் வழிபட்ட திருமாணிக்குழி

அங்கணரை அடிபோற்றி அங்ககன்று மற்றந்தப்
பொங்குநதித் தென்கரைபோய்ப் போர்வலித் தோள்
மாவலிதன்
மங்கலவேள் வியில்பண்டு வாமனனாய் மண்இரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணிக்குழி அணைந்தார். 220

வி.ரை:- அழகிய கண்ணார் சிவபெருமான் திருவடிகளைப் போற்றி அங்கிருந்து அந்தப் பொங்கும் நதியின் தென்கரையின் வழியே போய்ப் போரிடுவதில் வலிமை மிக்க தோள்களையுடைய பெருமை மிக்க பலிமாமன்னனது மங்கல வேள்வியில் முன்பு வாமனனாய் மூன்றடி மண் வேண்டிய செந்தாமரைக் கண்ணனார் திருமால் வழிபட்ட திருமாணிக் குழி சென்றடைந்தார்.

அ.ரை:- அங்கணர்-அழகிய கண்ணார், நெற்றிக் கண்ணார். மாவலி-பலிமாமன்னன். வாமனன்-குள்ளன் செங்கணவன்-திருமால், மாணி-வாமனன், குள்ளன்

திருத்தினை நகர்

பரம்பொருளைப் பணிந்துதாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் தினைநகரை வணங்கினர்வண் தமிழ்பாடி
நரம்புடையாழ் ஒலி முழவின் நாதஒலி வேதஒலி
அரம்பையர்தம் கீதஒலி அறாத்தில்லை மருங்கணைந்தார். 227

வி.ரை:- பரம் பொருளாகிய சிவபெருமானை வணங்கித் திருத்தாள் போற்றிச் சென்று வணங்கியவர் கட்கு வரம் தருபவராகிய சிவபெருமானின் திருத் தினை நகரை வணங்கி அழகிய தமிழில்பாடி, நரம்புள்ள யாழின் ஒலியும், மத்தள ஒலியும், வேத ஒலியும், தேவ மகளிர் அரம்பையர் பாடும் ஒலியும் குறைவுபடாத திருத்தில்லையின் பக்கம் சென்றடைந்தார்.

அ.ரை:- வரந்தருவான் — கேட்டதெல்லாம் கொடுக்கும் சிவபெருமான், முழவு—மத்தளம், அறா— நீங்காத.

திருத்தில்லை எல்லை வணங்கியது

தேம லங்கலணி மாமணி மார்பின் செம்மல், அங் கயல்கள்
செங்கம லத்தண்
பூம லங்களதிர் பாய்வன மாடே புள்ள லம்புதிரை
வெள்வளை வாவித்
தாம லங்குகள் தடம்பணை சூழும் தண்ம ருங்கு தொழு
வார்கள்தம் மும்மை
மாம லங்களற வீடருள் தில்லை மல்லல் அம்பதியின
எல்லை வணங்கி 228

வி.ரை. :- தேன் ததும்பும் மலர்மாலையும், மிகவும் சிறந்த இரத்தினமணிகளால் அமைக்கப்பட்ட மணி மாலையும் மார்பில் அணிந்த செம்மல் வன்தொண்டர். அழகிய கயல்மீன்கள் செந்தாமரை மலர்கள் பாய்ந்து குளிர்ந்த மலர்கள் ஆட எதிர்த்து பாயப் பறவைகள் ஒலிக்கின்ற வெண்சங்குகள் நிறைந்த கயல் மீன்கள் தாவும் தடாகங்கள் சூழ்ந்த குளிர்ந்த பக்கங்களில் தொழுது தமது மும்மலங்கள் அற்று வீடருளும் சிதம்பர மெனும் வளம் மிக்க அழகிய கட்குடத்தின் பக்கம் வந்து சேர்ந்தனர்.

அ.ரை :- தேம்-தேன். அலங்கல்-மாலை. மாமணி-மிகச் சிறந்த இரத்தின மணி. செம்மல்-வன்தொண்டர், செம்மையானவர், சிறந்தவர். அம்-அழகிய. செங் கமலம்-செந்தாமரை. கயல்-கயல்மீன்கள். அலங்க-ஆட. மாடு-பக்கம். புள் அலம்பு-பறவைகள் ஒலிக்கும். வெள்வளை-வெண்சங்கு. தா-தாவும். மலங்குகள்-மலங்கு மீன்கள். தண் மருங்கு-குளிர்ந்த இடங்கள். மும் மலங்கள்-மும்மலங்கள். ஆணவம், கர்வம், மாயை எனும் மூன்றுமாம். மல்லல்-வளம்மிக்க.

போகபூமினும் மிக்க பூம்புறம் பணை கடந்தது

நாக சூதவகுளஞ்சர ளஞ்சூழ் நாளிகேரம் இல வங்க நரந்தம்
பூக ஞாழல்குளிர் வாழை மதூகம் பொதுளும் வஞ்சிபல
எங்கும் நெருங்கி
மேக சாலமலிசோலைக ளாகி மீது கோகில மிடைந்து
மிழற்றப்
போக பூமியினும் மிக்கு விளங்கும் பூம்பு றம்பணை
கடந்து புகுந்தார். 229

வி.ரை :- நாகமரங்கள், மா, மகிழமரங்கள் ஆகிய வற்றின் வரிசைகள் சூழத் தென்னை, இலவங்கம், நாரத்தை, கமுகு, சந்தன மரங்கள், வாழை, இலுப்பை

ஆகியவை தழைத்த மரங்களும், வஞ்சிக் கொடிகளும் பல எங்கும் நெருங்கியிருக்கும் மேகக்கூட்டங்கள் தங்கியிருக்கும் சோலைகள் எங்குமாயிருக்க அங்கு குயில்கள் நெருங்கிக் கூவ, தேவர் உலகைப் பார்க்கிலும் சிதம்பரத்தின் புறத்துள்ள வயல்கள் பொலிவுடையதாயின.

அ.ரை :- நாகம்-நாக மரங்கள். சூதம்-மாமரங்கள். வகுளம்-மகிழ மரங்கள். சரளம்-வரிசை. நாளிகேரம்-தென்னை. நரந்தம்-நாரத்தை மரம். பூகம்-பாக்கு மரம். குழல்-குங்குமமாம். மதூகம்-இலுப்பை. பொதுளும்-தழைத்து மிகுந்த. வஞ்சி-ஒரு கொடி. மேகசாலம்மலி-மேகக் கூட்டங்கள் தங்கும். கோகிலம்-குயில் மிடைந்து ஒன்று சேர்ந்து, நெருங்கி. மிழற்ற-ஒலிக்க. போக பூமி-தேவர் உலகு, இந்திரலோகம். பூம் புறம் பணை-பொலிவு மிக்க புறவயல்கள்.

வன்னி கொன்றைவழை சண்பகம் ஆரம் மலர்ப்ப
லாசொடு செருந்திமந் தாரம்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை கற்பு பாடலம்
கூ விளம் ஓங்கித்,
துன்னு சாதிமரு மாலதி மௌவல் துதைந்த நந்திகர
வீர மிடைந்த,
பன்ம லர்ப்புனித நந்த வனங்கள் பணிந்து சென்றனன்
மணங்கமழ் தாரான். 230

வி.ரை :- வன்னி, கொன்றை, சர புன்னை, சண்பகம், சந்தன மலர் முருக்க மரங்களுடன், செருந்தி, மந்தாரம், கோங்கு, குராமரங்கள். கொடி மல்லிகை, பாதிரி, வில்வம் ஆகிய ஓங்கி வளர்ந்தனவும், செறிந்த சிறு சண்பகம், மரிக்கொழுந்து, முல்லை, இதழ் மிகுந்த நந்தியா வட்டம், அலரி ஆகியவை நெருங்கிக் கிடக்கப் பல மலர்களால் அமைந்த மலர்த் தோட்டங்களைக் கண்டு மகிழ்ந்து மணம் வீசும் மலர் மாலையணிந்த வன்தொண்டர் சென்றனர்.

அ.ரை :- வன்னி-வன்னிமரம். வழை-சரபுன்னை மரம், ஆரம்-சந்தனமரம், சிலர் அத்தி என்பர். பலாசு-முருக்கமரம். செருந்தி-ஒருவகை மரம். மனத்தக்காளி, வாட் கோரை எனவும் கூறுவர். மந்தாரம்-சோம்பு. கன்னிகாரம்-கோங்கு, குரவம்-குராமரம். கற்பு-கொடி மல்லி, பாடலம்-பாதிரி. கூவளம்-வில்வம். சாதி-சிறு சண்பகம். மரு-மருக்கொழுந்து. மருதோன்றி எனினு மாம். மாலதி-மல்லிகை, முல்லை, சண்பகம் எனினு மாம். மௌவல்-வன மல்லிகை. நந்தி-நந்தியாவட்டம். கரவீரம்- அலரி, நந்தவனம்-மலர்ச்சோலை, மணங்கமழ் தாரான்-வன்தொண்டர்

அகழி கண்டு மகிழ்ந்தது

இடம ருங்குதனி நாயகி காண ஏழ்பெ ருர்புவனம்
உய்ய எடுத்து
நடந வின்றருள் சிலம்பொலி போற்றும் நான்ம றைப்
பதியை நாளும் வணங்கக்
கடல்வ லங்கொள்வது போல்புடை சூழுங் காட்சி
மேவிமிகு சேண்செல ஓங்கும்
தடம ருங்குவளர் மஞ்சிவர் இஞ்சித் தண்கி டங்கைஎதிர்
கண்டு மகிழ்ந்தார். 231

வி.ரை :- அருகில் உள்ள ஒப்பற்ற நாயகி சிவகாம வல்லியம்மை கண்டு களித்திட உலகங்கள் ஏழும் உயர்வுபெறுமாறு தன் திருப்பாதத்தைத் தூக்கித் திரு நடனம் புரிந்தருளும்பொழுது எழும் பாதச் சிலம்பின் ஒலி போற்றும் நான்கு வேதங்களும் போற்றும் திருப்பதி யைத் தினமும் வணங்கக் கடல் வலம் வந்து சூழ்வது போன்று சூழும் பொருந்திய வானளாவி ஓங்கியிருக்கும் அகன்ற பகுதிகளில் மேகங்கள் தவழும் மதில்களை யுடைய குளிர்ந்த அகழிகண்டு வன்தொண்டர் மகிழ்ந்தார்.

அ.ரை :- இட மருங்கு-அருகில் உள்ள. தனிநாயகி-ஒப்பற்ற சிவகாமவல்லி. ஏழ்பெரும்புவனம்-ஏழுலகம். ஏழும் உலகம் எனினுமாம். எடுத்து-தூக்கி குஞ்சித பாதம். நடம் நவின்று - நடனமாடி. நான்மறைப் பதி-சிதம்பரம். மேவி-பொருந்தி. சேண் செல ஓங்கும்-வானளாவி ஓங்கும். தடம்-அகன்ற, மஞ்சு இவர் இஞ்சி-மேகங்கள் தவழும் மதில். கிடங்கை-அகலி.

மன்று ளாடுமது வின்நசை யாலே மறைச்சு ரும்பறை
புறத்தின் மருங்கே,
குன்று போலுமணி மாமதில் சூழுங் குண்ட கழ்க்கமல
வண்டலர் கைதை,
துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறு புனை
தொண்டர்கள் என்னச்,
சென்று சென்று முரல்கின்றது கண்டு சிந்தை அன்பொடு
திளைத்தெதிர் சென்றார். 23 2

வி.ரை :- மது அருந்தினது போன்று மயக்க இன்பம் தரும் இறைவன் மன்றுள் ஆடுவது காணும் நப்பாசையாலே, வேதங்களை ஓதும் சுரும்புகள் ஒலிக்கும். புறஇடத்தருகில் குன்று போன்றும் மணிகள் பதித்த அழகிய பெரிய மதிலால் சூழப்பட்ட அகழிகளி லிருக்கும் தாமரை மலரில் மொய்க்கும் வண்டுகள், அருகே மலர்ந்திருக்கும், தாழம்பூக்களில் நிறைந்துள்ள வெண் மகரந்தப் பொடியை மலர்கள்தோறும் எடுத்துச் சென்று ஒலித்து வருவது அவை திருநீறு பூசிய மேனிய வாகித், தூய த்ருநீறு பூசிய தொண்டர்கள் எனக் கண்டு மகிழ்ந்து அன்பொடு திளைத்து எதிர் சென்றடைந்தார்.

அ.ரை :- மன்று ளாடும் மது-இறைவன் மன்றுள் ஆடுவதனைக் காண்பது மது உண்டது போன்று

போதை ஏற்றுவதாகும். நசையாலே-நப்பாசையாலே பேராசையாலே எனினுமாம். மறைச சுரும்பு-வண்டுகளின் ரீங்கார ஓசை வேத முழக்கமெனக் கண்டார் என்க. குன்று போலும் மணி மாமதில்-குன்று போன்று உயர்ந்து மணிகள் பதிந்த மதில். குண்ட கழிக் கமலம்-ஆழமாகிய அகழியில் உள்ள தாமரை. குண்டு-ஆழம். கைதை-தாழம்பூ, துன்று-நிறைந்த. நீறு-திருநீறு, வெண்பொடி. மேனியவாகி - உடலில் பூசினவாகி. முரல்-ஒலித்தல். திளைத்து-மகிழ்ந்து.

வடக்கு வாயிலை யடைந்தது

பார்விளங்க வளர் நான்மறை நாதம் பயின்ற பண்புமிக
வெண்கொடி ஆடும்,
சீர்விளங்குமணி நாவொலி யாலும் திசைகள் நான்கெதிர்
புறப்பட லாலும்,
தார்விளங்குவரை மார்பின் அயன்பொன் சதுர்மு
கங்களென ஆயின தில்லை,
ஊர்விளங்குதிரு வாயில்கள் நான்கின் உத்தரத்திரு
வாயில் முன் எய்தி. 233.

வி.ரை :- உலகம் சிறப்புற்று விளங்க வளர்ந்தோங்கி முழங்கும் நான்கு வேதங்களை ஓதும் இயல்பானதும், சீர்மிகுந்து விளங்கும் மணியின் நாத ஒலியானது, நான்கு திசைகளிலும் பரவி எதிரொலிப்பதாலும், மாலைஅணிந்த மலைபோன்ற மார்பையுடைய பிரம்மனின் பொன்போன்ற நான்கு முகங்களை போன்று அமைந்தன. பெருமை விளங்கும் வெண்மையான கோயிற் கொடிகள் ஆடும் நான்கு வாயில்களில் வடக்குத் திருவாயிலின் முன் சென்றடைந்தார்.

அ.ரை :- பார் விளங்க-உலகம் உயர்வு பெற, உலகில் புகழ் மிக்க. நான் மறை நாதம் பயின்ற பண்பு-நான்கு வேதங்கள் ஓதும் இயல்பானது. மணி நா.

கோயில்— மணியின் நாக்கு. எதிர்புறபடல் - எதிர் ஒலித்தல். தா -மாலை. வரை-மலை. சதுர் முகம்-நான்கு முகம். ஊர்விளங்கு. திருவாயில்கள்-பெருமை மிகுந்து நிறைந்த திருவாயில்கள்.

திருவீதி புகுந்தது

அன்பின் வந்தெதிர் கொண்டசீர் அடியார் அவர்க
ளோநம்பி ஆரூரர் தாமோ,
முன்பி றைஞ்சினர் யாவரென் றறியா முறைமையால்
எதிர் வணங்கி மகிழ்ந்தும்
பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து பெருகு நாவல்நக
ரார்பெரு மானும்,
பொன்பி றங்குமணி மாளிகை நீடும் பொருவி றந்ததிரு
வீது புகுந்தார். 234

வி.ரை :- நம்பியாரூர் கோயிலின் வட வாயிலை யடைந்ததறிந்த அடியார்கள் வணங்க அதற்குமுன் ஆரூரர் வணங்க, யார் முதலில் வணங்கினார் என்பதறியாத நிலையினராய் இருவரும் எதிர்வணங்கி மகிழ்ந்து, பின்பு இறைவனைக் கும்பிடும் விருப்பம் நிறைந்து பெருக, நாவலூராரும், பொன்னால் வேயப்பட்ட அழகிய மாளிகையுடைய நீண்ட ஒப்பற்ற திருவீதியினுட் புகுந்தார்.

அ.ரை :- இறைஞ்சினர்-வணங்கினர். யாவரென் றறியா முறைமை - யார் முதலில் வணங்கினர் என்று அறிந்து கொள்ள முடியாத நிலைமை. நாவல் நகரார் பெருமான்-திருநாவலூர் நம்பி ஆரூரனார். பொன் பிறங்கு-பொன்னால் அமைந்த. பெருவி இறந்த-ஒப்பற்ற. ஒப்பு இல்லாத. பொருவு-ஒப்பு.

திருவீதி புகுந்தது

அங்கண் மாமறை முழங்கும் மருங்கே ஆட ரம்பையர்
அரங்கு முழங்கும்,

மங்குல் வானின் மிசை ஐந்து முழங்கும் வாச மாலைகளில்
வண்டு முழங்கும்,
பொங்கும் அன்பருவி கண்பொழி தொண்டர் போற்றி
சைக்கும் ஒலி எங்கும் முழங்கும்,
திங்கள் தங்குசடை கங்கை முழங்கும் தேவ தேவர்புரி
யுந்திரு வீதி. 235

வி.ரை :- செல்லும் வீதியில் இருபக்கமும் அழகிய சாகைகளையுடைய வேதங்கள் ஒரு பக்கம் முழங்கும். ஒரு பக்கம் தேவர் மகளிர் ஆடும் அரங்குகள் ஒலிக்கும். மேகம் தவழும் வானின் மீது ஐந்து வகையான வாத்தியங்களின் ஓசை முழங்கும். மணம் வீசிம் மாலைகளில் வண்டுகளின் ஓசை எங்கும் கேட்கும், பொங்கும் அன்பு பொழியும் கண்ணீர் அருவியெனப் பொழியத் தொண்டர்கள்போற்றி இசைக்கு ஒலியானது, நிலவைத் தலையில் கங்கையுடன் அணிந்து முழங்கும் தேவாதி தேவன் வாழும் திருவீதி எங்கும் முழங்கும்

அ.ரை :- அம்கண் - அழகிய. , மருங்கே - இரு பக்கமும். மங்குல்-மேகம். ஐந்து-ஐந்து வாத்திய முழக்கங்கள். தேவர் தேவர் புரியுந் திருவீதி-தில்லை வாழ் அந்தணர் வாழ் வீதி எனினுமாம்.

திருவீதியின் சிறப்பு

போக நீடுநிதி மன்னவன் மன்னும் புரங்கள் ஒப்பன
வரம்பில ஓங்கி
மாக முன்பருகு கின்றன போலும் மாளி கைக்குலம்
மிடைந்தப தாகை
யோக சிந்தைமறை யோர்கள் வளர்க்கும் ஓமதூமம்
உயர் வானில் அடுப்ப
மேக பந்திகளின் மீதிடை எங்கும் மின்னு டங்குவன
என்ன விளங்கும். 236

வி.ரை:- வரம்பில்லாமல் ஓங்கி உயர்ந்து நின்ற வெண் கொடிகள் வானத்தை முன்னே உண்கின்றன போன்று மாளிகைகளின் கூட்டமானது, போக நீடு நிதி மன்னவன் குபேந்திரன் நகரை ஒத்திருந்தது. அங்கு யோகம் செய்வதே எண்ணமாக உடைய அந்தணர்கள் வளர்க்கும் ஓமப் புகையானது வானில் எழுந்து மூடிக் கொள்ள மேகங்களிடையே எங்கும் மின்னல்கள் தோன்றுவன போன்று இருந்தன.

அ.ரை:- போக நீடு நிதி மன்னன்—குபேரன். மாகம்—வானம். பருகுகின்றன—உண்ணுகின்றன. வான ளாவிய மாளிகைகளின் மீதுள்ள கொடிகள் மேக நீரை உருஞ்சிக் குடிக்கின்றன எனக் காண்க. மிடைந்த—நெருங்கியிருந்த. பதாகை—மாளிகை மீது பறக்கும் கொடிகள். யோக சிந்தை மறையோர்—யாகம் செய்யும் மனத்தினரான அந்தணர். ஓமதூமம்—ஓமப்புகை. அடுப்ப—சென்றடைய. மேகபந்திகள்—மேக அடுக்கு கள், மின் உடங்குவன, மின்னல் கிடந்தன. மாளிகை களின் மேல் வீசும் வெண் கொடிகள் ஓமப்புகையின் இடையில் மின்னல் எனத் தோன்றின என்பதால் "உடங்குவன" என்றனர். உடங்குவன—ஒத்திருந்தன.

ஆடு தோகைபுடை நாசிகள் தோறும் அரணி தந்தசுடர்
ஆகுதி தோறும்,
மாடு தாம்மணி வாயில்கள் தோறும் மங்க லக்கலசம்
வேதிகை தோறும்,
சேடு கொண்ட ஒளி தேர்நிரை தோறும் செந்நெல் அன்ன
மலை சாலைகள் தோறும்,
நீடு தண்புனல்கள் பந்தர்கள் தோறும் நிறைந்த தேவர்
கணம் நீளிடை தோறும் 237

வி.ரை:- கோபுர நாசிகள் தோறும் தோகை விரித்து ஆடும் மயில்களின் கூட்டம், யாகக் குண்டங்

கள் தோறும் தீக்கடைக் கோலால் உண்டாக்கப்பட்ட நெருப்பு, அழகிய வாயில்கள் தோறும் பக்கங்களில் கட்டப்பட்ட மாலைகள், திண்ணைகள் தோறும் மங்கலக் கலசங்கள், பெருமை கொண்ட ஒளிவீசும் தேர் வரிசைகள் தோறும் அலங்கார ஒளி வீசுவன. அறச் சாலைகளெங்கும் மலைகளென செந்நெற் குவியல்கள், குளிர்ந்த நீர் நிலைகள் தோறும் பக்தர் களின் கூட்டம். தேவர் கணங்களின் கூட்டம் நீண்ட வீதியெங்கும் நெருங்கியிருக்க விளங்கியது திருத் தில்லை.

அ.ரை:- நாசி-மதிலின் நாசி. ஆடு தோகையுடை-மயில்கள். அரணி-தீ மூட்டும் கட்டை. ஆகுதி-வேள்வி தாமம்-கட்டப்பட்ட மாலை. சேடு-பெருமை. தேர்நிரை-தேர் வரிசை. பந்தர்-பக்தர். தேவர்கணம்-தேவர் கூட்டம்.

எண்ணில் பேர்உல கனைத்தினும் உள்ள எல்லையில்
அழகு சொல்லிய எல்லாம்,
மண்ணில் இப்பகுதியில் வந்தன என்ன மங்க லம்
பொலி வளத்தன ஆகிப்
புண்ணி யப்புனித அன்பர்கள் முன்பு புகழ்ந்து
பாடல்புரி பொற்பின் விளங்கும்,
அண்ணல் ஆடுதிரு அம்பலம் சூழ்ந்த அம்பொன்
வீதியினை நம்பி வணங்கி. 238

வி.ரை:- இந்த உலகில் பேரழகு என்று சொல்லப் பட்டதத்தனையும், மண்ணில் இப்பகுதியில் வந்து சேர்ந்தது என்று கூறும்படி அழகு பொலிந்து வளம் மிக்கதாகிப் புண்ணியம் செய்த புனிதர் முன்பு புகழ்ந்து

பாடப்பட்ட இடமாதலின் பொன் வேய்ந்து விளங்கும் நடராசப் பெருமான் ஆடும் பொன் அம்பலத்தைச் சுற்றிய அழகிய பொன் வீதியினை நம்பியாரூரர் வணங்கினார்.

அ. ரை:- உலகனைத்திலும் — உலகில் உள்ள எல்லாவற்றிலும் எல்லா உலகங்களிலும் எனவும் காண்க. புண்ணிய புனித அன்பர்கள்—திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலானோர். அண்ணல்—நடராசப்பெருமான்.

பொன்னம்பலத்துள் புகுந்தது

மால யன்சத மகன்பெருந் தேவர் மற்றும் உள்ளவர்கள்
முற்று நெருங்கிச்
சீல மாமுனிவர் சென்று முன் துன்னித் திருப்பி ரம் பின்
அடிகொண்டு திளைத்துக்
கால நேர்படுதல் பார்த்தயல் நிற்பக் காதல் அன்பர்
கண நாதர் புகும்பொன்
கோல நீடுதிரு வாயிலிறைஞ்சிக் குவித்த செங்கை தலை
மேற்கொடு புக்கார் 239

வி.ரை:- திருமால், அயன், இந்திரன் முதலானவர் களும் மற்றும் வருணன், வாயு, அக்கினி போன்ற பெருந் தேவர்களும் மற்றுமுள்ள முப்பத்து முக்கோடி தேவர்களும் ஒருவருக்கொருவர் நெருக்கிக் கொண்டிருக்க, சிறப்பு மிக்க முனிவர்கள் முன்னால் முந்திக் கொண்டு செல்ல அங்கு பிரம்பை ஏந்தி நிற்கும் நந்தி தேவரின் பிரம்படிபட்டு வருந்தித் தங்கள் நேரம் வரக் காத்துக் கிடக்க, சிவனடியார்கள் புகுந்து வழிபடும் பொன்னால் மின்னும் அழகிய நீண்ட திரு வாயிலை வணங்கிக் குவித்த கைகள் தலைமேற் கொண்டு புகுந்தார்.

அ.ரை:- மால்—திருமால், அயன்—பிரம்மன் சத மகன்—இந்திரன். பெருந்தேவர்—அக்கினி, வருணன், வாயு முதலானோர். முற்று நெருங்கி—முந்திக் கொண்டு நெருங்கியிருக்க. முன் துன்னி—முந்திக் கொண்டு சென்று, பிரம்பின் அடி—நந்திதேவரின் கையில் உள்ள பிரம்படி. திளைப்ப—திகைப்ப. கால நேர்படுதல்—தங்கள் நேரம் வரக் காத்து நிற்க. காதல் அன்பர்—சிவனடியார்கள்.

திரு அணுக்கன் திருவாயில் புகுந்தது

பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின் பிறங்குபேர்
அம்பல மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர் வணங்கிய
மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம்
சிந்தையில் அலர்ந்த,
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலமுன் திரு அணுக்
கன்திரு வாயில். 240

வி.ரை:- ஒளிவீசும் பெருமதில் சிறந்து விளங்கும் பசும்பொன் மாளிகையாகிய பேரம்பலமாகிய மேருவை முறைப்படி வலம் வந்து வணங்கிப் பின்னர் வணங்கிய மகிழ்ச்சியொடும் அரிய வேதங்கள் முதலில், நடுவில், கடையில் என்று அன்பர் நம்பியாரூர் தமது எண்ணத்தில் மலர்ந்தமையின் அருட்டிரு வளர்ந்து ஒளி வீசும் திருச்சிற்றம்பலத்தின் முன்வந்து திரு அணுக்கன் திரு வாயில் புகுந்தார். இங்கு பேரம்பலம் சிற்றம்பலம் என்றதில் பேரம்பலம் அண்டத்தைக் குறிப்பது சிற்றம் பலம் பிண்டம்.

அ.ரை:- மின் பிறங்கும் — மின் ஒளிவீசும். பேர் அம்பல மேரு—பேரம்பலமாகிய மேரு. பேரம்பலம்

மேருவை ஒத்திருத்தலை, மேருவை ஒத்திருத்தலால் மேரு என்றனர். அருமறை முதலில் நடுவில் கடையில்—பிரணவம் ஓம் எனும் அ உ ம் என்பது. இம் மூன்றும் முதல் மூன்று மறைகளின் முதல் இடை கடை என நிற்கின்றன என்பதாம். திருஅணுக்கன்—அம்பலத்து அருகில் உள்ள வாயில்.

திருக்களிற்றுப்படி மருங்கு சென்றது

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்றுளே
மாலயன் தேட,
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றாரை அஞ்சலி
மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக் கரணமோகலந்த
அன் புந்தச்
செய்தவப் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
திருக்களிற் றுப்படி மருங்கு 241

வி.ரை:- இறைவன் சிதாகாசத்திலே ஆட ஐயன் காலில் அணிந்த மறைச்சிலம்புகள் ஒலிக்க அந்த ஒலியினால் உலகம் உயிர்பெற்றுத் தழைத்துப் பொலிவு பெற, சிலம்பொலி கேட்ட மாலும் அயனும் ஈசன் ஆடுகிறான் என்று மன்றத்துளே ஓடிச்சென்று காணாது தேட, தனது திருக்கைகளை மேலே குவித்து அஞ்சலி செய்து குவித்த கைகளுடன் கண்களும் அந்தக்கரணமும் கலந்த அன்பு உந்தித் தள்ளப் பெருந்தவப் பெரியோனாகிய நம்பி ஆரூர் திருக்களிற்றுப் படியின் பக்கம் சென்று தாழ்ந்து விழுந்து எழுந்தார்.

அ.ரை:- பொலிய—அழகுபெற. மறைச் சிலம்பு—ஈசன் காலணியாகிய வேதம் எனும் சிலம்பு. வெளியே—சிதாகாசத்தில். அந்தக் கரணமோகலந்த— உள்எழுந்த அன்பு அந்தக் கரணத்தை இயக்க. திருக்களிற்றுப்படி

—பஞ்சாட்சரப்படி. களிறு தாங்கி நிற்கும்படி. கனக சபையின் திருவாயிற் படி.

ஆனந்தக் கூத்தனைக் கண்டு களித்தது

ஐந்துபேர் அறிவுங் கண்களே கொள்ள அளப்பருங்
கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும் திருந்து சாத்
துவிகமே ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த எல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா
மகிழ்ச்சியில் மலர்ந்தார். 242

வி.ரை:- ஐம்பொறிகளும் ஒருமைப்பட்டுக் கண்களில் நிலை பெற்று நின்ற கண்களே கொள்ளக் கண்டு அறிந்தறியப்படாத அந்தக் கரணங்கள் நான்கும் மனமே ஆக ஒன்றித்து, குணம் மூன்றும் சாத்துவிகம் என்று ஒன்றாக உணரப்பட்டு, நிலவு வாழும் சடையப்பர் ஆடும் ஆனந்த எல்லையில்லாத தனிப்பெருங் கூத்தினைக் கண்டதால் அடைந்த பேரின்ப வெள்ளத்துள் மூழ்கித், திணறி மாறுபாடில்லா மகிழ்ச்சியில் உள்ளம் மலர்ந்தார்.

அ.ரை:- ஐந்துபேர்—ஐம்பொறிகள். கண், காது வாய், மெய். ஐந்துபேர் அறிவு: கண்பார்ப்பதும், காது கேட்பதும், வாய் சுவைப்பதும் மெய் உணர்வதுமாகும். கண்களே கொள்ள—இவ்வைந்து பேருடைய அறிவும் கண்களில் நின்று இயங்க. கரணங்கள்—அந்தக்கரணங்கள் அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்குமாம். அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையே ஆக—கரணங்களை அளந்து அறியப்படாத

தாகிய நான்கும் சிந்தையில் நிலைபெற்று ஒன்றித்துச் சிந்தையேயாக. குணம் மூன்று—இராசதம், தாமதம், சாத்விகம். குணம் மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக—குணம் மூன்றும் ஒன்று சேர்ந்து சாத்துவிகம் ஆக. இந்து — நிலவு. கூத்தின் வந்த — திருக்கூத்தால் விளைந்த. திளைத்து—மூழ்கித் தாங்க இயலா இன்பத்தில் திணறி. மலர்ந்தார்—மூடிக்கிடக்கும் மொக்கு மலர்வது போன்று கூம்பிக் கிடந்த அவரது மனம் மலர்ந்து விரிந்தது.

பதிகம்பாடிப் பரவசமானது

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்
ஆம் என்று
கண்ணில்ஆ னந்த அருவிநீர் சொரியக் கைம்மலர்
உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார்
பரவினார் பணிந்தார். 243

வி.ரை:- ''வெண்ணிலாவை அணிந்த சடையை உடையவனே! உனது திருநடனம் கண்டு கும்பிடப் பெற்று இந்த மண்ணில் வந்து பிறவி எடுத்த எனக்கு வலிமை மிக்க பேரின்பமாகும்'' என்று கண்களில் ஆனந்த வெள்ளம் அருவியெனச் சொரிய மலர்போன்ற திருக்கைகளை உச்சியின் மேல் குவித்து இசையினால் நீண்ட அறிதற்கு அரிய பதிகம் பாடிப் பரவிப் பணிந்தார்.

அ.ரை:- தெண்ணிலா — தெளிந்த நிலா. வெண்ணிலா. வேணி—சடை. சடையப்பன். வாலிதாம்—

வலிமை மிக்கதாம். சிறப்புடையதாம். மண்ணில் வந்து பிறந்திடாவிடில் இந்தச் சிறப்பு கிடைத்திருக்காது என்றபடி. பண்—இசை, இசைப்பாட்டு.

தடுத்துமுன் ஆண்ட தொண்டனார் முன்பு தனிப் பெருந்
தாண்டவம் புரிய,
எடுத்தசே வடியார் அருளினால் ''தரளம் எறிபுனல்
மறிதிரைப் பொன்னி,
மடுத்தநீள் வண்ணப் பண்ணைஆ ரூரில் வருக நம்
பால்'' என வானில்
அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதம் கேட்டலும்
அதுவுணர்ந் தெழுந்தார். 244

வி.ரை:- முன்பு தடுத்தாட் கொண்ட தன் வன் தொண்டர் முன்பு ஒப்பற்ற பெரிய நடனம் புரியத் தூக்கிய சிவந்த திருப்பாதங்களையுடையவரது அருளினால் முத்துக்களை வீசி எறிந்து மீளும் நீரலைகளை யுடைய காவிரி பாயும் நீண்ட அழகிய வயல்களால் சூழப்பட்ட திருவாரூரில் நம்மிடம் வந்து சேருக'' எனும் ஒரு வானொலி கேட்டதும் அதனை உணர்ந்து எழுந்தார்.

அ.ரை:- தாண்டவம்—நடனம். தரளம்—முத்து. எறிபுனல் — வீசும்நீர். மறிதிரை — திசைமாறி திருப்பி வந்து. மடுத்த—பாய்ந்து. நிறைந்த நீள்வண்ணம்—நீடித்த அழகு. எட்டின திசையெங்கும் பச்சைநிறத் தோற்றம் உணர்ந்தெழுந்தார் — உணர்வு பெற்று எழுந்தார்.

கோபுரம் வணங்கிப் புறப்பட்டது

ஆடுகின் றவர்பேர் அருளினால் நிகழ்ந்த அப்பணி
சென்னி மேல் கொண்டு,
ஓடுதம் கரங்கள் அஞ்சலி கொண்டு தொழுந்
தொறும் புறவிடை கொண்டு,
மாடுபே ரொளியின் வளரும்அம் பலத்தை
வலங்கொண்டு வணங்கினர் போந்து,
நீடுவான் பணிய உயர்ந்த பொன்வரைபோல நிலைஎழு
கோபுரம் கடந்து 245

வி.ரை :- அம்பலத்தாடுவாரது பேரருளினால் 'திருவாரூருக்குத் தம்மிடம் வா' என்று சொன்ன பணியைத் தலைமேல் கொண்டு, கைகளைத் தலைமேல் குவித்து அஞ்சலி செய்து தொழுது புறப்படுவதற்கு விடை பெற்று, தன்னிடத்தே வளரும் பேரொளியுடைய அம்பலத்தை வலம் வந்து வணங்கிச் சென்று நீண்டு வானளாவிய பொன் மலைபோலும் உள்ள ஏழு நிலைக் கோபுரம் கடந்து சென்றார்.

அ.ரை :- ஆடுகின்றவர் — தில்லைக் கூத்தன். நிகழ்ந்த அப்பணி—திருவாரூர் போகும் பணி. புறவிடை கொண்டு—விடை பெற்று வெளியே வந்து. போந்து—வெளியே வந்து. நீடுவான் பணிய உயர்ந்த—வானளாவிய, வான்தணிய—வானம் தாழ, கோபுரம் உயர்ந் திருக்க என்பதாம். பொன்வரை—பொன் மலை, மேரு மலை. நிலை எழு—எழு நிலைக் கோபுரம்

கொல்லிடம் கடந்தது

நின்றுகோ புரத்தை நிலமுறப் பணிந்து நெடுந்திரு வீதியை
வணங்கி,

மன்றலார் செல்வ மறுகினு டேகி மன்னிய திருப்பதி
அதனில்
தென் திரு வாயில் கடந்துமுன் போந்து சேண்படுந்திரு
எல்லை இறைஞ்சிக்,
கொன்றைவார் சடையான் அருளையே நினைவார்
கொள்ளிடத் திருநதி கடந்தார். 246

வி.ரை :- எழு நிலை கோபுரம் கடந்து சென்று நின்று கோபுரத்தை நிலத்தில் விழுந்து பணிந்து நீண்ட திருவீதியை வணங்கி, மன்றத்தையுடையவரது செல்வ வீதி வழியே சென்று, பொருந்திய சிதம்பரத்தில், தென் திருவாயில் கடந்து முன் பக்கம் சென்று தூரத்திலுள்ள திரு எல்லையை வணங்கிக் கொன்றை அணிந்த சடையனார் அருளினாலே என்றும் நினைக்கத்தக்க கொல்லிட நதி கடந்தார்.

அ.ரை :- மன்றல் ஆர்—மங்கலம் நிறைந்த, மன்றுளார் என்று மன்றையுடையவர் எனினுமாம். மறுகினூடு—வீதி வழியே. திருப்பதி-சிதம்பரம் போந்து-சென்று. சேண் படுந்திரு எல்லை—நீண்ட தூரத்துள்ள எல்லை, சிதம்பர எல்லை.

திருக்கழுமலம் சென்றடைந்தது

புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமுந்நூல் அணிமார்பார்
அறம்பயந்தாள் திருமுலைப்பால் அமுதுண்டு
வளர்ந்தவர் தாம்
பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதென முற்றுலகில்
சிறந்த புகழ்க் கழுமலமாம் திருப்பதியைச் சென்றணைந்தார்.
247

வி.ரை:- தம்மைச் சூழ்ந்து வரும் அடியவர்கள் போற்றி இசையுடன் பாடித் தொடர்ந்து வர, முப்புரி நூல் அணிந்த மார்பையுடைய நம்பி ஆரூரர் அறம் வளர்த்த உமாதேவியாரின் திருமுலைப்பால் அமுதை உண்டு வளர்ந்தவரான திருஞான சம்பந்தர் பிறக்கப் பெரும் பேறு பெற்றதென எல்ல உலகங்களிலும் சிறந்த புகழையுடைய சீர்காழி திருப்பதியைச் சென்றடைந்தார்.

அ.ரை:- புறந்தருவார்-தன்னைப் புறத்தே சூழ்ந்து வரும் சிவனடியார்கள். அறம் பயந்தாள்—முப்பத்திரண்டு தருமங்களையும் காத்த உமையம்மை. மூற்றுலகில்—உலகம் முழுவதும், எல்லா உலகங்களிலும். கழுமலம்—சீர்காழியின் பன்னிரண்டு பெயர்களில் ஒன்று.

எல்லைப்புறம் வணங்கியதும் இறைவன் தோன்றியது

"பிள்ளையார் திருஅவதா ரஞ்செய்த பெரும்புகலி
உள்ளும்நான் மதியேன்" என் றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுது மங்கைஇடம்
கொள்ளுமால் விடையானும் எதிர்காட்சி கொடுத்தருள. 246

வி.ரை:- "ஆளுடைய பிள்ளையார் திருஅவதாரம் செய்த பெரும்புகலியின் உள் இடத்தையும் நான் மதியேன்" என்று எல்லைப் புறத்தை வணங்கிக் கொண்டு நம்பிஆரூரர் வலம் வரும் பொழுது, மங்கையை இடப்பாகமாகக் கொண்ட மயக்கம் தரும் இடபவாகனத் தமர்ந்தவனும் எதிரே காட்சி கொடுத்தருளினார்.

அ.ரை :- பிள்ளையார்—திருஞானசம்பந்தர் புகலி-சீர்காழி. உள்ளும்-எல்லைப் பகுதியின் உள்ளும். வள்ளலார்—நம்பி ஆரூரர். மால்—மயக்கம் தரும். விடையான்—சிவபெருமான்.

திருத்தோணியப்பரைக் கண்டு களித்தது

மண்டியபேர் அன்பினால் வன்தொண்டர் நின்றிறைஞ்சித்
தெண் திரைவே லையில் மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
கண்டு கொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படிஎன்று
பண்தரும்இன் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினார்.
249

வி.ரை:- தேங்கிக் கிடந்த பேரன்பினால் வன்தொண்டர் சீர்காழி எல்லையில் இறைவன் காட்சியருளினதைக் கண்டு குளிர்ந்த அலைகள் வீசும் கடலில் மிதக்கும் திருத்தோணியப்பரைக் கயிலையில் இறைவன் அமர்ந்த கோலத்தில் கண்டு கொண்டேன் என்று இசை தரும் இன்னிசை தரும் திருப்பதிகம் பாடியருளினார்.

அ.ரை:- மண்டிய—தேங்கிக்கிடந்த.. திரை—அலை. வேலை—கடல். பண்—இசைப்பாட்டு. பயின்ற—செறிந்த.

திருக்கோலக்கா சென்று வணங்கியது

இருக்கோலம் இடும் பெருமான் எதிர்நின்றும் எழுந்தருள
வெருக்கோளுற் றதுநீங்க ஆரூர்மேற் செலவிரும்பிப்
பெருக்கோதஞ் சூழ்புறவப் பெரும்ப தியை வணங்கிப்
போய்த்
திருக்கோலக் கா இறைஞ்சிச் செந்தமிழ்மா லைகள்பாடி
250

வி.ரை:- வேதங்கள் கண்டு உணர முடியாத பெருமான் தன் முன்பு தோன்றியருளிய பின்பு வெற்றிடமாகி அங்கிருந்து மறைந்தருள நம்பி ஆரூரர் செல்ல விரும்பி அலைகள் பெருக்கெடுக்கும் சீர்காழிப் பெரும் பதியை வணங்கிசசெந்தமிழ் மாலைகள் பாடியருளினார்.

அ.ரை:- இருக்கு ஒல்ம்—வேதங்கள், இறைவன் தன்மையை அறிய முடியாது ஒலமிட்டு ஒலிக்கும். இருக்கு—இங்கு நான்கு வேதங்களுக்கும் ஆகு பெயராய் அமைந்தது. வெளுக்கோளுற்றது—யாதுமற்ற நிலை. பெருக்கு ஓதம்—அலைகள் பெருக்கெடுத்த கடல். ஓதம்-கடல். புறவப் பெரும்பதி—சீர்காழி.

திருப்புன் கூர்பணிந்து காவிரிக் கரையடைந்தது

தேனார்க்கும் மலர்ச் சோலைத் திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனாப்பேர் அன்புமிக அடிபணிந்து தமிழ்பாடி
மானார்க்கும் கரதலத்தார் மகிழ்ந்தஇடம் பலவணங்கிக்
கானார்க்கும் மலர்த்தடஞ்சூழ் காவிரியின் கரையணைந்தார். 251

வி.ரை:- தேன் வண்டுகள் ஒலித்து மொய்க்கும் மலர்ச் சோலைகள் நிறைந்த திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள நம் இறைவன் சிவபெருமானிடம் அடங்காப் பேரன்பு மிகுதியாக இறைவன் திருவடிகளில் விழுந்து தமிழ்பாடி அழகிய மான் கையில் ஏந்திய இறைவன் மகிழ்ந்தமர்ந்த இடங்கள் பலவும் சென்று வணங்கி மணங்கமழும் மலர்த்தடாகங்கள் சூழ்ந்த காவிரியின் கரையடைந்தார்.

அ.ரை:- தேன் ஆர்க்கும்—தேன் வண்டுகள் ஒலிக்கும். நம்பர்—நம் இறைவன் சிவபெருமான்,

ஆனா—அடங்காத. மான் ஆர்க்கும்—அழகிய மான், கரதலம்—கையில் ஏந்தி. கானார்க்கும்—மணங்கமழும்.

மயிலாடுதுறை—அம்பர் மாகாளத்தி

வம்புலா மலர்அலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப் பொன்னிப் பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின் அமர்ந்தபிரான் அடிபணிந்தார். 252

வி.ரை:- மணம் வீசும் மலர்கள் மிதந்துவர மாணிக்க மணிகளை அடித்துக் கொண்டு வந்து பாயும் பசும் பொன் துகள்கள் படர்ந்த நீண்ட கரையை யுடைய காவிரியின் நீர் நிறைந்த தீர்த்தத்தில் மூழ்கி நீராடித் தம்பிரான் சிவபெருமான் எழுந்தருளிய மயிலாடுதுறையில் வணங்கிக் கேடில்லாத சிறந்த அம்பர் மாகாளத்தின் அமர்ந்தருளிய இறைவன் அடிபணிந்தார்.

அ.ரை:- வம்புலா—மணம் வீசும். இழியும்—பாயும் படிந்தாடி—மூழ்கி நீராடி. தாவில்—தீதற்ற

திருப்புகலூர்—திருவாரூர்

மின்னார்செஞ் சடைஅண்ணல் விரும்புதிருப் புகலூரை
முன்னாகப் பணிந்தேத்தி முதல்வன்தன் அருள்நினைந்து
பொன்னாரும் உத்தரியம் புரிமுந்நூல் அணிமார்பர்
தென்னாவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார். 253

வி.ரை:- அழகாக மின்னி ஒளிரும் சிவந்த சடை யுடைய அண்ணல் சிவபெருமான் விரும்பி அமர்ந்த

திருப்புகலூரை முதலில் பணிந்து போற்றி மூவர்க்கும் முதல்வனான ஈசனது அருளினை நினைந்து மகிழ்ந்து பொன்னொளி வீசும் மேலாடையும் பூணூலும் அணிந்து மார்பினையுடைய வன்தொண்டர் தென்நாவலூரில் அவதரித்த அவர் திருவாரூர் சென்றடைந்தார்.

அ.ரை:- மன் ஆர்—அழகிய மின்னல் ஒலிபோன்ற. முன்னாக—முதலில், பொன்னாரும்—பொன் ஒளி வீசும். உத்தரியம்—மார்பில் அணியும் ஆடை, மேலாடை புரிமுந்நூல்—பூணூல்

திருவாரூராருக்கு ஈசன் அருளியது

தேராரு நெடுவிதித் தருவாரூர் வாழ்வாருக்கு
"ஆராத காதலின்பம் ஆரூரர் நாம் அழைக்க
வாராநின் றான்அவனை மகிழ்ந்தெதிர்கொள் வீர்" என்று
நீரோடும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள்செய்தார். 254

வி.ரை:- "தேரூரும் நெடு வீதித் திருவாரூர் வாழும் மக்களே! நீங்காத அன்பின் மிகுதியால் ஆரூரன் நாம் அழைக்க வந்திருக்கின்றான். அவனை மகிழ்ந்து எதிர் கொண்டழைப்பீர்" என்று கங்கை ஆற்றையும் நிலவை யும் சடைமுடிமேல் அணிந்த சிவபெருமான் ஏவினார்.

அ.ரை:- தேராரு—அழகிய தேர் ஊரும். வராநின் றான்—வந்துள்ளான்.

தொண்டர் எதிர் கொண்டழைக்க எழுந்தது

தம்பிரான் அருள்செய்யத் திருத்தொண்டர் அதுசாற்றி
"எம்பிரா னார்அருள்தான் இருந்தபரி சிது வானால்

நம்பிரா னார்ஆவார் அவரன்றே'' எனும்நலத்தால்
உம்பர்நா டிழிதந்தென எதிர்கொள்ள உடன் எழுந்தார். 255

வி.ரை:- சிவபெருமான் அருள்மொழி கேட்ட திருத்தொண்டர்கள் மற்றவர்களுக்குத் தெறிவித்து, "எம் இறைவன் அருள்தான் இதுவானால் ஆரூரர் நம் தலைவர் ஆவார்'' 'என்று கூறிக் கொண்டு தேவர் உலகே பூமிக்கு வந்ததென எதிர் கொண்டழைக்கச் சென்றனர்.

அ.ரை :- சாற்றி—பிறருக்கும் தெரிவித்து. பரிசு—தன்மை, விருப்பம். பிரான்—தலைவன்.

திருவாரூர் கொண்ட விழாக்கோலம்

மாளிகைகள் மண்டபங்கள் மருங்குபெருங் கொடி நெருங்கத்
தாளில்நெடுந் தோரணமும் தழைக்கமுகும் குழைத்தொடையும்
நீளிலைய கதலிகளும் நிறைந்தபசும் பொன்தசும்பும்
ஒளிநெடு மணிவிளக்கும் உயர்வாயில் தொறும் நிரைத்தார். 256

வி.ரை :- மாடமாளிகைகளிலும் மண்டபங்களிலுட் பக்கங்களெங்கும் கொடிகள் நெருக்கமாகக் கட்டி அலங்கரித்தனர். கால்களை நாட்டித் தோரணங்களும் நன்கு தழைத்து வளர்ந்த பாக்கு மரங்களும், தழைகளால் கட்டப்பட்ட மாலைகளும் நீண்ட இலைகளையுடைய வாழைகளும், பசும்பொன்னாலான நிறை குடங்களும் ஒளிவீசும் நீண்ட அழகிய விளக்குகளும் உயர்ந்த வாயில்கள் தோறும் வரிசையாக வைத்தலங் கரித்தனர்.

அ.ரை :- மருங்கு—பக்கங்களில். தாள்—நாட்டப் பட்ட கம்பங்கள். குழை—தழைகள். தொடை—மாலை. கதலி—வாழை. தசும்பு—குடம். நிரைத்தார்—வரிசை யாக வைத்தார்.

சோதிமணி வேதிகைகள் தூநறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணங் குளிர்தரள மணிபரப்பித்
தாதவிழ்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகள்நுண் துகள் அடங்க விரைப்பனிநீர் மிகத்தெளித்தார். 257

வி ரை :- ஒளிவீசும் மணிகள் பதித்த திண்ணை களில் தூய மணம் வீசும் சந்தனக்குழம்பால் அழகாக மெழுகி குற்றமில்லாத பொரி பொற்பொடிகள் தூவி குளிர்ந்த முத்துமணிகள் அதன்மீது பரப்பி, மகரந்தஞ் சிந்தும் மலர் மாலைகளால் குளிர்ந்த பந்தல்களும் ஆங்காங்கு அமைத்து வீதிகள் தோறும் தூசிகள் அடங்க மணம் வீசும் பன்னீர் எங்கும் தெளித்தனர்.

அ.ரை :- வேதிகை — திண்ணை,' யாகசாலை எனினுமாம். சாந்தணி—சந்தனக்குழம்பு. சுண்ணம்— தூள். தரளம்—முத்து. தொடை—மாலை. விரை— வாசனை. பனிநீர்—பன்னீர்.

வாயிற்புறம் வந்தெதிர் கொண்டது

மங்கலகீ தம்பாட மழைநிகர்தூ ரியம்முழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதோறும் நடம்பயில
மங்கள்பிரான் திருவாரூர் நகரவாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயில்நீள் திருவாயில் புறம்உறவந் தெதிர்
கொண்டார் 258

வி.ரை :- மங்கல இசைபாட, மழை பொழிவதெனப் பேரிகைகள் முழங்கச் சிவந்த கயற்கண்களும் முழுமையாகச்செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்த மகளிர், திண்ணைகள் தோறும் இங்குமங்கும் சென்று தங்கள் தலைவன் திருவாரூர் நகர்வாழ்வார் யாவர்க்கும் முதல்வனை பொலிவினையுடைய நீண்ட திருவாயிலின் பக்கம் அருகில்வந்து எதிர்கொண்டனர்.

அ.ரை :- தூரியம்—பேரிகை, மொடாவாத்தியம். முற்றிழை—முழுமையாக இழைக்கப்பட்ட ஆபரணம். தெற்றி—திண்ணை, மேடை. உறவந்து—மிக்வும் அருகில் வந்திட எதிர்கொண்டழைத்தனர்.

இசைப் பதிகங்கள் பாடியது

வந்தெதிர் கொண்டு வணங்குவார்முன் வன்தொண்டர்
அஞ்சலி கூப்பி நின்று
சிந்தை களிப்புற வீதியூடு செல்வார் திருத்தொண்டர்தம்மை
நோக்கி
எந்தை இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும் ஆள்வரோ
கேளிர் என்னும்
சந்த இசைப்பதி கங்கள்பாடித் தம் பெருமான் திருவாயில்
சேர்ந்தார் 259

வி.ரை :- எதிர்கொண்டுவந்து வணங்கும் திருவாரூர் சிவனடியார்களுக்கு வன்தொண்டரும் இருகைகள் கூப்பி நின்று அஞ்சலி செய்து மனம் மகிழ்ச்சியில் ஆழ்ந்திடத் திருவீதியில் செல்லும் திருத்தொண்டர் கூட்டத்தை நோக்கி, "அன்பர்களே! எந்தை இறைவன்

எழுந்தருளியிருப்பதும் திருஆரூர் இறைவன் இவ்வுல கெல்லாம் ஆட்கொண்டு உங்களை ஆட்கொண்டது போன்று எம்மையும் ஆட்கொள்வரோ'' எனும்படி சந்த இசைப்பதிகங்கள் பாடித் தம் இறைவன் திருக்கோயில் திருவாயில் சென்றடைந்தார்.

அ.ரை :- அஞ்சலி—வணக்கம். கேளிர்—நண்பர்.

திருக்கோயிலினுட் புகுந்தது

வானுற நீள்திரு வாயில்நோக்கி மண்ணுற ஐந்துறுப் பால் வணங்கித்,
தேனுறை கற்பக வாசமாலைத் தேவா சிரியன் தொழு திறைஞ்சி,
ஊனும் உயிரும் உருகும்அன்பால் உச்சி குவித்தசெங் கைகளோடும்
தூநறுங் கொன்றையான் மூலட்டானம் சூழ்திரு மாளிகை வாயில் புக்கர். 260

வி.ரை :- வானைத் தொடும் நீண்டுயர்ந்த திரு வாயிலைக் கண்டின்புற்றுஐம்பொறிகளாலும் மண்ணில் வீழ்ந்து வணங்கித், தேவர் உலகின் கற்பகமலரின் மணம் கமழும் தேவாசிரியன் மண்டபம் தொழுது உடலும் உயிரும் உருகும் அன்புப்பெருக்கால் உச்சி மேல் குவித்த கைகளுடன் தூயமணம் வீசும் கொன்றை யணிந்த பிரான் தியாகேசப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் மூலட்டானம் சூழ்ந்த திருக்கோயில் வாயில் புகுந்தார்.

அ.ரை :- வானுற — வானைத்தொடும். ஐந்துறுப் பால்—ஐம்பொறிகளால். ஊனும் உயிரும்—உடலும் உயிரும்.

மண்மிசை வீழ்ந்திறைஞ்சியது

புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயில்
மேய பிரானை யார்க்கும்,
பற்றிடம் ஆய பரம்பொருளைப் பார்ப்பதி பாகனைப்
பங்கயத்தாள்,
அர்ச்சனை செய்ய அருள்புரிந்த அண்ணலை மண்மிசை
வீழ்ந்திறைஞ்சி,
நற்றமிழ் நாவலர் கோன்உடம்பால் நன்மையின்
தன்மையை மெய்ம்மை பெற்றார். 261

வி.ரை :- புற்றைத் தன் இருப்பிடமாகக் கொண்ட ஆதிமூலத்தை, மலர்க்கோயிலில் எழுந்தருளிய பிரானை உலக மாந்தர் அனைவருக்கும் பற்றுக்கோடாய் அமைந்த ஆதிபகவனை, பார்ப்பதியை ஒரு பாகமாக உடையவனை இறைவன் அவன் மலர்ப் பாதங்களை அர்ச்சனை செய்து வணங்க அருள் பொழிந்த தலைவனை மண்ணின்மீது விழுந்து வணங்கி நற்றமிழ் நாவன்மை மிக்க தமிழ் மன்னன் நம்பியாரூரர் இந்த உடம்பைத் தாங்கிய தன் பெருமையை, பிறவிப் பயனை உண்மையாகப் பெற்றார்.

அ.ரை :- புராதனன் — ஆதிமூலம். மேய—எழுந் தருளிய. மண்மிசை—மண்மீது.

அட்டாங்க, பஞ்சாங்க வணக்கம் செலுத்தியது

அன்பு பெருக உருகிஉள்ளம் அலையஅட் டாங்கபஞ்
சாங்க மாக,
முன்பு முறைமையி னால்வணங்கி முடிவிலாக் காதல்முதிர
ஓங்கி
நன்புலன் ஆகிய ஐந்தும்ஒன்றி நாயகன்சேவடி எய்தப்பெற்ற,
இன்பவெள் ளததிடை மூழ்கிநின்றே இன்னிசை வண்தமிழ்
மாலைபாட. 262

வி.ரை :- திருக்கோயிலினுட் புகுந்து மண்மீது விழுந்து வணங்கி அன்புப் பெருக்கால் உருகி உள்ளம் அலைபாய எட்டு அங்க வணக்கமும், ஐந்து உறுப்பு வணக்கமும் இறைவன் முன்நின்று முறைப்படி செய்து, எல்லை இல்லாப் பேரன்பு முதிர்ந்து மேலெழுந்து நல்ல புலன்களாகிய ஐந்தும் ஒன்றி௨து இறைவன் சிவந்த பொற்பாதங்களை அடைந்து விழ்ந்து இன்ப வெள்ளத்தில் மூழ்கி எழுந்து நின்ற இசை வெள்ளம் பொங்க அழகிய தமிழ்மாலை பாடினார்.

அ.ரை :- அட்டாங்கம்—எட்டு அங்கம் உடலின் எட்டு உறுப்புக்களை ஒன்றாக்கி வணங்குதல் எட்டு உறுப்புக்களாவன: தலை, கையிரண்டு, காலிரண்டு, காதரண்டு, நெற்றி ஆகிய எட்டுமாம். பஞ்சாங்கம்—ஐந்து உறுப்பு. அவை: தலை, கையிரண்டு, காலிரண்டு ஆகிய ஐந்துமாம். நன்புலன் ஐந்து—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவையாம். தமிழ் மாலை—தமிழால் மாலையெனத் தொடுத்துப் பதிகம் பாடி.

"வேட்கைதீர விளையாடுவாய்" என்றது

வாழியமாமறைப் புற்றிடங்கொள் மன்னவன் ஆரரு
ளாலோர் வாக்குத்
"தோழமை ஆக உனக்குநம்மைத் தந்தனம் நாம்முன்பு
தொண்டு கொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம் என்றும் புனைந்து
நின் வேட்கைதீர
வாழிமண் மேல் விளை யாடுவாய்" என் றாரூரர் கேட்க
எழுந்ததன்றே. 263

வி.ரை :- மாமறைகள் நான்கும் வாழ்ந்திடப் புற்றில் அமர்ந்தருளிய இறைவனது அன்பான

அருளால் ஒப்பற்ற சொல், அசரீரி ஒன்று "நாம் முன்பு அடிமைகொண்ட வேள்வியின்போது அதாவது உனது திருமண நாள் அன்று நீ கொண்டிருந்த கோலத்தை என்றும் புனைந்து உன் ஆசைதீரக்காம இன்பம் அனுபவித்து மண் உலகில் விளையாடி மகிழ்ந்து வாழ்வாய், உன்மேல் எழுந்த தோழமையினால் இதனை உமக்குத் தந்தோம்" என்று ஆரூரர் கேட்கும்படி ஒலித்தது.

அ.ரை :- தோழமை—நட்பு. வேள்வி — யாகம். கோலம் — திருமணக்கோலம். வேட்கை — காம வேட்கை, பெண் இன்பம்.

கேட்க விரும்பிவன் தொண்டர் என்றும் கேடிலாதானை
இறைஞ்சி நின்றே
"ஆட்கொள வந்த மறையவனே! ஆரூர் அமர்ந்த
அரு மணியே!
வாட்கயல் கொண்டகண் மங்கைபங்கா! மற்றுன் பெரிய
கருணையன்றே!
ஈட்கம லப்பதம் தந்திதின்று நாயினே னைப்பொரு
ளாக" என்றார். 264

வி.ரை :- வானொலி கேட்டு மகிழ்ந்து "வன் தொண்டர் என்றும் முடிவில்லாதானை வணங்கி நின்று "எனை ஆட்கொள்ள வந்த அந்தணனே! திருஆரூரில் எழுந்தருளிய அரியதாகக் கிடைக்கப் பெற்ற அருள்மணியே! வாள்போன்று பாயும் நீண்டகன்ற கயல்போலும் கண்களையுடைய மங்கையை இடப் பாகத்தில் கொண்டவனே! அன்றலர்ந்த உனது கமலபாதம் தந்தருளிய இந்த நாயினேனையும் ஒரு பொருளாகக் கொண்டது உன் பெருங்கருணையல்லவா!" என்றார்.

அ.ரை :- கேட்க—அசரீரி கேட்டு வானொலி கேட்டு, கேடிலாதான்—முடிவிலாதான். மறைவன்—

இறைவன் ஒரு அந்தணன் வேடத்தில் வந்து ஆட்கொண்டனன் என்பதால். நாட்கமலபாதம்—அன்றலர்ந்த தாமரையனபாதம்.

"தம்பிரான் தோழர்" என்றழைத்தது

என்று பலமுறை யால்வணங்கி எய்திய உள்ளக்
களிப்பினொடும்
வென்றி அடல்விடை போல்நடந்து வீதிவி டங்கப்
பெருமான் முன்பு
சென்று தொழுது துதித்து வாழ்ந்து திருமாளி கைவலம்
செய்து போந்தார்
அன்று முதலடி யார்களெல்லாந் "தம்பிரான் தோழர்"
என்றே அறைந்தார் 265

வி.ரை :- இந்த நாயினேனை ஒரு பொருட்டாக ஏற்றது உன் பெருங்கருணையால் அன்றோ! என்றும் பலவாகவும் பலமுறை வணங்கி அடைந்த உளளக் களிப்பினால் வெற்றி கொண்ட சண்டையிடும் காளை போன்று பெருமிதமாக நடந்து வீதிவிடங்கப் பெருமான் முன்சென்று தாழ்ந்து தொழுது துதித்து அவன் எழுந்தருளிய திருமாளிகையை வலம்வந்த போது அடியார்கள் எல்லாம் "தம்பிரான் தோழர்" என்று முழங்கினர். அன்று முதல் இப்பெயர் நிலை பெற்றது.

அ.ரை :- வென்றி—வெற்றி. அடல்—சண்டை. போந்தார்—வந்தார், சென்றார்.

"விழுத்தவ வேந்தர்" என்றது

மைவளர் கண்டர் அருளினாலே வண்தமிழ் நாவலர்
தம்பெருமான்

மைசவ விடங்கின் அணிபுனைந்து சாந்தமும் மாலையும்
தாரும் ஆகி
மெய்வளர் கோலமெல் லாம்பொலிய மிக்க"வி முத்தவ
வேந்தர்"என்னத்
தெய்வ மணிப்புற்றுளாரைப் பாடித்தி ளைத்து
மகிழ்வொடுஞ் செல்லாநின்றார். 266

வி.ரை :- திருநீலகண்டர் அருளினால் அழகிய தமிழில் நாவன்மை மிக்க வன்தொண்டர் தனது இறைவனின் சைவநெறி பொலியும்படி அழகுசேர்த்து அணிகலன்கள் புனைந்து சந்தனமும் உருத்திராக்க மாலையும் மலர்மாலையுமாகித் தன் திருமேனி மேலும் மேலும் அழகு பெற்று விளங்க மிகுந்த தவவேந்தர் என்று யாவரும் போற்ற அழகிய தெய்வீகமமைந்த புற்றுள் அமர்ந்தாரைப் பாடிப் பரவசப்பட்டு மகிழ்ச்சியுடன் சென்றார்.

அ.ரை :- மைவளர்கண்டார்—கருமை நிறத்தைக் கொண்ட கழுத்தர். திருநீலக்கண்டர். சைவவிடங்கின்—சைவம் தழைத்த கோலம். சாந்தம்—சந்தனம். மாலை—உருத்திராக்க மாலை. தார்—மலர்மாலை. மார்பில் அசையும் மாலை. விழுத்தவ வேந்தர்—பெரிய தவசீலர், மேன்மையான தவவேந்தர்.

கமலினி அவதரித்தது

இதற்குமுன் எல்லை இல்லாத் திருநகர் இதனுள் வந்து
முதற்பெருங் கயிலை ஆதி முதல்வர்தம் பங்கி னாட்குப்
பொதுக்கடிந் துரிமை செய்யும் பூங்குழல் சேடி மாரில்
கதித்தபூண் ஏந்து கொங்கைக் கமலினி அவத ரித்தாள்
267

வி.ரை :- வன்தொண்டர் திருவாரூரில் இவ்வாறு சிறப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே எல்லையில்லாச் சிறப்புகளையுடைய இத்திருநகரில், முதன்மைத் தன்மை வாய்ந்த பெருங்கயிலையில் ஆதி முதல்வர் சிவபெருமானின் பாகத்தைக் கொண்ட நாயகிக்கு மற்று சேடியரினும் சிறப்பான மலர்க் கூந்தலாள், சிறந்த ஆபரணங்கள் தாங்கும் முலைகளையுடைய கமலினி அவதரித்திருந்தாள்.

அ.ரை :- முதற்பெருங்கயிலை — முதன்மையான தானகயிலை. பங்க—பாகமுடையவர். பொதுக்கடிந்து—பொதுமைநீக்கிய, சிறப்புடைய. கதித்தபூண்—செறிந்த ஆபரணம், சிறந்த ஆபரணம், அலங்காரமான கச்சு.

"பரவையார்" எனும் பெயர் பெற்றது

கதிர்மணி பிறந்த தென்ன உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனிதன் நன்நாள் மங்கல அணியால் சாத்த 268

வி.ரை : ஒளி வீசும் மாணிக்கம் தோன்றியது போன்று உருத்திர கணிகையர் என்று கூறப்படும் பதியிலார் குலத்துள் தோன்றிய கமலினி "பரவையார்" எனும் பெயர் பெற்று விதிக்கப்பட்ட கணிகையர் நெறியில், மேன்மையுடைய சான்றோர்கள் அமைத்தபடி நிலவைத் தலையில் அணிந்த புனிதபிரான் சிவபெருமானின் நன்நாளான திருவாதிரையன்று மங்கல அணிகலன்களைச் சாத்திச் சிவபணி செய்ய உறுதிப் படுத்தினர். குழந்தையாயிருக்கையிலேயே இந்தச் சடங்கு செய்தனர் என்பதாம்.

அ-ரை : கதிர் மணி—ஒளிவீசும் மாணிக்கம் உருத்திர கணிகை—ஒருவகை கணிகையர். சிவபெருமானுக்கு தொண்டு செய்யப் பணித்தவர்கள்

என்பர். பதியிலார்—கணவன் இல்லாதவர். இவர்கள் சிவபெருமானையே பதியாகக் கொண்டவர். விதியுளி விளக்கம் — உருத்திர கணிகையருக்கு விதிக்கப் பட்ட வாழ்க்கை நெறி. ஆன்ற—அமைந்த. நன்நாள்—திருவாதிரை எனக் காண்க. மங்கல அணியால் சாத்த—இறைவனுக்கு மட்டும் சேவை செய்ய உட்படுத்தப் படும் திருமணச் சடங்குகள். மங்கல நாள், காப்புக் கட்டுதலுமாம்.

தளர்நடைப் பருவம்

பரவினர் காப்புப் போற்றிப் பயில்பெருஞ் சுற்றம்,
திங்கள்
விரவிய பருவம் தோறும் விழா அணி எடுப்ப, மிக்கோர்
"வரமலர் மங்கை இங்கு வந்தனள்" என்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவஞ் செய்து
263

வி.ரை: கணிகையர் நெறியில் நின்ற பெருஞ் சுற்றத்தார் யாவரும், மதி, அணி புனிதனுக்கு நன்நாளில் பரவையரைக் காப்பு அணிவித்துப் போற்றி வேண்டி திங்கள் தோறும் மற்றும் பரவையர் அடைந்த பருவங்கள் ஒவ்வொன்றிலும் விழா எடுத்துச் சிறப்பித் திருக்க, சான்றோர் "கிடைத்தற்கரிய மங்கை இங்கு வந்து பிறந்தனள்" என்று மனம் தரும் மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவமடைந்தாள்,

அ-ரை:— பரவினர்—வாழ்த்தினர், வேண்டினர். காப்பு—இறைவனுக்குப் பணி செய்ய அணிவித்த காப்பு. பயில் பெருஞ் சுற்றம்—கணிகையர் கூட்டம். விரவிய பருவம்—பெண் அடையும் பருவங்கள். மிக்கோர்—சான்றோர். கணிகையிரில் மிக்கோர் எனவும் காண்க. வரமலர் மங்கை—வரமாகக் கிடைக்கப் பெற்ற பெண். கிடைத்தற்கரிய மங்கை.

அழகின் சிரிப்பு

மான் இளம் பிணையோ தெய்வ வளர் இளம்
முகையோ வாசத்
தேன் இளம் பதமோ வேலைத் திரைஇளம்
பவளவல்லிக்
கான் இளங் கொடியோ திங்கட் கதிர் இளங்
கொழுந்தோ காமன்
தான் இளம் பருவம் கற்கும் தனி இளந் தனுவோ
என்ன. 270

வி-ரை:- இளமை கொஞ்சும் பிணைமானோ! தெய்வீகத் தன்மை வளரும் இளமையான மலரா மொட்டோ! மணம் வீசும் இளமையும் பதமுமான தேனோ! அலை வீசும் கடலில் தோன்றிய இளமை யான பவளவல்லிக் கொடியோ! மூன்றாம் பிறை நிலவின் ஒளியோ! இளம் காளையர் மீது தன் அம்பைச் செலுத்தக் காமன் கற்றுக் கொள்ளப் படைக்கப்பட்ட ஒப்பெற்றஇளம் கரும்பாகியவில்லோ! என்றவாறு.

அ-ரை :- பிணை—பெண்மான். முகை—மொக்கு, வேலை—கடல். திரை—அலை. பவளவல்லிக்கொடி— செம்பவள வல்லிக்கொடி போன்றவள் எனக்காண்க. தனு—வில் புருவமாகிய வில்.

நாடுமின் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க
ஆடும்மென் கழங்கும் பந்தும் அம்மனை ஊசல் இன்ன
பாடும் இன் இசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடும்அன் புருகப்பாடும் கொள்கையோர் குறிப்புத்தோன்ற.
271

வி.ரை :- இளமையின் எழில்கோலம் நாளுக்கு நாள் வளர்ந்து மேலோங்கக் கழற்சிக்காயும் பந்தும், அம்மானை, ஊஞ்சல் முதலியன ஆடும் இன்னிசையில்

பாடும். தங்கள் நாயகி. பனிமலையில் பரமசிவனுடன் இருக்கும் பார்வதியின் பாதங்களைச் சென்றடைந்து, கயிலாயத்தில் இறைவிக்குச் சேடியாக இருந்தது மனத்தில் அரும்ப அன்பால் உருகிப் பாடும்.

அ.ரை:- மின் பொற்பு — மின்போன்று ஒளி வீசும் அழகு. நாளுநாள் வளர்ந்து பொங்கநாடும்—தன் அழகு மேலும் மேலும் வளர்ந்து பொங்கநாடும் எனக் காண்க. கழங்கு—கழற்சிக்காய் விளையாடல். ஊசல்—ஊஞ்சல். பனிமலைவல்லி—உமையம்மை.

பிள்ளைமைப் பருவம் மீதாம் பேதைமைப் பருவ நீங்கி
அள்ளுதற் கமைந்த பொற்பால் அநங்கன்மெயத் தனங்கள் ஈட்டம்
கொள்ளமிக் குயர்வ போன்ற கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
உள்ளமெய்த் தன்மை முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பார் 272

வி ரை:- குழந்தைப் பருவம் தாண்டிப் பேதமைப் பருவமும் நீங்கி, அப்படியே அள்ளி எடுத்து அணைத்துக்கொள்ளத் தூண்டும் அழகாகிய மன்ம தனது உண்மையான செல்வங்களின் கூட்டம் ஒன்று சேர்ந்தன போன்று உயர்ந்த முலைகள் கோங்கின் மொட்டைத் தோற்கச் செய்வனவாகி, உள்ளத்துள் எழுந்த உண்மைத் தன்மையானது உமையம்மைக்குத் தோழியாயிருந்ததை நினைவூட்டியதானது.

அ.ரை :- பிள்ளைமைப் பருவம்—ஐந்து வயது வரை. பேதமைப்பருவம் — ஐந்து நீங்கி ஏழுவயது வரை என்பர். பொற்பு—அழகு. அநங்கன்—அங்கங்கள் இல்லாதவன். மன்மதன். தனங்கள்—செல்வம். தனம்—தங்கம். கொங்கை, முலை. அரும்பு—மொக்கு.

பரவையார் கோயிலுக்குச் சென்றது.

பாங்கியர் மருங்கு சூழப் படரொளி மறுகு சூழத்
தேங்கமழ் குழலின் வாசம் திசையெலாம் சென்று சூழ
ஓங்குபூங் கோயில் உள்ளார் ஒருவரை அன்பினோடும்
பூங்கழல் வணங்க என்றும் போதுவார் ஒருநாள் போந்தார். 273

வி.ரை :- தோழியர் அருகில் சூழ்ந்து வரப் படர்ந்து ஒளிவீசும் தெருவில் கூடி, மணம் கமழும் கூந்தலின் வாசம் திசையெங்கும் பரவிட, ஓங்குயர்ந்த அழகிய கோயிலில் உள்ள சிவபெருமானை அவனது மலர்ப் பாதங்களை அன்பினோடும் வணங்க என்றும் போல் ஒருநாள் சென்றார்.

அ.ரை:—பாங்கியர்—தோழியர். மருங்கு—பக்கம். மறுகு—வீதி. பூங்கோயில்—அழகிய கோயில். உள்ளார் ஒருவர்—சிவபெருமான். போதுவார்—போவார்.

அணிசிலம் படிகள் "பார்வென்றடிப் படுத்தனம்" என்றாப்ப
மணிகிளர் காஞ்சி அல்குல் வரிஅர வுலகை வென்ற
துணிவுகொண் டார்ப்ப மஞ்சு சுரிகுழற் கழிய "விண்ணும்
பணியும்"என் றினவண் டார்ப்பப் பரவையார் போதும் போதில் 274

வி:ரை:—சிலம்பணிந்த அழகிய பாதங்கள், "இந்த உலகை வென்று அடிமையாக்கினோம்" என்று ஒலி எழுப்ப, மேகலை அணிந்த அல்குல் கோடுடைய படமெடுத்த பாம்பின் உலகைவென்ற துணிவுடன் ஒலிக்க, மேகமானது சுருண்ட கூந்தலுக்குத் தோற்றமையால் வானும் இவளுக்குப்பணியும் என்று வண்டுகள் ஒலிக்கப் பரவையார் கோயிலுக்குப் போனபோது.

அ.ரை :—அணிசிலம்பு — அழகிய காற்சிலம்பு. அடிப்படுத்தனம்—அடிமைப் படுத்தினோம். அடிமைப் படுத்திக் காலடியின் கீழ் மிதித்தனம். மணிகிளர்—ஒளி வீசும். ஒளிபரப்பும், காஞ்சி—அல்குல்மேல் அணிவது. வரி அரவு—படமெடுத்தபாம்பு. மஞ்சு—மேகம். சுரி—சுருண்ட அழிய—தோற்க. விண்ணும் பணியும்—வானும் அடங்கும்.

சுந்தரர் பரவையாரைக் கண்டது

புற்றிடம் விரும்பி னாரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிசனங்கள் சூழஆ ளுடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக்
கண்டார். 275

வி.ரை :- தனது பரிசனங்கள் புடைசூழப் புற்றில் விரும்பி அமர்ந்தருளிய பிரானைப் போற்றித் தொழு தற்குச் சென்ற நம்பி ஆரூரர், நல்வினைக்குப் பெருமை சேர்க்கும் புன்னகை பூத்து விளங்கும் சிவந்த உதடுகளையும், வில்போன்ற நெற்றியையும் வேல்விழி யாளையும், ஒளிவீசும் அணிகலன்கள் பூண்ட பரவையாரைக் கண்டார்.

அ-ரை :— புற்றிடம் விரும்பினார் — தியாகேசப் பெருமான். பரிசனம்—ஏவலாட்கள், சிவனடியார்கள். நற்பெரும் பான்மை — நல்வினைக்குப் பெருமை சேர்க்கும் சிறப்பு. விற்புரை நுதல்—வில்போன்ற நெற்றி விளங்கிழை—ஒளிவீசும் அணிகலன்கள்.

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடையபுண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து

விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன்'' என்றசயித்தார்.
276

வி.ரை :—தேவர் உலகின் கற்பக மரத்தின் மலர்க் கொம்போ! மன்மதன் மகிழ்ந்து விளையாட அமைத்த பெருவாழ்வோ! ''புண்ணியம் செய்ததால் பெற்ற அழகோ! அல்லது அமுது செய்தபுண்ணியம் இவ்வழகு வடிவானதோ! மழை போன்ற கூந்தலும், வில்போன்ற புருவமும், குவளை போன்ற கண்களும் பவள உதடுகளும், தாமரை மலர் போன்ற முகமும் நிலவு போன்ற நேற்றியும், மணம் வீசும் கொடியிடையும் இவையென்ன அற்புதமோ! சிவனருளால் நான் இவளைக் காணப்பெற்றேனோ என வியந்தார்

அ.ரை:—கற்பகம்—தேவர் உலகக் கற்பக மரம். காமன் தன் பெருவாழ்வு—காமன் தான் விளையாடப் பயன்படுவது மகளிரின் அழகு. காமன் பெண் அழகை ஆயுதமாகப் பயன் படுத்துபவன் ஆதலின் பரவை யாரின் பேரெழில் அவனுக்குப் பெருவாழ்வு என்றபடி. காமன் சேனை மகளிர். மகளிர் இன்றேல் காமனுக்கு வாழ்வு இல்லை. சீவகசிந்தாமணி பாடல்கள் 459 மற்றும் 490 காண்க. பொற்பு—அழகு. புயல்—மேகம் கூந்தல். வில்—புருவம். குவளை—கண்கள். பவளம்—வாய். மதி—முகம். விரைக்கொடி—இடை.

''ஓவியநான் முகன்எழுத ஒண்ணாமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனாகி முன்நின்ற'' தெனநினைந்து
நாவலர்கா வலர் நின்றார் நடுநின்றார் படைமதனார்.
277

வி.ரை :- சிவனருளோ! என வியந்த ஆரூரர் நான் முகனால் இந்த எழிலோவியத்தைத் தீட்டியிருக்க

இயலுமோ என்ற வியப்பின் மிகுதியால். "நான்முகன் ஒவியம் எழுத இயலாமையால் தன் உள்ளத்தில் தோன்றியபடி வருந்திப் படைக்கப்பட்ட மணி விளக்கோ இங்கு மூவுலகும் பெற்ற பயனாய் என்முன் நிற்கின்றது" என எண்ணி எண்ணித் திருநாவலூர் கோமன் நிற்பது கண்ட மன்மதன் இவர்களிருவருக்கு மிடையே தன் படையைச் செலுத்திக் கொண்டு வந்து நின்றான்.

அ.ரை :- எழுத ஒண்ணாமை — ஓவியமாகத் தீட்ட இயலாமையால். மணிவிளக்கு — வீசும் ஒளி விளக்கு போன்றவள். மூவுலகின் பயன்—இம் மூவுலகமும் தவம் செய்து கிடைக்கப்பெற்ற பேரழகு. நாவலர் காவலர்—திருநாவலூருக்குத் தலைவன். படை மதனார்—மன்தன்.

பரவையாருங் கண்டது

தண்தரள மணித்தோடும் தகைத்தோடும் கடை பிறழும்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளர்ஒளிப்பூண்
உரவோனை
அண்டர்பிரான் திருவருளால் அயல் அறியா மனம்
விரும்பப்
பண்டை விதி கடைகூட்டப் பரவையா ருங்கண்டார். 278

வி.ரை :- குளிர்ந்த முத்தும் மணியும் சேர்த்து அமைத்த தோட்டையும் தாண்டிப் பாயும் கடைக்கண் கெண்டை மீன் எனப் பிறளுவது கண்டு ஒளிவீசும் ஆபரணங்களை அணிந்த ஆரூரர் வியப்பில் ஆழ்ந்து நிற்க, தேவாதி தேவன் திருவருளினால் மனம் வேறு பக்கம் செல்லாது முன்பு கயிலாயத்தில் ஒருவரை யொருவர் கண்டு களிகூர்ந்தமையின் விதிப்படி பரவை யாரும் கண்டார்.

அ-ரை :- தண்—குளிர்ந்த. தரளம் — முத்து. தோடு—காதணி. தகைத்து—தாண்டி. பின்தள்ளி. கடை—கடைக்கண். பூண் உரவோன்—நம்பியாரூரர். பண்டைவிதி — திருக்கயிலாயத்தில் இறைவன் விதித்தபடி.

இருவர் கண்களும் கவ்விக் கிடந்தது

கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர் நோக்கு
மெல்லியலுக்
கெண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாக
தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடமச் சம்பயிர்ப்பை
வலிந்தெழலும். 279

வி.ரை :- கண்களால் கண்டுகளிக்க இயலாத அழகு சிந்தி ஒளி வீசும் பேரழகு வானமும் கொள்ளாததாகிய பேரொளியையுடைய நம்பி ஆரூரரும் எதிரில் நோக்கப் பரவையாருக்கு அளவில்லாத முன்பு அடைந்திடாத தொரு காதல் வேட்கை அடங்காது நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய மகளிரின் இயல்பான குணங்களையும் மீறி எழுந்தது.

அ-ரை :- கவின் — அழகு. விண்கொள்ளாப் பேரொளியான் — வானும் தாங்காது ஒளிவீசும் பேரொளியையுடைய நம்பி ஆரூரர். மெல்லியல்— பரவையார். எண் பெய்தாக—முன்பு அடைந்திடாத. மண் கொள்ளா—மண்ணின் விதி முறை, இயல்பானவை. நாணம் - வெட்கம், மடம்—அறிந்தும் அறியாதிருத்தல். அச்சம்—எதிலும் அச்ச உணர்வுடன் இருத்தல். பயிர்ப்பு—ஒருவித நடுக்க உணர்வு.

பரவையார் கண்ட நம்பி ஆரூரர்.

"முன்னேவந் தெதிர் தோன்றும் முருகனோ
பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடை அண்ணல் மெய்யருள்
பெற்றுடையவனோ
என்னே!என் மனந்திரித்த இவன்யாரோ" என
நினைந்தார். 280

வி.ரை :- என் முன்னே வந்து தோன்றியருளும் முருகக் கடவுளோ! பெரும் ஒளியுடன் தனக்கு நிகரில்லாதவனான மன்மதனோ! மாலையணிந்த மார்பையுடைய விஞ்சையனோ! மின்போன்று ஒளி வீசும் சிவந்த சடையப்பரது உண்மை அருள் பெற்றவனோ! என் மனதைக் கவர்ந்த இவன் யாரோ? என நினைந்தார்.

அ-ரை :- மாரன்—மன்மதன், விஞ்சையன்—தேவர் உலகில் ஒரு வகையினர். மின்னேர்—மின் ஒளி. மனந் திரித்த—மனங்கவர்ந்த.

கோயிலினுட் புகுந்தது

அண்ணலவன் தன்மருங்கே அளவிறந்த காதலினால்
உள்நிறையும் குணநான்கும் ஒருபுடைசாய்ந்
தனஎனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடியை
வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழும் அன்பே கைக்கொண்டு
செலவுய்ப்ப. 281

வி.ரை :- புருடோத்துமனான நம்பி ஆரூரனிடம் எழுந்த அளவில்லாத காதலினால், உள்ளத்தில் தங்கி

யிருந்த அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய குணம் நான்கும் ஒன்றாகி நம்பி ஆரூரர்பக்கம் சாய்ந்தது எனினும், இவைநான்கும் இழந்து தலைவன் வயப் பட்டார் எனினும் நெற்றிக் கண்ணனாரைத் தொழும் இவரது அன்பின் சேர்க்கையானது, அழகிய மலர்கள் அணிந்த கூந்தலாள் பரவையாரை வலிமையுடைய தாக்கி, நம்பி ஆரூர்மீது சென்ற தன் மனத்தை ஒருவாறு மீட்டுக் கோயிலினுட்புகச் செலுத்தியது.

அ-ரை :- அண்ணல்—நம்பி ஆரூரர். மருங்கு—அவரிடத்தில். குணம் நான்கு—மக்ளிரின் நாற்குணங் களாகிய அச்சம், நாணம், மடம், பயர்ப்பு என்பன. ஒருபுடை சாய்ந்து—ஒரு பக்கமாகச் சேர்ந்து. நான்கும் விலகிச் சென்று. செலவுய்ப்ப—கோயிலினுட் செலுத்த.

பாங்கோடிச் சிலைவளைத்துப் படை அநங்கன் விடு பாணம்
தாங்கோலி எம்மருங்கும் தடைசெய்ய மடவரலும்
தேங்கோதை மலர்க்கிழல் மேல் நிறைவண்டு
கலந்தார்ப்பப்
பூங்கோயில் அமர்ந்தபிரான் பொற்கோயில் போய்ப்
புகுந்தார். 282

வி-ரை :- பரவையார் கோயிலினுட் புகுதலை அறிந்த மன்மதன், பக்குவமாகத் தன்வில்லை வளைத்து ஓடிச் சென்று பாணத்தைச் செலுத்த அந்த மலரம்புகள் எல்லாப் பக்கமும் சென்று கோயிலினுள் நுழையாதபடி தடை செய்திட அதாவது மனம் நீங்காது நம்பி ஆரூரர் மீது நிலைத்திட, மடப்பம் வரும் தேன் கமழும் மலர்மாலை அணிந்த வண்டுகள் மொய்த் தொலிக்கும் கூந்தலையுடைய பரவையார் அழகிய திருக்கோயிலில் அமர்ந்தருளிய இறைவனது பொன் போன்ற அழகிய கோயிலினுட் புகுந்தார்.

அ-ரை :- பாங்கு—பக்கம். பாணம் — மல அம்புகள் தாமரை; அசோகு, முல்லை, மாமலர், குவளை ஆகி ஐந்து மலர்களால் அமைந்த அம்பு. கோலி—வளைத்து. மடவரல்—மடப்பம் வரும் பெண் பரவையார். தேங்கோதை மலர்க்குழல்—தேன் மலர்க் குழல் கோதை எனக் காண்க. சிறை—இறகு.

"இளங்கொடிதான் பரவை" என்றது.

வன்தொண்டர் அது கண்டு "என் மனங்கொண்ட
மயிலியலின்
இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான்யார்"
என்ன
அன்றங்கு முன்னின்றார் "அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும் சேர்வரியார்" எனச் செய்ய. 283

வி.ரை :-பரவையார் தன்மீது கடைக் கண்ணைச் செலுத்திச் சென்றது கண்டு மனந்தளர்ந்த நம்பியும் தன்னை இழந்தவராய். "என் மனத்தைக் கொண்ட மயிலின் சாயலை உடைய இனிய செங்கனிவாயுடைய இளம் கொதாள் யார்" என்று கேட்க, அங்குஅவர் முன் நின்றவர் சிலர் "அவர்தான் பரவையார் என்னும் பெண் களில் சிறந்த இவர் தேவர்கட்கும் சேர்தற்கு அரியவர்" என்று கூறினர்.

அ ரை :- மயிலியல் — மயில் போன்ற இயல் புடையவள் அழகில் மயில் போன்றவள். தொண்டைச் செங்கனி—ஆதொண்டைச் செங்கனி. கொவ்வைக்கனி, உம்பர்தரத்தார் — தேவர்கட்கும். சேர்வரியார்— நிகராகார்

"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை
விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணி முறுவல் அரும்பரவை

சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை.'' 284

வி.ரை:—''பரவை'' என்ற பெயர் நம்பியின் காதில் விழுந்ததும் அந்தப் பேரழகு அப்படியே அவர் மனத்தில் பதிந்து விடுகிறது. ''பெயரோ பரவை, பெண்மையினில் இவள் பெரிய தேவர்களின் கூட்டம் விரும்பும் அல்குலையுடைய தேவமகளிரிலும் சிறந்தவள், அழகு சிந்தும் புன்முறுவல் அரும்பும் சிறந்த பரவை எனும், கூத்தாடும் இலக்குமியின் மென்மையான சாயலும் அழகிய பரப்பில் அகப்பட்ட எனது ஆசை ஏழு கடலெனப் பரந்ததாம்.

அ.ரை:— பெரும்பரவை—பெரு உம்பர் அவை, பெரிய தேவர்கள் அவையிலுள்ள. அல்குல் ஆர்பரவை-அல்குல் அர் பரவு ஐ—தேவர் அவையில் ஆடும் தேவ மகளிரில் சிறந்தவள். அணி திகழும்—அழகு சிந்தும், மணிமுறுவல்—புன்முறுவல், வெண் முறுவல், முல்லைச் சிரிப்பு. அரும்பரவை—அரும்பர் அவை — முல்லை அரும்புகள் அவை. சீர் பரவை ஆயினால் திரு உருவின்—பரவைக் கூத்தாடும் இலக்குமியின் உருவ மாயினாள். மென்சாயல்—அழகிய உருவின் மென்மை யான சாயல். ஏர்பரவை இடைப்பட்ட—அழகு எனும் பெரும் பரப்பில் சிக்கிய எழு பரவை—ஏழு கடல்கள். ''பரவை'' என்ற சொல் தனித்தும், பிரித்தும், கூட்டியும் பல்வேறு பொருள்களில் வருவது காண்க.

நம்பியாரூரரும் கோயிலினுட் புகுந்தது

என்றினைய பலவுநினைந் தெம்பெருமான் அருள்வகையான்
மன்தொடர்ந்து வருங்காதல் முறைமையினால்
தொடக்குண்டு
''நன்றெனையாட் கொண்டவர்பால் நண்ணுவன்''
என்றுள் மகிழ்ந்து

சென்றுடைய நம்பியும் போய்த் தேவர்பிரான் கோயில் புக, 285

வி.ரை :— என்று பலவாறு நினைந்துருகி இனிய இறைவனின் அருள் வகையாக கயிலாயத்தில் இருந்த தொடர்பால் வரும் அன்புப் பிணைப்பால் கட்டுண்டு ''நன்று இதற்கு என்னை ஆட்கொண்ட இறைவனிடம் செல்லுவேன்'' என்று உள்ளம் மகிழ்ந்து நம்பியும் தேவர்பிரான் கோயிலினுட் புகுந்தார்.

அ.ரை :— அருள்வகை—அருளும் முறையை. முன் தொடர்ந்து—கயிலாயம் தொட்டு, தொடக்குண்டு—கட்டுப்பட்டு, உடைய—என்னை அளாக உடைய ஆரூர் என்பது ஆசிரியர் கூற்று.

பரவையார் கோயிலினின்றும் புறப்பட்டது

பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனார் கோயிலினின் றொருமருங்கு புறப்பட் டார்
விரவுபெருங் காதலினால் மெல்லியலார் தமைவேண்டி
அரவின்ஆ ரம்புனைந்தார் அடிபணிந்தார் ஆரூரர். 286

வி.ரை :— பரவையார் இறைவனை வலம் வந்து வணங்கிப் போற்றி முன்னதாக சிவபெருமான் கோயிலின் ஒரு பக்கமாகப் புறப்பட்டார். நம்பி ஆரூரர் எழுந்த காதலினால் மெல்லியலாளைக் தனக்குத் தந்தருளவேண்டும் என்று பாம்பணிந்த பரமசிவன் திருத்தாள்களில் விழுந்து வேண்டினார்.

அ.ரை: — புரவல்னார் — காக்கும் இறைவன். மருங்கு—பக்கம். விரவு—பொருந்திய

பரவையாரைத் தேடியது

அவ்வாறு பணிந்தேத்தி 'அணி ஆரூர் மணிப்புற்றின்
மைவாழுந் திருமிடற்று வானவர்பால் நின்றும் போந்

தெவ்வாறு சென்றாள்என் இன்னுயிராம் அன்னம்" எனச்
செவ்வாய்வெண் நகைக்கொடியைத் தேடுவா ராயினர். 287

வி.ரை :—அவ்வாறு அடிபணிந்து போற்றி "அழகிய திருவாரூர் இரத்தினமணி போன்ற புற்றில் கருமை தவழும் திருக்கழுத்துடைய தியாகேசப் பெருமானிடத்திருந்து எனது இனிய உயிராம் அன்னம் போன்ற அவள் எவ்வாறு சென்றாள்" என்று கூறிக்கொண்டு, பவள வாயும் முல்லைச் சிரிப்பும் உடைய கொடி போன்ற பரவையாரைத் தேடுவாராயினர்.

"பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலும்ஓர் ஆசை அளிப்பதோர்
தேசு மன்னஎன் சிந்தை மயக்குற
ஈச னார் அருள் எந்நெறிச் சென்றதே" 288

வி.ரை :— "பாசமாகிய வினையின் பற்றை, தொடர்பை நீக்காது. ஆசையானது மேல்மேலும் வளர்ந்து அழகு பொருந்த என் மனமானது மயக்கம் அடைய ஈசனார் அருளிய என் மயிலியல் எந்த வழியாகக் கோயிலை விட்டுச் சென்றாளோ" எனத் தேடு? வாராயினர்.

அ.ரை :— பாசமாம் வினை—பாசம் வினைக்குக் காரணமாகிறது. தேசு—அழகு, தேஜசு. மன்ன—பொருந்த

உம்பர் நாயகர் தம்கழல் அல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கியின்
றெம்பி ரான் அருள் எந்நெறிச் சென்றதே, 289

வி.ரை :— "தேவர் தேவர் திருக்கழல்கள் அல்லாமல் வேறு எதையும் அறியாத என்னை நடுக்குறவைத்து புதுமையான மயக்கத்தைக் கொடுத்து வல்லிக்கொடி போன்றுதுவண்டு வந்த எம்பிரான் எனக்கு அருள் செய்த அவள் எவ்வழிச் சென்றனளோ?" எனத் தேடுவாராயினர்.

அ.ரை :— உம்பர்—தேவர். நம்பு மாறறியேனை—விரும்பு மாறறியாதஎன்னை. வம்புமால்—காமமயக்கம். வல்லி—வல்லிக்கொடி. ஒல்கி—துவண்டு.

"பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை ஆரவும் உன்னும் என் சிந்தையில்
வந்து மால்செய்து மான்என வேவிழித்
தெந்தை யார் அருள்]எந்நெறிச் சென்றதே" 290

வி.ரை :— "உயிர்கட்குப் பற்றையும் அப்பற்றை நீக்கி வீட்டையும் தரும் பரமனது வெற்றிக் கழல்களின் மேல் என் மனமானது நிரம்பும் படி விரும்பும் என் மனத்தில் புகுந்து, மயக்கத்தைத் தோற்றுவித்து மான் போன்று என்னை விழித்துப் பார்த்துச் சென்ற என் தந்தையார் எனக்கென்று திருகயிலையிலிருந்து அனுப்பிய அவள் எவ்வழிச் சென்றனளோ?" எனத் தேடலானார்.

அ.ரை:— பந்தம்—பற்று. உலகப் பற்று. வீடு—சிவபதம். மோட்சம். ஆர—நிறைவுபெற. உன்னும்—எண்ணும். மால்—மயக்கம்.

தேவசிரியன் மடம் சென்று தேடியது

என்று சாலவும் ஆற்றலர் "என்னுயிர்
நின்றதெங்" கென, நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின். 291

வி.ரை :— இவ்வாறும் பலவாறும் தேடி ஆற்றாமையின் மிகுதியால் என் உயிருக்கு உயிரான பரவையார் சென்றது எங்கே என்று, முத்து மணி ஆபரணம் அணிந்த முலையையுடைய மணம் கமழும் கூந்தலையுடைய வஞ்சிக்கொடி போன்றவளைத் தேடிக் கொண்டு தேவாசிரியன் மண்டபம் சென்றடைந்தார்.

அ-ரை :— சாலவும்—மிகவும் ஆற்றலர்—ஆற்றாமையால். நித்திலம் — முத்து, மன்றல் — வாசனை. தேவாசிரியன்—ஆயிரங்கால் மண்டபம்.

யாரிடமும் பேசாதிருந்தது

காவி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடும் உரையியம் பாதிருந்து
"ஆவி நல்குவர் ஆரூரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்து" எனும் போழ்தினில் 292

வி.ரை:—காவி—நீலோற்பல மலரையொத்தகண்ணினாள் பரவையாரை அடையும் பொருட்டு யாரிடமும் பேசதிருந்து "பூவின் மங்கை பரவையாரைத் தந்து ஆரூரை ஆண்ட தியாகேசப்பெருமான் என் உயிரைத் தருவார்' என்று சொன்னார்.

அ-ரை :— "நீலோர்ப்பமலர். நண்ணுவன்—சென்றடைய. உரையியம்பாது—பேசாது. பூவின் மங்கை—பரவையார். ஆவி நல்குவர்—உயிரைத் தந்திடுவார்.

ஞாயிறு மறைந்தது

நாட்டு நல்லிசை நாவலூரன் சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமுதத்தினைக்
காட்டு வன்கட லைக்கடைந் தென்பபோல்
பூட்டும் ஏழ்பரித் தேரோன் கடல்புக 293

வி.ரை :- நல்லிசை நாட்டும் நாவலூராரது மனமானது விரும்பிய மின் இடையாள் இனிய அமுதத்தை கடல் கடைந்து எடுத்துக்காட்டுவன் என்று ஏழு குதிரைகளைப் பூட்டிய ஒளிவீசும் தேரையுடைய ஞாயிறு கடலினுள் புகுந்து மறைந்தது.

அ.ரை :- நாட்டு—நிலைப்படுத்தி, வேட்ட—விருப்பம். காட்டுவான்—அடைவதன் பொருட்டு பூட்டும்—பூட்டிய, பரிதி- குதிரை.

எய்து மென்பெடை யோடிசை தேர்ந்துண்டு
பொய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
பையுள் மாலை தமியோர் பனிப்புறா. 294

வி.ரை :- நீங்காது தன் மென்மையான பெடையுடன் இரைகொண்டு வந்து உண்டு பொய்கையில் பகலைப் போக்கி மகிழும் பறவைகளின் கூட்டம் அதனதன் கூடுகளையடைந்திட பிரிந்து வாடும் தலைவியும் தலைவனும் காமநோயால் வாடிட மாலைப் பொழுது வந்தது.

அ.ரை:- தேர்ந்துண்டு—தேடி அலைந்துகொண்டு, வந்து சேர்ந்துண்டு, புள்ளினம்—பறவைக் கூட்டம் வைகுசேக்கைகண் மேற்செல—அதனதன் கூடுகளில் சென்று தங்கிட, தமியோர்—தனித்திருப்போர். பையுள் மாலை—துன்பம் தரும் மாலைப்பொழுது.

இருண்டது வான்

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்பரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சம் என்ன இருண்டது நீண்டவான். 295

வி.ரை :- பஞ்சுபோன்ற மென்மையான அடிகளையுடைய பாவையர் உள்ளமும், கொடிய மனத்திரையுடைய மாக்களுடைய தங்களது வல்வினையும் இறைவனது அஞ்செழுத்தும் உணராத அறிவில்லாதவர்களது மனம் போன்று வானமும் இருண்டது.

அ.ரை :- மெல்லடிப் பாவையர்—கணிகையர். மாக்கள் — ஐயறிவுள்ளவர். பரன் — சிவபெருமான்

நிலவு தோன்றியது

"மறுவில் சிந்தைவன் தொண்டர் வருந்திளால்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பார்" என்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்ந்தது வெண்நிலா." 296

வி.ரை :- குற்றமற்ற சிந்தனைச் செல்வர் வன்தொண்டர் வருந்தினால், வளையம் போன்ற இடுப்பினையுடைய மகளிர்களிடமிருந்து யார்தான் பிழைக்க முடியும்?" என்று மணம் வீசும் மலரணிந்த இரவு மங்கை புன்முறுவல் போன்று விழித்து எழுந்தது வெண்நிலவு.

அ.ரை :- மறுவில்— குற்றமற்ற. இறுமருங்கு— வளையும் இடுப்பு. முகிழ்த்தது—தோன்றியது. கங்குல் நங்கை—இரவு.

ஆம்பல்கள் மலர்ந்தது

அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் ஆருயிர்
வரன்கை தீண்ட மலர் குலமாதர்போல்
பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம் 297

வி.ரை :- காமுற்ற பிறன் ஒருவன் கைபட்டு வருந்திச் சுருங்கும் மகளிர் உடல் தன் ஆருயிர்க்

கணவன் தீண்ட மலர்ந்த மகிழ்ந்தின்பம் சேர்ப்பது போன்று பரந்து தோன்றிய கொடிய பகலவன் கதிர் களுக்குச் சுருங்கி குளிர் நிலவின் ஒளிக்கரங்கள்பட்டு மலர்ந்தன ஆம்பல்கள்.

அ. ரை :- அரந்தை செய்வார்—காமுற்றுக் கயமை செய்வார். அழுங்கி— வருத்திச் சுருங்கி. வரன்— தலைவன், கணவன். வெம்பகல்—சுடும் ஞாயிறு. ஒல்கி—சிருங்கி, பனி—குளிர்ந்த, கரங்கள்—ஒளிக்கதிர் கள். அலர்ந்த -மலர்ந்த. கயிரவம்—ஆம்பல், அல்லி.

நிலவொளியின் சிறப்பு

தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தன்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா 298

வி.ரை :- இம்மண்ணில் தோன்றிய உயிரினங்கட் கெல்லாம் தூய்மையான இன்பத்தையும் குளிர்ச்சியை யும் தந்து அண்ட பகிரண்டமெங்கும் பரந்து நிற்கும் அண்ணல் சிவபெருமானின் திருநீற்றின் பேரொளி போன்று பரவிய நிலவொளி இருந்தது.

அ.ரை :- சாற்றும்—செய்யும். ஆற்ற—பொருந்திய நிறைந்த. நீள்நிலா—பரந்தொளி வீசும் நிலவு, முழுமதி.

மாலைப்பொழுதின் மயக்கம்

வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினார் 299

வி.ரை :- நீர்நிலைகளில் பறவைகளின் ஒலிமாறிய மாலைபபொழுதில் நாவலூராரும், பரவை நாச்சியார் தந்துவிட்டுச் சென்ற படர்பெருங் காதலுடன் உயிரும் சோர்ந்த தனிமையினை அடைந்தார்.

அ.ரை :- வாவி—தடாகங்கள். மாறி—ஒலி நீங்கிக் காதல் ஒலி தோன்றிட பறவைகள் கூச்சலிடுவதை விடுத்துத் தத்தம் பேடையுடன் கொஞ்சிக்குலாவி ஒலித்தன என்றபடி. படர்பெருங்காதல்— உடல் எங்கும் பரவிப்படர்ந்த பெருங்காதல்.

அம்பு தொடுக்கும் அனங்கன்

''தந்தி ருக்கண் எரிதழ லிற்பட்டு
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளிதொடுப்பதே
எந்தை யார் அருள் இவ்வண்ணமோ'' என்பார். 300

வி.ரை :- ''எமது இறைவன் தனது திருக்கண்களால் சுடப்பட்டுச் சாம்பலான மன்மதன் என் முன்னால் தனது உருவைப் பெற்று வந்து அம்பைத் தொடுப்பது எவ்வாறு? எம்தந்தை இறைவன் அருள் இத்தகையதோ?'' என்பார்.

அ.ரை :- வாளி—அம்பு

தீயைக் கக்கும் தண்மதி

ஆர்த்தி கண்டும்என் மேல்நின் றழற்கதிர்
தூர்ப்ப தேஎன்னைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங் கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி.'' 301

வி.ரை :- பரவையைக் கண்டது முதல் ஏற்பட்ட துன்பத்தைக் கண்டும், அன்று என்னை ஆட்கொண்டவர் நீர் மிகுந்த அலைகளையுடைய நீண்ட கங்கை ஆற்றைத் தனது நீண்ட முடிமீது வைத்து அதனுடன் சூடிய நிலாவெண்மதியாகிய குளிர்ந்த நிலவு போன்றல்லாமல் இந்த தீயைக் கொட்டுவதென் என வருந்தினார்.

அ.ரை :- ஆர்த்தி—துன்பம். அழல்—தீ. தூர்ப்ப—கக்க, தொட்ட. தொண்டு—அன்று (தொல்லையில். நீர்த்தரங்கம்—நீர் மிகுந்த அலைகளையுடைய. சாத்தும்—அணிந்திட.

கடலை இகழ்ந்தது

''அடுத்து மேன்மேல் அலைத்தெழும் ஆழியே!
தடுத்து முன்னெனை ஆண்டவர் தாமுணக்
கடுத்து நஞ்சுன் தரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டுநீ என்னையின் றென்செயாய்.'' 302

வி.ரை :- ''அடுத்தடுத்து மேன்மேலும் அலைகளைக் கொண்டு வந்து வீசும் கடலே! முன்பு என்னைத் தடுத்தாட்கொண்ட ஆண்டவர்தான், வாட்டும் கொடிய நஞ்சை உனது அலைகள் எனும் கைகளால் எடுத்து அவருக்கு நீட்டிய நீ என்னை என்ன தான் செய்யாய்?''

அ.ரை : ஆழி—கடல். உண — உண்ண கடுத்த—கொடிய, தரங்கம்—அலைகள்

தீயெனச் சுடும் தென்றல்

''பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம்.'' 303

வி.ரை : ''தமிழ் என இனிக்கும் தென்றலே! நீ பிறந்தது எங்கள் பிரானின் பொதிகை மலையில், நீ சிறப்புடன் வந்து சேர்ந்து வளர்ந்து பெருமையடைந்தது தெய்வீகச் சோழநாட்டில், புறத்தே உள்ள தடாகங்களில் பொங்கும் தீயை வீசிடும் பாவச் செயலைக் கற்றது எங்கோ?'' அறியேன்.

அ.ரை :- மலயத்திடை— பொதிய மலையில் தெய்வ நீர்நாடு—சோழநாடு. புறம்பணை—புறவயல்கள், மறம்—பாவம். அறம் அல்லாதன. தமிழ்— இனிமை. மாருதம் —தென்றல்.

பரவையாரின் நிலை

இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்,
மன்னு காதல னாகிய வள்ளல்பால்
தன்ன ரும்பெறல் நெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம். 304

வி.ரை :- இவ்வாறும் பிறவும் பிதற்றும் பொருந்திய காதலனாகிய வள்ளல். ஆரூரன்பால் தனது அரிய தாகக் கிடைக்கப்பெற்ற மனமானது அவனிடம் சென்று மீண்டும் திரும்பாதிருக்கும் அன்னம் போன்றவளது செய்கை கூறுவோம்.

அ.ரை :- இயம்புவான்—சொல்லுவான், பிதற்றித் திரிவான். வள்ளல்—நாவலூரரார். அரும்பெறல் நெஞ்சு—அரியதாகக் கிடைக்கப் பெற்ற மனம். பிறரிடம் புகாத மனம், தங்கிப்போய், தயங்கி இருந்துவிட்ட. அறை—சொல்

தன் மாளிகை சென்றடைந்தது

கணங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக் கணவனை
முன் பெறுவாள் போல
இனங்கொண்ட சேடியர்கள் புடைசூழ எய்து பெருங்
காதலோடும்
தனங்கொண்டு தளர்மருங்குல் பரவையும்வன்
தொண்டர்பால் தனித்துச் சென்ற,
மனங் கொண்டுவரும்பெரிய மயல் கொண்டு தன்
மணிமா ளிகையைச் சார்ந்தாள். 305

வி.ரை :- பெருமை மிக்க திருநீலகண்டரது திருக்கழல்களை வணங்கித் தான் காதல் கொண்ட நம்பி ஆரூரரைக் கணவனாகப் பெறுபவர் போன்று தனது இனமான தோழியர் புடைசூழ அடைந்த பெருங் காதலுடன் முலைகளைத் தாங்காது நுடங்கும்

இடையையுடைய பரவையாரும் வன்தொண்டர்மீது வைத்த காதலுடன் தனித்துச் சென்று, மனம் சுமந்து வந்த பெரும் மயக்கத்துடன் தனது அழகிய பெரிய மாளிகை சென்றடைந்தாள்.

அ.ரை :- கனம்—பெருமை. கனதனவான் எனப் புழி. மணிகண்டர்—திருநீலகண்டர். இனம்—கணிகை யர் இனம். தனம்—முலை. தளர்மருங்கு—ஒடியும்இடை.

சீறடி மேல் நூபுரங்கள் அறிந்தனபோல் சிறிதளவே
ஒலிப்ப முன்னர்,
வேறொருவர் உடன்பேசாள் மெல்லஅடி ஒதுங்கிமா
ளிகையின் மேலால்,
ஏறிமர கதத்தூணத் திலங்குமணி வேதிகையில்
நிலங்கொள் பொற்கால்,
மாறில்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா முன்றில்மருங்
கிருந்தாள் வந்து. 306

வி.ரை :- சிறிய பாதங்களின் மேல் அணிந்த சிலம்புகள் தலைவியின் மனநிலையை முன்னமே அறிந்தன போன்று சிறிதளவே ஒலித்திட வேறு யாருடனும பேசாமல் மெல்ல அடி எடுத்து வைத்து மாளிகையின் மேற்பகுதியில் ஏறி மரகதத் தூண் விளங்கும் அழகிய திண்ணையில் நலம் பயக்கும் பொன்னாலான, வாடாத மலர்ப் படுக்கைமீது அழகான நிலாமுற்றத்தில் வந்து சேர்ந்தாள்.

அ,ரை :- நூபுரங்கள்— சிலம்புகள். வேதிகை—மேடை திண்ணை. சேக்கை—படுக்கை. மாறில்—வாடாத.

அவ்வளவில் அருகிருந்த சேடிமுகநோக்கா "ஆரூர்
ஆண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போ மறுகெதிர்
வந்தவரார்" என்ன

''இவ்வுலகில் அந்தணராய் இருவர்தே டொருவர் தாம்
எதிர் நின்றாண்ட
சைவமுதல் திருத்தொண்டர் ''தம்பிரான் தோழனார்நம்பி''
என்றாள். 307

வி.ரை :- இந்நிலையில் தன் அருகில் இருந்த சேடி ஒருவளை நோக்கி, ''திருவாரூர் அரசர் திருநிலகண்டரை நாம் வணங்கப் போனபோது தெருவில் எதிரே வந்தவர் யார்'' என்று கேட்க, ''இந்த உலகினில் அந்தணராய் இருவர் தேட அந்த ஒருவர் சிவபெருமான் எதிர்நின்று ஆட்கொண்ட சைவநெறி யின் முதல் திருத்தொண்டர். தம்பிரான் தோழர் நம் ஆரூர் என்பது அவர் பெயர்'' என்றாள்.

அ.ரை :- சேடி— தோழி. நோக்கா— நோக்கி, பார்த்து, மறுகு—தெரு.

காதல் வயப்பட்டது

என்றவுரை கேட்டலுமே ''எம்பிரான் தமரே யோ''
என்னா முன்னம்
வன்தொண்டர் பால்வைத்த மனக்காதல் அளவின்றி
வளர்ந்து பொங்க
நின்ற நிறை நாண் முதலாங் குணங்களுடன் நீங்க
உயிர் ஒன்றுந் தாங்கி,
மின்தயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து மெல்
லணைமேல் வீழ்ந்த போது. 308

வி.ரை:- ''எம்பிரான் அடியவர்'' என்று கேட் டதும் முன்னதாக, வன் தொண்டர் மீது வைத்திருந்த மனக்காதல் அளவில்லாமல் வளர்ந்து பொங்க அந்த நாள் முதல் இருந்த மேன்மையான நாணம் முதலான

நான்கு குணங்கள் முழுமையாக நீங்கி உயிரை மட்டும் தாங்கி. மின்னொளி போன்ற நுண்ணிய இடையை யுடையவராய்ப் பெருமூச்சு விட்டு மென்மையான பஞ்சணை மேல் விழுந்தாள்.

அ.ரை :- தமரேயோ—அடியாரே. நின்ற—இருந்த. நிறை—மேன்மையான. நாண் முதலாம்—நாணம் முதலான நான்கு குணங்கள். வெவ்வுயிர்த்து—பெரு மூச்சு விட்டு.

மன்மதன் மலரம்பு பொழிந்தது

ஆரநறுஞ் சேறாட்டி அரும்பனிநீர் நறுந்திவலை அருகுவீசி
ஈரஇளந் தளிர் குளிரி படுத்துமட வார்செய்த இவையும்
எல்லாம்
பேரழலின் நெய்சொரிந்தால் ஒத்தனமற் றதன் மீது
சமிதை என்ன
மாரனுந்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி மலர்வாளி
சொரிந்தான் வந்து 309

வி.ரை :- மணம் வீசும் சந்தனக் குழம்பை மிகுதி யாகப பூசி, அரிய பன்னீருடன் வாசனையுடைய திவலை அருகு வீசி, ஈரமும் வாடாததுமான தளிர் களுடன் குளிரி கொண்டு வீசுதல் ஆகிய இவைகளெல் லாம் பெரிய நெருப்புக் குண்டத்தின் மீது நெய்யெய்ப் பொழிந்து பிறகு அதன் மீது ஓம விறகு வைத்தது போன்று உடல் காதல் வேதனையால் பற்றி எரிய மன்மதனும் இதுதான் தக்க சமயம் என்று தன் பெரிய வில்லை வளைந்து இழுத்து மலரம்புகளைப் பொழிந் தான்.

அ.ரை :- ஆர—மிகுதியாக. நறுஞ் சேறு—மணம் கமழ் சந்தனச் சேறு. நறும்பனி நீர் திவலை—மணம்

வீசும் பன்னீர்த் துளிகள். அருகு—பக்கமெல்லாம். ஈர இளந்களிர்—மா இலையின் இளம் தளிர் போன்றவை. குளிரி—பீலிக் குஞ்சம், மடவார்—சேடியர். சமிதை—வேள்வியில் போடும் தர்பைப் புல் முதலியன. வலி—வலிமை.

மலரமளித் துயிலாற்றாள் வருந்தென்றல் மருங்காற்றாள்
மங்குல் வானில்
நிலவுமிழுந் தழலாற்றாள் நிறையாற்றும் பொறையாற்றா
நீர்மை யோடும்,
கலவமயில் எனஎழுந்து கருங்குழலின் பரமாற்றாக்கைய
ளாகி,
இலவ இதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்றாமையின்
வறிதே இன்ன சொன்னாள். 310

விரை :- மலர்ப்படுக்கையில் தூங்காதவளானாள். தென்றல் வந்து தனது இடையில்பட அதைத் தாங்காது இடையும் ஒடிந்ததோ என வருந்துவளானாள், இரவில் வானில் நில்வு பொழியும் ஒளி தீயாய்க் கக்குவதை ஆற்றாள், நிறை முதலிய குணம் நான்கையும் தாங்க இயலா நிலையினில், தோகை விரித்தாடும் மயில் போன்று எழுந்து கருங்கூந்தலின் பாரத்தைத் தாங்காற்றாதவளாய், இலவம் பூ போன்ற சிவந்த பவள உதடுகள் அசைதற்கு ஆற்றாதவளாய் இவ்வாறு சொன்னாள்.

அ.ரை :- அமளி — படுக்கை. மருங்கு — இடை. மங்குல்—இரவு. நிறை ஆற்றும் பொறை ஆற்றா நீர்மை—கற்பு முதலான குணங்களைக் காக்கும் தன்மையுடைய. நிறை—கற்பு முதலிய அச்சம், நாணம், மடம்,பயிர்ப்பு ஆகிய குணங்கள். பொறை—பொறுமை அடக்கம், நீர்மை—சிறப்பு. கலவமயில்—தோகை விரித்தாடும் மயில். பரம்—பாரம். இலவ இதழ்—இலவம் பூப்

போன்ற துவர்வாய்—பவள உதடுகள். கொவ்வைக் கனி உதடுகள். நெகிழ்ந்தாற்றா—அசைக்க இயலாது.

"அருள் பெற்றுடையார் அருளார்" என்றது

"கந்தம் கமழ்மென் குழலீர்! இதுஎன் கலைவாண் மதியம்
கனல்வான் எனைஇச்,
சந்தின் தழலைப் பனிநீர் அளவித் தடவுங் கொடியீர்!
தவிரீர்! தவிரீர்!
வந்திங் குலவு நிலவும் விரையார் மலையா னிலமும்
எரியாய் வருமால்,
அந்தண் புனலும் அரவும் விரவும் சடையான்
அருள்பெற் றுடையார் அருளார்." 311

வி.ரை :- மணங்கமழும் மென்மையான கூந்தலை யுடைய தோழியரே! இஃது என்னே! பதினாறு கலை களையுடைய அழகு நிலவு என்னைச் சுடுகிறது. இந்தச் சந்தனச் சேறுடன் பனிநீர் சேர்த்து என் உடல்மீது தடவும் கொடியவர்களே! அதைத் தவிர்த்திடுங்கள், தவிர்த்திடுங்கள். இங்கு வந்து உலவும் நிலவும், மணம் வீசும் தென்றல் காற்றும் எரித்துக் கொண்டு வருகின்றனவே! அழகிய குளிர்நீரும், பாம்பும் அணிந்த சடையப்பர் அருள்பெற்ற நம்பியாரூரர் இன்னமும் அருள் செய்யவில்லை.

அ.ரை :- கந்தம் — மணம், வாசனை. கலை— பதினாறு கலைகள். கனல்வான்—சுடுவாள், சந்தின் தழல்—சந்தனக் குழம்பு எனும் தீ. மலையானிலம்— மேரு மலையில் தோன்றும் தென்றல். புனல்—கங்கை. விரவும் — பொருந்திய. அருள் பெற்றுடையார்—நம்பி ஆரூரர். கொடியீர் என்ற சொல்லைக் கொடிய மகளிர் எனவும் காண்க.

"அருள் பெற்றுடையார் அவரோ அறியார்" என்றது

"புலரும் படியன் றிரவென் னளவும் பொறையும்
நிறையும் இறையும் தரியா;
உலரும் தனமும் மனமும் வினையேன் ஒருவென்
அளவோ பெருவாழ் வுரையீர்
புலரும் புரியும் துயர்தான் இதுவோ படைமன்
மதனார் புடைநின் றகலார்,
அலரும் நிலவும் மலரும் முடியார் அருள்பெற்
றுடையார் அவரோ அறியார்" 312

வி.ரை :- கந்தமென் குழலீர்! எனக்கு இந்த இரவு விடியாததானது. பெண்மையின் பொறையும், நிறையும் சிறிதும் தரியாததாயின. தீவினையுடைய எனது முலைகளும், மனமும் உலர்ந்து போயின. நான் உயிர் பெற்று வாழ வழி ஒன்றும் கூறுகிலீர். நான் இவ்வாறு துயருற்றுத் துன்பம்மடைய வேண்டும் என்பதுதான் நீங்களும் பலரும் விரும்புவதோ? படையுடன் நின்ற மன்மதன் பக்கமிருந்து அகலாதிருக்கின்றான். கொன்றையையும், நிலவையும் அணிந்த முடியை யுடையவரது அருளைப் பெற்ற அவரோ யாதும் அறியார். நான் என் செய்வேன்.

அ.ரை :- புலரும்—விடியும். பொறை—பொறுமை, நிறை—மகளிர் நான்கு குணங்கள், கற்பு, இறையும்—சிறிதும். தரியா—தங்காது, தாங்காது, நிலை பெறாது, உலரும்—உலர்ந்து போகும், வாடும், தனம்—முலை, வினையேன்—தீவினையுடைய என் அளவோ பெருவாழ்வு—இதுவோ பெருவாழ்வு? நான் உயிர்பெற்று வாழ வழி. பலரும் புரியும்—பலரும் விரும்பும், புடை—

பக்கம். அலரும் அன்றலர்ந்த. மலரும்—விளங்கும் உடையார்—நம்பி ஆரூரர்.

"தேரும் கொடியும் மிடையும் மறுகில் திருவா ரூரீர் நீரே
அல் லால்
ஆரென் துயரம் அறிவார் அடிகேள் அடியேன் அயரும்
படியோ இதுதான்,
நீரும் பிறையும் பொறிவாள் அரவின் நிரையும் நிரைவெண்
டலையின் புடை யே
ஊரும் சடையீர்! விடைமேல் வருவீர் உமதன் பிலர்போல்
யானோ உறுவேன்." 313

வி.ரை :- தேரும் கொடியும் நெருங்கியுள்ள வீதியை உடைய திருவாரூரீசனே! நீரல்லால் என் துயரை வேறு யார் அறிவார். உனது அடியவளுக்கு அடியேனாகிய நான் இவ்வாறு துன்புறும் படியாவதோ? கங்கைநீரையும், நிலவையும் புள்ளிகளுள்ள பாம்பின் வரிசையும், மாலையாகத் தரித்த வெண்தலையின் பக்கம் செல்லும் சடையை உடையவரே! காளை மீதமர்ந்து வருவீர். உமதன்பிலார் போல் நானோ துன்புறுவது.

அ-ரை :- மிடை—நெருங்கி. மறுகு—வீதி. பொறி—புள்ளி. வாள் அரவு—ஒளியுள்ள பாம்பு. நிரை—வரிசை. வெண்டலை—வெண்தலை, கபால மாலை. ஊரும்—செல்லும். உறுவேன்—துன்புறுவேன்.

"மன்றலை நீர் செயம்" என அருளியது.

என்றின் னனவே பலவும் புகலும் இருளார் அளகக்
சுருளோ தியையும்,
வன்தொண் டரையும் படிமேல் வரமுன் பருள்வான்
அருளும் வகையார் நினைவார்,

சென்றும் பர்களும் பணியும் செல்வத் திருவாரூர்
வாழ் பெருமான் அடிகள்
"அன்றங் கவர்மன் றலைநீர் செயும்" என் றடியார்
அறியும் படியால் அருளி 314

வி-ரை :- என்று இவ்வாறும் பலவாறும் பேசும் இருண்ட கொண்டையுடைய சுருள் கூந்தலாள் பரவையாரையும் வன்தொண்டரையும் இவ்வுலகின் மேல் தோன்ற முன் அருள் செய்ததன் அருளை அறியும் வகையார் அறிவார். தேவர்களும் சென்று வணங்கும் செல்வத் திருவாரூரில் வாழும் இறைவன் தியாகேசப் பெருமாள் "நம்பி ஆரூரர்—பரவையார் திருமணத்தை அன்றே செய்திடுக" என்று அடியார்கள் அறியும்படி அருளினார்.

அ-ரை : புகலும்—சொல்லும். அளகம்—கூந்தல். கொண்டை. ஓதி—கூந்தல். படிமேல்—உலகின்மேல். பெருமாள் அடிகள்—தியாக பெருமான்.

இருவருக்கும் "மணம்" அறிவித்தது.

மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ "மங்கை பரவை
தன்னைத் தந்தோம்,
இன்ன வகைநம் அடியார் அறியும் படியே உரை
செய்தனம்" என்றருளிப்
பொன்னின் புரிபுன் சடையன் விடையன் பொருமா
கரியின் உரிவை புனைவான்
அன்ன நடையாள் பரவைக் "கணிய தாரு ரன்பால்
மணம்" என்றருள. 315

வி.ரை :- பொருந்திய புகழ்மிக்க நாவலர் கோன் நம்பி ஆரூரர் மகிழும்படி அவரிடம் சென்று "மங்கை பரவையை உனக்குத் தந்தோம் இதனை நம் அடியார்

அறியும் படியும் உரை செய்தனம்'' என்று சொல்லி விட்டு. பொன்போன்று மின்னும் பின்னப்பட்ட சடையை உடையவன், காளைமீதமர்ந்து வருபவன், போரிடும் பெரிய யானையின் தோலை உரித்து ஆடையாகப் போர்த்திக் கொண்டவரான சிவபெருமான், அன்ன நடையையுடைய பரவையாரிடமும் சென்று' ''ஆரூரனுக்கும் உனக்கும் திருமணம் நெருங்கியது'' என்றருளினார்.

அ.ரை :- புரிசடை — பின்னைப்பட்டசடை. பொருமா — போரிடும் யானை. உரி — தோல். அணியது—அருகியது.

திருமணம் நடத்தி வைத்தது.

காமத் துயரில் கவல்வார் நெஞ்சில் கரையில் இருளும்
கங்குல் கழிபோம்
யாமத் திருளும் புலரக் கதிரோன் எழுகா லையில்
வந்தடியார் கூடிச்,
சேமத் துணையாம் அவர் பேர் அருளைத் தொழுதே
திருநா வலர்கோன் மகிழத்,
தாமக் குழலாள் பரவை வதுவை தருநீர் மையினால்
நிகழச் செய்தார். 316

வி-ரை:- காமத் துயரில் துவண்டு கொண்டிருந்த இருவரும் எல்லையில்லா இருள் சூழ்ந்த இரவு கழிந்த பின், மிகவும் நீடித்து இருந்த இருள் நீங்கிக் கதிரோன் எழுந்த போது' காலையில் அடியார்கள் கூடிவந்து சேம நிதிபோன்று துணை புரியும் தியாகேசப் பெருமானின் பேரருளைத் தொழுது திருநாவலர்க்கோன் நம்பி ஆரூரர் மகிழ மாலை அணிந்த கூந்தலாள் பரவையாரை முறைப்படி திருமணம் செய்து வைத்தனர்.

அ-ரை :- கரையில்—எல்லையற்ற, முடிவில்லாத; கங்குல்—இருள். யாமத்திருள் — ஏழரை நாழிகை கொண்ட இருள். நீண்ட இருள். சேமத்துணை—தியாகேசப் பெருமான். தாமம்—மாலை. வதுவை—திருமணம்.

இன்பம் துய்த்திருந்தது

தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாருங் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலை ஓங்கல் புணர் குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார். 317

வி-ரை -: தென் நாவலூர் மன்னர் நம்பீ ஆரூரர் தேவர்பிரான் திரு அருளினால், மின்போன்று கொடியிடையாள் பரவையெனும் மென்மையாளின் பொன்போன்று தேமல் படர்ந்த முலை மலையின் உச்சியே சார்ந்திருந்து பலநாளும் யோகத்தின் பரம்பரையில் விரும்பியிருந்தனர்.

அ-ரை :- ஓங்கல்—மலை. முலை ஓங்கல்—மலை போன்ற முலை. குவடு—உச்சி. சார்வாக—சேர்ந்திருந்து. யோக பரம்பரை—போகப் பரம்பரையினர் ஆதலின் போகப் பரம்பரையினரானார்.

பரவையாருடன் இல்லற இன்பம் துய்த்தது

தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பல சாத்திப் பரவையெனும்
மின்னிடையாள் உடன் கூடி விளையாடிச் செல்கின்றார்.
318

வி.ரை :- தன்னை ஆட்கொண்டருளிய பிரானாரது கமலமலர்ப் பாதங்களைத் தலையாலும் மனத்தாலும் மலரவித்துத் தமிழால் திருப்பதிக மாலை சாத்திப் பரவை எனும் மின் இடையையுடையவளுடன் கூடி விளையாடி இல்லற இன்பம் துய்த்தார்.

அ.ரை :- சரண் ஆவிந்தமலர்—இறைவனின் தாமரைத் தாள்களில் சரணடைந்து ஆரவிந்தம்—அரவிந்தம் தாமரை.

மாதுடன் கூட வைகி மாளிகை மருங்கு சோலை
போதலர் வாவி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவி சிழிந்து தங்கள்
நாதர்பூங் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால் நம்பி.
319

வி. ரை:- பரவையாருடன் மாளிகையிலும் பக்கத்தில் உள்ள சோலைகளிலும் மலர் மிகுந்த தடாகங்களிலும், அதன் பக்கத்திலுள்ள செயற்கையால் அமைந்த குன்றுகளிலும் அதன் பக்கத்திலுள்ள மேடைகளிலும் குளிர்ந்த முத்துப் பந்தலின் கீழிருந்த ஆசனங்களில் மங்கையுடன் மகிழ்ந்து குலாவியிருந்து அந்த ஆசனங்களிலிருந்து இறங்கி இறைவனது கமலாலயம் சென்று கும்பிடும் விருப்பால் சென்றடைந்தார்.

அ.ரை:- மாது — பரவையார். மருங்கு — பக்கம். போது அலர்வாவி—மலர்த்தடாகம். செய்குன்று—செயற்கையால் அமைக்கப்பட்ட சிறு குன்று. மக்கள் வந்து தங்கி மகிழ்ந்துலாவ அமைக்கப்பட்டது. சில பூங்காக்களில் இன்றும் பார்க்கலாம். தெற்றி — திண்ணை, மேடை. தவிசு—ஆசனம். இப்பொழுது பூங்காக்களில் ஆங்காங்கு ஆசனம் அமைக்கப்பட்டிருப்பது போன்று. நம்பி—நம்பி ஆரூரர்.

செல்வச் சிறப்பு

அந்தரத் தமரர் போற்ற அணிகிளர் ஆடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேலாம் எழில் பெற விளங்கித்
தோன்ற. 320

வி ரை:- வானில் உள்ள தேவர்கள் போற்ற அழகு சிந்தும் ஆடை அணிந்து, சந்தனச் சாந்தும் குங்குமக் கலவையும் சாத்தி. அழகிய மணி மகுடம் அணிவித்து ஒளிவீசும் இரத்தின மணிகளால் அமைந்த ஆபரணங்களைப் பூட்ட இந்திரன் செல்வத்திலும் மேலான அழகுபெற விளங்கியது.

அ. ரை:- அந்தரம் — மேல் உலகம். அளறு— குழம்பு. சுந்தரம்—அழகு. சுழியம்—மகுடம். இந்திரத் திரு—இந்திரன் செல்வம்.

திருவீதி உலாவந்தது

கையினில் புனைபொற் கோலும் காதினில் இலங்குதோடும்
மெய்யினில் துவளு நூலும் நெற்றியில் விளங்கு நீறும்
''ஐயனுக் கழகி தாம்'' என் றாயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலம் தழைப்பவீ தியினைச்
சார்ந்தார். 321

வி.ரை:- கையில் அலங்கரிக்கப்பட்ட கோலும் காதினில் விளங்கும் தோடும் மார்பில் பூணூலும் நெற்றியில் திருநீறும், ''ஐயனுக்கு இது அழகு'' என்று அழகிய ஆபரணமணிந்த மகளிர் போற்றிப் புகழ சைவநெறியெனும் உண்மைச் செல்வம் தழைத்து ஓங்க வீதியில் எழுந்தருளினார்.

அ. ரை :- புனை—அலங்கரிக்கப்பட்ட. கோல்—கொம்பு, மலர்ச்செண்டு எனினுமாம். இலங்கு—விளங்கு.

யாவரும் போற்றியது

''நாவலூர் வந்த சைவ நற்றவக் களிறே'' என்றும்
''மேவலர் புரங்கள் செற்ற விடையவர்க் கன்ப'' என்றும்
''நாவில்சீர்ப் பெருமை ஆரூர் மறையவர் தலைவ''
என்றும்
மேவினர் இரண்டு பாலும் வேறுவே றாயம் போற்ற. 322

வி.ரை :- ''நாவலூரில் அவதரித்த சைவநல் தவக் களிறு போன்றவரே!'' என்றும், ''பகைவரது புரங்கள் மூன்றையும் அழித்தவிடையவர் சிவபெருமானுக்கு அன்பரே'' என்றும் ''தீங்கில்லாத சிறப்புமிக்க பெருமை உடைய ஆரூர் அந்தணர் தலைவ'' என்றும் இருபக்கமிருந்தும் இரண்டு வெவ்வேறு கூட்டமாக நின்று போற்றினர்.

அ.ரை :- மேவலர்—பகைவர். செற்ற—அழித்த. தாவு—குற்றம், தாவில்சீர்—குற்றமற்ற சிறப்புடைய, ஆயம்—கூட்டம்.

கைக்கிடா குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன போது வார்கள் பயில்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப் பையோர் சூழ
மைத்தடங்கண்ணி னார்கள் மறுகநீள் மறுகில் வந்தார். 323

வி.ரை :- கையில் ஆட்டுக்கிடாவும், குரங்கு, கோழி, சிவல், கவுதாரி ஆகியவற்றைக் கையில் ஏந்திப் பக்கத்தில் போகும் அவர்கள், பயிற்சிமொழி பயிற்று

வித்துச் செல்ல, மிகுந்த மலர்க் கூடை, வாசனைப் பொருள்கள் உள்ள பையை உடையவர் ஆகியவர்கள் சூழ, கருமையான அகன்ற கண்களையுடைய மகளிர் இங்குமங்கும் திரிய திருவீதியில் வந்தனர்.

அ.ரை :- கைக்கிடா— கையில் ஆடு. சிவல்— காடை பயில்மொழி—குறிப்பால் அறியும் மொழி. பிடகை— பூக்கூடை விரையடைப்பை— வாசனைப் பொருள்கள் வெற்றிலை பாக்கு உள்ள பை.

கோயில் வந்தடைந்தது

பொலங்கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத
இலங்கொளி வலயப் பொற்றோள் இடையிடை மிடைந்து தொங்கல்
நலங்கிளர் நிழல்சூழ நான்மறை முனிவ ரோடும்
அலங்கலந் தோளி னான்வந் தணைந்தனன் அண்ணல் கோயில் 334

வி.ரை :- பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்கள் பூட்டிய குதிரைகள் சூழ, விளங்கும் ஒளிவீசும் வாகுவலயம் அணிந்த பொன்னொளி வீசும் தோள்களின் இடையே நெருங்கித் தொங்கும் மாலைகளின் அழகு பொலியும் நிழல் சூழ நான்மறை ஓதும் முனிவர்களுடன் மாலை அணிந்த தோள்களையுடைய நம்பி ஆரூரர் அண்ணல் சிவபெருமான் கோயில் வந்து சேர்ந்தார்.

அ.ரை :- பொலங்கலம்— பொற்கலம். பொன் அணிகலன். புரவி— குதிரை. பண்ணி— பூட்டி. இலங்கொளி வலயம்—வாகுவலயம். விளங்கும் ஒளி

வீசும் வலயம். மிடைந்து தொங்கல்— நெருங்கித் தோள்களில் தொங்கும் மாலை. அலங்கலம்—மாலை. அசையும் தோள்கள் எனினுமாம்.

தேவாசிரியன் சென்றடைந்தது

கண்ணுதல் கோயில் தேவாசிரியனாங் காவ ணத்துள்
விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்கசீர் அடியார் கூடி
எண்ணிலார் இருந்த போதில் "இவர்க்குயான் அடியா னாகப்
பண்ணுநாள் எந்நாள்" என்று பரமர்தாள் பரவச் சென்றார். 325

வி.ரை :- நெற்றிக்கண்ணனார் திருக்கோயிலின் தேவாசிரியன் மண்டபத்துள் உள்ள மலர்ச்சோலையில் விண்ணவர் நீங்கலாக மண்மேல் உள்ள சிறப்புமிக்க அடியார்கள் எண்ணற்றவர் கூடியிருந்தபோது, "இவர்களுக்கு நான் அடியானாகப் பண்ணும் நாள் எந்நாளோ" என்று பரமசிவன் திருப்பாதம் வணங்கச் சென்றார்.

அ.ரை :- தேவாசிரியன்—ஆயிரங்கால் மண்டபம். ஒழிய—நீங்கலாக.

இறைவன் காட்சியருளியது

அடியவர்க் கடிய னாவேன் என்னும்ஆ தரவு கூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில் பணிந்துகை குவித்துப் புக்கார்
கடிகொள்பூங் கொன்றை வேய்ந்தார் அவர்க்கெதிர் காணக் காட்டும்
படியெதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு. 326

வி ரை :- அடியவர்கட்கு அடியவனாவேன் என்ற ஆவல் மிகுதியாக, கொடிகளையுடைய நீண்டவெற்றி பணிந்து கைகளைத் தலைமேல் குவித்துப் புகுந்த போது மணங் கமழும் கொன்றை அணிந்த சிவபெருமான் அவருக்கு எதிராகக் காட்சி கொடுத்துப்படியின் எதிரில் தோன்றி நிற்கப் பாதங்களில் விழுந்து பணிந்தார்.

அ-ரை :— கொடி நெருங்கொற்ற—வெற்றியுடைய நீண்ட, கடி—வாசனை, தேன். வேய்ந்தார்—சிவ பெருமான்.

(இப்பாடலை அடுத்து சில பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் அவைநிகழ்ச்சிக்கு அப்பாற் பட்டவையாகக் காணப்படுபவையாதலின் அவற்றைக் கடைசியில் மிகைப்பாடல்களாகக் கொடுக்கப்படுகிறது வேண்டுவோர் பயின்று ப்யன் பெறுக)

இறைவன் பாதங்களைப் போற்றியது.

மன்பெ ருந்திரு மாமறை வண்டு சூழ்
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்த ரத்தும் லித்தெதிர் நின்றன. 327

வி. ரை:- இறைவனைக் கண்டு களிப்படைந்த வன் தொண்டர். அன்பர்களது எண்ணமாகி மலர்ந்த செந்தாமரையாகிய ஈசன் திருப்பாதங்களை மன்பெரு வேதமாகிய வண்டு சூழ்ந்து கிடப்பது போன்று என் மேலும் அந்தத் தேன் எனும் பேரானந்தத் திருவடி மலர்கள் நிலைபெற்றன என்றனர்.

அ.ரை:- மன்பெருந்திருமாமறை— மாட்சிமைமிக்க பெரிய திருப்பெருவேதம் மது.—தேன். என்தரத்தும்— எண்ணிடத்தும்.

ஞாலம் உய்ய நடம்மன்றுள் ஆடின
கால னாருயிர் மாளக் கறுத்தன
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன. 328

வி.ரை:- உலகம் உயர்வுபெற மன்றத்துள் நடனம் ஆடிய திருப்பாதங்கள், மார்க்கண்டேயருக்காகக் காலனின் ஆருயிர் மாளக் கறுத்தன. மாலை அணிந்த தாழ்ந்த கூந்தலாள் மாமலையாள் உமாதேவியின் சிவந்த சீலமானதிருக் கைகளால் வருடப் பாதங்கள் சிவந்தன.

அ.ரை: ஞாலம்—உலகம். காலன்—எமன். மாள—இறக்க. மாமலையாள்—உமாதேவி, வருட—கால்களை வருடிக் கொடுக்க

நீதி மாதவர் நெஞ்சில் பொலிந்தன
வேதி யாதவர் தம்மைவே திப்பன
சோதி யாய்எழுஞ் சோதியுட் சோதிய
ஆதி மாலயன் காணா அளவின. 329

வி.ரை:- மும்மலத்தினின்றும் விடுபடாதவர்களை அவர்களது மலத்தை நீக்குவன, ஒளியா எழுந்து ஒளியில் பேரொளியாய் ஆதியில் மாறும் அயனும் காணாத தன்மையதாகிய இறைவன் திருப்பாதங்கள் நீதி மாதவர் வன்தொண்டர் மனத்திற் பொலிந்தன.

அ.ரை:- நீதிமாதவர் —வன்தொண்டர், வேதியா தவர்—மலங்களிலின்றும் விடுபடாதவர். வேதிப்பன— விடுவிப்பன.

வேத ஆரணம் மேற்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன
ஏத மானவை தீர்க்க இசைந்தன
பூத நாத! நின் புண்டரீ கப்பதம். 330

வி.ரை :- பூத நாத! ஐம்பெரும் பூதங்கட்குத் தலைவனே? உன் மலர்ப்பாதங்கள். வேத வேதங் களுக்கு மேல் படர்ந்து விளங்குவன. பேதையாகிய நான் செய்த பிழை பொறுத்து ஆட்கொண்ட குற்றங் கள் மீண்டும் சேராதவாறு தீர்க்க அருள் புரிந்தன.

அ-ரை:—ஆரணம்—வேதம், உபநிடதங்கள் எனக் காண்க. ஏதம்—குற்றம், பூதநாதன்—ஐம்பருப் பொருட் கிறைவன். புண்டரீகப்பதம் — செந்தாமரை யாகிய பாதங்கள்.

இறைவன் அருளிச் செய்தது

இன்னவா றேத்து நம்பிக் கேறுசே வகனார் தாமும்
அந்நிலை அவர்தாம் வேண்டும் அதனையே அருளவேண்டி
மன்னுசீர் அடியார் தங்கள் வழித்தொண்டை உணரநல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள் பெமையை அருளிச்
செய்வார். 331

வி.ரை :— இவ்வாறு தன் கமல பாதங்களையே போற்றி நிற்கும் நம்பி ஆரூரருக்கு எருதின் மேல் அமர்ந்த வரும் வீரர் சிவபெருமானும், பொருந்திய சீர்மிகு சிவனடியார்களது வழிவழிப் பெருந்தொண்டை உணரும் அந்த நிலையை அவர்தாம் அறிய வேண்டும்

என்பதனையே அருள விரும்பி மேலும் அவர்களது பெருமையை அருளிச் செய்தார்.

அ-ரை :— ஏறு சேவகனார்—எருது ஏறும் சிவ பெருமான். அவர்—நம்பி ஆரூர்.

''பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப்
பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும்
இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம்
ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார் இவரைநீ அடைவாய்'' என்று
332

வி.ரை :— திருத்தொண்டர்களின் பெருமையைக் கூறுமிடத்து அவர்களுக்கு நிகர் அவர்களே. இடைவிடாது போற்றி எம்மைப் பெற்றனர். அவர்கள் எம்மை மட்டுமே வழிபடும் ஒருமையால் இந்த உலகையும் வெல்ல வல்லவர்கள், ஊனம் என்பது ஒன்றும் இல்லாத இவர்கள் ஒப்பற்ற நிலையை எய்தி அன்பினால் இன்பத்தை அடைந்தவர்கள். இம்மை மறுமை ஆகிய இரு நிலைகளையும் கடந்து நிற்கும் சிவனடியாரை நீ சென்றடைந்திடுக, திருத்தொண்டருள் ஒருவராகத் திகழ்ந்திடுக என்றனர்.

அ-ரை :— ஒருமை-சிவபெருமானுக்குப் பணியாற்றுவதில் ஒப்பற்று விளங்கும் ஒரு தன்மை. ஊனம்—குறை. இருமை—இம்மை, மறுமை.

நாதனார் அருளிச் செய்ய நம்பியா ரூரர் ''நானிங்
கேதந்தீர் நெறியைப் பெற்றேன்'' என்றெதிர் வணங்கிப்
போற்ற

"நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மை யாலே பாடென" அண்ணல் கூற. 338

வி.ரை :— இவ்வாறு இறைவன் கூற நம்பி ஆரூரர் "குற்றமற்ற நெறியை நான் இங்கு பெற்றேன்" என்று இறைவன் முன் வணங்கிப் போற்றிட, "அறநெறி நிலை பெற்றிட எமதடியார்களைப் பணிந்து, குற்ற மற்ற வாய்மையால் பொருளால் நிறைவு பெற்ற சொற்களால் அமைந்த சொல் மாலை பாடுக" என்று சிவ பெருமான் கூறினார்.

அ-ரை :— ஏதம்—குற்றம், நெறி—சிவநெறி. நிறை சொன் மாலை — பொருள்வளம் மிக்க சொற்களால் அமைந்த பாமாலை. கோதிலா—குற்றமில்லா.

தன்னையா ளுடைய நாதன் தானருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடி நாடர்
"இன்னவா றின்ன பண்பென் றேத்துகேன் இதற்கு யானார்
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய்" என்ன 334

வி.ரை :— தன்னை ஆட்கொண்ட நாதன் அருளிய சொற்கேட்டுத் தலையால் வணங்கி நின்ற திருமுனைப் பாடிநாடர் நம்பி ஆரூரர். "அடியார்கள் வரலாறு இன்னதென்றும் அவர்கள் தன்மை இத்தகையது என்றும் அறியாத நான் அவர்களை என்ன சொல்லிப் போற்றிப் பாடுவேன்? அவ்வாறு பாடுதற்கு நான் யார்? எனக்கு என்ன தகுதியிருக்கிறது? அவர்களது புகழைப் பாடும் அரிய பரிசை எனக்கு அருள் செய்வாய்" என்று வேண்டினார்.

அ-ரை :— திருமுனைப்பாடி நாடார்—நம்பி ஆரூரர். பன்னு பாமாலை—சொல்லும் பாமாலை.

"தில்லைவாழ் அந்தணர்" என அடியெடுத்துக் கொடுத்தது.

தொல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"
என்று
"எல்லையில்வண் புகழாரை எடுத்திசைப்பா மொழி"
என்றான். 335

வி.ரை :— மிகவும் தொன்மையான பெரிய இமய மலைக்கு மன்னன் ஈன்ற தூயவளைத் தன் பாகமாக உடைய, துன்பம் தீர்ந்து உலகம் உயர்வு பெற வேதத்தை அளித்த திருவாக்கின்படியே, "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று, "எல்லையில்லாத அழகிய புகழையுடைய சிவனடியார் புகழை எடுத்திசைத்துப் பாடுக" என்றார்.

அ-ரை :— தொல்லை—பழமை, தொன்மை. வரை-மலை. அல்லல் — துன்பம். வண்புகழார் — திருத் தொண்டர்கள்.

மன்னுசீர் வயல்ஆரூர் மன்னவரை வன்தொண்டர்
சென்னியுற அடிவணங்கித் திருவருள்மேற் கொள்பொழுதில்
முன்னமால் அயன்அறியா முதல்வர்தாம் எழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பால் சார்வதனுக்கணைகின்றார்.
336

வி.ரை :— பொருந்திய சீர்மிகு வயல்களால் சூழப் பட்ட திரு. ஆரூர் மன்னவர் சிவபெருமானை, நம்பி ஆரூர் தலையால் அவர் பாதங்களைத் தொட்டு

வணங்கி இறைவனது திருவருளை மேற்கொண்டு செயல்படுத்த எழுந்தருளியபோது முன்பு திருமாலும், நான்முகனும் கண்டறியாத மூவற்கும் முதல்வரான சிவபெருமான் எழுந்தருள, அதனை அறிந்து அடியவர் களிடம் சார்வதற்குச் சென்றனர்.

அ-ரை :— ஆரூர் மன்னவர்—சிவபெருமான். மால்—திருமால், அயன்—பிரம்மன்.

திருத்தொண்டத் தொகை பாடியது

தூரத்தே திருக்கூட்டம் பலமுறையால் தொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றழியா
வீரத்தார் எல்லார்க்குந் தனித்தனிவே றடியேன்என்
றார்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்
செய்தார். 337

வி.ரை :— திருக்கோயிலுக்குச் சற்று தூரத்தே உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் விளங்கும் திருக் கூட்டத்தைப் பலமுறை தொழுது அன்பு சேர்த்துத் தாழ்ந்து எழுந்து சென்று என்றும் நிலைபெற்ற வீரர் களான திருத்தொண்டர் எல்லோருக்கும் தனித்தனியே "அடியேன்" என்று எழுந்த ஆர்வத்தால், திருத் தொண்டத் தொகைப் பதிகம் பாடி அருளினர்.

அ-ரை :— நின்றழியா வீரத்தர்—என்றும் நீங்காது நிலைத்த வீரமுடைய திருத்தொண்டர்கள்.

தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான்ற
திருப்பதிகம்

உம்பர்பிரான் தானருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்தொண்டர் பாடிஅவர் எதிர் பணிந்தார். 338

வி.ரை :— தமது இறைவன் அடியெடுத்துக் கொடுத்த "தில்லைவாழ் அந்தணர்" எனும் மொழி முதலாகக் கொண்ட தமிழ் மாலை சிறந்த பொருளால் திருத்தொண்டத் தொகை அமைந்த திருப்பதிகம், தேவர் தேவன் அருளும் உணர்வும் பெற்று உலகம் போற்ற எம்பெருமான் வன் தொண்டர் பாடி இறைவனை எதிர் வணங்கினார்.

அ-ரை :— செம்பொருள் — சிறந்த பொருள். ஆன்ற—அமைந்த. உம்பர் பிரான்—தேவாதி தேவன், சிவபெருமான். அவர்—அத்திருத்தொண்டர்கள். எதிர்—திருமுன்பாக.

உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்
தம்பிரான் தோழரவர் தாம்மொழிந்த தமிழ் முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்தல் உறுகின்றேன். 339

வி.ரை :— தேவர்பிரான் அடியவர்கள் பேருவகை அடைந்திட நம்பியாரூரர் திருக்கூட்டத்தின் நடுவே சென்று, தம்பிரான் தோழரான நம்பியாரூரர் தாம் பாடிய தமிழ் முறையின்படி எம்பிரானது அடியார்கள் திருத்தொண்டரைப் போற்றுதல் செய்கிறேன். இது புலவர் கூற்று.

ஏயர்கோன்
கலிக்காம நாயனார் புராணம்

[சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் 348 ம்
திருவிருத்தத்திலிருந்து தொடங்குகிறது]

நீடுவண்புகழ்ச், சோழர்நீர் நாட்டிடை நிலவும்
மாடு பொன் கொழி காவிரி வடகரைக் கீழ்பால்
ஆடு பூங்கொடி மாடநீ டியஅணி நகர்தான்
பீடு தங்கிய திருப்பெரு மங்கலப் பெயர்த்தால் 340

வி.ரை:- நீண்ட பெரும்புகழ் பொருந்திய நீர்வளம் மிக்க சோழ நாட்டிடை விளங்கும் பொன் கொழிக்கும் காவிரியாற்றின் வடகரையின் கீழ்ப்பக்கம் மலர் பூத்தும் பொங்கும் கொடிகளையுடை நீண்டுயர்ந்த அழகிய பெருமை மிக்க நகரின் பெயர் திருப்பெருமங்கலம் என்பதாம்.

அ.ரை :- மாடு—பக்கம். பீடு தங்கிய—பெருமை மிக்க.

இஞ்சி சூழ்வன எந்திரப் பந்திசூழ், ஞாயில்
மஞ்சு சூழ்வன வரைஎன உயர்மணி மாடம்
கஞ்சு சூழ்வன நயனியர் களின்மெல் லடிச்செம்
மஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு. 341

வி.ரை :- அந்தத் திருப்பெருமங்கலத்தைச் சுற்றி அமைந்த மதிலைச் சுற்றி எந்திரங்கள் வரிசையாக

அமைக்கப்பட்டிருக்கின்றன. மலை போன்ற உயர்ந்த மணி மாடங்களில் மேகங்கள் சூழ்ந்து கிடக்கும். நஞ்சு சூழ்ந்தது போன்று கண்களையுடைய மகளிரின் தாமரை போன்ற மென்மையான பாதங்களில் பூசப் பட்டிருந்த செம்பஞ்சு ஆடவர்களின் குடுமியில் படர்ந் திருந்தது

அ.ரை :- இஞ்சி — கோட்டை மதில். ஞாயில்— மதிள். மஞ்சு—மேகம் வரை மலை. நஞ்சு—மகளிர் கண்களில் அணிந்தமை நயனியர் — பெண்கள். நளினம்—தாமரை. குஞ்சி—குடுமி. ஊடலின் போது ஆடவர் பெண்களின் காலைப் பிடிப்பதும் அவர்கள் உதைப்பதால் ஆண்கள் குடுமியில் பெண்களின் பாதம் பட்டு பாதங்களுக்குப் பூசப்பட்ட செம்பஞ்சு ஆடவர் குடுமியில் பரவியிருந்தது எனக் காட்டுகிறார்.

விழவ றாதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ றாதன மொய்குழ லியர்நட அரங்கம்
மழவ றாதன மங்கலம் பொலிமணி முன்றில்
உழவ றாதநல் வளத்தன ஓங்கிருங் குடிகள். 342

வி.ரை :- ஒளிவீசும் அழகிய நீண்ட வீதிகள் தோறும் விழாக்கோலம் நீங்காது நிலைபெற்றிருக்கும். வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய மகளிர் ஆடும் நடன அரங்குகளில் மத்தள ஓசை நீங்காது ஒலித்துக் கொண்டிருக்கும். மங்கலம் பொலியும் அழகிய முற்றங் களெங்கினும் குழந்தைகளின் மழலை மொழி நீங்காது கேட்கும். அந்த ஊர்க்குடிமக்கள் உழவுத்தொழிலை நீங்காது வளம்மிக்க ஓங்கிய மேற்குடியினராவர்.

அ.ரை :- விழவு — திருவிழா. முழவு — மத்தளம். மழவு—மழலை, குழந்தை. முன்றில்—முற்றம்.

நீரிலிற்பொலி சடைமுடி நெற்றிநாட் டத்துக்
காரி னில்திகழ் கண்டர்தங் காதலோர் குழுமிப்
பாரின் மிக்கதோர் பெருமையால் பரமர்தாள் பரவும்
சீரின் மிக்கது சிவபுரி எனத்தகுஞ் சிறப்பால். 343

வி.ரை :- சடாமுடியில் கங்கையை அணிந்து பொலியும் நெற்றிக்கண்ணோட்டத்தர், திருநீலகண்டரது அன்பர்கள் உலகில் சிறந்தோர் குழுமியிருந்து, பெருமையுடைய பரமர் திருத்தாள்களைச் சிறப்புடன் வணங்கும் பெருமையுடையதால் அப்பதி சிவபுரி என்று அழைக்கும் சிறப்பைப் பெறுகிறது.

அ.ரை :- நீர்—கங்கைநீர். நெற்றிநாட்டம் — நெற்றிக்கண். கார்—கருமை. காதலோர் —சிவனடியார்.

இன்ன வாழ்பதி அதனிடை ஏயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே னாபதிக் குடியாம்
தொன்மை மேவிய தொடர்ச்சியால் நிகழ்வது தூய
பொன்னி நாட்டுவே ளாண்மையில் உயர்ந்தபொற் பினதால்
344

வி.ரை :- தொன்றுதொட்டு வளம்பெற்று விளங்கிய சோழநாட்டில் வேளாண்மையில் உயர்ந்த சிறப்பினில் விளங்கிய திருப்பெருமங்கலத்தில் ஏயர்கோன் குடி சோழநாட்டுப் பேரரசுக்குப் பரம்பரை பரம்பரையாகச் சேனாதிபதியாக அமைந்து பணியாற்றியது.

அ.ரை :- வளவர்—சோழர், பொன்னிநாடு—சோழநாடு. உயர்ந்த பொற்பு—மிகச்சிறந்த சிறப்பு.

அங்கண் மிக்கஅக் குடியினில் அவதரித் துள்ளார்
கங்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காமர் என்பார்
தங்கள் நாயகர் அடிபணி வாரடிச் சார்ந்து
பொங்கு காதலின் அவர்பணி போற்றுதல் புரிந்தார். 345

வி.ரை :- அழகிய கண்ணோட்டம் மிக்க அந்தக் குடியினில் கங்கையைத் தலையில் சூடியவரது தொண்டர் கலிக்காமர் என்பவர் அவதரித்தார். அவர் தங்கள் நாயகனது திருத்தாள்களைச் சார்ந்து பொங்கும் பேரன்பினால் இறைவன் திருப்பணிகள் செய்து வந்தார்.

புதிய நாண்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்
கதிக மாயின திருப்பணி அனேகமுஞ் செய்து
''நிதிய மாவன நீறுகந் தார்கழல்'' என்று
துதியி னாற்பர வித்தொழு தின்புறு கின்றார். 346

வி.ரை :- மூன்றாம் பிறை நிலவைத் தன் சடையில் அணிந்த திருப்புன்கூர்த் தேவனுக்கு வேண்டிய திருப் பணிகள் யாவும் செய்து, ''தேவர் உலக நிதி போன்றது திருநீறு கொடுத்த இறைவன் திருக்கழல்கள்'' என்று துதித்துப்போற்றி இன்புற்று வாழ்ந்து வந்தார்.

நாவ லூர்மன்னன் நாதனைத் தூதுவிட் டதனுக்
''கியாவர் இச்செயல் புரிந்தனர்'' என்றவர் இழிப்பத்
தேவர் தம்பிரான் அவர்திறந் திருத்திய வதற்கு
மேவ வந்தஅச் செயலினை விளம்புவா னுற்றேன். 347

வி.ரை :- சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெரு மானைத் தூதுவிட்டதனுக்காக ''இந்தச் செயலைச் செய்தவர் யார்'' என்று இழித்துக் கூறியதறிந்த தேவர் தேவர் அவரது மனநிலையை மாற்றியதற்கான அச் செயலினை இனிக் கூறுவேன். (இது கவிக் கூற்று.)

அ.ரை :- நாவலூர் மன்னர்—சுந்தரர்.

(மேலே சொன்ன பத்துப்பாடல்களும் ஏயர் கோன்கலிக்காகநாயனார் பற்றியதொரு சிறு குறிப்பு. இனி அடுத்துவரும் பாடல்கள் அத்தனையும் தடுத்தாட்கொண்ட புராணத்தின் தொடர்ச்சியாகச் சுந்தரமூர்த்தி நாயனார் புராணமாகும்)

சுந்தரர் திருவாரூரில் தங்கியிருந்தது

திருத்தொண்டைத் தொகையருளித் திருநாவ லூராளி
கருத்தொன்று காதலினாற் கனகமதில் திருவாரூர்
ஒருத்தர்கழல் முப்பொழுதும் உருகியஅன் பொடுபணிந்து
பெருந்தெழுமெய் அன்பினால் பிரியாதங் குறையுநாள்.

348

வி.ரை :- திருத்தொண்டத் தொகையை உலகுக்கு அருளிய திருநாவலூர் சுந்தரமூர்த்தி சுவாமிகள், சிவ பெருமான்மீது கருத்து ஒருமித்த அன்பினால் அழகிய மதிளால் சூழப்பட்ட திருவாரூரில் எழுந்தருளிய தேவர் திருக்கழல்களை முப்பொழுதும் அன்பால் உருகிப் போற்றிப் பணிந்து பொங்கி எழும் உண்மைப் பேரன் பினால் நீங்காது அங்கு தங்கியிருப்பவராயினர்.

அ.ரை :- திருநாவலூராளி—சுந்தர மூர்த்தி சுவாமி கள். கனகமதில்—பொன் போன்ற அழகுமதில். திரு வாரூர் ஒருத்தர்—திருவாரூர் சிவபெருமான்.

குண்டையூர்க் கிழவர்

தாளாண்மை உழவுதொழில் தன்மைவளந் தலைசிறந்த
வேளாளர் குண்டையூர்க் கிழவரெனும் மேதக்கோர்

வாளார்வெண் மதியணிந்தார் மறையவராய்
வழக்கினில்வென்·
றாளாகக் கொண்டவர்தாள் அடைந்தன்பால் ஒழுகுவார். 349

வி.ரை :- தாழ்தல் இல்லாத வேளாண் தொழிலில் வளம்பெற்று சிறந்த வேளாளர் குண்டையூர்க் கிழவர் எனும் மேன்மை தங்கியவர், ஒளிவீசும் வெண் நிலவணிந்தவரது சைவநெறியினராய், வழக்கினில் வென்று ஆட்கொண்டவர் தாள்களைச் சரணடைந்ததன்படி ஒழுகுவரானார்.

அ.ரை :- தாளாண்மை — தாழ்வு இல்லாமை மேன்மையுடைமை. வாளார்—வாள் ஆர், ஒளிவீசும்.

பரவையருக்குப் படிசமைத்து வந்தது

செந்நெல்லும் பொன்னன்ன செழும்பருப்பும் தீங்கரும்பின்
இன்னல்ல அமுதும்முதல் எண்ணில்பெரும் பலவளங்கள்
மன்னியசீர் வன்தொண்டர்க் கமுதாக வழுவாமல்
பன்னெடுநாள் பரவையார் மாளிகைக்குப் படிசமைத்தார். 350

வி.ரை :- சிகப்புச்சம்பா நெல்லும் பொன்போன்ற செழிய பருப்பு வகைகளும், தித்திக்கும் கரும்பின் இனிய நல்ல அமுதும் முதலான எண்ணற்ற பலவகையான வளங்கள் பொருந்திய சிறப்பு மிக்க வன்தொண்டருக்குப் படியாகத் தவறாமல் பல நாட்கள் பரவையார் மாளிகைக்கு காணிக்கையாகக் கொடுத்து வந்தார்.

அ.ரை :- செந்நெல்—சிகப்புச் சம்பா நெல். அமுதாக—படியாக, காணிக்கையாக, இனியதாக.

வானம் பொய்த்தது

ஆனசெயல் அன்பின்வரும் ஆர்வத்தால் மகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமல் மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப எடுப்பதற்குப் போதாமை
மானமழி கொள்கையினால் மனமயங்கி வருந்துவார் 351

வி.ரை :- அவ்வாறு குண்டையூர்க் கிழவர் பரவையாருக்கு மகிழ்ந்து படிகொடுத்துவரும் காலத்தில், வானம் பொய்த்ததால் நாட்டில் வளமை சுருங்கிப் போக அமுதுக்குரிய நெல்படி கொடுப்பதற்கு வேண்டிய அளவு எடுக்க இல்லாமையால் மானம் அழிந்தது போன்று மனங்கலங்கி வருந்துவாரானார்.

அ.ரை :- வானமுறை வழங்காமல் — நாட்டில் மழைபெய்யாமல். போனகம்—உணவு, அமுதம்.

குண்டையூர்க் கிழவர் வருந்தியது

''வன்தொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
இன்றுகுறை யாகின்ற தேன்செய்கேன்?'' எனநினைந்து
துன்றுபெருங் கவலையினால் துயரெய்தி உண்ணாதே
அன்றிரவு துயில்கொள்ள அங்கணர்வந் தருள்புரிவார். 352

வி.ரை :- குண்டையூர்க் கிழவர் வன்தொண்டரது திருவாரூர் மாளிகைக்கு நெல் கொடுப்பதற்குப் போதிய அளவு இல்லாமல் குறைகின்றதே என் செய்வேன்'' என நினைந்து எழுந்த பெருங்கவலையினால் துயரமடைந்து உண்ணாமல் துயில்கொள்ள, அன்றிரவு சிவபெருமான் கனவில் தோன்றி அருள் புரிந்தார்.

அ.ரை :- துன்று—எழுந்த, தோன்றிய, சேர்ந்த. அங்கணர் — அழகிய கண்ணர், நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான்.

குண்டையூர்க் கிழவர் கனவில் தோன்றியருளியது

"ஆரூரன் தனக்குன்பால் நெல்தந்தோம்" என்றருளி
நீருருஞ் சடைமுடியார் நிதிக்கோமான் தனை ஏவப்
பேரூர்மற் றதன்எல்லை அடங்கவும்நென் மலைப் பிரங்கல்
காருரும் நெடுவிசும்பும் கரக்க நிறைந்தோங்கியதால். 353

வி ரை:- சிவபெருமான் குண்டையூர்க் கிழவர் கனவில் தோன்றி "ஆரூரனுக்குக் கொடுக்க உனக்கு நெல்தருவோம்" என்று கூறியருளி, நீர்தங்கிய சடையப்பர் குபேரனுக்கு ஆணையிடத் திருவாரூர் நகர எல்லையினுள் எங்கும் நெல் மலைப் பெருங் குவியல் கள். மேகங்கள் நிறைந்த நீண்ட வானையும் மறைத்து நிறைந்து ஓங்கியது.

அ.ரை:- நீர்—கங்கைநீர். நிதிக்கோமான்-குபேரன். மல்லப் பிரங்கல்—மலைப்பெருங் குவியல்கள்.

காலையில் நெல்மலை கண்டு களித்தது

அவ்விரவு புலர்காலை உணர்ந்தெழுவார் அதுகண்டே
"எவ்வுலகின் நென்மலைதான் இது?" என்றே அதிசயித்துச்
செவ்வியபொன் மலைவளைத்தார் திருவருளின் செயல் போற்றிக்
கோவவைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழு தெழுவார். 354

வி.ரை:- அன்றிரவு விடியும் போது குண்டையூர்க் கிழவர் விழித்தெழுந்து நெல்மலையைக் கண்டு, "இது எந்த உலகின் நெல் மலை?" என்று அதிசயத்துச் சிவந்த பொன்மலையை வளைத்து வில்லாகக் கொண்ட சிவபெருமானின் திருவருளின் செயலைப் போற்றிக்

கோவ்வை வாய்ப் பரவையரது கணவர் சுந்தரரைத் தொழு தெழுந்தார்.

அ.ரை:- புலர்—விடிவு. பொன் மலை வளைத்தார்-சிவபெருமான். பரவையர் கொழுநர்—சுந்தரர்.

'நாவலூர் மன்ன னார்க்கு நாயனார் அளித்த நெல்லிங்
கியாவரால் எடுக்க லாகும் இச்செயல் அவர்க்குச் சொல்லப்
போவன்யான்'' என்று போந்தார் புகுந்தவா றருளிச் செய்து
தேவர்தம் பெருமான் ஏவ நம்பியும் எதிரே சென்றார். 355

வி.ரை:- நாவலூர் மன்னர் சுந்தரருக்கு சிவபெருமான் அளித்த நெல்லை யரால் எடுக்க முடியும் என்று, இதனை நாவலூர் மன்னர்க்குச் சொல்லப் போவன் யான் என்று குண்டையூர்க் கிழார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காணப் புறப்புட, இறைவனும் சுந்தரர் கனவில் தோன்றி குண்டையூர்க் கிழவருக்கு நெல் அளித்தது முதலான சொல்லி தேவர்களது தேவன் நம்பி ஆருரை குன்டையூர்க் கிழவரைக் காணச் செல்லுமாறு ஆணை விட இருவரும் எதிரெதிர் சந்தித்தனர்.

அ.ரை :- நாயனார் — சிவபெருமான், நாயகன். புகுந்தவாறு — நடந்தவாறு.

குண்டையூர்க் கிழவர் தாமும் எதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனார் பாதந் தன்னில் தொழுதுவீழ்ந் தெழுந்து நின்று
''வண்டெலாம் அடியேன் செய்த பணிஎனக் கின்று முட்ட
அண்டர்தம் பிரானார் தாமே நென்மலை அளித்தார்''என்று

வி.ரை:- சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன் எதிர் வரக் கண்ட குண்டையூர்க் கிழவர், குற்றமற்ற வாய்மைத் தொண்டனார் பாதங்களில் தெண்டனிட்டு வணங்கி

நின்று நெடுங்காலமாக அடியேன் செய்த திருத்தொண்டிற்குப் பலனாக தேவர்தம்பிரான் முழுமையாக நெல் மலையைத் தாமே அளித்தார்'' என்று கூறினார்.

அ. ரை:- கொதில்—குற்றமற்ற. முட்ட—முழுமையாக.

''மனிதரால் எடுக்கும் எல்லைத் தன்றுநெல் மலையின்
ஆக்கம்
இனிஎனாற் செய்ய லாகும் பணியன்றி'' தென்னக் கேட்டுப்
''பனிமதி முடியார்தன்றே பரிந்துமக் களித்தார் நெல்''லென்
றினியன மொழிந்து தாமும் குண்டையூர் எய்த வந்தார். 357

வி.ரை :- அந்த நெல்மலை மனிதரால் எடுக்கப் படும் அளவினையுடையதன்று இனி இது என்னால் செய்யப்படக்கூடிய தொண்டன்று என்று சொல்லக் கேட்டுக் ''குளிர்ந்த நிலவைத் தலையியிலணந்தவனன்றோ விரும்பி நெல் உமக்கு அளித்தார்'' என்று இனியனபல சொல்லிச் சுந்தரரும் குண்டையூர் செல்லப் புறப்பட்டார்.

அ.ரை:- எல்லைத்து — அளவுடையது. திறன்- தன்மை.

விண்ணினை அளக்கும் நெல்லின் வெற்பினை நம்பி
நோக்கி
அண்ணலைத் தொழுது போற்றி அதிசயம் மிகவும் எய்தி
''எண்ணில்சீர்ப் பரவை இல்லத் திந்நெல்லை எடுக்கஆளும்
தண்ணில வணிந்தார் தாமே தரில்அன்றி ஒண்ணா''
தென்று 358

வி.ரை:- வானைத் தொடும் நெல் மலையை நம்பி ஆருரர்கண்டு அதிசயித்து அண்ணல் சிவபெருமானைத் தொழுது போற்றி எண்ணில் அடங்காச் சிறப்புகளையுடைய பரவையின் இல்லத்திற்கு இந்நெலலை எடுத்

துச் செல்லக் குளிர்ந்த நிலவை அணிந்தவர் அளித்தால் அன்றி ஆகாது'' என்று கூறி.

திருக்கோளிலியில் வழிபட்டது

ஆளிடவேண் டிக்கொள்வார் அருகுதிருப் பதியான
கோளிலியில் தம்பெருமான் கோயிலினை வந்தெய்தி
''வாளனகண் மடவாள் வருந்தாமே'' எனும் பதிகம்
மூளவருங் காதலுடன் முன்தொழுது பாடுதலும். 359

வி. ரை:- 'நெல்மலையைப் பரவையார் இல்லத்திற்கு எடுத்துச் செல்ல ஆள் வேண்டும்' என இறைவனிடம் வேண்டிக் கொள்ள அருகில்உள்ள திருப்பதியான திருக் கோளிலியில் சென்றடைந்து அங்குள்ள திருக்கோயி லுக்குச் சென்று 'வாளனகண் மடவாள் வருந்தாமே', எனும் திருப்பதிகம் பொங்கி எழும் அன்புடன் முன் தொழுது நின்று பாடியதும்.

''பகற்பொழுது கழிந்ததற்பின் பரவைமனை அளவன்றி
மிகப்பெருகு நெல்லுலகில் விளங்கிய ஆரூர்நிறையப்
புகப்பெய்து தருவனநம் பூதங்கள்'' என விசும்பில்
நிகர்ப்பரிய ஒருவாக்கு நிகழ்ந்ததுபின் மலனருளால். 360

வி ரை:- அப்பொழுது பரமசிவனுடைய திருவருளி னாலே ''இன்று பகற்பொழுது நீங்கியபின்பு நம்முடைய பூதங்கள் பரவை வீடு மாத்திரமன்றித் திருவாரூர் முழுவ தும் நிறையும்படி கொண்டுவந்துதரும்'' என்று ஆகாயத் தினின்று ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது.

திருவாரூர் சென்றது

தம்பிரான் அருள்போற்றித் தரையின்மிசை விழுந்தெழுந்தே
உம்பரால் உணர்வரிய திருப்பாதந் தொழுதேத்திச்
செம்பொனேர் சடையாரைப் பிறபதியுந் தொழுதுபோய்
நம்பர்ஆரூர் அணைந்தார் நாவலூர் நாவலனார். 361

வி.ரை:- நாவலூர் நாவலனார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது இறைவனது அருளைப் போற்றித் தரை மீது விழுந்தெழுந்து தேவர்களாலும் உணர்ந்து அறிதற்கு செம்பொன்னே போன்ற சடையை உடையவரைப் பிற பதிகளிலும் சென்று தொழுது நம்பியாரூரர் திருவாரூரைச் சென்றடைந்தார்.

அ.ரை:- நாவலனார்—நா வன்மை மிக்கவர்.

பரவையர் இல்லம் புகுந்தது

பூங்கோயில் மகிழ்ந்தருளும் புராதனரைப் புக்கிறைஞ்சி
நீங்காத பெருமகிழ்ச்சி யுடனேத்திப் புறம்போந்து
பாங்கானார் புடைசூழ்ந்து போற்றிசைக்கப் பறவையார்
ஓங்குதிரு மாளிகையின் உள்ளணைந்தார் ஆரூரர். 362

வி.ரை:- திருவாரூரில் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் புராதனரான சிவபெருமானைக் கோயிலினுட் புகுந்து வணங்கி நீங்காத பெருமகிழ்ச்சியுடன் போற்றி வெளியே வந்து தோழமை கொண்டவர்கள் புடை சூழ்ந்து போற்றி இசைபாட ஆரூரர் பரவையரது ஓங்கி உயர்ந்த திருமாளிகையினுட் சென்றார்.

அ. ரை:- பூங்கோயில் — திவாரூர்க்கோயில். பாங்கானார்—தோழர்கள்.

பரவையருஉன் மகிழ்ந்து குலாவியது

கோவைவாய்ப் பரவையார் தாம்மகிழும் படிகூறி
மேவியவர் தம்மோடு மிக இன்புற் றிருந்ததற்பின்
சேவின்மேல் உமையோடும் வருவார்தந் திருவருளின்
ஏவலினால் அவ்விரவு பூதங்கள் மிக்கெழுந்து

வி.ரை :- கொவ்வைக் கனிவாயார் பரவையார் மகிழும்படிகூறி அவருடன் குலாவி இன்புற்றிருந்த பொழுது உமையம்மையுடன் காளை மீதமர்ந்த காளை சிவபெருமான் திருவருளின் ஆணையினால் அன்றிரவு பூதங்கள் மிகுதியாகத் திரண்டெழுந்து வந்தன.

அ.ரை :- சேவின் மேல்—எருதின் மீது

பூதங்கள் நெல் சுமந்து வந்தது

குண்டையூர் நென்மலையைக் குறட்பூதப் படைகவர்ந்து
வண்டு லாங் குழற்பரவை மாளிகையை நிறை வித்தே
அண்டர்பிரான் திருவாரூர் அடங்கவும்நென் மலையாக்கி
கண்டவர்அற் புதமெய்தும் காட்சிபெற அமைத்தனவால். 364

வி.ரை :- மலையெனக் குவித்துக் கிடக்கும் குண்டையூர் நெல் மலையைக்குள்ளஉருவினையுடைய இறைவனது பூதப்படைகள் இரவோடு இரவாக எடுத்து வந்து தேன்வண்டுகள் மொய்க்கும் கூந்தலாள் பரவையார் மாளிகையை நிறைத்து மீதமுள்ள நெற்குவியலை தேவர் தேவன் திருவாரூர் முழுவதும் நிரப்பி நெல் மலையாக்கிட அதனைக் கண்ட திருவாரூர் வாழ் மக்கள் அதிசயிக்கும்படி நெற்குவியல்கள் அமைத்தன.

அ.ரை :- குறள்—குள்ளம். கவர்ந்து—இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் குண்டையூரிலிருந்து

திருவாருருக்கு எடுத்து வந்தமையின் கவர்ந்து என்றனர்.

ஆரூரார் அதிசயத்தறைந்தது

அவ்விரவு புலர்காலை ஆரூரில் வாழ்வார்கண்
''டெவ்வுலகில் விளைந்தனநெல் மலைஇவை''என்
றதிசயித்து
''நவ்விமதர்த் திருநோக்கின் நங்கைபுகழ்ப் பரவையார்க்
கிவ்வுலகு வாழவரும் நம்பிஅளித் தன''என்பார். 365

வி.ரை :- அன்றிரவு விடிந்ததும் அதிகாலையில் திருவாரூரில் வாழும் மக்கள் கண்டு ''எந்த உலகில் இவ்வளவு நெல் விளைந்தன?'' என்று அதிசயித்துச் சிலர் கூற ''மான் விழியாள், மங்கையரில் புகழ் மிக்க பரவையாருக்காக அவளுடன் வாழ்வதற்கென்று இங்கு வரும் நம்பி ஆரூர் அளித்ததிந்த நெல் மலை'' எனப் பலர் கூறுவர்.

அ.ரை :- நவ்விமதர்—மான் நோக்கின் பெருமையுடைய. இவ்வுலகு—திருவாரூர்.

திருவாரூரார் மேலுங் கூறியது

நீங்கரிய நெற்குன்று தனைநோக்கி நெறிபலவும்
போக்கரிதா யிடக்கண்டு மீண்டுந்தம் இல்புகுவார்
''பாக்கியத்தின் திருவடிவாம் பரவையார்க் கிந்நெல்லும்
போக்குமிடம் அரிதாகும்'' எனப் பலவும் புகல்கின்றார்.
366

வி.ரை :- நெற் குவியல்களை வேறு எங்கும் அகற்ற முடியாதபடி குவித்துக் கிடக்க அவரவர் வீட்டின் முன் குவிந்துகிடக்கும் நெற்குன்றைப் பார்த்து, அந்த நெற்குவியல்களைக் கடந்து வெளியேறுவதற்கு இடமில்லை எனக் கண்டு மீண்டும் தமது இல்லத்தில்

புகுந்து அவ்வூர் மக்கள், "பாக்கியம் பரவை எனஉருப் பெற்று வந்ததெனப் பரவையாருக்கு இந்நெற்குவியல் களை சேமித்துவைப்பதற்கு இடம் கிடைப்பது அரி தாகும்." என்றும் பலவும் கூறலாயினார்.

அ.ரை :- நெறி பலவும்—வீட்டை விட்டு வெளி யேறும் வழி பலவும் முன் வாசல் பின்வாசல் எல்லாம் அடைத்துக் கொண்டு நெற்குவியல் கிடந்தன என்றபடி. பாக்கியம்—செல்வம், நல்வினை.

முரசறை வித்தது

"வன்தொண்டர் தமக்களித்த நெற்கண்டு மகிழ்சிறப்பார்
"இன்றுங்கள் மனைஎல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
பொன்தங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்க" என
வென்றிமுர சறைவித்தார் மிக்கபுகழ்ப் பரவையார். 367

வி.ரை :- வன்தொண்டர்தமக்கு எனக் கொடுத்த நெற்குவியலைக் கண்டு மகிழ்ந்த சிறப்பினால் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும்படி "இன்று உங்கள் இல்லத்து எல்லைக்குட்பட்ட நெற் குவியல்களை யெல்லாம் அழகு மிகுந்த அவரவர் மாளிகையினுட் கொண்டு சேர்த்துக் கொள்க" என்று மிகவும் புகழ்மிக்க பரவையார் முரசறிவித்தார்.

அ.ரை :- பொன் தங்கும்—அழகிய, செல்வம் மிக்க

பரவையார் நம்பியைப் பணிந்தது

அணியாரூர் மறுகதனில் ஆளியங்கப் பறையறைந்த
பணியாலே மனைநிறைத்துப் பாங்கெங்கும் நெற்கூடு
கணியாமற் கட்டிநகர் களிகூரப் பரவையார்
மணியாரம் புனைமார்பின் வன்தொண்டர் தமைப்
பணிந்தார். 368

வி.ரை :- அழகு சிந்தும் திருவாரூர்த் தெருக்களி லெல்லாம் மக்கள் நடமாட்டம் மீண்டும் ஏற்படப் பறையறைவித்து நெற்குவியல்களை அவரவர் இல்லத் தில் குவித்து மீதமுள்ளவற்றை மனையின் புறப்பகுதி களிலும் நெற்குதிர்களைக் கட்டிச் சேமித்து தைத்து நகரமே மகிழ்ச்சி கொண்டிருக்கப் பரவையார் மணி மாலைகள் அணிந்த மார்பினையுடைய வன் தொண்டரை வணங்கினார்.

அ.ரை :- அணி—அழகு. மறுகு—தெரு. ஆள் இயங்க—மக்கள் நடமாட்டமாக, நெற்கூடு—நெற்குதிர். கணியாமல்—கணக்கின்றி.

புற்றிடங் கொண்டாரைப் போற்றியது

நம்பியா ரூரர்திரு வாரூரில் நயந்துறைநாள்
செம்பொற்புற் றிடங்கொண்டு வீற்றிருந்த செழுந்தேனைத்
தம்பெரிய விருப்பினோடுந் தாழ்ந்துணர்வி னாற்பருகி
இம்பருடன் உம்பர்களும் அதிசயிப்ப ஏத்தினார். 369

வி.ரை :- நம்பியாரூரர் திருவாரூரில் விரும்பி எழுந் தருளியிருக்கும் நாட்களில் பொன் புற்றில் அமர்ந் திருந்த செழிய தேனாகிய சிவபெருமானைத் தமது பேராவலப் பெருவிருப்பினால் தாழ்ந்து உணர்வினால் அந்தச் செழுந்தேனைப் பருகித் தேவரும் மானிடரும் அதிசயிக்கப் போற்றினார்.

அ.ரை :- நயந்து—விரும்பி, செழுந்தேன்—சிவம். இம்பர்—இவ்வுலகத்தவர்.

கோட் புலியார் வேண்டியது

குலவுபுகழ்க் கோட்புலியார் குறையிரந்து தம்பதிக்கண்
அலகில்புகழ் ஆரூரர் எழுந்தருள அடிவணங்கி
நிலவியவன் தொண்டரது இசைந்ததற்பின் நேர் இறைஞ்சிப்
பலர்புகழும் பண்பினார் மீண்டுந்தம் பதிஅணைந்தார் 370

வி.ரை :- இவ்வாறிருக்கையில், நாட்டியத்தான் குடியில் வசிக்கும் கோட்புலி நாயனார் தமது ஊருக்கு எழுந்தருள வேண்டும் என்று எல்லையற்ற புகழ் மிக்க ஆரூராரை அடிபணிந்து வேண்டிக் கொள்ள வன் தொண்டரும் அதற்கு இசைந்த பின்பு, மீண்டும் வணங்கிப் பலர் புகழும் பண்பினரான கோட்புலியார் தமதூருக்குத் திரும்பினார்.

அ.ரை :- குலவு—நிலவும், விளங்கும், தங்கிய

தேவ ரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத்
திருவாரூர்
காவல் கொண்டு தனியாளுங் கடவுட் பெருமான்
கழல்வணங்கி
நாவ லூரர் அருள்பெற்று நம்பர் பதிகள் பிறநண்ணிப்
பாவை பாகர் தமைப்பணிந்து பாடும் விருப்பிற்
சென்றணைவார். 371

வி.ரை :- திருத்தொண்டர்கள் இறைவனை வழி படுவதற்கு வரக்கண்ட தேவர்கள் ஒதுங்கி நின்று வழி படும் சிறப்புமிக்க செல்வத்திருவாரூருக்குக் காவல் தெய்வமாகவும் அமைந்து தனித்து ஆட்சிப் புரியும் இறைவன் திருக்கழல்களை வணங்கித் திருநாவலூரர் அருளைப் பெற்றுச் சிவாலயங்கள் சென்று வணங்கி உமையொரு பாகர்தமைப் பணிந்து பாடும் விருப்பத்தினால் சென்றடைந்தார்.

அ.ரை :- மிடையும்— முன்னேறும். தேவர்கள் சிவனடியார்களைக் கண்டதும் ஒதுங்கி நிற்கச் திருத் தொண்டர்கள் முன் சென்று வணங்கினர் என்றதால் சிவனடியார்களின் சிறப்பு இங்கு தெளிவு.

நாட்டியத்தான் குடியில் வரவேற்பு

மாலும் அயனும் உணர்வரியார் மகிழும் பதிகள் பலவணங்கி
ஞாலம் நிகழ்கோட் புலியார்தந் நாட்டி யத்தான் குடிநண்ண

ஏலும் வகையால் அலங்கரித்தங் கவரும் எதிர் கொண்
டினி திறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்கண் ஆர்வம் பெருகக்
கொடுபுக்கார். 372

வி.ரை :- திருமாலும், பிரம்மனும் உணர்ந்து அறிதற்கு அரிய சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் கோயில்கள் பலவும் சென்று வணங்கி, உலகின் சிறந்த கோட்புலியூரின் நாட்டியத்தான் குடிசென்றடையக் கோட்புலியாரும்பொருத்தமாக அலங்கரித்து எதிர் கொண்டு இனிதாக வணங்கி அழகிய மணி மாளிகைக்கு அழைத்துச் சென்றார்,

அ.ரை :- உணர்வரியார்—உணர்ந்து காண்பதற்கும் அரிதானவர். ஞாலம்நிகழ்—உலகில் திகழும். ஏலும்—பொருந்தும்.

பொன் பீடத்தில் எழுந்தருளிய சிறப்பு

தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி இருக்கத் தூநீரால்
சேய மலர்ச்சே வடிவிளக்கித் தெளித்துக் கொண்டச்
செழும் புனலால்
மேய சுடர்மா ளிகைஎங்கும் விளங்க வீசி உளங்களிப்ப
ஏய சிறப்பில் அர்ச்சனைகள் எல்லாம் இயல்பின் முறை
புரிவார். 373

வி.ரை :- துய்மையான பொன்னாலான ஆசனத்தில் எழுந்தருளியிருக்கத் தூய நீரால் அழகிய சிவந்த பாதங்களைக் கழுவி அந்தப் புனித நீரால் தெளித்து மேன்மையான ஒளி வீசும் மாளிகை யெங்கும் தெளித்து வீசி மனங் களிப்படைந்த சிறப்பில் அர்ச்சனைகளெல்லாம் இயல்பான முறைகளில் செய்தார்.

அ.ரை :- தவிசு—பீடம், அமருமிடம். சேவடி விளக்கி—பாத பூசை செய்து,

வரவேற்று அலங்கரித்தது

பூந்தண் பனிநீர் கொடுசமைத்த பொருவில் விரைச்சந்தனக்கலவை
வாய்ந்த அகிலின் நறுஞ்சாந்து வாசம் நிறைமான் மதச்சேறு
தோய்ந்த புகைநா வியின் நறுநெய் தூய பசுங்கர்ப் பூரமுடன்
ஏய்ந்த அடைக்காய் அமுதினைய எண்ணில் மணிப்பாசனத்தேந்தி 374

வி.ரை :- குளிர்ந்த மலர் தங்கிய பன்னீர் கொண்டு செய்த ஒப்பற்ற வாசனையுடைய சந்தனக் கலவையுடன், அமைந்த அகிற்கட்டைகளின் மணம் வீசும் சாந்தும் மணம் நிறைந்த கஸ்தூரிச் சேறும் புகை நாவியில் தோய்த்தெடுத் வாசனையுடைய நெய்யும், தூய்மையான பச்சைக் கர்ப்பூரமுடன் அமைந்த தாம்பூலத்துடன் அமுதினை எண்ணற்ற தட்டுகளில் வைத்து.

அ.ரை :- பனிநீர்—பன்னிர். பொருவில்—ஒப்பற்ற. மான்மதச்சேறு—கஸ்தூரி மான் குழம்பு. அடைக்காய்—தாம்பூலம். பாசனம்—தட்டு. ஏத்தி—வைத்து.

ஆடை ஆலங்காரம்

வேறு வேறு திருப்பள்ளித் தாமப் பணிகள் மிகஎடுத்து
மாறி லாத மணித்திருவா பரண வருக்கம் பலதாங்கி
ஈறில் விதத்துப் பரிவட்டம் ஊழின் நிரைத்தே எதிரிறைஞ்சி
ஆறு புனைந்தார் அடித்தொண்டர் அளவில் பூசை கொளஅளித்தார் 375

வி.ரை :- வெவ்வேறு விதமான திருப்பள்ளித்தாமப் பணிகள் செய்து மாறுபாடில்லாத அழகிய மணிகளாலான திரு ஆபரணங்களின் கூட்டம் பலதாங்கியிருந்து முடிவில்லாதபடி விதித்துப் பரவட்டம் முதலியன சாத்தி

முன்நின்று வணங்கி ஆற்றைத் தலையில் அணிந்தவரது திருவடித்தொண்டர் அளவில்லாத பூசை செய்யக் கொடுத்தார்.

அ.ரை :- திருப்பள்ளித் தாமம்—மாலை மரியாதை. மாறிலாது—வேறுபாடில்லாத, குறைவில்லாத. மணித் திருஆபரணம்—மகுடம்முதலியன. வருக்கம்—வகைகள். பரிவட்டம்—பொன்னாடைகள். அளவில் பூசை—மற்ற சிவனடியார்களும் அளவில்லாத எண்ணிக்கையரும் பூசை செய்தனர்.

கோட்புலியார் இல்லத்தில் அமுது செய்தது

செங்கோல் அரசன் அருளுரிமைச் சேனா பதியாங் கோட்புலியார்
நங்கோ மானை நாவலூர் நகர் வேந்தை நண்பினால்
தங்கோ மனையில் திருஅமுது செய்வித் திறைஞ்சித் தலைசிறந்த
பொங்கோ தம்போல் பெருங்காதல் புரிந்தார் பின்னும் போற்றுவார் 376

வி.ரை :- செங்கோலோச்சும் அரசனுக்குச் சேனா பதியாம் அருளுடைய கோட்புலியார்; திருநாவலூர் நகர் மன்னவனை. நம் இறைவனை நட்பினால், தனது அரண்மனையில் திருஅமுது இறைஞ்சிச் செய்வித்துச் சிறந்த பொங்கும் கடல்போன்று போற்றி பெருங்காதல் கூர்ந்தார்.

அ.ரை :- கோமனை — அரண்மனை, பொங்கு. ஓதம்—பொங்கி எழும் கடல்.

மகளிர் இருவரும் வணங்கியது வன்தொண்டரை

ஆலா விருப்பின் மற்றவர்தாம் அருமை யால்முன் பெற்றெடுத்த

தேனார் கோதைச் சிங்கடியார் தமையும் அவர்பின்
திருவுயிர்த்த
மானார் நோக்கின் வனப்பகையார் தமையும் கொணர்ந்து
வன்தொண்டர்
தூநாண் மலர்த்தாள் பணிவித்துத் தாமும் தொழுது
சொல்லுவார் 377

வி.ரை :- தணியாத பெருவிருப்பில் அரிதாகப் பெற்றெடுத்த தேன் சிந்தும் மலர் பொதிந்த கூந்தலாள் சிங்கடியாரையும், அவள் பின் பிறந்த திருநிலைபெற்ற மான் விழியாள் வனப்பகையாரையும் கோட்புலியார் அழைத்து வந்து வன்தொண்டரது தூய மணம் வீசும் மலர்ப் பாதங்களைத் தொழச்செய்து தாமும் தொழுதார்,

அ.ரை :- ஆனாவிருப்பு—தணியாத ஆசை. திருவுயிர்த்த—திரு எனத்தோன்றிய.

மகளிரை மணம் புனையவேண்டியது

'அடியேன் பெற்ற மக்களிவர் அடிமை யாகக் கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணை அளிக்க
வேண்டும்'' எனத்
''தொடிசேர் தளிர்க்கை இவர்எனக்குத் தூய மக்கள்'' எனக்
கொண்டப்
படியே மகண்மை யாக்கொண்டார் பரவை யார்தங்
கொழுநனார். 378

வி.ரை :- ''அடியேன் அரிதில் ஈன்ற மகளிரிவர்களை அடிமைகளாகக்கொண்டருளி மணம் வீசும் மலர்ப் பாதங்களைத் தொழுது உய்யக் கருணை செய்திட வேண்டும்'' என்று வேண்டிக்கொள்ள, வன்தொண்டரும் ''வளையல் அணிந்த இளந்தளிர் போன்ற

கைகளையுடைய இம்மகளிர் எனக்குத் தூய்மையான மக்கள் ஆவார்' என்று கூறி அப்படியே தான் பெற்றெடுத்த மகளிர் போன்று பரவையாரது கொழுநனார் அப்பொழுதே ஏற்றுக் கொண்டார்.

அ.ரை :- அடிமையாக — மனைவியராக. கடி— மணம், தேன் எனினுமாம். தொடி—கைவளை.

உச்சி மோந்து மகள்களாக ஏற்றுக்கொண்டது

கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்துக்
கொண்டிருந்து
காதல் நிறைந்த புதல்வியராங் கருத்துட் கசிவால்
அணைத்துச்சி
மீது கண்ணீர் விழமோந்து வேண்டு வனவுங் கொடுத்தருளி
நாதர் கோயில் சென்றடைந்தார் நம்பி தம்பி ரான் தோழர்.
379

வி.ரை :- மலர் சூடிய கூந்தலார்களைத் தமது தொடையின்மீது ஏற்றி வைத்துக் கொண்டிருந்து அன்பு நிறைந்த தமது புதல்வியராக மனத்தில்கொண்டு கசிந்து அவர்களை அணைத்து உச்சிமீது கண்ணிர் விழ மோந்து அவர்கள் வேண்டியது கொடுத்தருளி நம்பி தம்பிரான் தோழர் இறைவன் கோயில் சென்றடைந்தார்.

அ.ரை :- கோதை — மாலை, மலர். குறங்கு— தொடை.

கோட்புலியாரைச் சிறப்பித்துப் பாடியது

வென்றி வெள்ளே றுயர்த்தருளும்விமலர் திருக்கோ
புரம் இறைஞ்சி
ஒன்றும் உள்ளத் தொடும் அன்பால் உச்சி குவித்த
கரத்தோடும்

சென்று புக்குப் பணிந்துதிருப் பதிகம் ' பூணாண்''
என்றெடுத்துக்
கொன்றை முடியார் அருளுரிமை சிறப்பித் தார்கோட்
புலியாரை. 380

வி.ரை:- வெற்றியைத் தரும் வெண்மையான நிறத்தை உடைய எருதுமீதமர்ந்தருளும் குற்றமற்றவர் திருக்கோபுரதரிசனம் பெற்று வணங்கி, ஒன்றி உள்ளத்துடன் அன்பால் தலைமேல் இருகைகளையும்குவித்துச் சென்று கோயிலினுட் புகுந்து பணிந்து கோட்புலியாரைச் சிறப்பித்துப் ''பூணாண்'' என்றடியெடுத்துக் கொன்றை அணிந்த முடியாரத அருளுரிமையில் பாடினார்.

அ.ரை :- வென்றி—வெற்றி. ஏறு—எருது.

''சிங்கடியப்பன்'' என்றருளியது

சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப் பதனி னிடைச்சிங்
கடியாரைப்
பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த
பெற்றியினால்
''மறப்பில் வகைச்சிங் கடியப்பன்'' என்றே தம்மை
வைத்தருளி
நிறப்பொற் புடைய இசைபாடி நிறைந்த
அருள்பெற்றிரைஞ்சுவார். 381

வி.ரை :- கோட்புலியாரைச் சிறப்பித்துப் பாடிய பதிகத்தில் திருக்கடைக் காப்பில், சிங்கடியாரைப் பெற்றெடுத்த தந்தையாகத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட பெருமையினால் ''மறுப்பில் வகைச் சிங்கடியப்பன்'' என்றே தம்மை வைத்து நிறைந்த அழகுடைய இசைபாடி நிறைந்த அருள் பெற்று வேண்டுவார்.

அ.ரை:- மறப்பில் வகை—மறக்கமுடியாத. நிறப் பொற்பு—நிறைந்த அழகு. முழுமையான அழகு.

வலிவலம்

அங்கு நின்றும் எழுந்தருளி அளவில் அன்பின் உள்மகிழச்
செங்கண் நுதலார் மேவுதிரு வலிவ லத்தைச்
சேர்ந்திறைஞ்சி
மங்கை பாகர் தமைப்பதிகம் "வலிவ லத்துக் கண்டேன்"
என்
றெங்கும் நிகழ்ந்த தமிழ்மாலை எடுத்துத் தொடுத்த
இசை புனைவார். 382

வி.ரை:- அங்கிருந்து எழுந்தருளி அன்பின் மிகுதியால் உள்ளத்துள் மகிழ்ச்சி பொங்கச் சிவந்த நெற்றிக் கண்ணையுடையவர்எ ழுந்தருளியிருக்கும் திருவலிவலம் சென்று வணங்கி "வலிவலத்துக் கண்டேன்" என்று மங்கை பாகரைப் போற்றிப் பதிகம்பாடி எங்கும் விளங்கும் தமிழால் மாலை தொடுத்து இசையுடன் புனைந்து பாடினார்.

மலராலயம் சென்று வணங்கியது

"நன்று மகிழுஞ் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டுகந்தீர்"
என்று சிறப்பித் திறைஞ்சி மகிழ்ந் தேத்தி அருள்பெற்
றெழுந்தருளி
மன்றி னிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற் பெருமான் செம்பொற்
கழல்பணிந்து. 383

வி.ரை:- திருஞான சம்பந்தரும் திருநாவுக் கரசரும் மகிழ்ந்து பாடியருளிய நற்றமிழ் மாலை பாடிய வண்ணமே பாடினீர் என்று சிறப்பித்து வணங்கி மகிழ்ந்து போற்றி இறைவன் அருள் பெற்று எழுந்து, மன்றத்தில் நடமாடும் இறைவன் எழுந்தருளிய பெருமை மிக்க

திருவாரூர் சென்று மலராலயம் புகுந்து பசும்பொற்கழல் பணிந்தார்.

பரவையர் மாளிகைக்குச் சென்றது

இறைஞ்சிப் போந்து பரவையார் திருமா ளிகையில்
எழுந்தருளி
நிறைந்த விருப்பின் மேவுநாள் நீடு செல்வத் திருவாரூர்ப்
புறம்பு நணிய கோயில்களும் பணிந்து போற்றிப் புற்றிடமாய்
உறைந்த பெருமான் கழல்பிரியா தோவா இன்பம்
உற்றிருந்தார். 384

வி.ரை:- கோயிலில் சென்று வணங்கிய பின் பரவையாரின் திருமாளிகை சென்று மிகுந்த விருப்பமுடன் இருக்கும் நாளில் திருவாருருக்கு அருகில் உள்ள கோயில்களில்சென்று பணிந்து போற்றிப்புற்றில் வாழும் பெருமானின் திருக்கழல்களைப் பிரியாது மாறாத இன்பத்தில் மகிழ்ந்திருந்தார்.

அ.ரை :- புறம்பு — வெளியே. நணிய — அருகில் உள்ள. உறைந்த—அமர்ந்த,வாழும். ஓவாது—நீங்காது.

பங்குனி உத்திரத்திற்குப் பொன் வேண்டியது

செறிபுன் சடையார் திருவாரூர்த் திருப்பங் குனியுத்தரத்
திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவில் குறை
வறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு நினைந்து நம்பி
திருப்புகலூர்
இறைவர் பாதம் பணியஎழுந் தருளிச் சென்றங் கெய்தினார்.
385

வி.ரை :- செறிந்த செஞ்சடையாரது திருவாரூர்த் திருப்பங்குனித் திருநாள் நெருங்கும் போது, பரவையார் திருவிழாவிற்குக் கொடுப்பதற்குக் குறையொன்றும் இல்லாதிருக்க நிறைந்த பொன் கொண்டு வருவதற்கு நினைந்து சுந்தரர் திருப்புகலூர் இறைவனது பாதம் பணிந்து பெற்றிட எழுந்தருளிச் சென்று அங்கு அடைந்தார்.

அ.ரை :- செறிபுன்சடையார் — செறிந்த முடியுடைய சிவந்த சடையப்பர். புன்சடை—சிவந்தசடை.

சென்று விரும்பித் திருப்புகலூர்த் தேவர் பெருமான் கோயில்மணி
முன்றில் பணிந்து வலங்கொண்டு முதல்வர் முன்பு வீழ்ந் திறைஞ்சித்
தொன்று மரபின் அடித்தொண்டு தோய்ந்த அன்பில் துதித் தெழுந்து
நின்று பதிக இசைபாடி நினைந்த கருத்து நிகழ்விப்பார் 386

வி.ரை :- திருப்புகலூர் தேவர் பெருமானது கோயிலின் அழகியமுற்றத்தில் விருப்பமுடன்சென்று பணிந்து வலம்வந்து தேவர் முன்பு விழுந்து வணங்கித் தொன்று தொட்டு மரபின் வழிவந்து மூழ்கிய அன்பில் மூழ்கி எழுந்து நின்று பதிகம் இசையுடன் பாடி எண்ணியதை எண்ணியாங்கு எய்துவிப்பரானார்.

அருகிருந்த மடம் சென்றது

சிறிதுபொழுது கும்பிட்டுச் சிந்தை முன்னம் அங்கொழிய
வறிது புறம்போந் தருளிஅயல் மடத்தில் அணையார் வன்தொண்டர்
அறிவு கூர்ந்த அன்பருடன் அணிமுன் றிலின்ஓர் அருகிருப்ப
மறிவண் கையார் அருளேயோ மலர்க்கண் துயில் வந் தெய்தியதால் 387

வி.ரை :- சிறிது நேரம் கும்பிட்டிருந்தமனம் அங்கு தங்காது. நீங்க வருத்தமுடன் வெளியே வந்தருளிய அருகில் உள்ள மடத்தில் சென்றடைத்த வன்தொண்டர் அறிவு நிறைந்த அன்பர் சிவபெருமானுடன் அழகிய முன்றிலின் ஒரு பக்கமிருக்க, மான் கன்றைக் கையில் ஏந்தியவரது அருளினால் அங்கேயே கண்துஞ்சினார்.

அ.ரை :- வறிது—வருத்த முடன், மறி—மான். மகர மீன்.

செங்கற்களைத் தலைக்கு வைத்துத் துயில் கொண்டது

துயில்வந் தெய்தத் தம்பிரான் தோழர் அங்குத்
திருப்பணிக்குப்
பயிலுஞ் சுடுமட் பலகைபல கொணர்வித்துயரம்
பண்ணித் தேன்
அயிலுஞ் சுரும்பார் மலர்ச்சிகழி முடிமேல் அணியா உத்தரிய
வெயிலுந் தியவெண் பட்டதன்மேல் விரித்துப் பள்ளி
மேவினார் 388

வி.ரை :- மடத்தில் படுத்திருந்த நம்பி ஆரூரக்குத் தூக்கம் வந்திட அங்கு திருப்பணிக்காக வைக்கப்பட்டிருந்த சுட்ட செங்கற்களைக் கொண்டுவந்து உயரமாக அமைத்து, தேன் உண்ணும் சுரும்புகள் மொய்க்கும் மலரணிந்த முடியின்மேல் வெயிலுக்கு அணியக் கொண்டுவந்த மேலாடையை விரித்துப் பள்ளி கொண்டார்.

அ.ரை :- பயிலும் சுடுமண் பலகை — சுட்ட செங்கல். பயலும்—பயன்படும். அயலும்—அலையும், தேன் உண்ணும்.

செங்கற்கள் தங்கக் கட்டிகளானது

சுற்றும் இருந்த தொண்டர்களும் துயிலும் அளவில்
துணை மலர்க்கண்

பற்றுந் துயில்நீங் கிடப்பள்ளி உணர்ந்தார் பரவை
கேள்வனார்
வெற்றி விடையார் அருளாலே வேமண் கல்லே
விரிசுடர்ச்செம்
பொற்றின் கல்லா யினகண்டு புகலூர் இறைவர் அருள்
போற்றி. 389

வி.ரை :- சுற்றியிருந்த தொண்டர்கள் துயில் கொண்டிருக்க, அவ்வாறு தூங்கிக் கொண்டிருக்கையில் கண்கள் தூக்கம் நீங்கிடத் தூக்கத்தினின்றும் எழுந்த பரவையரது கணவனார் வெற்றி கொள்ளும்காளையரது அருளினால் செங்கற்களெல்லாம் ஒளிவீசும் பொன் கற்களாகக் கண்டு புகலூர் இறைவன் அருளினைப் போற்றினார்.

மகிழ்ந்து பதிகம் பாடியது

தொண்டர் உணர மகிழ்ந்தெழுந்து துணைக் கைக் கமல
முகைதலைமேல்
கொண்டு கோயி லுட்புக்குக் குறிப்பில் அடங்காப் பேரன்பு
மண்டு காத லுறவணங்கி வாய்த்த மதுர மொழிமாலை
பண்டங் கிசையில் "தம்மையே புகழ்ந்" தென் றெடுத்துப
பாடினார். 390

வி.ரை :- அருகில் படுத்திருந்த தொண்டர்கள் நடந்ததறிந்துகொள்ள வன் தொண்டர் மகிழ்ந்து எழுந்து கமலக் கைகளைத் தலைமேல் கொண்டு வணங்கியபடி கோயிலினுட் சென்று இன்னதென்று குறிப்பிட்டடங்காத பேரன்பு பொங்கும் காதலால் வணங்கிப் பொருந்திய இனிய தமிழாலமைந்த மாலை பழைய இசையால் தம்மையே புகழும்" என் றெடுத்துப் பாடினார்.

அ.ரை :- உணர — அறிந்துகொள்ள. முகை— மொக்கு.

பொன்னுடன் திருப்பனையூர் சென்றது

பதிகம் பாடித் திருக்கடைக்காப் பணிந்து பரவிப் புறம்
போந்தே
எதிரில் இன்பம் இம்மையே தருவார் அருள்பெற் றெழுந்
தருளி
நிதியின் குவையும் உடன்கொண்டு நிறையும் நதியும்
குறை மதியும்
பொதியுஞ் சடையார் திருப்பனையூர் புகுவார் புரிநூல்
மணிமார்பா. 391

வி.ரை :- பதிகம் பாடித் திருக்கடைக் காப்பும் அணிவித்துப் பரவி வெளிவந்து இம்மையிலேயே இன்பம் தந்தருள்வார் அருளைப் பெற்று எழுந்தருளி, நிதிக் குவியலையும் உடன் எடுத்துக் கொண்டு சென்று கங்கையும் பிறையும் பொதிந்த சடையப்பரது திருப் பனையூர், பூணூல் அணிந்த மார்பையுடைய வன் தொண்டர் சென்றடைந்தார்.

அ.ரை :- எதிரில் — தடங்கல் இல்லா. நிதியின் குவை—நிதிக்குவியல், தங்கக்கட்டிகள். நிறை—மேன்மை குறைமதி — பிறைநிலவு. பொதியும்—பொதிந்த. நிறைந்த.

திருப்பதிகம் பாடிப் போனது

செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத்
தொடுங் காட்சி
எய்த அருள எதிர்சென்றங் கெழுந்த விருப்பால்
விழுந்திறைஞ்சி

ஐயர் தம்மை ''அரங்காடவல்லார் அவரே அழகியர்'' என்
றுய்ய உலகு பெறும்பதிகம் பாடி அருள்பெற் றுடன்
போந்தார். 392

வி.ரை :- சிவந்த சடையை உடைய சிவனாரின் திருப்பனையூர்ப் புறத்தே இறைவன் தெருக்கூத்தாடும் காட்சி அருள எதிரில்சென்று அங்கு தோன்றியவிருப்பத்தால் விழுந்து வணங்கி ஐயர், சிவபெருமானை'' அரங்காடவல்லார் அவரே அழகியர்'' என்று உலகம் மேன்மையடையும் பெரிய பதிகம் பாடி இறைவன் அருளைப் பெற்றுப் போனார்.

பரவையார் இல்லம் புகுந்தது

வளமல் கியசீர்த் திருப்பனையூர் வாழ்வார் ஏத்த எழுந்தருளி
அளவில் செம்பொன் இட்டிகைகள் ஆள்மேல் நெருங்கி
அணி ஆரூர்த்

தளவ முறுவல் பரவையார் தம்மா ளிகையில் புகத்தாமும்
உளமன் னியதம் பெருமானார் தம்மை வணங்கி
உவந்தணைந்தார். 393

வி.ரை :- வளம்நிறைந்த சீர்மிகு திருப்பனையூரில் வாழும் மக்கள் போற்ற எழுந்தருளி அளவற்ற பசும் பொன் கட்டிகள் ஆள்மேல் அடுக்கி வைத்து அழகிய திருவாருரர் முல்லைச் சிரிப்புடைய பரவையார் தமது மாளிகையில் புகுந்திடத் தாமும் உள்ளத்தில் என்றும் தங்கியிருக்கும் பெருமனார் சிவபெருமானை வணங்கி விரும்பிச் சென்றடைந்தார்.

அ.ரை :- இட்டிகை—பொன்கட்டிகள். நெருங்கி—ஏற்றி. தளவமுறுவல்—முல்லைச் சிரிப்பு.

அருகிருந்த கோயில்களில் பணிந்தது

வந்து பரவைப் பிராட்டியார் மகிழ வைகி மருவுநாள்
அந்தண் ஆரூர் மருங்கணிய கோயில் பலவும் அணைந்
திறைஞ்சிச்
சிந்தை மகிழ விருப்பினொடுந் தெய்வப் பெருமாள்
திருவாரூர்
முந்தி வணங்கி இனிதிருந்தார் முனைப்பா டியர்தங்
காவலனார். 394

வி.ரை :- முனைப் பாடியரது காவலனார் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பரவைப் பிராட்டியாரது வீட்டுக்கு வந்து மகிழ்ந்து தங்கியிருக்கும் நாளில் அழகிய குளிர்ந்த திருவாரூர்ப்பக்கத்துள்ள கோயில் பலவும் சென்று வணங்கி, மணம் மகிழ்ந்த விருப்பினோடும் தெய்வப் பெருமாள் திருவாரூர் முதலில் வணங்கி இனி தாக இருந்தார்.

திரு நன்னிலம்

பலநாள் அமர்வார் பரமர்திரு வருளால் அங்கு நின்றும்
போய்ச்
சிலைமா மேரு வீரனார் திருநன் னிலத்துச் சென்றெய்தி
வலமா வந்து கோயிலினுள் வணங்கி மகிழ்ந்து பாடினார்
தலமார் கின்ற "தண்ணியல்வெம் மையினான்" என்னும்
தமிழ் மாலை. 395

வி.ரை :- பரமர் திருவருளினால் பலநாள் அங்கு தங்கியிருந்து, அங்கிருந்து சென்று மேருவை வில்லாக வளைத்த வீரனார் சிவபெருமானின் திரு நன்னிலம் சென்று வலம் வந்து கோயிலினுள் சென்று வணங்கி மகிழ்ந்து அழகிய இடமாகின்ற "தண்ணியல்வெம்மையி னான்" என்று தமிழ்மாலை பாடினார்.

அ.ரை :- சிலைமாமேரு — மேருவை வில்லாக வளைத்த. வீரனார்—சிவபெருமான்.

திருவீழிமிழலை

பாடி அங்கு வைகியபின் பரமர் வீழி மிழலையினில்
நீடு மறையால் மேம்பட்ட அந்த ணாளர் நிறைந்தீண்டி
நாடு மகிழ அவ்வளவு நடைக்கா வணம்பா வாடையுடன்
மாடுகதலி பூகநிரை மல்க மணித்தோ ரணம் நிரைத்து 396

வி.ரை :- திருநன்னிலத்தில் பாடிப் பரமன் அருள் பெற்றங்கிருந்த பின்பு தொன்மையான வேதம் ஓதுவதால் மேன்மையடைந்த திருவீழிமிழலையில் உள்ள அந்தணர்கள் அனைவரும் திரண்டு ஒன்று சேர்ந்து உலகம் போற்ற வீதியெல்லாம் மலர்ப்பந்தலமைத்து விதானங்களை நல் ஆடையால் அலங்கரித்துப் பக்கமெங்கும் வாழை, கமுகு முதலியன வரிசையாக நாட்டுவித்து மாணிக்க மணிகளால் தோரணம் அமைத்து வரவேற்றனர்.

அ.ரை :- நீடு—தொன்மையான. ஈண்டி—திரண்டு கூடி. நடைக்காவனம்—நடை பாதையெங்கும் மலர்ப் பந்தல். வீதியெல்லாம் பந்தலிட்டு அலங்கரித்து. பாவாடை—சீலை. பந்தரின் மேல் அமைக்கப்பட்ட ஆடை. கதலி—வாழை, பூகம்—கமுகு. பாக்கு.

திருக்கோயிலில் வழிபாடு

வந்து நம்பி தம்மை எதிர் கொண்டு புக்கார் மற்ற வருஞ்
சிந்தை மலர்ந்து திருவீழி மிழலை இறைஞ்சிச் சேண் விசும்பின்
முந்தை இழிந்த மொய்யொளிசேர் கோயில் தன்னை முன் வணங்கிப்
பந்தம் அறுக்குந் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்றார். 397

வி.ரை :- நம்பி ஆரூரரை எதிர்கொண்டு வரவேற்க வந்த அந்தணர்களுடன் சேர்ந்து மனம் மகிழ்ந்து மலர்ந்து திருவீழிமிழலையை வணங்கி வானுயர்ந்த ஒளி வீசும் கோயில் முன் நின்று வணங்கிப் பிறப்பறுக்கும் தமது இறைவன் பாதம் பணிந்து மகிழ்ந்தார்.

அ.ரை :- சேண் —உயரம். வான். பந்தம்—பிறப்பு

படங்கொள் அரவில் துயில்வோனும் பதுமத்தோனும்
பரவரிய
விடங்கள் விண்ணோர் பெருமானை விரவும் புளகமுடன்
பரவி
''அடங்கல் வீழி கொண்டிருந்தீர் அடியேனுக்கும் அருளும்''
எனத்
தடங்கொள் செஞ்சொற் தமிழ்மாலை சாத்தி அங்குச்
சாரு நாள். 396

வி.ரை :- படமெடுத்த பாம்புப் படுக்கையில் கண் துஞ்சும் மகாவிஷ்ணுவும், தாமரை மீதமர்ந்த பிரம்மனும் சென்று வணங்குவதற்கு அரிய அழகிய இயற்கையாக அமைந்த இலிங்கத்தில் எழுந்தருளியிருக்கும் தேவாதி தேவனைப் பெருகும் பேரவாவுடன் வணங்கி ''அடங்கல் வீழி கொண்டிருந்தீர் அடியேனுக்கு அருளும்'' என்று பெருமை மிக்க அழகிய சொற்களால் அமைந்த தமிழ் மாலைசாத்தி அங்கு எழுந்தருளியிருக்கும் நாளில்,

அ.ரை :- அரவில் துயில்வோன்—மகா விஷ்ணு. பதுமத்தோன்—பிரம்ம தேவன். விடங்கள்—இயற்கையாக அமைந்த லிங்கம். புளகம்—பூரிப்பு. தடங்கொள் செஞ்சொல்—பொருள் வளம் மிக்க அழகிய தமிழ்ச் சொற்கள்.

திருவாஞ்சியம்

வாசி யறிந்து காசளிக்க வல்ல மிழலை வாணர்பால்
தேசு மிக்க திருவருள்முன் பெற்றுத் திருவாஞ்சியத்தடிகள்
பாச மறுத்தாட் கொள்ளுந்தாள் பணிந்து "பொருவனார்"
என்றும்
மாசில் பதிகம் பாடி அமர்ந்தரிசிற் கரைப் புத் தூர
ணைந்தார். 399

வி.ரை :- சிவனடியார்கள் பஞ்சத்தில் அடிபட்டு மடியாதிருக்கத் திருஞான சம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் படிக்காசு வாசியறிந்தருளிய திருவீழி மழலை இறைவனிடம் ஒளிவீசும் திருவருளின் விடை பெற்றுத் திருவாஞ்சியத் திறைவன் பற்றை அறுத்து ஆட்கொள்ளும் தாள் பணிந்து "பொருவனார்" என்னும் மாசில்லாப் பதிகம் பாடி அமர்ந்து அரிசிற்கரைப் புத்தூர் சென்றடைந்தார்.

அ.ரை :- வாசி—வட்டம். பஞ்சத்தின் துன்பம் சிவனடியார்கள் உணராதிருக்க இறைவன் திருநாவுக்கரசருக்கு வாசியில்லாக் காசும், திருஞான சம்பந்தருக்கு வாசியுள்ள காசும் கொடுத்தார் என்பது அந்த அந்தப் பூரணங்களில் காண்க. தேசு—தேஜெசு, அழகு. பாசம்-யற்று' அரிசிற்கரைப் புத்தூர்—திருப்பத்தூர்.

திருச்சித்தீச்சரம் — திருப்பத்தூர்

செழுநீர் நறையூர் நிலவுதிருச் சித்தீச் சரமும் பணிந்தேத்தி
விழுநீர் மையினில் பெருந்தொண்டர் விருப்பினோடும்
எதிர்கொள்ள
மழுவோ டிளமான் கரதலத்தில் உடையார் திருப்புத்
தூர்வணங்கித்
தொழுநீர் மையினில் துதித்தேத்தித் தொண்டர் சூழ
உறையுநாள். 400

வி.ரை :- செழித்த நீர்வளம் மிக்க திருநறையூர் திருச்சித்தீச்சரம் பணிந்து போற்றி வணங்கி வாழ்ந்த சிறப்பினால் பெருந்தொண்டர்கள் விருப்பமுடன் எதிர் கொண்டழைக்க மழுவொடு மானைக் கையில் உடையவர் விரும்பி எழுந்தருளியுள்ள திருப்பத்தூர் வணங்கித் தொழும் சிறப்பில் துதித்துப் போற்றித் தொண்டர்கள் சூழ்ந்திருக்க அங்கு தங்கியிருக்கும் நாளில்.

அ.ரை :- விழுநீர்மை—வணங்கி மகிழும் சிறப்பு. மழு—ஒரு ஆயுதம். தொழுநீர்மை—தொழுது மகிழும் இயல்பு.

திருவா வடுதுறை

புனித னார்முன் புழ்த்து ணையார்க் கருளுந் திறமும்
போற்றிசைத்து
முனிவர் போற்ற எழுந்தருளி மூரி வெள்ளக் கங்கையினில்
பனிவெண் திங்கள் அணிசடையார் பதிகள் பலவும்
பணிந்து போந்
தினிய நினைவில் எய்தினார் இறைவர் திருவா
வடுதுறையில் 401

வி.ரை :- புனிதனார் சிவபெருமான் முன் புகழ்த் துணையார்க்கு அருளிச் செய்த திறமும் முனிவர்கள் போற்ற எழுந்தருளி அலைபாயும் வெள்ளம் மிகுந்த கங்கையினில் குளிர்ந்த வெண் நிலவை அணிந்த சடையப்பர் பதிகள் பலவும் பணிந்து சென்று, இனிய நினைவில் இறைவனது திருவாவடுதுறை சென்றடைந்தார்.

அ.ரை :- புனிதர்—திருப்பத்தூர்ப் புனிதரான சிவ பெருமான். புழ்த்துணையார்க்கு—புகழ்த்துணையார்க்கு. மூரி—மிகுந்த வலிமை, பெருமை.

திருவா வடுதுறையானைப் பாடியது

விளங்குந் திருவா வடுதுறையில் மேயார்கோயில் புடைவலங்
கொண்
டுளங்கொண் டுருகும் அன்பினுடன் உள்புக் கிறைஞ்சி
ஏத்துவார்
வளங்கொள் பதிகம் "மறையவன்" என் றெடுத்து வளவன்
செங்கணான்
தளங்கொள் பிறப்புஞ் சிறப்பித்துத் தமிழ்ச்சொல் மாலை
சாத்தினார் 402

வி.ரை :- புகழ்மிக்க திருவாவடுதுறையில் எழுந்தருளினார் கோயிலின் பக்கமாக வலம்வந்து உள்ளத்துள் கொண்ட உருகும் அன்பினுடன் கோயிலினுட் புகுந்து வணங்கிப் போற்றி "மறையவன்" எனத் தொடங்கும் வளம்மிக்க திருப்பதிகம் பாடி கோச் செங்கட் சோழ நாயனாரின் தளமும் அவர் பிறப்பும் சிறப்பித்துத் தமிழ்ச் சொற்களால் அமைந்த மாலை சாத்தி அங்கிருந்தார்.

அ.ரை :- மேயார் — எழுந்தருளியவர், தலைவர் தந்தை. (Mayor) வளவன்—சோழன். செங்கணான்—கோச்செங்கோட்சோழ நாயனர்.

திருவிடை மருதூர்

சாத்தி அங்கு வைகுநாள் தயங்கும் அன்பருடன்கூடப்
போர்த்தும் இறைஞ்சி அருள்பெற்றுப் பெண்ணோர் பாகத்
தண்ணலார்
தீர்த்தப் பொன்னித் தென்கரைமேல் திகழும் பதிகள்
பலபணிந்து
மூர்த்தி யார்தம் இடைமருதை அடைந்தார் முனைப்பா
டித்தலைவர். 403

வி.ரை :. கோச்செங்கட் சோழ நாயனாரது பிறப்பு முதலானவற்றைச் சிறப்பித்துப் பதிகம் பாடிய வன்தொண்டர் அடியார்களுடன் மீண்டும் அக் கடவுளை வணங்கி அவரருள் பெற்று அங்கு நின்றும் புறப்போந்து பெண்ணை ஒரு பாகமாக உடைய அண்ணலாரது தீர்த்தமாகிய பொன்னி ஆற்றின் தென் கரைமிது விளங்கும் பதிகளையும் வணங்கித் திரு முனைப் பாடித்தலைவர் சுந்தரர் மூர்த்தியாரது திரு விடை மருதை வந்தடைந்தார்.

அ.ரை :- பேர்த்து — இடம்பெயர்ந்து. இடை மருதை—திருவிடை மருதூர். முனைப்பாடித்தலைவர்— சுந்தரர்

திருநாகேச்சரம்

மன்னு மருதின் அமர்ந்தவரை வணங்கி மதுரச் சொன் மலர்கள்
பன்னிப் புனைந்து பணிந்தேத்திப் பரவிப்போந்து தொண்டருடன்
அந்நற் பதியில் இருந்தகல்வார் அரனார் திருநா கேச்சரத்தை
முன்னிப் புக்கு வலங்கொண்டு முதல்வர் திருத்தாள் வணங்கினார். 404

வி.ரை :- திருவிடைமருதூரில் மருதமரத்தின் நிழ லில் அமர்ந்த மருதப்பரை வணங்கி இனிமையான தமிழ்ச்சொற்களால் அமைந்த மாலைபுனைந்து சாத்திப் பணிந்து போற்றி வணங்கிச் சென்று தொண்டர்களுடன் அந்த நல்ல இடத்திலிருந்து புறப்பட்டு இறைவனாரது திருநாகேச்சரத்தை அடைந்து கோயிலை வலம்வந்து புகுந்து கடவுளின் திருத்தாள்களை வணங்கினார்.

திருக்கலைய நல்லூர்

பெருகும் பதிகம் "பிறையணிவாள் நுதலாள்" பாடிப் பெயர்ந்து நிறை

திருவின் மலியுஞ் சிவபுரத்துத் தேவர் பெருமான் கழல்
வணங்கி
உருகுஞ் சிந்தை யுடன்போந்தே உமை யோர் பாகர்
தாமகிழ்ந்து
மருவும் பதிகள் பிறபணிந்து கலைய நல்லூர்
மருங்கணைந்தார். 405

வி.ரை :- "பிறையணி வாணுதலாள்" எனத் தொடங்கும் பெருகும் ஆவலினால் திருப்பதிகம் பாடி எழுந்து செல்வம் மலியும் சிவபுரத்துத் தேவர் பெருமான் தாள்களை வணங்கி மனம் உருகிய எண்ணத் நுடன் தேவர்கள் தலைவன் சிவபெருமான் திருத்தாள் களை வணங்கி, உருகும் நினைவுடன் சென்று உமையை ஒரு பாகமாகக் கொண்டவர் தாம் மகிழ்ந்து அமர்ந்தருளும் இடம் பலபணிந்த கலையநல்லூர் சென்றார்.

"குரும்பை முலை" எனும் பதிகம் பாடியது

செம்மை மறையோர் திருக்கலைய நல்லூர் இறைவர்
சேவடிக்கீழ்
மும்மை வணக்கம் பெறஇறைஞ்சி முன்பு பரவித்
தொழுதெழுவார்
கொம்மை மருவு "குரும்பைமுலை உமையாள்!" என்னுந்
திருப்பதிகம்
மெய்ம்மைப் புராணம் பலவுமிகச் சிறப்பித்திசையின்
விளம்பினார். 406

வி.ரை :- சிறந்த அந்தணர்கள் சூழத் திருக் கலைய நல்லூர்க் கடவுள் செந்தாமரைத் தாள்களை வணங்கி மனம் வாக்கு உடலால் வணங்கிப் போற்றிப் பரவித் தொழுதெழுந்து அழகு சிந்தும் "குரும்பை முலை உமையாள்" எனத் தொடங்கும் திருப்பதிகம்

உண்மைப் புரணங்கள் பலவற்றினோடும் சேர்த்துச் சிறப்பித்துப் பாடினார்.

அ.ரை :- செம்மை—சிறப்பு. மும்மை வணக்கம்—மனம், வாக்கு, செயல் இம்மூன்றால் வணங்குதல். கொம்பை—அழகு, திரட்சிமிக்க, பருத்த. குரும்பை—சிறியதாகத் தேங்காய்க் குரும்பையெனத் தோன்றும் இளம்முலை.

கும்பகோணம், திருவலஞ்சுழி

அங்கு நின்று திருக்குடமூக் கணைந்து பணிந்து பாடிப்போய்
மங்கை பாகர் வலஞ்சுழியை மருவிப் பெருகும் அன்புருகத்
தங்கு காத லுடன்வணங்கித் தமிழாற் பரசி அரசினுக்குத்
திங்கள்முடியார் அடியளித்த திருநல்லூரைச்
சென்றணைந்தார். 407

வி.ரை :- திருக்கடைய நல்லூரினின்றும் புறப்பட்டுத் திருக்குடமுக்கு சென்றடைந்து பணிந்துபாடி மங்கை ஒரு பாகமாக உடையவரது வலஞ்சுழியைச் சென்றடைந்து தேங்கிக்கிடந்த காதலுடன் அன்புப் பெருக்கால் வணங்கி திருநாவுக்கரசருக்குத் தன் பாதங்களை வைத்த திங்கள் முடியாரது திருநல்லூரைச் சென்றடைந்தார்.

அ.ரை :- திருக்குடமுக்கு—கும்பகோணம். பரசி—துதித்து. அரசு—திருநாவுக்கரசு. அடியளித்த—திருவடிகளைச் சூட்டிய.

திருச்சோற்றுத் துறை

நல்லூர் இறைவர் கழல் போற்றி நவின்று நடுவு நம்பர்பதி
எல்லாம் இறைஞ்சி ஏத்திப்போந் திசையாற் பரவுந்
தம்முடைய

சொல்லூ தியமா அணிந்தவர்தஞ் சோற்றுத் துறையின்
மருங்கெய்தி
அல்லூர் கண்டர் கோயிலினுள் அடைந்து வலங்கொண்டடி
பணிவார். 408

வி.ரை :- திருநல்லூராண்டவர் திருத்தாள்களைப் போற்றிப் பாடி இடையேயுள்ள இறைவன் திருப்பதிகளெல்லாம் சென்று வணங்கி வேண்டி ஏத்தி இசையால் வேண்டும் தம்முடைய சொல்லும் ஊதியமாக அணிந்தவர் தம் திருச்சோற்றுத் துறையின் பக்கம் சென்று திருநீலகண்டரது கோயிலினுட் சென்று வலம் வந்து பாதம் பணிந்தார்.

அ.ரை :- நவின்று—சொல்லி. பாடி, வாழ்த்தி, நடுவு—மத்தி, இடையில். சொல்—வேதம். ஊதியம்—இலாபம். அல்லூர்கண்டர்—திருநீலகண்டர்.

அஞ்சொற் பதிகம் பாடியது

"அழல்நீர் ஒழுகி அனைய" எனும் அஞ்சொற் பதிகம்
எடுத்தருளிக்
கழல்நீ டியஅன் பினிற்போற்றுங் காதல் கூரப் பரவியபின்
கெழுநீர் மையினில் அருள்பெற்றுப் போந்து பரவை யார்
கேள்வர்
முழுநீ றணிவார் அமர்ந்தபதி பலவும் பணிந்து முன்னுவார்.
409

வி.ரை :- ''அழல் நீர் ஒழுகி அனைய சடையும்'' எனும் ஐந்து சொற்களால் அமைந்த பதிகம் அடியெடுத்துப்பாடியருளி, இறைவனது வீரக்கழல்களின் மீது எழுந்த அன்புப் பெருக்கால் போற்றும் காதல் கூரத் துதித்த பின்பு வளம்மிக்க சிறப்பினால் இறைவன் அருள் பெற்றுச் சென்று உடல் முழுதும் திருநீற்றை அணிந்த சிவபெருமான் பதிகள் பலவும் பரவையார் கணவர் பணிந்து சென்றார்,

அ.ரை :- அஞ்சொற் பதிகம்—ஐந்து சொற்களால் அமைந்த பதிகம். முதல் அடி ஐந்து சொற்களால் ஆனது. கெழுநீர்மை—வளம் மிக்க சிறப்பு கெழுமை—வளமை

கண்டியூர், திருவையாறு, பூந்துருத்தி, திருவாலம் பொழில்

தேவர் பெருமான் கண்டியூர் பணிந்து திருவை யாறதனை
மேவி வணங்கிப் பூந்துருத்தி விமலர் பாதந்
தொழுதிறைஞ்சிச்
சேவில் வருவார் திருவாலம் பொழிலிற் சேர்ந்து தாழ்ந்திரவு
பாவு சயனத் தமர்ந்தருளிப் பள்ளி கொள்ளக் கனவின் கண். 410

வி.ரை :- பரவையார் கேள்வர் தேவர்கட்குத் தலைவன் எழுந்தருளிய திருக்கண்டியூர் பணிந்து திருவையறு சென்று வணங்கிப் பூந்துருத்தி மலமற்றவர் பாதம் தொழுது வேண்டி காளை மீது வரும் அவரது திருவாலம் பொழிற் சென்று சேர்ந்து தாழ்ந்து அன்றிரவு அங்கு பள்ளிகொள்ள இறைவன் அவர் கனவில் தோன்றினார்.

அ.ரை :- விமலர்—மலமற்றவர். சேவில்—எருதின் மீது. பாவு—பரந்த, விரிந்த.

இறைவன் கனவில் தோன்றியது

''மழபா டியினில் வருவதற்கு நினைக்க மறந்தாயோ'' என்று
குழகா கியதங் கோலம்எதிர் காட்டி அருளக் குறித்துணர்ந்து
நிழலார் சோலைக் கரைப்பொன்னி வடபால் ஏறி நெடுமாடம்
அழகார் வீதி மழபாடி அணைந்தார் நம்பி ஆரூரர். 411

வி.உரை :- அன்றிரவு கனவில், "மழபாடியினில் வருதற்கு நினைக்க மறந்தனையோ" என்று இறைவன் தன் அழகிய கோலம் எதிர்நின்று காட்டியருள்வதனைக் குறித்து உணர்ந்து வழி நெடுக நிழல் தரும் சோலைகளுடைய காவிரியாற்றின் கரை ஓரமாகச் சென்று வடக்குப் பக்கமாகச் சென்று ஏறி நீண்ட மாடமாளிகைகள் உள்ள அழகிய வீதிகளையுடைய திருமழபாடி நம்பி ஆரூரர் சென்றடைந்தார்.

அ.உரை :- குழகாகிய—அழகாகிய இளமை.

மழபாடியில் பொன்னார் மேனியனைப் பாடியது

அணைந்து திருக்கோ புரம்இறைஞ்சி அன்பர் சூழ உடன் புகுந்து
பணங்கொள் அரவம் அணிந்தார்முன் பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்
குணங்கொள் அருளின் திறம்போற்றிக் கொண்ட புளகத் துடனுருகிப்
புணர்ந்த இசையால் திருப்பதிகம் "பொன்னார் மேனி" என்றெடுத்து. 412

வி.உரை :- இறைவன் கனவில் வந்து உணர்த்தியபடி அழகார் வீதி மழபாடி சென்றடைந்து திருக்கோபுரம் வணங்கி அன்பர்கள் சூழ்ந்துவரக் கோயிலினுட் புகுந்து படமெடுத்த பாம்பை அணிந்தவர் முன் பணிந்து வீழ்ந்து பரமன் கருணைத் தன்மையின் குணம் கொள் அருளிய திறத்தைப் போற்றிப் புளகாங்கிதமடைந்து உள்ளமும் உடலும் உருகி இவ்விரண்டின் புணர்ச்சியால் "பொன்னார் மேனி" என்றெடுத்துப் பாடினார்.

அ.உரை :- பணம்—படம். பரம்—கடவுள்.

குறிப்பு :- "பொன்னார் மேனியனே" எனும் பாடல் எனக்கு நினைவு தெரிந்து கற்றுப் பாடிய முதற்

பாடல் அப்பொழுது கோக்கலையில் இருந்த துவக்கப் பள்ளி ஒரே ஆசிரியரின் அரசு உதவி பெற்ற தனியார் பள்ளி,என் தந்தையும்தாத்தாவும் அதேபள்ளியில் அதே ஆசிரியரிடம் பயன்றவர்கள். அந்தக் காலத்தில் ஒரு சிற்றூரில் ஒரு தனியார் பள்ளியை ஒரு ஆசிரியர் மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார் என்பதை இன்று நினைத்தால் வியப்பாக இருக்கிறது. எழுத்தறிவித்த அந்த இறைவனை இங்கு நினைவு கூர்கிறேன்.

"அன்னே உன்னை அல்லால் யான் ஆரை நினைக்கேன்"
என ஏத்தித்
தன்னே ரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது
புறம்பணைந்து
மன்னும் பதியில் சிலநாள்கள் வைகித் தொண்டருடன்
மகிழ்ந்து
பொன்னிக் கரையின் இருமருங்கும் பணிந்துமேல்பாற்
போதுவார். 413

வி.ரை :- "அன்னே உன்னை அல்லால் யான் ஆரை நினைக்கேன்" என்று நிகரற்ற பதிக மலர் சாத்தி ஏத்தித் தொழுது வெளியே வந்து பொருந்திய அத்திருப் பதியில் சில நாட்கள் தங்கியிருந்து திருத்தொண்டர் களுடன் மகிழ்ந்து காவிரியாற்றின் இரு கரைகளில் உள்ள கோயில்களில் பணிந்து மேற் பக்கம் சென்றார்.

திருவானைக்கா

செய்ய சடையார் திருவானைக் காவில் அணைந்து
திருத்தொண்டர்
எய்தமுன்வந் தெதிர்கொள்ள இறைஞ்சிக் கோயிலுட்
புகுந்தே
ஐயர் கமலச் சேவடிக்கீழ் ஆர்வம் பெருக விழுந்தெழுந்து
மெய்யு முகிழ்ப்பக் கண்பொழிநீர் வெள்ளம் பரப்ப
விம்முவார். 414

வி.ரை :- சிவந்த சடாமுடியப்பர் திருவானைக்கா சென்றடைந்த திருத்தொண்டர்கள் முன் வந்து எதிர் கொள்ள வணங்கிக் கோயினுட் புகுந்து, ஐயர் சிவபெருமான் கமலத் திருவடிகளின் கீழ் ஆர்வம் பொங்க விழுந்து வணங்கி மெய் சிலிர்க்கக் கண்களிலிருந்து வெள்ளம் பரவி ஓட விம்மி அழுவார்.

பதிகம் பாடியது

''மறைகளாய நான்கும்''என மலர்ந்த செஞ்சொற் றமிழ்ப்
பதிகம்
நிறையுங் காத லுடன்எடுத்து நிலவும் அன்பர்தமை நோக்கி
''இறையும் பனிவார் எம்மையும்ஆ ளுடையார்'' என்றென்
றேத்துவார்
உறையூர்ச் சோழன் மணியாரம் சாத்துந் திறத்தை
உணர்ந்தருளி 415

வி.ரை :- சுந்தரர் திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கையில் உறையூர்ச் சோழ மன்னனுககுச் சிவபெருமான் அருளிய பெருமையைச் சிறப்பிக்கும் முகத்தான், ''மறைகளாய நான்கும்'' என்று மலர்ந்த சொற்களால் தமிழ்ப்பதிகம் பாடி நிறைந்த அன்புடன் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை ''பூம்புனலானைத் திருவானைக்காவுடைய ஆதியை நாள் தோறும் ''இறையும் பணிவார் எம்மையும் ஆளுடையார்'' என்றெல்லாம் எத்திப் பாடினார்.

அ.ரை :- நிலவும் அன்பர்—திருவானைக்கா ஈசன்

சோழனுக்கு அருளிய திறம் பாடியது

வளவர் பெருமான் மணியாரம் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ் சனக்குடத்துள் அதுபுக் காட்டஅணிந் தருளித்
தளரும் அவனுக் கருள்புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார். 416

வி.ரை :- சோழ மன்னன் மணியாரம் சாத்திக் கொண்டு வந்து பொன்னியாற்றில் மூழ்கிய போது அவன் சாத்திவந்த மணியாரம் நீரின் அலைகளால் நழுவி ஆற்றில் விழுந்தது கண்ட மன்னன் மனந்தளருவது கண்ட ஈசன் அவனுக்கு அருள் புரிந்து அதனைத் திருமஞ்சனக் குடத்துள் சேர்த்த தன்மையைச் சிறப்பிக்கப் பாடினர்.

அ ரை :- வளவர் பெருமான்—உரையூர்ச் சோழ மன்னன். மணியாரம் சாத்தி—தன் கழுத்தில் மணிமாலை சாத்திக்கொண்டு. கேதமுற—வருந்த. நீரில்மூழ்க அந்த மணியாரம் நழுவிப் பொன்னியாற்றில் விழுந்திட குடத்துள் காட்டிய சிறப்பு என்பதாம்.

திருப்பாச்சிலாச்சிராமம்

சாற்றி அங்குத் தங்குநாள் தயங்கும் பவளத் திருமேனி
நீற்றர் கோயில் எம்மருங்குஞ் சென்று தாழ்ந்து நிறை விருப்பால்
போற்றி அங்கு நின்றும்போய்ப் பொருவில் அன்பர் மருவிய தொண்
டாற்றும் பெருமைத் திருப்பாச்சி லாச்சி ராமஞ் சென்றடைந்தார். 417

வி.ரை :- உறையூர்ச் சோழ மன்னனுக்கு ஈசன் அருளிய சிறப்பைப் போற்றிச் சாற்றி அங்கு தங்கியிருக்கும் நாட்களில், பவளம் போன்ற பொன் மேனியர் திருநீற்றர் அமர்ந்தருளும் கோயில் அருகில் எங்கெங்குண்டோ அங்கெல்லாம் சென்று விழுந்து, நிறை அன்பால் போற்றிப் பின் அங்கிருந்து நீங்கி ஒப்பற்ற அன்பர் தங்கித் தொண்டாற்றும் பெருமை மிக்க திருப்பாச்சிலாச்சிராமம் சென்றடைந்தார்.

அ.ரை :- பொருவில் — ஒப்பற்ற. மருவிய. பொருந்திய.

பொருள் வேட்கை மிக எழுந்தது

சென்று திருக்கோ புரம்இறைஞ்சித் தேவர் மலிந்த
திருந்து மணி
முன்றில் வலங்கொண் டுள்ளணைந்து முதல்வர்
முன்னம் வீழ்ந்திறைஞ்சி
நன்று பெருகும் பொருட்காதல் நயப்புப் பெருக நாதரெதிர்
நின்று பரவி நினைந்த பொருள் அருளா தொழிய
நேர் நின்று. 418

வி.ரை :- திருப்பாச்சிலாச்சிராமம் சென்று கோயில் திருக்கோபுரம் வணங்கித் தேர்ந்த மணிகள் பதிக்கப் பட்ட முற்றத்தை வலம் வந்து உள்ளே புகுந்து தேவர்கள் மிகுதியாகக் காத்துக் கிடக்க முதல்வர் ஈசன் முன்பு, பொருளின்மேல் எழுந்த பெரும் பற்றினால் தலைவர் எதிரில் விழுந்து வணங்கி நின்று பரவியும் தான் நினைந்து வேண்டிய பொருள் இறைவன் அருளாதது கண்டு திகைத்து நின்றார்.

உ.ரை :- நன்று பெருகும் பொருட்காதல்—பொருட் பேறு வேண்டி எழுந்த ஆசை.

"கடவுள் இல்லையோ" எனப்பாடியது

அன்பு நீங்கா அச்சமுடன் அடுத்த திருத்தோ ழமைப்
பணியால்
பொன்பெ றாத திருவுள்ளம் புழுங்க அழுங்கிப்
புறம்பொருபால்
முன்பு நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பா டுடையார்
போல்
என்பு கரைந்து "பிரானார் மற் றிலையோ" என்ன
எடுக்கின்றார். 419

வி.ரை :- விரும்பியபடி பொன் பொறாமையால் எழுந்த ஏமாற்றம் உள்ளத்தில் புழுங்கியும் அன்பு நீங்காத அச்சமும் சேர்ந்து இறைவனுக்குத் தோழமைப் பணி செய்தமையால் அழுங்கிப் புறத்தே ஒரு பக்கம் வந்து அவருக்காக முன்பே வந்து காத்துக் கிடக்கும் திருத்தொண்டரிடம் முறையிடுவோர் போன்று என்புருகிக் "கடவுள் இங்கில்லையோ" என்று பாடினார்.

அ.ரை :- தோழமைப்பணி — இறைவனுக்குச் செய்த தோழமைப்பணி, இறைவன் சுந்தருக்குச் செய்த தோழமைப்பணி என எப்படி வேண்டுமாயினும் காண்க. முகப்பே—முன்பே. முறைப்பாடுடையார்—முறையிடுவார்.

நித்தமும் நீங்கா நிலைமையின் நீங்கி நிலத்திடைப் புலங்
கெழும் பிறப்பால்
உய்த்தகா ரணத்தை உணர்ந்துநொந் தடிமை ஒரு
மையாம் எழுமையும் உணர்த்தி
"எத்தனை அருளா தொழியினும் பிரானார் இவரலா
தில்லையோ" என்பார்

வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்'' எனவழுத்
தினர்வழித் தொண்டர். 420

விரை :- 'பிரனார் மற்றிலையோ' எனவருந்திய வன்றொண்டர் தன் பூர்வீகத்தை நினைந்தவராய் தினம் தினம் நீங்காத நிலைமையினின்றும் நீங்கியிருந்து ஐம் புலன்களுடைய மானிடப் பிறவியால் அடைந்ததன் காரணத்தை உணர்ந்து நொந்து ஒருமையாகிய எழு பிறப்பையும் உணர்த்திச் சிறிதும் அருளாது ஒழியினும் இறைவன் இவரல்லாது வேறில்லையேல்'' என்று, என் தலையும் என் நாவும் அந்த இறைவனுக்கே வைத்தனன் என மேலும் வருந்தினார்.

அ.ரை :- நிலத்திடைப் புலங்கெழும் பிறப்பு—மண்ணில் ஐம்புலன்களால் அறியும் பயுப்பு. ஒருமையாம் எழுமை—ஏழுபிறப்புகளின் தன்மை இந்த ஒரு பிறவியில். எத்தனை—சிறிதளவு தலைவணங்க. நா பாட.

விரும்பியபடி நிதி பெற்றது

இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பும் ''ஏசின வல்ல'' என்
றிசைப்ப
மெய்வகை விரும்பு தம்பெரு மானார் விழிந்திக் குவை
அளித் தருள
மைவளர் கண்டர் கருணையே பரவி வணங்கி அப்பதி
யிடை வைகி
எவ்வகை மருங்கும் இறைவர்தம் பதிகள் இறைஞ்சி
அங்கிருந்தனர் சிலநாள். 421

வி.ரை :- இவ்விதமாக இறைவனைத் துதித்துத் திருக்கடைக் காப்பில் ''ஏசினவல்ல'' என்று பாட வன்தொண்டர் விரும்பியவாறு உண்மையான வகையில்

தம்பெருமானார் விழு நதிக் குவை அளித்தருள. திருநீல கண்டரது கருணையைப் போற்றி வணங்கி அப்பதியில் தங்கி எல்லாப்பக்கங்களிலும் உள்ள இறைவன் பதிகள் யாவும் சென்று வணங்கி அங்குச் சில நாள் இருந்தனர்.

அ.ரை :- விழுநிதிக்குவை — விரும்பிய நிதிக்குவியல். சிறந்த செல்வக் குவியல்.

திருப் பைஞ்ஞீலி

அப்பதி நீங்கி அருளினாற் போகி ஆவின்அஞ் சாடுவார் நீடும்
எப்பெயர்ப் பதியும் இருமருங் கிறைஞ்சி இறைவர்பைஞ் ஞீலியை எய்திப்,
பைப்பணி அணிவார் கோபுரம் இறைஞ்சிப் பாங்கமர் புடைவலங்கொண்டு
துப்புறழ் வேணி யார்கழல் தொழுவார் தோன்றுகங் காளரைக் கண்டார். 422

வி.ரை :- திருப்பாச்சிலாச்சிராமம் நீங்கி இறைவனது அருளினால் சென்று ஆவின் அஞ்சாடுவார் நீடுயர்ந்த பதிகள் பிறவும் இருபக்கமும் வணங்கி இறைவனது திருப்பைஞ்ஞீலி யடைந்து படம் எடுத்த பாம்பை அணிந்தவர் திருக் கோபுர தரிசனம் செய்து கூடியிருந்தவருடன் வலம் வந்து பவளம்போன்ற சடையையுடைய சிவபெருமானது வீரக்கழல்கள் தொழுத போது கங்காளர் தோன்றக் கண்டார்.

அ.ரை :- ஆவின் அஞ்சு பஞ்சகவ்வியம். பைப்பணி—படமெடுத்த பாம்பு. துப்பு உறழ்வேணியர்—பவளப்போன்சடையுடைய சிவபெருமான். கங்காளர்—சிவபெருமான்.

''ஆரணிய விடங்கரே'' எனப்பாடியது

கண்டவர் கண்கள் காதல்நீர் வெள்ளம் பொழிதரக் கை
குவித்திறைஞ்சி
வண்டறை குழலார் மனங்கவர் பலிக்கு வருந்திரு வடிவு
கண்ட வர்கள்
கொண்டதோர் மயலால் வினவு கூற் றாகக் குலவு
சொற் ''காருலா விய'' என்
றண்டர்நா யகரைப் பரவி ''ஆ ரணிய விடங்கராம்''
அருந்தமிழ் புனைந்தார். 423

வி.ரை :- கங்காளரைக் கண்ட வன்தொண்டர் கண்களில் நீர் பெருகக் கை குவித்து வணங்கி வண்டுகள் ஒலிக்கும்கூந்தலார்களான்தாருகாவனத்துமுனிவரது மனைவியர்கள் பிச்சை எடுக்க வந்த இறைவன் திருவடி வழகைக் கண்டவர்கள் கொண்ட ஒரு மயக்கத்தால் கேட்கும் கேள்வியாகக் குலவும் சொற்களில் ''காருலா விய'' எனத் தொடங்கும் பதிகம் தேவர் நாயகனைப் போற்றி'' ஆரணிய விடங்கரே'' என்று அருந்தமிழில் புனைந்து பாடலானார்.

அ. ரை :- வண்டறை — வண்டுகள் ஒலிக்கும். குழலார்— தாரகாக் காட்டு முனிவரது மனைவியர். பலி— பிச்சை. மயல்—மயக்கம். அண்டர் நாயகர்—தேவர் பிரான். விடங்கர்—சிவபெருமான்.

கொங்கு நாடு சேர்ந்தது

பரவிஅப் பதிகத் திருக்கடைக் காப்புச் சாத்திமுன்
பணிந்தருள் பெற்றுக்
கரவில்அன் பர்கள்தங் கூட்டமுந் தொழுது
கலந்தினி திருந்து போந் தருளி

விரவிய ஈங்கோய் மலைமுத லாக விமலர்தம் பதிபல
வணங்கிக்
குரவலர் சோலை அணிதிருப் பாண்டிக் கொடுமுடி
அணைந்தனர் கொங்கில். 424

வி.ரை :- ஆரணிய விடங்கரே'' என்று பாடிப் பரவி அத்திருப் பதிகத்துக்குத் திருக் கடைக்காப்பும் சாத்தி முன் நின்று வணங்கி அருள் பெற்றுத் தன் முன் நின்ற நீங்கா அன்பர்களது கூட்டத்தைத் தொழுது கலந்து குலாவி மகிழ்ந்து பக்கமிருந்த திருவீங்கோய் மலை முதலான குற்றமற்ற சிவபெருமான் எழுந்தருளிய பதிகள் பல வணங்கிக்கொண்டு குரா மலர்கள் நிறைந்த சோலைகளையுடைய கொங்கு நாட்டில் திருப்பாண்டிக் கொடுமுடி அடைந்தார்

அ.ரை :- கரவில் அன்பர்—நீங்கா அன்பர். விரவிய—பக்கமிருந்த. குரவலர் சோலை,— குராமலர் நிறைந்த சோலை.

திருபாண்டிக் கொடுமுடி

கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க் கொடுமுடிக்
கோயில் முன் குறுகிச்
சங்கவெண் குழையர் உழைவலஞ் செய்து சார்ந்தடி
அன்பினில் தாழ்ந்து,
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது புனிதர்பொன்
மேனியை நோக்கி,
"இங்கிவர் தம்மை மறக்கவொண் ணா"தெள றெழுந்த
மெய்க் குறிப்பினில் எடுப்ப. 425

வி.ரை :- கொங்கு நாட்டில் நுழைந்த வன் தொண்டர் காவிரியாற்றின் தென்கரையில் கறையூர்க் கொடுமுடிக் கோயிலின்முன் சென்று சங்கவெண்குழை

யர்எழுந்தருளுப் கோயிலைவலம்வந்துசென்று அன்பால் இறைவன் தாள் பணிந்து, பொங்கும் ஆவல் மேலோங் கத் தொழுது புனிதப் பொன்வார் மேனியனைப் பார்த்து ''இங்கிவர் தம்மை மறக்க வொண்ணா'' என்று மனக்குறிப்பில் எழுந்த பதிகம் பாடினார்.

அ.ரை :- குறுகி—சென்றடைந்து. சங்க பெண் குழையார்—சிவபெருமான். உழை—தங்குமிடம்.

நமச்சிவாயப் பதிகம் பாடியது

''அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம அஞ்செழுத்
தறியஎப் பொழுதும்,
எண்ணிய நாவே இன்சுவை பெருக இடையறா
தியம்பும்''என் றிதனைத்
திண்ணிய உணர்விற் கொள்பவர்''மற்றுப் பற்றி
லேன்'' எனச்செழுந் தமிழால்,
நண்ணிய அன்பில் பிணிப்புற நவின்றார் நமச்சிவா
யத்திருப் பதிகம். 426

வி.ரை :- அண்ணலார் சிவபெருமான் திருவடி களை மறந்தாலும் இறைவன் திருநாமத்தை அஞ் செழுத்தை யாவரும் அறிய எப்பொழுதும் இனிய சுவை யாகப் பெருகி இடையறாது சொல்லிக் கொண்டேயிருக் கும் என்ற அதனைத் திண்மையான உணர்வினால் கொள்ளும் வன்தொண்டர் ''மற்றுப் பற்றிலேன்'' எனச் செழுந்தமிழால் பொருந்திய அன்பில் கட்டுண்டு கிடக்க நமச்சிவாயப் பதிகம் பாடினார்.

பேரூர்—அவிநாசி

உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம் உரைத்து மெய்
உணர்வறா ஒருமை,
நிலவிய சிந்தை யுடன்திரு வருளால் நீங்குவார் பாங்கு
நற் பதிகள்

பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப் போந்துதண்
பனிமலர்ப் படப்பைக்,
குலவும்அக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார்
முறுகும்ஆ தரவால். 427

வி·ரை :- உலகமெல்லாம் உயர்வு பெற உறுதி செய்யும் பதிகம்பாடி உண்மை உணர்வு நீங்காத நிலைமையால் ஒன்றித்து நிலவிய எண்ணத்துடன் இறைவன் திருவருளால் பக்கமிருந்த சிவதலங்கள் யாவும் சென்று பணிந்து பரமர் தாள் போற்றிச் சென்று குளிர்ந்த மலர்ச்சோலைகளால் சூழப்பட்ட அந்த கொங்கு நாட்டின் காஞ்சி ஆற்றின் கரையில் உள்ள பெருகும் ஆவலால் பேரூர் சென்றடைந்தார்.

அ·ரை :- படப்பை—சோலைகள். காஞ்சிவாய்—காஞ்சி ஆற்றங்கரையில். பேரூர்—மேலைச் சிதம்பரம், அவிநாசி. முறுகும்—பொங்கும்.

திருத்தில்லை நடம் கண்டது

அத்திருப் பதியை அணைந்துமுன் தம்மை ஆண்டவர்
கோயிலுட் புகுந்து,
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு முன்பு மேவுவார்
தம்மெதிர் விளங்க,
நித்தனார் தில்லை மன்றுள்நின் றாடல்நீடிய கோலம்
நேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்கள்ஆ னந்தக் கலுழிநீர்
பொழிதரக் கண்டார். 428

வி.ரை :- உண்மை அடியார்களுடன் அந்தத் திருப்பதியை அடைந்து முதலில் தம்மை ஆட்கொண்டவர் கோயிலினுட் புகுந்து வலம் வந்து சன்னதி முன்பு இறைவன் எதிரில் சிவபெருமான் திருத்தில்லையில் கனகசபையுள் நின்றாடும் நீண்ட திருக்கோலம் தனக்கு

நேர் நின்று காட்டக் கைகளைத் தலைமேல் குவித்துக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிந்திடக் கண்டு களித்தார்.

அ. ரை :- கலுழி—வெள்ளப் பெருக்கு

மகிழ்ந்து குழைந்தது

காண்டலுங் தொழுது வீழ்ந்துடன் எழுந்து கரையில்
அன் பென்பினை உருக்கப்
பூண்டஐம் புலனில் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்
யுணர்வினில் பொங்கத்'
தாண்டவம் புரியுந் தம்பிரா னாரைத் தலைப்படக்
கிடைத்தபின் சைவ,
ஆண்டகை யாருக் கடுத்த அந்நிலைமை விளைவையார்
அளவறிந் துரைப்பார். 429

வி-ரை :- தில்லை நடராசர் தரிசனம் கிடைத்ததும் தொழுது மண்ணின்மேல் விழுந்து எழுந்து எல்லை யற்ற அன்பு எலும்பினை உருக்கக்கொண்ட ஐம்புலன் களால் அறியப்படாத பேரின்பத்தில் மூழ்கி உடல் உணர்வில் பொங்கித் தவிக்க திருத்தாண்டவம் புரியும் தம்பிரானாரைத் தலையால் வாழ்த்திக் கிடந்த பின்பு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சைவ நெறியாளருக்கு அடுத்து விளைந்ததன் அளவை அறிந்துரைக்க வல்லார் யாரே உளர்!

அந்நிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற அன்பனார் இன்ப
வெள்ளத்து
மன்னிய பாடல் மகிழ்ந்துடன் பரவி வளம்பதி அதனிடை
மருவிப்
''பொன் மணி மன்றுள் எடுத்தசே வடியார் புரிநடங்
கும்பிடப் பெற்றால்

என் இனிப் புறம்போய் எய்துவ'' தென்று மீண்டெழுந்
தருளுதற் கெழுவார். 430

வி.ரை :- இறைவன் திருத்தில்லையில் நடனமிடும் பெருங்காட்சியைப் பேரூரில் கண்டு களித்த பேரருள் பெற்ற அன்பனார் இன்ப வெள்ளத்துள் தவித்த அந் நிலையில் நிகழ்ந்ததைப் பொருந்திய பாடல் மகிழ்வுடன் பாடிப் பரவி வளம்மிக்க அவ்விடத்திருந்து ''பொன் மணி மன்றுள் எடுத்த சேவடியார் புரிநடங்கும்பிடப் பெற்றால், என் இனிப் புறம்போய் எய்துவ'' என்று மீண்டும் எழுந்தருளுதற்கு எழுந்தார்.

திருவெஞ்சமாக்கூடல்

ஆயிடை நீங்கி அருளினாற் செல்வார் அருவரைச்
சுரங்களும் பிறவும்,
பாயுநீர் நதியும் பலபல கடந்து பரமர்தம் பதிபல பணிந்து,
மேயவன் தமிழால் விருப்பொடும் பரவி வெஞ்சமாக்
கூடலும் பணிந்து,
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார் தென்திசைக்
கற்குடி மலையில். 431

வி.ரை :- பேரூரைவிடுத்து இறைவன் அருளினால் அரிய மலைப் பாதைகளையும், பாயும் நீர் நிலைகளையும், ஆறுகளையும் பலபல கடந்து சென்று இறைவனது கோயில்கள் வழிநெடுகப் பணிந்து சென்று, பொருந்திய அழகு தமிழால் விருப்பமுடன் போற்றி திருவெஞ்சமாக் கூடலும் சென்று கும்பிட்டு நீண்ட தூரம் நடந்து தென் திசைக் கற்குடி மலை வந்தடைந்தார்.

அ.ரை :- வரைச்சுரங்கள் — மலைப் பாதைகள். சேயிடை கழிய—நெடும் பயணம் முடிய.

திருக்கற்குடி

விடு தரும்இக் கற்குடியில் விழுமி யாரைப் பணிந்திறைஞ்சி
நீடு விருப்பில் திருப்பதிகம் நிறைந்த சிந்தை யுடன்பாடிப்

பாடும் விருப்பில் தொண்டருடன் பதிகள் பலவும் அணைந் திறைஞ்சித்
தேடும் இருவர் காண்பரியார் திருவா றைமேற் றளிசென்றார். 432

வி.ரை :- வீட்டுப் பேற்றினைத் தரும் இந்தக் கற்குடியில் விழுமியார் சிவபெருமானைப் பணிந்து வணங்கி நீங்கா விருப்பமதால் மனம் நிறைவுடன் திருப்பதிகம் பாடிப், பாடும் அந்த விருப்பமுடன் தொண்டர்களுடன் சிவாலயங்கள் பலவும் சென்று கும்பிட்டு திருமாலும், அயனும் தேடியும் காண்பதற்கு அரியார் அமர்ந்த திருவாறை மேற்றளி சென்றடைந்தார்.

அ ரை :- விழுமியார்—விரும்பியிருக்கும் சிவபெருமான். தேடும் இருவர்—திருமாலும், பிரம்மதேவனும்.

திருவாறை மேற்றளி

செம்பொன் மேருச் சிலைவளைத்த சிவனார் ஆறை மேற்றளியில்
நம்பர் பாதம் பணிந்திறைஞ்சி நாளும் மகிழ்வார்க் கருள்கூட
உம்பர் போற்றுந் தானங்கள் பலவும் பணிந்து போத்தணைவார்
இம்பர் வாழ இன்னம்பர் நகரைச் சேர எய்தினார். 433

வி.ரை :- பசும்பொன் மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் திருஆறை மேற்றளியில் ஈசன் பாதம் பணிந்து வணங்கித் தினமும் மகிழ்ந்திருக்கும் நம்பி ஆரூரருக்கு அருள் மிகுதியாகத் தேவர் போற்றும் இடங்கள் பலவும் பணிந்து சிவனடியார்கள் நிலத்தேவர் வாழும் இன்னம்பர் நகரைசென்றடைந்தார்.

திருஇன்னம்பர்

ஏரின் மருவும் இன்னம்பர் மகிழ்ந்த ஈசர் கழல் வணங்கி
ஆரும் அன்பிற் பணிந்தேத்தி ஆரா அருளால் அங்கமர்வார்

போரின் மலியுங் கரியுரித்தார் மருவும் புறம்ப யம்போற்றச்
சேரும் உள்ளம் மிக்கெழமெய்ப் பதிகம் பாடிச்
செல்கின்றார். 434

வி.ரை :- அழகு சிந்தும் இன்னம்பரில் மகிழ்ந் தமர்ந்தருளும் ஈசனார் திருக்கழல்களை வணங்கி நிறைந்த அன்புடன் பணிந்து போற்றித் தெவிட்டாத அருளினால் ஆங்கு அமர்ந்திருந்து போரிடும் யானை யின் தோலை உரித்த சிவபெருமான் அமர்ந்தருளும் திருப்புறம் பயம் போற்றி வணங்கிடச் சேரும் உள்ளம் மிகுந்தெழும் பதிகம் பாடிச் சென்றபர்.

அ.ரை :- ஏர்—அழகு. மருவும்—விளங்கும்,சிந்தும் ஆரும்—மிகுந்த. ஆரா—தெவிட்டாத.

திருப்புறம்பயம்

''அங்கம் ஓதியோர் ஆறை மேற்றளி'' என்றெடுத்தமர்
காதலில்
பொங்கு செந்தமி ழால்வி ரும்பு ''புறம்ப யந்தொழப்
போதும்'' என்
றெங்கும் மன்னிய இன்னி சைப்பதி கம்பு னைந்துடன்
எய்தினார்
திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்பு றம்பயஞ் சேரவே.
435

வி.ரை :- ''அங்கம் ஓதி ஓர் ஆறை மேற்றளி'' என்று அடியெடுத்துத் தங்கிய அன்பினில் பொங்கி எழும் செந்தமிழ்ச் சொற்களால் விருப்பமுடன் புறப் பகுதிகளில் தொழப்போவோம் என்று எங்கும் 'பொருந் திய இனிய இசையில் பதிகம் புனைந்த நிலவைச் சூடிய செல்வர் சிவபெருமான் எழுந்தருளிய திருப்புறம்பயம் சென்றடைந்தார்.

அப்ப திக்கண் அமர்ந்த தொண்டரும் "அன்று வெண்ணெய்
நல் லூரினில்
ஒப்ப ருந்தனி வேதி யன்பழ ஓலை காட்டிநின் றாண்டவர்
இப்ப திக்கண்வந் தெய்த என்ன தவங்கள்" என்றெதிர்
கொள்ளவே
முப்பு ரங்கள் எரித்த சேவகர் கோயில் வாயிலின்
முன்னினார். 436

விரை :- அந்தத் திருப்புறம்பயத்தில் உள்ள சிவனடியார்கள் "அன்று திருவெண்ணெய் நல்லூரில் ஒப்பற்ற ஒரு வேதியன் பழைய ஓலை ஒன்றைக் காட்டி நின்ற ஆண்டவர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இந்த இடத்திற்கு எழுந்தருள என்ன தவம் செய்ததோ இப்பதி" என்று எதிர்கொள்ள மூன்று ஊர்களையும் எரித்த சேவகரது கோயிலின் வாயில் சென்றடைந்தார்.

நீடு கோபுர முன்பி றைஞ்சி நிலாவு தொண்டரொ
டுள்ளணைந்
தாடல் மேவிய அண்ண லாரடி போற்றி அஞ்சலி
கோலிநின்
றேடு லாமலர் தூவி எட்டினொ டைந்துமாகும் உறுப்பினால்
பீடு நீடு நிலத்தின் மேற்பெரு கப்ப பணிந்து வணங்கினார்.
437

விரை :. நீடுயர்ந்த கோபுரதரிசனம் செய்து வணங்கிக் குழுமியிருந்த தொண்டர்களுடன் உள் சென்று ஆடல் புரியும் அண்ணலார் சிவபெருமான் அடிகள் போற்றி அஞ்சலி செய்து அன்றலர்ந்த மலர்கள் தூவி எட்டு உறுப்பு வணக்கமும், ஐந்து உறுப்பு வணக்கமும் பீடுடைய நீண்டுயர்ந்த நிலத்தின்மேல் விழுந்து பணிந்து வணங்கினார்கள்.

அரை :- எட்டினோடைந்த — அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்க்காரம்.

அங்கு நீடருள் பெற்றுள் ஆர்வம் மிகப்பொ ழிந்தெழும்
அன்பினால்
பொங்கு நாண்மலர்ப் பாத முன்பணிந் தேத்தி மீண்டு
புறத்தணைந்
தெங்கு மாகி நிறைந்து நின்றவர் தாம்ம கிழ்ந்தஇ டங்களில்
தங்கு கோலம் இறைஞ்சு வார்அருள் தாவில் அன்பரோ
டெய்தினார். 438

வி.ரை :- அங்கு இறைவனது நீங்கா அருளைப் பெற்று ஆர்வம் மிகப்பொழிந்து எழும் அன்பினால் பொங்கும் அன்றலர்ந்த மலர்போன்ற பாதங்களை முதலில் பணிந்து போற்றி மீண்டும் வெளியே வந்து, எங்கும் நீக்கமற நிறைந்து நின்றவர் தாம் மகிழ்ந்தமர்ந்த இடங்களில இருந்த கோலத்தில் வணங்கி வேண்டுவார் நீங்காத அன்பர்களோடு சென்றடைந்தார்.

அ.ரை :- தாவில்—நீங்காத. வேறுதெய்வம் வணங் காத பிற சமயங்களுக்குத் தாவாத.

திருக்கூடலையாற்றூர் சென்றது

வம்புநீ டலங்கல் மார்பின் வன்தொண்டர் வன்னி கொன்றை
தும்பைவெள் ளடம்பு திங்கள் தூயநீ ரணிந்த சென்னித்
தம்பிரான் அமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனார் ஆடல்நீடு கூடலை யாற்றூர் சார. 439

வி.ரை :- மணம் வீசும் மாலை அணிந்த மார்பை யுடைய வன்தொண்டர், தீ, கொன்றை, தும்பை, வெள்ளை அடம்பு, நிலவு, தூய கங்கைநீர் அணிந்த தலையையுடைய தம்பிரான் எழுந்தருளிய சிவாலயங் கள் பலவும் சென்று வணங்கி உமையம்மையோடும்

ஆடும் நீண்ட கூடலையாற்றூர் அருகில் சென்றடைய.

அரை:- வம்பு—வாசனை. அலங்கல் — மாலை. வன்னி—தீ. அடம்பு—அடப்பங்கொடி. கொம்பனார்—உமாதேவி.

இறைவன் வேதியராக நின்றது

செப்பரும் பதியில் சேரார் திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் செல்லும் ஒருவழி உமையா ளோடு
மெய்ப்பரம் பொருளாய் உள்ளார் வேதியராகி நின்றார்
முப்புரி நூலுந்தாங்கி நம்பியா ரூரர் முன்பு. 440

வி.ரை:- சொல்லுதற்கு அரிய திருக்கூடலையாற்றூர் அருகில் சென்றும் செல்லாமல் திருமுது குன்றூரை நோக்கிச் சுந்தரர் சென்று கொண்டிருக்க ஒப்பற்ற புகழ் மிக்க சுந்தரர் செல்லும் வழியில், உமையம்மையை ஒரு பாகமாக உடைய உண்மைப் பரம்பொருளாயுள்ள சிவ பெருமான் ஒரு அந்தணராக மார்பில் பூணூல் அணிந்து நம்பியாரூரர் முன்பு நின்றார்.

முதுகுன்றூர் செல்ல வழிகேட்டது

நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தசிந் தையராய்த் தாழ்வார்
''இன்றுயாம் முதுகுன் றெய்த வழிஎமக் கியம்பும்'' என்னக்
குன்றவில் லாளி யாரும் ''கூடலை யாற்றூர் ஏறச்
சென்றதிவ் வழிதான்'' என்று செல்வழித் துணையாய்ச்
செல்ல. 441

வி.ரை:- அந்தணர் உருவில் நின்ற இறைவனை நோக்கி வன்தொண்டர் மனந்தளர்ந்தவராய்த் தாழ்மை யுடன் ''முதுகுன்றூர் நாம் இன்று செல்ல வழி எமக்குக்

கூறும்'' என்று கேட்க மேருவை வில்லாக வளைத்த சிவபெருமானும் ''கூடலையாற்றூருக்கு நீர் சென்ற வழி இதுதான்'' என்று கூறி வழித்துணையாக அவ்வழியில் திருக்கூடலையாற்றூருக்கு அழைத்துச் சென்றார்.

திருக்கூடலையாற்றூர் சென்றது

கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் தொடர்வார்க்
காணார்
வண்டலர் கொன்றை யாரை ''வடிவுடை மழு''என் றேத்தி
''அண்டர்தம் பெருமான் போந்த அதிசயம் அறியேன்''
என்று
கொண்டெழும் விருப்பி னோடும் கூடலை யற்றூர் புக்கார். 442

வி.ரை :. வழிகாட்டியாக அந்தணர் உருவில் வந்தது சிவபெருமான் என்பதை அறிந்து கொண்ட சுந்தரர் கைகள் கூப்பித் தொழுது பின்தொடர இறைவன் மறைந்திடக் காணாது வண்டுகள் மொய்க்கும் கொன்றை அணிந்த இறைவனை ''வடிவுடை மழு என்று ஏத்தித் தேவர்கள்தேவர் மறைந்த அதிசயம் அறியாது போனேன் என்று எழும் விருப்பத்துடன் திருக்கூடலையாற்றூர் சென்றார்,

திருமுதுகுன்றூர் சேர்ந்தது

கூடலை யாற்றூர் மேவுங் கொன்றைவார் சடையி னார்தம்
பீடுயர் கோயில் புக்குப் பெருகிய ஆர்வம் பொங்க
ஆடகப் பொதுவில் ஆடும் அறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து திருமுதுகுன்றில் சேர்ந்தார். 443

வி.ரை :- திருக்கூடலையாற்றூரில் எழுந்தருளிய கொன்றை மலரைச் சடையில் அணிந்தபெரது நீண்டு

யர்ந்த கோயிலினுட் புகுந்து ஆர்வம் பொங்கிப் பெருகப் பொன்னம்பலத்தில் நின்றாடும் ஒலிக்கும் கழல்களை வணங்கிப் போற்றி நீடிய அருள் பெற்றுப் போந்து திருமுதுகுன்றூர் சென்றடைந்தார்.

அ.ரை :- ஆடகப் பொது—பொற்றம்பலம். அறை கழல்—ஒலிக்கும் கழல்

தடநிலைக் கோபுரத்தைத் தாழ்ந்துமுன் இறைஞ்சிக் கோயில்
புடைவலங் கொண்டு புக்குப் போற்றினர் தொழுது வீழ்ந்து
நடநவில் வாரை ''நஞ்சி யிடை'' எனுஞ் செஞ்சொன் மாலைத்
தொடைநிகழ் பதிகம் பாடித் தொழுதுகை சுமந்து நின்று 444

வி.ரை :- பெரிய நிலைகளையுடைய கோபுரத்தைத் தாழ்ந்து வணங்கிக் கோயிலை வலம் வந்து புகுந்து போற்றித் தொழுது வீழ்ந்து நடமாடும் இறைவனை ''நஞ்சியிடை'' என்னும் அழகிய சொற்களால் அமைந்த தமிழ்மாலையாகிய பதிகம் பாடிக் கை தொழுது நின்றார்.

அ.ரை :- தடநிலை—பெரிய நிலைகள்.

பழமலை நாதரைப் பொன் வேண்டியது

நாதர்பால் பொருள்தாம் வேண்டி நண்ணிய வண்ணம் எல்லாம்
கோதறு மனத்துட் கொண்ட குறிப்பொடும் பரவும் போது
தாதவிழ் கொன்றை வேய்ந்தார் தரஅருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டும் ''மெய்யில் வெண் பொடி'' யும்பாட 445

வி.ரை :- பழமலை நாதரிடம் பொன் வேண்டும் எனச் சென்று அழகிய குற்றமற்ற மனத்தினுட் கொண்ட

குறிப்பினோடும் வேண்டிக் கொள்ளும் போது, மகரந்தம் சிந்தும் கொன்றை அணிந்த இறைவன் கொடுப்பதற்கு அருள் பெற சைவ அந்தணர்களது தலைவராகிய சுந்தரர் மகிழ்ந்து "மெய்யில் வெண் பொடியும்" என்று பாடினார்.

பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்தது

பனிமதிச் சடையார் தாமும் பன்னிரண் டாயிரம்பொன்
நனியருள் கொடுக்கும் ஆற்றல் நல்கிட உடைய நம்பி
தனிவரு மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்தெழுந் தருகு சென்று
கனிவிட மிடற்றி னார்முன் பின்னொன்று கழற லுற்றார். 446

வி.ரை :- குளிர் நிலவைச் சடையில் அணிந்த ஈசனும் பன்னிரண்டாயிரம் பொன் விரும்பி அளிக்கும் ஆற்றலினால் கொடுத்திட உடைய நம்பியும் தனிப் பெரும் மகிழ்ச்சி பொங்கிடத் தாழுந்து வணங்கி இறைவன் அருகில் சென்று கொடிய நஞ்சைச் கழுத்தில் உடையவர் முன் மறுபடியும் வேண்டினார்.

அ.ரை :- நனியருள்—விரும்பி அருளி. கனிவிட மிடற்றார்—நன்றாகக் கனிந்த நஞ்சுடைய கழுத்து, கொடிய நஞ்சுடைய கழுத்து,

தங்கக் கட்டிகளைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல வேண்டியது

"அருளும்இக் கனக மெல்லாம் அடியனேற் காரூர் உள்ளோர்
மருளுற வியப்ப அங்கே வரப்பெற வேண்டும்" என்னைத்
தெருளுற எழுந்த வாக்கால் "செழுமணிமுத்தாற் றிட்டிப்
பொருளினை முழுதும் ஆரூர்க் குளத்திற்போய்க் கொள்க" என்றார். 447

வி.ரை :- "தாங்கள் அருளிய இத்தங்கம் எல்லாம் அடியேனுடைய ஊராகிய திருவாரூரில் உள்ளவர்கள் கண்டு வியந்து மயங்க அங்கே வந்து சேர அருள வேண்டும்'' என்று கேட்க இறைவனும், தெளிவான சொற்களால் செழித்து ஓடும் இத்திருமணி முத்தாற்றில் இத்தங்கக் கட்டிகளைப் போட்டுத் திருவாரூர்க் குளத்தில் முழுவதையும் எடுத்துகொள்க'' என்றுரைத்தார்-

அ.ரை:- கனகம்—தங்கம் மருள்—அச்சம், மயக்கம் தெருள்—தெளிவு. கொள்க—எடுத்துக் கொள்க.

தங்கக் கட்டிகளைத் ஆற்றில் விட்டது

என்றுதம் பிரானார் நல்கும் இன்னருள் பெற்ற பின்னர்
வன்தொண்டர் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு
மணிமுத்தாற்றில்
பொன்திரள் எடுத்து நீருள் புகவிட்டுப் போது கின்றார்
அன்றெனை வலிந்தாட் கொண்ட அருள் இதில் அறிவேன்''
என்று 448

வி.ரை :- ''ஆற்றில் விட்டுக் குளத்தில் கொள்க'' என்று தம் இறைவன் நல்கிய இன்னருள் பெற்ற பின்பு வன்தொண்டர் அந்தத் தங்கக் கட்டிகளில் ஒரு துண்டை வெட்டி எடுத்துக் கொண்டு மணி முத்தாற்றில் பொற் கட்டிகளை எடுத்து நீரினுள் போக விட்டு ''அன்று என்னை வலிதாக ஆட்கொண்ட அருளினை இதில் அறிவேன்'' என்றார்.

அ.ரை :- மச்சம் வெட்டி—திருவாரூர்க் குளத்தில் எடுக்கும் பொழுது மணி முத்தாற்றில் விட்ட அதே பொன் தானா? என்று அறிந்து கொள்ள ஒரு சிறுதுண்டு

வெட்டி எடுத்துக் கொண்டதாம். தைப்பதற்காகப் புதுத் துணி கொடுத்தால் ஒரு சிறு பகுதி வெட்டி அட்டையுடன் தைத்துக் கொடுப்பது போன்றது.

திருத்தில்லை செல்ல எண்ணியது

மேவிய காதல் தொண்டு விரவுமெய் விருத்தி பெற்றார்
"ஆவியின் விருத்தி யான அந்தணர் புலியூர் மன்றில்
காவியங் கண்டர் கூத்துக் கண்டுகும் பிடுவ" தென்று
வாவிசூழ் தில்லை மூதூர் வழிக்கொள்வான் வணங்கிப்
போந்தார். 449

வி.ரை :- இறைவன்பால் இருந்த அன்பின் மிகுதியால் திருத்தொண்டு செய்வதால் உடல் நலம் மிகுதியாகப் பெற்ற நம்பி ஆரூரர் ஆன்ம நலத்தின் சிறப்பைத் தருபவரான அந்தணர் திருத்தில்லை மன்றில் கழுத்தில் கருமையுடையவரது திருக்கூத்துக் கண்டு கும்பிடுவது என எழுந்த அவாவினால், நீர் நிலைகளால் சூழப்பட்ட பழமைமிக்க திருத்தில்லை செல்ல வழி கண்டு வணங்கிச் சென்றார்.

அ.ரை :- மெய் விருத்தி — திருத்தொண்டாற்றுவதால் அடைந்த மேம்பாடு. பொன் பெற்றதால் பெற்ற பெருமகிழ்ச்சி தந்த மெய் விருத்தி எனவும் காண்க. ஆவியின் விருத்தி—ஆன்ம நலம். காவியங் கண்டர்— கருமையுடைய கண்டர்.

கடம்பூர் வணங்கித் தில்லை சென்றது

நாடுள பதிகள் சென்று வணங்கிப்போய் மங்கை பாகர்
நீடிய கடம்பூர் போற்றி நிறைந்தஆ னந்தக் கூத்தர்
ஆடிய தில்லை மூதூர் அணிந்தணி வாயில் புக்குச்
சேடுயர் மாடம் மன்னுஞ் செழுந்திரு வீதி சார்ந்தார். 450

விரை :- ீதம்பரம் செல்லும் வழி நெடுக உள்ள சிவாலயங்களில் சென்று வணங்கிப் போய் மங்கை யொரு பாகர் உள்ள நீடுயர்ந்த கடம்பூர் சென்று போற்றி, நிறை ஆனந்தக் கூத்தர் ஆடிய பழமையான திருத்தில்லையின் அழகிய குளிர்ந்த வாயிலினுட் புகுந்து வானுயர் மாடம் மிகுந்த செழித்த திருவீதி வழியே சென்றார்.

திருத்தில்லையில் வழிபாடு

பொற்றிரு வீதி தாழ்ந்து புண்ணிய விளைவாய் ஓங்கும்
நற்றிரு வாயில் நண்ணி நறைமலி அலங்கல் மார்பர்
மற்றதன் முன்பு மண்மேல் வணங்கிஉட் புகுந்து பைம்பொற்
சுற்றுமா ளிகைசூழ் வந்து தொழுதுகை தலைமேற்
கொள்வார். 451

வி.ரை :- மணங்கமழ் மாலை அணிந்த நம்பி ஆரூரர் பொன்போன்ற அழகிய திருவீதியினைத் தாழ்ந்து வணங்கிப் புண்ணியத்தின் விளைவாக ஓங்கி நிற்கும் நற்றிரு வாயிலையடைந்து அதன்முன் நின்று மண்மேல் விழுந்து வணங்கி உட்புகுந்து, பசும்பொன் னால் முடப்பட்ட மாளிகையை வலம்வந்து கைகளைத் தலைமேல் கொண்டு தொழுவார்.

ஆடிய திருமுன் பான அம்பொனின் கோபு ரத்தின்
ஊடுபுக் கிறைஞ்சி ஓங்கும் ஒளிவளர் கனக மன்றில்
நாடகச் செய்ய தாளை நண்ணுற உள்நி றைந்து
நீடும்ஆ னந்த வெள்ளக் கண்கள்நீர் நிரந்து பாய. 452

வி.ரை :- இறைவன் நடனமிடும் பொன்னம்பலக் கோபுரத்தினுட் புகுந்து வணங்கி, ஒளி ஓங்கி வீசும் கனகசபையில் நடனமாடும் சிவந்த தாள்களை நன்றாக உள்ளத்தில் நிறைந்து தங்க வணங்கி ஆனந்த வெள்

ளத்தில் கண்கள் நீரைத் தேக்கிப் பொழிந்தன. ஆனந்த வெள்ளத்தில் கண்ணீரும் கலந்தது என்க.

பரவுவாய் குளறிக் காதல் படிதிருப் படியைத் தாழ்ந்து
விரவுமெய் அங்கம் ஐந்தும் எட்டினும் வணங்கி வேட்கை
உரனுறு திருக்கூத் துள்ளம் ஆர்தரப் பெருகி நெஞ்சில்
கரவிலா தவரைக் கண்ட நிறைவுதங் கருத்திற்கொள்ள
453

வி.ரை :- அவ்வாறு தொழுது வாய்குளறி அன்பு தங்கிய திருப்படியைத் தாழ்ந்து வணங்கிப் பொருந்தும் ஐந்து அங்கம், எட்டு அங்கம் முறைப்படி வணங்கிப் பற்றுக்கோடுள்ள திருக்கூத்து உள்ளத்தில் ஆர்த்தெழுந்து பெருகி நிறைந்திட மனத்தில் மறைவிலாதாரைக் கண்ட நிறைவு தமது கருத்திற்கொள்ள.

அ.ரை :- விரவும்—பொருந்தும். உரனுற—பற்றுக் கோடு தங்கிட. கரவிலா—மறைத்தல் இல்லா.

''மடித்தாடும் அடிமைக்கண்'' என்றெடுத்து மன்னுயிர்கட் கருளும் ஆற்றல்,
அடுத்தாற்று நன்னெறிக்கண் நின்றார்கள் வழுவி நர கணையா வண்ணம்
தடுப்பானைப் பேரூரிற் கண்டநிலை சிறப்பித்துத் தனிக் கூத் தென்றும்.
நடிப்பானை நாம் மனமே பெற்றவா றெனுங் களிப்பால் நயந்து பாடி. 454

வி.ரை :- ''மடித்தாடும் அடிமைக்கண்'' என்று அடியெடித்து உலகில் தோன்றிய உயிரினங்கட்கெல்லாம் அருளும் தன்மையினால், நன்னெறியில் நின்றவர்கள் ஒருசிறு தவறினால் வழுவி நரகில் சென்றடையா வண்ணம் தடுத்தருளும் பேரூரில் கண்ட நிலையினைச்

சிறப்பித்துத் தனிக்கூத்து என்றும் ஆடுபவனை நாம் மனத்தால் அடைந்தவாறு எனும் மகிழ்ச்சியால் நயந்து பாடினார்.

அ.ரை :- ஆற்றால் — தன்மையினால். அடுத்தாற்று—அந்த நிலையினை எட்டிப்பிடித்து.

திருக்கருப்பறியலூர் சென்றது

மீளாத அருள்பெற்றுப் புறம்போந்து திருவீதி மேவித்
தாழ்ந்தே.
ஆனாத வன்தொண்டர் அந்தணர்கள் தாம் போற்ற
அமர்ந்து வைகி
மாளாத பேரன்பாற் பொற்பதியை வணங்கிப்போய்
மறலி வீழத்
தாளாண்மை கொண்டவர்தங் கருப்பறிய லூர் வணங்கிச்
சென்று சார்ந்தார். 466

வி.ரை :- என்றும் நீங்காத அருளைப் பெற்று வெளியே வந்து திருவீதி வழியே சென்று தாழ்ந்து வணங்கி அந்தணர்கள் போற்ற மேலான வன்தொண்டர் அங்கு இருந்து நிலையான பேரன்பினால் பொன்னம்பலத்தை வணங்கிச் சென்று எமதருமன் விழ உதைத்த திருப்பாதங்களைக் கொண்டவரது கருப்பறியலூர் வணங்கச் சென்றடைந்தார்.

அ.ரை :- மறலி—எமன். தாளாண்மை—ஆண்மை கொண்ட திருப்பாதங்கள்.

திருக்கோகுடிக் கோயில்

கூற்றுதைத்தார் திருக்கோகுடிக் கோயில் நண்ணிக்
கோபுரத்தைத் தொழுதுபுகுந் தன்பர் சூழ,

ஏற்றபெருங் காதலினால் இறைஞ்சி ஏத்தி எல்லையிலாப்
பெரு மகிழ்ச்சி மனத்தில் எய்தப்,
போற்றிசைத்துப் புறத்தணைந்தப் பதியில் வைகிப் புனி
தரவர் தமைநினையும் இன்பாங் கூறிச்
சாற்றிய மெய்த் திருப்பதிகம் ''சிம்மாந்'' தென்னும்
தமிழ்மாலை புனைந்தங்குச்சாரு நாளில். 456

வி.ரை :- மறலியை வீழ்த்தியவர் திருக்கோகுடிக் கோயில் சென்று கோபுரத்தைத் தொழுது அன்பர் சூழப் புகுந்து மேன்மையான பேரன்பினால் வணங்கிப் போற்றி எல்லையில்லாப் பெருமகிழ்ச்சி மனத்தில் அடையப் போற்றி இசையுடன் பாடி வெளிவந்து அந்த ஊரில் தங்கியிருந்து புனிதர் சிவபெருமானை நினையும் இன்பங்கள் கூறிச் சொன்ன உண்மைத் திருப்பதிகம் ''சிம்மாந்'' என்னும் தமிழ்மாலை புனைந்து அங்கு இருக்கும் நாளில்.

திருப்பழ மண்ணிப் படிக்கரை

கண்ணுதலார் விரும்புகருப் பறிய லூரைக் கைதொழுது
நீங்கிப் போய்க் கயல்கள் பாயும்,
மண்ணிவளம் படிக்கரையை நண்ணி அங்கு மாதொருபா
கத்தவர்தான் வணங்கிப் போற்றி,
எண்ணில்புகழ்ப் பதிகமும் ',முன் னவன்''என் றேத்தி
ஏகுவார் வாள் கொளிபுத் தூர்எய்தாது
புண்ணியனார் போம்பொழுது நினைந்து மீண்டுபுகு
கின்றார் ''தலைக்கலன்''என் றெடுத்துப்போற்றி. 457

வி.ரை :- நெற்றிக் கண்ணனார் விரும்பி அமர்ந் தருளும் திருக்கரும்பறியலூரைக் கைதொழுது நீங்கிச் சென்று கயல்மீன்கள் பாயும் மண்ணி வளம் படிக்

கரையை அடைந்து அங்கு மாதை ஒரு பாகமாக உடையவரது திருத்தாள்களை வணங்கிப் போற்றி எண்ணில் புகழ்ப் பதிகம் பாடி "முன்னவன்" என்று அடியெடுத்து ஏத்தி வாழ்கொளி புத்தூர் செல்லாது புண்ணியனார் சுந்தரர் போகும்போது வழியில் நினைந்து மீண்டும் திரும்பி வந்து புகுந்து "தலைக் கலன்" என்றெடுத்துப் பாடி வணங்கிப் போற்றினார்.

திருவாழ்கொளி புத்தூர்

திருப்பதிகம் பாடியே சென்றங் கெய்தித் தேவர்பெரு மானார்
தங்கோயில் வாயில்,
உருப்பொலியும் மயிர்ப்புளகம் விரவத் தாழ்ந்தே
உள்ளணைந்து பணிந்தேத்தி உருகும் அன்பால்,
பொருப்பரையன் மடப்பாவை இடப்பா லானைப் போற்றி
சைத்துப் புறம் போந்துதங்கிப்பூமென்
கருப்புவயல் வாழ்கொளிபுத் தூரை நீங்கிக் கானாட்டு
முள்ளூரிற் கலந்தபோது 459

வி.ரை :- திருப்பதிகம் பாடியபடியே அங்குச் சென்றடைந்து தேவர்களது தேவனாரது கோயில் வாயில் முன் நின்று உடல் பொலிவும் மயிர்க் கூச்சலும் தோன்றத் தாழ்ந்து வணங்கி உள்ளே சென்று பணிந் தேத்தி உருகும் அன்பால் மலை மன்னன் மடப்பாவை உமையம்மையை இடப்பாகமானவரைப் போற்றி சைத்துப் புறம் சென்றடைந்து தங்கியிருந்து மலர் போன்ற மென்மையான கரும்பு வயல்கள் சூழவாழ் கொளிபுத்தூர் நீங்கிக் கானாட்டு முள்ளூரில் சென்று சேர்ந்தார்.

அ.ரை :- உருப்பொலியும் — உடல் பொலிவு பெறும். பொருப்பரையன்—மலைமன்னன். பொருப்பு—மலை. பரை—பார்பதி. பரையன்—மன்னன்.

திருக்கானாட்டு முள்ளூர்

கானாட்டு முள்ளூரைச் சாரும்போது கண்ணுதலார்
எதிர்காட்சி கொடுப்பக் கண்டு,
"தூநாண்மென் மலர்க்கொன்றைச் சடையார் செய்ய
துணைப்பாத மலர்கண்டு தொழுதேன்" என்று
வானாளும் திருப்பதிகம் "வள்வாய்" என்னும் வண்
தமிழின் தொடைமாலை மலரச்சாத்தித்
தேனாரும் மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த திரு எதிர்
கொள் பாடியினை எய்தச் செல்வார். 459

வி.ரை :- திருக்காணாட்டு முள்ளூரைச் சென்றடையும்போது நெற்றிக்கண்ணனார் எதிரில் காட்சி அருளிடக் கண்டு, 'தூநாண்மென் மலர்க் கொன்றைச் சடையார் செய்ய துணைப்பாத மலர் கொண்டு தொழுதேன்' என்று வான் போற்றும் திருப்பதிகம் "வள்வாய்" என்று அடியெடுத்து அழகிய தமிழில் தொடை மாலை அக மலரச் சாத்தித் தேன் ததும்பும் மலர்ச் சோலைகளினிடையே புகுந்து திருஎதிர்கொள்பாடி நோக்கிச் சென்றார்.

திருஎதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி

எத்திசையுந் தொழுதேத்த "மத்த யானை" எடுத்
"தெதிர்கொள் பாடியினை அடைவோம்" என்னும்,
சித்தநிலைத் திருப்பதிகம் பாடி வந்து செல்வமிகு செழுங்
கோயில் இறைஞ்சி நண்ணி,
அத்தர்தமை அடிவணங்கி அங்கு வைகி அருள்பெற்றுத்
திருவேள்விக் குடியில் எய்தி,
முத்திதரும் பெருமானத் துருத்தி கூட "மூப்பதிலை"
எனும் பதிகம் மொழிந்து வாழ்ந்தார். 460

வி.ரை :- திசைகளெங்கிலும் உள்ள சிவனடியார் கள் தொழுது போற்ற "மத்தயானை" என்று அடி யெடுத்துத் திரு எதிர்கொள்பாடி சென்றடைவோம் என் னும் அறிவுநிலையான திருப்பதிகம் பாடி வந்து சேர்ந்து செல்வம் கொழிக்கும் கோயிலில் வணங்கிச் சென்று சிவ பெருமான் அடிகளை வணங்கி அங்கு சில நாட்கள் தங்கி இறைவன் அருளைப் பெற்று திரு வேள்விக்குடி சென்று, முத்துதிரும் பெருமானை வேள்விக் குடி தண் துருத்தி கோணரைக் காண, "மப்பதிலை" எனும் பதிகம் பாடி அங்கிருந்தார்.

காட்டுநல் வேள்விக் கோலங் கருத்துற வணங்கிக் காதல்
நாட்டிய உள்ளத் தோடு நம்பிஆ ரூரர் போற்றி
ஈட்டிய தவத்தோர் சூழ அங் நின் றேகி அன்பு
பூட்டிஆட் கொண்டார் மன்னுந் தானங்கள் இறைஞ்சிப்
போந்து. 461

வி.ரை :- இறைவனின் வேள்விக் கோலங்கண்டு மனம் நிறைவு பெற வணங்கி அன்புதங்கிய உள்ளத் தோடு நம்பி ஆரூரர் போற்றிக் கூடிய தவத்தோர்கள் சூழ்ந்து வர அங்கிருந்தும் சென்று அன்பைச் செலுத்தி ஆட்கொண்ட சிவபெருமான் கோயில்களில் வழிபட்டுச் சென்றார்.

திருவாரூர் சென்றடைந்தது

எஞ்சாத பேரன்பில் திருத்தொண்ட ருட னெய்தி
நஞ்சாருங் கறைமிடற்றார் இடம் பலவும் நயந்தேத்தி
மஞ்சாரும் பொழிலுடுத்த மலர்த்தடங்கள் புடைசூழும்
செஞ்சாலி வயல் மருதத் திருவாரூர் சென்றடைந்தார். 462

வி.ரை :- முழுமையான பேரன்பினால் திருத்தொண்டர்கள் சூழ்ந்து வர நஞ்சுண்டீசுவரன் எழுந்தருளிய ஆலயங்கள் பலவும் விரும்பிப் போற்றி, மேகக்கூட்டங்கள் தவழ்ந்து செல்லும் மலர்ச் சோலைகளும் நீர்நிலைகளாலும் சூழப்பட்ட சிவப்புச் சம்பா நெல்வயல்களால் சூழப்பட்ட மருதநிலமாகிய திருவாரூர் சென்றடைந்தார்.

திருவாரூர்த் தேவரை வழிபட்டது

செல்வமலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களும்
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி உள்புக்கங்
கெல்லையிலாக் காதல்மிக எடுத்தமலர்க் கைகுவித்துப்
பல்குதிருத் தொண்டருடன் பரமர்திரு முன் அணைந்தார். 463

வி.ரை :- செல்வம் கொழிக்கும் திருவாரூர்த் தேவரோடு முனிவர்களும் சேர்ந்து மல்கும் திருக் கோபுர தரிசனம் பெற்று வணங்கி உள்ளே புகுந்து எல்லையில்லாத அன்பு மிகுதியாகத் தமது மலர்க் கைகளைத் தலைமேல் குவித்துப் பலவாகிப் பெருகும் திருத்தொண்டர்களுடன் சேர்ந்து பரமபிதாவின் முன் சென்றடைந்தார்.

பரவையார் மாளிகை சென்றது

மூவாத முதலாகி நடுவாகி முடியாத
சேவாருங் கொடியாரைத் திருமூலட் டானத்துள்
ஓவாத பெருங்காத லுடன் அறைஞ்சிப் புறம்போந்து
நாவாத புகழ்ப்பரவை யார்திருமா ளிகைசார்ந்தார். 464

வி.ரை :- முதலும், நடுவும், கடைசியுமாகி இவை தம் நிலையினின்றும் மூவாத தன்மையினராய் இடபக் கொடியை உடையவராய்த் திரு மூலஸ்தானத்தில் கண்டு நீங்காத பெருங்காதலுடன் வணங்கிப் புறம் சென்று புகழ் மங்காத பரவையார் திருமாளிகை சென்றடைந்தார்.

அ.ரை :- மூவாத — நீங்காத, அழியாத. இச்சொல்லை முதல், நடு, முடிவு ஆகிய முன்றுக்கும் தனித்தனியே சேர்த்து முதன்மைநிலை அழியாத, நடுவுநிலை அழியாத, முடிவுநிலை அழியாத எனப்பொருள்காண்க. சேவாரும்—சே ஆரும், இடபம் சேர்ந்த. இடபம் பொறித்த. திருமுலட்டானம்—திருமூலஸ்தானம் என்பதன் தமிழாக்கம். ஓவாத—ஓய்தல் இல்லாத நீங்காத, தாவாத—மாறாத கெடாத.

பொங்குபெரு விழிப்பினொடு புரிகுழலார் பலர்போற்றப்
பங்கயக்கண் செங்கனிவாய்ப் பரவையார் அடிவணங்கி
''எங்களையும் நினைந்தருளிற்'' றென இயம்ப இனிதளித்து
மங்கைநல்லார் அவரோடு மகிழ்ந்துறைந்து வைகுநாள். 465

வி.ரை :- கற்றையாகப் பின்னப்பட்ட சடையையுடைய கூந்தல் மகளிர், பொங்கும் அனிபினோடும் போற்றி வரவேற்க,செந்தாமரைக்கண்ணும் கொவ்வைக் கனிவாயுமுடைய பரவையார் சுந்தரர் திருத்தாள்களை வணங்கி ''எங்களையும் நினைந்தருளினீர்'' என்று கூற, நம்பியும் அதற்கு இனிதான அருள்செய்து மங்கையர்களில் சிறந்த பரவையாரோடு மகிழ்ந்து அங்கு தங்கியிருக்கும் நாளில்.

ஆற்றில் விட்ட பொன்னைக் குளத்தில் எடுக்கப் புறப்பட்டது

''நாயனார் முதுகுன்றர் நமக்களித்த நன்னிதியம்
தூயமணி முத்தாற்றிற் புக்விட்டேம் துணைவரவர்
கோயிலின்மா ளிகைமேல்பாற் குளத்தில் அவர் அருளாலே
போயெடுத்துக் கொடுபோதப் போதுவாய்'' எனப்புகல. 466

வி.ரை :- "முதுகுன்றூர் நாயனார் நமக்குக் கொடுத்த நல்ல நிதியாகிய பன்னிரண்டாயிரம் பொற் கட்டிகளையும் துயதாகிய திருமணி முத்தாற்றில் புக விட்டோம் அதை நம் துணைவராகிய சிவபெருமான் கோயிலின் மாளிகையின் மேற்குப் பக்கமுள்ள குளத்தி லிருந்து அவர் அருளால் போய் எடுத்துக்கொள்வோம்" வருவாய் என்று கூறினார்.

அ.ரை :- நாயனார்—முதல்வர், தலைவர், கடவுள், போதுவாய்—வருவாய்.

பரவையார் நகைத்ததும் ஆரூர் பதிலளித்ததும்

"என்னஅதி சயம்இதுதான் என்சொன்ன வா" றென்று
மின்னிடையார் சிறு முறுவ லுடன்விளம்ப மெய்யுணர்ந்தார்
"நன்னுதலாய்! என்னுடைய நாதன்அரு ளாற்குளத்தில்
பொன்னடைய எடுத்துனக்குத் தருவது பொய் யா" தென்று 467

வி.ரை :- கோயில்க் குளத்தில் பொன் எடுக்கப் போவோம் வா' என்ற அதனை நம்தாவராய் "என்ன சொன்னீர்கள்" என்று மின்னல் போன்ற இடையை யுடைய பரவையார் சிறுபுன்னைக பூத்துக்கேட்க. "நல்ல அழகிய நெற்றியை உடையவளே! என் தலை வன் அருளினால் குளத்தில் பொன்கிடைக்க நான் அதனை எடுத்துத்தருவது பொய்யாகாது" என்று மெய் யுணர்ந்தார் சுந்தரமூர்த்தி நாயனார் கூறினார்.

பொன்னெடுக்கப் போந்தது

ஆங்கவரும் உடன்போத அளவிறந்த விருப்பினுடன்
பூங்கோயில் உள் மகிழ்ந்த புராதனரைப் புக்கிறைஞ்சி
ஓங்குதிரு மாளிகையை வலம்வந்தங் குடன்மேலைப்
பாங்குதிருக் குளத்தணைந்தார் பரவையார் தனித்து
ணைவர். 468

வி.ரை :- சுத்தரருடன் பரவையார்போக அளவற்ற அன்பினுடன் மலராலயத்தினுட் புகுந்து புராதனராகிய சிவபெருமானை மகிழ்ந்து வணங்கி ஓங்கியுயர்ந்த கோயிலை வலம் வந்து மேற்குப் பக்கம் உள்ள பாங்கான திருக்குளத்தருகில் பரவையாரின் ஒப்பற்ற கணவராகிய நம்பி ஆரூரர் சென்றடைந்தார்.

குளத்தில் பொன்னைத் தேடித் தடவிப்பார்த்தது

மற்றதனில் வடகீழ்பாற் கரைமீது வந்தருளி
முற்றிழையார் தமைநிறுத்தி முனைப்பாடித் திருநாடர்
கற்றைவார் சடையாரைக் கைதொழுது குளத்தில் இழிந்
தற்றைநாள் இட்டெடுப்பார் போல் அங்கு தடவுதலும் 469

வி.ரை :, அந்தக் குளத்தின் வடகிழக்குக் கரைமீது வந்து சேர்ந்து, கற்றையாக உள்ள கூந்தளாலை அங்கு நிறுத்தித் திருமுனைப் பாடித் திருநாடர் சுந்தரமூர்த்தி நாயனார் அழகிய கற்றையாக உள்ள சடையுடையவரைக் கைதொழுது குளத்தில் இறங்கி, அன்றுதான் தங்கத்தைக் குளத்தில் இட்டது போன்று அங்கு தடவிப் பார்த்தார்.

"ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடுவதோ" என நகைத்தது

நீற்றழகர் பாட்டுவந்து திருவிளையாட் டினில்நின்று
மாற்றுறுசெம் பொன்குளத்து வருவியா தொழிந்தருள
"ஆற்றினில்இட் டுக்குளத்தில் தேடுவீர்! அருள் இதுவோ
சாற்றும்" எனக் கோற்றொடியார் மொழிந்தருளத்
தனித்தொண்டர். 470

வி.ரை :- திருநீறுபூத்த பேரழகர் நம்பி ஆரூரது பாட்டை விரும்பி, ஒரு திருவிளையாட்டினால் ஆற்றி

விருந்து குளத்திற்கு மாற்றப்பட்ட பசும்பொன் குளத்தில் தென்படாது மறைத்தருள "ஆற்றினில் இட்டுக் குளத்தில் தேடுவீர்! நீர் செய்வது இதுதானோ சொல்லும்" என்று பரவையார் சொல்லியருள நம்பி ஆரூரர் மேலும் தொடர்ந்தார்.

பதிகம் பாடியது

"முன்செய்த அருள்வழியே முருகலர்பூங் குழற்பரவை
தன் செய்ய வாயில்நகை தாராமே தாரும்" என
மின்செய்த நூல்மார்பின் வேதியர்தாம் முதுகுன்றில்
"பொன்செய்த மேனியினீர்" எனப்பதிகம் போற்றிசைத்து. 471

வி.ரை :- முன்பு பழமலையில் "பன்னிரண்டாயிரம் பொற்கட்டிகளை மணிமுத்தாற்றில் விட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தில் எடுத்துக் கொள்க என்று சொன்னபடியே அழகு சிந்தும் மலர்க் கூந்தலாள் பரவை தனது சிவந்த வாய் மலர்ந்து நகைத்திடாமல் தந்தருள்வாய்" என்று மின்னும் ஒளிவீசும் பூணூல் மார்பையுடைய வேதியர் முதுகுன்றூரில் வீற்றிருந்த பெருமான் "பொன் செய்த மேனியனீர்" எனப் போற்றிப் பதிகம் பாடினார்.

"முட்டஇமை யோர்அறிய முதுகுன்றில் தந்தபொருள்
சட்டநான் பெறாதொழிந்த தளர்வினால் கையறவாம்
இட்டளத்தை இவளெதிரே கெடுத்தருளும்" எனுந் திருப்பாட்
டெட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள ஏத்துவார். 472

வி.ரை :- தேவர்முதலாக யாவரும் அறிய முதுகுன்றூரில் தந்ததங்கம் விரைவாக நான் பெற முடியா

மல் ஒழிந்தமையால் தளர்வடைந்து கையும் வராமல் காலும் வராமல், துன்பத்தைப் போக்க இவள் காணக் கொடுத்தருள வேண்டும் எனும் திருப்பாட்டு எட்டாம் பாட்டளவும் பொன் காட்டாது ஒழித்தருள மேலும் போற்றுவாராயினர்.

அ.ரை :- முட்ட — முழுமையாக கையளவாம்— கைவராது செயலற்றுப் போதல் இட்டளம்—துன்பம்.

ஒன்பதாவது பாட்டுப் பாடியது

''ஏத்தாதே இருந்தறியேன்'' எனுந்திருப்பாட் டெவ்வுலகும்
காத்தாடும் அம்பலத்துக் கண்ணுளனாங் கண்ணுதலைக்
''கூத்தா! தந் தருளாய்இக் கோமளத்தின் முன்'' என்று
நீத்தாருந் தொடர்வரிய நெறிநின்றார் பரவுதலும். 473

வி.ரை :- திருமுதுகுன்றூர்ப் பிரான் மீது திருப்பதிகம் எட்டாம் பாடல் பொன் காட்டாது மறைத்திட வன் தொண்டர் ஒன்பதாவது பாடலில் ''ஏத்தாதே இருந்தறியேன்'' எனும் திருப்பாட்டு எல்லா உலகங்களையும் காத்தருள அம்பலத்தின் கண் உள்ள நெற்றிக் கண்ணரைக் ''கூத்தா! இக்கோமளத்தின் முன் இவள் காணத் தந்தருளாயோ! என்று முற்றும் துறந்தாரும் செய்வதற்கரிய நெறியில் நின்ற சுந்தரர் பாடி வேண்டியதும்.

பொன்தோன்ற எடுத்துக் கரையேறியது

கொந்தவிழ்பூங் கொன்றைமுடிக் கூத்தனார் திருவருளால்
வந்தெழுபொன் திரளெடுத்து வரன்முழையாற் கரையேற்ற
அந்தரத்து மலர்மாரி பொழிந்திழந்த தவனியுளோர்
''இந்த அதி சயம் என்னே! யார்பெறுவார்?'' எனத்
தொழுதார். 474

வி. ரை :- கொத்தாக மலர்க்கொன்றை அணிந்த முடியை உடைய ஆதிக் கூத்த னாரது திருவருளினால் குளத்திலிருந்து வந்து தோன்றிய பொற்கட்டிகளை எடுத்து வரும் முறையால் கரையில் ஏற்ற, வானினின் றும் தேவர்கள் மலர்மாரி பொழிந்திட, அங்குக் கூடியிருந்த மக்களெல்லோரும் ''இதுஎன்ன அதிசயம் இது போன்று யார்பெறுவார்'' என்று சிவ பெருமானைத் தொழுதனர்.

பொன்னை உரைத்துப் பார்த்தது

ஞாலம்வியப் பெய்தவரு நற்கனக மிடை எடுத்து
மூலமெனக் கொடுபோந்த ஆணியின்முன் உரைப்பிக்க
நீலமிடற் றவர் அருளால் உரைதாழப் பின்னும் நெடு
மாலயனுக் கரியகழல் வழுத்தினார் வன்தொண்டர். 475

வி.ரை :- குளத்தில் தோன்றிய பொன் திரளை எடுத்து வந்து ஆணிப் பொன்னில் உரைத்துப் பார்க்க உலகம் வியக்க எடுத்து வந்த நல்ல தங்கமானது உரை தாழ்ந்து காணப்படுவது கண்ட வன்தொண்டர் திருமாலும் அயனும் அரியாத சிவபெருமான் திருக்கழல், களை மீண்டும் வாழ்த்தினார்.

அ.ரை :- ஆணி — ஆணிப்பொன். பொன்னை உரைத்துப பார்க்கும் கல்.

மீண்டும் பாடியது

மீட்டும் அவர் பரவுதலும் மெய்யன்பர் அன்பில் வரும்
பாட்டுவந்து கூத்துவந்தார் படுவாசி முடிவெய்தும்
ஒட்டறுசெம் பொன்னொக்க ஒருமாவுங் குறையாமல்
காட்டுதலும் மகிழ்ந்தெடுத்துக் கொண்டுகரை ஏறினார். 476

வி.ரை :- உரை தாழ்ந்த பொன் பெற்றது கண்டு வருந்தி மீண்டும் அவர் வேண்டுவது கண்டு உண்மை அன்பர்களது அன்பில் பாட்டை விரும்பி வரும் கூத்தர் சிவபெருமான் நேர்ந்த வேறுபாடு இல்லாமல் ஒப்பற்ற செம்பொன் ஒக்க ஒரளவும் குறையாமல் காட்டிட அதனை மகிழ்ந்தெடுத்துக் கொண்டு கரை ஏறினார்.

அ.ரை :- பாட்டு வந்து கூத்து வந்தார்—பாட்டை விரும்பும் கூத்தர். படுவாசி—தெரிந்தவேறுபாடு? கண்ட வேறுபாடு ஓட்டறு—குற்றமற்ற. ஒரு மாவும்—ஒரு குறையும்,

பரவையார் மாளிகைக்கு அனுப்பியது

கரையேறிப் பரவையா ருடன்கனக மானதெலாம்
நிரையேயா ளிற்சுமத்தி நெடுநிலைமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத் திருமூலட் டானத்தார்
விரையேறு மலர்ப்பாதந் தொழுதணைந்தார் வீதியினில்
477

வி.ரை :- கரை ஏறி வந்து தங்கத்தையெல்லாம் பரவையாருடன் சுமை தூக்குவர்களின் மேல் சுமத்தி வரிசையாக மாளிகைக்கு அனுப்பிய பின்பு அலை வீசும் நீர் நிறைந்த கங்கையைத் தலையில் அணிந்த வரது திருமூலத்தானத்தாரது மணம் வீசும் மலர்ப் பாதங்களைத் தொழுது வீதி வழி வந்தார்.

அ.ரை :- நிரை—வரிசை. திரை—அலை.

பரவையாருடன் மகிழ்ந்திருந்தது

வந்துதிரு மாளிகையின்உட் புகுந்து மங்கல வாழ்த்
தந்தமிலா வகை ஏத்தும் அளவிறந்தார் ஒலிசிறப்பச்
சிந்தைநிறை மகிழ்ச்சியுடன் சேயிழையா ருடன் அமர்ந்தார்
சந்தமலி மலர்ச்சோலை நாவலர்தங் காவலனார். 478

வி.ரை :- வந்த வன்தொண்டர் பரவையார் மாளிகையினுட் புகுந்து அளவற்றவர்கள் ஒலித்துப் பாட மங்கல வாழ்த்து வகை வகையாக ஏத்தி மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் பரவையாருடன் மணம் கமழும் மலர்ச் சோலைகளையுடை நாவலூர் காவலனார் சுந்தரர் தங்கியிருந்தார்.

ஆடிப்பாடி மகிழந்திருந்தது

அணியாரூர் மணிப்புற்றின் அமர்ந்தருளும் பரம்பொருளைப்
பணிவார்அங் கொருநாளிற் பாராட்டுந் திருப்பதிகம்
தணியாத ஆனந்தந் தலைசிறப்பத் தொண்டருடன்
துணிவாய பொருள்வினவித் தொழுதாடிப் பாடுவார். 479

வி.ரை :- அழகிய திருவாரூர் பொன்புற்றில் அமர்ந்தருளும் பரமபிதாவைத் திணியாத ஆனந்தம் மேலோங்கத் தொண்டருடன் கூடி வணங்கி அங்கு ஒரு நாள் துணிவாக இறைவன் பேரருளினை வினவித் தொழுதாடிப் பாராட்டும் திருப்பதிகம் பாடுவார்.

"பாறுதாங்கி" எனப் பாடிக்களித்தது

பண்ணிறையும் வகை "பாறு தாங்கி"என எடுத்தருளி
உண்ணிறையும் மனக்களிப்பால் உறுபுளகம் மயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும் புனல்பொழியக் கரைஇகந்த ஆனந்தம்
எண்ணிறைந்த படிதோன்ற ஏத்திமகிழ்ந் தின்புற்றார். 480

வி.ரை :- இசை நிறைந்தபடி "பாறுதாங்கி" என அடியெடுத்து உள்ளத்தில் தேங்கியிருந்த மனமகிழ்ச்சியினால் உடல் புளகாங்கிதம். அடைய மயிர்க் கால்கள் கூச்சலிட கண்களில் நிறைந்திருந்த நீர் பொழிய மகிழ்ச்சி கரைபுறண்டோட மனம் நிறைந்தபடி ஏத்தி மகிழ்ந்து இன்புற்றிருந்தார்.

''பொன்னினும் ஒளியது சடையர்''
எனப் போந்தது

இன்புற்றங் கமர்நாளில் ஈறில்அரு மறைபரவும்
வன்புற்றின் அரவணிந்த மன்னவனார் அருள்பெற்றே
அன்புற்ற காதலுடன் அளவிறந்த பிறபதியும்
பொன்புற்கென் றிடஒளிருஞ் சடையாரைத் தொழப்போவார் 481

வி.ரை :- பரவையாருடன் இன்பம் அனுபவித்திருக்கும் நாளில் முடிவில்லாத அரிய வேதம் போற்றும் கொடிய புற்றினில் உள்ள பாம்பை அணிந்த மன்னவனார் சிவபெருமானின் அருளைப் பெற்று அன்பினால் எழுந்த காதலுடன் பொன்னும் குறையுடையதே என்று சொல்லும்படியாக ஒளிவீசும் சடையப்பரைக் காண எண்ணிலடங்காத பிறபதிகளுக்குச் சென்றார்.

அ.ரை :- பொன்புற்குஎன் — பொன்னும் குறையுடையது என, சிவபெருமான் சடை பொன்னினும் ஒளி உடையது என.

திருநள்ளாறு போந்தது

பரிசனமும் உடன்போதப் பாங்கமைந்த பதிகள் தொறும்
கரியுரிவை புனைந்தார்தங் கழல்தொழுது மகிழ்ந்தேத்தி
துரிசறுநற் பெருந்தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத்தொண்டர் எதிர்கொள்ளப்
புக்கணைந்தார். 482

வி.ரை :- திருத்தொண்டர்கள் சூழ்ந்து வர இரு பக்கங்களிலுமிருந்த சிவாலயங்கள் தோறும் சென்று யானையுரியை ஆடையாகப் போர்த்திக் கொண்டவரது திருக்கழல்களைத் தொழுது மகிழ்ந்து போற்றிக் குற்றமற்ற நல்ல பெருந்தொண்டர் திருநள்ளாறு தொழு

வதற்கு விருப்பமிக்க திருத்தொண்டர்கள் எதிர்கொண்டழைக்கச் சென்றடைந்தார்.

அ.ரை :- துரிசு—குற்றம். புரிவு—விருப்பம்.

நள்ளாறரை வணங்கியது

விண்தடவு கோபுரத்தைப் பணிந்துகரம் மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினொடு மன்னுதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில மிசைப்பணிந்தார். 483

வி.ரை :- வானளாவிய கோபுரத்தை வணங்கிப் பணிந்து கைகளைத் தலைமேல் குவித்துக்கொண்டு புகுந்து அண்ணலார் திருக்கோயிலினை வலம்வந்து தேங்கிக் கிடந்த பேரன்பினோடு பொருந்திய திருநள்ளாறரது செந்தாமரைச் சிவந்த பாதங்களில் பொருந்திட நிலத்தில் விழுந்து வணங்கினார்.

திருக்கடவூர் மயானம்

அங்கணரைப் பணிந்தேத்தி அருளினால் தொழுதுபோய்
மங்குலணி மணிமாடத் திருக்கடவூர் வந்தெய்தத்
திங்கள்வளர் முடியார்தந் திருமயா னமும் பணிந்து
பொங்கும் இசைப் பதிகம் ''மருவார்கொன்றை'' எனப் போற்றி. 484

வி.ரை :- அழகிய கண்ணினாரைப் பணிந்து போற்றி அருளியதன் தன்மையால் தொழுது சென்று மேகங்கள் சேர்ந்து அழகு சேர்க்கும் அழகு மாடங்கள் நிறைந்த திருக்கடவூர் சென்று பிறையணிந்த முடியாரது திருமயானத்தையும் வணங்கி இசை பொங்கும் ''மருவார் கொன்றை'' எனும் பதிகம் போற்றினார்.

கூற்றுதைத்த கழல் பணிந்தது

திருவீரட் டானத்துத் தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல் பணிந்து ''பொடியார்மேனி
மருஈரத் தமிழ்மாலை புனைந்தேத்தி மலை வளைத்த
பெருவீரர் வலம்புரத் துப் பெருகார்வத் தொடுஞ் சென்றார். 485

வி.ரை :- திருவீரட்டானத்து எழுந்தருளியுள்ள தேவாதி தேவர், சினம்கொண்ட யமனின் பொருந்திய வீரத்தைத் தொலைத்த திருக்கழல்களைப் பணிந்து, ''பொடியார்மேனி'' எனத் தொடங்கும் திருப்பதிகம் குளிர்ந்த தமிழ்மாலை புனைந்து போற்றிப் பாடி, மேரு மலையை வில்லாக வளைத்த பெருவீரர் சிவபெருமான் மகிழ்ந்தமர்ந்தருளும் திருவலம்புரத்துக்குப் பெருகும் ஆர்வத்துடன் சென்றடைந்தார்.

அ.ரை :- திருக்கடவூர்—யமனை உதைத்த இடம் வீரட்டாங்களுள் ஒன்று. மருஈர—ஈரம் மிகுந்த.

திருவலம்புரம்

வரையோடு நிகர்புரிசை வலம்புரத்தார் கழல் வணங்கி
உரையோசைப் பதிகம் ''எனக்கினி'' ஓதிப் போய்ச் சங்க
நிரையோடு துமித்தூப மணித்தீப நித்திலப்பூந்
திரையோதங் கொண்டிறைஞ்சுந் திருச்சாய்க்கா
டெய்தினார். 486

வி.ரை :- மலை போலும் உயர்ந்த மதில் சூழ்ந்த திருவலம்புரத்து இறைவனாரது திருக்கழல்களை வணங்கி ''எனக்கினி'' என்றெடுத்து உரையோசைப் பதிகம் பாடிச் சென்று சங்கு வரிசைகளுடன், பவளமும் மணியும் தீபமேந்தியதென ஒளிவீச முத்துக் கொழிக்கும் அலைகளையுடைய ஒலிக்கும் திருச்சாயக் காடுவந்து சேர்ந்தார்.

அ ரை :- வரை—மலை. சங்கநிரை—சங்குவரிசை. துமித்தூபம்—பவளஒளி, தீபமெனத்திகழ்ந்தது. மணித் தீபம்—மணிகளின் ஒளிதீபமெனத் திகழ்ந்தது. நித்திலப் பூந்திரை - முத்துக்கள் அடித்துக்கொண்டு வந்த அலைகள்.

திருச்சாயக்காடு. திருவெண்காடு

தேவர்பெரு மான்தன்னைத் திருச்சாயக்காட் டினிற்பணிந்து
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரம்எரித்தார் வெண்காடு பணிந்தேத்தி
நாவலர்கா வலர்அடைந்தார் நனிபள்ளித் திருநகரில். 487

வி.ரை -- திருச்சாயக்காட்டில் தேவர்தம் இறை வனை வணங்கிப் பாவலர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிச்சென்று பகைவரது புரம் மூன்றையும் எரித்தவரது திருவெண்காடு சென்று பணிந்து போற்றி நாவலர் தலைவர் திருநனிபள்ளித் திருநகர் சென்றடைந்தார்.

திருச்செம்பொன் பள்ளி

நனிபள்ளி அமர்ந்தபிரான் கழல்வணங்கி நற்றமிழின்
புனிதநறுந் தொடைபுனைந்து திருச்செம்பொன் பள்ளிமுதல்
பனிமதிசேர் சடையார்தம் பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தந் திருநின்றி யூர்சார்ந்தார். 488

வி ரை :- திருநனி பள்ளியில் எழுந்தருளிய சிவ பெருமான் திருக்கழல்கள் வணங்கும் நல்ல தமிழில் புனித மான அழகிய பாமாலை புனைந்து திருச்செம் பொன் பள்ளி முதல், குளிர்ந்த நிலவை அணிந்த சடையாரின் ஆலயங்கள் பலவும் பணிந்து சென்று ஒப்பற்ற எருதின் மேல் வருவார் தம் திருநின்றியூர் சேர்ந்தார்.

திருநின்றியூர்

நின்றியூர் மேயாரை நேயத்தாற் புக்கிறைஞ்சி
ஒன்றியஅன் புள்ளுருகப் பாடுவார் உடையஅர
சென்றும்உல கிடர்நீங்கப் பாடியஏ ழெழுநூறும்
அன்றுசிறப் பித்தஞ்சொல் திருப்பதிகம் அருள் செய்தார். 489

வி.ரை :- திருநின்றியூரின் தந்தையாகிய விருப்பினால் சென்று வணங்கி ஒன்றித்த அன்பு மனத்துள் உருக உடைய அரசு, நாவுக்கரசர் உலகின் துன்பம் நீங்கப் பாடிய ஏழு ஏழு நூறும் அதாவது நன்காயிரத்து தொளாயிரமும் அன்று அங்கு சிறப்பித்து சொற்திருப் பதிகம் பாடியருளினார்.

அ.ரை :- உடைய அரசு—திருநாவுக்கரசர். ஏழு ஏழுநூறு — நான்காயிரத்துத் தொளாயிரம். சுந்தரர் இங்கு நாவினுக்கரசரை நினைவு கொள்கிறார்.

திருநீடூர்

அப்பதியில் அன்பருடன் அமர்ந்தகல்வார் அகலிடத்தில்
செப்பரிய புகழ்நீடூர் பணியாது செல்பொழுதில்
ஒப்பரிய உணர்வினால் நினைந்தருளித் தொழ லுறுவார்
மெய்ப்பொருள்வண் தமிழ்மாலை விளம்பியே
மீண்டனைந்தார். 490

வி.ரை :- திருநின்றியூரில் அன்பர்களுடன் மகிழ்ந்திருந்த பின் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற நம்பி ஆரூரர் உலகில் சொல்லுதற்கு அரிய புகழ் மிக்க திருநீடூர் பணியாது சென்ற போது வழியில் எழுந்த ஒப்புதற்கரிய உணர்வினால் நினைந்து தொழுது உண்மைப் பொருள் விளங்க அழகிய தமிழ் மாலை பாடி மீண்டும் வந்து சேர்ந்தார்.

திருப்பதிகம் பாடியது

''மடலாரும் புனல்நீடூர் மருவினர் தாள் வணங்காது
விடலாமே'' எனுங்காதல் விருப்புறும்அத் திருப்பதிகம்
அடலார்சூ லப்படையார் தமைப்பாடி அடிவணங்கி
உடலாரும் மயிர்ப்புளகம் மிகப்பணிந்தங் குறைகின்றார். 491

வி.ரை :- ''மலர்கள் நிறைந்த நீர்வளமிக்க திரு நீடூரில் எழுந்தருளியவரது திருத்தாள்களை வணங்காது விடலாமோ'' எனும் அன்பு விருப்பமடையும் அந்தத் திருப்பதிகம் வலிமை மிக்க சூலப்படையை உடைய வரைப் பாடி திருவடிகளில் வீழ்ந்து வணங்கி உடல் சிலிர்த்து மயிர்க் கூச்சலிட மிகவும் பணிந்து அங்கு தங்கியிருந்தார்.

திருப்புன்கூர், திருக்கோலக்கா

அங்கண் இனி தமர்ந்தருளால் திருப்புன்கூர் அணைந் திறைஞ்சிக்
கொங்கலரும் மலர்ச்சோலைத் திருக்கோலக் காஅணையக்
கங்கைசடைக் கரந்தவர்தாம் எதிர்காட்சி கொடுத்தருளப்
பொங்குவிருப் பால் தொழுது திரும்பதிகம் போற்றிசைப்பார். 492

வி.ரை :- திருநீடூரில் சிலநாட்கள் இனிதே அமர்ந் திருந்து திருப்புன்கூரீசனை வணங்கி மணம் கமழும் மலர்ச் சோலைகள் நிறைந்த திருக்கோலக்கா சென் றடைந்து, கங்கையைச் சடையில் மறைத்தவர் எதிர் நின்று காட்சி கொடுத்தருளப் பொங்கிஎழுந்த விருப்பத் தால் தொழுது திருப்பதிகம் போற்றிசைத்தார்.

திருப்பதிகம் பாடியது

திருஞான சம்பந்தர் திருக்கைக ளால்ஒற்றிப்
பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனார் கண்டிரங்கி

அருளாலே திருத்தாளம் அளித்தபடி சிறப்பித்துப்
பொருள்மாலைத் திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார். 493

வி.ரை :- அன்று திருஞானசம்பந்தர் திருக்கைக ளால் கொட்டிப் பெருகும் ஆர்வத்துடன் பாட அது கண்ட சிவபெருமான் மனமிரங்கி திருத்தாளம் அளித் தருளியதைச் சிறப்பித்துப் பொருள்மிக்க தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப் போற்றினார்.

திருக்குருகாவூர் மேவியது

மூவாத முழுமுதலார் முதற்கோலக் காஅகன்று
தாவாத புகழ்ச்சண்பை வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி
நாவார்முத் தமிழ்விரகர் நற்பதங்கள் பரவிப் போய்
மேவார்தம் புரஞ்செற்றார் குருகாவூர் மேவுவார். 494

வி.ரை :- முப்படைதல் இல்லாதவர் மூவர்க்கும் முழுமையான முதல்வர் முதன்மைத்தலமான திருக் கோலக்காவிட்ட கன்று, நீங்காத புகழையுடைய சண் பையை வலம்வந்துதாழ்ந்து வணங்க, நாவலர்முத்தமிழ் விரகர் திருஞானசம்பந்தரது திருப்பாதங்கள் போற்றிச் சென்று பகைவரது புரம்மூன்றையும் அழித்தவரது திருக் குருகாவூர் சென்றடைந்தார்.

வழியில் இறைவன் பொதிசோறு அருளியது

உண்ணீரின் வேட்கையுடன் உறுபசிபால் மிகவருந்திப்
பண்ணீர்மை மொழிப்பரவை யார்கொழுநர் வரும்பாங்கர்க்
கண்ணீடு திருநுதலார் காதல்வரக் கருத்தறிந்து
தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவழிச் சார்கின்றார். 495

வி.ரை :- தண்ணீர்த் தாகத்துடன் பசியும் சேர்ந்து மிகவும் பசிதாகத்துடன் வருந்திப் பண்பின்சிறப்புடைய மொழிபேசும் பர்வையாரின் கொழுநன் வரும்பக்கத்தில் ஒளிவீசும் நெற்றிக் கண்ணனார் அன்பின் மிகுதியால் சுந்தரர் படும் துன்பமறிந்து தண்ணீரும் கட்டிச் சோறும் கொண்டு வழியில் காத்து நின்றார்.

வேதியர் வேடங்கொண்டிருந்தது

வேனிலுறு வெயில்வெம்மை தணிப்பதற்கு விரைக்குளிர்மென்
பானல்மலர்த் தடம்போலும் பந்தர்ஒரு பால் அமைத்தே
ஆனமறை வேதியராய் அருள்வேடங் கொண்டிருந்தார்
மானமருந் திருக்கரத்தார் வன்தொண்டர் தமைப்பார்த்து 496

வி.ரை :- வேனிற்கால வெயிலின் வெம்மையைத் தணிப்பதற்கு மணம் வீசும் குளிர்ந்த மென்மையான செங்கழுநீர் மலர்கள் நிறைந்த தடாகம் போன்று பந்தல் ஒரு பக்கம் அமைத்து வேதம் ஓதும் அந்தணராய் அருள் வேடம் பூண்டு மானைக் கையில் ஏந்திய திருக் கைகளையுடைய சிவபெருமான் வன்தொண்டர் வரக் காத்துக் கிடந்தார்.

சிவபெருமானிடம் பேசி மகிழ்ந்தது

குருகாவூர் அமர்ந்தருளுங் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் தோழர்திருத் தொண்டருடன்
வருவார்அப் பந்தரிடைப் புகுந்துதிரு மறையவர் பால்
பெருகார்வஞ் செலஇருந்தார் "சிவாயநம" எனப்பேசி 497

வி.ரை :- திருக்குருகாவூரில் எழுந்தருளும் குழகர் கள் அணிந்தவர் வழிமேல் விழிவைத்துப் பார்த்திருப்பத் திருவாரூர்த் தம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது

தோழர் திருத்தொண்டர் புடைசூழ வந்து அந்தப் பந்தலி னுட் புகுந்து அங்கு காத்துக்கிடக்கும் அந்தணரிடம் ஆர்வம் மிகுதியால் சென்று ''சிவாய நம'' எனப் பேசி மகிழ்ந்தார்.

சோறும், நீரும் கொடுத்தது

ஆலநிழற் கீழிருந்தார் அவர்தம்மை எதிர்நோக்கிச்
''பாலமிகப் பசித்தீர்இப் பொதிசோறு தருகின்றேன்
காலம்இனித் தாழாமே கைக்கொண்டிங் கினிதருந்தி
ஏலநறுங் குளிர்தண்ணீர் குடித்திளைப்புத் தீரும்''என 498

வி.ரை :- ஆலமரநிழலின்கீழ் அமர்ந்தருளிய சிவபெருமான் பந்தலில் தன்னுடன் அமர்ந்திருந்த சுந்தரரைப் பார்த்து, ''மிகவும் பசித்திருக்கிறீர். பொதி சோறு தருகிறேன். தாமதிக்காமல் இதனைஎடுத்து இனி தாக உண்டு மிகவும் குளிர்ந்த நல்ல தண்ணீர் குடித்து இளைப்பாறும்'' என்று கூற.

அ.ரை :- சால ஏல இரண்டு சொற்களும் மிக எனும் பொருளில் வருபவை.

பொதி சோறும், நீரும் உண்டது

வன்தொண்டர் அதுகேட்டு ''மறைமுனிவர் தரும்பொதிசோ
றின்றுநமக் கெதிர்விலக்கல் ஆகா''தென் றிசைத்தருளிப்
பொன்தயங்கு நூல்மார்பர் தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்றுதிருத் தொண்டருடன் திரு அமுது செய்தருளி. 499

வி.ரை :- சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஈசன்சொன்னது கேட்டு, '‚அந்தணர் தரும் பொதி சோற்றை நாம் இன்று விலக்கல் ஆகாது என்று கூறிப் பொன்போன்று மின்னும் பூணூல் அணிந்த மார்பையுடைய சிவபெரு

மான் தரும் பொதிசோற்றை வாங்கிச் சென்று தமது திருத்தொண்டர்களுடன் திரு அமுது செய்தருளினார்.

எடுக்க எடுக்கக் குறையாத பொதி சோறு

எண்ணிறந்த பரிசனங்கள் எல்லாரும் இனிதருந்தப்
பண்ணியபின் அம்மருங்குப் பசித்தணைந்தார் களும் அருந்த
உண்ணிறைந்த ஆரமுதாய் ஒருகாலும் உலவாதே
புண்ணியனார் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால். 500

வி.ரை :- எண்ணில் அடங்கா ஏவலாட்கள் அனைவரும் இனிது உண்டு மகிழ்ந்தபின்பு அந்தப் பக்கம் வந்த பசித்தவர்கள் யாவரும் உண்ண உண்ண உள் நிறைந்திருந்த அமுது சிறிதும் குறையாது புண்ணியனார் சிவபெருமான் அந்தணனாக வந்து அளித்த பொதிசோறு அள்ள அள்ளக் குறையாததானது.

ஈசன் பந்தலோடு மறைந்தது

சங்கரனார் திருவருள்போல் தண்ணீரின் சுவை ஆர்ந்து
பொங்கிவரும் ஆதரவால் அவர்நாமம் புகழ்ந்தேத்தி
அங்கயர்வால் பள்ளிஅமர்ந் தருகணைந்தார்களுந் துயிலக்
கங்கைசடைக் கரந்தார்அப் பந்தரொடுந் தாங்கரந்தார் 501

வி.ரை :- சிவபெருமான் திருவருளினைப் போன்று அவர் கொடுத்த தண்ணீரின் சுவையை நன்கு அனுபவித்துப் பருகிப் பொங்கி எழும் விருப்பினால் அவரது பெயரைப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டு, உண்டு களித்த களைப்பால் பள்ளி அமர்ந்திட ஆங்கிருந்தவர்களும் சுந்தரரோடு கண் துஞ்சக் கங்கையைத் தலையில் மறைத்த சிவபெருமான் பந்தலோடும் மறைந்தார்

கண் விழித்துப் பதிகம் பாடியது

சித்தநிலை திரியாத திருநாவ லூர்மன்னர்
அத்தகுதி யினிற்பள்ளி யுணர்ந்தவரைக் காணாமை
''இத்தனையா மாற்றம் அறிந்திலேன்'' என எடுத்து
மெய்த்தகைய திருப்பதிகம் விளம்பியே சென்றடைந்தார். 502

வி.ரை :- திருநாவலூர் மன்னர் சுந்தரமூர்த்தி நாயனார் அறிவு நிலை மாறுபடாது, அந்த அளவில் பள்ளி கொள்ளும் போது உணர்வால் ஒன்றித்து நின்ற அவரை, சிவபெருமானான அந்தணரைக் காணாமை யால் ''இத்தனையா மாற்றம் அறிந்திலேன்'' என அடி எடுத்து உண்மை அன்பான தன்மையில் திருப்பதிகம் பாடிச் சென்றார்

திருக்குருகாவூர்

குருகாவூர் அமர்ந்தருளுங் குழகனார் கோயிலினுக்
கருகார்போற் கோபுரத்தை அணைந்திறைஞ்சி உள்புக்கு
வருகாதல் கூரவலங் கொண்டுதிரு முன்வணங்கிப்
பருகாஇன் னமுதத்தைக் கண்களாற் பருகினார். 503

வி.ரை :- திருப்பதிகம் பாடிச் சென்ற நம்பி ஆரூரர் திருக்குருகாவூர் அமர்ந்தருளும் குழகனார் திருக் கோயிலினுக் கருகில் சென்று கோபுர தரிசனம் செய்து வணங்கி உள் புகுந்து தோன்றும் அன்புகூர வலங் கொண்டு வந்து சந்நதி முன் வணங்கி வாயாற் பருக முடியாத இனிய அமுதத்தைத் தன் கண்களால் கண்டு பருகினார்.

அப்பதியில் விரும்பியிருந்தது

சுண்ணார்ந்த இன்னமுதைக் கையாரத் தொழுதிறைஞ்சிப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பாடியே பணிந்தேத்தி

உண்ணாடும் பெருங்காதல் உடையவர்தாம் புறத்தெய்தி
நண்ணார்வத் தொண்டருடன் அங்கினிது நயந்திருந்தார். 504

வி.ரை :- கண்களால் கண்டு களிக்கத் தேவிட்டாத இனிய அமுதைக் கைகள் ஆசை தீரத்தொழுது வணங்கிப் பண்ணில் அமைத்திட முடியாத இனிய இசையுடைய திருப்பதிகம் பாடிப் பணிந்து போற்றி, உள்ளத்துள் எழுந்த பெருங்காதல் உடைய நம்பி ஆரூரர் புறம் போந்து நட்புமிக்க தொண்டருடன் அங்கு இனிது விரும்பித் தங்கினார்.

திருக்கழிப்பாலை

அந்நாளில் தம்பெருமான் அருள்கூடப் பணிந்தகன்று
மின்னார்செஞ் சடைமுடியார் விரும்புமிடம் பலவணங்கிக்
கன்னாடும் எயில்புடைசூழ் கழிப்பாலை தொழுதேத்தித்
தென்னாவ லூர்மன்னர் திருத்தில்லை வந்தடைந்தார். 505

வி.ரை :- அவ்வாறு நண்ணார்வத் தொண்டருடன் திருகாவூரில் இருக்கும் நாளில் தமது இறைவனது அருள் கூடப் பணிந்து சென்று, மின்னல் போன்று ஒளி வீசும் சிவந்த சடையப்பர் விரும்பியிருக்கும் இடமெல்லாம் சென்று வணங்கி, கல்லால் கட்டப்பட்ட மதிளால் சூழப்பட்ட திருக்கழிப்பாலை தொழுது போற்றித் தென் நாவலூர் மன்னர் திருத்தில்லை வந்து சேர்ந்தார்.

அ.ரை :- கன்னாடும்—கல்நாடும், கல்லால் கட்டப்பட்ட.

திருத்தில்லை

சீர்வளருந் திருத்தில்லைத் திருவீதி பணிந்துபுகுந்
தேர்வளர் பொற் றிருமன்றுள் எடுத்தசே.வடி இறைஞ்சிப்

பார்வளர் மறைவளர்க்கும் பதிஅதனிற் பணிந்துறைவார்
போர்வளர்மே ருச்சிலையார் திருத்தினைமா நகர்புகுந்தார். 506

வி.ரை :- சிறப்பானவைகள் வளரும் திருத் தில்லைத் திருவீதியைப பணிந்து அந்த வீதியினுள் புகுந்து அழகு வளரும் பொன்னான திரு மன்றுள் எடுத்த சிவந்த பாதத்தை வணங்கி உலகம் வளர வேதங்களை வளர்க்கும் இடமாகிய அந்த இடத்தில் பணிந்து தங்கிப் போரை வளர்க்கும் மேருமலையை வில்லாகவுடையவரது திருத்தினை மாநகர் புகுந்தார்.

திருத்தினைமா நகர், திருநாவலூர்

திருத்தினைமா நகர்மேவு சிவக்கொழுந்தைப் பணிந்து போய்
நிருத்தனார் அமர்ந்தருளும் நிறைபதிகள் பல வணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர் போற்றுதிரு நாவலூர்
கருத்தில்வரும் ஆதரவால் கைதொழச்சென் றெய்தினார். 507

வி.ரை :- திருத்தினை மாநகரில் எழுந்தருளிய சிவக்கொழுந்தை வணங்கிச் சென்று பற்றற்றவர் எழுந் கருளும் முழுமையான பதிகள் பலவும் வணங்கிப் பொருத்தமான சிவனடியார்கள் போற்றும் திருநாவலூர் மனத்தில் தோன்றக் கை தொழுது அங்கு சென்றார்.

''திருநாவ லூர் மன்னர் சேர்கின்றார்'' எனக்கேட்டுப்
பெருநாமப் பதியோருந் தொண்டர்களும் ''பெருவாழ்வு
வருநாள்''என் றலங்கரித்து வந்தெதிர்கொண் டுள்ளணையச்
செருநாகத் துரிபுனைந்தார் செழுங்கோயில் உள்ளணைந்தார். 508

வி.உரை :- "திருநாவலூர் மன்னர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளுகிறார்" எனக் கேட்ட புகழ் பெற்ற நாவலூர் மக்களும் தொண்டர்களும், "கிடைத் தற்கரிய பெருவாழ்வு வரும் நாள்" இது என்று ஊரை அலங்கரித்து வந்து எதிர்கொண்டழைத்திடப் போரிடும் யானையின் தோலை உரித்துப் போர்த்தியவரது செழுமையான கோயிலினுட் சென்றார்.

அ.உரை :- செரு நாகத்துரி—போர் யானையின் தோல். செரு—நெருக்கும், போரிடும். நாகம்—யானை. உரி—தோல்

பதிகம் பாடியது

மேவியஅத் தொண்டர்குழாம் மிடைந்"தர" என்றெழும்ஓசை
மூவுலகும் போய்ஒலிப்ப முதல்வனார் முன்பெய்தி
ஆவியினும் அடைவுடையார் அடிக்கமலத் தருள்போற்றிக்
"கோவலனான் முகன்" எடுத்துப் பாடியே கும்பிட்டார். 509

வி.உரை :- கூடியிருந்த சிவனடியார்கள் கூட்டம் "அர" எனப் போற்றிய ஓசையானது மூவுலகும் சென்று ஒலிக்க முதல்வனார் சிவபெருமான் திருமுன்பு சென்று உயிரைவிட மேலான இறைவன் கமலபாதம் போற்றிக் "கோவலனான் முகன்" என்றெடுத்துப் பாடிக் கும்பிட்டார்.

அ.உரை :- ஆவியினும் அடைவுடையார்—உயிரி னும் சிறப்புடைய மேலான சிவபெருமான்.

பிற சிவாலயங்களில் வழிபாடு

நலம்பெருகும் அப்பதியில் நாடியஅன் பொடுநயந்து
குலம்பெருகுந் திருத்தொண்டர் குழாத்தோடும் இனிதமர்ந்து

சலம்பெருகுஞ் சடைமுடியார் தாள்வணங்கி அருள்பெற்றுப்
பொலம்புரி நூல் மணிமார்பர் பிறபதியுந் தொழப்போவார். 510

வி.ரை :- நலத்தைப் பெருக்கும் அந்த நாவலூரில் அடைந்த அன்பினோடு விரும்பிக் குலநலம் காக்கும் திருத்தொண்டர் கூட்டத்துடன் இனி தமர்ந்திருந்து கங்கை ஆற்றைத் அணிந்தவரது திருத்தாள்களை வணங்கி அவர் அருளைப் பெற்றுப் பொன் போன்ற பூணூல் அணிந்த அழகிய மார்பையுடையவரது பிற ஆலயங்கள் தொழச் சென்றார்.

திருக்கழுக்குன்றம்

தண்டகமாந் திருநாட்டுத் தனிவிடையார் மகிழ்விடங்கள்
தொண்டர்எதிர் கொண்டணையத் தொழுதுபோய்த் தூயநதி
வண்டறைபூம் புறவுமலை வளமருதம் பலகடந்தே
எண்டிசையோர் பரவுதிருக் கழுக்குன்றை எய்தினார். 511

வி.ரை :- தொண்டை நாட்டில் ஒப்பற்ற எருதின் மேல் அமர்ந்த பிரான் மகிழ்ந்தமர்ந்த இடங்கள் எல்லாம் திருத்தொண்டர்கள் எதிர் கொண்டழைக்கத் தொழுது சென்று தூயநதி பாயும் வண்டுகள் ஒலிக்கும் மலர்கள் நிறைந்த முல்லை நிலங்களையும், குறிஞ்சி நிலங்களையும் வளம் மிக்க மருத நிலங்களையும் பல கடந்து எண் திசைகளிலு முள்ளோர் போற்றத் திருக்கழுக் குன்றை அடைந்தார்.

அ.ரை :- தண்டகமாந்திருநாடு—தொண்டைநாடு. விடையார்—இடபவாகனர். சிவபெருமான். புறவும்—முல்லை நிலங்களும். மலைவளம்—குறிஞ்சி

தேனார்ந்த மலர்ச்சோலைத் திருக்கழுக்குன் றத்தடியார்
ஆனாத விருப்பினொடும் எதிர்கொள்ள அடைந்தருளித்
தூநாள் வெண் மதியணிந்த சுடர்க்கொழுந்தைத்
தொழுதிறைஞ்சிப்
பாநாடும் இன்னிசையின் திருப்பதிகம் பாடினார். 512

வி.ரை :- தேன் சிந்தும் மலர்ச் சோலைத் திருக்கழுங்குன்றத்திருந்த சிவனடியார்கள் யாவரும் தாங்காத பெருவிருப்பினொடும் எதிர் கொண்டு அழைத்திட வன்தொண்டரும் சென்றருளி, மூன்றாம் நாள் வெண் நிலவை அணிந்த சுடர்க் கொழுந்தாகிய சிவபெருமானைத் தொழுது வணங்கி இன்னிசை விரும்பும் பாடலால் திருப்பதிகம் பாடியருளினார்.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

பாடியஅப் பதியின்கண் இனிதமர்ந்து பணிந்துபோய்
நாடியநல் லுணர்வினொடுந் திருக்கச்சூர் தனைநண்ணி
ஆடகமா மதில்புடைசூழ் ஆலக்கோயி லின்அமுதைக்
கூடியமெய் அன்புருகக் கும்பிட்டுப் புறத்தணைந்தார். 513

வி.ரை :- திருக்கழுக்குன்றைப்பாடி அங்கு தங்கி இறைவனைப் பணிந்து சென்று, தேடிய நல்ல சிவ உணர்வினோடு திருக்கச்சூரை அடைந்து பொன் மதிலால் சூழப்பட்ட ஆலக்கோயில் அமர்ந்த அமுதைச் சேர்ந்து உண்மை அன்புருகக் கும்பிட்டு வெளி வந்தார்.

அ.ரை :- ஆடகம் — பொன். ஆலக்கோயில்— திருக்கச்சூரில் உள்ள சிவாலயத்தின் பெயர்.

பசியால் வாடியது

அணைந்தருளும் அவ்வேலை அமுதுசெயும் பொழுதாகக்
கொணர்ந்தமுது சமைத்தளிக்கும் பரிசனமுங் குறுகாமைத்

நணந்தபசி வருத்தத்தால் தம்பிரான் திருவாயில்
புணர்ந்தமதிற் புறத்திருந்தார் முனைப்பாடிப் புரவலனார். 514

வி.ரை :- அவ்வாறு திருக்கச்சூர் ஆல கோயிலை விட்டு வெளியே வந்தபோது அமுது செய்யும் நேர மாதலின், உணவு சமைத்துக் கொணர்ந்து கொடுக்கும் ஏவலாட்களும் வந்து சேராமையினால், பற்றி எரியும் பசி நீங்காது வருத்தத் தம்பிரான் திருவாயிலை ஒட்டி யிருந்த மதிற்பக்கம் திருமுனைப் பாடி புரவலர் ஒதுங்கி யிருந்தார்.

மலையின்மேல் மருந்தானார் எழுந்தருளியது

வன்தொண்டர் பசிதீர்க்க மலையின்மேல் மருந்தானார்
மின்தங்கு வெண்டலையோ டொழிந்தொரு வெற்றோடேந்தி
அன்றங்கு வாழ்வார்ஓர் அந்தணராய்ப் புறப்பட்டுச்
சென்றன்பர் முகநோக்கி அருள்கூரச் செப்புவார். 515

வி.ரை :- வன்தொண்டரது பசியைத் தீர்க்க மலை யின்மேல் மருந்தாக அமர்ந்த சிவபெருமான் மின் போன்று ஒளிவீசும் கபால ஓடுகளால் அமைந்த மாலை நீக்கி வெற்றோடு கையில் ஏந்தி அன்று அங்கு வாழும் ஓர் அந்தணராகப் புறப்பட்டுச் சென்று சுந்தரரது முகத்தைப் பார்த்து அருள் கூர்ந்து சொன்னார்.

அ.ரை :- மலையின்மேல் மருந்தானார்—பிறவிப் பிணி நீக்கும் கயிலாயத்து மேலமர்ந்த மருந்து.

பிச்சை எடுக்கப் போனது

"மெய்ப் பசியால் மிகவருந்தி இளைத்திருந்தீர் வேட்கைவிட
இப்பொழுதே சோறிரந்திங் கியான் உமக்குக் கொணர்
கின்றேன்

அப்புறநீர் அகலாதே சிறிதுபொழு தமரும்'' எனச்
செப்பி அவர் திருக்கச்சூர் மனைதோறுஞ் சென்றிரப்பார். 476

வி.ரை:- ''உடற்பசியால் மிகவும்வருந்தி இளைத்து இருக்கின்றீர். உமது பசியைவிட இப்பொழுதே நான் சோறு பிச்சை ஏற்று உனக்குக்கொண்டு வருகின்றேன். வேறு எங்கும் நீர் அகலாதே சிறிதுநேரம் காத்திரும்'' எனச் சொல்லி இறைவன் திருக்கச்சூர் அக்கிராகரம் தோறும் சென்று இரப்பாராயினார்.

இரந்த சோற்றைக் கொண்டு வந்தது

வெண்திருநீற் றணிதிகழ விளங்குநூல் ஒளிதுளங்கக்
கண்டவர்கள் மனம்உருகக் கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேல் பொருந்தமனைதோறும் புக்குக்
கொண்டுதாம் விரும்பிஆட் கொண்டவர்முன் கொடுவந்தார். 517

வி.ரை :- வெண்மை மயமான திருநீறு உடல் முழுவதும் மின்ன, அணிந்த முப்புரிநூலின் ஒளிவிளங்கக் கண்டவர்கள் மனம் உருகக் கொடிய பகற்பொழுது அன்னப் பிச்சைக்குக்கமலபாதங்கள் மண்மேல் பதிந்து பொருந்த அந்தணர் வீடுதோறும் சென்று எடுத்துவந்த சோற்றைத் தான் முன்புவிரும்பி ஆட்கொண்டவருக்குக் கொடுக்கக் கொண்டு வந்தார்.

இரந்துதாங் கொடுவந்த இன்னடிசி லுங்கறியும்
''அரந்தைதரும் பசிதீர அருந்துவீர்'' என அளிப்பப்
பெருந்தகையார் மறையவர்தம் பேரருளின் திறம்பேணி
நிரந்தபெருங் காதலினால் நேர்தொழுது வாங்கினார். 518

வி.ரை :- பிச்சை எடுத்து அங்கு வந்த இனிய சோறும் கறியும், ''துன்பம் தரும் பசிதீர அருந்திடுவீர்''

என்று சொல்லிக் கொடுக்க, வன்தொண்டர் அந்தணர் உருவில் இருந்த சிவபெருமானது பேரருளின் திறத்தைப் போற்றி, நிலைபெற்ற பெருங்காதலினால், அந்தணரைத் தொழுது அடிசிலை வாங்கிக் கொண்டார்.

அ.ரை :- அரந்தை—துன்பம்.

தொண்டருடன் உண்டு மகிழ்ந்தது

வாங்கியஅத் திருஅமுது வன்தொண்டர் மருங்கணைந்த
ஓங்குதவத் தொண்டருடன் உண்டருளி உவந்திருப்ப
ஆங்கருகு நின்றார்போல் அவர்தம்மை அறியாமே
நீங்கினார் எப்பொருளும் நீங்காத நிலைமையினார். 519

வி.ரை :- வன்தொண்டர் அந்தணர் பிச்சை எடுத்துவந்த இனிய சோற்றையும் கறியையும் பக்கத்தில் சூழ்ந்திருந்த மிக உயர்ந்த தவத்தொண்டர்களுடன் உண்டு களித்து மகிழ்ந்திருக்கும் பொழுது அவர்கள் அருகில் நின்று கொண்டிருப்பவர்போல் நின்று, யாரும் அறியாதபடி; எப்பொருளிலும் நீங்காது நிலைபெற்றிருக்கும் தெய்வம் அங்கிருந்து நீங்கியது.

இறைவன் மறைந்தது கண்டுருகியது

திருநாவ லூராளி சிவயோகி யார்நீங்க
வருநாம மறையவனார் இறைவனார் எனமதித்தே
'பெருநாதச் சிலம்பணிசே வடிவருந்தப் பெரும்பகற்கண்
உருநாடி எழுந்தருளிற் றென்பொருட்டாம்'' என உருகி.
520

வி.ரை :- திருநாவலூரில் வாழும் அந்தணனாக வந்தவர் மறைந்து போகப் புகழ்தங்கிய அந்தணர்

வந்தது இறைவன்தான் என்பதை அறிந்து கொண்டு "பேரொலியுடைய சிலம்பணிந்த சிவந்த திருப்பாதங்கள் வருந்த பட்டம்பகலில் வேற்றுருப் பெற்று எழுந்தருளியது என் பொருட்டன்றோ!" என உருகினார்.

பதிகம் பாடியது

"முதுவா யோரி" என்றெடுத்து முதல்வ னார்தம்
பெருங்கருணை
அதுவாம் இதுஎன் றதிசயம்வந் தெய்தக் கண்ணீர் மழை
அருவிப்
புதுவார் புனலின் மயிர்ப்புளகம் புதையப் பதிகம்
போற்றி சைத்து
மதுவார் இதழி முடியாரைப் பாடி மகிழ்ந்து வணங்கினார்.
521

விரை :- அந்தணர் இல்லந்தோறும் சென்று அன்னப்பிச்சை ஏற்றுவந்து தன் பசிப்பிணி நீக்கியது அந்தப் பரம்பொருளின் பெருங்கருணையாகும் என்று அதிசயித்துக் கண்ணீர் கண்கள் மழையெனப் பொழிய அதில் மூழ்கிய உடலின் மயிர்க்கூச்சலடைய "முதுவா யோரி" என அடியெடுத்துப் பதிகம் போற்றிப் பாடி மதுவைச் சிந்தும் கொன்றை மலரிதழ்கள் தங்கிய முடியார் சிவபெருமானைப் பாடி மகிழ்ந்து வணங்கினார்.

அரை :- மதுவார் இதழி — மதுவைச் சிந்தும் கொன்றை

திருக்காஞ்சியருகில் வந்தது

வந்தித் திறைவர் அருளாற் போய் மங்கை பாகர் மகிழ்ந்த
இடம்
முந்தித் தொண்டர் எதிர்கொள்ளப் புக்குமுக்கட்
பெருமானைச்

சிந்தித்திடவந்தருள்செய் கழல்பணிந்துசெஞ் சொல்
தொடை புனைந்தே
அந்திச் செககர்ப் பெருகொளியார் அமருங் காஞ்சி
மருங்கணைந்தார். 522

வி.ரை :- வந்து உணவளித்த இறைவரது அருளினால் மங்கையொருபாகர் மகிழ்ந்தமர்ந்த இடங்கள் பலவும் சென்றிட ஆங்காங்கு தொண்டர்கள் எதிர் கொண்டழைக்கப் புகுந்து முக்கண்ணாரை மனத்தில் கொள்ள வந்து அருள் செய்யும் சிவந்த திருக்கழல்கள் பணிந்து சிறந்த தமிழ்ச் சொற்களால் அமைந்த மாலை புனைந்து அந்தி வேளையில் சிவந்து ஒளிவீசும்ஞாயிறு போன்று பெருகொளி வீசும் இறைவன் அமர்ந்தருளும் திருக்காஞ்சி நகர் அருகில் வந்தார்.

காஞ்சி நகர் கொண்ட களிப்பு

"அன்று வெண்ணெய் நல்லூரில் அரியும் அயனும் தொடர்
வரிய
வென்றி மழவெள் விடை உயர்த்தார் வேத முதல் வராய்
வந்து
நின்றுசபைமுன் வழக்குரைத்து நேரே தொடர்ந்தாட்
கொண்டவர் தாம்
இன்றிங் கெய்தப் பெற்றோம்'' என் றெயில்சூழ் காஞ்சி
நகர் வாழ்வார். 523

வி.ரை :- ''அன்று திருவெண்ணெய் நல்லூரில் விண்டுவும், பிரமனும் சென்று காண்பதற்கரிய வெற்றி யுடைய இளம் வெண்மையான காளையைத் தன் கொடி யில் உயர்த்தியவர் வேத அந்தணராய் வந்து அந்தணர் கூடிய சபைமுன் நின்று வழக்குரைத்து நடக்க இருந்த திருமணப் பந்தத்தினின்றும் தடுத்து ஆட்கொண்டவர்

தாம் இன்று இங்கு எழுந்தருளப் பெற்றோம்'' என்று மதில்சூழ் காஞ்சிவாழ் மக்கள் மகிழ்ந்து கொண்டாடினர்.

எதிர் கொண்டழைத்தது

மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக மறுகு மணித்தோ ரணம்நாட்டி
அல்கு தீப நிறைகுடங்கள் அகிலின் தூபங் கொடி எடுத்துச்
செல்வ மனைகள் அலங்கரித்துத் தெற்றி ஆடல் முழவதிரப்
பல்கு தொண்டருடன் கூடிப் பதியின் புறம்போய் எதிர்
கொண்டார். 524

விரை :- வீதிகள் தோறும் மணிகளால் அமைந்த தோரணங்கள் நாட்டுவித்து ஆங்காங்கு தீபங்களும் நிறை குடங்களும் அகிற்புகையும் கொடியும் எடுத்துச் செல்வம் கொழிக்கு அவரவர் இல்லங்களை அலங்கரித்து மேடைகளில் ஆடல் பாடல்களின் முழவுமுழங்க பரவிப் பெருகும் தொண்டருடன் மிகுந்த மகிழ்ச்சி மிகப் பெருகப் புறம் வந்து எதிர்கொண்டழைத்தனர்,

அ.ரை :- மறுகு—வீதி. அல்கு—அருகருகாக, ஆங்காங்கு தெற்றி—மேடை, தெற்றி ஆடல்—மேடைக் கூத்து. பல்கு—பரவியிருந்த, பெருகிக்கிடந்த.

திரு ஏகாம்பரத்தை அடைந்தது

ஆண்ட நம்பி எதிர்கொண்ட அடியார் வணங்க
எதிர்வணங்கி
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமா ளிகைவீ
தியிற் போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் புனைமங் கலதூ ரியம்
ஒலிப்ப
ஈண்டு தொண்டர் பெருகுதிரு ஏகாம்பரஞ்சென்
றெய்தினார். 525

வி.ரை :- நம்பி ஆரூரர் தம்மை எதிர்கொண்ட ழைக்க வந்த அடியார்கள் வணங்க நம்பி யாரூரரும் வணங்கி நீண்ட மதிலால்சூழப்பட்ட கோபுரம் கடந்து வரிசையாக அமைந்த மாளிகைகளுடைய வீதிவழி சென்று பொருந்திய அன்பால் எழுந்த வாழ்த்தொலி களுடன் புனையப்பட்ட மங்கல வாத்தியங்களின் முழக் கம் ஓங்கக் கூடிய அடியார்கள் பெருகிவரத் திரு ஏகாம் பர நாதனாலயம் சென்றடைந்தார்.

திருஏகாம்பரம் நுழைந்தது

ஆழி நெடுமால் அயன்முதலாம் அமரர் நெருங்கு கோபுரம்
முன்
பூழி யுறமண் மிசைமேனி பொருந்த வணங்கிப் புகுந்தருளிச்
சூழு மணிமா ளிகைபலவுந் தொழுது வணங்கி
வலங்கொண்டு
வாழி மணிப்பொற் கோயிலினுள் வந்தார் அணுக்க வன்
தொண்டர். 626

வி.ரை:- பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலும் பிரம்மன் முதலான தேவர்கள் வந்து நெருங்கிக் கொண் டிருக்கும் கோபுரத்தின் முன் புழுதிமண்மீது உடல் முழு வதும் தோய்ந்து போக விழுந்து வணங்கிப் புகுந்தரு ளிச் சுற்றியுள்ள அழகிய மணிகள் பதிக்கப்பட்ட மாளி கைகள் பலவும் தொழுது வணங்கி வலம் வந்து என்று முள்ள மணிகள் பதித்த அழகிய பொன் போன்று ஒளி வீசும் கோயிலினுள் அணுக்க வன்தொண்டர் வந்தார்.

அ.ரை :- ஆழி—கடல், பாற்கடல், பூமி—புழுதி. சூழும்—சூழ்ந்துள்ள, சுற்றியுள்ள. அணுக்க—அந்தரங்க. நண்பன். இறைவனுக்கு மிகவும் அந்தரங்க அன்பரான வன்தொண்டர்.

திருஏகரம்பரரைத் தொழுதது

கைகள் கூப்பி முன் அணைவார் கம்பை ஆறு பெருகிவர
ஐயர் தமக்கு மிகஅஞ்சி ஆரத் தழுவிக் கொண்டிருந்த
மையு லாவுங் கருநெடுங்கண் மலையாள் என்றும்
வழிபடுபூஞ்
செய்ய கமலச் சேவடிக் கீழ்த் திருந்து காத லுடன்
வீழ்ந்தார். 527

வி.ரை :- திருக்காஞ்சிக்கு அருகில் உள்ள கம்மை ஆற்றில் நீர் பெருகி வர, மிக அஞ்சி ஐயரைக் கட்டித் தழுவிக் கொண்டிருந்த மையணிந்த கருமை நெடுங் கண்ணாள் உமையம்மை என்றும் வழிபடும் மலர் போன்ற சிவந்த தாமரைத் திருவடிக் கீழ் விழுந்து கைகள் கூப்பி முன்சென்று அன்புடன் விழுந்தார்.

அ.ரை :- மையுலாவுங் கருநெடுங்கண் மலையாள்—உமையம்மை.

பிறசிவாலயங்கள் சென்று வணங்கியது

வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி எழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த சிந்தை யுடன்பாடி மாறா விருப்பிற் புறம்போந்து
சூழ்ந்த தொண்டருடன் மருவும் நாளில் தொல்லைக்
கச்சிநகர்த்
தாழ்ந்த சடையார் ஆலயங்கள் பலவுஞ் சார்ந்து
வணங்குவார். 528

வி.ரை :- திரு ஏகம்பத்தை விழுந்து போற்றிப் பரவசமடைந்து விம்மி அழுது எழுந்து உண்மை அன் பால் வாழ்ந்திருந்த நினைவுகளுடன் பாடி மாறாத

விருப்பமுடன் வெளிவந்து தொண்டர்கள் சூழக் கச்சி நககர்க்குப் பக்கமுள்ள சிவாலயங்கள் பலவும் சென்று வணங்கினார்.

காமக்கோட்டம் திருமேற்றளி

சீரார் காஞ்சி மன்னுதிருக் காமக்கோட்டஞ் சென்றிறைஞ்சி
நீரார் சடையார் அமர்ந்தருளும் நீடு திருமேற் றளிமேவி
ஆரா அன்பிற் பணிப்தேத்தும் அளவில் ''நுந்தா ஒண்
சுடராம்''
பாரார் பெருமைத் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து பரவினார்.
529

வி.ரை :- சிறப்புமிக்க காஞ்சிமா நகரில் உள்ள காமக்கோட்டம் சென்று வணங்கிக் கங்கைநீரைச் சடையில் தாங்கியவர் அமர்ந்தருளும் உயர்ந்த திருமேற்றளி சென்று வணங்கி, நீங்காத அன்பில் பணிந்து போற்றும் அளவில் ''நுந்தா ஒண்சுடராம்'' எனத் தொடங்கும் பார்போற்றும் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து வணங்கினார்.

திருஓணகாந்தனீசரிடம் பொன்பெற்றது

ஓணகாந்தன் றளிமேவும் ஒருவர் தம்மை உரிமையுடன்
பேணி அமைந்த தோழமையாற்பெருகும் அடிமைத்
திறம்பேசிக்
காணமோடு பொன்வேண்டி ''நெய்யும் பாலும்''
கலைவிளங்கும்
யாணர்ப்பதிகம் எடுத்தேத்தி எண்ணில் நிதிபெற்
றனிதிருந்தார். 530

வி.ரை :- திருஓணகாந்தனில் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்ற சிவபெருமானை உரிமையுடன் சென்று

வழிபட்டு எழுந்து நட்பினால் உண்டாகும் அடிமைத் தன்மை பேசிக் காசுடன் பொன்னும் வேண்டி "நெய்யும் பாலும்" என்னும் அருட்கலை விளங்கும் புதுமையான பதிகம் பாடி கணக்கற்ற வகையிலான செல்வம் பெற்று அங்கிருந்தார்.

அ.ரை :- தளி—கோயில். காணம்—காசு, பணம். யாணர்ப் பதிதம்—புதுமையான பதிகம்.

அனேக தங்காபதமடைந்தது

அங்கண் அமர்வார் அனேகதங்கா பதத்தை எய்தி உள்
ளணைந்து
செங்கண் விடையாந் தமைபபணிந்து "தேனெய் புரிந்"தென்
றெடுத்த தமிழ்
"தங்கும் இடமாம்" எனப்பாடித் தாழ்ந்து பிறவுந்
தானங்கள்
பொங்கு காத லுடன்போற்றிப் புரிந்தப் பதியிற்
பொருந்துநாள். 531

வி.ரை :- அந்தத் திருப்பதியில் அமர்ந்த ஆரூரர் அனேகமுறை தமது காபதத்து ஈசனை அடைந்து முக்காலமும் இறைவன் திருத்தாள்களைப் பணிந்து உள்ளே சென்று சிவந்த கண்களையுடைய காளைமேலமர்ந்த பிரானைத் தொழுது "தேன் நெய் புரிந்து" என்று அடியெடுத்துத் தமிழ் "தங்கும் இடமாம்" எனப் பாடித் திருத்தலங்கள் பிறவும் சென்று பணிந்து, அன்பு பெருகப் போற்றித் திரும்பவும் வந்து திரு ஓணகந் தாளில் தங்கினார்.

திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

பாட லிசையும் பணியினாற் பாவை தழுவக் குழைகம்பர்
ஆடல் மருவுஞ் சேவடிகள் பரவிப் பிரியா தமர்கின்றார்
நீட மூதூர்ப் புறத்திறைவர் நிலவும் பதிகம் தொழவிருப்பால்
மாடம் நெருங்கு வன்பார்த்தான் பனங்காட் டூரில் வந்
தடைந்தார். 532

வி.ரை.: பாடல்களின் இசையும், பணிவிடை செய்கையில் பாவை உமா தேவியார் தழுவக் குழைந்து மகிழும் ஏகம்பரின் ஆடல்பொருந்திய சிவந்ததிருத்தாள்களைப் போற்றிப் பிரியாது அங்கிருந்து, அந்தப் பழம் பெருஊரின் பக்கத்தில் உள்ள சிவாலயங் தொழவிரும்பி மாடங்கள் நிறைந்த வன்பார்த்தான் பனங்காட்டூர் வந்தடைந்தார்.

செல்வம் மல்கு திருப்பனங்காட் டூரிற் செம்பொற் செழுஞ்
சுடரை
அல்லல் அறுக்கும் அருமருந்தை வணங்கிஅன்பு பொழி
கண்ணீர்
மல்கநின்று "விடையின்மேல் வருவான்" எனும்வண்
தமிழ்ப்பதிகம்
நல்ல இசையி னுடன்பாடிப் போந்து புறம்பு நண்ணுவார்.
533

வி.ரை.: செல்வம் மிகுந்த திருப் பனங்காட்டூரில் சிவந்த பொன் போன்ற செழித்த ஒளிப்பிழம்பைத் துன்பம்நீக்கும்அரிய மருந்தை வணங்கி; கண்கள் அன்பால் நீர் பொழியப் பெருகி நின்று "விடையின்மேல் வருவான்" எனத் தொடங்கும் அழகியதமிழ்ப பாமாலை நல்ல இசையுடன் பாடிப் புறப்பட்டார்.

திருமாற் பேறு, திருவல்லம்

மன்னு திருமாற் பேறணைந்து வணங்கிப் பரவித் திருவல்லம்
தன்னுள் எய்தி இறைஞ்சிப் போய்ச் சாரும் மேல்பாற் சடைக் கற்றைப்
பின்னல் முடியார் இடம்பலவும் பேனி வணங்கிப் பெருந் தொண்டர்
சென்னி முகில்தோய் தடங்குவட்டுத் திருக்கா ளத்தி மலை சேர்த்தார். 534

வி.ரை :- திருப்பனங்காட்டூருலிருந்து பொருந்திய திருமாற் பேறு சென்றடைந்து இறைவனை வணங்கிப் போற்றித் திருவல்லம் சென்று உள்ளே சென்று வணங்கிச் சென்று கற்றையாகப் பின்னிய சடையை மேலே உயர்த்திக் கட்டிய முடியார் சிவபெருமான் தங்கும் எல்லா இடங்களிலும் சென்று பணிவிடை செய்து வணங்கிய சுந்தரர் உச்சியின்மீது மேகங்கள் தங்கும் அகன்ற முடியுடைய திருக்காளத்தி மலையைச் சென்றடைந்தார்.

அ.ரை :- தடம்குவட்டு—அகன்ற உச்சி; உயர்ந்த சிகரம்.

தடுக்க லாகாப் பெருங்காதல் தலைநின் றருளுங் கண்ணப்பர்
இடுக்கண் களைந்தாட் கொண்டருளும் இறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேர அணைந்துபணிந் தருளால்ஏறி அன்பாறு
மடுப்பத் திருமுன் சென்றெய்தி மலைமேல் மருந்தை வணங்கினார். 535

வி.ரை :- அடங்காத பேரன்பால் மலையின் உச்சியில் நின்றருளும் கண்ணப்ப நாயனாரது துன்பத்தைத்

தீர்த்து ஆட்கொண்டருளும் இறைவர் மகிழ்ந்தமர்ந்த திருக்காளத்திமலை சென்றிடப் போய்ப் பணிந்து இறைவன் அருளால் மலைமீதுஏறி அன்பாகிய ஆற்றில் புரண்டு சென்று சந்நதிமுன் சென்றடைந்து திருக் காளத்தி மலைமேல் இருந்த மருந்தாகிய சிவ பெருமானை வணங்கினார்.

அ.ரை :- இடுக்கண்—துன்பம். அடுக்கல்—மலை. மடுப்ப—புரண்டு ஓட.

வணங்கி உள்ளங் களிகூர மகிழ்ந்து போற்றி மதுரஇசை
அணங்கு ''சென்டா''டெனும் பதிகம் பாடி அன்பாற் கண்ணப்பர்
மணங்கொள் மலர்ச்சே வடிபணிந்து வாழ்ந்து போந்து மன்னுபதி
இணங்கு தொண்ட ருடன் கெழுமி இன்புற் றிருக்கும் அந்நாளில் 536

வி.ரை :. கண்ணப்ப நாயனாரை ஆட்கொண்ட இறைவனை வணங்கி மனம் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கிப் போற்றி இனிய இசையில் கலந்து ''சென்டாடும்'' எனும் திருப்பதிகம் பாடி அன்பால் கண்ணப்பரது மணம் கமழும் மலர்போன்ற திருவடிகளைப் பணிந்து வாழ்த்தி ஆங்கிருந்த திருத்தொண்டருடன் கலந்து இன்புற்றிருக்கும் நாளில்

அ.ரை :- அணங்கு — விரும்பும்; கண்ணப்பர் மணங்கொள் மலர்ச் சேவடி—கண்ணப்பர் பாதம் பட்ட தால் இறைவன் திருத்தாள்களும் கண்ணப்பர் மணம் பெற்றன; இணங்கு—சேர்ந்திருந்த.

வடமா திரத்துப் பருப்பதமும் திருக்கே தாரமலையும் முதல்
இடமா அரனார் தாம் உவந்த எல்லாம் இங்கே இருந்தி றைஞ்சி

நடமா டியசே வடியாரை நண்ணி னார்போல் உள் நிறைந்து
திடமாங் கருத்தில் திருப்பதிகம் பாடிக் காதல் சிறந்திருந்தார்.
537

வி.ரை :- பின்பு வடதிசையிலுள்ள ஸ்ரீசைலம், திருக்கேதாரமலை முதலான இறைவன் இடங்களை யெல்லாம் திருக்காளத்தி மலையிலிருந்தபடியே வணங்கி, நடனமாடும் திருவடிகளையுடைய வரை அடைந்தவர் போன்று மனநிறைவு பெற்றுவலிமையான கருத்துடன் திருப்பதிகம்பாடி அன்பு சிறக்க இருந்தார்.

திரு ஒற்றியூரடைந்தது

அங்குச் சிலநாள் வைகியபின் அருளாற் போந்து பொரு
விடையார்
தங்கும் இடங்கள் எனைப்பலவும் சார்ந்து தாழ்ந்து தமிழ்
பாடிப்
பொங்கு புணரிக் கரை மருங்கு புவியுட் சிவலோ கம்போலத்
திங்கள் முடியார் அமர்ந்ததிரு ஒற்றியூரைச் சென்றடைந்தார்.
538

வி.ரை :- அந்த மலையில் சில நாட்கள் தங்கி யிருந்ததன் பின்பு இறைவன் அருளால் போரிடும் காளையையுடையவர் எழுந்தருளும் இடங்கள் எல்லாம் சென்று வணங்கித் தமிழ் பாடிப் பொங்கும் கடற்கரை யோரமாகவே வந்து, உலகின் சிவலோகம்போல நிலவைச் சடையில் அணிந்தவர் அமர்ந்தருளும் திருஒற்றியூரைச் சென்றடைந்தார்.

அ.ரை :- புணரி—கடல்.

ஒற்றியூர் கொண்ட விழாக்கோலம்

அண்ணல் தொடர்ந்தா வணங்காட்டி ஆண்ட நம்பி
எழுந்தருள
எண்ணில் பெருமை ஆதிபுரி இறைவர் அடியார் எதிர்
கொள்வார்
வண்ண வீதி வாயில்தோறும் வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப தீபம் எடுத்துத் தொழ
எழுங்கால் 539

வி.ரை :- ஓலையைக் காட்டி அன்று அண்ணல் ஆட்கொண்ட நம்பி ஆரூரர் எழுந்தருளப் பெருமையின் எல்லை கடந்த திருஒற்றியூர் இறைவனது அடியார்கள் எதிர்கொண்டழைத்து அழகிய வீதிகளின் வாயில்கள் தோறும் வாழை, பாக்கு மரங்களும், தோரணங்களும் அமைத்து வாசனைப் பொடிகளுடன் நிறைபொற்குடம், தூபம், தீபம் எடுத்துத் தொழுதற்கு யாவரும் ஒன்றென எழுந்தனர்.

அ.ரை :- ஆவணம்—அடிமை ஓலை. ஆதிபுரி—திருஒற்றியூர்; சுண்ணம்—வாசப்பொடி.

கோலாகல வரவேற்பு

வரமங் கலநல் லியம்முழங்க வாச மாலை அணி அரங்கில்
புரமங் கையர்கள் நடமாடப் பொழியும் வெள்ளப் பூமாரி
அரமங்கையரும் அமரர்களும் வீச அன்ப ருடன்புகுந்தார்
பிரமன் தலையிற் பலியுவந்த பிரானார் விரும்பு பெருந்
தொண்டர் 540

வி.ரை :- பிரமன் தலையில், கபால ஓட்டில் இரந்துண்ட சிவபெருமான் விரும்பும் பெருந்தொண்டர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஒற்றியூர் சென்றடைந்திட

மங்கல வாத்தியங்கள் முழங்க, வாசமுள்ள மாலைகள் தொங்கும் அழகிய அரங்கில் அந்த ஊரிலுள்ள மங்கையர்கள் நடனமாட, தேவர் உலகின் வெள்ளை மலர் மாரி எனப் பொழியும் தேவமகளிரும், தேவர்களும் தூவ அன்புடன் புகுந்தார்.

அ.ரை :- புரமங்கையர்—உரில் உள்ள மகளிர். அரமங்கையர்—தேவ மகளிர்.

ஒற்றி யூரின் உமையோடுங் கூட நின்றார் உயர்தவத்தின்
பற்று மிக்க திருத் தொண்டர் பரந்த கடல்போல் வந் தீண்டிச்
சுற்றும் அணைந்து துதிசெய்யத் தொழுது தம்பி ரான்அன்பர்
கொற்ற மழவே றுடையவர்தங் கோயில் வாயில் எய்தினார். 541

வி.ரை :- உமையம்மையோடங்குடன் நின்ற திரு ஒற்றியூரீசனது உயர்ந்த தவசீலராய்ப் பற்று மிக்க திருத்தொண்டர்கள் கடல்போல் பரந்து வந்து கூடிச் சூழ்ந்திருந்து துதிசெய்திடத் தொழுது தம்பிரான் அன்பராகிய சுந்தரர் கொல்லும் இளங் காளையுடையவரது திருக்கோயிலின் வாயில் வந்தடைந்தார்.

கோயிலை வலங்கொண்டு வணங்கியது

வானை அளக்குங் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து புகுந்து வளர்
கூனல் இளவெண் பிறைச்சடையார் கோயில் வலங்கொண் டெதிர் குறுகி
ஊனும் உயிரும் கரைந்துருக உச்சிகுவித்த கையினுடன்
ஆன காத லுடன்வீழ்ந்தார் ஆரா அன்பின் ஆரூரர். 542

வி.ரை :- நீங்காத பேரன்பின் பெருந்தகை நம்பி ஆரூரர் வானைத் தொடும் கோபுரத்தை மகிழ்ந்து

பணிந்து புகுந்து பிறைநிலவைச் சடையில் அணிந்த, இறைவன் கோயில் வலங்கொண்டு எதிரே சென்று உடலும், உயிரும் கரைந்து உருகிப் போக உச்சியின் மீது கைகுவித்து எழுந்த அன்பால் ஈசன் திருவடிகளில் வீழ்ந்தார்.

ஏட்டு வரியில் ''ஒற்றியூர் நீங்கல்'' என்ன எழுத்தறியும்
நாட்ட மலருந் திருநுதலார் நறும்பொற் கமலச் சேவடியில்
கூட்டும் உணர்வு கொண்டெழுந்து கோதில் அமுத இசை கூடப்
''பாட்டும் பாடிப் பரவி'' எனும் பதிகம் எடுத்துப் பாடினார். 543

வி.ரை :- வரிக்கணக்கின் ஏட்டில் ''ஒற்றியூர் நீங்கலாக,'' என்றுஎழுதஅந்த எழுத்தறியும் கண்ணோட்டம் மலரும் நெற்றிக் கண்ணனார் மணம் கமழ் பொன்மலர்ச் சிவந்த அடியில். உணர்வுகளைக் கூட்ட எழுந்து குற்ற மற்ற இனிய இசை சேர்த்துப் ''பாட்டும் பாடிப் பரவி'' எனும் பதிகம் பாடினார்,

அ.ரை :- ஏட்டு வரியில் — திருவெற்றியூர் வரி வசூலிக்கும் ஏட்டில் இல்லாது விலக்களிக்கப்பட்டிருந்தது என்பது தெரிகிறது.

முக்கால பூசை செய்திருந்தது

பாடி அறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம் போந்து
நீடு விருப்பிற் பெருங்காதல் நிறைந்த அன்பர் பலர்போற்றத்
தேடும் அயனும் திருமாலும் அறிதற் கரிய திருப்பாதம்
கூடுங் காலங் களில்அணைந்து பரவிக்கும்பிட் டினி திருந்தார். 544

வி.ரை : திருப்பதிகம் பாடிப் பரவசமடைந்து அறிவு மேலோங்கப் பரிவினுடன் பேரன்பு கொண்ட அன்பர் மிகவும் விரும்பிப் போற்ற, அயனும் திருமாலும் தேடியும் அறிதற்கு அரிய திருத்தாள்களை மூன்று காலங்கள் கூடும் நேரங்களில் சென்று பரவிக் கும்பிட்டு இனிதாக அங்கு வாழ்ந்து வந்தார்.

புலவர் கூற்று

இந்த நிலைமை யாரிவரிங் கிருந்தார் முன்பே இவர்க்காக
அந்தண் கயிலை மலைநீங்கி அருளாற் போந்த
அநிந்திதையார்
வந்து புவிமேல் அவதரித்து வளர்ந்து பின்பு வன்தொண்டர்
சந்த விரைசூழ் புயஞ்சேர்ந்த பரிசு தெரியச் சாற்றுவாம்.
545

வி.ரை :- நிலைமை இவ்வாறிருக்க, நம்பி ஆரூரர் திருஒற்றியூர் வருவதற்கு முன்னதாக இவருக்கென்று அந்தக் குளிர்ந்த கயிலை மலையை விடுத்து ஈசன் அருளால் புவியில் வந்து அவதரித்து வளர்ந்தபின்பு வன்தொண்டரது சந்தன மணம் கமழும் தோள்களைச் சேர்ந்ததன் தன்மையைக் கூறுவோம்.

அநிந்திதையார் உலகில் அவதரித்தது

நாலாங் குலத்திற் பெருகுநலம் உடையார் வாழும்
ஞாயிற்றின்
மேலாங் கொள்கை வேளாண்மை மிக்க திருஞாயிறுகிழவர்
பாலா தரவு தருமகளா ராகிப் பார்மேல் அவதரித்தார்
ஆலா லஞ்சேர் கறைமிடற்றார் அருளால் முன்னை
அநிந்திதையார். 546

வி.ரை :- நாலாங் குலமான சூத்திரர் குலத்தில் பெருகும் நலத்தை உடையவரும், ஞாயிற்றின் மேலான கொள்கையாகிய வேளாண்மை செய்யும் திருஞாயிறு கிழவரிடம் ஆதரவு தரும் மகளாக ஆலால நஞ்சைக் கழுத்தில் உடையவர் அருளால் அநிந்திதையார் உலகில் அவதரித்தார்.

சங்கிலியார் எனப் பெயர் பெற்று விளங்கியது

மலையான் மடந்தை மலர்ப்பாதம் மறவா அன்பால்
வந்தநெறி
தலையாம் உணர்வு வந்தணையத் தாமே அறிந்த
சங்கிலியார்
அலையார் வேற்கட் சிறுமகளிர் ஆயத் தோடும்
விளையாட்டு
நிலையா யினஅப் பருவங்கள் தோறும் நிகழ நிரம்புவார்.
547

வி.ரை :- மலையாள் மடந்தை பார்வதி தேவி யாரின் பாதங்களை மறவாது அன்பால் சேவை செய்த நெறி தலையாய்க் கொண்ட உணர்வு வந்து சொந்த மாக அறிந்த சங்கிலியார், அலைபாயும் வேல் கண் களையுடைய சிறு மகளிர் கூட்டத்துடன் விளையாட்டு முதலியன அந்த அந்தப் பருவங்களுக்கு ஏற்ப வளர்ந்து பருவமடைந்தார்.

அ.ரை :- ஆயம்—கூட்டம்.

சங்கிலியார் மணப்பருவம் எய்தியது

சீர்கொள் மரபில் வருஞ்செயலே அன்றித் தெய்வ நிகழ்
தன்மை
பாரில் எவரும் அதிசயிக்கும் பண்பில் வளரும் பைந்தொடி
யார்

வாரு மணிய அணியவாம் வளர்மென் முலைகள் இடை
வருத்தச்
சாரும் பதத்தில் தந்தையார் தங்கள் மனைவி யார்க்குரைப்
பார். 548

வி.ரை : சிறப்பான மரபினில் இயல்பான செயல்களேயன்றி தெய்வம் அருளிய தன்மையினால் உலகில் யாவரும் அதிசயக்கும்படி பண்பில் சிறந்து வளரும் அழகிய அணிகலன்கள் பூண்ட சங்கிலியார் முலைகள் இடைவருத்த கச்சணிந்து பருவம் அடைந்த நிலையில் தந்தையார் தமது மனைவிக்குக் கூறுபவராயினார்.

அ.ரை :- வாருமணிய—கச்சணிந்து; சாரும் பதம் — மணப் பருவம்.

மணம் முடிக்கப் பேசியது

''வடிவும் குணமும் நம்முடைய மகட்கு மண்ணு ளோர்க்கி
சையும்
படிவ மன்றி மேற்பட்ட பரிசாம் பான்மை அறிகிலோம்
கடிசேர் மணமும் இனிநிகழுங் காலம்'' என்னக் கற்பு வளர்
கொடியே அனைய மனைவியார் ''ஏற்கும் ஆற்றாற்
கொடும்'' என்றார். 549

வி.ரை :- சங்கிலியார் வளர்ந்து மணப் பருவம் அடைந்தது கண்டு தமதுமனைவியாரிடம் ''நம்முடைய மகள், இவ்வுலகில் உள்ள பெண்களைவிட அதிக அழகுள்ளவளாயும், நற்குணங்களுடையவளாகவும் இருக்கிறாள். இவளுக்குத் திருமணம் செய்து கொடுக்குங் காலம் வந்தது'' என்று கூற, அதற்குக் கற்பு வளரும் கொடி போன்ற மனைவியார் ''அவளுக்கு ஏற்ற ஆடவருக்குக் கொடும்'' என்றார்.

சங்கிலியார் தன் எண்ணம் உரைத்தது

தாயாரோடு தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்
''ஏயு மாற்றம் அன்றிதுஎம் பெருமான் ஈசன் திருவருளே
மேயஒருவர்க் குரிடதியான் வேறென் விளையும்'' என
வெருவுற்
றாய உணர்வு மயங்கிமிக அயர்ந்தே அவனிமேல் விழுந்தார்.
550

வி.ரை :- தாயாரோடு தந்தை பேசியது கேட்ட சங்கிலியார், ''நான் ஏற்கும் மார்க்கம் இது அன்று. எம் இறைவன் ஈசன் திருவருளினால் பொருந்திய ஒருவருக்கு உரியவளாகிய நான் உங்கள் முயற்சியால் வேறு என்ன விளையுமோ'' என அஞ்சி உணர்வு மயங்கி நினைவிழந்து மண்ணின் மேல் விழுந்தார்.

பெற்றோர் கவலை யடைந்தது

பாங்கு நின்ற தந்தையார் தாயார் பதைத்துப் பரிந்தெடுத்தே
ஏங்கும் உள்ளத் தினராகி ''இவளுக் கென்னோ வுற்ற''
தெனத்
தாங்கிச் சீத விரைப்பனிநீர் தெளித்துத் தைவந் ததுநீங்க
வாங்கு சிலைநன் னுதலாரை ''வந்த துனக்கிங் கென்''?
என்றார். 551

வி.ரை :- பக்கத்திருந்த தாய் தந்தையார் பதைத்துப் போய் அள்ளி எடுத்து, ஏங்கிய உள்ளத்தோடு, ''இவளுக்குத் திடீரென்று என்ன நேர்ந்தது'' என்று இரு கைகளாலும் இருவரும் தாங்கி குளிர்ந்த மணம் வீசும் பன்னீர் தெளித்து மயக்கம் நீங்கத் தடவிக் கொடுத்து வாங்கி இழுத்த வில்போன்ற நெற்றியையுடையவளைப் பார்த்து ''உனக்கு என்ன நேர்ந்தது?'' என்றனர்.

சங்கிலியார் உரைத்தது

என்று தம்மை ஈன்றெடுத்தார் வினவ மறைவிட் டியம்புவார்
''இன்றென் திறத்து நீர்மொழிந்த இதுஎன் பரிசுக் கிசையாது
வென்றி விடையார் அருள்செய்தார் ஒருவர்க் குரியேன்
யான் இனிமேல்
சென்று திருஒற்றியூர் அணைந்து சிவனார் அருளிற்
செல்வன்'' என 552

வி.ரை :- ''வந்ததுனக்கிங்கென்?'' என்று தம்மைப் பெற்றெடுத்தார் கேட்கத் தனது எண்ணத்தை மறைக்காமல் 'இன்று என்னைப்பற்றிப் பேசியது எனது விருப்பத்திற்கு ஆகாதது. வெற்றிகொள்ளும் விடையார் சிவபெருமான் அருள்பெற்ற ஒருவருக்கே நான் உரியவள். இனிமேல் நான் சிவன் அருளின்படி திருஒற்றியூர் செல்வன்'' என்றார்.

மகட் பேசச் சிலர் அறியாது வந்தது

அந்த மாற்றங் கேட்டவர்தாம் அயர்வும் பயமும் அதிசயமும்
வந்த வுள்ளத் தினராகி மற்ற மாற்றம் மறைத்தொழுகப்
பந்தம் நீடும் இவர்குலத்து நிகராம் ஒருவன் பரிசறியான்
சிந்தை விரும்பி மகட்பேச விடுத்தான் சிலருஞ் சென்
றிசைத்தார். 553

வி.ரை :- சங்கிலியாரின் முற்றிலும் மாறுபட்ட சொல்லைக் கேட்ட பெற்றோர் சோர்வும் அச்சமுமடைந்து இது என்ன? என அதிசயித்துச் சங்கிலியாரின் இந்த மனநிலையை யாரும் அறியாதபடி மறைத்து வைத்த உள்ளத்தினராயிருக்கும் நாளில் இவர் குலத்தில் பந்தம்உள்ளவரும் நிகரான ஒருவன் நிகழ்ந்தது அறியாதவனாகிச் சங்கிலியாரைத் திருமணம் செய்து கொள்ள

மகட்பேச ஆள் அனுபப அவர்களும் சென்று பேசினார்கள்.

மகட் பேச வந்தவர் இறந்தது

தாதை யாரும் அதுகேட்டுத் தன்மை விளம்பத் தகாமை
யினால்
ஏதம் எய்தா வகைமொழிந்து போக்க அவராங் கெய்தாமுன்
தீதங் கிழைத்தே இறந்தான்போல் செல்ல விடுத்தார்
உடன் சென்றான்
மாத ராரைப் பெற்றார்மற் றதனைக் கேட்டு மனம்
மருண்டார். 554

விரை :- சங்கிலியாரின் தந்தையும் அவர்களது சொற்கேட்டு நடந்ததைக் கூறத் தகாதமையினால் தவறு எதுவும் நடக்காதவாறு சொல்லி அனுப்பிட, பெண் கேட்டு வந்தவர்கள் தங்கள் இருப்பிடம் சென்றடையாமுன்னம், மகட்பேசச் சென்ற இடத்தில் ஏதோ திங்கு செய்தனர் போன்று, மகட் பேச அனுப்பியவனுடன் இறந்துபோக, சங்கிலியாரைப் பெற்றோர் அந்தச் செய்தியினைக் கேட்டு மனக்கலக்கமும், அச்சமுமடைந்தனர்.

சங்கிலியார் செயலுக்கு உட்பட்டது

''தைய லார்சங் கிலியார்தந் திறத்துப் பேசத் தகாத
வார்த்தை
உய்ய வேண்டும் நினைவுடையார் உரை யார்'' என்றால்
குலமறியச்
செய்த விதிபோல் இதுநிகழச் சிறந்தார்க் குள்ள படிசெப்பி
னையும் உள்ளத் துடன்அஞ்சி நங்கை செயலே உடன்
படுவார். 556

வி.ரை :- "உலகில் உயிர் வாழ்ந்திட வேண்டும் என்று நினைப்பவர்கள் சங்கிலியாரிடம் தகாகவார்த்தை பேசமாட்டார்கள்" என்று உலகறியச் செய்த ஒரு விதி போன்று நடந்ததை சில முக்கியமானவர்கட்கு நடந்த படி உரைத்து வாடும் உள்ளந்துடன் தன் மகள் சொன்னபடி நடந்துகொள்ள உடன்பட்டனர்.

சங்கிலியாரை "அணங்கே" யாகும் என்றதிசயித்தது

"அணங்கே யாகும் இவள்செய்கை அறிந்தோர் பேச அஞ்சு
வரால்
வணங்கும் ஈசர் திறமன்றி வார்த்தை அறியாள்
மற்றொன்றும்
குணங்கள் இவையாம் இனிஇவள் தான் குறித்த படியே
ஒற்றி நகர்ப்
பணங் கொள் அரவச் சடையார்தம் பாற்கொண் டணை
வோம் எனப்பகர்வார். 556

வி.ரை :- "இவள் தெய்வமேயாகும், இவளது செய்கை அறிந்தவர்கள் இவளிடம் பேசவும் அஞ்சுவார்கள். தான் வணங்கும் சிவபெருமானின் சொல் அல்லாது வேறொன்றும் அறியாள். இவள் குணங்களும் இதன் படி அமைந்தவை ஆதலின் இனி இவள் குறிப்பால் உணர்த்தியபடியே திருஒற்றியூரில் படமெடுத்த பாம்பைச் சடையில் அணிந்தவரிடம் கொண்டு சேர்ப்போம்" எனக் கூறினர்.

ஒற்றியூர்ச் சடையப்பரிடம் ஒப்படைத்தது

பண்ணார் மொழிச்சங் கிலியாரை நோக்கிப் பயந்தா
ரொடுங் கிளைஞர்
"தெண்ணீர் முடியார் திருஒற்றி யூரிற் சேர்ந்து செல்கதியும்

கண்ணார் நுதலார் திருவருளா லாகக் கன்னி மாடத்துத்
தண்ணார் தடஞ்சூழ் அந்நகரில் தங்கிப் புரிவீர் தவம்'' என்று 557

வி.ரை :- இசை பேசும் மொழியாள் சங்கிலியாரை நோக்கி அவரது பெற்றோரும் சுற்றமும் சூழ்ந்து தெளிந்த நீரை முடியில் தாங்கிய திருஒற்றியூரிற் சென்று நெற்றிக் கண்ணனார் திருவருளால் கன்னிமாடத்துத் தணிந்த அழகிய தடாகம் சூழ்ந்த அந்த நகரில் தங்கியிருந்து தவம் புரிவீர்!'' என்றுரைத்தனர்.

அ.ரை :- பயந்தார்—ஈன்றார். கிளைஞர்-சுற்றம்.

பெற்ற தாதை சுற்றத்தார் பிறைசேர் முடியார் விதியாலே
மற்றுச் செயலொன் றறியாது மங்கை யார்சங் கிலியார்தாம்
சொற்ற வண்ணஞ் செயத் துணிந்து துதைந்த செல்வத் தொடும் புரங்கள்
செற்ற சிலையார் திருஒற்றி யூரிற்கொண்டு சென்றணைந் தார். 558

வி.ரை :- பெற்ற தந்தை, சுற்றத்தார் மற்றும் யாவரும் பிறையணிந்த முடியையுடையவர் விதித்தபடி செய்வது வேறொன்றறியாது, சங்கிலியாரைத் தாம் சொன்னபடியே செய்யத் துணிந்து மனம் வருந்தி வேண்டிய அளவு செல்வத்துடன் புரம் மூன்றையும் அழித்தவரது திருஒற்றியூரில் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

கன்னி மாடம் அமைத்தது

சென்னி வளர்வெண் பிறையணிந்த சிவனார் கோயி லுட் புகுந்து
துன்னுஞ் சுற்றத் தொடும் பணிந்து தொல்லைப் பதியோர் இசைவினால்

கன்னி மாடம் மருங் கமைத்துக் கடிசேர் முறைமைக்
காப்பியற்றி
மன்னுஞ் செல்வம் தகவகுத்துத் தந்தை யார்வந் தடிவணங்கி
559

வி.ரை :- தலையில் வெண் பிறை அணிந்த சிவ பெருமான் கோயிலினுட் புகுந்து நெருங்கிய சுற்றத்தாருடன் பணிந்து அங்கு தொன்றுதொட்டு வாழ்வோரது அனுமதிபெற்று அருகில் கன்னிமாடம் அமைத்துக் காவலுக்குரியயன முறைப்படி செய்வித்து மேலும் செல்வம் வேண்டிய அளவு எடுத்துக் கொடுத்துத் தந்தை சிவனடியாராகிய சங்கிலியாரது அடி வணங்கினார்.

''யாங்கள் உமக்குப் பணிசெய்ய ஈசற்கேற்ற பணிவிரும்பி
ஓங்கு கன்னி மாடத்தில் உறைகின் றீர் 'என் றுரைக்கின்றார்
தாங்கற் கரிய கண்கள் நீர்த் தாரை ஒழுகத் தரியாதே
ஏங்கு சுற்றத் தொடு இறைஞ்சிப் போனார் எயில்சூழ்
தம்பதியில் 560

வி ரை :- ஞாயிற்றுக் கிழவர் சங்கிலியாரடி வணங்கி, ''நாங்கள் உமக்குப் பணியாற்றிட ஈசனுக்கு ஏற்ற பணிசெய்ய விரும்பி உயர்ந்த கன்னிமாடத்தில் வாழ்கின்றீர்'' என்று கூறிக்கொண்டு, தாங்க இயலாத் துன்பத்தால் கண்கள் நீர் தாரை தாரையாக விழ அதனைக் காணத் தரியாது ஏங்கிய சுற்றத்தோடு இறைஞ்சி மதிலால் சூழப்பட்ட தமது இல்லம் சென்றடைந்தனர்.

கன்னிமாடத்தில் தவமியற்றியிருந்தது

காதல் புரிந்து தவம்புரியுங் கன்னி யார்அங் கமர்கின்றார்
பூத நாதர் கோயிலினிற் காலந் தோறும் புக்கிறைஞ்சி

நீதி முறைமை வழுவாது தமக்கு நேர்ந்த பணிசெய்யச்
சீத மலர்ப்பூ மண்டபத்துத் திரைசூழ் ஒருபாற் சென்றிருந்து. 561

வி.ரை :- சிவபெருமானிடம் அன்பைச் செலுத்தித் தவம்புரியும் கன்னியார் சங்கிலியார், ஐம்பெரும் பூதங்களுக்கும் தலைவனார் திருக்கோயிலுக்கு மூன்று காலமும் சென்று செய்ய வேண்டிய நியதிகளை முறைமை வழுவாமல் செய்து தனக்கு என விதிக்கப் பட்ட பணிகளைச் செய்து, குளிர்ந்த மலர்கட்டும் மண்டபத்தில் திரையிடப்பட்ட ஒருபக்கம் சென்று வந்தார்.

அ.ரை :- சீத மலர்ப்பூ மண்டபம் — சுவாமிக்கு மலர் கட்டும் மண்டபம்.

இறைவனுக்கு மாலை தொடுத்துக் கொடுத்து வந்தது

பண்டு கயிலைத் திருமலையிற் செய்யும் பணியின் பான்மை மனங்
கொண்ட உணர்வு தலைநிற்பக் குலவு மலர்மென் கொடியனையார்
வண்டு மருவுந் திருமலர்மென் மாலை காலங் களுக்கேற்ப
அண்டர் பெருமான் முடிச்சாத்த அமைத்த வணங்கி அமருநாள் 562

வி.ரை :- பூர்வத்தில் திருக்கயிலை மலையில் செய்த பணியின் காரணமாகக் கொண்ட உணர்வு மேலோங்கி நிற்க விளங்கும் மலர்போன்ற மென்மையான கொடி போன்ற சங்கிலியார் வண்டுகள் மொய்க்

கும் மென்மையான மலர்மாலை அந்த அந்த நேரங்களுக்கு ஏற்ப தேவர்பிரானின் முடியில் அணிந்திட அமைத்து வணங்கியிருக்கும் நாளில்.

ஆரூரர் கோயிலினுட் புகுந்தது

அந்தி வண்ணத் தொருவர்திரு அருளால் வந்த ஆரூரர்
கந்த மாலைச் சங்கிலியார் தம்மைக் காதல் மணம்புணர
வந்த பருவம் ஆதலால் வகுத்த தன்மை வழுவாத
முந்தை விதியால் வந்தொருநாள் முதல்வர் கோயி
லுட்புகுந்தார். 563

வி.ரை :- அந்தி மாலைச் செவ்வானம் போன்ற நிறத்தினரான சிவபெருமான் அருளினால் தோன்றிய ஆரூரர், மணம் வீசும் மாலை அணிந்த சங்கிலியாரைக் காதல் மணம் புரிந்துகொள்ளும் காலம் வந்து கூடினமையால், முந்தைய நாளில் வகுத்த விதியின் தன்மை வழுவாமல் வந்து ஒருநாள் இறைவன் கோயிலினுட் புகுந்தார்.

ஆரூரர் மலர் மண்டபத்துள் புகுந்தது

அண்டர்பெருமான் அந்தணராய் ஆண்ட நம்பி அங்கணரைப்
பண்டை முறைமை யாற்பணிந்து பாடிப் பரவிப்
புறம் போந்து
தொண்டு செய்வார் திருத் தொழில்கள் கண்டு தொழுது
செல்கின்றார்
புண்ட ரீகத் தடம்நிகர்ப்பூந் திருமண் டபத்தின்
உட் புகுந்தார். 564

வி.ரை :- சிவபெருமான் அந்தணர் வேடங்கொண்டு ஆட்கொண்ட நம்பி ஆரூரர், அழகிய

கண்ணனாரைப் பழமையான முறைப்படிப் புணிந்து பாடிப் பரவி வெளிவந்து இறைவனுக்குத் தொண்டாற்று பவர்களின் திருத்தொழில் கண்டு தொழுது சென்று கொண்டிருக்கையில் தாமரைத் தடாகம் போன்ற மலர் மண்டபத்தினுட் புகுந்தார்.

சங்கிலியார் மின்னலென்ன மறைந்தது

அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர்
தொடுத்தே
என்புள் ளுருக்கும் அடியாரைத் தொழுது நீக்கி வேறிடத்து
முன்புபோலத் திரை நீக்கி முதல்வர் சாத்தும் பணிகொடுத்து
மின்போல் மறையுஞ் சங்கிலியார் தம்மை விதியாற்
கண் ணுற்றார் 565

வி.ரை :- அன்பையே நாராகக் கொண்டு அஞ் செழுத்து மனதில் தொடுக்க மாலை தொடுத்த என்பு உள் உருக்கிட இறைவனைத் தொழுது வேரிடம் சென்று முன்பு போலத் திரையை நீக்கி முதல்வருக்குச் சாத்து வேலையைக் கொடுத்து விட்டு மின்னல்பொல் மறையும் சங்கிலியாரை நாயனார் விதியின் வலிமையால் கண்ணுற்றார்.

சங்கிலியார் மீது கொண்ட காதல் மயக்கம்

கோவா முத்தும் சுரும் பேறாக் கொழுமென் முகையும்
அனையாரைச்
சேவார்கொடியார் திருத்தொண்டர் கண்டபோது சிந்தை
நிறை
காவா தவர்பால் போய்வீழத் தம்பாற் காம னார்துரந்த
பூவா ளிகள்வந் துறவீழத் தரியார் புறமே போந்துரைப்பார்.
566

வி.ரை :- துளையிட்டுக் கோர்க்கப் படாத முத்தும் வண்டுகள் ஏறாத கொழுத்த மென்மையான மலர் மொக்கும் போன்ற சங்கிலியாரைக் காளையைக் கொடியில் பொறித்த சிவபெருமானது திருத்தொண்டர் சுந்தரர் கண்டவுடன் மனவலிமை காக்கும் தன்மையிலாதவர் போன்று போய்விழத் தம்மீது காமன் தனது அழகிய மலரம்புகள் வந்து தைக்க அதனைத் தரிக்க இயலாதவராய் வெளியே வந்து கூறுபவரானார்.

"உள்ளங்கவர்ந்த அவள் யார்?" என்றது

"இன்ன பரிசென் றறிவரிதால் ஈங்கோர் மருங்கு திரைக்குள்ளால்
பொன்னும் மணியும் மலர்த்த ஒளி அமுதில் அளாவிப் புதியமதி
தன்னுள் நீர்மை யாற்குழைத்துச் சமைத்த மின்னுக் கொடி போல்வாள்
என்னை உள்ளந்திரிவித்தாள் யார்கொல்?
என்றங் கியம்புதலும். 567

வி. ரை :- "பொன்னும் மணியும் சேர்ந்ததால் எழும் பேரொளியாகிய அமுதமாகக் கலந்த அந்த ஒளியுடன் நிலவின் ஒளி கலந்து தன் சிறப்பினால் இந்த ஒளிகளை குழைத்து உண்டாக்கப்பட்ட மின்னல் கொடி போன்ற அவள், யார், எத்தகையவள் என்று அறிந்து கொள்வதன் முன்னம் இங்குள்ள திரையினுள் புகுந்து மறைந்தாள். என் உள்ளத்தைக் கவர்ந்த அவள் யார்?" என்று கேட்க,

அ.ரை :- இன்ன பரிசு—இத்தகைவள். அளவி—கலந்து. புதியமதி—இங்கு முழுநிலவு எனக் காண்க.

''நங்கை சங்கிலியார்'' என்றது

அருகு நின்றார் விளம்புவார் ''அவர்தாம் நங்கை சங்கி
லியார்
பெருகுந் தவத்தால் ஈசர்பணி பேணுங் கன்னி யார்'' என்ன
எய்து
''இருவ ரால்இப் பிறவியைஎம் பெருமான் அருளால் எய்து
வித்தார்
மருவும் பரவை ஒருத்தி, இவள் மற்றை யவளாம்'' என
மருண்டார் 568

வி.ரை :- ''தவம் செய்யும் பேராவலால் ஈசனுக்குப் பணி செய்யும் கன்னியார் நங்கை சங்கிலியார் இவர்தான்'' என்று அருகில் நின்றவர் சொல்லக்கேட்ட ஆரூரர் ''இரு பெண்களால் இப்பிறவியை இறைவன் எனக்கு அருளினார் அதில் விள்ங்கும் பரவை ஒருத்தி மற்றொரு பெண் இவள் தானோ!'' என மயங்கினார்.

''சிவனருளால் பெறுவேன்'' என்றது

''மின்னார் சடையார் தமக்காளாம் விதியால் வாழும்எனை
வருத்தித்
தன்னார் அருளால் வரும்பேறு தவத்தால் அணையா
வகை தடுத்தே
என்னா ருயிரும் எழில்மலருங் கூடப் பிணைக்கும் இவள்
தன்னைப்
பொன்னார் இதழி முடியார்பால் பெறுவேன்'' என்று
போய்ப் புக்கார் 569

வி.ரை :- மின்னல் போன்று ஒளிவீசும் சடையை உடையவருக்கு விதிப்படி தமக்கு ஆளாகும். அடிமை செய்யும் என்னை வருத்தி, சிவபெருமான் அருளினால்

கிடைக்கப்பெறும் பேற்றினைத் தவம் இயற்றுவதால் அடையாதபடி தடுத்து எனக்கு ஆருயிராகவும் எழில் மலருமான இவளை ஒன்று சேர்க்கும்படி பொன் போன்ற கொன்றை மலர் இதழ்கள் நிறைந்த முடியார் சிவபெருமான் அருளும்படி நின்று பெற்றுக்கொள் வேன்'' என்று கோயிலுட் புகுந்தார்.

அ.ரை :- எனை வருத்தி—என்னை வருத்திக் கொண்டு, சங்கிலியார் கிடைக்கும்வரை வருத்திக் கொண்டு. தன்னார் அருள்—சிவனருள். தவத்தால் அணையாவகை தடுத்தே— சிவனருளால் கிடைக்காதது தவமியற்றி அடைவதைத் தடுத்து. சங்கிலியார்தவம் செய்யாதபடி தடுத்துக் குடும்பத்தில் ஆழ்த்தி என்க. பென்னார் இதழி— பொன்இதழ் போன்ற கொன்றை.

ஒற்றியூரமர்ந்த ஈசனை வேண்டியது

மலர்மேல் அயனும் நெடுமாலும் வானும் நிலனும்
கிளைத்தறியா
நிலவு மலருந் திருமுடியும் நீடுங் கழலும் உடையாரை
உலக மெல்லாந் தாம்உடையா ராயும் ஒற்றியூர் அமர்ந்த
இலகு சோதிப் பரம்பொருளை இறைஞ்சி முன்னின்
றேத்துவார் 570

வி.ரை :- உந்திக் கமலத்தின் மேல் தோன்றிய பிரம்மனும், திருமாலும், வானிலும், நிலத்திலும் தோண் டிச் சென்றும் அறியாத, முடியில் பிறை நிலவும் திருப் பாதங்களில் வெற்றிக் கழல்களும் உடைய சிவபெரு மானை, திருஒற்றியூரிலமர்ந்த உலகெலாம் தமக்கு என்று உடையவரை அருட்சோதி பொங்கும் பரம் பொருளாகிய சிவபெருமான் சந்நதி முன்நின்று ஏத்திப் பாடுவார்.

அ.ரை :- கிளைத்த—தோண்டி. கீண்டு—அகழ்ந்து

"சங்கிலியைக் கொடுத்தென் வருத்தம் தீரும்" என்றது

"மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள்
முடியின் கண்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காதல் உடையீர்!
அடியேனுக்
கிங்கு நமக் கூத் திருமாலை தொடுத்தென் உள்ளத்தொடை
அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தந் தீரும்"
என 571

வி.ரை :- மங்கை பார்வதிப் பிராட்டியை மகிழ்ச்சியுடன் தனது ஒரு பாகமாகக் கொண்டது மன்றிஅழகிய நீண்ட சடாமுடியில் கங்கையை மறைத்து வைத்தருளும் காதல் அன்புடைய இறைவனே! அடியேனுக்கு இங்கு உமக்குத் திருமாலை தொடுத்து எனது உள்ளக் கட்டை அவிழ்த்த மதிமுகச் சங்கிலியை எனக்குக் கொடுத்து எனது வருத்தத்தைத் தீர்ந்தருள்வாய்.

அ.ரை :- தொடை அவிழ்த்த— மனக்கட்டை உடைத்த

"பவளச் சடையீர் அருளும்" எனப் பரவியது

அண்ண லார்முன் பலவும் அவர் அறிய உணர்த்திப் புறத்
தணைந்தே
"எண்ண மெல்லாம் உமக்கடிமை யாமா றெண்ணும் என்
நெஞ்சில்
திண்ண மெல்லாம் உடைவித்தாள் செய்வ தொன்றும்
அறியேன் யான்
தண்ணி லாமின் னொளிர் பவளச் சடை யீர்!" அருளும்
எனத்தளர்வார். 572

வி:ரை :- இறைவன் சந்நதியில் பலவாக அவர் அறிந்துகொள்ளும்படி கூறி வெளிவந்து, குளிர்ந்த மின்னொளி வீசும் நிலவை அணிந்த பவள நிறச் சடையப்பரே! எனது எண்ணம் யாவும் உமக்கு அடிமையாம் என்ற எண்ணம் என் நெஞ்சில் உறுதியாக இருந்தவைகளையெல்லாம் உடைத்து விட்டாள். இனி என்ன செய்வதென்று அறியேன். எனக்கு அருளும் என்று மனம் தளர்ந்து வேண்டினார்.

மாலைக் கடல் கண்டயர்ந்தது

மதிவான் முடியார் மகிழ்கோயில் புறத்தோர் மருங்கு
வந்திருப்பக்
கதிரோன் மேலைக் கடல்காண மாலைக் கடலைக் கண்
டயர்வார்
முதிராமுலையார் தம்மை மணம் புணர்க்க வேண்டி
முளரிவளை
நிதியாள் நண்பர் தமக்கருளும் நண்பால் நினைந்து
நினைந்தழிய. 573

வி.ரை :- நிலவு தங்கிய சடாமுடியார் மகிழ்ந்து வாழும் கோயிற் புறத்தே ஒரு பக்கம் வந்திருந்து ஞாயிறு மேற்குக் கடலைச் சென்றடைய, மாலையில் தோன்றும் கடலைக் கண்டு அயர்ந்து முதிர்ந்து பருக்காத முலையையுடைய சங்கிலியாரை மணம் செய்திட வேண்டி, பதுமம், சங்கம் எனும் தேவ உலக நிதிக்கு இறைவனாகிய குபேரனது நண்பராகிய சிவபெருமான் தமக்கு அருளவேண்டும் எனும் ஆவலால் நினைந்து நினைந்து வருந்தினார்.

அ.ரை :- மதிவாழ் முடி—மதியணிந்த முடி. முளரி வளைநிதி—பதுமம், சங்கு ஆகிய இரு நிதிகள்.

"சங்கிலியைத் தருகின்றோம்" என்றது

உம்பர் உய்ய உலகுய்ய ஒல வேலை விடம் உண்ட
தம்பி ரானார் வன் தொண்டர் தம்பால் எய்திச்
"சங்கிலியை
இம்பர் உலகில் யாவருக்கும் எய்த ஒண்ணா இருந்தவத்துக்
கொம்பை உனக்குத் தருகின்றோம் கொண்டகவலை
ஒழி" கென்ன 574

வி.ரை :- தேவர்கள் மேன்மையடைய ஒலிக்கும் கடலில் தோன்றிய நஞ்சை உண்ட தம்பிரானார் வன் தொண்டர் இருக்கும் இடம் சென்று, "இந்த உலகில் யாராலும் அடையமுடியாத பெருந்தவக் கொம்பான சங்கிலியைய உனக்குத் தருகின்றோம் கொண்ட கவலையை விடு" என்றார்.

அ.ரை :- உம்பர் — தேவர், ஒலி வேலை— ஒலிக்கும் கடல். இம்பர்—இவ்வுலகினர். இருந்தவம்— பெருந்தவம். கொம்பு சங்கிலியார்.

இறைவனை வாழ்த்தி வணங்கியது

"அன்று வெண்ணெய் நல்லூரில் வலிய ஆண்டு கொண்
டருளி
ஒன்றும் அறியா நாயேனுக் குறுதி யளித்தீர் உயிர்காக்க
இன்றும் இவளை மணம்புணர்க்க ஏன்று நின்றீர்
எனப் போற்றி
மன்றல் மலர்ச்சே வடியிணைக்கீழ் வணங்கி மகிழ்ந்தார்,
வன் தொண்டர் 575

வி.ரை :- அன்று திருவெண்ணெய் நல்லூரில் என்னை வலுக்கட்டாயமாக ஆட்கொண்டருளி, ஒன்றும் அறியாத நாயினேனுக்கு உயிர் காக்க உறுதி அளித்தீர்.

இன்று சங்கிலியாரை மணம் புணர்ந்து கொள்ள ஏற்றருளினீர் என்று போற்றி, மணங்கமழும் மலர்ச் சேவடியின் கீழ் வணங்கி வன்தொண்டர் மகிழ்ந்தார்.

அ.ரை :- ஏன்று — ஏற்று, மன்றல் — மணம், வாசனை.

சங்கிலியார் கனவில் தோன்றியது

ஆண்டு கொண்ட அந்தணனார் அவருக் கருளிக்
கருணையினால்
நீண்ட கங்குல் யாமத்து நீங்கி வானில் நிறைமதியம்
தீண்டு கன்னி மாடத்துச் சென்று திகழ்சங் கிலியாராம்
தூண்டு சோதி விளக்கனையார் கனவில் தோன்றினார்
576

வி.ரை :- ஆட்கொண்டருளிய அந்தணாளர் ஆரூரருக்கு அருளிய கருணையினால் அன்று நீண்ட இரவின் நடுவில் திருக்கோயிலினின்றும் எழுந்தருளி வானில் நிறை நிலவு ஒளி படரும் கன்னி மாடத்துள் சென்று விளங்கும் தூண்டிவிடப்பட்ட ஒளிபோன்ற சங்கிலியார் கனவில் தோன்றினார்.

சங்கிலியார் தொழுதது

தோற்றும் பொழுதிற் சங்கிலியார் தொழுது விழுந்து
பரவசமாய்
ஆற்ற அன்பு பொங்கி எழுந் ''தடியேன் உய்ய எழுந்தருளும்
பேற்றுக் கென்யான் செய்வ''தெனப் பெரிய கருணை
பொழிந்தனைய
நீற்றுக் கோல வேதியரும் நேர்நின் றருளிச் செய்கின்றார்.
577

வி.ரை :- இறைவன் கனவில் தோன்றியது கண்ட சங்கிலியார் விழுந்து வணங்கிப் பரவசமடைந்து, தெவிட்டாத பேரன்பு பொங்கி எழ ''அடியேன் மேன் மையடையஎழுந்தருளும் பெரும்பேற்றுக்கு நான்என்ன தவம் செய்தேன்'' என்று பெருங்கருணை பொழிந்ததே போன்று திருநீறு பூசிய அந்தணர் கோலத்தில் இறைவ னும் நேராக நின்று அருளினார்.

இறைவன் சங்கிலியாருக்குரைத்தது

''சாருந் தவத்துச் சங்கிலிகேள்! சால என்பால்
அன்புடையாள்
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான் வெண்ணெய்
நல்லூரில்
யாரும் அறிய யான் ஆள உரியான் உன்னை எனை
இரந்தான்
வரர்கொள் முலையாய்! நீ அவனை மணத்தால் அணை
வாய் மகிழ்ந்'' தென்றார் 578

வி.ரை :- ''தவநெறியை அடைந்த சங்கிலியே! கேள்! என்னிடம் மிகுந்த அன்புடையவன் மேரு மலை யைக் காட்டிலும் மேன்மையான தவத்தை உடையவன் திருவெண்ணெய் நல்லூரில் யாவரும் அறிய என்னால் ஆட்கொள்ளப் பட்டவன், இன்று உன்னை அவ னுக்குத் தரவேண்டும் என்றுஎன்னை இரந்து வேண்டு கிறான் கச்சணிந்த முலையாளே! நீ அவனைத் திருமணத்தில் சேர்ந்தால் மகிழ்ந்து வாழ்வாய்'' என்றார்.

சங்கிலியார் தேவரை விழுந்து தொழுதது

ஆதிதேவர் முன்நின்றங் கருளிச் செய்த பொழுதின்கண்
மாத் ரார்சங் கிலியாரும் மாலும் அயனும் அறிவரிய

சீத மலர்த்தா மரையடிக்கீழ்ச் சேர்ந்து வீழ்ந்து செங்நின்று
வேத முதல்வர் முன்நடுக்கம் எய்தித் தொழுது
விளம்புவார் 579

வி.ரை :- ஆதிபகவன் தன்முன் நின்று அருளிய சொற்களைக் கேட்டபொழுது மங்கையரில் சிறந்த சங்கிலியாரும் திருமாலும் பிரமனும் அறிந்துகொள் வதற்கு அரிய குளிர்ந்த தாமரையடிக்கீழ் வீழ்ந்து செம்மையாக முறைமையின்படி நின்று வேதநாயகன் முன்பு நடுக்கமடைந்து தொழுதுரைப்பார்.

அ.ரை :- செந்நின்று — இறைவன் சந்நதி முன் நிற்கவேண்டிய முறைமையின்படி நின்று.

சங்கிலியார் உரைத்தது

''எம்பி ரானே! நீர் அருளிச் செய்தார்க்குரியேன் யான்
இமையோர்
தம்பி ரானே! அருள்தலைமேற் கொண்டேன் தக்க விதி
மணத்தால்
நம்பி யாரூ ரருக்கென்னை நல்கி அருளும் பொழுதிமயக்
கொம்பின் ஆகங்கொண்டீர்க்குக் கூறுந்திறம் ஒன்றுள
தென்பார் 580

வி.ரை :- ''எமது இறைவனே! இமையோர் தம்பிரானே! நீர் அருளிச் செய்தார்க்கு நான் உரியவள். உனது அருளைத் தலைமேற்கொண்டு ஏற்றுக்கொண் டேன். தக்க முறைப்படி நடக்கும் திருமணத்தில் நம்பி ஆரூரர்க்கு என்னைக் கொடுத்தருளும்போது இமயக் கொம்பனாள் பார்வதி தேவியை ஒரு பாகமாகக் கொண்ட இறைவனுக்குக் கூறும் திறம் ஒன்று உளது'' என்பார்.

சங்கிலியார் மேலும் உரைத்தது

பின்னும் பின்னல் முடியார்முன் பெருக நாணித்தொழு
துரைப்பார்
''மன்னுந் திருவா ரூரின்கண் அவர்தாம் மிகவும்
மகிழ்ந்துறைவ
தென்னுந் தன்மை அறிந்தருளும் எம் பி ராட்டி
திருமுலைதோய்
மின்னும் புரிநூல் அணிமார்பீர்! என்றார் குன்றா
விளக்கனை யார் 581

வி.ரை :- 'எம் தலைவியின் திருமுலை தோயும் மின்னும் முப்புரிநூல் அணிந்த மார்பையுடையீர்! முன்பு திருவாரூரில் நம்பிஆரூரர் மிகவும் மகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர் என்னும் தன்மையினை நீர் அறிந் தருளும்'' என்று பின்னும் பின்னல் முடியவராகிய சிவ பெருமான் முன்பு அன்பு பெருக நாணித் தொழு துரைத்தார்.

இறைவன் கொடுத்த வாக்கு

மற்றவர்தம் உரைகொண்டு வன்தொண்டர் நிலைமையினை
ஒற்றிநகர் அமர்ந்தபிரான் உணர்ந்தருளி உரைசெய்வார்
''பொற்றொடியாய்! உனைஇகந்து போகாமைக்
கொருசபதம்
அற்றமுறு நிலைமையினால் அவன் செய்வான்''
என அருளி 582

வி.ரை :- சங்கிலியாரின் சொற்கேட்டு வன் தொண்டரது நிலைமையினை திருஒற்றியூரில் அமர்ந்த பிரான் உணர்ந்தருளி, ''பொன்னணிகலன்கள் பூண்ட வளே! உன்னை விட்டுப் பிரிந்து போகாமைக்கு ஒரு

சபதம் உனக்காகத் துன்புறும் நிலைமையினால் அவன் செய்வான்'' என்றுரைத்தருளினார்.

அ.ரை :- இகந்து—கைவிட்டு. அற்றமுறு நிலைமையினால் —துன்புறும் நிலைமையினால்.

சுந்தரரிடம் சென்று நடந்தது கூறியது

வேயனைய தோளியார் பால்நின்று மீண்டருளித்
தூயமனம் மகிழ்ந்திருந்த தோழனார் பால் அணைந்து
''நீ அவளை மணம் புணரும் நிலையுரைத்தோம்
அதற்கவள்பால்
ஆயதொரு குறை உன்னால் அமைப்பதுள'' தென்றருளி
583

வி.ரை :- மூங்கில் போன்ற மென் தோளினையுடைய சங்கிலியாரிடமிருந்து தூயமனம் மகிழ்ந்து இருந்த தோழனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் வந்து, ''நீ அவளைத் திருமணம் செய்துகொள்வது பற்றிக் கூறினோம். ஆனால் அவள், நீ விரும்பியபடியே திருமணப் செய்துகொள்ள உன்னிடம் உள்ள குறை ஒன்றினை நிவர்த்திக்க உளது என்றருளினார்.

''செய்ய நின்ற குறையாது?'' எனல்

வன் தொண்டர் மனங்களித்து வணங்கி ''அடியேன் செய்ய
நின்றகுறை யா''தென்ன ''நீ அவளை மணம்புணர்தற்
கொன்றியுட னேநிகழ்வ தொருசபதம் அவள்முன்பு
சென்றுகிடைத் திவ்விரவே செய்க'' என
அருள் செய்தார் 584

வி.ரை :- ஈசன் சொற் கேட்ட வன்தொண்டர் மனங்களிப்பெய்தி வணங்கி ''அடியேன் நிவர்த்தி

செய்யவேண்டிய குறை யாது?'' என்று கேட்க, ஈசனும் ''நீ அவளைத் திருமணம் செய்து கொள்வதற்கு, அவளுடன் பிரியாமல் என்றும் அவளுடன் ஒன்றித்து வாழ்வதாகிய ஒரு சபதம் அவள்முன் சென்று இன்றே இவ்விரவே செய்க'' என அருளிச் செயதார்.

அ.ரை :- ஒன்றியுடன் நிகழ்வது — நீங்காது ஒன்றித்து வாழ்தல். பரவையிரிடம் செல்லாது ஒற்றி யூரில் வாழ்தல்.

''செய்ய வேண்டியது செய்து முடிப்பன்'' என்றது

''என் செய்தால் இது முடியும் அது செய்வன் யான்அதற்கு
மின் செய்த புரிசடையீர்! அருள் பெறுதல் வேண்டும்'' என
முன்செய்த முறுவலுடன் முதல்வர்தாம் முகநோக்கி
உன்செய்கை தனக்கினி என் வேண்டுவ''
தென் றுரைத்தருள 585

வி.ரை :- இறைவன் சொன்னது கேட்ட வன் தொண்டர் ''என்ன செய்தால் சங்கிலியாருடன் என் திருமணம் நடக்குமோ அதை நான் செய்வேன். மின் னொலி வீசும் புரிசடையீர்! அதற்கு அருள் செய்தல் வேண்டும்'' என்றுரைக்க இறைவனும் புன்முறுவலுடன் சுந்தரரது முகம் நோக்கி ''இனி உனக்கு நாம் என்ன செய்யவேண்டும்?'' என்று கூறியருளிட

அ.ரை :- உன் செய்கை தனக்கினி என் வேண்டும் —நீ சங்கிலியார் கேட்டபடி சபதம் செய்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.

இறைவனிடம் சென்றிரந்தது

வம்பணிமென் முலையவர்க்கு மனங்கொடுத்த
வன்தொண்டர்
''நம்பரிவர் பிறபதியும் நயந்தகோ லஞ்சென்று

கும்பிடவே கடவேனுக் இதுவிலக்காம்'' எனுங்குறிப்பால்
தம்பெருமான் திருமுன்பு தாம்வேண்டுங்குறை
இரப்பார் 586

வி.ரை :- அழகிய அணிகள் பூண்ட மென் முலையவர் சங்கிலியாருக்குத் தன் மனதையிழந்த வன் தொண்டர் ''சங்கிலியாருக்குச் சபதம் செய்து கொடுப்பது சிவபெருமானது பிற இடங்களில் விரும்பிக் கொண்ட கோலங்களைச் சென்று கண்டு கும்பிடு வதற்குத் தடையாக இருக்கும்'' எனுங் குறிப்பினால் தமது இறைவன் திருமுன்பு நின்று தமது குறையினை நிறைவு செய்ய வேண்டுவராயினார்.

அ ரை :- வம்பு அணி—அழகிய அணி. கச்சு.

மகிழ மரத்தடியலிருக்க வேண்டியது.

சங்கரர்தாள் பணிந்திருந்து தமிழ்வேந்தர் மொழிகின்றார்
''மங்கை அவள் தனைப்பிரியா வகைசபதஞ் செய்தவனுக்
கங்கவளோ டியான்வந்தால் அப்பொழுது கோயில்விடத்
தங்கும்இடந் திருமகிழ்க்கீழ்க் கொளவேண்டும்''
எனத் தாழ்ந்தார் 587

வி.ரை :- தமிழ்வேந்தர் சுந்தரர் சங்கரர் திருத் தாள்களைப் பணிந்து ''மங்கை, சங்கிலியாரைப் பிரியா திருக்கச் சபதம் செய்வதனுக்கு அங்கு அவளோடு நான் வந்தால் அப்பொழுது கோயிலை விடுத்து நீர் திருமகிழ மரத்தின் கீழ் இருக்க வேண்டும்'' எனத் தாழ்மையுடன் வேண்டினார்.

''நம்பி! நீ சொன்னபடி செய்தும்'' என்றது

தம்பிரான் தோழரவர் தாம்வேண்டிக் கொண் டருள
உம்பர்நா யகரும் அதற் குடன்பாடு செய்வாராய்

''நம்பி! நீ சொன்னபடி நாஞ்செய்தும்'' என்றருள 588
''எம்பிரா னே! அரிய தினி எனக்கென்? என ஏத்தி

வி.ரை :- தம்பிரான் தோழர் வன் தொண்டர் வேண்டிக் கொண்டதற்கிணங்க, தேவர் நாயகனும் அதற்கு உடன்பாடு செய்பவராய், ''நம்பி நீ சொன்ன படி நாம் செய்வோம் என்றருளினார்.''

இறைவன் திருவிளையாடல்

அஞ்சலி சென் னியில்மன்ன அருள்பெற்றுப் புறம்போதச்
செஞ்சடையார் அவர்மாட்டுத் திருவிளையாட் டினை
மகிழ்ந்தோ
வஞ்சிஇடைச் சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ
துஞ்சிருள்மீ ளவும் அணைந்தார் அவர்க்குறுதி
சொல்லுவார். 589

வி.ரை :- சுந்தரர், சங்கரர் சொன்ன அருள் மொழி கேட்டு மகிழ்ந்து தலைமேல் இருகைகளையும் குவித்து அஞ்சலிசெய்து இறைவன் அருளைப் பெற்றதனால் வெளியே சென்றிட, சிவந்த சடையையுடையார் சுந்தர ரிடத்துத் தன் திருவிளையாடல் செய்வதனை மகிழ்ந்தோ அல்லது வஞ்சிக்கொடி போன்ற இடையாள் சங்கிலியாரை வழி வழியாக அடிமை செய்திடச் செய்யும் பெருமையாலோ நள்ளிரவில் மீண்டும் சங்கிலி யாரிடம் சென்றார்.

மகிழ மரத்தடியில் சபதம் ஏற்கச் சொன்னது

சங்கிலியார் தம்மருங்கு முன்போலச் சார்ந்தருளி
''நங்கையுனக் காரூரன் நயந்துகூ ளுறக்கடவன்

அங்குநமக் கெதிர் செய்யும் அதற்குநீ இசையாதே
கொங்கலர்பூ மகிழின்கீழ்க் கொள்க''
எனக்குறித்தருள 590

வி.ரை :- சங்கிலியாரிடம் மீண்டும் முன் போலச் சென்றருளி, ''நங்கை! ஆரூரன் அங்கு நம் முன்பாக விரும்பிச் சபதம் எடுத்துக்கொள்ளக் கூடம்படுவன். அதற்கு நீ இசையாதே. மணங்கமழும் மலர்களை யுடைய மகிழமரத்தினடியில் சபதம் செய்ய ஏற்றுக் கொள்க'' என்று குறித்தருளினார்.

அ.ரை :- நயந்து சூளுறக்கடவன்—விரும்பி சபதம் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவன். நமக்கெதிர் செய்யும்—நம் சந்நதி முன்பாகச் செய்யும் கொங்கு—மணம் வீசும்.

சங்கிலியார் மகிழ்ந்து வணங்கியது

மற்றவருங் கைகுவித்து ''மாலயனுக் கறிவரியீர்!
அற்றம் எனக் கருள்புரிந்த அதனில் அடியேனாகப்
பெற்றதுயான்'' எனக்கண்கள் பெருந்தாரை பொழிந்திழிய
வெற்றிமழ விடையார்தஞ் சேவடிக்கீழ்
வீழ்ந்தெழுந்தார் 591

வி.ரை :- இறைவன் சொன்ன குறிப்பை அறிந்த சங்கிலியார் கைகுவித்து வணங்கி, ''மாலும் அயனும் அறிந்தறிவதற்கு அரிதாக இருப்பவரே! உண்மையை எனக்கு உரைத்தருளி அருள் புரிந்த தன்மையினால் நான் அடியேனாகப் பெற்றதன் பயன் என்று கண்கள் தாரை தாரையாகப் பொழிய, வெற்றியைத் தரும் இளம் காளையை வாகனமாக உடையவரது சிவந்த பாதங்களில் வீழ்ந்தெழுந்தார்.

அ.ரை :—அற்றம்—உண்மை, இரகசியம். அடியேனாக—வழிவழி அடிமை செய்ததன் பயனாக.

சேடியரை எழுப்பியது

மைதயலார் தமக்கருளிச் சடாமகுடர் எழுந்தருள
எய்தியபோ ததிசயத்தால் உணர்ந்தெழுந்தவ் விரவின்கண்
செய்ய சடையார் அருளின் திறம்நினைந்தே கண்துயிலார்
ஐயமுடன் அருகுதுயில் சேடியரை அணைந்தெழுப்பி 592.

வி.ரை:- சங்கிலியாருக்கு அருளிச் செய்த சடாமகுடர் சிவபெருமான் மறைந்தருள, அடைந்த பேரதிசத்தால் உணர்ந்து எழுந்து அந்த இரவில் சிவந்த சடையாரது அருளின் திறம் நினைந்தே கண்கள் தூக்கம் கொள்ளாமல், ஐயம் கொண்டு அருகில் துயில் கொண்டிருக்கும் சேடியரை எழுப்பினார்.

பாங்கியர் சங்கிலியரை வணங்கியது

நீங்குதுயில் பாங்கியர்க்கு நீங்கள்எழுத் தறியும் அவர்
தாங்கனவில் எழுந்தருளித் தமக்கருளிச் செய்ததெலாம்
பாங்கறிய மொழிய அவர் பயத்தினுடன் அதிசயமும்
தாங்குமகிழ்ச் சியும் எய்தச் சங்கிலியார் தமைப் பணிந்தார் 593

வி.ரை :- "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுத்தறியும் பெருமான் தமது கனவில் எழுந்தருளித் தமக்கு அருளிச் செய்ததெலாம், தூங்கிக் கொண்டிருந்த தோழியரை எழுப்பி அவர்களுக்குப் பாங்காகக்கூற,

அவ்வேவல் மகளிர் பயபக்தியுடன் அதிசயமும்தாங்கும் மகிழ்வும் எய்தச் சங்கிலியாரைத் தொழுதனர்.

அ.ரை:- நீங்கள் எழுத்தறியும்— திருவொற்றியூர் நீங்கலாக என்ற எழுத்தறியும். பாங்கு—முறைமை.

சபதம் செய்யக் காத்திருந்தது

சேயிழையார் திருப்பள்ளி எழுச்சிக்கு மலர்தொடுக்கும்
தூயபணிப் பொழுதாகத் தொழில் புரிவார் உடன்போதக்
கோயிலின் முன் காலமது வாகவே குறித்தணைந்தார்.
ஆயசபதஞ்செய்ய வரவுபார்த் தாரூரர். 594

வி.ரை :- சேடியார் திருப்பள்ளி எழுச்சிக்குமாலை தொடுக்கும் புனிதப் பொழுது நெருங்க வேலைகளைச் செய்திடச் சென்றபோது கோயிலின் முன் இதுதான் தகுந்த காலம் என்று குறித்துச் சபதம் செய்யச் சங்கிலியாரின் வரவை எதிர்பார்த்து ஆரூரர் காத்துக்கிடந்தார்.

சங்கிலியார் கோயிலினுட் புகுந்தது

நின்றவர் அங்கெதிர் வந்த நேரிழையார் தம்மருங்கு
சென்றணைந்து தம்பெருமாள் திருவருளின் திறங்கூற
மின்தயங்கு நுண்ணிடையார் விதியுடன் பட்டெதிர் விளம்பார்
ஒன்றியநா ணொடும் மடவா ருடன் ஒதுங்கி உட் புகுந்தார். 595

வி.ரை :- கோயில் வாசலில் காத்துக்கிடந்த ஆரூரர் சங்கிலியார் தம் தோழியருடன் வரக்கண்டு எதிர் கொண்டு அவர்கள் பக்கம் சென்று தமது இறைவன் அருளிய திறம் கூற, மின்னொளி வீசும் இடையுடைய

சேடியர் விதிக்கு உடன்பட்டு யாதும் சொல்லாது சேர்ந்த நாணத்தோடு கோயிலுனுட் புகுந்தார்கள்.

''திங்கள் முடியார் திருமுன் போதுவீர்'' என்றது

அங்கவர்தம் பின் சென்ற ஆரூரர் ''அயிழையீர்!
இங்குநான் பிரியாமை உமக்கிசையும் படி இயம்பத்
திங்கள்முடி யார்திருமுன் போதுவீர்'' எனச்செப்பச்
சங்கிலியார் கனவுரைப்பக் கேட்டதா
தியர்மொழிவார். 596

வி ரை. :- பெண்களைத் தொடர்ந்து சென்ற ஆரூரர். ஆயிழையீர்! உங்களைப்பிரியாது இங்கு நான்! உங்களுடன் உமக்கிசையும்படி சபதம் எடுப்பதற்குத் திங்கள் முடியார் சந்நதிமுன் போங்கள்'' என்று சொல்லச் செடியார் சங்கிலியார் கனவில் ஈசன் சொன்னதைத் தாதியர் சொன்னார்கள்.

'நான் சபதம் செய்வது எங்கு?' என்றது

''எம்பெருமான்! இதற்காக எழுந்தருளி, இமையவர்கள்
தம்பெருமான் திருமுன்பு சாற்றுவது தகா'' தென்ன
நம்பெருமான் வன் தொண்டர் நாதர் செயல் அறியாதே
கொம்பனையீர்! யான் செய்வதெங்?'' கென்று
கூறுதலும் 597

வி.ரை :- சேடியர்கள் நம்பி ஆரூரைப் பார்த்து எம்பெருமானே! சபதம் செய்வதற்காகத் தாங்கள் எழுந்தருளி இமையவர்களது பெருமானின் திருமுன்பு சபதம் மேற்பது தகாது என்று கூற, வன்தொண்டர் இறைவன் சங்கிலியாருக்கு அறிவித்ததை அறியாது, ''கொம்பனையீர்! நான் சபதம் செய்வது எங்கு?'' என்று கூறினார்.

"மகிழ மரத்திடியில்" என்றது

மாதரவர் "மகிழ்க்கீழே அமையும்" என மனமருள்வார்
"ஈதலர்ஆ கிலும் ஆகும் இவர் சொன்ன படிமறுக்கில்
ஆதலினால் உடன்படவே அமையும்" எனத்துணிந்"தாகில்
போதுவீர்" என மகிழ்க்கீழ் அவர்போதப் போய்
அணைந்தார். 598

வி.ரை :— அதற்கு மகளிர் "மகிழமரத்தினடியில் செய்யலாம்" என்று கூற நம்பி ஆரூரர் மன மயக்க மடைந்து "இவர்கள் சொன்ன சொற்படி நடக்காமல் மறுத்தால் சங்கிலியாரைக் கொடுக்காமலும் ஆகிவிடும். ஆதலின் சொற்படி உடன் படுவதாலேயே அமையும்" என்று துணிந்து "அப்படியானால் போங்கள்" என்று சங்கிலியாருடன் சேடியார் போக நம்பியும் போனார்.

"மேவ திங்கியான் அகலேன்" என்றது.

தாவாத பெருந்தவத்துச் சங்கிலியா ருங்காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
"மேவாதிங் கியான் அகலேன்" என நின்று விளம்பினார்
பூவார்தண் புனற்பொய்கை முனைப்பாடிப்
புரவலனார் 599

வி.ரை:—மாறுபடாத பெரியதவத்தில் நின்ற சங்கிலி யாரும் காணும்படி மூப்படையாத திருமகிழ மரத்தை மூன்று முறை வலம் வந்து "இங்கு தங்கி பிருக்காமல் நான் எங்கும் செல்ல மாட்டேன்" என்று மலர் நிறைந்த குளிர்ந்த நீர் நிலைகள் நிறைந்த திருமுனைப்பாடிப் புரவலனார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

அ.ரை :—தாவாத—மறுபடாத கெடாத. மூவாத—முதுமையடையாத இளமையுள்ள.

சங்கிலியார் கண்டு மனங்கலங்கியது

மேவியசீர் ஆரூரர் மெய்ச்சபத வினைமுடிப்பக்
காவியினேர் கண்ணாருங் கண்டுமிக மனங்கலங்கி
"பாவியேன் இதுகண்டேன் தம்பிரான் பணியால்" என்
றாவிசோர்ந் தழிவார் அங்கொரு மருங்கு
மறைந்தயர்ந்தார் 600

வி.ரை :—பெருஞ்சிறப்புடைய ஆரூரர் தன்கண் முன்னாலேயே உண்மையான சபதம் செய்து முடிக்கக் கருங்குவளை மலர்போன்ற கண்களையுடைய சங்கிலியாரும் மனங்கலங்கி, பாவியாகிய நான் இறைவனின் ஆணையினால் இதைக் காண நேர்ந்ததே என்று மனம் சோர்ந்து அழிந்து ஆங்கொருபக்கம் சென்றுமறைந்தார்.

நம்பி ஆரூரர் கோயிலினுட்சென்று வணங்கியது

திருநாவ லூராளி தம்முடைய செயல்முற்றிப்
பொருநாகத் துரிபுனைந்தார் கோயிலினுட் புகுந்திறைஞ்சி
"அருள் நாளுந் தர இருந்தீர் செய்தவா றழகி" தெனப்
பெருநாமம் எடுத்தேத்திப் பெருமகிழ்ச்சியுடன்
போந்தார். 601

வி.ரை :—திருநாவலூர் சுந்தரர் தம்முடைய செயல் முடிந்து போரிடும் யானையின் தோலை உரித்து உடுத்திய இறைவன் கோயிலினுட் புகுந்து வணங்கி, நாளும் அருள்தர இருந்தீர் செய்தவாறழகிது" என்று இறைவனது பெருஞ்சிறப்புக்களை எடுத்துப் போற்றிப் பெருமகிழ்ச்சியுடன் சென்றார்.

அ.ரை :— அருள் நாளுந்தர இருந்நீர் செய்தவாறழகிது—நாள்தோறும் வேண்டியதெல்லாம் கொடுத்தீர், அவை எல்லாவற்றிலும் இது சிறந்தது.

சங்கிலியாரும் மடம் சேர்ந்தது

வார்புனையும் வனமுலையார் வன்தொண்டர் போனதற்பின்
தார்புனையுக் மண்டபத்துத் தம்முடைய பணிசெய்து
கார்புனையும் மணிகண்டர் செயல் கருத்திற்
கொண்டிறைஞ்சி
ஏர்புனையுங் கன்னிமா டம்புகுந்தார் இருள்புலர 602

வி.ரை :— கச்சணிந்து ஏந்திய வனமுலையார் சங்கிலியாரும் வன்தொண்டர் போனபின்பு, 'மாலை தொடுக்கும் மண்டபத்துள் சென்று தம்முடைய வேலைகளை முடித்துக் கோண்டு திருநீலகண்டரது செயல் இத்தகை தெனக்கருத்தில் கொண்டு வணங்கி அழகு சூழ்ந்த கன்னிமாடம் அன்றிரவு சென்றடைந்தார்.

அன்றிரவே ஆதிபுரி ஒற்றி கொண்டார் ஆட்கொண்ட
பொன் திகழ்பூண் வன்தொண்டர் புரிந்தவினை முடித்தருள
நின்றபுகழ்ந் திருஒற்றி யூர்நிலவு தொண்டர்க்கு
மன்றல் வினை செய்வதற்கு மனங்கொள்ள
உணர்த்துவார் 603

வி.ரை :- அன்று இரவு பழம் பேருராகிய திருஒற்றியூரில் அமர்ந்தருளிய ஈசன் தாம் ஆட்கொண்ட அழகிய பொன்பொதிந்த அணிகலன்களையுடைய வன்தொண்டர் விரும்பியபடி மன்றல் வினை முடித்தருளப் புகழ்மிக்கத் திருஒற்றியூர்த் தொண்டர்கட்கு மனங்கொள்ளுமாறு உரைத்தருளினார்.

அ.ரை :- ஆதிபுரி— பழம்பேருர். புரிந்தவினை— விரும்பிய மணவினை, மன்றல் வினை—கலியாணம்.

மணம் முடிக்கக் கூறியது

நம்பியா ரூரனுக்கு நங்கைசங் கிலிதன்னை
இம்பர்ஞா லத்திடைநம் ஏவலினால் மணவினை செய்
தும்பர்வா முலகறிய அளிப்பீர்'' என் றுணர்த்துதலும்
தம்பிரான் திருத்தொண்டர் அருள் தலைமேற்
கொண்டெழுவார் 604

வி.ரை :- ஈசன் ஒற்றியூர்த் தொண்டர்களது கனவில் தோன்றி ''நம்பியாரூரனுக்கு நங்கைசங்கிலியை இம்மானிட உலகத்தினில் நமது ஆணையின்படி தேவர் உலகில் உள்ளவர்கள் அறியும்படி கொடுப்பீர்'' என்று உணர்த்தக் கேட்ட திருத்தொண்டர்கள் இறைவன் ஆணையைத் தலைமேல் கொண்டனர்.

சங்கிலியாரைக் கலியாணம் செய்தளித்தது

மண்ணிறைந்த பெருஞ்செல்வத் திருஒற்றியூர் மன்னும்
எண்ணிறைந்த திருத்தொண்டர் எழிற்பதியோருடன்
ஈண்டி
உள்நிறைந்த மகிழ்ச்சியுடன் உம்பர்பூ மழை பொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கலியாணஞ்
செய்தளித்தார். 605

வி.ரை :- இவ்வுலகில் நிறைந்த பெருஞ் செல்வமுடைய திருஒற்றியூரில் வாழும் எண்ணற்ற திருத்தொண்டர்களும் அழகிய அவ்வூர் வாழ் மக்களுடன் ஒன்று சேர்ந்து கூடி உள்ளம் மகிழ்ச்சியால் நிறைவு பெறத் தேவர்கள் மலர் மழை பொழியக் கண்கள் நிறைந்து காணும்பெருஞ்சிறப்பினால் திருமணம்செய்து சங்கிலியாரை வன்தொண்டருக்களித்தனர்.

சங்கிலியாரிடம் இன்பம் துய்த்தது

பண்டுநிகழ் பான்மையினாற் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால். 606

வி.ரை :- ஆதியில் திருக்கயிலையில் நிகழ்ந்த தன்மையினாலும் இறைவன் திருவருளினாலும், வண்டு வந்து மொய்க்கும் மலர்க் கூந்தலாரை மணம்செய்து கொண்ட வன்தொண்டர் தாமரையில் அமர்ந்த திருமகளின் அழகையும் புறங்கண்ட பேரழகுடைய தூய நலத்தவராகிய சங்கிலியாரைக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்களாலும் அனுபவித்து மகிழ்ந்திருந்தார். திருக்குறள் 1101 காண்க.

புணர்ச்சியில் இடைவெளி

யாழின்மொழி எழில்முறுவல் இருகுழைமேற் கடை பிறழும்
மாழைவிழி வனமுலையார் மணியல்குல் துறைபடிந்து
வீழுமவர்க் கிடைதோன்றி மிகும்புலவி புணர்ச்சிக் கண்
ஊழியாம் ஒருகணந்தான் அவ்வூழி ஒருகணமாம். 607

வி.ரை : யாழின் இசை போன்ற மொழியாள் முத்துப்பற்கள், மின்ன இருகாதுகளின் கடைக்கண் பிறழும் மாவடு போன்ற அழகிய நீண்டகன்ற கண்களையுடைய ஏந்தின வனமுலையாள் சங்கிலியாரின் மணிகள் பதித்த ஆபரணம் பூண்ட அழகிய அல்குலில் தோய்ந்து கிடந்துவிழும் அவர்க்கு புலவியும் புணர்ச்சியும் இடையிடையே தோன்றிப் புணர்ச்சியில் ஒரு ஊழியும், புலவியில் ஒரு ஊழியுமாக இன்பம் துய்த்தனர். புணர்தலுக்கும் நீங்குதலுக்கும் இடையேயுள்ள கால அளவு ஒரு ஊழி அதுவே புணரும்போது ஒருகணம் எனக் கண்டனர்.

அ.ரை :- முறுவல்—பல், முத்துப்பல். இருகுழை—காது, காதணி. கடை—கடைக்கண். மாழை—மாவடு போன்ற, அழகிய, குளிர்த்த, நீண்டகன்ற. படிந்து—தோய்ந்துகிடந்து. புலவி—ஊடல், கணம்—நொடிப் பொழுது.

இந்நிலையிற் பேரின்பம் இனிதமர்வார் இறையுறையும்
மன்னுபுகழ் ஒற்றியூ ரதனில் மகிழ் சிறப்பினால்
சென்னுமதி புனைவார்தந் திருப்பாதந் தொழுதிருந்தார்
முன்னியகா லங்கள்பல முறைமையினால் வந்தகல. 608

வி.ரை : இவ்வாறு நீண்ட பலகாலம் சங்கிலியாரைப் புணர்ந்து புணர்ந்து இன்பம் அனுபவித்து இனிதாக இறைவன் எழுந்தருளிய புகழ்மிக்க ஒற்றியூரில் நிலவைத் தலையில் அணிந்தவரது திருத்தாழ்களைத் தொழுது தங்கிருந்தார்.

அ.ரை:- அமர்வார்—விரும்பி அனுபவித்திருப்பார். மன்னு புகழ் — நிலைபெற்ற புகழ். முன்னிய — தோன்றிய.

திருவாரூர் வசந்த விழாவை நினைந்தது

பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்தபூஞ் சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சார விடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூர் அணிவீதி அழகரவர்
மங்கலநாள் வசந்தம் எதிர்கொண் டருளும் வகை
நினைந்தார். 609

வி.ரை :- தமிழ்மொழி பொங்கி வழியும் பொதிய மலையில் தோன்றி மலர் மணமும் சந்தனத்தின் நறுமணத்தையும் சுமந்துவந்து அசைந்து வளர்ந்த தென்றல் ஒற்றியூரை வந்துசேரத் திருவாரூரில் அழகிய

வீதிவிடங்கப் பெருமானுடைய வசந்தவிழா நெருங்கியது என்பதை நினைவு கூர்ந்தார்.

அ.ரை :- விடை வளர்ந்த—அசைந்து வந்த. வீதி அழகர்—வீதிவிடங்கப் பெருமான்.

பரவையாரின் நினைவு தோன்றியது

வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங் கப்பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த ஓலக்கம் அதனிடையே
பண்ணமரும் மொழிப்பரவை யார்பாடல் ஆடல்தனைக்
கண்ணுறமுன் கண்டுகேட் டார்போலக் கருதினார். 610

வி.ரை : வெண்மையான மூன்றாம் பிறை நிலவை அணிந்த வீதிவிடங்கப் பெருமானின் அழகிய நெற்றியையுடைய தோழியர் புடைசூழ ஓலக்க மண்டபத்தில் இசைநிறைந்த மொழிபேசும் பரவையார் பாடுவதும், ஆடுவதும் தமது கண் முன்னால் காண்பது போன்றும் கேட்பதுபோன்றும் உணரலானார்.

அ.ரை :- ஒண்நுதல்—அழகான நெற்றி. ஓலக்கம்—வீதி விடங்கப் பெருமான் கொலு மண்டபம்.

புற்றிடங் கொண்டாரை நினைந்தழிந்தது

பூங்கோயில் அமர்ந்தாரைப் புற்றிடங்கொண் டிருந்தாரை
நீங்காத கதலினால் நினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாம்முன்பு பணியவரும் பயன்உணர்வார்
"ஈங்குநான் மறந்தேன்" என் றேசறவால் மிகஅழிவார்.
611

வி.ரை :- கமலாலயத்தில் அமர்ந்த பிரானை, புற்றிடங் கொண்டவரை நீங்காத அன்பினால் நினைந்து நினைந்து, முன்பு தாம் பணிந்திருந்த சிறப்பின் பயனை

உணர்ந்தவராய், "இங்கு சங்கிலியரிடமிருந்துகொண்டு உன்னை மறந்தேன்" என்று வருத்தத்தால் நொந்து கிடந்தார்.

அ.ரை :- பூங்கோயில் — கமலாலயம், ஏசறவு— வருத்தம்.

பதிகம் பாடியது

மின்னொளிச்செஞ் சடையானை வேதமுதல் ஆனானை
மன்னுபுகழ்த் திருவாரூர் மகிழ்ந்தானை மிகநினைந்து
பன்னிய சொற் "பத்திமையும் அடிமையையும் கைவிடு
வான்"
என்னும் இசைத் திருப்பதிகம் எடுத்தியம்பி இரங்கினார். 612

வி.ரை :- வேத முதல்வனை ஒளிவீசும் சிவந்த சடையப்பனை நிலையான புகழையுடைய திருவாரூரில் மகிழ்ந்தமர்ந்த ஈசனை வெகுவாக நினைந்து பலவகையான செந்தமிழ்ச் சொற்களால் "பத்திமையும் அடிமையையும் கைவிடுவான்" என்று அடியெடுத்து இசையுடனமைந்த திருப்பதிகம் பாடினார்.

அ.ரை :- பன்னிய சொல் — பலவகையான சொற்கள்.

ஒற்றிநகர் அகலக் கண் இழந்தது

பின்னொருநாள் திருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி
உன்னஇனி யார்கோயில் புகுந்திறைஞ்சி ஒற்றிநகர்
தன்னைஅக லப்புக்கார் தாஞ்செய்த சபதத்தால்
முன்னடிகள் தோன்றாது கண்மறைய மூர்ச்சித்தார். 613

வி.ரை :- அடுத்தநாள் திருவாரூர் இறைவனை மிகவும் அதிகமாக நினைந்து அங்கு செல்ல ஒற்றியூர் ஈசன் கோயிலினுட் புகுந்து வணங்கித் திருவொற்றியூர் எல்லையைக் கடந்து கால் வைத்ததும் முன்பு மகிழ மரத்தடியில் செய்த சபதத்தினால் எடுத்த அடுத்த அடி காணமுடியாமல் கண் மறைந்து போக மயங்கி விழுந்தார்.

''கண்ணிழந்த துயர்நீங்கப் பாடுவேன்'' என்றது

செய்வதனை அறியாது திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
''மைவிரவு கண்ணார்பால் சூளுறவு மறுத்ததனால்
இவ்வினைவந் தெய்தியதாம்'' என நினைந் ''தெம்
பெருமானை
எய்தியஇத் துயர்நீங்கப் பாடுவேன்'' என நினைந்து 614

வி.ரை :- என்ன செய்வதென்றறியாதவராய்ப் பெருமூச்சுவிட்டு ''மைதீட்டிய கண்ணினாள் சங்கிலியாருக்குத் தாம் செய்துகொடுத்த சபதத்தை மறுத்ததனால் கண்ணிழக்க நேர்ந்தது'' என்று நினைந்து ''எம்பெருமானை அடைந்து இந்தத் துன்பம் நீங்கப் பாடுபடுவேன்'' என்று சிந்திக்கலானார்.

அ.ரை :- மைவிரவு கண்ணார் — சங்கிலியார். சூளுறவு—சூளுரை, சபதம்.

திருவொற்றியூரீசன்மீது பதிகம் பாடியது

''அழுக்கு மெய்கொ'' டென் றெடுத்த சொற் பதிகம் ஆதி
நீள்புரி அண்ணலை ஓதி,
வழுத்து நெஞ்சொடு தாழ்ந்துநின் றுரைப்பார் மாதொர்
பாகனார் மலர்ப்பதம் உன்னி,

''இழுக்கு நீக்கிட வேண்டும்'' என் றிரந்தே எய்து
வெந்துயர்க் கையற வினுக்கும்
பழிக்கும் வெள்கிநல் லிசைகொடு பரவிப் பணிந்து சாலவும்
பலபல நினைவார் 915

வி.ரை :- நீண்ட முப்புரிநூலை மார்பில் அணிந்த அண்ணல் ஆதியை ஒற்றியூருறையீசனை உமையம்மையைத் தமது ஒரு பாகமாக உடையவரது திருப்பாதங்களை மனத்துள் பதித்து ''அழுக்கு மெய்கொடுன் திருவடி'' என்று அடியெடுத்துத் தமிழ்ச் சொற்களால் அமைந்த பதிகம் ஓதி வாழ்த்தி மனம் நொந்து வீழ்ந்து ''இழுக்கு நீக்கிட வேண்டும்'' என்று நின்று வேண்டி அடைந்த கொடியதான செயலற்ற தன்மைக்கும் பழிச் சொல்லுக்கும், வெட்கி நல்இசையோடு போற்றிப் பணிந்து மிகுதியாகவும் பலபல நினைப்பார் உரைப்பாராயினர்.

அ.ரை ,- புரி அண்ணல் — அந்தணனாக பூணூல் அணிந்து அன்று ஆட்கொண்ட சிவபெருமான். வழுத்து —வாழ்த்து. உன்னி — நினைந்து. கையறவினுக்கு— செயலற்ற தன்மைக்கு. வெள்கி—வெட்கப்பட்டு. இசை கொடு—இசைகொண்டு.

திருமுல்லை வாயில்

அங்கு நாதர்செய் யருளது வாக அங்கைகூப்பிஆ ரூர்தொழ
நினைந்தே
பொங்கு காதல்மீ ளாநிலை மையினாற் போது வார்வழி
காட்டமுன் போந்து,
திங்கள் வேணியார் திருமுல்லை வாயில் சென்றி றைஞ்சிநீ
டியதிருப் பதிகம்,
''சங்கி லிக்காக என்கணை மறைத்தீர்'' என்று சாற்றிய
தன்மையிற் பாடி. 616

வி.ரை :- ஒற்றியூராரைப் போற்றியும் கண்களை மீண்டும் பெறாமையால் இறைவன் செயல் இதுவே யானால் என் செய்வது என இரு கைகளையும் கூப்பி வணங்கித் திருவாரூரில் அமர்ந்த நாதனைத் தொழுதற்கு நினைந்து உடன்வந்தோர் வழிநடத்திச் செல்ல, நீங்காத பொங்கும் அன்பில் புறப்பட்டு நிலவைச் சூடிய சிவனாரின், திருமுல்லை வாயிலைச் சென்றடைந்து வணங்கிச் "சங்கிலிக்காக என்கண் கொண்ட பண்ப!" என்று பதிகம் பாடிச் சாத்தினார்.

திருவெண்பாக்கம்

தொண்டை மானுக்கன் றருள்கொடுத் தருளுந் தொல்லை
வண்புகழ் முல்லைநா யகரைக்
கொண்ட வெந்துயர் களை"கெனப் பரவிக் குறித்த
காதலின் நெறிக்கொள வருவார்,
வண்டு லாமலர்ச் சோலைகள் சூழ்ந்து மாட மாளிகை
நீடுவெண் பாக்கம்,
கண்டதொண் டர்கள் எதிர்கொள வணங்கிக் காயும்
நாகத்தர் கோயிலை அடைந்தார். 617

வி.ரை :- தொண்டைமானுக்கு அன்று அருள்செய் தருளிய தொன்மையான புகழ்மிக்க திருமுல்லை வாயிலின் நாயகரைப் பரவி "நான் அடைந்த கொடுந் துயரைக் களைந் தெறிவாய்" என்று பாடி நேர்ந்த அன்பின் நெறிவழி நின்று வண்டுகள் மொய்க்கும் மலர்ச் சோலைகளாள் சூழப்பட்ட மாட மாளிகைகள் நிறைந்த திருவெண்பாக்கம் அடைந்தபோது ஆங் கிருந்த தொண்டர்கள் எதர்கொண்டு வந்து வணங்கிச் சினம்கொண்ட பாம்பை அணிந்தவரது திருக்கோயிலை அடைந்தார்.

அ.ரை :- காயும்—சினம் கொண்ட.

ஊன்றுகோல் பெற்றது

அணைந்த தொண்டர்கள் உடன் வலமாக அங்கண்
நாயகர் கோயில் முன்எய்திக்,
குணங்கள் ஏத்தியே பரவிஅஞ் சலியாற் குவித்த கைதலை
மேற்கொண்டு நின்று,
வணங்கி ''நீர்மகிழ் கோயி லுளீரே'' என்ற வண்
தொண்டர்க் கூன்றுகோல் அருளி,
இணங்கி லாமொழியால் ''உளோம் போகீர்'' என்றி
யம்பினர் ஏதிலார் போல. 618

வி.ரை :- எதிர்கொண்டழைக்க வந்த சிவனடியார்கள் உடன்வர, அழகிய கண்ணனார் திருக்கோயிலை வலம் வந்து சந்நதிமுன் சென்றடைந்து கைகளைத் தலைமேல்குவித்துக் கும்பிட்டுப் போற்றிப் பாடி நின்று வணங்கித் ''திருக்கோயிலில் நீர் மகிழ்ந்துள்ளீரா?'' என்று கேட்டவருக்கு இறைவன் ஒரு ஊன்றுகோலை அருளி இணக்கம் சொற்களால் ''உளோம் போகீர்'' என்று அந்நியர் போலக் கூறினார்.

அ.ரை :- இணங்கிலாமொழி — இணக்கமில்லாத சொல். பற்றற்ற சொல். ஏதிலார்—அந்நியர், யாருமில்லாதவர்.

பதிகம் பாடி முறையிட்டது

''பிழையுளன பொறுத்திடுவீர் என்றெடுத்துப் பெண்பாகம்
விழைவடிவிற் பெருமானை வெண்பாக்கம் மகிழ்ந்தானை
இழை எனமா சுணம் அணிந்த இறையானைப் பாடினார்
மழைதவழும் நெடும்புரிசை நாவலூர் மன்னவனார். 619

வி.ரை :- மேகங்கள் தவழும் உயர்ந்த மதில்களை யுடைய நாவலூர் மன்னர் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தான் விரும்பிய வடிவில் பெண்ணை ஒரு பாகமாக உடையவனை, திருவெண்பாக்கத்தில் மகிழ்ந்தமர்ந்த வனை, ஆபரணம் எனப் பெரும்பாம்பினை அணிந்த இறைவவனைப் ''பிழையுளன பொறுத்திடுவீர்'' என்று அடியெடுத்துப் பாடினார்.

அ.ரை :- இழை — இழைக்கப்பட்ட, ஆபரணம். மாசுணம்—பாம்பு. புரிசை—மதில் வரிசை.

பயணம் தொடர்ந்தது

முன் நின்று முறைப்பாடு போல்மொழிந்த மொழிமாலைப்
பன்னும் இசைத் திருப்பதிகம் பாடியபின் ''பற்றாய
என்னுடைய பிரான் அருளிங் கித்தனைகொ லாம்'' என்று
மன்னுபெருந் தொண்டருடன் வணங்கியே வழிக்கொள்வார் 620

வி.ரை :- இறைவன் சந்நதிமுன் நின்று முறை யிடுவது போன்று பதிகத் தமிழ்மாலை பொருந்திய இசையுடன் பாடிய பின்பு, ''பற்றாய என்னுடைய பிரான் அருள் இங்கு இதுகொலாம்'' என்று சூழ இருந்த தொண்டருடன் வணங்கி வழி நடந்தார்.

திரு பழையனூர்

அங்கணர்தம் பதிஅதனை அகன்றுபோய் அன்பருடன்
பங்கயபூந் தடம்பணைசூழ் பழையனூர் உழைஎய்தித்
தங்குவார் அம்மை திருத் தலையாலே வலங்கொள்ளும்
திங்கள்முடி யார்ஆடுந் திருவாலங் காட்டின் அயல். 621

வி.ரை :- அழகிய நெற்றிக்கண்ணனாரது திருப்பதி யாகிய திருவெண்பாக்கத்தை விடுத்து, அடியார்

களுடன் செந்தாமரை பூத்த வயல்களால் சூழப்பட்ட பழையனூர்ப் பக்கம் சென்றடைந்து தங்கிக் காரைக்காலம்மையார் தலையால் வலம்வந்து வணங்கிய நிலவை முடியில் அணிந்தவர் ஆடும் திருவாலங்காட்டின் அருகில் சென்றார்.

காஞ்சி சென்றடைந்தது

முன்நின்று தொழுதேத்தி "முத்தா" என் றெடுத்தருளிப்
பன்னும் இசைத் திருப்பதிகம் பாடிமகிழ்ந் தேத்துவார்
அந்நின்று வணங்கிப் போய்த் திருவூறல் அமர்ந்திறைஞ்சிக்
கன்னிமதில் மணிமாடக் காஞ்சிமா நகர் அணைந்தார். 622

வி.ரை :- திருவாலங்காட்டை நோக்கி நின்று தொழுதுபோற்றி "முத்தா முத்தி தரவல்ல" என்று எடுத்துப் பாடியருளிப் பாடும் இசையில் திருப்பதிகம் பாடி மகிழ்ந்து போற்றி அங்கிருந்து வணங்கித் திரு ஊறல் சென்று அங்கு தங்கி வணங்கிப் புதுமை நீங்காத மதிலும் அழகிய மா ங்களையுடைய திருக்காஞ்சி நகர் சென்றடைந்தார்.

காமக் கோட்டத்தில் வழிபாடு

தேனிலவு பொழிற்கச்சித் திருக்காமக் கோட்டத்தில்
ஊனில்வளர் உயிர்க்கெல்லாம் ஒழியாத கருணையினால்
ஆனதிரு அறம்புரக்கும் அம்மைதிருக் கோயிலின்முன்
வானில்வளர் திருவாயில் வணங்கினார் வன்தொண்டர்
623

வி.ரை :- திருக்காஞ்தி சென்றடைந்த வன்தொண்டர் தேனிலவு பொழியும் திருக்கச்சியிலமைந்த திருக் காமக் கோட்டத்தில் உடலைத் தாங்கிய உயிரினங்கட் கெல்லாம் நீங்காத கருணையினால் அமைந்த திரு

அறம் காத்தருளும் அம்மை காமாட்சியம்மையின் திருக்கோயிலின் முன் வானளாவிய திருவாயிலை வணங்கினார்.

திரு ஏகம்பம் தொழுதது

தொழுதுவிழுந் தெழுந்தருளால் துதித்துப் போய்த்
தொல்லு லகம்
முழுதும் அளித் தழித்தாக்கும் முதல்வர்திரு ஏகம்பம்
பழுதில் அடியார்முன்பு புகப்புக்குப் பணிகின்றார்
''இழுதையேன் திருமுன்பே என்மொழிவேன்''
என்றிறைஞ்சி. 624

வி.ரை :- காஞ்சி காமாட்சியம்மையைத் தொழுது விழுந்தெழுந்து அருளினால் துதித்துப் பழைய உலகமனைத்தையும் அளித்து அழித்துப் படைக்கும் முதல்வராகிய திரு ஏகம்பநாதனைக் குற்றமற்ற அடியார்கள் முன்புகுந்திடப் புகுந்து பணிந்து, ''திரு முன்பு பேயேனாகிய நான் என்ன கூற இயலும்'' என்று வருந்திப் பாடினார்.

அ ரை :- இழுதை—பேய். அளித்தல்—காத்தல்.

''கண்ணளித்தருளாய்'' எனக்கதறியது

''விண்ணாள்வார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணாளா! கச்சிஏ கம்பனே! கடையானேன்
எண்ணாத பிழை பொறுத்திங் கியான்காண எழிற்பவள
வண்ணா! கண் ணளித்தருளாய்'' என வீழ்ந்து
வணங்கினார் 625

வி.ரை :- ''எழில் பொங்கும் பவளநிறங் கொண்டவனே! தேவர்கள் அமுதம் உண்டு உய்ந்திட மிகப் பெரிய நஞ்சை உண்ட என் கண் போன்றவனே! கச்சி

ஏகம்ப ஈசுவரனே! கடையனாகிய நான் எண்ணிப் பார்க்கஇயலாதுசெய்த பிழை பொறுத்தருள்வாய்'' என வீழ்ந்து வணங்கினார்.

அ.ரை :- விண்ணாள்வார் — தேவர்கள். எழிற் பவளவண்ணா — பவளம் போன்ற அழகிய சிவ பெருமான்.

இடக்கண் பெற்றது

பங்கயச்செங் கைத்தளிரால் பனிமலர் கொண்டருச்சித்துச்
செங்கயற்கண் மலைவல்லி பணிந்தசே வடிநினைந்து
பொங்கிய அன் பொடுபரவிப் போற்றியஆ ரூரருக்கு
மங்கைதழு வக்குழைந்தார் மற்றைந்தஇடக்
கண்கொடுத்தார். 626

வி.ரை :- சொந்தாமரை போன்ற சிவந்த மென்தளிர் போன்ற விரல்களில் குளிர்ந்த மலர்களை எடுத்து அர்ச் சனை செய்து, சிவந்த கயல் விழியாள் மலையவன் மகள் வல்லிக் கொடி போன்ற பார்பதி தேவியார் பணிந்து போற்றும் இறைவனது சிவந்த திருத்தாள் களைப் பொங்கி எழுந்த அன்பினுடன் பணிந்து போற்றிய ஆரூரர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு உமை யம்மை தழுவக் குழைந்த சிவபெருமான் இடது பக்கக் கண்ணை மட்டும் கொடுத்தருளினார்.

பதிகம்பாடி ஆடி மகிழ்ந்தது

ஞாலந்தான் இடந்தவனும் ளிர் விசும்பு கடந்தவனும்
மூலந்தான் அறிவரியார் கண்ணளித்து முலைச்சுவட்டுக்
கோலந்தான் காட்டுதனுங் குறுகிவிழுந் தெழுந்துகளித்
''தாலந்தான் உகந்தவன்'' என் றெடுத்தாடிப்
பாடினார் 627

வி.ரை :- இவ்வுலகையெல்லாம் படைத்த பிரமனும், வானைத்தாவி அளந்த திரிவிக்கிரமனும் இவையாவற்றிற்கும் மூலநாயகனான சிவபெருமானை அறிதற்கு இயலாதவர் கண்ணைத் திருப்பிக் கொடுத்துத் தமது முலைச் சுவட்டுக் கோலம் காட்ட அடியற்றமரம் போல் விழுந்தெழுந்து களிப்பின் மிகுதியால் ஆலந்தான் உகந்தமுது செய்தானை'' என்று அடியெடுத்துப் பாடினார்.

அ.ரை :- ஞாலம் கிடந்தவன் — பிரமன் நளிர் விசும்புகடந்தவன் — திருமால் வாமனனாக. முலைச் சுவட்டுக்கோலம் — சிவபெருமாள் திருக்கோலத்தொன்று. பார்விதி யாரின் முலைபதிந்த கோலம்.

காஞ்சியில் சில நாட்கள் தங்கியது

பாடிமிகப் பரவசமாய்ப் பணிவார்க்குப் பாவையுடன்
நீடியகோ லங்காட்ட நிறைந்தவிருப் புடன்இறைஞ்சிச்
சூடிய அஞ் சலியினராய்த் தொழுதுபுறம் போந்தன்பு
கூடிய மெய்த் தொண்டருடன் கும்பிட்டங்
கினிதமர்வார். 628

வி.ரை :- இடது கண் பெற்ற பெருமகிழ்ச்சியில் பதிகம் பாடிப் பரவச மடைந்து பணிந்த வன்தொண்டருக்குத் தனது தேவியார் பார்வதியுடன் அழகிய உயர்ந்த தனது திருக்கோலத்தைக் காட்ட அது கண்ட வன்தொண்டர், மிகுந்த விருப்பமுடன் வேண்டி, அஞ்சலி செலுத்துபவராயத் தொழுதுபுறம் வந்து அன்பு செலுத்தும் உண்மைத் தொண்டருடன் கும்பிட்டு அங்கிருந்தார்.

திருவாரூருக்குப் புறப்பட்டது

மாமலையாள் முலைச்சுவடும் வளைத்ததழும்பும்
அணிந்த மதிப்
பூமலிவார் சடையாரைப் போற்றி அரு ளதுவாகத்
தேமலர்வார் பொழிற்கஞ்சி திருநகரங் கடந்தகல்வார்
பாமலர்மா லைப்பதிகந் திருவாரூர் மேற்பரவி. 629

வி.ரை :- மாமலையாள் பார்வதியின் முலைகள் பதிந்த சுவடும், தழுவி அணைத்தபோது அவளின் வளையல்கள் அழுந்தியதால் எழுந்த தழும்பும், நிலவை அணிந்த மலர் சூடிய சடையப்பரைப் போற்றி: கண் கொடுத்த அருள் அது வாகத் தேன் பொதிந்த மலர்கள் நிறைந்த சோலைகளையுடைய காஞ்சித் திருநகர் கடந்து திருவாரூர் மீது பதிகம் பாடிக்கொண்டு சென்றார்.

அ.ரை :- முலைச்சுவடும், வளைத்தழும்பும்— தேவியைத் தழுவியதால் அவளது முலைகள் பதிந்த சுவடும். அவள் கையணிந்தவளையல்கள் பதிந்ததால் எழுந்த தழும்பும்.

''அந்தியும்நண் பகலும்'' என எடுத்தார்வத் துடன்நசைவால்
''எந்தைபிரான் திருவாரூர் என்றுகொல்எய் துவ''தென்று
சந்தைஇசை பாடிப்போய்த் தாங்கரிய ஆதரவு
வந்தணைய அன்பருடன் மகிழ்ந்துவழிக்
கொள்கின்றார். 630

வி.ரை :- ''அந்தியும் நண்பகலும்'' என்று அடி யெடுத்துப்பாடி ஆர்வம் மிகுதியால்'' எந்தைபிரான் திருவாரூர் என்று கொல் ஏய்துப என்று சந்த இசையில் பாடிச் சென்று ஆர்வம் பொங்க அடியார்களுடன் மகிழ்ந்து பயனம் செய்தார்.

அ-ரை :- நசைவு—ஆசை,மிகுதி, சந்தை—சந்தம் ஆதரவு வந்தணைய—ஆதரவு மிகுதியாக.

திருவாமத்தூர்

மன்னுதிருப் பதிகள்தொறும் வன்னியொடு கூவிளமும்
சென்னிமிசை வைத்துவந்தார் கோயிலின் முன்
சென்றிறைஞ்சிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பரவியே போந்தணைந்தார்
அன்ன மலி வயல்தடங்கள் சூழ்ந்ததிரு ஆமத்தூர். 631

வி.ரை :- வழிநெடுகும் உள்ள சிவாலயங்களில் சென்று தீயையும் வில்வத்தையும் தலைமீது வைத்து மகிழ்ந்தவரது கோயிலின்முன் சென்று வணங்கி அழகிய தமிழால் அமைந்த திருப்பதிக மாலைசாத்தி வணங்கி நெல்வயல்கள் நிறைந்து சூழ்ந்த திருஆமத்தூர் சென்றார்.

அ.ரை :- வன்னி—தீ- கூவிளம்—வில்வம் பன்னு தமிழ்—வளம்மிக்க தமிழ், அழகுதமிழ் அன்னமலி—சோறு மலிந்த, நெல்வயல்.

தொண்டை நாடு கடந்து சோழநாடடைந்தது

அங்கணரை ஆமாத்தூர் அழகர்தமை அடிவணங்கித்
தங்கும் இசைத் திருப்பதிகம் பாடிப் போய்த் தாரணிக்கு
மங்கலமாம் பெருந்தொண்டை வளநாடு கடந்தணைந்தார்
செங்கண்வள வன்பிறந்த சீர்நாடு நீர்நாடு 632

வி.ரை :- அழகிய நெற்றிக் கண்ணனாரை, திருஆமத்தூரில் அமர்ந்தருளிய அழகரை அடிபணிந்து வணங்கித் தேங்கிக் கிடக்கும் இசையில் திருப்பதிகம் பாடிச் சென்று உலகுக்கு மங்கலமாய் அமைந்த பெரிய வளம் மிக்க தொண்டை நாடு கடந்து கோச்செங்கட்

சோழனார் பிறந்த சீர்மிகு நீர்வளமிக்க சோழநாடெய் தினார்.

திருஆரத்துறை

அந்நாட்டின் மருங்குதிரு அரத்துறையைச் சென்றெய்தி
மின்னாரும் படைமழுவார் விரைமலர்த்தாள் பணிந்தெழுந்து
சொன்மாலை மலர்க்''கல்வாய்அகில்'' என்னும்
தொடை சாத்தி
மன்னார்வத் திருத்தொண்ட ருடன் மகிழ்ந்து
வைகினார். 633

வி.ரை :- சோழநாட்டில் அருகிருந்த திருஅரத் துறையைச் சென்றடைந்து மின்னொளி வீசும் மழு படையுடைய வரது மணம் வீசும் மலர்ப்பாதங்களைப் பணிந்தெழுந்து சொற்களால் அமைந்த ''மலர்க் கல்வாய் அகில்'' எனும் சொல்மலர் சாத்திப் பொங்கிய ஆர்வத்துடன் வரும் திருத்தொண்டர்களுடன் அங்கு தங்கினார்.

திருவா வடுதுறை

பரமர்திரு அரத்துறையைப் பணிந்து போய்ப் பலபதிகள்
விரவிமழ விடை உயர்த்தார் விரை மலர்த்தாள்
தொழுதேத்தி
உரவுநீர்த் தடம் பொன்னி அடைந்தன்ப ருடன்ஆடி
அரவணிந்தார் அமர்ந்ததிரு வாவடுதண் டுறை
அணைந்தார். 634

வி.ரை : திருஅரத்துறையில் அமர்ந்தருளிய பரம பிதாவைப் பணிந்து சென்று அதைச் சுற்றியுள்ள சிவா லயங்களில் வணங்கி இளங்காளையைக் கொடியில் பொறித்து உயர்த்தியவரது மணம்கமழ் மலர்ப்பாதங்

களைத் தொழுதுஏத்திப் பரந்த நீர்ப் பரப்பையுடைய பெரிய காவிரியைச் சென்றடைந்து அன்பர்களுடன் நீராடிப் பாம்பை அணிந்தவரது திருவாவடு குளிர்துறையைச் சென்றடைந்தார்.

அ.ரை :- விரவி — வணங்கி. உரவு நீர்த்தடம்— பெரிய நீர்ப் பரப்பையுடைய.

வலக்கண் வேண்டிப் பாடியது

அங்கணைவார் தமைஅடியார் எதிர்கொள்ளப் புக்கருளிப்
பொங்குதிருக் கோயிலினைப் புடைவலங்கொண்
டுள்ளணைந்து
''கங்கைவாழ் சடையாய்! ஓர் கண்ணிலேன்'' எனக்
கவல்வார்
''இங் கெனக்கார் உற''வென்னுந் திருப்பதிகம்
எடுத்திசைத்தார். 635

வி.ரை :. திருவாவடுதுறை சென்றடைந்த வன்தொண்டரை அடியார்கள் எதிர்கொண்டு அழைத்திட அடியார்களுடன் சேர்ந்து கோயிலினை வலம் வந்து புகுந்து சந்நதிமுன் நின்று ''கங்கையைத் தலையில் சூடியோய்! ஒரு கண் இல்லை ஐயனே! இங்கு எனக்கு யார் இருக்கிறார்கள்'' எனக் கதறி அழுது திருப்பதிகம் பாடினார்.

திருத் துருத்தி

திருப்பதிகங் கொடுபரவிப் பணிந்துதிரு வருளாற்போய்
விருப்பினொடுந் திருத்துருத்தி தனைமேவி விமலர்கழல்
அருத்தியினாற் புக்கிறைஞ்சி ''அடியேன்மேல் உற்றபிணி
வருத்தம் எனை ஒழித்தருள வேண்டும்'' என வணங்குவர்.
636

வி.ரை :- திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு வணங்கி இறைவனருளால் விருப்பமுடன் திருத்துருத்தி சென்று ஈசன் வீரக்கழல்களை ஆவலினால் புகுந்து வணங்கி அடியேனுக்கு உற்ற பிணி வருத்துமதனை ஒழித்தருள வேண்டும்'' என்று வணங்கினார்.

அ.ரை :- அருத்தி – ஆவல்.

"வடகுளத்துக் குளி'' என்றிறைவன் கூறியது

பரவியே பணிந்தவர்க்குப் பரமர்திரு வருள்புரிவார்
''விரவியஇப் பிணி அடையத் தவிர்ப்பதற்கு வேறாக
வரமலர் வண் டறைதீர்த்த வடகுளத்துக் குளி'' என்னக்
கரவில்திருத் தொண்டர் தாங் கைதொழுது புறப்பட்டார். 637

வி.ரை :- பரவிப் பணிந்த வன்தொண்டருக்குப் பரமபிதா திருவருள்புரிய நினைந்து ''வந்துசேர்ந்த இப் பிணி நீங்குதற்குத் தாமரை மலரில் வண்டுகள் ஒலிக்கும் புனிதநீராகிய வடகுளத்தில் குளி' என்று சொல்ல மறைத்தல் இல்லாத திருத்தொண்டரும் கைதொழுது புறப்பட்டார்.

அ.ரை :- விரவிய—வந்தடைந்த. அடைய—சென்றடங்க. வரமலர்—தாமரை மலர். கரவில்—குற்றமற்ற, ஒழிவு மறைவு இல்லாத,

குளத்தில் மூழ்கிப் புதுமேனி பெற்றது

மக்கபுனல் தீர்த்தத்தின் முன் அணைந்து வேதமெலாம்
தொக்கவடி வாயிருந்த துருத்தியார் தமைத் தொழுது
புக்கதனில் முழுகுதலும் புதியபிணி அது நீங்கி
அக்கணமே மணியொளிசேர் திருமேனி ஆயினார். 638

வி.ரை :- நீர் மிகுதியாக இருந்த அந்தத் தீர்த்தத்தின் முன் சென்று வேதங்கள் யாவும் ஒரு வடிவான பூந்துருத்தியாரைத் தொழுது நீரில் மூழ்கியவுடன் அந்த நோய் நீங்கப் பெற்று அப்பொழுதே மணியின் ஒளி போன்று புதிய திருஉருவைப் பெற்றனர்.

கண்டவர் களிக்கக் கவி பாடியது

கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறி உடைபுணைந்து
மண்டுபெருங் காதலினாற் கோயிலினை வந்தடைந்து
தொண்டர்எதிர் ''மின்னுமா மேகம்'' எனுஞ் சொற்பதிகம்
எண்டிசையும் அறிந்துய்ய ஏழிசையால் எடுத்திசைத்தார். 639

வி.ரை :- இதனைக் கண்டவர்கள் அதிசயிக்கக் கரையேறி உடை அணிந்து தேங்கிக் கிடந்த பேரன்பினால் கோயிலை அடைந்து ''மின்னு மாமேகம்'' என்று அடியெடுத்துத் தொண்டர்கள் எதிரில் நிற்க எட்டுத் திசையில் உள்ளவர்களும் அறிந்து உயர்வுபெற ஏழிசையிலும் பாடினார்.

திருவாரூர் சென்றது

பண்ணிறைந்த தமிழ்பாடிப் பரமர்திரு வருள்மறவா
தெண்ணிறைந்த தொண்டருடன் பணிந்தங்கண் உறைந்தேகி
உள்நிறைந்த பதிபிறவும் உடையவர்தாள் வணங்கிப்போய்க்
கண்ணிறைந்த திருவாரூர் முன்தோன்றக் காண்கின்றார். 640

வி.ரை :- பண்களுடன் செறிந்த தமிழ் பாடிப் பரம்பொருளின் திருவருளை மறவாது எண்ணற்ற

தொண்டர் சூழ்ந்திருக்கப் பணிந்து அங்கு தங்கியிருந்த பின், உள்ளத்துள் நிறைந்து இருந்த சிவாலயங்களில் சென்று அப்பதி உடையவரது திருத்தாள்களை வணங்கிச் சென்று கண்கொள்ளாத் திருவாரூர் எதிரில் தோன்றக் கண்டார்.

திருவாரூர் சென்றது

அன்றுதிரு நோக்கொன்றால் ஆரக்கண் டின்புறார்
நின்றுநில மிசை வீழ்ந்து நெடிதுயிர்த்து நேர்இறைஞ்சி
வன்தொண்டர் திருவாரூர் மயங்குமா லையிற்புகுந்து
துன்றுசடைத் துவாயர் தமைமுன்னந் தொழ அணைந்தார்.
641

வி.ரை :- அன்று ஒற்றைக் கண் ஆரக்கண்டு இன்புற்று நின்று மண்மீது விழுந்து பெருமூச்சுவிட்டு வணங்கிய வன்தொண்டர் மாலைப்பொழுதில் திருவாரூரில் புகுந்து செறிந்த சடையையுடைய புனிதவாயர் சிவபெருமானைத் தொழுதற்குச் சென்றார்.

அ.ரை :- துன்று—செறிந்த, நெருங்கிய. தூவாயர்—புனிதவாயர். வேதங்கள் இறைவன் திருவாயினின்றும் தோன்றியனவாதலின் தூவாயர் என்றனர்.

கண் தந்தருளப் பாடியது

பொங்குதிருத் தொண்டருடன் உள்ளணைந்து
புக்கிறைஞ்சித்
துங்கஇசைத் திருப்பதிகம் ''தூவாயா'' என்றெடுத்தே
''இங்கெமது துயர்களைந்து கண்காணக் காட்டாய்'' என்
றங்கணர்தம் முன்நின்று பாடிஅருந் தமிழ்புனைந்தார்.
642

வி.ரை :- திரண்டு சூழ்ந்திருந்த திருத்தொண்டருடன் கோயிலினுட் சென்று சந்நதியில் நுழைந்து வணங்கி உயர்ந்த இசையில் ''தூவாயா'' என்றெடுத்து இங்கு எனது துயரை நீக்கிக் கண்ணால் காட்டியருள்வாய் என்று அழகிய நெற்றிக் கண்ணனார் முன் நின்று பாடி அரிய தமிழ்ச் சொற்களால் மாலை தொடுத்தார்.

அர்த்தசாமம் வணங்க வந்தது

ஆறணியுஞ் சடையாரைத் தொழுதுபுறம் போந்தங்கண்
வேறிருந்து திருத்தொண்டர் விரவுவார் உடன்கூடி
ஏறுயர்த்தார் திருமூலட் டானதநுள் இடைதெரிந்து
மாறில்திரு அத்தயா மத்திறைஞ்ச வந்தணைந்தார். 643

வி.ரை :- கங்கை ஆற்றைத் தலையில் அணிந்த சடையப்பரைத் தொழுது வெளிவந்தபோது ஆங்கு திருத்தொண்டர்கூட அவர்களுடன் எருதைக் கொடியில் உயர்த்தியவரது திருமூலஸ்தானத்துள் நேரம் தெரிந்து மாறாத திரு அர்த்தசாமம் வணங்க வந்தார்.

அ.ரை :- இடை—நேரம்;அர்த்தயாமம்—நடு இரவு.

ஆதிதிரு அன்பர்எதிர் அணைய அவர் முகநோக்கிக்
கோதில் இசை யாற் ''குருகு பாய'' எனக் கோத்தெடுத்தே
ஏதிலார் போல்வினவி ஏசறவால் திருப்பதிகம்
காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைவார். 644

வி.ரை :- அப்பொழுது சிவனடியார்கள் எதிரே வந்து சேர அவர்களது முகத்தைப் பார்த்து குற்றமற்ற இசையினால் ''குருகு பாய'' என்றடியெடுத்து ஒரு அந்நியர் போல் கேட்டு வருத்தத்தால். ஒருதலைக் காமத்தால் திருப்பதிகம் பாடிக் கலந்து சென்றார்.

அ ரை :- ஆதிதிரு அன்பர்— சிவனடியார்கள். எதிலார்—அந்நியர். ஏசறவால்-வருத்தத்தால். காதல்புரி கைக்கிளை—ஒருதலைக் காமம்.

தேவாசிரியன் சென்று வணங்கியது

சீர்பெருகுந் திருத்தேவா சிரியன்முன் சென்றிறைஞ்சிக்
கார் விரவு கோபுரத்தைக் கைதொழுதே உட்புகுந்து
தார் பெருகு பூங்கோயில் தனைவணங்கிச் சார்ந்தணைவார்
ஆர்வமிகு பெருங்காத லால்அவனி மேல் வீழ்ந்தார். 645

வி.ரை :- சிறப்பு மிகும் திருத்தேவாசிரியன் மண்டபத்தின் முன் சென்று வணங்கிக் கார்மேகங்கள் தவழும் கோபுரத்தைக் கைதொழுதுஉள்ளேசென்று மலர்மாலைகள் நிறைந்த கமலாலயம்தனை வணங்க ஆர்வமிகும் பேரன்பினால் சென்று மண்மீது விழுந்தார்.

"கண்தாரும்" எனத் தாழ்ந்தது

வீழ்ந்தெழுந்து கைதொழுது முன்நின்று விம்மியே
வாழ்ந்த மலர்க் கண்ணொன்றால் ஆராமல் மனமழிவார்
"ஆழ்ந்ததுயர்க் கடலிடைநின் றடியேனை எடுத்தருளித்
தாழ்ந்த கருத் தினை நிரப்பிக் கண் தாரும்"
எனத்தாழ்ந்தார் 646

வி.ரை :- விழுந்தெழுந்து கைகூப்பித் தொழுது திருச்சந்நதி முன் நின்று விம்மியழுது இருக்கும் மலர் போன்ற ஒற்றைக் கண்ணால் ஆசை தீரப்பார்க்க முடியாமல் மனம் சிதைந்து" ஆழ்ந்த துயரக் கடலிடை நின்று அடியேனை எடுத்துக் காத்தருளி, தாழ்ந்தஎனது கருத்து எண்ணம் நிறைவு பெறக் கண்தாரும்" என்று தாழ்ந்து வணங்கினார்.

அ.ரை :- வாழ்ந்த மலர்க்கண்—வாழ்ந்து கொண்டிருக்கும் கண் ஒன்றால். ஆராமல்— நிறைவுபெறாமல் தாழ்ந்த கருத்தினை. நிரப்பி-முழுமையாக்கி கண்டு களிக்க முடியவில்லையே என்ற தாழ்ந்த எண்ணம் நீங்கி நிறைவு பெற:

"மற்றைக்கண் தரரீர்" என்று வணங்கியது

திருநாவ லூர்மன்னர் திருவாரூர் வீற்றிருந்த
பெருமானைத் திருமூலட் டானஞ்சேர் பிஞ்ஞகனைப்
பருகா இன் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு
மருவார்வத் துடன் "மற்றைக் கண்தாரீர்"
என வணங்கி 647

வி.ரை :- திருவாரூரில் அமர்ந்தருளிய பெருமானை திருமூலஸ்த்தானத்திருக்கும் தலைக்கோலமுடைய சிவபெருமானை, யாவராலும் கண்டுகளிக்க முடியாத பேரமுதத்தை இருகண்களால் கண்டு இன்புறுதற்கு நீங்கா ஆர்வத்துடன் திருநாவலூர் மன்னர் சுந்தரர் "மற்றைக் கண்தாரீர்" என வணங்கினார்.

அ.ரை :- பிஞ்ஞகன் — தலைக்கோலமுடைய சிவன்.

கண்வேண்டிப் பதிகம் பாடியது

"மீளா அடிமை" என எடுத்து மிக்க தேவர் குலமெல்லாம்
மாளா மேநஞ் சுண்டருளி மன்னி இருந்த பெருமானைத்
"தாளா தரிக்கும் மெய்யடியார் தமக்காம் இடர் நீர்
தரியீர்" என்
றாளாந் திருத்தோ ழமைத்திறத்தால் அஞ்சொற்
பதிகம் பாடினார். 648

வி.ரை :- "மீளா அடிமை" என்று அடி எடுத்து மிகுந்த தேவர்குலம் யாவும் அழிந்து போகாதிருக்கப் பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டருளிப் பொருந்தி இருந்த சிவபெருமானது திருத்தாள்களை இடை விடாது போற்றும் உண்மை அடியார்கட்கு வரும் துன்பத்தை நீர்ஏற்றுக்கொள்ளவில்லை" என்று அடிமையும் திருத்தோழமையும் கொண்ட திறத்தினால் அழகிய சொற்களால் அமைந்த பதிகம் பாடினார்.

அ.ரை :- மாளாமே — இறந்து போகாதிருக்க. தாளாதிரிக்கும் — திருத்தாள்களை இடைவிடாது போற்றிக் கொண்டிருக்கும். தாள் ஆதரிக்கும். ஆளாம் திருத்தோழமை—அடிமையும் நட்பும் சேர்ந்த தன்மை.

கண் கொடுத்தருளியது

பூத முதல்வர் புற்றிடங்கொண் டிருந்த புனிதர்
வன்தொண்டர்
காதல் புரிவே தனைக்கிரங்கிக் கருணைத் திருநோக்
களித்தருளிச்
சீத மலர்க்கண் கொடுத்தருளச் செவ்வே விழித்து
முகமலர்ந்து
பாத மலர்கள் மேற்பணிந்து வீழ்ந்தார் உள்ளம்
பரவசமாய் 649

வி.ரை :- உயிரினங்கட்கெல்லாம் தலைவர், பசுபதி, புற்றில் அமர்ந்த புனிதர் சிவபெருமான் வன் தொண்டரது இறை அன்புகலந்த வேதனைக்கு மன மிரங்கிக் கருணையுடைய திருப்பார்வை கொடுத் தருளிக் குளிர்ந்த மலர் போன்ற வலக்கண்ணையும் கொடுத்தருளச் சிறப்பாக விழித்து நோக்கி முகம்

மலர்ந்து உள்ளம் பரவசமடைந்திட இறைவனது கமல மலர்ப்பாதங்களில் விழுந்தார்.

அ.ரை :- பூதமுதல்வர்—ஐந்து பருப் பொருள் கட்டும் தலைவன், உயிரினங்களுக்கெல்லாம் முல மான முதல்வன், பசுபதி. காதல்புரி வேதனை— இறை யன்பு கொண்ட துன்ப நிலை.

இரண்டு கண்களாலும் கண்டு களித்தது

விழுந்தும் எழுந்தும் பலமுறையால் மேவிப் பணிந்து
மிகப் பரவி
எழுந்த களிப்பி னால்ஆடிப் பாடி இன்ப வெள்ளத்தில்
அழுந்தி இரண்டு கண்ணாலும் அம்பொற் புற்றின்
இடை எழுந்த
செழுந்தண் பவளச் சிவக் கொழுந்தின் அருளைப் பருகித்
திளைக்கின்றார். 650

வி.ரை : வலக்கண்ணும் பெற்ற மகிழ்ச்சிப் பெருக் கால் விழுந்து விழுந்து பலமுறை எழுந்து சென்று பணிந்து மிகவும் பரவசத்துக்குள்ளாகி எழுந்தகளிப்பின் மிகுதியால் ஆடிப்பாடி பேரின்பப் பெரு வெள்ளத்தில் மூழ்கி இரு கண்களாலும் அழகிய பொன் புற்றி னிடையே எழுந்தருளிய செழித்த குளிர்ந்த பவள நிறச் சிவபெருமானின் அருளினைப் பருகித் திளைத்திருந் தார்.

அ.ரை :- திளைத்தல் — நீங்கா இன்பத்தில் கிடத்தல்.

தேவாசிரியன் சென்று தங்கியது

காலம் நிரம்பத் தொழுதேத்திக் கனக மணிமா ளிகைக்
கோயில்
ஞாலம் உய்ய வரும்நம்பி நலங்கொள் விருப்பால்
வலங்கொண்டு

மாலும் அயனும் முறை இருக்கும் வாயில் கழியப் புறம்போந்து
சீல முடைய அன்பருடன் தேவா சிரியன் மருங் கணைந்தார். 651

வி.ரை :- அன்று முழுவதும் தொழுது வணங்கி மாணிக்க மணிகள் பதித்த பொற்கோயிலை இந்த உலகம் உயர்வு பெறத் தோன்றிய நம்பி ஆரூரின் நலம் பொதிந்த விருப்பினால் வலம் வந்து, திருமாலும், நான் முகனும் சிவதரிசனத்துக்காகத் தங்கள் முறை வருவதற்காகக் காத்துக்கிடக்கும் வாயிலை விடுத்துப் புறம்வந்து சிறப்புமிக்க அன்பர்களுடன் தேவாசிரியன் அருகில் வந்து சேர்ந்தார்.

பரவையாரின் நிலை

நங்கை பரவை யார்தம்மை நம்பி பிரிந்து போனதற்பின்
தங்கு மணிமா ளிகையின்கண் தனிமை கூரத்
தளர்வார்க்குக்
கங்குல் பகலாய்ப் பகல்கங்குல் ஆகிக் கழியா நாளெல்லாம்
பொங்கு காதல் மீதூரப் புலர்வார் சிலநாள் போன தற்பின்
652

வி.ரை :- பரவையாரை நம்பி ஆரூரர் பிரிந்து சென்ற பின்பு தான் தங்கியிருந்த மாளிகையில் தனிமையால் தளர்ந்து இரவு பகலாகவும் பகல் இரவாகவும் ஆகிய நாட்களிலெல்லாம் பொங்கிய காதலால் துன்புறுவார். இவ்வாறு சிலநாள் சென்ற பின்பு.

பரவையார் கொண்ட சினம்

செம்மை நெறிசேர் திருநாவ லூரர் ஒற்றி யூர்சேர்ந்து
கொம்மை முலையார் சங்கிலியார் தம்மைக் குலவு மணம்
புணர்ந்த

மெய்ம்மை வார்த்தை தாம் அவர்பால் விட்டார் வந்து
கட்டுரைப்பத்
தம்மை அறியா வெகுளியினால் தரியா நெஞ்சி னொடுந்
தளர்வார். 653

வி.ரை :- திருநாவலூரில் அவதரித்த செம்மை நெறியாளர் திருஒற்றியூர் சேர்ந்தவுடன் இளம் முலையாள் சங்கிலியாரை மகிழ்ந்து மணம் புரிந்த உண்மை வார்த்தைகளைச் சொன்னவர்கள் கூறக் கேட்டுத் தம்மையும் அறியாத சினத்தினால் தாங்காத மனத்தினராய்த் தளர்ந்து நொந்தார்.

பரவையாரின் விரக வேதனை

மென்பூஞ் சயனத் திடைத் துயிலும் மேவார் விழித்தும்
இனித மரார்
பொன்பூந் தவிசின் மிசையினிரார் நில்லார் செல்லார்
புறம்பொழியார்
மன்பூ வாளி மழை கழியார் மறவார் நினையார் வாய்
விள் ளார்
என்பூ டுருக்கும் புலவியோ பிரிவோ இரண்டின்
இடைப்பட்டார். 654

வி.ரை :- மென்மையான மலர்ப் படுக்கையிலும் தூக்கம் கொள்ளமாட்டார். விழித்துச் சற்று அமர்ந்திருக்கலாமென்றால் அதுவும் செய்யார். பொன்மயமான மலர் ஆசனத்தின்மீதும் அமரார், நிற்க இயலாதவராக வேறு இடத்திற்குச் செல்ல இயலாதவராக வெளியே போகாது கிடப்பார். மன்மதனது மலரம்பு மழையை நீக்காதவராய் மறக்கவுமாட்டாமல், நினைக்கவுமாட்டாமல் வாய்விட்டுச் சொல்லவுமாட்டாமல், எலும்பைத் துளைத்து உருக்கும் புலவியோ, பிரிவோ ஆகிய இரண்டினிடைப் பட்டவராவார்.

அ.ரை :- மேவார் — சென்றடையார். தவிசு-இருக்கை. புறம்பொழியார் — புறம்போகார். மன்—மன்மதன். பூவாளி—மலரம்பு. வாய்விள்ளார் — வாய் பேசார். என்ப—எலும்பு. புலவி—காதல், ஊடல்.

பரவையாரிடம் சென்றவர்கள் நின்றது

ஆன கவலைக் கையறவால் அழியும் நாளில் ஆரூரர்
கூனல் இளவெண் பிறைக்கண்ணி முடியார் கோயில் முன் குறுகப்
பானல் விழியார் மாளிகையிற் பண்டு செல்லும் பரிசினால்
போன பெருமைப் பரிசனங்கள் புகுதப் பெறாது புறநின்றார். 655

வி.ரை :- இவ்வாறு கையும் வராமல், காலும் வராமல் செயலற்று அழிந்து கொண்டிருக்கும் நாளில், நம்பி ஆரூரர் வளைந்த இளம் வெண்பிறையணிந்த கொண்டை மாலையை உடைய சிவபெருமான் கோயிலின் முன் சென்றடைய கருங்குவளை மலர் போன்ற கண்களையுடைய பரவையாரின் மாளிகைக்கு எப்போதும் போல் செல்லும் ஆசையினால் சென்ற பெருமைமிக்க தொண்டர்கள் உள்ளே புக முடியாமல் வெளியே நின்றனர்.

அ. ரை :- கையறவால்—கையும் வராமல், காலும் வராமல் திகைத்து நிற்கும் நிலை. கண்ணி—கொண்டை மாலை. பானல்—குவளை மலர். பண்டு செல்லும்—முன்பு செல்லும்.

சுந்தரரிடம் வந்து நிலைமையைக் கூறியது

நின்ற நிலைமை யவர்கள் சிலர் நிலவு திருவா ரூரர் எதிர்
சென்று மொழிவார் "திருஒற்றி யூரில் நிகழ்ந்த செய்கை எலாம்

ஒன்றும் ஒழியா வகையறிந்தங் குள்ளார் தள்ள மாளிகையில்
இன்று புறமுஞ் சென்றெய்தப் பெற்றி லோம்'' என்
றிறைஞ்சினார். 656

விரை :- அவ்வாறு வெளியே நின்ற நிலைமையைத் திருவாரூரர் சுந்தரர் முன்நின்று, "திருஒற்றியூரில் நிகழ்ந்தன எல்லாம் ஒன்றும் ஒழியாமல் அங்குள்ள சேடிமார் அறிந்துள்ளார்கள். ஆதலால் அவர்கள் எங்களை உள்ளே போகாதபடி தள்ள வெளியேயும் சென்றடையாதவரானோம்'' என்று மன்றாடிக் கூறினார்.

கற்றறிந்த சிலரை அனுப்பியது

மற்ற மாற்றங் கேட்ட ழிந்த மனத்த ராகி வன்தொண்டர்
''உற்ற இதனுக் கினிஎன்னோ செயல்''என் றுணர்வார்
உலகியல்பு
கற்ற மாந்தர் சிலர்தம்மைக் காதற் பரவை யார்கொண்ட
செற்ற நிலைமை அறிந்தவர்க்குத் தீர்வு சொல்லச்
செலவிட்டார். 657

வி.வர :- அடியார்கள் வந்து சொன்னது கேட்டு மனந்தளர்ந்த வன்தொண்டர் "இனி இதனக்கு என்ன செய்வது'' என்று உணர்ந்தவராய், உலகியல்புகளை நன்கறிந்த கற்றறிந்த மாதர் சிலரைப் பரவையார் கொண்ட சினத்தைப் போக்கித் தீர்வு காண அனுப்பினார்.

அ.ரை :- செற்றம்—சினம்.

கற்றறிந்தோர் சொல்லும் காதில் விழாது போனது.

நம்பி அருளாற் சென்றவரும் நங்கை பரவை யார்தமது
பைம்பொன் மணிமா ளிகை அணைந்து பண்பு புரியும்
பாங்கினால்

வெம்பு புலவிக் கடல் அழுந்தும் மின்னே ரிடையார்
முன்எய்தி
"எம்பி ராட்டிக் கிதுதகுமோ" என்று பலவும் எடுத்துரைப்
பார். 658

வி.ரை :- நம்பி ஆருரரின் வேண்டுகோளின்படி நங்கை பரவையாரின் பசுமையான பொன் மணி மாளிகை சென்றடைந்த ஒழுக்கநெறியில் வாழும் தன்மையால் விரக வேதனையால் வெம்பிக் காமக் கடலில் மூழ்கிக் கிடக்கும் மின்னல் போன்ற இடையார் பரவையார் முன் சென்று "எமது பிராட்டிக்கு இது தகுமோ?" என்றும் பலவும் எடுத்துரைத்தனர்.

அ.ரை :. பண்பு புரியும் பாங்கு—ஒழுக்க நெறியில் நிற்றலின் சிறப்பு. வெம்பு புலவிக்கடல்-விரக வேதனையால் வெந்துகொண்டிருக்கும் காமக் கடல்.

"உயிர் நீப்பேன்" என்றது

பேத நிலைமை நீதியினால் பின்னும் பலவும் சொன்ன
வர்முன்
மாத ரவரும் மறுத்துமனங் கொண்ட செற்றம் மாற்றாராய்
"ஏதம் மருவும் அவர்திறத்தில் இந்த மாற்றம் இயம்
பில் உயிர்
போதல் ஒழியா" தென உரைத்தார் அவரும் அஞ்சிப்
புறம் போந்தார். 659

வி.ரை :- இருவருக்கும் உள்ள மாறுபட்ட எண்ண நிலைமையினால், பரவையாரது சினம் தீர்க்க மேலும் பலபல சொன்னவர் முன் பரவையாரும் மறுத்துரைத்து மனத்தில் எழுந்த சினம் மாறாமையால், குற்றம் செய்த அவருக்காக இவ்வாறு பேசினீர்களானால் "உயிர் நீத்தல் உறுதி" என உரைத்திட வந்தவர்களும் அச்சம் கொண்டு வெளியேறினர்.

அ.ரை :- பேத நிலைமை — மாறுபட்ட நிலைமை ஊடல் கொள்ளாது உள்ளம் பெற்ற வேறுபட்ட எண்ணம் சொல்லியபடி. செற்றம்—சினம். ஏதம் மருவும்—குற்றம் பொருந்திய.

ஆரூரர் துயரக் கடலில் மூழ்கியது

போந்து புகுந்த படியெல்லாம் பூந்தண் பழன முனைப் பாடி
வேந்தர் தமக்கு விளம்புதலும் வெருவுற் றயர்வார்
துயர் வேலை
நீந்தும் புணையாந் துணைகாணார் நிகழ்ந்த சிந்தா
குலம் நெஞ்சில்
காந்த அழிந்து தோய்ந்தெழார் கங்குல் இடையா
மக்கடலுள். 660

வி.ரை : குளிர்ந்த மலர்கள் பூத்த வயல்களால் சூழப் பட்ட முனைப்பாடி மன்னர் சுந்தரருக்குப் பரவையா ரிடம் சென்று நடந்ததை நடந்தபடியெல்லாம் சொன்ன வுடன் சுந்தரர் நடுக்கமுற்றுச் சோர்வார். துயரக் கடல் நீந்திக் கடக்கும் துணையான தெப்பம் காணார். நிகழ்ந்த நீங்காத மனக்கலக்கம் நெஞ்சில் வெந்து சுட நடு இரவுக் கடலினுள் விழுந்து அழிந்து எழாதவ ரானார்.

அ.ரை:- படியெல்லாம்— நடந்தபடியெல்லாம் பழனம்-வயல். வெருவுற்று— நடுக்கமுற்று. புணை— தெப்பம். ஆகுலம்—மனக்கலக்கம். காந்த—காய்ச்ச. கங்குல்—இரவு. இடையாமக் கடல்—நடு இரவு எனும் கடல்,

இறைவனை நினைந்தது

அருகு சூழ்ந்தார் துயின்றுதிரு அத்த யாமம் பணிமடங்கிப்
பெருகு புவனம் சலிப்பின்றிப் பேயும் உறங்கும்
பிறங்கிருள்வாய்

முருகு விரியும் மலர்க்கொன்றை முடிமேல் அரவும்
செருகும் ஒருவர் தோழர்தனி வருந்தி இருந்து சிந்திப்பார். 661

வி.ரை: அர்த்தசாமப் பூசை முடிந்து அருகில் இருந்தவர்களெல்லாம் துயின்று பெரிய உலகு சலன மின்றிப் பேயும் உறங்கும் கொடிய காரிருளில் மணங் கமழும் கொன்றை மலரணிந்த முடியின்மீது பாம்பை யும் பிறைநிலவையும் அணிந்த ஒப்பற்ற சிவபெருமான் தோழர் தனித்து வருந்தியிருந்து சிந்திக்கலானார்.

அ.ரை:-அத்த யாமம் பணி—அர்த்த சாமப்பூசை. சலிப்பின்றி— சலனமின்றி. பிறங்கிருள்— கொடிய இருள் செறிந்த இருள், காரிருள். முருகு—மணம்

''முன்னை வினையால் இவ்வினைக்கு மூலம் ஆனாள்
பால்அணைய
என்னை உடையாய்! நினைந்தருளாய் இந்த யாமத்
தெழுந்தருளி
அன்னம் அனையாள் புலவியினை அகற்றில் உய்யலாம்,
அன்றிப்
பின்னை இல்லைச் செயல்'' என்று பெருமான் அடிகள்
தமை நினைந்து 662

வி.ரை:- என்னை ஆட்கொண்டபிரானே! முன் செய்த வினையால் இத்துன்பம் நேர்ந்தது. இத்துன் பத்துக்கு மூலம் பரவையிடம் நான் சென்றடைய நினைந்தருள்வாய். இந்த நடு இரவில் அன்னம் போன்ற பரவையிடம் எழுந்தருளி அவளின் ஊடல் அகற்றினால் நான் உயிர் வாழ்வேன் இல்லையேல் சாவதைத் தவிர வேறு வழி இல்லை'' என்று இறைவன் திருத்தாள்களை நினைந்தபோது.

அ.ரை:- முன்னைவினை—சங்கிலியை மணந்தது. வினைக்கு மூலம்—பரவையார். பின்னை இல்லை செயல்—வேறு வழி இல்லை.

ஈசன் காட்சியருளியது

அடியார் இடுக்கண் தரியாதார் ஆண்டுகொண்ட தோழர் குறை
முடியாதிருக்க வல்லரே முற்றும் அளித்தாள் பொற்றளிர்க்கைத்
தொடியார் தழும்பும் முலைச்சுவடும் உடையார் தொண்டர் தாங்காணும்
படியால் அணைந்தார் நெடியோனும் காணா அடிகள் படிதோய. 663

வி.ரை:- தனது அடியார்களது துன்பத்தைத் தாங்கிக் கொள்ளாத சிவபெருமான் தாம் ஆட்கொண்ட தோழர் குறையைத் தீர்க்காமல் இருக்க வல்லரோ? தன்னை முழுமையாக அளித்த பார்வதிப் பிராட்டியின் பொன்மயமான இளந்தளிர்போன்ற கைவளையல் களின் தழும்பும் முலைகள் பதிந்ததால் அமைந்த சுவடும் உடைய சிவபெருமான், நெடியோன், திருமாலும் காணாத தமது திருத்தாள்கள் மண்மீது படியத் தமது தொண்டர் காணும்படி வந்து தோன்றினார்.

அ.ரை:- தரியாதார்—தாங்காதார், முடியாதிருக்க வல்லரே—முடித்து வைக்காதிருக்க வல்லவரோ? முற்றும் அளித்தாள்- பார்பதி, தொடியார் தழும்பு—வளை தழும்பு.

ஈசன் பாதங்களில் வீழ்ந்து வணங்கியது

தம்பி ரானார் எழுந்தருளத் தாங்கற் கரிய மகிழ்ச்சியினால்
கம்பி யாநின் றவயவங்கள் கலந்த புளகம் மயிர் முகிழ்ப்ப
நம்பி யாரூ ரரும் எதிரே நளின மலர்க்கை தலைக்குவிய
அம்பி காவல் லவர்செய்ய அடித்தா மரையின் கீழ் வீழ்ந்தார்.
664

வி.ரை:- தம் இறைவன் எழுந்தருளக்கண்ட நம்பி ஆரூரர் தாங்க இயலா மகிழ்ச்சியினால் அவர் உடலுருப் புக்கள் வளையாது நன்றிட உடலில் மயிர்சிலிர்த்து நடுக் குற்று எதிரே நின்று தனது அழகிய மலர்க்கைகளைத் தலைமேல் குவித்து அம்பிகையின் காவலனார் சிவ பெருமானின் சிவந்த அடித்தாமரையின் கீழ் விழுந்து வணங்கினார்.

அ.ரை:- கம்பியா நின்ற அவயவங்கள்— விறைத்துக் கம்பி போன்று நின்ற உடலுருப்புக்கள். புளகம்—புளகாங்கிதம். பெருமகிழ்ச்சியின் பேருணர்வு. நளினம்—தாமரை. அம்பிகைவல்லவர்— அம்பிகை யுடையவர்.

"நீ உற்ற துயர் என்ன?" என்றது.

விழுந்து பரவி மிக்கபெரு விருப்பினோடும் எதிர்போற்றி
எழுந்த நண்பர் தமைநோக்கி "என் நீ யுற்ற?' தென்றருளத்
தொழுதங் குறையை விளம்புவார் "யானே தொடங்குந்
துரிசிடைப் பட்
டழுந்தும் என்னை இன்னம் எடுத் தாள வேண்டும்
உமக்'"கென்று 665

வி.ரை:- பாதங்களில் விழுந்து பரவீ வணங்சி எழுந்து நின்ற வன்தொண்டரை நோக்கி மிகுந்த விருப்பமுடன் உமக்கு உற்ற துயர் யாது?" என்று கேட்டருள வன்தொண்டரும் தொழுது "யானே செய்த குற்றத்துள் அகப்பட்டு அழுந்தும் என்னைக் கை தூக்கி எடுத்தாட் கொள்வது உமது கடன்" என்று தனது குறையைக் கூறினார்.

அ.ரை:-தொடங்கும் துரிசிடைப்பட்டு — நானே செய்த குற்றத்தில் அகப்பட்டு துரிசு—குற்றம்

நடந்ததுரைத்தது

''அடியேன் அங்குத் திருஒற்றியூரில் நீரே அருள்செய்ய
வடிவேல் ஒண்கண் சங்கிலியை மணஞ்செய் தணைந்த
திறமெல்லாம்
கொடியே ரிடையாள பரவைதான் அறிந்து தன்பால்
யான்குறுகில்
'முடிவேன்' என்று துணிந்திருந்தாள் என் நான் செய்வ?''
தென மொழிந்து 666

வி.ரை:- அடியேனாகிய நான் அங்கு திருஒற்றியூரில் நீரே அருள் செய்திட வேல் போன்ற வடிவை உடையஅழகு கண்ணினாள் சங்கிலியை மணம் செய்து அவளுடன் வாழ்ந்திருந்ததெல்லாம் கொடிபோன்ற அழகிய இடையையுடைய பரவை அறிந்து அவள் அருகில் சென்றால் 'இறந்து போவேன்' என்று துணிவுற்று இருக்கும் அவளிடம் நான் எவ்வாறு செல்வது எனச் சொல்லிட.

பரவையின் புலவி நீக்க வேண்டியது

''நாயன் நீரே நான் உமக்கிங் கடியே னாகில் நீர் எனக்குத்
தாயின் நல்ல தோழருமாம் தம்பி ரானா ரேயாகில்
ஆய அறிவும் இழந்தழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்
போய்இவ் விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாரும்'' என.
667

வி.ரை:- எனது நாயகன் நீரே. நான் உமக்கு அடியேனாகில் நீர் எனக்குத் தாயாகவும் தோழரும் எமக்கு இறைவனாயிருப்பது உண்மையாகில் என் பொருந்திய அறிவும் இழந்து அழிந்து அயரும் என் நிலை கருதி இதற்காக இவ்விரவே சென்று பரவையாரது ஊடல் தீத்தருளும் என்றனர்.

அ.ரை:- நாயன்—நாயகன். ஆய—பொருந்திய

"பரவைபால் தூதுபோவோம்" என்றது

அன்பு வேண்டுந்தம்பெரிமான் அடியார் வேண்டிற்
றேவேண்டி
முன்பு நின்று விண்ணப்பஞ் செய்த நம்பி முக நோக்கித்
"துன்பம் ஒழிநீ யாம்உனக்கோர் தூத னாகி இப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின்றோம்" என்
றருள் செய்தார் 668

வி.ரை :- அன்பு வேண்டும் தம் இறைவனது அடியார் வேண்டியபடி வேண்டி முன்நின்று விண்ணப்பம் செய்த நம்பி ஆரூரர் முகம் நோக்கி "நாம் உனக்கோர் தூதனாகி இப்பொழுதே பொன்னும்மணியும் பதித்த ஆபரணங்கள் அணிந்த பரவையாரிடம் செல்கின்றோம் நீ துன்பம் ஒழி" என்றருளினார்.

புலவிநீக்க விரைந்திட வேண்டியது :

எல்லை இல்லாக் களிப்பினராய் இறைவர்தாளில்
வீழ்ந்தெழுந்து
வல்ல பரிசெல் லாந்துதித்து வாழ்ந்த நின்ற வன்தொண்டர்
"முல்லை முகை வெண் நகைப்பரவை முகில்சேர்
மாடத் திடைச்செல்ல
நில்லா தீண்ட எழுந்தருளி நீக்கும் புலவி"
எனத்தொழுதார். 669

வி.ரை :- இறைவன் சொல்கேட்ட நம்பி ஆரூரர் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்து ஈசன் பாதங்களில் வீழ்ந்தெழுந்து எல்லாவகையாலும் துதித்துப் போற்றி மகிழ்ந்து நின்ற வன்தொண்டர் முல்லை மொட்டுகளின் வரிசை வெண்பற்களெனச்

சிரிக்கும் பரவையர்து மேகங்கள் வந்து தங்கும் மாடத்தில் விரைவாகச் சென்று அவள் ஊடலை நீக்கியருளும்' எனத்தொழுதார்.

அ. ரை :- வல்லபரிசு — சொல்லத்தக்கதுதி எல்லாம். ஈண்ட — விரைவாக

தூதனாராய் எழுந்தருளியது

அண்டர் வாழக் கருணையினால் ஆல காலம் அமுதாக
உண்ட நீலக் கோலமிடற் றொருவர் இருவர்க் கறிவரியார்
வண்டு வாழும் மலர்க்கூந்தல் பரவை யார்மாளிகை நோக்கித்
தொண்ட னார்தம் துயர்நீக்கத் தூத னாராய் எழுந்தருள. 670

வி.ரை :- திருமாலும். பிரம்மனும் காணுதற்கு அரியவர், தேவர்கள் உயிர்பிழைத்திடக் கருணையினால் ஆலகால நஞ்சை அமுது செய்த திருநீலகண்டர், வண்டுகள் மொய்க்கும் மலரனிந்த கூந்தலாள் பரவை யாரது மாளிகையை நோக்கி வன்தொண்டரது துயர் நீக்கத் தூதராக எழுந்தருளினார்.

தேவாசிரியன் முறையிருக்கந் தேவ ரெல்லாஞ் சேவித்துப்
போவார் நம்மில் வேண்டுவார் போத ஒழிந்தார் புறத்தொழிய
ஒவா அணுக்கச் சேவகத்தில் உள்ளோர் பூத கணநாதர்
மூவா முனிவர் யோகிகளின் முதலா னார்கள் முன்போத 671

வி.ரை :- தேவாசிரியன் மண்டபத்தில் முறைப்படி இருக்கும் தேவர்களெல்லோரும் துதித்தபடி உடன் செல்ல மற்றவர்கள் புறத்து நிற்க, நீங்காத அணுக்கச்

சேவகர்களாகிய நந்திதேவர், பூதகணநாதர், மூவா முனிவர்கள். யோகிகள் முதலானோர் முன் சென்றனர்.

வி.ரை :- முறையிருக்கும்—அவரவர்கட்கு விதித்த காலகட்டத்தில் பணியாற்றியிருக்கும். அணுக்கச் சேகவர்—நந்தி முதலானோர்.

அருகு பெரிய தேவருடன் அணைந்து வரும் அவ்
விருடிகளும்
மருவு நண்பு நிதிக்கோனும் முதலா யுள்ளோர்
மகிழ்ந்தேத்தத்
தெருவும் விசும்பும் நிறைந்துவிரைச் செழும்பூ மாரி
பொழிந் தலையப்
பொருவில் அன்பர் விடுந்தூதர் புனித
வீதியினிற்போத 672

வி.ரை :- பெரிய தேவர்கள் அருகு சேர்ந்து வரும் முனிவர்களும் பொருந்திய நட்புடன் கூடிய குபேரன் முதலானோர் மகிழ்ந்து போற்ற, வானும் வீதியும் நிறைந்த மணம் வீசும் மலர்மாரி பொழிந்து பொங்க ஒப்பற்ற அன்பர் சுந்தரர் விடுத்த தூதர் பரவையார் வாழும் புனித வீதியினிற் சென்றார்.

''மாலும் அயனும் காணாதார் மலர்த்தாள் பூண்டு
வந்திறைஞ்சும்
காலம் இது'' என் றங்கவரை அழைத்தால் என்னக் கடல்
விளைத்த
ஆலம் இருண்ட கண்டத்தான் அடித்தா மரைமேற் சிலம்
பொலிப்ப
நீல மலர்க்கண் பரவையார் திருமா ளிகையை
நேர்நோக்கி 673

வி.ரை :- ''திருமாலும். பிரம்மனும் காணாதவரது மலர்த்தாள்களைச் சேர்ந்து வந்து வணங்கும் நேரம் இது'' என்று யாவருக்கும் அழைப்பு விடுத்தது

போன்று, கடலில் தோன்றிய ஆலம் உண்ட இருண்ட கண்டத்து இறைவனது திருவடித்தாமரையின் சிலம்பு ஒலிக்கக் கருங்குவளை மலர்க் கண்ணினார் பரவை யாரின் திருமாளிகை நோக்கி நடந்தார்.

இறைவர் விரைவின் எழுந்தருளஎய்தும் அவர்கள்
பின்தொடர
அறைகொள் திரைநீர் தொடர்ச்சடையில் அரவு தொடர
அரியஇளம்
பிறைகொள் அருகு நறைஇதழிப் பிணையல் சுரும்பு
தொடர உடன்
மறைகள் தொடர வன்தொண்டர் மனமும் தொடர
வரும் பொழுது 674

வி.ரை:- இறைவன் விரைவாக எழுந்தருள ஒலிக்கும் அலைகளையுடைய கங்கை ஆறு தொடரச் சடையில் இருந்த பாம்பு தொடர, அரியதான இளம் நிலவும் பக்கம் வர, தேன்சிந்தும் கொன்றை மாலையில் வண்டுகள் தொடர அவர்களுடன் வேதங்கள் நான்கும் தொடர, வன்தொண்டரது மனமும் தொடர்ந்து வரும்பொழுது.

அ.ரை:- அறை கொள்திரை—ஒலிக்கும் அலைகள் நறை—தேன். பிணையல்சுரும்பு—மாலையில்வண்டு.

பொருவீ ரையினும் மிகமுழங்கிப் பிறங்கு மதகுஞ்
சரம் உரித்து
மருவீர் உரிவை புனைந்தவர்தம் மருங்கு சூழ்வார்
நெருங்குதலால்
திருவீ தியினில் அழகர் அவர் மகிழுஞ் செல்வத்
திருவாரூர்
ஒருவீ தியிலே சிவலோகம் முழுதுங் காண
உளதாமால் 675

வி.ரை :- பெருங் கடலை விட மிகவும் முழக்க மிட்டு விளங்கும் மதம் பிடித்த யானையின் தோலை உரித்துக் குளிர்ந்த தோலைப் போர்த்திய சிவபெருமானைச் சுற்றி வரும் தேவர் கூட்டம் நெருங்குவதால், திருவாரூரில செல்வர் சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளும் அந்தத் திருவீதியிலே சிவலோகம் முழுவதும் காண உளதாம்.

அ.ரை :- பெருவீரை—பெருங்கடல். பிறங்கும்—விளங்கும். குஞ்சரம்—யானை

அந்தணர் வேடங்கொண்டு சென்றது

ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பிதூதர் பரவையார்
கோல மணிமா ளிகைவாயில் குறுகுவார்முன் கூடத்தம்
பாலங் கணைந்தார் புறநிற்பப் பண்டே தம்மை அர்ச்சிக்கும்
சீலம் உடைய மறைமுனிவ ராகித் தனியே
சென்றணைந்தார் 676

வி.ரை :- உலகம் உயர்வுபெற எழுந்தருளும் நம்பியாரூரரின் தூதர் பரவையாரது அழகிய மாணிக்க மணிகள் பதித்த மாளிகையின் வயிலை முன் அவர் சென்றடைய மற்ற தேவர்களும் கணங்களும் வெளியே நிற்க, முன்பு தம்மை அர்ச்சித்த சீலம் மிக்க உடைய அந்தணர் உருக்கொண்டு தனியே சென்றடைந்தார்.

"பரவாய் திறவாய்" என்றழைத்தது

சென்று மணிவா யிற்கதவஞ் செறிய அடைத்த அதன் முன்பு
நின்று "பரவாய் திறவாய்" என் றழைப்ப நெறிமென்
குழலாரும்

ஒன்றுந் துயிலா துணர்ந்தயர்வார் "உடைய பெருமான் பூசனைசெய்
துன்றும் புரிநூல் மணிமார் .ர் போலும் அழைத்தார்" எனத்துணிந்து 677

வி.ரை :- பரவையார் இல்லத்திற்கு ஒரு அந்தணராகத் தனியாகச் சென்று நன்றாக அடைக்கப்பட்டிருந்த அழகிய மணிகள் பதித்த கதவுமுன்நின்று "பரவாய் திறவாய்" என்று அழைத்திடச், செறிந்த மென்மையான கூந்தலையுடைய பரவையாரும், "கோயிலுடைய பெருமானுக்குப் பூசனை செய்யும் பூணூல் அணிந்த மார்பர் அந்தணர்தான் அழைத்தார் போலும்" எனத்துணிந்து சென்றார்.

பரவையார் கதவைத் திறந்தது

"பாதி மதிவாழ் முடியாரைப் பயில்பூ சனையின் பணிபுரிவார்
பாதி இரவில் இங்கணைந்த தென்னோ!" என்று பயமெய்திப்
பாதி உமையாள் திருவடிவிற் பரம ராவ தறியாதே
பாதி மதிவாள் நுதலாரும் பதைத்துவந்து கடைதிறந்தார் 678

வி.ரை:- "பிறைநிலவைச் சடையில் அணிந்த பிரானுக்குப் பூசனை செய்யும் அந்தணர் பாதி இரவில் இங்கு வந்த தன் காரணம் என்னவோ? என்று உமையம்மையை உடலில் பாதியாகக் கொண்ட பரமர் எழுந்தருளியது தெரியாமலே பிறைநெற்றியுடைய பரவையாரும் வந்து கதவைத் திறந்தார்.

'இந்த இரவில் வந்த தன் காரணம் என்ன?' என்றது

மன்னும் உரிமை வன்தொண்டர் வாயில் தூதா வாயிலிடை
முன்நின் றாரைக் கண்டி றைஞ்சி "முழுதும் உறங்கும் பொழுதின் கண்

என்னை ஆளும் பெருமான் இங் கெய்தி அருளி னார் என்ன
மின்னு மணிநூல் அணிமார்பீர் எய்த வேண்டிற்றெ ன்?''
என்றார். 679

வி.ரை :- பொருந்திய உரிமை கொண்ட வன் தொண்டர் விடுத்த தூதாக வாயிலிடை முன்நின்ற அந்தணப் பெருமானைக் கண்டு வணங்கி, ''ஊர் முழுதும் உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், என்னை ஆளும் இறைவன் இங்கு எழுந்தருளினார் போன்று மின்னும் பூணூல் அணிந்த மார்பையுடையீர்! இங்கு வந்த தன் காரணம் என்ன? என்றார்.

கங்கைநீர் கரந்த வேணி கரந்தவர் அருளிச் செய்வார்
''நங்கைநீ மாறாது செய்யின் நான் வந்த துரைப்ப''தென்ன
அங்கயல் விழியி னாரும் '' அதனைநீர் அருளிச் செய்தால்
இங்கெனக் கிசையு மாகில் இசையலாம்'' என்று
சொல்லி 680

வி. ரை :- பரவையாரின் சொற்கேட்ட கங்கை நீரை முடியில் மறைத்த இறைவன், ''பெண்ணே! நீ மறுக்காது செய்தால் நான் வந்ததன் காரணம் கூறுவேன்'' என்று அருளிச் செய்தார். அதற்கு அழகிய கயல் விழியினாரும் ''நீர் சொல்ல வந்ததைச் சொன்னால் இங்கு அது என்னால் இசையுமானால் இசையலாம்'' என்று சொன்னார்.

''என்நினைந் தணைந்த தென்பால் இன்னதென் றருளிச்
செய்தால
பின்னைய தியலு மாகில் ஆம்'' எனப் பிரானார் தாமும்
''மின்னிடை மடவாய்! நம்பி வரஇங்கு வேண்டும்'' என்ன
நன்னுத லாருஞ் ''சால நன்று! நம்பெருமை''
என்பார். 681

வி.ரை:- 'என்ன நினைந்து என்னிடம் வந்தது என்பதை அருளிச் செய்தால், பின்னும் அது இயலு மாகில் ஆம்'' என்று கூற இறைவனும், ''மின்னல் இடை மடப்பாவாய்! நம்பி இங்கு வரவேண்டும்'' என்று கூற நல்ல நெற்றியையுடையவரும். ''உங்கள் பெருமை நன்றாக இருக்கிறது'' என்றார்.

''பங்குனித் திருநாளுக்குப் பண்டுபோல் வருவா ராகி
இங்கெனைப் பிரிந்து போகி ஒற்றியூர் எய்தி அங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக் கிங்கொரு சார் வுண்டோ?நீர்
கங்குலின் வந்து சொன்ன காரியம் அழகி!''
தென்றார் 682

வி.ரை :- பங்குனித் திருநாளுக்கு முன்பு போல் பொன் கொண்டு வருவார் என்று நான் காத்துக்கிடந்த என்னைப் பிரிந்து ஒற்றியூர் சென்று அங்கே சங்கிலி யாரிடம் தொடர்பு கொண்டவருக்கு இங்கு வந்து சேர் வதற்கிடமுண்டோ? நீர் இந்த இரவில் வந்து சொன்ன காரியம் அழகிது'' என்றார்.

''நம்பியை மன்னித்து ஏற்றுக்கொள்'' என்றது

நாதரும் அதனைக் கேட்டு ''நங்கை நீ நம்பி செய்த
ஏதங்கள் மனத்துக் கொள்ளா தெய்திய வெகுளி நீங்கி
ஒாதக ஒழித்தற் கன்றோ நுன்னையான் வேண்டிக்
கொண்ட
தாதலின் மறுத்தல் செய்ய அடா''தென அருளிச்
செய்தார் 683

வி.ரை :- ஈசனும் அதனைக் கேட்டுப் பெண்ணே! நீ நம்பி ஆரூரர் செய்த குற்றங்களை மனத்துள் கொள் ளாமல் சினம் நீக்கித் துன்பம் ஒழித்தற்கு அன்றோ உன்னை நான் வேண்டிக்கொண்ட தாதலின் மறுத்துக் கூறவேண்டாம்'' என அருளிச் செய்தார்.

பரவையார் மறுத்தது

அருமறை முனிவ ரான ஐயரைத் தைய லார்தாம்
"கருமம்ஈ தாக நீர்இக் கடைத்தலை வருகை மற்றும்
பெருமைக்குத் தகுவ தன்றால் ஒற்றியூர் உறுதி பெற்றார்
வருவதற் கிசையேன் நீரும் போம்" என மறுத்துச்
சொன்னார் 684

வி.ரை:- அருமறைகளில் தேர்ந்த முனிவர் அந்தணரைப் பரவையார் பார்த்து "இந்தக் காரியத்திற்காக நீர் எமது இல்லத்துக்கு வந்தது பெருமைக்கு உரியதன்று. திருஒற்றியூரில் சென்று ஒட்டிக் கொண்டவர் இங்கு வருவதற்கு இசையேன் நீரும்போம்" என்று மறுத்துரைத்தார்.

ஈசன் நம்பியிடம் மீண்டது

நம்பர்தாம் அதனைக் கேட்டு நகையும்உட் கொண்டு
மெய்ம்மைத்
தம்பரி சறியக் காட்டார் தனிப்பெருந்தோழ னார்தம்
வெம்புறு வேட்கை காணுந் திருவிளை யாட்டின் மேவி
வம்பலர் குழலி னார்தாம் மறுத்ததே கொண்டு
மீண்டார் 685

வி.ரை :- ஈசன் பரவையார் சொன்னது கேட்டு உள்ளத்துள் புன்னகைபூத்துத் தாம் யார் என்னும் உண்மையை அறியக் காட்டாமல் தனது ஒப்பற்ற தோழனார் சுந்தரரின் காமவேட்கை காணும் திருவிளையாட்டில் நாட்டம் கொண்டு மணம் வீசும் கூந்தலாள் பரவையார் மறுத்துரைத்த செய்தியையே கொண்டு நம்பியிடம் சென்றார்.

நம்பியாரூரரின் புலம்பல்

தூதரைப் போக விட்டு வரவு பார்த்திருந்த தொண்டர்
"நாதரை அறிவிலாதே நன்னுதல் புலவி நீக்கிப்
போதரத் தொழுதேன்" என்று புலம்புவார் பரவையாரைக்
காதலில் இசைவு கொண்டு வருவதே கருத்துட்
கொள்வார் 686

வி.ரை:- தூதரைப் பரவையாரிடம் அனுப்பிய சுந்தரர் அவரது வரவை எதிர்பார்த்து "நான் அறிவில்லாமல் எம் தலைவரைப் பரவையின் புலவி நீக்கி வர வேண்டும்" எனத் தொழுதேன் என்று புலம்பினாலும் பரவையாரைக் காதலில் விருப்பம் பெற்று இறைவன் வருவார் என்ற கருத்துடன் இருந்தார்.

"போய் அவள் மனையில் நண்ணும் புண்ணியார்
என்செய் தாரோ
நாயனரர் தம்மைக் கண்டால் நன்னுதல் மறுக்குமோதான்
ஆயஎன் அயர்வு தன்னை அறிந்தெழுந் தருளி னார்தாம்
சேயிழை துனிதீர்த் தன்றி மீள்வது செய்யார்" என்று. 687

வி.ரை:- அவள் மனைக்குச் சென்ற புனிதர் என்ன செய்தாரோ? லோக நாயகன் தம்மைக் கண்டும் சிறந்த நெற்றியுடைய பரவை மறுப்பாளோ? எனக்கு உள்ள துன்பத்தை அறிந்து அங்கு சென்ற ஈசன் பரவையின் புலவி நீட்டத்தைத் தீர்க்காமல் இங்கு மீளார்" என்று புலம்பினார்.

அ,ரை:- நன்னுதல்— அழகிய நெற்றியுடைய பரவை. சேயிழை-தேர்ந்த ஆபரணம் அணிந்த பரவை. துனி—ஊடல்.

வழிஎதிர் கொள்ளச் செல்வர் வரவுகா ணாது மீள்வர்
அழிவுற மயங்கி நிற்பர் அசைவுடன் இருப்பர்" நெற்றி

விழியவர் தாழ்த்தார்'' என்று மீளவும் எழுவர் மாரன்
பொழிமலர் மாரி வீழ ஒதுங்குவர் புன்க ணுற்றார் 688

வி.ரை :- வழிமேல் விழி வைத்துப் பார்த்துச்சிறிது தூரம் சென்று வருகிறாரா எனப்பார்த்து வராமையால் மீண்டும் வீடு வந்து சேர்வார். மயக்க மடைந்து அறிவு அழிந்து நிற்பார் ஆசையுடன். ''நெற்றிக் கண்ணர் தாமதிக்கமாட்டார்'' என்று மீண்டும் சென்று பார்க்க எழுவார். மனமதன் மலரம்பு பொழியத் தனித்து ஒதுங்கித் துன்புறுவார்.

அ.ரை :- புன்கணுற்றார் — துன்பமடைந்தார்.

ஈசன் திரும்பிவர எதிர்கொண்டோடியது

பரவையார் தம்பால் நம்பி தூதராம் பாங்கிற் போன
அரவணி சடையார் மீண்டே அறியுமா றணையும் போதில்
இரவுதான் பகலாய்த் தோன்ற எதிரெழுந் தணையைவிட்ட
உரவுநீர் வெள்ளம் போல ஓங்கிய களிப்பிற் சென்றார் 689

வி.ரை:- நம்பி ஆரூரது தூதராகப் பரவையரிடம் சென்ற பாம்பணிந்த சடையப்பர் மீண்டும் வருவது கண்ட நம்பி ஆரூரருக்கு அன்று அந்த இராப்பொழுது பகலாகத் தோன்ற எதிரே எழுந்து பரந்த நீர்வெள்ளம் பாய்ந்தோடுவது போன்று ஓங்கி எழுந்த மகிழ்ச்சியில் ஓடினார்.

அ.ரை:- பாங்கில்—தன்மை, முறைமை அறியுமாறு—நம்பி ஆரூரர் தாம் வருவது அறிந்து கொள்ளுமாறு

ஐயரிடம் கேட்டது

சென்றுதம் பிரானைத் தாழ்ந்து திருமுகம் முறுவல் செய்ய
ஒன்றிய விளையாட் டோரார் ''உறுதிசெய் தணைந்தார்''
என்றே

அன்றுநீர் ஆண்டு கொண்ட அரனுக்குத் தகவே செய்தீர்
இன்றிவள் வெகுளி எல்லாந் தீர்த்தெழுந் தருளி'' என்றார்
690

வி.ரை:- எதிர் கொண்டு சென்று தம்பி ஈசனைத் தாழ்ந்து தொழுது புன்னகை பூத்து, இறைவனார் திரு விளையாட்டை அறியாதவராய்ப் பரவையாரின் விருப்பம் தெரிந்து வந்தார் என்று நினைந்து, ''அன்று நீர் என்னை ஆட்கொண்டதற்கு ஈடாக இன்று இவள் சினம் எல்லாம் தீர்த்து எழுந்தருளினிர்'' என்று கூறினார்.

அ-ரை:- தகவு—ஈடுகட்டுதல்.

ஐயர் சொன்ன பதில்

அம்மொழி விளம்பும் நம்பிக் கையர் தாம் அருளிச் செய்வார்
''நம்மை நீ சொல்ல நாம்போய்ப் பரவைதன் இல்லம் நண்ணிக்
கொம்மை வெம் முலையி னாட்குன் திறமெலாங் கூறக் கொள்ளாள்
வெம்மைதான் சொல்லி நாமே வேண்டவும் மறுத்தாள்'' என்றார் 691

வி.ரை:- நம்பி ஆரூரர் அவ்வாறு சொல்லக் கேட்ட ஐயர், ''எம்மிடம் சொன்னபடி நான் பரவையின் இல்லம் சென்று இளங்கொடி அழகு முலையினாள் பரவைக்கு உன்னைப் பற்றியெல்லாம் கூறியும் ஏற்றுக் கொள்ளாமல் சினம் கொண்டு யாம் வேண்டிக் கேட்டும் மறுத்து விட்டாள்'' என்றார்.

வன்தொண்டர் கூறிய பதில்

அண்ணலார் அருளிச் செய்யக் கேட்டது ஆ ரூரர்தாமும்
துண்ணென நடுக்கம் உற்றே தொழுது ''நீர் அருளிச் செய்த

வண்ணமும் அடியாளான பரவையோ மறுப்பாள் நாங்கள்
எண்ண ஆர் அடிமைக் கென்ப தின்றறி வித்தீர்!'' என்று
692

வி.ரை:- அண்ணல் அருளிய மொழி கேட்ட ஆரூரர் மிகவும் நடுக்கமுடைந்து தொழுது ''தேவரீர் அருளிச் செய்த தன்மையையும் பரவையார் மறுப்பளோ? நாங்கள் அடிமைகள் என்று எண்ணுவதற்கு என்ன இயல்பு எங்களிடம் இருக்கிறது?'' என்றார்-

அ.ரை:- அருளிச் செய்த வண்ணம்—நீர் சென்று பரவையாரிடம் அறிவித்த தன்மை. அடியாளான பரவை மறுப்பாளோ—உமது அடியாளான பரவை மறுத்துக் கூறுவாளோ (ஓகாரத்தை மாற்றி அமைத்துக்காண்க). நாங்கள் எண்ண ஆர் அடிமைக்கு என்பதின் அறிவித்தீர்—நாங்கள் தங்களின் அடியார்கள் என்று சொல்லிக் கொள்ள எண்ணம் கொள்ள என்ன இருக்கிறது என்பதை அறிவித்தீர். நாங்கள் உமது அடியார்கள் இல்லை என்றாக்கினீர் எனக் காண்க.

நம்பி ஆரூரர் மேலும் கூறியது

''வானவர் உய்ய வேண்டி மறிகடல் நஞ்சை உண்டீர்
தானவர் புரங்கள் வேவ மூவரைத் திவிர்த்தாட் கொண்டீர்
நான்மறைச் சிறுவர்க் காகக் காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை உமக்கின் றானால் என்செய்வீர் போதா!''
தென்றார். 693

வி.ரை:- தேவர்கள் உயிர் பிழைத்திருக்கப் பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டீர். பகைவர்களின் மூன்று கோட்டைகளையும் அழித்து ஆட்கொண்டீர் அந்தணச் சிறுவனுக்காகக் காலனை உதைத்து

உமதனப்புக் குரிமையாக்கினீர். அவர்கள் செலுத்திய அன்பு எனக்கு உம்மிடத்தில் இல்லை என்றானால் நீர் திரும்பி வராது என் செய்வீர்? என்றார்.

அ.ரை:- தானவர்—பகைவர். பகைமை கொண்ட சிவனடியார்கள். நான் மறைச் சிறுவன்— மார்க்கண் டேயர். யான் மிகை உமக்கின்றானால்—அவர்கள், செலுத்திய அளவு அன்பு எனக்கு இல்லை என்றான்ால் போதாது என் செய்வீர்—திரும்பிவராது என் செய்வீர்.

"விடும் உயிர்" என்று எழுந்தது

"ஆவதே செய்தீர் இன்றென் அடிமைநீர் வேண்டாவிட்டால்
பாவியேன் தன்னை அன்று வலிய ஆட் கொண்ட
பற்றென்?
நோவுமென் அழிவுங் கண்டீர் நுடங்கிடை அவள்பால் இன்று
மேவுதல் செய்யீ ராகில் விடும் உயிர்" என்று வீழ்ந்தார்
694

வி.ரை:- எனக்கு என்ன தகும் என்று நினைத் தீரோ அதை மட்டுமே செய்தீர். இன்று என் அடிமை நிலை தேவரீருக்கு வேண்டாமென்றால் பாவியாகிய என்னை அன்று வலிய வந்து ஆட்கொண்டதன் பற்று தான் என்ன? என் நோவும் நான் அழிவதும் கண்டீர். நுடங்கிடையாள் பரவையிடம் இன்று நீர் செல்ல வில்லையானால் என் உயிரை விடுவேன்" என விழுந்தார்.

அ.ரை:- ஆவதே செய்தீர்—அவரவரது பக்தி அன்புக்குத் தக்கவாறு செய்தீர் அது போன்று இன்று என் அன்புக்குத் தக்கவாறு சென்று வந்நீர் என்று இகழ்ச்சியால் உணர்த்தினார் என்க.

ஈசன் "மீண்டும் செல்வோம்'! என்றது

தம்பிரான் அதனைக் கண்டு தரியாது தளர்ந்து வீழ்ந்த
நம்பியை அருளால் நோக்கி "நாம் இன்னம் அவள் பாற்
போய் அக்
கொம்பினை இப்போ தேநீ குறுகுமா கூறு கின்றோம்
வெம்புறு துயர்நீங்'' கென்றார் வினைஎலாம் விளைக்க
வல்லார் 695

வி.ரை:- சோர்ந்து விழுந்த ஆரூரரைக் கண்ட ஈசனும் மனம் தாங்காது நம்பியை அருளுடன் பார்த்து "நாம் இப்பொழுதே மறுபடியும் அவளுடன் சென்று மலர்க்கொம்பு போன்ற பரவையை நீ அடையுமாறு சொல்கின்றோம். கொடிய துயர் நீங்கியிருப்பாய்" என்று செய்வனவற்றையெல்லாம் செய்தருளும் ஈசன்.

ஆரூரர் கொண்ட கலக்கம் நீங்கியது

மயங்கிய நண்பர் உய்ய வாக்கெனும் மதுரவாய்மை
நயங்கிளர் அமுதம் நல்க நாவலூர் மன்னர் தாமும்
"முயங்கிய கலக்கம் நீக்கி உம்மடித் தொழும்ப னேனைப்
பயங்கெடுத் திவ்வா றன்றோ பணிகொள்வ!'' தென்று
போற்ற 696

வி.ரை:- மயங்கி விழுந்த சுந்தரர் உய்யும் சொல்லாகிய இனிய உண்மையான சொல்லானது வெந்தழியும் வன் தொண்டருக்கு உயிர் காக்கும் அமுதம் என்று வந்து சேர நாவலூர் மன்னரும் மனதிற் கொண்ட கலக்கம் நீங்கப் பெற்று உமது தொண்டனாகிய நான் உமதடிகளைத் தொழுதேன்; என் அச்சத்தை நீக்கி இவ்வாறு பணி செய்வதன்றோ கருணை என்று போற்றினார்.

அ.உரை:- நயம்கிளர்— ஆவலைத்தூண்டும். முயங்கிய—உள்ளத்தில் எழுந்த. தொழும்பன்—தொண்டன் பயங்கெடுத்து இவ்வாறு அன்றோ பணி கொள்வது— இவ்வாறு என் பயத்தை நீக்கிப் பணி செய்வது அன்றோ உன் கருணை.

ஐயர் பரவை மாளிகை சென்றது

அன்பர் மேற் கருணை கூர ஆண்டவர் மீண்டுஞ் செல்லப்
பின்பு சென் றிறைஞ்சி நம்பி பேதுற வோடு மீண்டார்
முன்புடன் போதா தாரும் முறைமையிற் சேவித் தேகப்
பொன்புரி சடையார் மாதர் புனிதமா ளிகையிற்சென்றார்
697

வி.உரை:- தமது நண்பர் சுந்தரரிடம் கருணை கூர்ந்த ஆண்டவர் மீண்டும் பரவையரிடம் செல்லப் புறப்பட்டபோது சுந்தரர் சிறிது தூரம் சென்றுவேண்டி, மயக்கத்துடன் திரும்பினார். முன் சென்ற கடவுளுடன் தேவர்களும் முனிவர்களும் முறைப்படி சேவித்துச் செல்ல பொன்போன்ற சடாமுடியாரும் பரவையரது புனிதமாளிகை சென்றடைந்தார்.

அ.உரை :- பேதுறவு—மயக்கம், கலக்கம். முன்புடன் போதாதாரும்—உடன் செல்லும் தேவர்களும் முனிவர்களும்.

பரவை கொண்ட கலக்கம்

மதிநுதற் பரவை யார்தாம் மறையவர் போன பின்பு
முதுமறை முனியாய் வந்தார் அருளுடை முதல்வ ராகும்
அதிசயம் பலவுந் தோன்ற ''அறிவுற்றே அஞ்சிக் கெட்டேன்
எதிர்மொழி எம்பி ரான்முன் என்செய மறுத்தேன்'' என்பார்
698

வி.ரை :- பரவையாரும் ஐயரைத் திருப்பி அனுப்பியபின்பு முதிய அந்தணராக வந்தவர் அருளுடைய முதல்வராகிய சிவபெருமானேயாகும் என்று தோன்றிய நிமித்தங்கள் கண்டு "அறிவு கெட்டு அச்சமுற்றுக் கேட்டேன் எம்பிரான்முன் மறுத்துப் பேசினேன்" என்று கலங்கினார்.

கண்துயில் எய்தார் வெய்ய கையற வெய்தி" ஈங்கின்
றண்டர்தம் பிரானார் தோழர்க் காகஅர்ச் சிப்பார் கோலம்
கொண்டணைந் தவரை யான்உட் கொண் டிலேன்
பாவி யேன்" என்
றொண்சுடர் வாயி லேபார்த் துழையரோ டழியும் போதில்.
699

வி.ரை :- கலக்கமடைந்து கண் துயிலாது. செயலற்று வருந்தி, "தேவர்களின் தேவர் தமது அன்பர்க்காக அந்தணர் வேடம் பூண்டு இங்கு வந்தவரை நான் மனத்தில் கொள்ளாத பாவியானேன்" என்று அழகிய ஒளிவீசும் வாயிலையே தமது தோழியரோடும் பார்த்தழிந்து நின்றார்.

அ.ரை :- கையறவெய்தி—கைகால் வூராது நின்று. அர்ச்சிப்பார் கோலம்—அந்தணர் வேடம். உழையோர்—தோழியர்.

பரவை மாளிகையுட் புகுந்தது

வெளியுறு கொன்றை வேணி விமலருந் தாமாந் தன்மை
அறிவுறு கோலத் தோடும் அளவில்பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோகர் முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில்சீர்ப் பரவை யார்தம் மாளிகை புகுந்தார் வந்து
700

வி.ரை : தேன் சிந்தும் கொன்றை மாலையணிந்த முடியையுடைய விமலன் சிவபெருமான் அறிவே உருப் பெற்ற தன்மையின் கோலத்தோடு அளவில்லாத பூத கணங்கள் செறிந்து, தேவர், யோகிகள், முனிவர்கள் சூழ்ந்து வரக் குறறமற்ற சீர்மிகு பரவையார் மாளிகை யில் வந்து புகுந்தார்.

அ.ரை :- வெறி—தேன். தாமம்—மாலை. மறு — குற்றம்.

தென்கயிலையான பரவை மாளிகை

பாரிடத் தலைவர் முன்னாம் பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்தர் இயக்கர்கள் நிறைத லாலே
பேரரு ளாளர் எயதப் பெற்றமா ளிகைதான் தென்பால்
சீர்வளர் கயிலை வெள்ளித் திருமலை போன்ற தன்றே.
701

வி.ரை :- பூத நாதர் முன்பாகப் பல கண நாதரும் தேவர்களும் நேர்மையுடைய முனிவர்கள், சித்தர்கள், இயக்கர்கள் ஆகியோர் நிறைந்து வழிதலாலே பேரரு ளாளர் சிவபெருமான் சென்றடைந்த பரவையாரது மாளிகை சீர்மிக்க கயிலை வெள்ளித்திருமலை தெற்கே வந்தது போன்றதானது.

அ.ரை :- பாரிடத் தலைவர்—பூதநாதர்.

பரவையார் ஈசன் பாதம் தாழ்ந்தது

ஐயர் அங் கணைந்த போதில் அகிலலோ கத்துள் ளாரும்
எய்தியே செறிந்து சூழ எதிர்கொண்ட பரவை யார்தாம்
மெய்யுறு நடுக்கத் தோடு மிக்கெழு மகிழ்ச்சி பொங்கச்
செய்யதா ளிணைமுன் சேர விரைவினாற் சென்று
வீழ்ந்தார். 702

வி.ரை :- ஐயர் அங்குச் சென்றடைந்த போது எல்லா உலத்தில் உள்ளவர்களும் ஒன்று சேர்ந்து நெருங்கிச் சூழ, எதிர்கொண்டழைக்கச் சென்ற பரவை யாரும் உடல் நடுக்குற்று உள்ளத்துள் மகிழ்ச்சி பொங்க, ஈசன் சிவந்த பாதங்களில் விழுந்து வணங்க விரைந்து சென்று விழுந்தார்.

கடவுள் பரவையாரிடம் சொன்னது

அரிஅயற் கரியார் தாமும் ஆயிழை யாரை நோக்கி
''உரிமையால் ஊரன்ஏவ மீளவும் உன்பால் வந்தோம்
முருகலர் குழலாய்! இன்னம் முன்புபோல் மறாதே நின்பால்
பிரிவுற வருந்து கின்றான் வரப்பெற வேண்டும்' என்றார்.
703

வி.ரை :- அரியும் அயனும் பார்க்க அரியராகிய சிவபெருமான், ஆயிழை பரவையாரை நோக்கி ''திரு ஆரூரன் என்மீது கொண்ட உரிமையால் மீண்டும் என்னைத் தூது செல்ல ஏவ, மீண்டும் உன்னிடம் வந்தோம் தேன்சிந்தும் கூந்தலையுடைய பரவையே! முன்புபோல் மீண்டும் மறுத்துரையாதே. உன்னைப் பிரிந்து வருந்துகின்றான். அவன் இங்கு வர அனுமதிக்க வேண்டும்'' என்றார்.

பரவையார் இசைவுரைத்தது

பெருந்தடங் கண்ணி னாரும் பிரான் முன்பு மிகவும் அஞ்சி
வருந்திய உள்ளத் தோடு மலர்க்கரங் குழல்மேற் கொண்டே
''அருந்திரு மறையோ ராகி அணைந்தீர் முன் அடியேன் செய்த
இருந்தவப் பயனாம் என்ன எய்திய நீரோ?'' என்பார்.
704

வி.ரை :- நீண்டகன்ற விழியினாள் பரவையாரும் இறைவன் முன்பு மிகவும் அச்சமுடன், மிகவும் வருத்த மடைந்த உள்ளத்துடன், மலர்போன்ற கைகளைத் தலைமேல் குவித்து ''அரியதொரு அந்தணராகி இங்கு எழுந்தருளியது அடியேன் செய்த பெருந்தவப் பயனாம் என்றுகூறும்படி எழுந்தருளியது இறைவ! நீரே'' என்றார்.

துளிவளர்கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பஞ் செய்வார்
'ஒளிவளர் செய்ய பாதம் வருந்தஓர் இரவு மாறா
தளிவரும் அன்பர்க் காக அங்கொடிங் குழல்வீ ராகி
எளிவரு வீரு மானால் என்செய்கேன் இசையா!''தென்றார். 705

வி.ரை :- கண்களில் நீர் துளித்துப் பெருகத் தொழுது ''ஒளிவீசும்சிவந்த பாதங்கள் வருந்த ஓர்இரவு முழுதும் ஒப்பற்ற தமது அன்பர்க்காக அங்குமிங்கும் ஓடி உழல் வீராகி எளிமையுடையவரானால் இசையாது என்செய்வேன்'' என்று விண்ணப்பம் செய்தார்.

அ.ரை :- எளிவருதல் – கீழ்மையடைதல்.

தூதர் திரும்புச் சென்றது

''நங்கைநின் தன்மைக் கேற்கும் நன்மையே மொழிந்தாய்'' என்று
மங்கையோர் பாகம் வைத்த வள்ளலார் விரைந்து போகத்
திங்கள்வா ணுதலி னாருஞ் சென்றுபின் இறைஞ்சி மீண்டார்
எங்களை ஆளும் நம்பி தூதர்மீண் டேகு கின்றரர். 705

வி.ரை :- ''பெண்ணே! உனது நற்குணங்கட்கு ஏற்ப நல்லதையே சொன்னாய்'' என்று பெண்ணை ஒரு பாகமாக வைத்த வள்ளலார் சிவபெருமான் விரை

வாகத் திரும்பிச் செல்ல பிறைநுதலாள் பரவையாரும் வணங்கி வழியனுப்பிச் சென்று மீண்டார். எங்களை ஆளும் நம்பியின் தூதர் மீண்டும் செல்கின்றார்,

ஆதியும் மேலும் மாலயன் நாடற் கருளாதார்
தூதினில் ஏகித் தொண்டரை ஆளுந் தொழில் கண்டே
வீதியில் ஆடிப் பாடி மகிழ்ந்தே மிடைகின்றார்
பூதியில் நீடும் பல்கண நாதப் புகழ்வீரர். 707

வி.ரை :- தமது அடியையும் முடியையும் திருமாலும் அயனும் சென்றடைதற்கு அருளாத சிவபெருமான் தூதராகச் சென்று வன் தொண்டரை ஆட்கொள்ளும் செயல்கண்ட மகிழ்ச்சியில் வீதியில் ஆடிப் பாடி மகிழ்ந்து விபூதியில் நிறைந்த பல கணங்களுடன் நாதப் புகழ் வீரர் விரைந்து செல்கின்றார்.

அ.ரை :- ஆதியும் மேலும் — அடியும் முடியும். பூதி—விபூதி.

சுந்தரரிடம் வந்தது

அன்னவர் முன்னும் பின்னும் மருங்கும் அணைவெய்த
மின்னிடை யார்பால் அன்பரை உய்க்கும் விரைவோடும்
சென்னியில் நீடுங் கங்கை ததும்பத் திருவாரூர்
மன்னவ னார்அம் மறையவ னார்பால் வந்துற்றார். 708

வி.ரை :- அந்தணர் முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் தேவர், கணங்கள் சேர்ந்துவர், மின்னிடையார் பரவையாரிடம் அன்பர் சுந்தரரை அனுப்பும் வேகத்துடன் தலையில் நீண்ட கங்கை ஆறு ததும்பத் திருவாரூர் மன்னவனார் தியாகேசப் பெருமான் அந்த மறையவனார் சுந்தரரிடம் வந்து சேர்ந்தார்.

சுந்தரர் மனநிலை

அன்பரும் "என்பால் ஆவி அளிக்கும் படிபோனார்
என் செய்து மீள்வார் இன்னமும்?" என்றே இடர்கூரப்
பொன்புரி முந்நூல் மார்பினர் செல்லப் பொலிவீதி
முன்புற நேருங் கண்ணிணை தானும் முகிழாரால். 709

வி.ரை:- "சுந்தரரும் எனக்கு உயிரளிக்கும் வகையில் சென்றார். என்ன செய்தி கொண்டு மீண்டும் வருவார்?" என்று துன்பம் மேலிட பொன்போன்ற முப்புரிநூல் மின்ன வீதியின் முற்புறத்தில் கண்களை மூடாமல் தானும் காத்துக் கிடந்தார்.

"என் சொல்லுவர்" என ஏங்கியது

அந்நிலை மைக்கண் மன்மதன் வாளிக் கழிவார்தம்
மன்னுயிர் நல்குந் தம்பெரு மானார் வந்தெய்த
முன்னெதிர் சென்றே மூவுல குஞ்சென் றடையுந்தாள்
சென்னியில் வைத் "தென் சொல்லுவர்" என்றே
தெளியாதார் 710

வி.ரை:- அந்த நிலையில் மைதீட்டிய கண்ணன் மன்மதனது அம்புபட்டு அழிந்து கொண்டிருக்கும் ஆரூரர் தமக்கு இனிய உயிரைக் கொடுக்கும் பெருமானார் சிவபெருமான் வந்துசேர, அவர்முன் எதிர்சென்று மூவுலகையும் தாவும் திருத்தாள்களைத் தலைமேல் வைத்து "என்ன சொல்லுவாரோ" என்று தெளிவு பெறாதவரானார்.

"பரவையின் சினம் தணித்தோம்" என்றது

"எம்பெருமான்நீர் என்னுயிர் காவா திடர்செய்யும்
கொம்பனை யாள்பால் என்கொடு வந்தீர் குறை" என்னத்

தம்பெரு மானும் ''தாழ்குழல் செற்றந் தணிவித்தோம்
நம்பி இனிப்போய் மற்றவள் தன்பால் நணு''கென்ன 711

வி.ரை:- ''எம் இறைவா! தேவரீர் எனது உயிர் காவாது துன்பம் செய்திடும் மலர்க்கொம்பு போன்ற பரவையரிடமிருந்து என்ன செய்தி கொண்டு வந்தீர்? எனக்கு உரை'' என்று கேட்க, அதாவது எனது குறை என்னவாயிற்று என்று கேட்க ஈசனும், ''நீண்ட கூந்தலாள் சினம் தணித்து வந்தோம்'' நம்பி? இனி நீ போய் அவளிடம் சென்ற சேர்ந்திடு'' என்றனர்.

அ.ரை;- என் கொடு வந்தீர் குறை—என் குறை நீங்கஎன்ன செய்தி கொண்டு வந்தீர்?

சுந்தரர் போற்றியது

நந்திபிரானார் வந்தருள் செய்ய நலமெய்தும்
சிந்தையுள் ஆர்வங் கூர்களி எய்தித் திகழ்கின்றார்
''பந்தமும் வீடும் நீர் அருள் செய்யும் படி செய்தீர்
எந்தைபி ரானே என் இனி என்பால் இடர்?'' என்றர்ர் 712

வி.ரை:- நந்தியம் பெருமான், சிவபெருமான் எழுந்தருளி நலம் செய்தருளிட மனத்தினுள் அர்வம் பொங்கித் திகழும் சுந்தரர், பற்றையும் வீட்டையும் நீர் அருள் செய்யும் முறைமையில் அருள் செய்தீர். எந்தை பிரானே; இனி என்னால் இடர்'' என்ன இருக்கிறது?'' என்றார்.

என்றடி வீழும் நண்பர்தம் அன்புக் கெளிவந்தார்
''சென்றணை நீஅச் சேயிழை பால்'' என்றருள் செய்து
வென்றுயர் சேமேல் வீதி விடங்கப் பெருமாள்தம்
பொன்திகழ் வாயிற் கோயில் புகுந்தார் புவிவாழ 713

வி.ரை :- என்று திருவடிகளில் விழும் அன்பர்க்கு எளிதாக வந்த இறைவன், "நீ அந்தச் சேயிழை பரவையரிடம் சென்று சேர்ந்திரு" என்று அருள் மொழிந்து, உலகம் வாழ. வெற்றிவாகை சூடும் இடபத்தின் மீதமர்ந்து வீதி விடங்கப் பெருமான் தமது பொன்னொளி வீசும் வாயிலையுடைய கோயிலினுட் புகுந்தார்.

சுந்தரர் பரவையர் மாளிகை சென்றது

தம்பிரா னார்பின் சென்று தாழ்ந்தெழுந் தருளான் மீள்வார்
"எம்பிரான் வல்ல வா" றென்றெய்திய மகிழ்ச்சியோடும்
வம்பலர் குழலார் செம்பொன் மாளிகை வாயில் நோக்கி
நம்பியா ரூரர் காதல் நயந்தெழுந் தருளும் போது 714

வி.ரை:- வீதி விடங்கப் பெருமானைச் சிறிது தூரம் பின்தொடர்ந்து தாழ்ந்து வணங்கி மீண்டு, எம்பிரான் அருளால் முடியாதது என்ன இருக்கிறது என்று மகிழ்ச்சி பொங்கக் கூறி மணம் வீசும் கூந்தலாள் பரவையாரது பசும் பொன் மாளிகை வாயிலை நோக்கிக் காதல் மேலீட்டால் எழுந்தருளும் போது

அ.ரை:- எம்பிரான் வல்லவாறென்— எம்பிரானால் ஆகாதது என்ன இருக்கிறது.

தேவர் மலர்மாரி பொழிந்தது

முன் துயில் உணர்ந்து சூழ்ந்த பரிசனம் மருங்கு மொய்ப்ப
மின் திகழ் பொலம்பூ மாரி விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன் றல்செய் மதுர சீத சீகரங் கொண்டு மந்தத்
தென்றலும் எதிர்கொண் டெய்துஞ் சேவகம் முன்பு காட்ட
715

வி.ரை:- இவ்வாறு பரவையர் மாளிகைக்கு நம்பி ஆரூரர் எழுந்தருளியபோது முன்பாகத் தூக்கம் நீங்கி விழித்தெழுந்த அடியார்கள் அருகில் வந்து மொய்த்துக் கொண்டிருக்க, மின் போன்று ஒளிரும் பொன்மலர் மாரி தேவர்கள் பொழிந்து வாழ்த்த, வாசனையைச் சுமந்து வரும் மந்தமாருதம் நீர்த்துளி கொண்டு தென்றல் எதிர்கொண்டு வந்து பணி செய்து காட்ட.

அ.ரை:- முன்துயில் உணர்ந்து— அதிகாலையில் கண்விழித்து. பொலம்பூ—பொன்மலர் மன்றல் — வாசனை. சீத—குளிர்ந்த சீகரம்—நீர்த்துளிகள். மந்தத் தென்றல்—மந்த மாருதம்.

பரவையர் மாளிகையில் அலங்காரம்

மாலை தண் கலவைச் சேறு மான்மதச் சாந்து பொங்கும்
கோலநற் பசுங்கர்ப் பூரங் குங்குமம் முதலா யுள்ள
சாலும்மெய்க் கலன்கள் கூடச் சாத்தும் பூண் ஆடை வர்க்கம்
பாலன பிறவும் ஏந்தும் பரிசனம் முன்பு செல்ல 716

வி.ரை:- மாலை, குளிர்ந்த வாசனைக் குழம்பு. கஸ்தூரியும் சந்தனமும் கலந்த குழம்பு, மணம் பொங்கும் நல்ல ப்ச்சைக் கர்ப்பூரம், குங்குமம் முதலாக அழகிய மிகச் சிறந்த உடல் அலங்கார அணிகளுடன் சாத்தும் பொன் சரிகை போட்ட ஆடை வகைகள் ஆகியவைகளும் பிறவும் ஏந்திக் கொண்டு ஏவலர் முன் சென்றனர்.

அ.ரை:- கலவை சேறு—பல வகையான வாசனைப் பொடிகள் கலந்து கூட்டு. மான்மதம்—கஸ்தூரி. மெய்க்கலன்— உடல்மீது அணிபவை. பூண் அடை— பொன்னால் அமைந்த சரிகை ஆடை, அலங்கார ஆடை.

இவ்வகை இவர்வந் தெய்த எய்திய விருப்பி னொடும்
மைவளர் நெடுங்கண் ணாரும் மாளிகை அடைய மன்னும்
செய்வினை அலங்கா ரத்துச் சிறப்பணி பலவுஞ் செய்து
நெய்வளர் விளக்குத் தூப நிறைகுடம் நிரைத்துப் பின்னும் 717

வி.ரை:- இவ்வாறு ஏவலர் ஆடை முதலான அலங்காரப் பொருட்களை ஏந்தி முன் செல்ல மை திட்டிய நீண்ட கன்ற விழிகளையுடைய மகளிர் கூட்டம் பரவையார் மாளிகையில் நிரம்பி வழியப், பரவையாருக்கு ச் செய்ய வேண்டிய அலங்காரமனைத்தும் சிறப்பாகச் செய்து நெய் விளக்கும், துபமும் நிறை குடமும் வரிசையாக வைத்துக் காத்திருந்தனர்.

அ.ரை:- மைவளர் நெடுங் கண்ணார்—பரவையர் மாளிகையில் இருந்த மகளிர் ஈட்டம். அடைய—நிரம்பி. நிரைத்து— வரிசையாக, அலங்காரமாக, வைத்து.

பூமலி நறும் பொற் றாமம் புனைமணிக் கோவை நாற்றிக்
காமர்பொற் சுண்ணம் வீசிக் கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த தோகையர் வாழ்த்தத் தாமும்
மாமணி வாயில் முன்பு வந்தெதிர் ஏற்று நின்றார் 718

வி.ரை:- மணங்கமழ் மலர் அலங்காரமும் மணிகளால் செய்யப்பட்ட அலங்காரங்களை ஆங்காங்கு நாட்டி, விரும்பத்தக்க பொன்னாலான பொடிகள் எங்கும் வீசி மணம் வீசும் சந்தனக் குழம்பால் மெழுகி மாளிகை வீதியெங்கும் தூய மலர்கள் துவிக்கொண்டு மகளிர் வாழ்த்திக் கொண்டிருக்கப் பரவையாரும் அழகிய மணிகள் பதித்த வாயில் முன் வந்து எதிர்கொண்டு காத்திருந்தார்.

அரை:- பூமலிநறும் பொன்தாமம்— வகைவகையானமலரலங்காரம். புனைமணிக்கோவை—மணிகளால் செய்றுப்பட்ட அலங்காரம். காமர்—விரும்பத்தக்க. பொற்சுண்ணம்—பொன்பொடி. சாந்தும் நீவி—சந்தனக் குழம்பால் மெழுகி.

பரவையாரும் சுந்தரரும் கைகோர்த்து மாளிகையுட் சென்றது

வண்டுலாங் குழலார் முன்பு வன்தொண்டர் வந்து கூடக்
கண்டபோ துள்ளக் காதல் வெள்ளத்தின் கரைகா ணாது
கொண்டநாண் அச்சங் கூர வணங்கஅக் குரிசிலாரும்
தண்தளிர்ச் செங்கை பற்றிக் கொண்டுமா ளிகையுட்
சார்ந்தார் 719

வி.ரை :- வண்டுகள் மொய்க்கும் கூந்தலார் பரவையர் முன்பு சுந்தரர் வந்து சேரக் கண்ட போதே உள்ளத்தில் காதல் பொங்கக் காம வெள்ளத்தில் மூழ்கிக் கரைகாணாது தாம் கொண்ட நாணம் அச்சம் இவைகள் மிகுதியாக வணங்கிட வந்த நம்பி ஆரூரரும் குளிர்ந்த இளம் செங்கை பற்றிக் கொண்டு மாளிகையினுட் புகுந்தார்.

இருவரும் ஒருயிரானது

இருவரும் தம்பி ரானார் தாம்இடை யாடிச் செய்த
திருவருட் கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றிச்
சிந்தை
மருவிய இன்ப வெள்ளத் தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப
ஒருவருள் ஒருவர் மேவும் நிலைமையில் உயிர்ஒன்
றானார் 720

வி.ரை :- சிவபெருமான் இடையில் புகுந்து திருவிளையாடல் செய்த திருஅருள் கொண்ட கருணை வெள்ளத்தின் மேன்மையை இருவரும் போற்றி, மனங் கலந்த இன்ப வெள்ளத்தில் மூழ்கிப் ஒருவருள் ஒருவர் புணர்ந்து நின்ற நிலைமையில் இருவரும் ஒருயிராயினர்.

ஆரணக் கமலக் கோயில் மேவிப்புற்றிடங்கொண் டாண்ட
நீரணி வேணி யாரை நிரந்தரம் பணிந்து போற்றிப்
பாரணி விளக்குஞ் செஞ்சொற் பதிகமா லைகளுஞ்சாத்தித்
தாரணி மணிப்பூண் மார்பர் தாம் மகிழ்ந் திருந்த
நாளில் 721

வி.ரை :- வேதங்கள் போற்றும் கமலாலயம் சென்று புற்றிடங்கொண்டு ஆண்டருளும் கங்கை ஆற்றை அணிந்த சடையப்பரை இடைவிடாதுபணிந்து போற்றி உலகுக்கு ஒளிவிளக்காம் சிறந்த சொற்களா லான பதிக மாலைகளும் சாத்தி மாலைகளுடன் இரத் தின மணிகள் பதித்த ஆபரணம் அணிந்த மார்பை உடைய சுந்தரர் பரவையாருடன் மகிழ்ந்து குலாவி யிருக்கும் நாளில்.

அ.ரை :- ஆரணம் — வேதம். நிரந்தரம்— இடை விடாது. எப்பொழுதும்.

(ஏயர்கோன் கலக்காம நாயனார் பற்றிய செய்தி இப்பாடலிலிருந்து மீண்டும் துவங்குகிறது.)

நம்பியா ரூரர் நெஞ்சில் நடுக்கம்ஒன் றின்றி நின்று
தம்பிரா னாரைத் தையல்பால் விட்டார் என்னும்
இம்பரின் மிக்க வார்த்தை ஏயர்கோ னார்தாங் கேட்டு
வெம்பினார் அதிசயித்தார் வெருவினார்
விளம்ப லுற்றார் 722

வி.ரை :- "நம்பி ஆரூரர் மனத்தில் சிறிதளவு கூட அச்சம் நடுக்கம் இல்லாமல் சிவபெருமானை ஒரு பெண்ணிடம் தூதுவிட்டார்" என்று உலகத்தார் பேசும் செய்தி ஏயர்கோன் கலக்காம நாயனார் கேட்டு அதிசயித்து மனம் நொந்துசினம் கொண்டு வெம்பினார். நடுக்கமடைந்து சொன்னார்.

அ. ரை:- இம்பர்—இவ்வுலகமாந்தர். வெம்பினார்—உள்ளுக்குள் புழுங்கினார். பொருவினார்—சினந்தார்.

ஏயர்கோன் உற்றசினம்

"நாயனை அடியான் ஏவுங் காரியம் நன்று! சால
ஏயும்என் றிதனைச் செய்வான் தொண்டனாம்! என்னே! பாவம்!
பேயனேன் பொறுக்க ஒண்ணாப் பிழையினைச் செவியாற் கேட்ப
தாயின பின்னும் மாயா திருந்ததென் ஆவி"
என்பார். 723

வீ.ரை :- "நாயகனை அடிமை ஏவினான் என்னும் காரியம் மிகவும் நன்றாக இருக்கிறது. அவ்வாறு ஏவி விடும் செயலைச் செய்பவன் தொண்டனாம்! என்னபாவம் செய்தேனோ இதனைக் கேட்க? பேயனேனாகிய நான் தாங்கிக் கொள்ள முடியாத பிழையினை என்காதுபடக் கேட்ட பின்பும் என் உயிர் என்னை விட்டுப் போகாதிருக்கிறதே" என்று வருந்தினார்.

"காரிகை தன்பாற் செல்லுங் காதலால் ஒருவன் ஏவப்
பாரிடை நடந்து செய்ய பாததா மரைகள் நோவத்
தேரணி வீதி யூடு செல்வது வருவ தாகி
ஓரிர வெல்லாந் தூதுக் குழல்வராம் ஒருவர்" என்று 724

வி.ரை :- "ஒரு பெண்ணிடம் செல்ல வேண்டும் எனும் காதலினால் ஒருவன் ஏவிவிட, இந்த மண் மீது சிவந்த கமல மலர்ப்பாதங்கள் நோவநடந்து, தெர்ஊரும் வீதியில்ஓர் இரவெல்லாம் செல்வதும் வருவதுமாகித்தூது செல்வதற்கு உழல்வாராம் அந்த ஒப்பற்றவர்" என்று.

நம்பர்தாம் அடிமை ஆற்றாராகியே நண்ணி னாரேல்
உம்பரார் கோனும் மாலும் அயனும்நேர் உணர ஒண்ணா
எம்பிரான் இசைந்தால் ஏவப் பெறுவதே இதனுக் குள்ளம்
கம்பியா தவனை யான்முன் காணுநாள் எந்நாள்?"
என்று 725

வி.ரை :- சிவபெருமான் தன் அடியார் கட்கு அன்பு காரணமாக மனமிரங்கிவேண்டியபடி நிற்பார் எனினும் தேவேந்திரனும், திருமாலும், பிரமனும் கண்டு உணரமுடியாத ஈசன் இசைந்தார் என்பதற்காக ஏவுதுல் முறையோ? இந்தச் செயலுக்கு உள்ளம் நடுக்குறாதவனை நான் என் கண்முன் காணும் நாள் எந்நாளோ?" என்றிருந்தார்.

அ.ரை :- அடிமை ஆற்றாராகி — தம் அடியார்களின் அன்புக்கு அடிமையாகி. ஏவப்பெறுவதே — ஏவல்செய்யச் சொல்வரோ?. கம்பியாது — நடுக்கமடையாது.

"அரிவைகா ரணத்தினாலே ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூது போக ஏவிஅங் இருந்தான் தன்னை
வரவெதிர்காண்பே னாகில்வருவதென் னாங்கொல்?"என்று
விரவிய செற்றம் பற்றி விள்ளும்உள் ளத்த ராகி 726

வி. ரை:- ஒரு "பெண்ணின் காரணத்திற்காக எம்மையாளும் பரம்பொருளை இரவினில் தூதுபோக அனுப்பி அங்கு இருந்த அவனை என்முன் வரக்காண்

பேனாகில் என்ன நடக்குமென்றே சொல்லமுடியாது" என்று எழுந்த சினம் கொண்டு விம்மும் உள்ளத் தவராயினர்.

அ.ரை :- ஆளுடைப் பரமர்—எமையாளும் ஈசன் வருவதென்னாங்கொல் — என்னநடக்கும் மென்றறிய லாது. விள்ளும்—விம்மும்.

நம்பியும் ஏயர்கோன் கோபமறிந்து ஈசனைவேண்டியது

ஈறிலாப் புகழின் ஓங்கும் ஏயர்கோ னார்தாம் எண்ணப்
பேறிது பெற்றார் கேட்டுப் பிழைஉடன் படுவா ராகி
வேறினி இதற்குத் தீர்வு வேண்டுவார் விரிபூங் கொன்றை
யாறிடு சடைய ாருக் கதனைவிண் ணப்பஞ்
செய்து 727

வி.ரை :-நிகரற்ற புகழ் பெற்றோங்கும் ஏயர் கோனாரது எண்ணத்தில் எழும் பேற்றினைப் பெற்ற வராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்டுக்குற்றம் உள்ள நெஞ்சத்தவராகி, இதற்கு ஒரு தீர்வு வேண்டு பரவாகி மலர்ந்த கொன்றை மலரை அணிந்த சடையப் பருக்கு இதனை விண்ணப்பம் செய்தார்.

அ.ரை :- எண்ணப்பேறு இது பெற்றார். — ஏயர் கோன் எண்ணத்தில் எழும் பேற்றினைப் பெற்ற சுந்தரர்.

ஏயர் சூலை நோய் பெற்றது

நாடொறும் பணிந்து போற்ற நாதரும் அதனை நோக்கி
நீடிய தொண்டர் தம்முன் இருவரும் மேவு நீர்மை
கூடுதல் புரிவார் ஏயர் குரிசிலார் தம்பால் மேனி
வாடுறு சூலை தன்னை அருளினார் வருந்து
மாற்றால் 728

வி.ரை :- நாள்தோறும் பணிந்து இவ்வாறு போற்றிக்கொண்டிருக்க இறைவனும் அதனை அறிந்து சிறந்த திருத்தொண்டர். இருவரிடத்தும் பொருந்திய சிறப்பை மேலும் வலுப்படுத்தக் கருதி ஏயர்கோனுக்கு உடலை வாட்டும் சூலைநோயை இறைவன் அருளி வருத்தச் செய்தார்.

ஏயர்கோன் சூலையால் துன்புற்றது.

ஏதமில் பெருமைச் செய்கை ஏயர்தம் பெருமான் பக்கல்
ஆதியார் ஏவும் சூலை அனல் செய்வேல் குடைவ தென்ன
வேதனை மேன்மேற் செய்ய மிகஅதற் குடைந்து வீழ்ந்து
பூதநா யகர்தம் பொற்றாள் பற்றியே போற்றுகின்றார். 729

வி.ரை :- ஏயர்கோனுக்கு குற்றமற்று பெருமை மிக்க ஆதியார் பரமசிவனார் ஏவிய சூலைநோயானது வெந்த புண்ணில் தீயில்சுட்ட வேல் பாய்ந்ததே போன்று வேதனை மேன்மேலும் அதிகமாகிக் குடைந்திடப் பூதநாதரது பொற்றாமரைத் தாள்களைப் பற்றிப் போற்றினார்.

"வன்தொண்டன் தீர்க்கில் சூலைதீரும்" என்றது.

சிந்தையால் வாக்கால் அன்பர் திருந்தடி போற்றி செய்ய
எந்தமை யாளும் ஏயர் காவலர் தம்பால் ஈசர்
வந் "துனை வருத்துஞ் சூலை வன்தொண்டன் தீர்க்கில் அன்றி
முந்துற ஒழியா" தென்று மொழிந்தருள் செய்யக் கேட்டு. 730

வி.ரை :- மனத்தாலும் சொல்லாலும் அன்பர் சிவபெருமானடிகள் போற்றியிருக்க, எமையாளும் ஏயர்

கோனிடம் ஈசர்வந்து ''உனை வருத்தும் சூலை நோய் நீங்காது'' என் அருள்மொழிந்திடக் கேட்டு.

''எம்பிரான் எந்தை தந்தை தந்தைஎங் கூட்ட மெல்லாம்
தம்பிரான் நீரே என்று வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை என்னைநின் றீருஞ் சூலை
வம்பென ஆண்டு கொண்டான் ஒருவனே தீர்ப்பான்வந்து''
731

வி ரை :- எம் இறைவான்! எனது தந்தை, தந்தை தம் தந்தை ஆகிய எங்களது சந்ததியினரெல்லாம் தமது இறைவன் நீர் ஒருவரே என்று வழி வழியாக உம்மைச் சார்ந்து வாழும் இவ்வுலகில் சிறந்த வாழ்க்கயுடைய என்னை இன்று வருத்தும் சூலை நோயை இப்பொழுது புதிதாக வந்த வன்தொண்டன் ஒருவனே வந்து தீர்ப்பான்,'

அ.ரை :- ஈரும் — வருத்தும். வம்பென—பதிதாக முளைத்த.

''அவன் தீர்க்கில் திரா தொழிக'' என்றது

''மற்றவன் தீர்க்கில் தீரா தொழிந் தெனை வருத்தல் நன்றால்
பெற்றம்மேல் உயர்த்தீர் செய்யும் பெருமையை அறிந்தார் யாரே?
உற்றவன் தொண்டர் கேஆம் உறுதியே செய்தீர்'' என்னக்
கற்றைவார் சடையார் தாமும் அவர்முன்பு கரந்தார் அன்றே.
732

வி.ரை :- அந்த வன்தொண்டன் வந்து எனது சூலை நோயை தீர்ப்பதைக் காட்டிலும், இந்நோய் நீங்காது என்னைத் துன்புறுத்தல் நல்லது. இடபக்

கொடியை உயர்த்தியவரே! நீர் செய்யும் பெருமையை செயலை யாரே அறிவர்! புதிதாக வந்தடைந்த வன் தொண்டருக்கே பெருமை செய்தீர்'' என்று கூறக் கற்றையாக சடையையுடைய சிவபெருமானும் மறைந்தார்.

அ.ரை :- தீர்க்கில்—தீர்ப்பதைக் காட்டிலும். செய்ய் பெருமை—உன் செயலின் சிறப்பு. உற்றவன் தொண்டர்—புதியவரான வன் தொண்டர். உறுதியே செய்தீர்—சிறப்புச் செய்தீர், உயர்வைக் கொடுத்தீர்.

ஈசன் சுந்தரருக்கு உரைத்தது

வன்தொண்டர் தம்பால் சென்று வள்ளலார் அருளிச் செய்வார்
இன்றுநம் எவ லாலே ஏயர்கோன் உற்ற சூலை
சென்றுநீ தீர்ப்பா யா''கென் றருள் செயச் சிந்தை யோடு
நன்று மெய்ம் மகிழ்ந்து போற்றி வணங்கினார் நாவ லூரர். 733

வி.ரை :- வள்ளலார் சிவபெருமான் வன்தொண்டர் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் சென்று ''இன்று நமது ஆணையின்படி ஏயர் கோன் சூலை நோயை நீ சென்று தீர்ப்பாய்'' என்று அருளிச் செய்ய, நன்று என்று மனம் மகிழ்ந்து போற்றி நாவலூரர் சுந்தரர் வணங்கினார்.

சுந்தரர் சூலை தீர்க்கச் சென்றது

அண்ணலார் அருளிச் செய்து நீங்கஆ ரூரர் தாமும்
விண்ணவர் தம்பி ரானார் ஏவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவுங் காதலால் கலிக்கா மர்க்குத்
திண்ணிய சூலை தீர்க்க வருதிற்ஞ் செப்பி விட்டார். 734

வி.ரை :- அண்ணலார் சிவபெருமான் அவ்வாறு அருளிச் செய்து நீங்க ஆரூரரும், விண்ணவர்களது தேவரின் ஆணையின்படி விரைந்து செல்பவர், ஏயர் கோனை மனத்தில் கருதிய அன்பினால் கொடிய வயிற்று நோய் தீர்க்க வரும் செய்தியைக் கலிக்காமர்க்கு முன் அறிவித்தார்.

அ.ரை :- கண்ணிய—எண்ணிய, கருதிய.

ஏயர் "இனி என் செய்வ"தென வருந்தியது

நாதர்தம் அருளால் நண்ணுஞ் சூலையும் அவர்பாற் கேட்ட
கேதமும் வருத்த மீண்டும் வன்தொண்டர் வரவும் கேட்டுத்
"தூதனாய் எம்பி ரானை ஏவினான் சூலை தீர்க்கும்
ஏதம்இங் கெய்த எய்தில் யான்செய்வ தென்னாம்?" என்பார்
735

வி.ரை :- நாதர் சிவபெருமான் அருளால் வந்தடைந்த சூலையும். அந்த நோயைத் தீர்க்க வன்தொண்டர் வந்து தீர்த்தாலன்றி நோய் நீங்காது எனும் குற்றமும் வாட்டிக்கொண்டிருக்கையில் வன்தொண்டர் நோய் தீர்க்க வந்துகொண்டிருக்கிறார் எனும் செய்தியும் கேட்டு, "எம் இறைவனைப் பெண்ணிடம் தூதுவனாக ஏவியவன் சூலை நோய் தீர்க்கும் குற்றமே உருவான சுந்தரர் இங்கு வந்தால் நான் என்ன செய்வது" என்று வருந்தினார்.

அ.ரை :- அவர்பால் கேட்ட கேதம்—சிவபெருமாடம் கேட்டறிந்த தீர்வும். சூலை தீர்க்கும் ஏதம்—பெண்ணுக்காக இறைவனை ஏவியவன் சூலை தீர்க்க வரும் குற்றமே உருவானவன் தொண்டர்.

வயிற்றைக் கிழித்து உயிருடன் சூலை தீர்த்தது

"மற்றவன் இங்கு வந்து திர்ப்பதன் முன்நான் மாயப்
பற்றின் றென்னை நீங்காப் பாதகச் சூலை தன்னை
உற்றஇவ் வயிற்றி னோடுங் கிழிப்பன்"என் றுடைவாள் தன்னால்
செற்றிட உயிரி னோடும் சூலையுந் தீர்ந்த தன்றே. 736

வி.ரை :- "மற்றொருவன் இங்கு வந்து என்சூலை தீர்ப்பதன்முன் நான் இந்த மாயமாக வந்து பற்றி நின்று நீங்காத இந்தக் கொடிய சூலை நோயை அது குடிகொண்ட இந்த வயிற்றினோடும் கிழிப்பேன்" என்று தன் உடைவாளால் கிழித்திட உயிருடன் சூலையும் தீர்ந்தது.

அ.ரை :- மாயப் பற்று—மாயமாக வந்து பற்றிய சூலை. உயிர் எனக் காணினுமாம்.

சுந்தரர் எழுந்தருளியது

கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர் தேவி யாரும்
பொருவருங் கணவ ரோடு போவது புரியுங் காலை
"மருவிஇங் கணைந்தார் நம்பி" என்றுமுன் வந்தார்கூற
"ஒருவரும் அழுதல் செய்யா தொழிக"என் றுரைத்துப் பின்னும். 737

வி.ரை :- எண்ணிப் பார்க்க இயலாத பெருமையுடன் சிறப்புமிகக கலிக்காமர் மனைவியாரும் ஒப்பற்ற கணவரோடும் உயிர் நீக்கப் போகும்பொழுது, "நம்பி ஆரூரர் இங்கு வந்தார்" என்று முன்னால் வந்தவர்கள் கூறக் கேட்டு "ஒருவரும் அழவேண்டாம்" என்றுரைத்தார்.

தீப நிறை குடங்களுடன் வரவேற்றது

கணவர்தஞ் செய்கை தன்னைக் கரந்துகா வலரை நம்பி
அணைவுறும் பொழுது சால அலங்கரித் தெதிர்ப்போம்
என்னப்
புணர்நிலை வாயிற் றீபம் பூரண கும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித் தொழுதெதிர் கொள்ளச்
சென்றார். 738

வி.ரை :- கணவர் தற்கொலை செய்து கொண்டதை மறைத்து வைத்துக் காவலரை ஏவி, நம்பி எழுந்தருளும் போது மிகவும் அலங்கரித்து நுழைவாயிலில் தீபதூபத்துடன் நிறைபொற்குடமும் வைத்து கொத்தாக மாலைகள் நாட்டித் தொழுது எதிர்கொள்ளச் சென்றார்.

அ.ரை :- புணர்நிலை — நுழைவாயில். துணர்— கொத்து.

மலராசனத்தில் மகிழ்ந்திருந்தது

செம்மை சேர்சிந்தை மாந்தர் சென்றெதிர் கொண்டு போற்ற
நம்மைஆ ளுடைய நம்பி நகைமுகம் அவர்க்கு நல்கி
மெய்ம்மையாம் விருப்பி னோடுய் மேவிஉட் புகுந்து மிக்க
மொய்ம் மலர்த் தவிசின்மீது முகமலர்ந் திருந்தபோது. 739

வி.ரை :- நல்ல சிறப்பு மிக்க சிந்தனையுடைய மகளிர் சுந்தரரை எதிர்கொண்டு வரவேற்க, நம்மை ஆட்கொண்ட நம்பி ஆரூரரும் புன்னகை அவர்கள்மேல் பொழிந்து உண்மையான விருப்பமுடன் சென்று மாளிகையுட் புகுந்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தின்மீது முகம் மலர்ந்திருந்தபோது.

பான்மை அர்ச் சனைகள் எல்லாம் பண்பினில் வழாமை ஏய்ந்த
நான்மறை தொடர்ந்த வாய்மை நம்பியா ரூரர்கொண் ''டிங்
கியான் மிக வருந்து கின்றேன்; ஏயர்கோ னார்தாம் உற்ற
ஊன்வெஞ் சூலை நீக்கி உடன்இருப் பதனுக்'' கென்றார். 740

வி.ரை :- செய்யத் தக்க அர்ச்சனைகள் எல்லாம் பண்பில் தவறாது பொருந்த நான்மறைகளாய் அமைந்த வாய்மையுடைய நம்பி ஆரூரர், இங்கு யான் மிகவும் வருந்துகின்றேன். ஏயர்கோனாருக்கு ஏற்பட்ட ஊனமுள்ள கொடிய வயிற்றுவலி நீக்கி உடன் இருப்பதனுக்கு வந்தனன்'' என்றார்.

சுந்தரர் ஏயரைக் காண விரும்பியது

மாதர்தம் ஏவ லாலே மனைத் தொழில் மாக்கள், ''மற்றிங்
கேதமொன் றில்லை உள்ளே பள்ளிகொள் கின்றார்'' என்னத்
''தீதனை வில்லை யேனும் என் மனந்தெருளா தின்னம்
ஆதலால் அவரைக் காண வேண்டும்'' என் றருளிச் செய்தார் 741

வி.ரை:- ஏயர்கோன் மனைவியரது ஆணையின் படி ஏவல் மக்கள் சுந்தரரிடம் ''இங்கு குறை ஒன்றும் இல்லை ஏயர்கோன் உள்ளே பள்ளி கொள்கின்றார்'' என்று கூற, வன்தொண்டரும் தீதொன்றும் இல்லை என்றாலும் என் மனம் தெளியவில்லை. ஆதலால் அவரைக் காண வேண்டும்'' என்றருளினார்.

ஏயர் கோனைக்கண்டு "நானும் உயிர் துறப்பேன்" என்றது

வன்தொண்டர் பின்னுங் கூற மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதி சோரத் தொடர்குடர் சொரிந்துள் ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டபின் "புகுந்தவாறு
நன்! "றென மொழிந்து "நானும் நண்ணுவேன் இவர்முன்"
பென்பார் 742

வி.ரை:- வன்தொண்டர் மேலும் ஏயர்கோனைக் காணவிரும்பிக் கூற, ஏவலர் ஏயர்கோனைக் காட்ட, சிந்திய இரத்தத்தில் தோய்ந்து நீண்ட குடல் சரிந்து உயிர்நீங்கிக் கிடந்தவரைக் கண்ட பின்பு நடந்தவாறு நன்று என மொழிந்து "நானும் இவருக்கு முன் செல்லுவேன்" என்றார்.

அ-ரை:- துன்றிய—சிந்திய, பரவிக் கிடந்த. ஆவி பொன்றியே கிடந்தார்—உயிர் போகக் கிடந்தார்.

ஏயர் கோன் உயிர் பெற்று நம்பியாரைத் தடுத்தது

கோளுறு மனத்த ராகிக் குற்றுடை வாளைப் பற்ற
ஆளுடைத் தம்பி ரானார் அருளினால் அவரும் உய்ந்து
"கேளிரே யாகிக் கெட்டேன்" என விரைந் தெழுந்து
கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன்தொண்டர் வணங்கி
வீழ்ந்தார் 743

வி.ரை:- சுந்தரர் தாம் ஏயர்கோனைக் கொலை செய்த குற்ற மனத்தினராய்க் குத்துவாளை எடுத்துக் குத்திக் கொள்ள எடுக்கும்பொழுது சிவபெருமான் அருளினால் ஏயர்கோன் கலிக்காம நாயனாரும் உயிர் பெற்று "நட்புடையவரே! நான் கெட்டேன்" என்று

கூறிக் கொண்டு விரைவாக எழுந்து சுந்தரர் கையிலிருந்த வாளைப் பிடித்துக் கொள்ள வன்தொண்டர் வணங்கி விழுந்தார்.

வி.ரை:- கோளுறு மனம்—கொலை செய்த குற்ற மனம் காரணமாக இறந்தார் எனும் குற்ற மனம். கேளிர்—நன்பர்.

மற்றவர் வணங்கி வீழ வாளினை மாற்றி ஏயர்
கொற்றவ னாரும் நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தார்
அற்றை நாள் நிகழ்ந்த இந்த அதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரின் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற 744

வி.ரை :- நம்பி ஆரூரர் வணங்கி விழக்கண்ட ஏயர் கோனும் வாளை வேறு இடத்தில் வைத்து நம்பி ஆரூரரது ஒலிக்கும் கழல்களில் வீழ்ந்து வணங்கினார். அன்று நிகழ்ந்த இந்த அதிசயம் கண்டு தேவர்கள் இந்த உலகம் போற்றப் பொன்மலர் மாரி பொழிந்தனர்.

திருப்புன்கூர்ப் புனிதரை வழிபட்டது

இருவரும் எழுந்து புல்லி இடைவிடா நண்பி னாலே
பொருவரும் மகிழ்ச்சி பொங்கத் திருப்புன்கூர்ப் புனிதர் பாதம்
மருவினர் போற்றி நின்று வன்தொண்டர் தம்பி ரானார்
அருளினை நினைந்தே "அந்த ணாளன்" என் றெடுத்துப் பாடி 745

வி.ரை:- இருவரும் எழுந்து கட்டித் தழுவிக் கொண்டு, நட்பினால் பெருமகிழ்ச்சி பொங்கத் திருப்புன்கூர் இறைவனைச் சென்றடைந்து பாதம் பணிந்து போற்றி நின்று வன்தொண்டர் சிவபெருமானின்

அருளினை நினைந்து "அந்த ணாளன்" என்று அடி எடுத்துப் பாடினார்.

இருவரும் திருவாரூரில் சிலநாள் தங்கியது

சிலபகல் கழிந்த பின்பு திருமுனைப் பாடி நாடர்
மலர்புகழ்த் திருவாரூரில் மகிழ்ந்துடன் வந்த ஏயர்
குலமுதற் றலைவ னாருங் கூடவே குளிர்பூங் கோயில்
நிலவினார் தம்மைக் கும்பிட் டுறைந்தனர் நிறைந்த
அன்பால் 746

வி.ரை:- சில நாட்கள் சென்ற பின்பு திருமுனைப் பாடி நாடர் சுந்தரரும் ஏயரும் புகழ் மலரும் திருவாரூரில் வந்து இருவரும் கூடவே இருந்து குளிர்ந்த கமலாலயத்தில் எழுந்தருளிய சிவபெருமானைக் கும்பிட்டு நிறைந்த அன்பால் இருவரும் சிலநாட்கள் அங்கு இருந்தனர்.

ஏயர் சிவபதமடைந்தது

அங்கினி தமர்ந்து நம்பி அருளினால் மீண்டும் போந்து
பொங்கிய திருவின் மிக்க தம்பதி புகுந்து பொற்பில்
தங்குநாள் ஏயர் கோனார் தமக்கேற்ற தொண்டு செய்தே
செங்கண் மால் விடையார் பாதஞ் சேர்ந்தனர்
சிறப்பினோடும் 747

வி.ரை:- திருவாரூரில் நம்பியின் அன்பைப் பெற்று இருந்து பொங்கும் செல்வம் மிகுந்த தமது இல்லம் திரும்பி வந்து புகுந்து பொலிவுடன் தங்கியிருக்கும் நாளில் ஏயர் கோன் தமக்கு ஏற்ற தொண்டுகள் செய்து சிவந்த கண்களையுடைய மயக்கும் காளையை உடையவரது பாதம் சிறப்பினுடன் சென்றடைந்தார்.

புலவர் கூற்று

நள்ளிருள் நாய னாரைத் தூதுவிட் டவர்க்கே நண்பாம்
வள்ளலார் ஏயர் கோனார் மலரடி வணங்கிப் புக்கேன்
உள்ளுணர் வான ஞானம் முதலிய ஒருநான் குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறுந் திருமூலர் பெருமை செப்ப 748

வி.ரை:- நடு இரவில் நாயகனைப் பெண்ணிடம் தூது விட்டவர்க்கே நண்பரான வள்ளலார் ஏயர் கோனாரது மலரடிகளை வணங்கி உள்ளுணர்வாகிய ஞானம் நான்கும் உண்மையாகத் தெளிந்த தித்திக்கும் தமிழால் திருமூலர் பெருமையைச் சொல்கிறார். (பெரிய புராணத்தில் இதற்கடுத்தது திருமூலநாயனார் புராணம்)

அ.ரை:- ஞானம் நான்கு—அவை ஞானம், யோகம், கிரியை சரியை என்பன.

—:o:—

கழறிற்றறிவார் நாயனார் புராணம்

(இதில் முதல் 43 திருவிருத்தங்கள் கழறிற்றறிவார் நாயனார் பற்றியது. சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் அதற்குமேல் கழறிற்றறிவார் சேரமான் பெருமான் நாயனாருடன் பின்னிச் செல்கிறது.)

மாவீற் றிருந்த பெருஞ் சிறப்பின் மன்னுந் தொன்மை மலைநாட்டு
பாவீற் றறிருந்த பல்புகழார் பயிலும் இயல்பிற் பழம் பதிதான்
சேயீற் றிருந்தார் திருவஞ்சைக் களமும் நிலவிச் சேரர் குலக்
கோவீற் றிருந்து முறைபுரியும் குலக்கோ மூதூர் கொடுங் கோளூர 749

வி.ரை:- இலக்குமி குடிகொண்ட பெருஞ்சிறப்பினால் மலை நாடுகளில் மிகவும் பழமையதாதலின் பாக்களில் போற்றப்பட்ட பலபுகழுக்குடையவர் வாழும் இயல்பான பழம் பதிதான் இடபத்தின் மீதமர்ந்தார் வாழும் திருவஞ்சைக் களமும் சேரர்களது குலத்தின் தலைமை வாய்ந்த முறைமையையுடைய அரசகுலத்துக்கான ஊர் கொடுங்கோளூர்.

அ.ரை :- மா—இலக்குமி. பா—பாடல்கள். கோ—தலைமையுடைய, அரசன்.

காலை எழும்பல் கலையினொலி களிற்றிக் கன்று
வடிக்குமொலி
சோலை எழுமென் சுரும்பி னொலி துரகச் செருக்காற்
சுலவு மொலி
பாலை விபஞ்சி பயினு மொலி பாட வாடல் முழவினொலி
வேலை யொலியை விழுங்கி எழ விளங்கி யோங்கும்
வியப்பினதால் 750

வி.ரை:- அந்த நாட்டில் காலையில் எழும் பல கலைகளின் ஒலி யாதெனில், யானை தன் கன்றுகளை வசப்படுத்த எழுப்பும் ஒலி. குதிரைகள் களிப்பால் கனைக்கும் ஒலி பாலையாழ் விபஞ்சி பயிலும் ஒலி மற்றும் பாடல் ஆடல் இவற்றின் மத்தள ஒலி ஆகியவை கடல் ஒலியை விழுங்கி எழ வியப்பால் விளங்கி ஓங்கும்.

அ.ரை:- கன்று வடிக்கும்—கன்றை வசப்படுத்தும். துரகச் செருக்காற்சுலவு—குதிரைகள் கனைத்தல் ஒலி. பாலை விபஞ்சி—பாலையாழ்.

மிக்க செல்வ மனைகள் தோறும் விளையும் இன்பம்
விளங்குவன
பக்க நெருங்கு சாலை தோறும் பயில்சட் டறங்கள்
பல்குவன
தக்க அன்பர் மடங்கள் தோறும் சைவ மெய்ம்மை சாற்றுவன
தொக்க வளங்கொள் இடங்கள் தோறும் அடங்க
நிதியந் துவன்றுவன 751

வி.ரை :- இல்லங்கள் தோறும் செல்வம் மிகுதியால் இன்பம் விளைந்து விளங்குவன. பக்கங்களில் நெருங்கிய சாலைகளில் சொல்லப்படும் செப்பமான அறங்குகள் பெருகுவன, அன்பர்கள் மடங்களிலெல்லாம் உண்மை நெறியாம் சைவத்தை ஓதுவன, வளம்

மிக்க இடங்களிலெல்லாம் நிதியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

அ.ரை :- சட்டறங்கள்—அறங்குகள். பல்குவன—பெருகுவன. துவன்றுவன—நிறைந்து கிடப்பன.

வேத நெறியின் முறைபிறழா மிக்க ஒழுக்கந் தலைநின்ற
சாதி நான்கு நிலைதழைக்குந் தன்மைத் தாகித்
தடமதில் சூழ்
சூத வகுள சரளநிரை துதையுஞ் சோலை வள நகர்தான்
கோதை அரசர் மகோதை எனக் குலவு பெயரும்
உடைத்துலகில் 752

வி. ரை:- வேத நெறி முறையிலிருந்து பிறழாது மிகுந்த ஒழுக்கத்தில் நின்று சாதி வருணம் நான்கும் நிலைபெற்றுத் தழைத்தோங்கும் தன்மையதாகி அகன்ற நதியால் சூழப்பட்டு, மா, மகிழம், நறுளி ஆகியவை வரிசையாக அமைந்த சோலைகள் உள்ள நகர்தான் சேர அரசரால் ஆளப்படும். மகோதை எனும் நகராம்.

அ.ரை :- சூதை—மா. வகுளம்—மகிழம். சரளம்—நறுளிமரம். கோதை அரசர்—சேர அரசர்.

முருகு விரியும் மலர்ச்சோலை மூதூ ரதன்கண் முறை
மரபின்
அருகி அழியுங் கலிநீக்கி அறங்கொள் சைவத் திறந்
தழைப்பத்
திருகு சினவெங் களியானைச் சேரர் குலமும் உலகுஞ் செய்
பெருகு தவத்தால் அரனருளால் பிறந்தார் பெருமாக்
கோதையார் 753

வி. ரை:- மணங்கமழும் மலர்ச் சோலைகள் நிறைந்த பழம் பேரூரதனில், மரபின் முறையின் படி அருகி அழிதற்குரிய கலி நீக்கிச் சைவ நெறியாம் அறத்

தைத் தழைக்கச் செய்து, மாறுபட்ட சினங்கொண்ட வெங்களியானைச் சேரர் குலமும் உலகும் செய்த பெருந்தவத்தால் சிவனருளால் பெருமாக் கோதையார் பிறந்தார்.

அ. ரை:- முருகு—மணம். திருகு—மாறுபட்ட.

திருமா நகரத் திருஅவதா ரஞ்செய் விழவின் சிறப்பினால்
வருமா களிகூர் நெய்யாடல் எடுப்ப வான மலர்மாரி
தருமா விசும்பின் மிக நெருங்கத் தழங்கும் ஒலிமங்
கலந்தழைப்பப்
பெருமா நிலத்தில் எவ்வுயிரும் பெருகு மகிழ்ச்சி
பிறங்கினவால். 754

வி.ரை :- பெருமாக் கோதையார் அவதாரம் செய்ய அந்தத் திருமாநகரம் விழாக்கோலம் கொண்டு இருக்கப் பெருங் களிப்பினால் நெய்யாட்டுவித்தல்முதலியன செய்ய, வானினின்றும் தேவர்கள் மலர்மாரி பொழிய பெரிய வானில்மிக நெருங்க ஒலிக்கும் மங்கல வாத்திய ஒலிகளாய் மங்கலம் தழைக்க, இப் பெரிய உலகில் எல்லா உயிரினங்களுள்ளும் பெரும் மகிழ்ச்சி பெருகின.

அ. ரை:- விழவின் — விழாவின். தழங்கும்—முழங்கும்..

மண்மேற் சைவ நெறிவாழ வளர்ந்து முன்னை வழி அன்பாற்
கண்மேல் விளங்கு நெற்றியினார் கழலே பேணுங்
கருத்தினராய்
உண்மேவிய அன் பினராகி உரிமை அரசர் தொழில் புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண்
டே புரிவார். 755

வி.ரை :- முறை முறை வந்த வழியால் மண் மீது சைவ நெறி வளர்ந்து வாழ நெற்றிக் கண்ணார் வீரக் கழல்களையே போற்றும் கருத்தினராய உண்மை படர்ந்த அன்பினராகி, தனக்குரிய அரசு செய்யும் தொழில் செய்யாதவராய்த் தெளிந்த நீரை முடியில் தாங்கிய திருவஞ்சைக் களத்தில் திருத்தொண்டே புரிபவரானார்.

''உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதியல்ல'' என
உணர்வார்
புலரி எழுந்து புனல்மூழ்கிப் புனித வெண்ணீற் றினும்மூழ்கி
நிலவு திருநந் தனவனத்து நீடும் பணிகள் பலசெய்து
மலரு முகையும் கொணர்ந்து திருமாலை சாத்த
மகிழ்ந்தமைத்து 756

வி. ரை :- உலகியல் வாழ்வும் அரசாட்சியும் நிலை யற்றது என்பதை உணர்ந்தவராகிப் பொழுது புலர் வதற்கு முன் எழுந்து நீராடி புனித வெண்நீற்றிலும் மூழ்கிப் பொருந்திய நந்தவனம் சென்று நீண்ட நேரம் பணிகள் பலசெய்து, மொக்கும் மலருமாக இருக்கும் பூக்களைக் கொணர்ந்து திருமாலை சாத்தி மகிழ்ந் திருந்தார்.

திருமஞ் சனமும் கொணர்ந்துதிரு அலகும் இட்டுத்
திருமெழுக்க
வரும்அன் புடன்இன் புறச்சாத்தி மற்றும் உள்ள
திருப்பணிகள்
பெருமை பிறங்கச் செய்தமைத்துப் பேணும் விருப்பில்
திருப்பாட்டும்
ஒருமை நெறியின் உணர்வுவர ஓதிப் பணிந்தே
ஒழுகுநாள், 757

வி.ரை :- இறைவனுக்குச் செய்ய வேண்டிய திருமஞ்சன மாடுதல், திருஅலகிடுதல், திருமெழுக்கு ஆகிய அன்பும் இன்பமும் பொங்கச் சாத்தி பிறதிருப் பணிகளும் பெருமை ஓங்க அமைத்துச் செய்து, எழும் விருப்பமதனால் திருப்பாட்டும் சைவ ஒருமை நெறியின் உணர்வு வளரப்பாடிப் பணிந்திருந்தார்.

நீரின் மலிந்த கடலகழி நெடுமால் வரையின் கொடிமதில்சூழ்
சீரின் மலிந்த திருநகர மதனிற் செங்கோற் பொறைய
னெனும்
காரின் மலிந்த மொடைநிழற்மேற் கவிக்குங் கொற்றக்
குடை நிழற்கீழ்த்
தாரின் மலிந்த புயத்தரசன் தரணி நீத்துத் தவஞ்
சார்ந்தான். 758

வி. ரை:- கடல் போன்று நீர் நிறைந்த அகழியும், சக்கரவாள மலைபோன்றுயரந்த கொடிகளால் சூழப் பட்ட மதிலும் ஆகிய சிறப்புடன் திகழும் அந்தத் திருநகரில் செங்கட் பொறையன் என்னும் மழையினும் மிக்க கொடை நிழல் மேலே கவிக்கப்பட்ட வெண் கொற்றக் குடை நிழலின் கீழ் மாலைகள் அணிந்த தோள்களை உடைய அரசன் அரசை நீத்துத் தவம் செய்தான்.

வந்த மரபின் அரசளிப்பான் வனஞ்சார் தவத்தின்
மருவிய பின்
சிந்தை மதிநூல் தேரமைச்சர் சிலநாள் ஆய்ந்து தெளிந்த
நெறி
முந்தை மரபில் முதல்வர்திருத் தொண்டு முயல்வார்
முதற்றாக
இந்து முடியார் திருவஞ்சைக் களத்தில் அவர்பால்
எய்தினார். 759

வி. ரை:- மரபின்படி அரசேர்ப்பவன் காடு சென்று தவமேற்றபின்பு மதிநுட்பமிக்க அமைச்சர்கள் சில நாட்கள் ஆய்ந்து பார்த்துப் பின் தெளிவுற்று முந்திய மரபில் முதல்வராகத் திருத்தொண்டுகள் செய்து வருவது அறிந்து பிறைசூடிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவஞ்சைக் களத்தில் அவரிடம் சென்றனர்.

அ. ரை:- இந்து முடியார்—பிறை அணிந்த சிவன்.

எய்தி அவர்தம் எதிரிறைஞ்சி'' இருந்தண் சாரல்
மலைநாட்டுச்
செய்தி முறைமை யால்உரிமைச் செங்கோல் அரசு
புரிவதற்கு
மைதீர் நெறியின் முடிசூடி அருளும் மரபால் வந்த''தெனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற
பொழுதின்கண். 760

வி.ரை :- அவரிடம் சென்று, குளிர்ந்த பெரிய மலைநாட்டு வழக்க முறைமையின்படி செங்கோல் அரசு புரிவதற்கு உரிமை சைவ நெறியின்படி மரபுக்கு ஏற்ப முடிசூடியருளும்'' என்று பொய் நீங்கிய உண்மை அமைச்சர்கள் போற்றிச் சொன்னபோது.

''இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் இடையூ றாக
இவர் மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்க அருளுண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை இடைபெற் றறிவேன்''
எனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பஞ் செய்தார், முதல்வர்
அருளினால். 761

வி ரை :- பேரின்பத்தைக் கொடுக்கும் திருத்தொண்டுக்கு இடையூறாக அமைச்சர்கள் சொன்னார்

கள் என்று சிந்தித்து அன்பு நிலைமையினின்றும் வழுவாமல் அரசு செலுத்துதற்கு அருளுண்டானால் எலும்பையும் பாம்பையும் அணிந்தவரிடம் அவர் திருவுள்ளம்அறிந்து பெற்றிடுவேன் என்று கோயிலினுட் புகுந்து தொழுது இறைவன் அருளினால் வேண்டி நின்றார்.

மேவும் உரிமை அரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில் விறலும் தண்டாத கொடையும் படைவாகன முதலாம்
காவல் மன்னர்க் குரியனவும் எல்லாங் கைவந் துறப் பெற்றார். 762

வி.ரை :- பொருந்திய அரசாட்சி உரிமை பெற்று மிகவும் விருப்பமான அன்பு நெறியில் இறைவன் வழிபடும் உயிரினங்கள் மற்றும் மனிதர் தேவர் ஆகியோர் சொல்லுவனவற்றை அறியும் உணர்வும். முடிவில்லாத தோல்வியில்லாத வெற்றியும் தடைபடாத கொடைத் தன்மையும் நால்வகைப் படையும் தேர்முதலான காவல் மன்னருக்கு உரியன எல்லாம் கையில் கிடைக்கப் பெற்றார்.

அ.ரை:- அரசளித்து — அரசாட்சி செய்கையில் யாவும்; அஃறிணை உயிர்கள். யாரும்—தேவர் மனிதர் முதலான உயர்திணை உயிர்கள். கழறினவும் — வாய் பேசியன அனைத்தும். அஃறிணை உயிர்கள் பேசுவதையும் அறிந்து கொள்ளும் ஆற்றல். தாவில் விறல்— தோல்வியற்ற வெற்றி, தண்டாத கொடை — குறைவு படாத வள்ளல் தன்மை.

ஆன அருள்கொண் டஞ்சலிசெய் திறைஞ்சிப் புறம்
போந் தரசளித்தல்
ஊனம் ஆகுந் திருத் தொண்டுக் கெனினும் உடையான்
அருளாலே
மேன்மை மகுடந் தாங்குதற்கு வேண்டும் அமைச்சர்க்குடன்
படலும்
மான அமைச்சர் தாள் பணிந்தவ் வினைமேற் கொண்டு
மகிழ்ந்தெழுந்தார். 763

வி.ரை :- முறைப்படி அஞ்சலி செய்து வணங்கி வெளிவந்து அரசாட்சி செய்தால் திருத்தொண்டுக்குக் குறையாகும் என்றாலும் சிவனருளால் மேன்மையான மகுடத்தைத் தாங்குதற்கு அமைச்சருக்கு உடன்பட்டதும் அமைச்சரும் அரசர்தாள் பணிந்து எடுத்த வினை முடித்ததற்கு மகிழ்வெய்தினர்.

உநிமை நாளில் ஓரைநலன் எய்தமிக்க உபகரணம்
பெருமை சிறக்க வேண்டுவன எல்லாம் பிறங்க மங்கலஞ்
செய்
திருமை உலகுக் கொருமைமுடி கவித்தார் எல்லா உயிரும்
மகிழ்
தரும நிலைமை அறிந்துபுவி தாங்குங் கழிறிற்றறி
வார்தாம். 764

வி.ரை :- குறிப்பிட்ட முகூர்த்த நாளில் சிறந்த உபகரணங்கள் பெருமை மேலோங்க எல்லாம் முழங்க மங்கலம் செய்து உயிர்திணை அஃறிணை ஆகியவற்றின் எல்லா உயிரும் மகிழத் தருமத்தின்படி அறிந்து புவிதாங்கும் கழறிற்றறிவாருக்கு மணிமுடி சாத்தினார்.

அ.ரை :- ஓரை—முகூர்த்தம். இருமை உலகு—இம்மை மறுமை எனக்காணினுமாம். உயர்திணை அஃறிணை ஆகியவற்றின் உலகு.

தம்பி ரானார் கோயில் வலங்கொண்டு திருமுன் தாழ்ந்
தெழுந்து
கும்பயானை மேல்கொண்டு கொற்றக்குடையுஞ்
சாமரையும்
நம்பும் உரிமை யவர்தாங்க நலங்கொள் நகர் சூழ்
வலங்கொள்வார்
மொய்ம்பில் உவரின் பொதிசுமந்தோர் வண்ணான் முன்னே
வரக்கண்டார். 765

வி.ரை:- சிவாலயம் சென்று கோயிலை வலம் வந்து சந்நதிமுன் தாழ்ந்து வணங்கி எழுந்து மத்தகத்துடைய யானை மீது கொண்டு வெண் கொற்றக் குடையுடன் சாமரையும் வீச நம்பும் உரிமையில் அவர் தாங்க நலங்கொள்ள நகர்சூழவலம் வந்து கொண்டிருக்கையில் சலவைத் தொழிலாளி ஒருவர் உடல் முழுவதும் உவர் மணபூசப்பட்டு அழுக்கு மூட்டையும் உவர் மண்ணும் சுமந்து வந்தார்.

மழையிற் கரைந்தங் குவர்ஊறிமேனி வெளுத்த வடிவினால்
"உழையிற் பொலிந்த திருக்கரத்தார் அடியார் வேடம்"
என்றுணர்ந்தே
இழையிற் சிறந்த ஓடைநுதல் யானைக் கழுத்தின் நின்
றிழிந்து
விழைவிற் பெருகுங் காதலினால் விரைந்து சென்று
கை தொழுதார். 766

வி ரை :- மழையில் உப்பு மண் கரைந்ததால் உப்பு ஊறி உடல் முழுதும் பரவி வெண்மையடைந்தவராய் இருக்கக் கண்ட மன்னர் மானைக் கையிலேந்திய திருக்கரத்தவரது வேடம் என்று உணர்ந்து கொண்டு சிறந்த அணிகலன்கள் போர்த்தப்பட்ட நெற்றியையுடைய யானையின் கழுத்திலிருந்து இறங்கி சிவனடியார்கள் மீது கொண்டவிருப்பத்தின் காரணமாய்

எழுந்த அன்பினால் வேகமாகச் சென்று சலவைத் தொழிலாளியை வணங்கினார்.

வி,ரை:- உவர்—உப்பு. சலவைக்குப் பயன்படும் சோடா மண், உழையில்—மானைக் கையில் ஏந்தி. இழையிற்சிறந்த— ஆபரணங்களில் சிறந்த. ஒடை நுதல்—ஆடை அணிந்த நெற்றி. விழைவில்—விருப்ப முடன்.

சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை கலங்கிமுன்
வணங்கி
''யாரென் றடியே னைக் கொண்ட தடியேன் அடி
வண்ணான்'' என்னச்
சேரர் பிரானும் ''அடிச்சேரன் அடியேன்'' என்று
திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர் வருந்தா தேகும்'' என
மொழிந்தார் 767

வி.ரை:-சேரர் பெருமான் யானை மீதிருந்து இறங்கி வந்து தொழக்கண்ட சலவைத் தொழிலாளி மனம் கலங்கி முன்நின்று வணங்கி ''யாரென்று இந்த அடியேனை நினைத்தீர் அடியேன் அடிவண்ணான்'' என்று கூறச் சேரர் பிரானும் ''அடியேன் அடிச்சேரன்'' என்று ''இன்று திருநீற்றின் வேடத்தை எனக்கு நினை வூட்டினீர் வருந்தாதேகுக'' என மொழிந்தனுப்பினார்.

மன்னர் பெருமான் திருத் தொண்டு கண்டு மதிநீ டமைச்ச
ரெலாம்
சென்னி மிசை அஞ் சலிசெய்து போற்றச் சினமால் களிறேறி
மின்னு மணிப்பூண் கொடிமாட வீதி மூதூர்
வலங்கொண்டு
பொன்னின் மணிமா ளிகைவாயில் புக்கார் புனைமங்கலம்
பொலிய 768

வி.ரை:- மன்னர் பெருமானது சிவ திருத்தொண்டு கண்டு அறிவிற்சிறந்த அமைச்சர்கள் யாவரும் தலையால் வணங்கிப் போற்ற சினம் கொண்ட மதக்களிறின் மீது ஏறி மின்னும் மணிகள் அணியப்பட்ட கொடிமாட வீதி மூதூர் வலம் வந்து மங்கல இசை முழங்க பொன்னால் அமைந்த அழகிய மாளிகை வாயிலை அடைந்தார்.

யானைமிசைநின் றிழிந்தருளி இலங்கு மணிமண்
டபத்தின்கண்
மேன்மை அரியா சனத்தேறி விளங்குங் கொற்றக் குடை
நிழற்றப்
பானல் விழியார் சாமரைமுன் பணிமா றப்பன் மலர்தூவி
மான அரசர் போற்றிடவீற் றிருந்தார் மன்னர் பெருமானார்
769

வி.ரை:- யானையின் மீதிருந்து இறங்கியருளி நன்றாக அலங்கரிக்கப்பட்ட மணிமண்டபத்தில் மேலான அரியாசனத்தின் மீதேறி வெண்கொற்றக் குடை நிழலில் குவளைக் கண்ணினார் சாமரை வீசப் பலவகையான மலர்கள் தூவி எல்லா அரசர்களும் போற்றிட மன்னர் பெருமான் வீற்றிருந்தார்.

உலகு புரக்குங் கொடை வளவர் உரிமைச் செழியர்
உடன்கூட
நிலவு பெருமுக் கோக்களாய் நீதி மனு நூல் நெறிநடத்தி
அலகில் அரசர் திறை கொணர அகத்தும் புறத்தும்
பகையறுத்து
மலருந் திருநீற் றொளிவளர மறைகள் வளர
மண்ணளிப்பார் 770

வி.ரை :- உலகுக்கு உணவூட்டிக் காக்கும் சோழர் பாண்டியர் ஆகிய இருவரும் வந்து ஒன்று சேர்ந்திடப்

பொருந்திய மூவேந்தரும் தேவர்களாய் மனுநூலில் கூறியபடி நீதி செலுத்தி, எண்ணற்ற சிற்றரசர்கள் கப்பம் கொண்டுவந்து கட்ட, உள்நாட்டிலும் வெளி நாட்டிலிருந்தும் பகைமை நீக்கி மலர்ந்து விரியும் திருநீற்றின் ஒளிவளர வேதங்கள் வளர அவைகட்கு நிலங்கள் கொடுத்தார்.

''நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்
சிற்றம்பலத்துள்
ஆடுங் கழலே'' எனத் தெளிந்த அறிவால் எடுத்த
திருப்பாதம்
கூடும் அன்பில் அர்ச்சனைமேற் கொண்டார் சேரர்
குலப் பெருமான் 771

வி.ரை :- உரிமையின்படி வந்து சேர்ந்த இந்தப் பேரரசும், அதனால் விளையும் பயனும், நிறைந்த தவமும், பொருட்பேறும், பெருகும் துணை ஆகிய இவையெல்லாம் திருச்சிற்றம்பலத்துள் ஆடும் திருக் கழல்களே'' என்று தெளிவு பெற்று அறிவால் எடுத்த திருப்பாதமதனைச் சேர்ந்த அன்பினால் சேரர் குலப் பெருமான் அர்ச்சனை செய்தார்.

வாசத் திருமஞ் சனப்பள்ளித் தாமஞ் சாந்தம் மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம் முதலா யினவுந் திருஅமுதும்
ஈசர்க் கேற்ற பரிசினால் அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலி
அளித்தார். 772

வி.ரை :- மணங்கமழும் திருமஞ்சனம், கோயில் மாலை, சந்தனக் குழம்பு, மணித்தூபம், மிகுந்து ஒளிவீசும் தீபம், முதலானவைகளும் திருஅமுதும் சிவ பெருமானுக்கு ஏற்றதாகக் கொண்டு அர்ச்சித்து

வந்ததால், கழறிற்றறிவார் பூசைக்கு அமர்ந்ததும் பெருங்கூத்தராகிய நடராசரது பொன் போன்ற பாதங்களின் சிலம்பின் ஒலி கேட்கும்படி இறைவன் அருளினார்.

அ.ரை :- தேசில்—தேஜெசில், ஒளியில். பள்ளித்தாமம் – கோயிலுக்குக் கட்டும் மாலை.

நம்பர் தாளின் வழிபட்டால் நாளும் இன்புற் றமர்கின்றார்
இம்பர் உலகில் இரவலர்க்கும் வறியோர் எவர்க்கும் ஈகையினால்
செம்பொன் மழையாம் எனப்பொழிந்து திருந்து வென்றியுடன் பொருந்தி
உம்பர் போற்றத் தம்பெருமாற் குரிய வேள்வி பல செய்தார். 773

வி.ரை:- நம் அன்பர் சிவபெருமானின் திருத்தாள்களை வழிபட்டதன் பயனாக குறையற்ற நிறையின்பம் நாள்தோறும் அடைந்து. இவ்வுலகில் இரப்பவர்கட்கும் ஏழைகளுக்கும் மற்றும் யார் கேட்டாலும் கொடுப்பதனால் பசும்பொன் மழையெனப் பொழிந்திருந்து வெற்றியுடன் சேர்ந்து தேவர்கள் போற்றத் தமது பெருமானுக்கு உரிய வேள்விகள பல செய்தார்.

இன்ன வண்ணம் இவரொழுக எழில்கொள் பாண்டி நன்னாட்டு
மன்னும் மதுரைத் திருவால வாயில் இறைவர் வரும் அன்பால்
பன்னும் இசைப்பா டலிற்பரவும் பாண னார்பத் திரனார்க்கு
நன்மை நீடு பெருஞ்செல்வம் நல்கவேண்டி அருள்புரிவார். 774

வி.ரை:- இவ்வாறு இவர் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கையில் அழகுமிகு பாண்டிய நன்னாட்டில் உள்ள

மதுரைத் திருவால வாயில் இறைவனிடம் உள்ள அன்பால் பலவகையான இசைகளில் அமைந்த பாடல்களால் இறைவனைப் பாடிப்பரவும் பாணனார் பத்தரனார்க்கு நன்மை பயக்கும் மிகவும் பெரிய செல்வம் அளித்திட இறைவன் அருள்புரிந்தார்.

இரவு கனவில் எழுந்தருளி ''என்பால் அன்பால்
எப்பொழுதும்
பரவு சேரன் தனக்குனக்குப் பைம்பொன் காணம் பட்டாடை
விரவு கதிர்செய் நவமணிப் பூண் வேண்டிற் றெல்லாங்
குறைவின்றித்
தரநம் ஓலை தருகின்றோம் தாழா தேகி வரு''
கென்று. 775

வி.ரை :- சிவபெருமான் அன்றிரவு கனவில் தோன்றியருளி என்பால் எப்பொழுதும் போற்றும் சேரனுக்கு, உனக்குப் பசும்பொன், காசு, பட்டாடை, மிகவும் ஒளிவீசும் நவமணிகள் பதித்த ஆபரணம முதலியன வேண்டியதெல்லாம் குறைவின்றித்தர ஓலை தருகின்றோம். தாமதிக்காமல் சென்று வருக'' என்றார்.

அதிர்கழல் உதியர் வேந்தற் கருள் செய்த பெருமை யாலே
''எதிரில் செல் வத்துக் கேற்ற இருநிதி கொடுக்க'' என்று
''மதிமலி புரசை'' எள்னும் வாசகம் வரைந்த வாய்மைக்
கதிரொலி விரிந்த தோட்டுத் திருமுகம் கொடுத்தார்
காண 776

வி.ரை :- ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த சேரமான் பெருமானுக்கு அருளிச் செய்த பெருமையால் ஈடற்ற செல்வத்துக்கு ஏற்பப் பெருநிதி கொடுக்க என்று ''மதிமலி புரசை'' எனும் கடிதம் எழுதி. உண்மைக் கதிரொளி விரிந்த இதமுடைய கடிதம் கொடுத்தார்.

அ.ரை :- உதியர்வேந்தர் — சேரமான் பெருமான் இருநிதி—பெருநிதி. கதிரொளிவிரிந்ததோட்டு—மிகவும் ஒளி படர்ந்த இதழ்.

சங்கப் புலவர் திருமுகத்தைத் தலைமேற் கொண்டு
பத்திரனார்
அங்கப் பொழுதே புறப்பட்டு மலைநா டணைய வந்தெய்தித்
துங்கப் புரசைக் கொடுங்கோளூர் தன்னிற் புகுந்து
துன்னு கொடி
மங்குல் தொடக்கும் மாளிகைமுன் வந்து மன்னர்க்
கறிவித்தார். 777

வி.ரை :- மதுரையில் சங்கப் புலவராக இருந்த சடையப்பர் கொடுத்த கடிதத்தைத் தலைமேற் கொண்டு அங்கு அப்பொழுதே புறப்பட்டு மலைநாடு சென்றடைய வந்து சேர்நது உயர்ந்த மதில்களைய்யுடைய கொடுங் கோளூரினுட் புகுந்து மேகங்களைத் தொடும் கொடிகளையுடைய மாளிகை முன்வந்து மன்னருக்கு அறிவித்தார்.

அ.ரை :- துங்கப்புரசை-உயர்ந்த மதில். மங்குல்—மேகம். மேகத்தைத் தொடும் கொடிகளுள்ள மாளிகை

கேட்ட பொழுதே கைதலைமேற் கொண்டு கிளர்ந்த
பேரன்பால்
நாட்டம் பொழிநீர் வழிந்திழிய ஏழுந்து நடுக்கம் மிகஎய்தி
ஓட்டத் தம்பொன் மாளிகையின் புறத்தில் உருகுஞ்
சிந்தையுடன்
பாட்டின் தலைமைப் பாணனார் பாதம் பலகால்
பணிகின்றார் 778

வி.ரை :- பாணனார் வந்த செய்தி கேட்டவுடன் கைகளைத் தலைமேல் கொண்டு மேலோங்கிய பேரன் பினால் கண்களில் நீர் வழிந்து பொழிய நடுக்க

மடைந்து பத்தரைமாற்றுத் தங்கத்தில் அமைத்த மாளிகையின் புறத்தில் உருகும் மனத்துடன். பாட்டுக்குத் தலைவரான பாணனார் பாதங்களை பலமுறை பணிந்தார்.

அ.ரை :- நாட்டம் — கண்விழிகள். ஒட்டத்தம் பொன்—கலப்படமற்ற பசும்பொன். பொன்னை ஒரு கல்லில் ஒட்டிப்பார்த்து அது தூயதா? எனக் காண்பராதலின் ஒட்டத்தம் பொன் என்றனர்.

"அடியேன் பொருளாத் திருமுகங் கொண்டணைத்த"
தென்ன அவர்தாமும்
கொடி சேர் விடையார் திருமுகங்கைக் கொடுத்து வணங்கக்
கொற்றவனார்
முடிமேற் கொண்டு கூத்தாடி மொழியுங் குழறிப்
பொழி கண்ணீர்
பொடியார் மார்பிற் பரந்து விழப் புவிமேற் பலகால்
வீழ்ந்தெழுந்தார் 779

வி.ரை:- "அடிமீயன் பொருள் வேண்டிப் பரிந்துரைக்கும் கடிதம் கொண்டுவந்தேன்" என்று காளை பறித்த கொடியையுடையவர் கொடுத்த கடிதத்தைக் கொடுத்து மகிழச், சேரமானும் அதவைத் தன் மகுடத்தின்மேல் கொண்டு கூத்தாடி, வாய் குழறிக் கண்கள் நீர் பொழியப் திருநீறு மார்பிலிருந்து கரைந்து விழ மண்மேல் பலமுறை விழுந்து எழுந்தார்.

பரிவிற் போற்றித் திருமுகத்தைப் பலகால் தொழுது
படிஎடுக்க
உரிய வகையால் எடுத்தோதி உம்பர் பெருமான்
அருள்போற்றி

விரிபொற் சுடர்மா ளிகைபுக்கு மேவும் உரிமைச்
சுற்றமெலாம்
பெரிது விரைவிற் கொடுபோந்து பேணும் அமைச்சர்க்
கருள் செய்வார் 780

வி.ரை:- விருப்பமுடன் போற்றியபின்பு திருமுகத்தைப் பலவகையாகத் தொழுது அக்கடிதத்தின் நகல் எடுக்க அருளைப் போற்றிப் பொன் ஒளிவீசும்மாளிகை சென்று புகுந்து. பொருந்திய உரிமைச்சுற்றம் மற்றும் அமைச்சர்களையும் அழைத்து அருள்பொழிந்தார்.

நங்கள் குலமா ளிகையிதனுள் நலத்தின் மிக்க நிதிக்
குவையாய்ப்
பொங்கி நிறைந்த பலவேறு வகையிற் பொலிந்த பண்டாரம்
அங்கண் ஒன்றும் ஒழியாமைஅடையக் கொண்டு புறப்பட்டுத்
தங்கும் பொதிசெய் தாளின்மேற் சமைய ஏற்றிக்
கொணரும்'' என 781

வி.ரை :- நமது மாளிகையிலுள்ளவர்களது நலம்தரும் நிதிக் குவியல்களாய்ப் பொங்கி வழிந்த பல்வேறு வகையாள பொக்கிஷங்களில் ஆங்கு ஒன்றும் வைக்காமல் அப்படியே பொதி செய்து கொண்டு வந்து அவைகளை ஆட்களின் மீது சுமத்திக் கொண்டு வாருங்கள்'' என்றார்.

அ.ரை :- பண்டாரம். பொக்கிஷம், நிதிக்குவியல்கள். அடைய—முழுவதும், சமய—தகுதிப்படி.

சேரர் பெருமான் அருள் செய்யத் திருந்து மதிநூல் மந்திரிகள்
சாரு மணிமா ளிகையுள்ளாற் றனங்க ளெல்லாம் நிறைந்த
பெருஞ்
சீர்கொள் நிதியம் எண்ணிறந்த எல்லாம் பொதிசெய்
தாளின்மேல்
பாரில் நெருங்க மிசைஏற்றிக் கொண்டு வந்து பணிந்தார்கள்
782

வி.ரை:- சேரர் பெருமான் அருளிச் செய்தபடி நூல்கள் பல ஆய்ந்து கற்ற அமைச்சர்கள் அரண் மனையைச் சார்ந்த அழகிய மாளிகையிலுள்ளவர்களது செல்வங்களை எல்லாம் திரட்ட சிறப்பு மிக்க பெரிய நிதிக்குவியல்களெல்லாம் மூட்டைகளாகக் கட்டி ஆட் களின் மீது வைத்து நெருக்கமாக ஏற்றிக் கொண்டு வந்து வணங்கினார்கள்.

பரந்த நிதியின் பரப்பெல்லாம் பாண னார்பத் திரனார்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு நிரைத்துக் காட்டி
''மற்றிவையும்
உரந்தங் கியவெங் கரிபரிகள் முதலாம் உயிருள் ளனதனமும்
புரந்த அரசும் கொள்ளும்'' என மொழிந்தார் பொறையர்
புரவலனார் 783

வி.ரை:- கொண்டு வந்து சேர்த்த பெருஞ்செல்வ மத்தனையும் பாணனார் பத்திரனார்க்கு என்று நெருங் கிய செல்வங்களை வகை வகையாக வரிசைப்படுத்திக் கட்டி, ''இவையல்லாமல் மிகவும் வலிமை மிக்க கடிய யானை, குதிரை முதலான உயிருள்ள செல்வங்களும், ஆட்சி செலுத்தி வந்த அரசும் ஏற்றுக் கொள்ளும்'' என்று பொறையர் புரவலனார் சேரர் பெருமான் சொன் னார்.

அ.ரை:- நிரந்த— நெருக்கமாக. அடுக்கியதனம்— செல்வம், தங்கம், நிரைத்து—வரிசைப்படுத்தி உரம்— வலிமை. கரி—யானை, பரி-குதிரை. புரந்த—ஆண்டு வந்த.

பாண னார்பத் திரனாரும் பைம்பொன் மௌலிச்
சேரல னார்
காணக் கொடுத்த நிதிஎல்லாங் கண்டு மகிழ்வுற் றதி
சயித்துப்

பேண எனக்கு வேண்டுவன அடியேன் கொள்ளப்
பிஞ்ஞகனார்
ஆணை, அரசும் அரசுறுப்பும் னகக்கொண் டருளும்''
என் இறைஞ்ச 784

வி.ரை:- பாண பத்திரனாரும் பசும் பொன்னால் அமைந்த மகுடமணிந்த சேரலனார் தாம் காணக் கொடுத்த பெருநிதி கண்டு மகிழ்வெய்தி அதிசயித்து என் வாழ்க்கைக்கு வேண்டுவன நான் கொள்ளச் சிவபெருமான் ஆணை. அரசும், 'அரசு சம்பந்தப்பட்டவைகளும் நீங்களே ஏற்றுக் கொள்ளும் என மன்றாடினார்.

இறைவர் ஆணை மறுப்பதனுக் கஞ்சி இசைந்தார்
இகழ்வேந்தர்
நிறையும் நிதியின் பரப்பெல்லாம் நிலத்தை நெளிய உடன்
கொண்டே
உறைமும் மதத்துக் களிறுபரி உள்ளிட் டனவேண்டுவ
கொண்டோர்
பிறைவெண் கோட்டுக் களிற்றுமேல் கொண்டு போந்தார்
பெரும் பாணர் 785

வி.ரை:- வலிமை மிக்க மன்னவனும் இறைவனது ஆணையை மறுப்பதற்கு அஞ்சி இசைந்து, நிறைந்து கிடந்த நிதிப்பரப்பையெல்லாம் மும்மதம் சிந்தும். யானை, குதிரை உள்ளிட்ட வேண்டுவன எடுத்துக் கொண்டு பிறை போன்ற வெண்மையான தந்தமுடைய யானையின் மேல் பெரும்பாணர் கொண்டு சென்றார்.

அ.ரை:- இகல்—வலிமை, உறையு ்— சிந்தும் தங்கும்.

பண்பு பெருகும் பெருமாளும் பாண னார் பத் திரனார் யின்
கண்கள் பொழிந்த காதல் நீர் வழியக் கையால் தொழு
தணைய

நண்பு சிறக்கும் அவர் தம்மை நகரின் புறத்து விடை
கொண்டு
திண்பொற் புரிசைத் திருமதுரை புக்கார் திருந்தும்
இசைப்பாணர் 786

வி.ரை:- பண்பில் சிறந்த கழறிற்றறிவார் நாயனாரும் பாணபத்திரனார் பின் கண்கள் நீர் பொழிந்த காதல் நீர் வழிந்தோடக் கையால் தொழுது சென்றடைய, நட்பு சிறக்கும் பாண பத்ரரை நகரின் புறம்வரை சென்று வழியனுப்ப, வலிமை மிக்க மதிலால் சூழப்பட்ட திருமதுரை சேர்ந்த இசைபாடும் பாணர் சென்றடைந்தார்.

வான வரம்பர் குலம் பெருக்கும் மன்னனாரும் மறித்தேகிக்
கூனல் இளவெண் பிறைக்கண்ணி முடியார் அடிமை
கொண்டருளும்
பான்மை அருளின் பெருமையினை நினைந்து பலகால்
பணிந்தேத்தி
மேன்மை விளங்கு மாளிகைமண் டபத்துள் அரசு
வீற்றிருந்தார் 787

வி.ரை:- வானமே எல்லையாக உள்ள உயர்ந்த மலை நாட்டரசர் குலம் சிறக்கச் சேரமன்னரும்திரும்பிச் சென்று வளைந்த இளமையான வெண்மை ஒளிவீசும் பிறைசூடிய சடையப்பர் அடிமை கொண்டருளும் சிறப்பின் அருளிய பெருமையினை நினைந்து பலமுறை பணிந்து போற்றி மேன்மை விளங்கும் மாளிகை மண்டபத்தினுள் அரசு செலுத்தி இனிது அமர்ந்திருந்தார்.

அளவில் பெருமை அகிலயோ னிகளும் கழறிற் றறிந்த
வற்றின்
உளமன் னியமெய் யுறுதுயரம் ஒன்றும் ஒழியா வகை
அகற்றிக்

களவு கொலைகள் முதலான கடிந்து கழறிற் றறிவார்தாம்
வளவர் பெருமா னுடன்செழியர் மகிழுங் கலப்பில்
வைகுநாள். 788

வி.ரை:- அளவில்லாத பெருமை மிக்க உயிரினங்களும் கழறிற்றறிந்து அவற்றின் உள்ளத்தில் தங்கிய உண்மையான துயரம் ஒன்றும் ஒழியாமல் அகற்றித் திருட்டு கொலை முதலியனவற்றைக் கடுமையாகத் தீர்த்து, கழறிற்றறிவார் சோழர் பாண்டியருடன் மகிழ்ந்து கலந்து இருக்கும் நாளில்

வானக் கங்கை நதிபொதிந்த மல்கு சடையார் வழிபாட்டுத்
தூநற் சிறப்பின் அர்ச்சனையாந் தொண்டு புரிவார் தமக்
கொருநாள்
தேனக் கலர்ந்த கொன்றையினார் ஆடற் சிலம்பின்
ஒலிமுன் போல்
மானப் பூசை முடிவின்கண் கேளா தொழிய மதிமயங்கி
789

வி.ரை:- ஒருநாள் வானத்திலிருந்து இறங்கிய கங்கையை அணிந்த சடையப்பர் வழிபாட்டின்போது துய நல்ல சிறப்பினதான அர்ச்சனையாகிய தொண்டு புரியும் சேரர் பெருமானுக்கு. வண்டுமொய்க்க மலர்ந்த கொன்றையினார் தில்லையில் ஆடும் சிலம்பின் ஒலி முன் போல் பூசையின் முடிவில் கேட்காமல் போக மதி மயங்கினர்.

பூசை கடிது முடித் ''தடியேன் என்னோ பிழைத்த''
தெனப்பொருமி
ஆசை உடம்பால் மற்றினிவே றடையும் இன்பம்யா''
தென்று

தேசின் விளங்கும் உடைவாளை உருவித் திருமார்
பினில் நாட்ட
ஈசர் விரைந்து திருச்சிலம்பின் ஓசை மிகவும் இசைப்பித்தார்
790

வி.ரை:- பூசையை விரவாக முடித்துக் கொண்டு "அடியேன் என்ன பிழைத்தேன்?" என்று உள்ளத்தில் பொருமி "ஆசையாக வளர்த்த இந்த உடம்பால் இனி அடையும் இன்பம் என்ன இருக்கிறது' என்று ஒளி வீசும் உடைவாளை உருவித் தன் திருமார்பினில் குத்திக் கொள்ளுதற்குக் காட்ட, ஈசனும் விரைந்து திருச் சிலம்பின் ஒலி அதிகமாகக் கேட்கச் செய்தார்.

ஆடற்சிலம்பின் ஒலிகேளா உடைவாள் அகற்றி
அங்கைமலர்
கூடத் தலைமேற் குவித்தருளிக் கொண்டு விழுந்து
தொழுதெழுந்து
நீடப் பரவி மொழிகின்றார் "நெடுமால், பிரமன் அரு
மறைமுன்
தேடற்கரியாய்! திருவருள் முன் செய்யா தொழிந்த தென்?"
னென்றார் 791

வி.ரை:- தில்லையில் திருக்கூத்தர் ஆடல் சிலம் பொலி கேட்டு உடைவாளை நீக்கி அழகிய மலர்க்கை கூப்பித் தலைமேல் குவித்து விழுந்து தொழுதெழுந்து வெகுவாகக் கும்பிட்டு, "திருமால், பிரமன், அரு மறைகள் தேடியும் காணாத சுவாமி! எனக்கு முன்பு ஆடல் ஒலி கேட்கும் திருவருள் செய்யாததன் காரணம் என்ன?" என்றார்.

(சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் மீண்டும் இங்கிருந்து தொடர்கிறது)

என்ற பொழுதில் இறைவர்தாம் எதிர்நின் றருளா தெழும் ஒலியால்
''மன்றி னிடைநங் கூத்தாடல் வந்து வணங்கி வன்தொண்டன்
ஒன்றும் உணர்வால் நம்மைப் போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத்தாழ்ந்தோம்'' என்றார் அவரை, நினைப்பிப்பார். 792

வி.ரை :- என்று சேரனார் சொன்னபொழுது சிவ பெருமான் அவர்முன் எழுந்தருளாது எழும் ஒலியினால் ''மன்றி நமது கூத்தாடலை வன்தொண்டன் வந்து வணங்கி, ஒன்றிய உணர்வினால் எமைப் போற்றிச் சொல்வளமிக்க பதிகம் பாடியதால் அவன் தமிழில் மயங்கி நின்று கேட்டதால் இங்கு வரத் தாமதமானது'' என்று சுந்தரரை நினைந்துரைத்தார்.

அ. ரை :- அவரை—சுந்தரரை.

சேரமான் சுந்தரரைக் காண விழைந்தது

என்னே! அடியார்க்கிவர் அருளும் கருணை இருந்த வா'' றென்று
பொன்னேர் சடையார் திருநடஞ்செய் புலியூர்ப் பொன்னம் பல மிறைஞ்சித்
தன்னே ரில்லா வன்தொண்டர் தமையுங் காண்பன்'' என விரும்பி
நன்னீர் நாட்டுச் செலநயந்தார் நாமச் சேரர் கோமானார். 793

வி.ரை :- அடியார்க்கு இறைவன் அருளும் கருணையை என்னவென்று கூறுவது'' என்று, பொன் போன்ற சடையப்பர் திருநடமிடும் புலியூர்ப் பொன்னம் பலம் சென்று வணங்கி, ஒப்பற்ற வன்தொண்டரையும் காண்பேன் என அவாக் கொண்டு நல்ல நீர் வளமுள்ள சோழ நாட்டுக்குச் செல்லச் சேரர் கோமான் விரும்பினார்.

சேரர் கோமான் வஞ்சி நகரடைந்தது

பொன்னார் மௌலிச் சேரலனார் போற்றும் அமைச்சர்க்
கஃதியம்பி
''நன்னாட் கொண்டு பெரும் பயணம் எழுக'' என்று
நலஞ்சாற்ற
மின்னார் அயில்வேற் குலமறவர் வென்றி நிலவுஞ்
சிலைவீரர்
அந்நாட் டுள்ளார் அடையநிரந் தணைந்தார் வஞ்சி
அகநகர் வாய். 794

வி.ரை : பொன் மகுடமணிந்த சேரலனார் தான் விரும்பும் அமைச்சர்கட்கு அதனைக் கூறி, ''நல்ல நாள் பார்த்து நீண்டதொரு நெடும் பயணம் எழுக'' என்று நலம் சாற்றும் மின்னல் போன்று ஒளிரும் கூர்மையான வேல்வடிக்கும் குலத்து மறவர்களும் வெற்றியைத் தரும் வில்வீரர்களும், மற்றும் அந்த நாட்டில் உள்ளவர்களும் நெருக்கமாக வந்து வஞ்சி மாநகர் வந்தடைந்தனர்.

இட்ட நன்னாள் ஓரையினில் இறைவர் திருவஞ் சைக்
களத்து
மட்டு விரிபூங் கொன்றை யினார் தம்மை வலங்கொண்
டிறைஞ்சிப் போய்ப்
பட்ட நுதல்வெங் களியானைப் பிடர்மேற் கொண்டு
பனி மதியம்
தொட்ட கொடிமா ளிகைமூதூர் கடந்தார் உதியர்
தோன்றலார். 795

வி.ரை :- குறிப்பிட்ட நன்னாளில் முகூர்த்தத்தில் தேன் சிந்தும் கொன்றையணிந்த திருவஞ்சிக் களத்து இறைவனை வலம் வந்து வணங்கிச் சென்று முகபடாம் போர்த்திய வலிமை மிக்க மதங்கொண்ட யானையின் கழுத்தின்மீது அமர்ந்து கொண்டு குளிர்ந்த நிலவைத் தொடும் கொடிகளையுடைய மாளிகைகள் நிறைந்த மூதூர் சேர மன்னர் கடந்தார்.

அ.ரை :- ஓரை—முகூர்த்த நாள். மட்டு—தேன் உதியர் தோன்றலார்—சேரர் மரபில் தோன்றியவர்.

சென்ற படைகளின் காட்சி

யானை அணிகள் பரந்து வழி எங்கும் நிரந்து செல்லுவன
மான மலைநாட் டினில்மலிந்த மலைகளுடன்போ
துவபோன்ற
சேனை வீரர் புடைபரந்து செல்வதங்கண் மலைசூழ்ந்த
கானம் அடைய உடன்படர்வ போலுங் காட்சி மேவினதால்
796

வி.ரை :- அணிவகுத்துச் சென்ற யானைகளின் கூட்டம் எங்கும் பரந்து வழியெல்லாம் நிறைத்துச் செல்வன. சிறந்த மலை நாட்டில் எங்குமுள்ள மலைகளுடன் போவது போன்றிருந்தது. படை வீரர்கள் எங்கும் புடைசூழ்ந்து செல்வது அழகிய மலை சூழ்ந்த காடு முழுவதும் உடன் படர்ந்து செல்வது போலுங் காட்சியானது.

பரவித் திரள்கள் ஆயோகப் பொலிவின் அசைவிற்
போதுவன
அரவச் சேனைக் கடற் றரங்கம் மடுத்து மேன்மேல் அடர்
வனபோல்
விரவிப் பரந்து சென்றனவால் மிசையும் அவலும் ஒன்றாக
நிரவிப் பரந்த நெடுஞ்சேனை நேமிநெளியச் சென்றன வால்.
797

வி.ரை :- கூட்டங் கூட்டமாக அணிவகுத்துச் சென்ற யானைகளும், குதிரைகளும் மற்றும் வீரர்களும் கரையின் பொலிவைத் தந்து அசைந்து சென்றன. பாம்பு போன்று ஒளியுடன் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் சேனை கடல் அலைகள் போன்ற ஒன்றை யொன்று பொருதுவன போன்று வழியில் உள்ள மேடு பள்ளங்களை நிரவிக்கொண்டு பூமி நெளியச் சென்றன.

அ.ரை :- ஆயோகப் பொலிவு — கரை போன்ற தோற்றம். தரங்கம் — கடல். கடல்தரங்கம் — கடல் அலைகள். மிசையும் அவலும் — மேடும் பள்ளமும், மிசை — மேடு. அவல் — சிறு பள்ளம். நேமி — பூமி.

அந்நாட் டெல்லை கடந்தணைய அமைச்சர்க் கெல்லாம் விடையருளி
மின்னார் மணிப் பூண் மன்னவனார் வேண்டு வாரை உடன் கொண்டு
கொன்னார் அயில்வேல் மறவர்பயில் கொங்கர் நாடு கடந்தருளிப்
பொன்னாட்ட வரும் அணைந்தாடும் பொன்னி நீர் நாட்டிடைப் போவார். 798

வி.ரை :- அந்த நாட்டின் எல்லையைக் கடந்து அமைச்சர்கட்கெல்லாம் விடை கொடுத்து அனுப்பி மின்னொளி வீசும் அழகிய ஆபரணம் அணிந்த மன்னர் தேவையானவர்களை மட்டும் உடன் அழைத்துக் கொண்டு கொல்லும் வலிமை மிக்க கூர்மையான வேல் கொண்ட மறவர் வாழும் கொங்கு கடந்து தேவர்களும் வந்து நீராடும் பொன்னி நீர் நாடு கடந்து சென்றார்.

அ.ரை :- கொன்னார் அயில்—கொல் ஆர் அயில், கொலைத் தொழில் செய்யும் அச்சமுட்டும் கூர்வேல். பயில்—வாழும். பொன்னாட்டவர்—தேவர்.

சென்ற திசையிற் சிவனடியார் சிறப்பினோடும் எதிர்
கொள்ளக்
குன்றுங் கானும் உடைக்குறும்பர் இடங்கள் தோறும் குறை
வறுப்பத்
துன்று முரம்பும் கான்யாறும் துறுகற் சுரமும் பலகடந்து
வென்றி விடையார் இடம்பலவும் மேவிப் பணிந்து
செல்கின்றார். 799

வி.ரை :- சேரர் பெருமான் பொன்னி நீர் நாடு கடந்து சென்ற திசையில் சிவனடியார்கள் மிகவும் சிறப்பாக எதிர்கொண்டழைக்கக் குன்றுகளும் காடு களும் உடைய வேடர்களும், குருநில மன்னர்கள் வாழ் இடங்களிலும் குறைகள் நீங்கப் பரல் கற்கள் நிறைந்த பாலை நிலங்களையும், காட்டாற்றையும் உறுத்தும் கற்கள் நிறைந்த வழியும் பல கடந்து வெற்றி இடப முடையவரது இடம் பலவும் சென்று பணிந்து சென்றார்.

அ.ரை :- குன்றுங் கானும் உடைக்குறும்பர்—குன்றுகளையும், காடுகளையும் உடைய வேடவர்கள், குறுநிலமுள்ள காட்டு அரசர்கள். துன்றுமுரம்பும்—பரல் கற்கள் நிறைந்த பாலைநிலம். கான்யாறு – காட்டாறு. துறுகற்சுரம்—உறுத்தும் கல்வழிப் பாதை.

பொருவில் பொன்னித் திருநதியின் கரைவந்தெய்திப்
புனிதநீர்
மருவுந் தீர்த்தம் மகிழ்ந்தாடி மருங்கு வடபாற்கரை ஏறித்
திருவிற் பொலியுந் திருப்புலியூர்ச் செம்போன் மன்றுள்
நடம்போற்ற
உருகு மனத்தினுடன் சென்றார் ஒழியா அன்பின் வழி
வந்தார். 800

வி.ரை :- நீங்கா அன்பின் வழி வந்த சேரமான் பெருமாள் ஒப்பற்ற காவிரித் திருஆற்றின்கரை வந்

தடைந்து புனித நீர்த்தீர்த்தம் மகிழ்ந்து மூழ்கி வடபக் கத்திலுள்ள கரைவந்தேறி செல்வம் பொலியும் திருப்புலியூரில் உள்ள பசும்பொன் மன்றத்துள் திருநடனம் போற்ற உருகும் மனத்துடன் சென்றார்.

வந்துதில்லை மூதூரின் எல்லை வணங்கி மகிழ்ச்சியினால்
அந்த ணாளர் தொண்டர்குழாம் அணைந்தபோதில் எதிர் வணங்கிச்
சந்த விரைப்பூந் திருவீதி இறைஞ்சித் தலைமேற் கரம் முகிழ்ப்பச்
சிந்தை மகிழ எழுநிலைக்கோ புரத்தை அணைந்தார் சேரலனார். 801

வி.ரை :- பழம்பெரும் திருத்தில்லையின் எல்லை வந்தடைந்து வணங்கி மகிழ்ச்சியினால் அந்தணாளர் சுந்தரரது தொண்டர்கள் வந்து சேர்ந்தபோது எதிர் வணக்கம் செய்து, மணம் வீசும் மலர்கள் நிறைந்த திருவீதியை வணங்கித் தலைமேல் கையைக் குவித்துக் கும்பிட்டு மனம் மகிழ எழுநிலைக் கோபுரத்தைச் சேரல னார் சென்றடைந்தார்.

நிலவும் பெருமை எழுநிலைக் கோபுரத்தின் முன்னர் நிலத் திறைஞ்சி
மலருங் கண்ணீர்த்துளித்தும்பப் புகுந்து மணிமா ளிகை வலங்கொண்
டுலகு விளக்குந் திருப்பேரம் பலத்தை வணங்கி உள்ளணைந்தார்
அலகில் அண்டம் அளித்தவர்நின் றாடுந் திருச்சிற் றம்பலமுன். 802

வி.ரை :- நிலை பெற்றிருக்கும் எழுநிலைக் கோபுர தரிசனம் கண்டு நிலத்தில் விழுந்து வணங்கிக் கண்களில் நீர் ததும்பப் புகுந்து அழகு மாளிகை வலம்

வந்து, உலகம் போற்றத் திருப்பேரம் பலத்தைவணங்கி எல்லையில்லா அண்டம் அளித்த சிவபெருமான் நின்றாடும் திருப்பேரம்பலம் முன் சென்றடைந்தார்.

அளவில் இன்பப் பெருங்கூத்தர் ஆட எடுத்த கழல்காட்ட
உளமும் புலமும் ஒருவழிச் சென் றுருகப் போற்றி
உய்கின்றார்
களனில்விடம்வைத் தளித்தஅமு தன்றி மன்றில்கழல்வைத்து
வளருந் திருக்கூத் தமுதுலகுக் களித்த கருணை
வழுத்தினார். 803

வி.ரை :- அளவில்லாத இன்பத்தைப் பொழியும் பெருங்கூத்தராகிய சிவபெருமான் ஆடத்தூக்கிய தமது திருப்பாதகக் கழல் காட்ட உள்ளமும் உடலும் அந்தத் திருக்கழல் வழிச்சென்று உருகப் போற்றி, கண்டத்தில் விடத்தை வைத்து தேவர்கட்டு அமுதை வைத்து மன்றத்தில் திருக்கழல் வைத்து வளரும் திருக்கூத்தமுது உலகுக்கு அளித்த கருணையைப் போற்றினார்.

அ.ரை :- களனில்—கண்டத்தில்

ஆரா ஆசை ஆனந்தக் கடலுள் திளைத்தே அமர்ந்
தருளால்
சீரார் வண்ணப் பொன்வண்ணத் திருவந் தாதி
திருப்படிக் கீழ்ப்
பாரா தரிக்க எடுத்தேத்திப் பணிந்தார் பருவமழை பொழியும்
காரால் நிகர்க்க அரிய கொடைக் கையார் கழறிற்
றறிவார்தாம் 804

வி.ரை :- பருவமழை பொழிவதே போன்ற கார்மேகத்திற்கு நிகரான அரிய கொடை வள்ளல் சேரர் பெருமான் கழற்றறிவார், நீங்காத ஆசை எனும் ஆனந்தக் கடலினுள் திளைத்து அமர்ந்தருளி சீர்மிகு

அழகிய திருப்படிக்கீழ் உலகை ஆதரிக்க பொன் வண்ணத் திருவந்தாதி பாடி ஏத்திப் பணிந்தார்.

தம்பி ரானார்க் கெதிர்நின்று தமிழ்ச்சொன் மாலை கேட்பிக்க
உம்பர் வாழ நடமாடும் ஒருவர் அதற்குப் பரிசிலெனச்
செம்பொன் மணிமன் றினிலெடுத்த செய்ய பாதத்திருச்
சிலம்பின்
இம்பர் நீட எழுந்தஒலி தாமும் எதிரே கேட்பித்தார். 805

வி.ரை :- தம்பிரானார் சிவ்பெருமான் முன்நின்று தமிழ்ச் சொல் மாலை பாடி அதனை ஈசன் கேட்கும் படிச் செய்யத் தேவர்கள் வாழும்படி திருநடனமாகும் ஒப்பற்ற சிவபெருமான் அதற்குப் பரிசு எனப் பசும்பொன்னாலான மணி மண்டபத்தில் நடமாடி எடுத்த பாதச் சிலம்பின் ஒலி இவ்வுலக மாந்தர் உயர்வு பெற எழுந்த ஒலியும் கேட்க அருள்புரிந்தார்.

ஆடற் சிலம்பின் ஒலிகேட்பார் அளவில் இன்ப ஆனந்தம்
கூடப் பெற்ற பெரும்பேற்றின் கொள்கை வாய்ப்பக்
கும்பிடுவார்
நீடப் பணியுங் காலமெலாம் நின்று தொழுது புறம்போந்து
மாடத் திருமா ளிகைவீதி வணங்கிப் புறத்து
வைகினார். 806

வி.ரை :- திருத்தில்லை நடன ஒலிகேட்டுஅளவில் லாத இன்பமும் ஆனந்தமும் பெற்ற சிலம்பொலி கேட்கும் பெரும் பேற்றின் சிறப்பு வாய்க்கக் கும்பிட்டு நீண்ட நெடுநேரம் பணிந்து காலமெல்லாம் நின்று தொழுது புறம் வந்து மாடங்கள் நிறைந்த திருமாளிகைகளுடைய வீதியினை வணங்கிப் புறத்தே எழுந்தருளினார்.

பரவுந் தில்லை வட்டத்துப் பயில்வார் பைம்பொன்
அம்பலத்துள்
அரவும் புனலும் சடையாட ஆடுவார்கூத் தாராமை
விரவுங் காதல் மிக்காங்க வேதம் படியுந்திருப்படிக் கீழ்
இரவும் பகலும் பணிந்தேத்தி இன்பஞ் சிறக்கும்
அந்நாளில் 807

வி.ரை :- வணங்கும் திருத்தில்லை வட்டத்தில் வதியும் சேரர் பெருமான் போற்றும் அழகிய பசுமை மிக்க பொன் அம்பலத்துள் பாம்பும் நீரும் சடையும் ஆடக் கூத்தர் ஆட அதுகண்டு அடங்காத அன்பு பெருகி ஓங்க வேதம் படிந்துள்ள பஞ்சாக்கரப் படியின்கீழ், இரவும் பகலும் பணிந்து போற்றி இன்பம் சிறக்கும் அந் நாட்களில்.

ஆடும் பெருமான் பாடல் கேட் டருளித் தாழ்த்த படிதமக்குக்
கூடும் பரிசால் முன்பருளிச் செய்த நாவலூர்க்கோவை
நீடும் பெருங்கா தலிற்காண நிறைந்த நினைவு நிரம்பாமல்
தேடும் பாதர் அருளினால் திருவா ரூர்மேற்செல
எழுந்தார். 808

வி.ரை :- திருநடனமாடும் பெருமான் சுந்தரர் பாட்டைக் கேட்டருளி, சிலம்பொலி கேளாதவாறு தாழ்ந்ததன்மைதமக்குநேரும்படிமுன்பு அருளிச்செய்ய திருநாவலூர் மன்னனை, வளர்ந்த பேரன்பினால் காண நிறைந்த நினைவு மிகுதியாகத் திருமால் தேடும் பாதத்தையுடைய வரது அருளினால் திருவாரூர் செல எழுந்தருளினார்.

அ.ரை :- தாழ்த்தப்படி தமக்குக் கூடும் பரிசால்— சிலம்பின் ஒலி கேட்காதவாறு தாழ்த்திய தன்மைகூறும்.

அறிவின் எல்லை யாயதிருத் தில்லை எல்லை
அமர்ந்திறைஞ்சிப்
பிறிவி லாத திருவடியைப் பெருகும் உள்ளத் தினிற்பெற்றுச்
செறியும் ஞான போனகர்வந் தருளும் புகலி சென்றிறைஞ்சி
மறிசேர் கரத்தார் கோயில்பல வணங்கி மகிழ்ந்து
வழிக்கொள்வார். 809

வி.ரை :- வேதத்தின் எல்லையாகிய திருத்தில்லையின் எல்லையில் இருந்து வணங்கி என்றும் நீங்காது நினைவில் கொண்ட சிவபெருமான் திருவ்டித்தாள்களை உள்ளப் பெருக்கினில் பெற்று வேத அறிவு செறிந்த திருஞாள சம்பந்தர் தோன்றிய புகலி சென்று வணங்கி மானைக் கையில் ஏந்திய கையையுடைய சிவனார் கோயில் பல வணங்கி மகிழ்ந்து வழிதொடர்ந்தார்.

அ.ரை :- அறிவு—வேதம். எல்லை— வேதாந்தம் திருத்தில்லை வேதமாகவும் அதன் எல்லைவேதாந்தமாகவும் காண்க. ஞானபோனகர்—திருஞான சம்பந்தர். மறி—மான், மகரமீன்.

சேரமான் திருவாரூர் சென்றது

வழியிற் குழியிற் செழுவயலின் மதகின் மலர்வா விகளின்
மடுச்
சுழியிற் றாளந் திரை சொரியுந் துறைநீர்ப் பொன்னி
கடந்தேறி
விழியிற் றிகழுந் திருநுதலார் விரும்பும் இடங்கள்
இறைஞ்சியுகக்
கழிவிற் பெருவெள் ளமுங் கொள்ளாக் கழனி ஆரூர்
கண்ணுற்றார் 810

வி.ரை:- வழிநெடுகிலும் உள்ள குழிகளிலும் வயலிலும், மதகினின்றும் அமையும் வாவிகளிலும், மடுக்களிலும், சுழிகளிலும் முத்துக்களை அலைகள் கொணர்ந்து கொட்டும் துறைகளையுடைய நீர் வளம் மிக்க காவிரி ஆறு கடந்து ஏறி, நெற்றிக் கண்ணனார் விரும்பி அமர்ந்தருளும் இடங்கள் பல வணங்கி ஊழிக் காலப் பிரளயத்தினும் மிக்க நீர் வளமிக்க வயல்கள் சூழ்ந்த திருஆரூர் சென்றடைந்தார்.

திருநாகைக் கோரணம்

நம்பி தாமும் அந்நாட் போய் நாகைக் காரோணம்பாடி
அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்தம் ஆடற்பரிமா
பைம்பொற் சுரிகை முதலான பெற்று மற்றும் பலபதியில்
தம்பி ரானைப் பணிந்தேத்தித் திருவா ரூரிற் சரர்ந்திருந்தார் 811

வி.ரை:- நம்பி ஆரூரரும் இந்நாட்களில் திருநாகைக் கோரணம் சென்று பாடி அழகிய மணிகள் பதித்த பொன்னாபரணங்கள், நவமணிகள், ஆடை, சந்தனம் போரிடும் குதிரை, பசும்பொன் கவசம் முதலான போற்றி அங்கிருந்து பலசிவாலயங்களும் சென்று பணிந்து போற்றித் திருவாரூரில் அமர்ந்திருந்தார்.

அ.ரை:- நம்பி—சுநதரர் அடல்பரிமா—போரிடும் குதிரை, சுரிகை—கவ்சம்.

சுந்தரர் சேரமானை எதிர்கொண்டது

வந்து சேரர் பெருமானார் மன்னுந் திருவா ரூரெய்த
அந்த ணாளர் பெருமானும் அரசர் பெருமான் வரப்பெற்றுச்

சிந்தை மகிழ எதிர்கொண்டு சென்று கிடைத்தார் சேரலனார்
சந்தை விரைத்தார் வன்தொண்டர் முன்பு விருப்பினுடன்
தாழ்ந்தார் 812

வி.ரை: சேரர் பெருமானார் திருவாரூர் வந்து சேர அந்தணாளர் பெருமான் சுந்தரரும் அரசர் பெருமான் வரக்கண்டு மணம் மகிழ்ந்து எதிர்கொண்டு அருகில் சென்று அழகிய மணம் கமழ் மாலை அணிந்த வன்தொண்டர் முன்பு விரும்பித் தாழ்ந்து வணங்கினார்.

அ.ரை:- அந்தணாளர்—சுந்தரமூர்த்தி சுவாமிகள் கிடைத்தார்—வந்து சேர்ந்தார். சந்தை விரைத்தார்—அழகிய மணமுடைய மாலை.

முன்பு பணிந்த பெருமானைத் தாமும் பணிந்து
முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந் தவரும் ஆர்வத்தொடுதழுவ
இன்ப் வெள்ளத் திடைநீந்தி ஏற மாட்டா தலைவார்போல்
என்பும் உருக உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றாம் என
இசைந்தார் 813

வி.ரை:- முதலில் வணங்கிய சேரமானைத் தாமும் பணிந்து உச்சி முகந்தெடுத்து அன்பு பெருக்கெடுக்கத் தழுவிக்கொள்ள அரசரும் ஆர்வத்துடன் தழுவிக் கொள்ள இன்ப வெள்ளத்தில் மூழ்கி நீந்திக் கரையேற மனமின்றி ஏறாது தவிப்பார் போல எலும்பும் உருக உயிர் ஒன்றித்து உடம்பும் ஒன்று என இருந்தனர்,

"சேரமான் தோழர்"

ஆன நிலைமை கண்டதிருத் தொண்டர் அளவில்
மகிழ்வெய்த
மானச் சேரர் பெருமானார் தாமும் வன்தொண்
டருங்கலந்த

பான்மை நண்பால் 'சேரமான் தோழர்' என்று பார்பரவும்
மேன்மை நாமம் முனைப்பாடி வேந்தர்க் காகி விளங்கியதால் 814

வி.ரை:- வன்தொண்டருக்கும் சேரமான் பெருமானாருக்கும் இருந்த நட்பின் நிலைமை கண்ட திருத்தொண்டர்கள் அளவில்லாத மகிழ்ச்சியடைந்து இவ்விருவரும் கலந்த பான்மையின் நட்பினால் முனைப்பாடி வேந்தர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் ''சேரமான் தோழர்'' என்ற பெயர் உலகம் முழுதும் பரவி விளங்கியதாம்.

இருவரும் கோயிலினுட் சென்றது

ஒருவர் ஒருவரிற்கலந்த உணர்வால் இன்ப மொழியுரைத்து
''மருவ இனியார் பால்செய்வ தென்னாம்'' என்னும் மகிழ்ச்சியினால்
பருவ மழைச்செங் கைப்பற்றிக் கொண்டு பரமர் தாள் பணியத்
தெருவு நீங்கிக் கோயிலினுட் புகுந்தார் சேர மான் தோழர் 815

வி,ரை:- இருவரும் ஒருவர் ஒருவரிற் கலந்து நின்ற உணர்வினால் இன்ப மொழி பேசி, இனிமை தங்கிய சேரமான் பால் செய்யத்தக்கது எது என்று சிந்தித்து மகிழ்ந்து, பருவ மழை போன்ற கொடைத்தன்மையுடைய மன்னவர் சிவந்த கையைப் பற்றிக் கொண்டு பரமபிதாவின் திருத்தாள்களைப் பணியும் ஆவலுடன் தெருவைக் கடந்து சேரமான் தோழர் சுந்தரர் திருக்கோயிலினுட் புகுந்தார்.

தேவாசிரியன் முன் வணங்கியது

சென்று தேவா சிரியனைமுன் இறைஞ்சித் திருமா ளிகை
வலங் கொண்
டொன்றும் உள்ளத் தொடும் புகுவார் உடைய நம்பி
முன்னாக
நின்று தொழுது கண்ணருவி வீழ நிலத்தின் மிசை வீழ்ந்தே
என்றும் இனிய தம்பெருமான் பாதம் இறைஞ்சி ஏத்தினார்!
816

வி.ரை:- சென்ற இருவரும் தேவாசிரியன் முன் வணங்கித் திருமாளிகையை வலம் வந்து ஒன்றி உள்ளத்தொடும் புகுந்த சேரர் உடைய நம்பியின் சந்நதி முன்பு நின்று தொழுது கண்கள் நீர் பொழிய நிலத்தின் மீது விழுந்து தெவிட்டாத இனிய தம் பெருமான் பதம் வணங்கி வாழ்த்தினார்.

சேரர் திருமும்மணிக்கோவை பாடியது

தேவர் முனிவர் வந்திறைஞ்சுந் தெய்வப் பெருமாள் கழம்
வணங்கி
மூவர் தமக்கு முதலாகு மவரைத் திருமும் மணிக்கோவை
நாவலூரர் தம்முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்
தாவில் பெருமைச் சேரலனார் தம்பி ரானார்
தாங்கொண்டார் 817

வி.ரை:- தேவர்களும் முனிவர்களும் வந்து வணங்கும் தேவதேவன் திருக்கழல் வணங்கி மூவருக்கும்முதலாகும் சிவபெருமானைத் திருமும்மணிக்கோவை நாவலூரர்சுந்தரர்முன்புநன்மை விளங்கும்படிகுற்றமற்ற பெருமை மிக்க சேரலனார் கேட்பிக்கத் தம்பிரானாரும் அதனைக் கொண்டார்.

பரவையர் மாளிகை சென்றது

அங்கண் அருள்பெற்றெழுவாரைக் கொண்டு புறம்போந்
தாரூரர்
நங்கை ப்ரவை யார்திருமா ளிகையில் நண்ண நன்னுதலார்
பொங்கு விளக்கும் நிறைகுடமும் பூமாலைகளும் புகை
அகிலும்
எங்கும் மடவார் எடுத்தேந்த அணைந்து தாமும்
எதிர்கொண்டார் 818

வி.ரை:- அழகிய நெற்றிக் கண்ணனார் அருளைப் பெற்று எழுந்த சேரர் பெருமானுடன் திருக்கோயிலை விட்டு வெளிவந்து ஆரூரர் சுந்தரர் நங்கை பரவை யாரது திருமாளிகை சென்றடையப் பரவையாரும், பொங்கி வீசும் விளக்கும், நிறைகுடமும் மலர்மாலை களும், அகிற் புகையும் எங்கும் ஏவல் மகளிர் எடுத்து ஏந்தி வரப்பரவையாரும் வந்து எதிர்கொண்டழைத் தார்.

பரவையார் செய்த பூசனைகள்

சோதி மணிமா ளிகையின் கண் சுடரும் பசும்பொற் காலமளி
மீது பெருமாள் தமை இருத்தி நம்பி மேவி யுடனிருப்பக்
கோதில் குணத்துப் பரவையார் கொழுந னார்க்குந்
தோழர்க்கும்
நீதி வழுவா ஒழுக்கத்து நிறைபூ சனைகள் முறையளித்தார்.
819

வி.ரை:- ஒளிவீசும் மாணிக்க மணிகள் பதித்த பரவையாரின் மாளிகையில் ஒளிவீசும் பசும்பொன்னால் அமைந்த கால்களையுடைய பீடத்தின் மீது பெருமாள் சேரர் பெருமானை அமர வைத்து நம்பி ஆரூரரும் உடன் அமர்திருக்கக் குற்றமற்ற பரவையாரும் தம்

கொழுநனார் கணவருக்கும் அவர் தோழருக்கும் ஒழுக்க நெறி தவறாத முறைமையில் முழுமையான பூசனைகள் முறைப்படி செய்தார்.

அ.ரை:- பசும்பொற்கால் அமளி—பசும்பொன்னால் செய்யப்பட்ட கால்களையுடைய ஆசனம்.

தாண்டும் புரவிச் சேரர்குலப் பெருமாள் தமக்குத் திருஅமுது
தூண்டு சோதி விளக்கனையார் அமைக்கத் துணைவர்
சொல்லுதலும்
வேண்டும் பரிசு வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமும்
ஈண்ட சமைப்பித் துடன்வந்தார்க் கெல்லாம் இயல்பின்
விருந்தமைத்தார். 820

வி.ரை :- விரைந்து பாயும் குதிரையுடைய சேரர் குலப் பெருமாள் நாயனாருக்குத் திருஅமுது செய்திடத் துண்டப்பட்ட சோதிபோன்று ஒளிவீசும் விளக்கு போன்ற பரவையாருக்கு ஆரூர் சொல்லுதலும் வேண்டியன வெவ்வேறு விதவிதமான கறியும் சோறும் விதவிதமாகச் சமைத்து உடன் வந்தவர்கட்கெல்லாம் இயல்பான விருந்து சமைத்தார்.

அ.ரை :- போனகம்—சோறு. ஈண்ட—விரைவாக.

அரசர்க் கமைத்த சிறப்பினும்மேல் அடியார்க் கேற்கும்
படியாக
விரவிப் பெருகும் அன்பினுடன் விரும்பும் அமுது
சமைத்ததற்பின்
புரசைக் களிற்றுச் சேரலனார் புடைசூழ்ந் தவரோ டமுது
செயப்
பரவைப் பிறந்த திருவனைய பரவை யார்வந் தறிவித்தார்.
821

வி.ரை :- சேரர் குலப்பெருமாள் அரசர் என்ற சிறப்பினும் சிவனடியார் என்ற சிறப்பு மேன்மையுடைய தாதலின் சேர்ந்து பெருகும் சிவனடியார் எனும் அன்பினால் விரும்பும்படியான அமுது சமைத்தற்பின், கழுத்தில் கயிறு அணிந்த யானையுடைய சேரலனார் புடைசூழ்ந்து சுந்தரருடன் அமுது செய்யப் பாற்கடலில் பிறந்த இலக்குமி போன்ற பரவையார் அறிவித்தார்.

அ.ரை :- புரசைக்களிறு—கழுத்தில் கயிறு அணிந்த யானை. பரவைப் பிறந்த திரு —பாற்கடலில் தோன்றிய இலக்குமி.

சேரர் பெருமான் எழுந்தருளி அமுது செய்யச் செய்தவத்தால்
தாரின் மலிபூங் குழல்மட வாய்! தாழா தமுது செய்வி'' எனப்
பாரின் மலிசீர் வன்தொண்டர் அருளிச் செய்யப்
பரிகலங்கள்
ஏரின் விலங்கத் திருத்திக்கால் இரண்டிற் படியா ஏற்றுதலும்
822

வி.ரை :- ''நாம் செய்த பெருந்தவத்தால் சேரர் பெருமான் இங்கு எழுந்தருளி அமுது செய்ய மலர் மாலை மிகுந்த கூந்தலையுடைய பரவையே! குறை படாது அமுது செய்விப்பாய்'' என்று உலகில் மிகவும் சிறப்புகள் பெற்ற வன்தொண்டர் அருளிச் செய்ய உண் கலங்களை அழகாகத் தூய்மை செய்து முக்காலி இரண்டில் ஏற்றிவைத்ததும்.

அ.ரை :- பரிகலங்கள்—உண் கலங்கள். ஏர்—அழகு கால்—முக்காலி. படியா—படியும்படி.

''ஆண்ட நம்பி, பெருமாளை உடனே அமுது செய்தருள
வேண்டும்'' என்ன ஆங்கவரும் விரைந்து வணங்கி வெரு
வுறலும்

நீண்ட தடக்கை பிடித்தருளி மீண்டும் நேரே குறைகொள்ள
ஈண்ட அமுது செய்வதனுக் கிசைந்தார் பொறையர்க்
கிறையவனார். 823

வி.ரை :- நம்பி ஆண்டவர், சேரர் பெருமாளை நோக்கி "உடனே அமுது செய்தருள வேண்டும்" என்று வேண்ட சேரர் கோனும் விரைவாக வணங்க நடுக்க மடைய, நம்பி ஆரூரரும் சேரமானின் நீண்ட பருத்த கைகளைப் பற்றி மீண்டும் விழுந்து வேண்டாத குறை யாக வேண்டுதலும் விரைவாக அமுது செய்யப் பொறையர்க் கிறைவனார் சேரர் பெருமான் இசைந் தார்.

விருந்தோம்பல் சிறப்பு

ஒக்க அமுது செய்தருள உயர்ந்த தவத்துப் பரவையார்
மிக்க விருப்பால் அமுது செய்வித் தருளி மேவும்
பரிசனங்கள்
தக்க வகையால் அறுசுவையுந் தாம்வேண் டியவா றினி
தருந்தத்
தொக்க மகிழ்ச்சி களிசிறப்பத் தூய விருந்தின் கடன்
முடித்தார். 824

வி.ரை :- இருவரும் ஒன்றாக அமுது செய்திட, உயர்ந்த தவத்தில் சிறந்த பரவையாரும் மிகவும் விருப்பமுடன் அவர்களுக்கு அமுது செய்வித்து மற்ற பரிசனங்களுக்குத் தக்கவாறு அறுசுவை உணவு அவர் களுக்கு வேண்டியவாறு உண்ணக் கொடுத்து மகிழ்ச்சி மிகுதியாகத் தூயதான விருந்தோம்பல் கடன் முடித் தார்.

பனிநீர் விரவு சந்தனத்தின் பசுங்கர்ப் பூர விரைக்கலவை
வனிதை யவர்கள் சமைத் தெடுப்பக் கொடுத்து மகிழ் மான் மதச் சாந்தும்
புனித நறும்பூ மாலைகளும் போற்றிக் கொடுத்துப் பொற் கொடியார்
இனிய பஞ்ச வாசமுடன் அடைக்காய் அமுதம் ஏந்தினார். 825

வி.ரை :- பனிநீர் கலந்த சந்தனம் பசுங்கற்பூர வாசனைக் கலவையுடன் ஏவல் மகளிர் செய்து எடுத்துக்கொடுத்து மகிழ்ச்சி தரும் கஸ்தூரிச் சாந்தும், புனித மணங்கமழ் மாலைகளும் போற்றிக் கொடுத்துப் பொற் கொடியார் போன்ற மகளிர் ஐந்து வகையான வாசனைப் பொருட்களுடன் தாம்பூலமும் ஏந்தி நின்றனர்.

அ.ரை :- வனிதையர் — பெண்கள். மான்மதச் சாந்து — கஸ்தூரிக் கலவை. பஞ்சவாசம் — தக்கோலம், ஏலம், இலவங்கம், கற்பூரம், சாதிக்காய் ஆகிய ஐந்துமாம்.

ஆய சிறப்பிற் பூசனைகள் அளித்த எல்லாம் அமர்ந்தருளித்
தூயநீறு தங்கள்திரு முடியில் வாங்கித் தொழுதணிந்து
மேய விருப்பி னுடனிருப்பக் கழறிற் றறிவார் மெய்த் தொண்டின்
சேய நீர்மை அடைந்தாராய் நம்பி செம்பொற் கழல் பணிந்தார். 826

வி.ரை :- இத்தகைய சிறப்பான பூசனைகள் எல்லாம் விரும்பி ஏற்றருளி தூய திருநீறு தங்கள் திரு முடியில் தணிந்து தொழுது வாங்கிப் பொருந்திய விருப்பினுடன் இருக்கச் சேரமான் பெருமானாரின் உண்மைத் தொண்டின் செம்மைத் தன்மையை

அடைந்தவராய்ச் சுத்தரரது பசும் பொற் கழல் பணிந்தார்.

அ.ரை:- அமர்ந்தருளி — ஏற்றுக் கொண்டருளி சேய நீர்மை—செம்மையான தன்மை.

மலைநாட் டரசர் பெருமானார் வணங்க வணங்கி எதிர்
தழுவிக்
கலைநாட் பெருகு பதிமுகத்துப் பரவை யார்தங் கணவனார்
சிலைநாட் டியவெல் கொடியாரைச் சேரத் தந்தார் எனக்
கங்கை
அலைநாட் கொன்றை முடிச்சடையார் அருளேபோற்றி
யுடன மர்ந்தார். 827

வி.ரை: மலை நாட்டரசர் சேரமான் வணங்கச் சுந்தரரரும் வணங்கிக் கட்டித் தழுவி, நாள்தோறும் கலை பெருகும் நிலவின் ஞனத்தையுடைய பரவையார் தமது கணவனார் வில் பொறிக்கப்பட்ட வெற்றிக் கொடியையுடைய சேரர் பெருமானைச் சேரத் தந்தார் எனக் கங்கை அலைபாயும் அன்றலர்ந்த கொன்றை அணிந்த முடியையுடைய சடையார் அருளைப் போற்றி உடன் அமர்ந்திருந்தார்.

அ.ரை:- கலை—சந்திரகலை. நாட்பெருகும்—வளர்பிறை. மதி—முழுமதி. சிலை—வில். கொடியார்—சேரன். நாட்கொன்றை— அன்றலர்ந்த கொன்றை.

செல்வத் திருவா ரூர் மேவுஞ் செம்பொற் புற்றில்
இனிதமர்ந்த
வில்வெற் புடையார் கழல் வணங்கி வீதி விடங்கப்
பெருமானை

மல்லற் பவனி சேவித்து வாழ்ந்து நாளும் மனமகிழ்ந்து
சொல்வித் தகர்தாம் இவர்களுந் தொடர்ந்த காதலுடன்
சிறந்தார் 828

வி. ரை:- செல்வம் மிக்க திருவாரூரில் பசும்பொன் போன்ற புற்றில் இனிது அமர்ந்தருளிய மேருமலையை வில்லாக உடையவரது திருக்கழல் வணங்கி வீதி விடங்கப் பெருமானை வளப்பம் மிக்க பவனி சேவித்து வாழ்ந்து நாளும் மனம் மகிழ்ந்து சொல்வித்தகர்களாகிய சேரமானும் சுந்தரரும் தொடர்ந்து அன்பின் வழி நின்றனர்.

சுந்தரர் பிறகோயில்கள் சென்று தொழ நினைந்தது

இவ்வாறொழுகும் நாளின்கண் இலங்கு மணிப்பூண் வன்
தொண்டர்
மைவாழ் களத்து மறையவனார் மருவும் இடங்கள் பல
வணங்கிச்
செய்வார் கன்னித் தமிழ்நாட்டுத் திருமா மதுரை முதலான
மொய்வார் சடையார் மூதூர்கள் இறைஞ்ச முறைமை
யால் நினைந்தார் 829

வி.ரை:- இவ்வாறு இருவரும் மகிழ்ந்தமர்ந்திருக்கும் நாளில் தேர்ந்த மணிகள் பதித்த ஆபரணங்கள் பூண்ட வன்தொண்டர், திருநீலகண்டத்து வேத நாயகர் வாழும் இடங்கள் பல வணங்கி வயல்கள் நிறைந்த கன்னித்தமிழ் நாட்டுத் திருமாமதுரை முதலான, கற்றையான அழகிய சடையைபுடையவர் அமர்ந்த பழம் பேரூர் பல பணிந்திட முறைப்படி நினைந்தார்.

அ.ரை:- களத்து — கண்டத்து. செய்வார்— வயல்கள் நிறைந்த. மொய்—திரட்சி.

சேரமானும் உடன் போகத் துணிந்தது"

சேரர் பெருமானும் ஆரூரர் தம்மைப் பிரியாச் சிறப்பாலும்
வாரம் பெருகத் தமக்கன்று மதுரை ஆல வாயமர்ந்த
வீரர் அளித்த திருமுகத்தால் விரும்பும் அன்பின் வணங்குதற்குச்
சார எழுந்த குறிப்பாலும் தாமும் உடனே செலத் துணிந்தார் 830

வி.ரை:- சுந்தரர் பெருமான் எண்ணமறிந்த சேரர் பெருமானும் ஆரூரரைப் பிரியாத சிறப்பினாலும் ஆர்வம் பெருகத் தமக்கு அன்று மதுரை ஆலவாயமர்ந்த பிரானார் அளித்த கடிதத்தால் விரும்பும் அன்பினால் வணங்குதற்குச் சேர்ந்து எழுந்த குறிப்பாலும் தாமும் உடன் செல்லத் துணிந்தார்.

இருவரும் புறப்பட்டது

இருவர் திருவுள்ள மும் இசைந்த பொழுதில் எழுந்து திருவாரூர்
ஒருவர் மலர்ததாள் புக்கிறைஞ்சி உடன்பாட் டருளால் பொங்தருளி
மருவும் உரிமைப் பெருஞ்சுற்றம் வரம்பில் பணிகள் வாகனங்கள்
பொருவில் பண்டா ரங்கொண்டு போது வார்கள் உடன்போத 831

வி.ரை:- இருவரும் செல்ல விரும்பியபோது எழுந்து திருவாரூரில் அமர்ந்த ஒப்பற்ற சிவபெருமான் மலர்ந்தாள்களைக் கோயிலினுட் சென்று வணங்கி சிவபெருமானின் அருளால் சென்று பொருந்த உரிமை யடைய பெருஞ் சுற்றமுடன் எல்லையற்ற பணியாட்கள் வாகனங்கள் குறைவற்ற செல்வம் கொண்டு வருவார் களும் உடன் சென்றனர்.

அ.ரை:- ஒருவர்—சிவபெருமான். பணிகள்—பணி ஆட்கள். பண்டாரம்—செல்வம் பொக்கிஷம்.

திருநாகைக் காரோணம்

சேவித் தணையும் பரிசனங்கள் சூழத் திருவா ரூரிறைஞ்சிக்
காவிற் பயிலும் புறம்பணையை கடந்து போந்து கீழ்வேளூர்
மேவிப் பரமர் கழல் வணங்கிப் போந்து வேலைக்
கழிக்கானல்
பூவிற் றிகழும் பொழில்நாகை புகுந்து காரோணம்
பணிந்தார் 832

வி.ரை:-சேவித்துக் கொண்டு வரும்சிவனடியார்கள் ஏவலாட்கள் சூழத் திருவாரூரில் வணங்கி, சோலைகளால் சூழப்பட்ட வயற்புறங்களையும் கடந்து சென்று கீழ்வேளூர் சென்றடைந்து பரமர் திருக்கழல் வணங்கிச் சென்று கடற்கரையிலுள்ள நெய்தல் நிலத்தில் உலகில் சிறந்து விளங்கும் பொழில்கள் சூழப்பட்ட திருநாகை சென்று காரோணம் புகுந்து வணங்கினார்.

அ.ரை:- கா—சோலை. பணை—வயல். வேலை—கடல். கழிக்கானல்—நெய்தல் நிலம்.

திருமறைக்காடு

திருக்கா ரோணச் சிவக் கொழுந்தைச் சென்று பணிந்து
சிந்தையினை
உருக்கார் வச்செந் தமிழ்மாலை சாத்திச் சிலநாள் உறைந்து
போய்ப்
பெருக்கா றுலவு சடைமுடியார் இடங்கள் பலவும்
பணிந்தேத்தி
அருட்காரணர்தந் திருமறைக்கா டணைந்தார் சேரர்
ஆரூரர் 833

வி ரை:- திருநாகைக் காரோணத்து எழுந்தருளிய சிவபெருமானைத் தொழுது உள்ளத்தில் எழுந்த உருக்கும் ஆர்வத்தால் செந்தமிழ் மாலை சாத்திச் சிலநாள் அங்கு தங்கியிருந்து, பெருக்கெடுத்தோடும் கங்கை ஆறு உலவும் சடையப்பர் எழுந்தருளும் இடங்கள் பலவும் பணிந்து போற்றி அருளுக்குக் காரணகர்த்தாவாகிய சிவபெருமான் எழுந்தருளிய திருமறைக்காடு ஆரூரரும் சேரரும் சென்றடைந்தனர்.

அ·ரை:- அருட் காரணர்—சிவபெருமான்-

முந்நீர் வலங்கொள் மறைக்காட்டு முதல்வர் கோயில்
சென்றிறைஞ்சிச்
செந்நீர் வாய்மைத் திருநாவுக் கரசும் புகலிச் சிவக்கன்றும்
அந்நேர் "திறக்க அடைக்க" எனப் பாடுந் திருவாயிலை
அணைந்து
நன்னீர் பொழியும் விழியினராய் நாயன்மாரை
நினைந்திறைஞ்சி 834

வி.ரை:- கடற்கரையில் அமைந்துள்ள திருமறைக்காட்டில் எழுந்தருளிய மூவர்க்குமுதல்வர் திருக்கோயில் சென்று வணங்கிச் செம்மையான சிறப்புகளையுடைய் வாய்மையினார் திருநாவுக்கரசரும் திருப்புகலிச் சிவக்கன்று திருஞான சம்பந்தரும் அந்தக் கோயிலின் திருக்கதவு திறக்கவும் அடைக்கவும் பாடிய அந்நேரிய திருவாயிலை அடைந்து கண்கள் நீர் பொழிய நாயன்மார் அப்பர் சம்பந்பர் இருவரையும் நினைந்து வணங்கினர்.

பதிகம் பாடிப் பணிந்தது

நிறைந்த மறைகள் அர்ச்சித்த நீடு மறைக்காட் டரு
மணியை
இறைஞ்சி வீழ்ந்து பணிந்தெழுந்து போற்றி "யாழைப்
பழித்"தென்னும்

அறைந்த பதிகத் தமிழ்மாலை நம்பி சாத்த அருட்சேரர்
சிறந்த அந்தா தியிற்சிறப்பித் தனவே யோதித் திளைத்
தெழுந்தார் 835

வி.ரை:- வேதங்கள் சேர்ந்து அருச்சித்த சிறந்த மறைக்கட்டில் எழுந்தருளிய அரிய மணி போன்ற சிவபெருமானை வீழ்ந்து பணிந்து வணங்கிப் போற்றி எழுந்து ''யாழைப் பழித்த தன்னமொழி'' என்று அடி யெடுத்துப் பதிகம் சுந்தரர் பாடிச் சாத்த அருள் மிக்க சேரமானும் சிறந்த அந்தாதியில் சிறப்புானவற்றையே ஓதி மகிழ்ந்தெழுந்தார்.

அகத்தியான்பள்ளி—திருக்கோடிக்குழகர்

எழுந்து பணிந்து புறத்தெய்தி இருவர் பெருந்தொண்டருஞ்
செழுந்தண் பழனப் பதியதனுள் அமர்ந்து தென்பால்
திரைக் கடல் நஞ்
சழுந்து மிடற்றார் அகத்தியான் பள்ளி இறைஞ்சி
அவிர்மதியக்
கொழுந்து வளர்செஞ் சடைக்குழகர் கோடிக் கோயில்
குறுகினார் 836

வி.ரை:- எழுந்து வயல்களால் சூழப்பட்ட சிவபதி அதனுள் அமர்ந்திருந்து அதற்குத் தென்பகுதியில், பாற் கடலில்தோன்றிய நஞ்சைக்கழுத்தில் அடக்கியசிவபெரு மானது அகத்தியான் பள்ளி சென்றுவணங்கி ஒளி வீசும் மூன்றாம் பிறை அணிந்த சிவந்த சடையப்பரது திருக் கோடிக்குழகரது கோயில் சென்றடைந்தார்.

அ.ரை :- பழனம்—வயல். அவிர் –ஒளிவிளங்கும்

பதிகம் பாடியது

கோடிக் குழகர் கோயில்அயல் குடிகள் ஒன்றும்
புறத்தெங்கும்
நாடிக் காணா துள்புக்கு நம்பர் பாதந் தொழுதுள்ளம்
வாடிக் "கடிதாய்க் கடற்காற்"றென் றெடுத்து மலர்க்கண்
ணீர்வாரப்
பாடிக் காடு காள்புணர்ந்த பரிசும் பதிகத் திடைவைத்தார்.
837

வி.ரை :- கோடிக் கழகர் கோயில் சென்று பக்கத்துக் குடிகளில் மற்றுமுள்ள இடங்களிலும் சென்று பார்த்து ஒன்றும் காணதவர்களாய்க் குழகர் கோயிலினுட் புகுந்து நம் இறைவன் பாதம் தொழுது உள்ளம் வாட்டமடைந்து "கடிதாய்க் கடற்காற்று வந்து தெற்றக் கரைமேல் குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ?" என்றெடுத்து மலர் போன்ற கண்களிலிருந்து நீர் பெருகப் பாடித் துர்க்கையைப் புணர்ந்த சிறப்பும் பதிகத்தில் வைத்தருளினார்.

அ. தை :- அயல்குடிகள் — பக்கத்து இடங்கள். காடுகாள்—காடுகிழாள், காட்டு தேவதை, துர்க்கை.

மதுரை வந்து சேர்ந்தது

அங்கு வைகிப் பணிந்தருளாற் போவசர் அகன்சேர ணாட்
டரனார்
தங்கும் இடங்கள் வணங்கிப் போய்ப் பாண்டி நாடு
தனைசார்ந்து
திங்கள் முடியார் திருப்புத்தூர் இறைஞ்சிப் போந்து சேண்
விளங்கும்
மங்குல் தவழும் மணிமாட மதுரை மூதூர் வந்தணைந்தார்.
838

வி.ரை :- அங்கு நிலநாள் தங்கியிருந்து பணிந்து சிவனருளால் அகன்ற சோழநாட்டரனார் சிவபெருமான் தங்கும் இடங்கள் பலவும் வணங்கிப் போய்ப் பாண்டி நாடு சென்றடைந்து நிலவைத் தலையில் அணிந்தவரது திருப்புத்தூர் சென்று வணங்கிச் சென்று மலை போன்றுயர்ந்து மேகங்கள் தவழும் அழகிய மணிகள் பதித்த பழம்பெருமை மிக்க மதுரை வந்தடைந்தார்.

அ. ரை :- சேண் விளங்கும்—மலையென்ன உயர்ந்து விளங்கும். மங்குல்—மேகம்.

பாண்டியன் வரவேற்றது

சேரமான் தோழரும் அச் சேரர்பிரா னும்பணிப் பூண்
ஆரமார் பரைமதுரை அலவா யினில் வணங்க
வாரமா வந்தணைய வழுதியார் மனக் காதல்
கூரமா நகர்கோடித் தெதிர்கொண்டு கொடுபுக்கார். 839

வி.ரை :- சேரமான் தோழர் சுந்தரரும் அந்தச் சேரர் தலைவரும் பாம்பை மார்பில் அணிந்த மார்பை உடைய சிவபெருமானைத் திருஆலவாயினில் வணங்குவதற்கு விருப்பமுடன் வந்து சேரப் பாண்டியனும் மனத்தில் அன்பு மேலோங்க நகரை அலங்கரித்து எதிர் கொண்டான்.

அ.ரை :- பணிப் பூண் ஆர மார்பர் — பாம்பு ஆபரணமாக அணிந்த மார்பையுடைய சிவபெருமான். வழுதியார்—பாண்டிய மன்னன். கோடித்து—சோடித்து, அலங்கரித்து.

சோழனும் வந்திருந்தது

தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனார்

அன்னவர்கள் உடன்கூட அணைய அவருங்கூடி
மன்னுதிரு ஆலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார் 840

வி.ரை :- தென்னவர்கோன் பாண்டியன் மகளாரைத் திருமணம் செய்து முன்னரே பழைய மதுரை நகரில் இருந்த சோழனும் சேரமானும் பாண்டியனும் உடன் சேரச் சோழனுங் கூடிப் பொருந்திய அழகிய திரு ஆலவாய் மூவரும் வந்து சேர்ந்தனர்.

அ.ரை :- திருவேட்டு—திருமணம்.

மூவேந்தரும் திருஆலவாயில் வழிபட்டது

திருஆல வாயமர்ந்த செஞ்சடையார் கோயில்வலம்
வருவார்முன் வீழ்ந்திறைஞ்சி வண்தொண்டர் வழித்தொண்டு
தருவானைப் போற்றிசைத்துத் தாழ்ந்தெழுந்து வாழ்ந்ததமிழ்ப்
பெருவாய்மை மலர்புனைந்து பெருமகிழ்ச்சி பிறங்கினார். 841

வி.ரை :- திரு ஆலவாயில் அமர்ந்தருளிய சிவந்த சடையையுடையவரது திருக்கோயிலை மூவரும் வலம் வந்து வீழ்ந்து வணங்கி, வழித் தொண்டாற்றிடத் தரும் சிவபெருமானை வன்தொண்டர் சுந்தரர் போற்றி இசையுடன் பாடி வணங்கி எழுந்து, தமிழால் திருவாய் மலர்ந்தருளிய மாலை சாத்திப் பெருமகிழ்ச்சியில் திகழ்ந்தார்.

சேரர் பெரிமான் வழிபட்டது

படியேறு புகழ்ச்சேரர் பெருமானும் பார்மிசை வீழ்ந்
"தடியேனைப் பொருளாக அளித்ததிரு முகக்கருணை
முடிவேதென் றறிந்திலேன்" என மொழிகள் தடுமாறக்
கடியேறு கொன்றையார் முன்பரவிக் களிகூர்ந்தார். 842

வி.ரை :- உலகப் புகழ் சேரர் பெருமானும் மண் மீது விழுந்து "அடியேனை ஒரு பொருளாகக் கொண்ட திருமுகக் கருணைக்கு முடிவு ஏது என்று அறிந்திலேன்" என்று சொல் தடுமாற்றமடைய மணம் வீசும் கொன்றையார் முன்பு பரவிக் களிப்படைந்திருந்தார்.

அ.ரை :- படிஏறு புகழ்ச்சி — உயர்வு பெற்ற புகழ்ச்சி. அடியாரை உயர்விக்கும் புகழ்ச்சி. கடி— வாசனை.

பாண்டியன் செய்த உபசரிப்பு

செம்பியனா ருடன் செழியார் தாம் பணிந்து சேரருடன்
நம்பியும்முன் புறத்தணைய நண்ணியபே ருவகையால்
உம்பர்பிரான் கோயிலினின் றுடன்கொடு போய்
இருவர்க்கும்
இபம்பொன்மணி மாளிகையில் குறைவறுத்தார்
பஞ்சவனார். 843

வி.ரை :- சோழருடன் பாண்டியரும் பணிந்து சேரருடன் நம்பி ஆரூரரும் முன் சென்றிடப் பொருந்திய பேரன்பினால் தேவர்களது தலைவன் சிவபெருமான் கோயிலினின்று உடன் அழைத்துக் கொண்டு போய், சேரருக்கும் நம்பி ஆரூரருக்கும் குறைவின்றிப் பாண்டியனார் உபசரித்தார்.

அ.ரை :- செம்பியன்—சோழன். செழியர்—பாண்டியர். இருவர்க்கும்—சேரனுக்கும் நம்பி ஆரூரருக்கும். பஞ்சவனார்—பாண்டியனார். குறைவறுத்தார் — குறைவின்றி உபசரித்தார்.

பாண்டியன் விருந்தினராகச் சிலநாள் இருந்தது

உளமகிழக் கும்பிட்டங் குறையுநாள் உதியருடன்
கிளரொளிப் பூண் வன்தொண்டர் தாமிருந்த இடங்கெழுமி
வளவனார் மீனவனார் வளம்பெருக மற்றவரோ
டளவளா வியவிருப்பால் அமர்ந்து
கலந்தினிதிருந்தார். 844

வி.ரை :- உள்ளம் மகிழக் கும்பிட்டு அங்கு மூவேந்தருடன் இருக்கும் நாளில், கிளர்ந்து ஒளிவீசும் ஆப்ரணம் அணிந்த வன்தொண்டர் சேரருடன் தாம் இருந்த இடத்தைச் சென்றடைந்து சோழன், பாண்டியன் ஆகிய இவர்களது வளம் பெருக அவர்களோடு அளவளாவி விரும்பிக் கலந்து இனிதிருந்தார். (பாண்டியன் சுந்தரரையும் சேரமானையும் ஒரு இரத்தின மாளிகையில் வைத்துப் போற்றினன் என்பதாம்)

அ.ரை :- உதயர்—சேரர். வளவன் — சோழன். மீனவன்—பாண்டியன். சோழன்பாண்டியன் மகளை மணந்து பாண்டியநாட்டிலே இருந்தானாதலின் சேரர் சுந்தரருடன் தங்கியிருக்காது அவ்வப்போது பாண்டியனுடன் வந்து அளவளாவியிருந்தான் என்பதாம்.

திருப்பூவணம்

அந்நாளில் மதுரைநகர் மருங்கானார் அமர்பதிகள்
பொன்னாரம் அணிமார்பில் புரவலர்மூ வரும்போதச்
செந்நாவின் முனைப்பாடித் திருநாடர் சென்றிறைஞ்சிச்
சொன்மாலை களுஞ்சாத்தித் தொழத்திருப்பூ
வணத்தணைந்தார் 845

வி.ரை :- அவ்வாறு பாண்டியனின் இரத்தின மாளிகையில் சேரமானுடன் இருக்கும் நாளில், மதுரை

யின் பக்கத்துள்ள சிவாலயங்களுக்கும், பொன்மாலைகள் அணிந்த மூவேந்தருடன் சென்று செந்நாப்புலவராகிய திருமுனைப்பாடி நாடர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்று வணங்கி தமிழ்ச் சொற்களால் மாலை சாத்தி திருப்பூவணம் தொழுதற்கு மூவேந்தருடன் வந்து சேர்ந்தார்.

அ.ரை :- புரவலர்மூவர் —மூவேந்தர். சேர, சோழ பாண்டியர்.

நீடுதிருப் பூவணத்துக் கணித்தாக நேர்செல்ல
மாடுவருந் திருத்தொண்டர் மன்னியஅப் பதிகாட்டத்
தேடுமறைக் கரியாரைத் ''திருவுடையார்'' என்றெடுத்துப்
பாடிசையிற் ' பூவணமீ தோ'' என்று
பணிந்தணைவார் 846

வி.ரை :- புகழ்மிக்க திருப்பூவணத்துக்கு அழகாகச் செல்லப் பக்கம் வரும் திருத்தொண்டர்கள் பொருந்திய அந்தச் சிவாலயம் காட்ட வேதங்கள் தேடியும் காணுதற்கு அரிய சிவபெருமானைத் ''திருவுடையார்'' என்று அடியெடுத்து இசையில் பாடி ''பூவணம் மீதோ?'' என்று பணிந்து சென்றார்.

மூவேந்தருடன் தங்கிருந்தது

சென்றுதிருப் பூவணத்துத் தேவர்பிரான் மகிழ்கோயில்
முன்றில்வலங் கொண்டிறைவர் முன்வீழ்ந்து பணிந்தெழுந்து
நின்றுபர விப்பாடி நேர்நீங்கி யுடன்பணிந்த
வென்றிமுடி வேந்தருடன் போந்தங்கண் மேவினார் 847

வி.ரை :- மூவேந்தருடன் சென்ற சுந்தரர் திருப்பூவணத்துத் தேவர் பிரான் மகிழ்ந்தமர்ந்த கோயில் முற்றத்தை வலம் வந்து இறைவன் சந்நதி முன்விழுந்து பணிந்து எழுந்து நின்று போற்றிப் பாடிக் குறையாத

அன்புடன் பணிந்து வெற்றி கொண்ட முவேந்தருடன் சென்று அங்கு தங்கினார்.

அ.ரை :- நேர் நீங்கி — குறையாத அன்புடன், தோய்வு இல்லாமல். சோர்வின்றி.

மூவேந்தருடன் மதுரையில் மகிழ்ந்திருந்தது

அப்பதியி லமர்ந்திறைஞ்சிச் சிலநாளி லாரூரர்
முப்பெருவேந் தர்களோடு முதன் மதுரை நகரெய்தி
மெய்ப்பரிவில் திருவால வாயுடையார் விரைமலர்த்தாள்
எப்பொழுதும் பணிந்தேத்தி இன்புற்றங் கமர்கின்றார் 848

வி.ரை :- திருப் பூவணத்தில் சில நாள் தங்கி வணங்கியிருந்து ஆரூரர் முப்பெரும் மன்னர்களுடன் மதுரை நகர் திரும்பி வந்து உண்மை அன்பில் திருவால வாயுடையார் மணம்வீசும் மலர்ப்பாதங்களை எப் பொழுதும் பணிந்து போற்றி இன்பம் அடையப்பெற்று அங்கு தங்கியிருந்தார்.

திருவாப்பனூர், திருவேடகம் சென்று திரும்பியது

செஞ்சடையார் திருவாப்ப னூர்திருவே டகம்முதலாம்
நஞ்சணியுங் கண்டரவர் நயந்தபதி நண்ணியே
எஞ்சலிலாக் காதலினால் இனிதிறைஞ்சி மீண்டணைந்து
மஞ்சணையும் மதில் மதுரை மாநகரில்
மகிழ்ந்திருந்தார் 849

வி.ரை :- செஞ்சடையப்பர் சிவபெருமான் எழுந் தருளிய திருவாப்பனூர், திருவேடகம் முதலான நஞ்சுண் டீசன் விரும்பியிருக்கும்சிவாலயங்கள் சென்று பணிந்து குறைவற்ற அன்பினால் இனிதே பணிந்து மீண்டும் மேகங்கள் வந்து மோதும் உயர்ந்த மதில் சூழ்ந்த மதுரைமா நகரில் வந்து மகிழ்ந்திருந்தார்.

மூவேந்தருடன் திருப்பரங்குன்றம் சென்றுதொழுத்து

பரமர்திருப் பரங்குன்றில் சென்று பார்த் திபரோடும்
புரமெரித்தார் கோயில்வலங் கொண்டு புகுந்துள்ளிறைஞ்சிச்
சிரமலிமா லைச்சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமைநினைந் ''தஞ்சுதும்'' என் றாரூரர் பாடுவார். 850

வி.ரை :- மூவேந்தர்களுடன் பரமபிதாவின் திருப்பரங்குன்றில் சென்று முப்புரமும் எரித்தவரது கோயிலை வலம் வந்து புகுந்து உள்ளத்தில் ஏத்தி வணங்கி கபாலமாலையணிந்த சடையப்பர் திருவடித் தாள்களில் அடிமை செய்யும் சிறப்பினை நினைந்து ''அஞ்சுதும்'' என்று ஆரூரர் பாடினார்.

அ.ரை :- பார்த்திபர்—மூவேந்தர்.

''கோத்திட்டை'' என்றெடுத்துக் கோதில்திருப் பதிகஇசை
மூர்த்தியார் தமைவணங்கி முக்கோக்க ளுடன் முன்பே
ஏத்தியவண் தமிழ்மாலை இன்னிசை பாடிப்பரவிச்
சாத்தினார் சங்கரனார் தங்குதிருப் பரங்குன்றில் 851

வி.ரை :- சங்கரனார் எழுந்தருளிய திருப்பரங்குன்றில் மூவேந்தர்கள் முன்பாக ''கோத்திட்டை'' என்றெடுத்துக் குற்றமற்ற திருப்பதிகம் இசையுடன் மூர்த்தியார் சிவபெருமானை வணங்கிப் போற்றி அழகு தமிழால் சொல்மாலை இனிய இசையில் பாடிப் பரவிச் சாத்தினார்.

இறைவர் திருத் தொண்டுபுரி அருமையினை இருநிலத்து
முறைபுரியும் முதல்வேந்தர் மூவர்களுங் கேட்டஞ்சி
மறைமுந்நூல் மணிமார்பின் வன்தொண்டர் தமைப் பணிந்தர்
நிறைதவத்தோர் அப்பாலும் நிருத்தர்பதி தொழநினைந்தார் 852

வி. ரை :- சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டு செய்யும் அருமையினை இப்பெரு நிலத்து அரசோச்சும் முதல்வேந்தர்கள் மூவரும் கேட்டு அச்சமடைந்து வேதமுப்புரிநூல் அணிந்த அழகிய மார்பையுடைய வன்தொண்டரைப் பணித்திருக்கச் சுந்தரரும் நிருத்தர் சிவபெருமான் ஆலயங்கள் பிறவும் தொழுதற்கு நினைந்தார்.

பாண்டியனும் சோழனும் விடைபெற்றுச் சென்றது

அந்நாட்டுத் திருப்பதிகள் பலவும் அணைந்திறைஞ்சமலை
நன்னாட்டு வேந்தருடன் நம்பிதாம் எழுந்தருள
மின்னாட்டும் பன்மணிப்பூண் வேந்தர்இரு வரும்மீள்வார்
தென்னாட்டு வேண்டுவன செய்தமைப்பார்
தமைவிடுத்தார் 853

வி.ரை :- அந்த நாட்டிலுள்ள சிவாலயங்கள் பல சென்று வணங்கி மலைநல் நாட்டுமன்னர் சேரமானுடன் நம்பி ஆரூரர் செல்ல மின்னொளி வீசும் பல வகையான மாணிக்க மணிகள் பதித்த ஆபரணம் அணிந்த பாண்டியனும் சோழனும் விடைபெற்றுத் தம்நாடு செல்ல, சுந்தரரும் தென்னாட்டுக்கு வேண்டுவனவற்றைச் செய்யும் அம்மன்னர் இருவரையும் விடுத்தார்.

திருக்குற்றாலம் சென்றது

இருபெருவேந்தரும் இயல்பின் மீண்டதற்பின்
எழுந்தருளும்
பொருவருஞ்சீர் வன்தொண்டர் புகழ்ச்சேர ருடன்புனிதர்
மருவியதா னம்பலவும் பணிந்துபோய் மலைச்சாரல்
குருமணிகள் வெயிலெறிக்குங் குற்றாலஞ்
சென்றடைந்தார் 854

வி.ரை :- சோழபாண்டிய மன்னர்கள் சென்றபின்பு ஒப்பற்ற சீர்மிகு வன்றொண்டரும் புகழ்மிக்க சேரர் பெருமானுடன் புனிதர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடம் பலவும் பணிந்து சென்று, மலைச்சாரலில் நீல நிறத்தையுடைய மாணிக்கங்கள் கதிரை உமிழும் திருக் குற்றாலம் சென்றடைந்தார்.

அ.ரை :- புனிதர்—சிவபெருமான். மருவிய—எழுந் தருளிய.

குறும்பலா, திருநெல்வேலி

குற்றாலத் தினிதமர்ந்த கூத்தர்குரை கழல்வணங்கிச்
செற்றாம மலர்புனைந்து குறும்பலாத் தொழுதிப்பால்
முற்றாவெண் மதிமுடியார் பதிபணிந்து மூவெயில்கள்
செற்றார்மன் னியசெல்வத் திருநெல்வே லியை
அணைந்தார். 855

வி.ரை :- திருக்குற்லாலத்தில் இனிதமர்ந்த கூத்த பிரானதுஒலிக்கும் கழல்களை வணங்கிச்சென்று தமிழ்ச் சொல்லால் மலர் மாலை புனைந்து குறம்பலா சென்று தொழுது இப்பக்கம் வந்து பிறை நிலவை அணிந்த முடியார் பதி பணிந்து மூன்று கோட்டைகளையும் அழித்தவர் வாழும் செல்வம் மிக்க திருநெல்வேலியை அடைந்தார்.

திருவிராமேச்சுரம்

நெல்வேலி நீற்றழகர் தமைப்பணிந்து பாடிநிகழ்
பல்வேறு பதிபிறவும் பணிந்தன்பால் வந்தணைந்தார்
வில்வேட ராய்வென்றி விசயனெதிர் பன்றிப்பின்
செல்வதே முதல்வரமர் திருவிரா மேச்சுரத்து. 856

வி.ரை :- திருநெல்வேலியில் எழுந்தருளும் திருநீற்றழகரைப் பணிந்து பாடி அருகிலிருக்கும் பல்வேறு சிவாலயங்களும் சென்று வணங்கி, வில் ஏந்திய வேடராக வெற்றிவாகை சூடும் விசயன் முன்பாகப் பன்றியின் முன் சென்ற வேதமுதல்வர் அமர்ந்த திரு இராமேச்சுரம் வந்து சேர்ந்தார்.

மாதோட்டத் திருக்கேதீச்சரம் வணங்கியது

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச் சரஞ் சார்ந்த
சொன்மலர்மா லைகள் சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார், 857

வி. ரை :- பொருந்திய இராமேச்சுரத்து எழுந்தருளிய மாணிக்க மணியை வணங்கிப் பல வகையான இசையுடன் தமிழ்மாலை பாடிச் சாத்திப் பாம்பணிந்த சடையையுடையவரது இலங்கையிலுள்ள மாதோட்டத்துத் திருக்கேதீச்சரம் இங்கிருந்தே வணங்கித் தமிழ்மாலைகள் சாத்தித் தொழுதமர்ந்தார்.

திருச்சுழி

திருவிரா மேச்சுரத்துச் செழும்பவளச் சுடர்க்கொழுந்தைப்
பரிவினால் தொழுதகன்று பரமர்பதி பிறபணிந்து
பெருவிமா னத்திமையோர் வணங்குபெருந் திருச்சுழியல்
மருவினார் வன்தொண்டர் மலைவேந்த ருடன்கூட
858

வி.ரை :- திருஇராமேச்சுரத்தில் எழுந்தருளியுள்ள செழுமையான ஒளிவீசும் இளம்பவளம் போன்ற சிவ பெருமானை அன்பினால் தொழுது பரமபிதாவின் ஆலயங்கள் பிறவும் பணிந்து பெரிய விமானங்களில் செல்லும் தேவர்கள் வணங்கும் பெருந்திருச் சுழியில் மலைவேந்தர் சேரமான் பெருமாளுடன் சென்று வணங்கி ஆங்கிருந்தார்.

அ.ரை :- பெரு விமானத்திமையோர் — பெரிய விமானங்களில் பறந்து செல்லும் தேவர்கள்.

திருச்சுழிய லிடங்கொண்ட செம்பொன் மலைச்
சிலையாரைக்
கருச்சுழியில் வீழாமைக் காப்பாரைக் கடல்விடத்தின்
இருட்சுழியு மிடற்றாரை இறைஞ்சி எதிர் இதழிமலர்ப்
பருச்சுழியத் துடன் "ஊனாய் உயிர்" எனும்பா மலர்
புணைந்தார். 859

வி.ரை :- சிவந்த பொன் மலையை வில்லாக உடையவரைத் திருச்சுழியில் அமர்ந்த பிரானைப் பிறவி எனும் கருப்பச் சுழியில் விழாமல் காத்தருள்பவரைக் கடலில் தோன்றிய நஞ்சுண்ட கழுத்தினை உடையவரை வணங்கிக் கொன்றை மலர் அணிந்த பருத்த சுருண்ட மயிருடன் "ஊனாய் உயிர் புகலாய்" எனும் பாமாலை தொடுத்து அணிவித்தார்.

அ.ரை :- இருட்சுழி—நஞ்சு தங்கிய. இதழி—கொன்றை. பருச்சுழி—சுருண்டை முடி.

இறைவன் கனவில் தோன்றியது

அங்கணரைப் பணிந்துறையும் ஆரூரர்க் கவ்வூரில்
கங்குலிடைக் கனவின்கட் காளையாந் திருவடிவால்

செங்கையினிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமுடன்
எங்குமிலாத் திருவேடம் என்புருக முன்காட்டி 860

வி.ரை:- அழகிய கண்ணார் சிவபெருமானைப் போற்றிப் பணிந்து அரூரர் அவ்வூரில் இருக்கும் பொழுது இரவில் கனவில் காளையாக வடிவமும் சிவந்த கையில் பொற்சென்டும் திருமுடியில் சுழியமுடன் எங்கும் இல்லாத திருவேடம் என எலும்பு உருக்கக் காட்டினார்.

''கானப்பேர் யாம் இருப்ப'' என்றது

''கானப்பேர் யாம்இருப்ப'' தெனக் கழறிக் கங்கை யெனும்
வானப்பே ராறுலவும் மாமுடியார் தாமகல
ஞானப்பே ராளருணர்ந் ததிசயித்து ''நாகமுடன்
ஏனப்பே ரெயிற ணிந்தார் அருளிருந்த பரி'' சென்பார்
861

வி.ரை:- கனவில் எங்குமில்லாத திருவேடம் காட்டிய சிவபெருமான் ''கானப் பேர் யாம் இருப்பம்'' என்று கூறியருளிக் கங்கை எனும் தேவர் உலகப் பேராறு தாங்கிய் சடாமுடியுடைய சிவனார் கனவினின் றும் நீங்க, அறிவுப் பேராளர் சுந்தரர் உணர்ந்து அதிசயமடைந்து, ''பாம்புடன் பன்றியின் பெருங் கொம்பை அணிந்தவரது அருளின் பரிசு'' என்றார்.

அ.ரை:- ஏனம்– பன்றி. எயிறு—பல், கொம்பு.

திருக்கானப் பேர்

கண்டருளும் படிகழறிற் றறிவார்க்கு மொழிந்தருளிப்
புண்டரிகப் புனற்சுழியற் புனிதர்கழல் வணங்கிப் போய்
அண்டர்பிரான் திருக்கானப் பேரணைவார் ஆரூரர்
''தொண்டரடித் தொழலும்'' எனுஞ் சொற்பதிகத்
தொடைபுனைவார் 862

வி.ரை:- தாம் கண்ட கனவைக் கழறிற் றறிவார் சேரமானுக்குச் சொல்லியருளி, தாமரை மலர்கள் நிறைந்த நீர்நிலைகளையுடைய திருக்கானப்பேர் ஆருரர் சென்றடைந்து ''தொண்டரடித் தொழலும்'' என்று தமிழ்ச்சொற்களாலான பதிகமாலை புனைந்தார்.

''காளையார் தமைக்கண்டு தொழப் பெறுவ தென்''றென்று
தாளைநா ளும் பரவத் தருவார்பால் சார்கின்றார்
ஆளைநீ ளிடைக்காண அஞ்சியநீர் நாய் அயலே
வாளைபாய் நுழைப்பழன முனைப்பாடி வளநாடர். 863

வி.ரை:- மனிதர்களை நீண்ட தூரத்தே கண்டதும் அஞ்சிய நீர் நாயின் பக்கத்தில் வாளை மீன்கள் பாய்ந்துநுழையும் வயல்களையுடையமுனைப்பாடி வளமிக்க நாட்டுஆருரர் தாம் கனவில்கண்ட''காளையரைக் கண்டு தொழுவது'' என்று சிவபெருமான் திருத்தாள்களை நாள்தோறும் பரவுதற்குத் தருவாராகிய சிவபெருமானிடம் சென்றார்.

அ.ரை:- ஆளை—மனிதர்களை. நீளிடை—வெகுதூரத்திலேயே அயல்—பக்கம்., பழனம்—வளல்.

மன்னுதிருக் கானப்பேர் வளம்பதியில் வந்தெய்திச்
சென்னிவளர் மதியணிந்தார் செழுங்கோயில் வலங்கொண்டு
முன்னிறைஞ்சி உள்ளணைந்து முதல்வர்சே வடிதாழ்ந்து
பன்னுசெழுந் தமிழ்மாலை பாடினார் பரவினார் 864

வி.ரை:- வளம் மிக்க கானப்பேர் வந்துசேர்ந்து பிறைநிலவைத் தலையில் அணிந்தவரது செழித்த கோயிலை வலம்வந்து முன்நின்று வணங்கி உள்ளே சென்று சிவபெருமானின் சிவந்த பாதங்களைத் தாழ்ந்து பலவகையான இசையுடன் செந்தமிழில் பாடி மாலை தொடுத்துச் சாத்தினார்.

திருப்புனவாயில் சென்றடைந்தது

ஆராத காதலுடன் அப்பதியிற் பணிந்தேத்திச்
சீராருந் திருத்தொண்டர் சிலநாளங் கமர்ந்தருளிக்
காராரு மலர்ச்சோலைக் கானப்பேர் கடந்தணைந்தார்
போரானேற் றார்கயிலைப் பொருப்பர் தருப் புனவாயில் 865

வி.ரை:- சிறப்புகள் தங்கிய திருத்தொண்டர் நம்பி ஆரூரர் தெவிட்டாத அன்பினால் அப்பதியில் பணிந்து போற்றிச் சிலநாள் அமர்ந்தருளி கார் மேகங்கள் மோதும் மலர்ச்சோலைகள் நிறைந்த கானப் பேர் கடந்து போரிடும் காளையையுடையவர் கயிலை மலையுடையவரது திருப்புனவாயில் சேர்ந்தார்.

அ.ரை:- போரான் ஏற்றார்—போரிடும் காளையை உடையவர். கயிலைப் பொருப்பர்—கயிலை மலை யுடையவர்.

பதிகம் பாடியது

புனவாயிற் பதிஅமர்ந்த புனிதரா லயம்புக்கு
மன ஆர்வ முறச் ''சித்த நீ நினைஎன் னொடு'' என்றே
வினவான தமிழ்பாடி வீழ்ந்திறைஞ்சி அப்பதியில்
சினயானை உரித்தணிந்தார் திருப்பாதந் தொழுதிருந்தார் 866

வி.ரை:- புனவாயிற்பதியில் அமர்ந்தருளிய புனிதரது ஆலயம் புகுந்து மன ஆர்வம் மேலோங்கச் ''சித்த நீ நினை என் னொடு'' என்று அடியெடுத்துக் கேட்க இனிய தமிழ்பாடி வீழ்ந்து வணங்கிச் சினம் கொண்ட யானையின் தோலை உரித்து அணிந்த சிவபெருமானது அப்பதியில் அவரது திருப்பாதம் தொழுதிருந்தார்.

அ.ரை:- வினவான தமிழ்—கேள்விக்கினிய தமிழ் செவிக்கினிய தமிழ்.

சோழ நாடடைந்தது

திருப்புனவா யிற்பதியில் அமர்ந்த சிவனார் மகிழும்
விருப்புடைய கோயில் பணிந்தருள் பெற்று மேவினார்
பொருப்பினொடு கானகன்று புனற்பொன்னி நாடணைந்து
பருப்பதவார் சிலையார்தம் பாம்பணிமா நகர்தன்னில் 867

வி,ரை:- திருப்புவனவாயிலில் எழுந்தருளிய சிவ பெருமானார் விருப்பமுடன் அமர்ந்த கோயிலில் சென்று வணங்கி அருள் பெற்று மலைகளும், காடு களும் கடந்து நீர் வளம்மிக்க காவிரி நாடு சென்ற டைந்து மேருமலையை அழகிய வில்லாக உடைய வரும் பாம்பணிந்தாரது நகர் சென்றடைந்தார்.

அ.ரை:- பொருப்பு—மலை. பருப்பு— பருவதம் என்ற சொல்லின் திரிபு. மலை.

பாதாளீச்சரம்

பாதாளீச்சரமிறைஞ்சி அதன்மருங்கு பலபதியும்
வேதார்தி நாதர்கழல் வணங்கி மிகு விரைவினுடன்
சூதாருந் துணைமுலையார் மணிவாய்க்குத் தோற்றிரவு
சேதாம்பல் வாய்திறக்குந் திருவாரூர் வந்தணைந்தார் 868

வி ரை:- சோழ மண்டலத்தில் பாதாளீச்சரத்தில் வணங்கி அதன் பக்கமுள்ள பல சிவாலயங்கட்கும் சென்று வேதங்கட்கு ஆதிநாயகன் சிவபெருமான் திருக் கழல்கள் வணங்கி வெகுவிரைவாகச் சூதாடும் கருவி போன்று மயக்கத்தைத் தரும் முலைகளையுடைய மகளிரது அழகிய ஒளிவீசும் வாய்க்குத் தோற்று இரவில் செவ்வல்லி மலரும் திருவாரூர் வந்து சேர்ந்தார்.

அ.ரை :- பாதாளீச்சரம்- பாம்புகளுக்கு இறைவன் ஆதிசேடனால் பூசிக்கப்பட்ட இடம். சூது ஆகும்— சூதாடுவது போன்று போதையூட்டும்-சேதாம்பல்— செவ்வாம்பல்.

திருவாரூரில் வரவேற்பு

திருநாவ லூர்வேந்தர் சேரர்குல வேந்தருடன்
வருவாரைத் திருவாரூர் வாழ்பவர்கள் எதிர்கொள்ளத்
தருகாத லுடன்வணங்கித் தம்பெருமான் கோயிலுனுள்
பெருகார்வத் தொடுவிரும்பும் பெரும்பேறு
பெறப்புகுந்தார். 869

வி.ரை :- திருநாவலூர் மக்கள் தலைவர் சேரர் குல மன்னருடன் வரும் அவரைத் திருவாரூரில் வாழ் பவர்கள் எதிர்கொண்டழைக்கப் பெருங்காதலுடன் அவர்களை வணங்கித்தமது இறைவனார் சிவபெருமான் கோயிலுனுள் பேரார்வத்துடன் தாம் விரும்பியபடி பெறப்படும் பெரும் பேறு பெற்றிடப் புகுந்தார்.

கோயிலில் வழிபாடு

வாசமலர்க் கொன்றையார் மகிழ்கோயில் வலங்கொண்டு
நேசமுற முன்னிறைஞ்சி நெடும்பொழுதெ லாம்பரவி
ஏசறவால் திருப்பதிகம் எடுத்தேத்தி எழுந்தருளால்
பாசவினைத் தொடக்கறுப்பார் பயில்கோயில்
பணிந் தணைவார். 780

வி.ரை :- மணம்வீசும் கொன்றை அணிந்தவர் மகிழ்ந்தமரும் கோயிலை வலம் வந்து விருப்பமுடன் முன்நின்று வணங்கி நீண்ட நேரம் போற்றி, பெருவிருப் பத்தால் திருப்பதிகம் எடுத்துப் போற்றிஎழுந்துபிறவிப்

பெரும் பற்று தொடராது அறுப்பாரது அருளால் அவர் எழுந்தருளிய கோயில் பணிந்திடச் சென்றார்.

பரவையார் மாளிகையில் வரவேற்பு

பரவையார் மாளிகையில் பரிசனங்கள் முன்னெய்த
விரவுபே ரலங்கார விழுச் செல்வம் மிகப் பெருக
வரவெதிர்கொண் டடிவணங்க வன்தொண்டர்மலைநாட்டுப்
புரவலனா ரையுங்கொண்டு பொன்னணிமா ளிகை
புகுந்தார். 871

வி.ரை :- பரவையார் மாளிகைக்கு ஏவலாட்கள் முன்செல்லப் பெருகும் பேரலங்காரச் செல்வச் சிறப்பு மேலோங்கச் சுந்தரரும் சேரமானும் வர எதிர்கொண்டு அவர்களது அடிவணங்க வன்தொண்டர் சேரமானையும் அழைத்துக் கொண்டு பொன் திகழும் மாளிகையினுட் புகுந்தார்.

பரவியே பரவையார் பரிவுடனே பணிந்தேத்தி
விரவியபோ னகங்கறிகள் விதம்பலவா கச்சமைத்துப்
பரிகலமும் பாவாடை பகல்விளக்கும் உடனமைத்துத்
திரு அமுது செய்வித்தார் திருந்திய தேன்
மொழியினார். 872

வி.ரை :- பரவையார் நாவலூரரையும் சேரமானையும் வணங்கிப் பாசமுடன் பணிந்து போற்றித் தேர்ந்த சோறு. கறிகள் விதவிதமாகச் சமைத்துப் பரிகலமும் பாவாடையுடன் பகல் விளக்கும் உடன்வைத்துத் திரு அமுது இருவருக்கும் தெளிந்த தேன்போன்ற மொழியினாள் பரவையார் திருஅமுது செய்வித்தார்.

அ.ரை :- பரிகலம்—பெரியோர் உண்டு வைத்த எச்சில் உணவு. பாவாடை - கோலம். பகல்விளக்கு- மங்கல்தீபம்.

நல்விளையாட்டு காணவிரும்பியது

மங்கலமாம் பூசனைகள் பரவையார் செய மகிழ்ந்து
தங்கி இனி தமர்கின்றார் தம்பிரான் கோயிலுனுட்
பொங்குபெருங் காலமெலாம் புக்கிறைஞ்சிப் புறத்தணைந்து
நங்கள்பிரான் அருள்மறவா நல்விளையாட் டினை
நயந்தார். 873

வி.ரை :- மங்கலகரமான பூசனைகள் பரவையார் செய்ய மகிழ்ந்து அங்கு இருவரும் தங்கி அங்கு இனிதாக அமர்ந்தருளிய தம்பிரான் கோயிலிட் சென்று பொங்கு முக்காலமும் சென்று வணங்கி வெளிவந்து தங்கள் பிரான் சிவபெருமானது அருளை மறவாத நல் விளையாட்டினை விரும்பினர்.

பலவகையான விளையாட்டு கண்டுகளித்தது

நிலைச் செண்டும் பரிச்செண்டும் வீசிமிக மகிழ் வெய்தி
விலக்கரும் போர்த் தகர்ப்பாச்சல் கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்கணைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளின் அமர்விரும்பி
அமர்கின்றார். 874

வி.ரை :- நின்று வீசியெறியும் பந்து விளையாட்டும், குதிரை மீதிருந்து பந்து வீசும் விளையாட்டும் விளையாடி மிகவும் மகிழ்ந்து. விலக்குதற்கு அரிய ஆட்டுக் காடாப்பாய்ச்சல் கண்டருளி வெற்றி பெற மாறுபட்டு எதிர்க்கும் நீண் முட்கள் கணைக்காலில் கட்டப்பட்ட கோழிச் சண்டையும் பார்த்தருளி வருத்தத்தைச் செய்யும் பல பரவைகளின் சண்டையும் பார்த்து அமர்ந்தார்.

வி.ரை :- நிலைச் செண்டு—நின்று பந்தடிக்கும் விளையாட்டு, பரிச்செண்டு— குதிரையில் சென்று கொண்டே பந்தடிக்கும் விளையாட்டு. தகர்ப்பாச்சல்—ஆட்டுக் கடாக்கல் முட்டிக் கொள்ளும் சண்டை. மலைக்கும்—மலைத்துப் போய், தளர்ந்துபோய், நெடு முட்கணைக்கால்—கணைக்காலில் முட்கள் கட்டப் பட்டு. வாரணப்போர் — கோழிச்சண்டை. அலைக் கும்—வருந்தும். புள்ளின் அமர்—பறவைகளின் சண்டை

சேரர் கோனுடன் செல்ல எழுந்தது

விரவு காதல் மீக்கூர மேவு நாங்கள் பலசெல்லக்
கரவில் ஈகைக் கேரளனார் தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப்
பரவை யார்தங் கொழுநனார் தம்மைப் பணிந்து கொண்டணைவான்
இரவும் பகலும் தொழுதிரக்க இசைந்தார் அவரும் எழுந்தருள. 875

வி.ரை :- ஒன்று சேர்ந்த அன்பு மிகுதியாகப் பரவையர் மாளிகையில் தங்கிய நாட்கள் அதிகமாகிக் கொண்டு செல்ல இல்லையென்னாது ஈகையுடைய சேரமான் தங்கள் கடல்சூழ் மலைநாட்டுப் பரவை யாரது கணவரைப் பார்த்து வணங்கித் தன்னுடன் கொண்டு செல்ல இரவிலும் பகலிலும் தொழுது வேண்டிக்கொள்ள ஆரூரரும் சேரர் கோமனுடன் செல்ல எழுந்தருளினார்.

அ.ரை :- விரவு காதல்—ஒன்று சேர்ந்த அன்பு. கேரளனார்—சேரர் பெருமாள். சேரநாட்டுக்கு அன்றே கேரளம் என்ற பெயர் இருந்தது காண்க.

நங்கை பரவை யாருள்ளத் திசைவால் நம்பி எழுந்தருளத்
திங்கள் முடியார் திருவருளைப் பரவிச் சேரமான் பெருமாள்

எங்குமுள்ள அடியாருக் கேற்ற பூசை செய்தருளிப்
பொங்கு முயற்சி இருவரும் போய்ப் புக்கார் புனிதர்
பூங்கோயில் 876

வி.ரை :- நங்கை பரவையாரும் உள்ளத்தால் இசைவு தந்திட நம்பியம் எழுந்தருளி நிலவை அணிந்த முடியார் சிவபெருமான் அருளைப் பரவிச் சேரமான் பெருமாளுடன், எங்கும் பரவியுள்ள அடியவருக்கு ஏற்ற பூசை செய்தருளி இருவரும் செய்த முயற்சியால் புனிதர் வான்மீக நாதரை வணங்கக் க்மலாலயம் சென்றடைந்தனர்.

மேற்குத் திசை நோக்கிச் சென்றது

தம்பி ரானைத் தொழுதருளாற் போந்து தொண்டர்
சார்ந்தணைய
நம்பி யாரு ருஞ் சேரர் நன்னாட் டரய் னாராய
பைம்பொன் மணிநீள் முடிக்கழறிற் றறிவார் தாமும்
பயணமுடன்
செம்பொன் நீடு மதிலாரூர் தொழுது மேல்பாற்
செல்கின்றார் 877

வி.ரை :- வான்மீக நாதரைத் தொழுது கொண்டு சென்றிடத் தொண்டர்கள் தொடர்ந்து வர நம்பி ஆருரரும் சேரர் நன்னாட்டு அரசனாராய்ப் பசுமையான பொன்னாலான நீண்ட மணிமுடி அணிந்த கழறிற்றறிவாரும் செம்பொன் ஒளிவீசும் நீடுயர்ந்தமதிலையுடைய திருவாரூர் தொழுது மேற்குத்திசை நோக்கிச் சென்றனர்.

திருக்கண்டியூர்

பொன்பரப்பி மணிவரன்றிப் புனல் பரக்குங் காவேரித்
தென் கரைபோய்ச் சிவன் மகிழ்ந்த கோயில்பல
சென்றிறைஞ்சி
மின்பரப்புஞ் சடை அண்ணல் விரும்புதிருக் கண்டியூர்
அன்புருக்குஞ் சிந்தையுடன் பணிந்துபுறத்
தணைந்தர்ர்கள் 878

வி.ரை:- பொன்னையும் மணியையும் அடித்துக் கொண்டு வரும் வெள்ளப் பெருக்குடைய காவிரியின் தென்கரையில் சென்று சிவாலயங்கள் பலவற்றிலும் சென்று வணங்கி, மின்னொளி வீசும் சடையப்பரது திருக்கண்டியூர் அன்பரை மனத்தில் கொண்டு சென்று பணிந்து வந்தனர்.

வடகரையில் திருவையாறு கண்டது

வடகரையில் திருவையா றெதிர் தோன்ற மலர்க்கரங்கள்
உடலுருக உள்ளுருக உச்சியின் மேற் குவித்தருளிக்
கடல்பரந்த தெனப்பெருகுங் காவிரியைக் கடந்தேறித்
தொடர்புடைய திருவடியைத் தொழுதற்கு நினைவுற்றார்
879

விரை:- வடகரையில் திருவைய்யாறு கண் எதிரே தோன்றத் தமது மலர்க் கைகளை உடலும் உள்ளமும் உருக உச்சியின் மேல் குவித்துக் கடல் போன்று பரந்து செல்லும் காவிரியைக் கடந்து சென்று தொன்மைத் தொடர்புடைய திருவடியைத் தொழுதற்கு நினைந்தார்.

''ஆற்றை எவ்வாறு கடப்போம்'' என்றது

ஐயா றதனைக் கண்டுதொழு தருளா ரூரர் தமைநோக்கிச்
செய்யாள் பிரியாச் சேரமான் பெருமாள் அருளிச்
செய்கின்றார்
''மையார் கண்டர் மருவுதிரு வையா றிறைஞ்ச மனமுருகி
நையா நின்ற திவ்வாறு கடந்து பணிவோம் நாம்?' என்ன
880

வி.ரை:- திருவையாற்றைக் கண்டு தொழுத அருளா ரூரரை நோக்கி, இலக்குமி என்றும் பிரியாது இருக்கும். சேரமான் பெருமாள் திருநீலகண்டர் எழுந்தருளியிருக்கும் திருவையாறு சென்று வணங்கி மனம் உருகி நைந்து நின்று இந்த அற்றை எவ்வாறு கடந்து நாம் வணங்குவோம்? என்று அருளிச் செய்தார்.

அ.ரை:- செய்யாள்—இலக்குமி.

ஆற்றுப் பெருக்கு கண்டு பாடியது

ஆறு பெருகி இருகரையும் பொருது விசும்பில் எழுவதுபோல்
வேறு நாவாய் ஓடங்கள் மீது செல்லா வகை மிகைப்ப
நீறு விளங்குந் திருமேனி நிருத்தர் பாதம் பணிந்தன்பின்
ஆறு நெறியாச் செலவுரியார் தரியா தழைத்துப் பாடுவா
381

வி.ரை:- ஆறு பெருக்கெடுத்து இருகரையிலும் ஆகாயத்துடன் போரிட எழுவது போல் அலைகள் எழும்ப நாவாய், ஓடங்கள் மற்று வேறுவிதமான தெப்பங்களின் மீது செல்ல முடியாத வகை மிகுதியாக திருநீறு பூசிய திருமேனி நாதரது குஞ்சித பாதம் பணிந்து அன்பின் வழியே வழியாகச் செல்லுவதற்கு வேறு வழி அறியாது அழைத்துப் பாடுவராயினர்.

அ.ரை:- அன்பின் ஆறு நெறி—அன்பே வழியாக.

"பரவும் பரிசென்" றெடுத்தருளிப் பாடுந் திருப்பாட்டின
முடிவில்
அரவம் புனைவார் தமை "ஐயா றுடைய அடிகளோ" என்று
விரவும் வேட்கை யுடனழைத்து விளங்கும் பெருமைத்
திருப்பதிகம்
நிரவும் இசையில் வன்தொண்டர் நின்று தொழுது
பாடுதலும் 882

வி.ரை:- "பரிவும் பரிசென் றறியேன்" என்று அடியெடுத்துப் பாட்டின் முடிவில் பாம்பு அணியும் சிவ பெருமானை "ஐயா றுடைய அடிகளோ" என்று பெருகும் ஆசையுடன் அழைத்து விளங்கும் பெருமை மிக்க திருப்பதிகம் சிறந்த இசையில் வன்தொண்டர் நின்று தொழுது பாடியதும்.

காவிரி பிரிந்து வழிவிட்டது

மன்றில் நிறைந்து நடமாட வல்லார் தொல்லை ஐயாற்றில்
கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும்
புனிற்றாப்போல்
ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாங் கேட்க
"ஓலம்" என
நின்று மொழிந்தரர் பொன்னிமா நதியும் நீங்கி நெறிகாட்ட
883

வி.ரை:- மன்றத்தில் நிறைவாக நடமாடவல்ல ஈசன் பெருக்கெடுக்கும் திருவையாற்றில் கன்று தடைபட்டு அக்கரையிலிருந்து அழைக்க அது கேட்டுக் கதறிக் கனைக்கும் அப்பொழுது ஈன்ற பசு போன்று உணர்வினால் சராசரங்கள் எல்லாம் கேட்கும்படி

கடவுள் "ஓலம்" என்று சொன்னவுடன் காவிரியாறும் இரண்டாகப் பிரிந்து வழிவிட்டது.

அ.ரை:- புனிற்று ஆ— கன்று ஈன்ற பசு. சராசரங்கள்— அசைவனவும் அசையாதனவும்.

வழிவிட்டுப் பிரிந்து நின்ற காவிரியின் தோற்றம்

விண்ணின் முட்டும் பெருக்காறு மேல்பாற் பளிக்கு
வெற்பென்ன
நண்ணி நிற்கக் கீழ்பாலநீர் வடிந்து நடுவு நல்லவழிப்
பண்ணிக் குளிர்ந்த மணல்பரப்பக் கண்ட தொண்டர்
பயில்மாரி
கண்ணீற் பொழிந்து மயிர்ப்புளகப் கலக்கக் கை அஞ்சலி
குவித்தார் 884

வி.ரை :- பெருக்கெடுத்தோடிய ஆறு இரண்டாகப் பிரிந்து நின்று இருபக்கமும் வானைத் தொடும்படி நீரானது பளிக்கு மலை போன்று தேங்கி நிற்கக் கீழே நீர் வடிந்து நடுவே நல்ல வழிப்பாதையாக அமைத்துக் குளிர்ந்த மணல் பரப்பிக் கிடக்கக் கண்ட வன்தொண்டர் கண்களில் நீர்நிறைந்து மழையெனப் பொழிந்து மயிர்க் கூச்சலெடுக்கக் கைகள் அஞ்சலி செய்யக் குவித்தார்,

வி.ரை -- பளிக்கு வெற்பு — இருபக்கமும் நீர் பளிங்கு மலையென நின்றது. பயில்—நிறைந்த.

நம்பி பாதஞ் சேரமான் பெருமாள் பணிய நாவலூர்ச்
செம்பொன் மூந்நூல் மணிமார்பர் சேரர் பெருமான் எதிர்
வணங்கி

"உம்பர் நாதர் உமக்களித்த தன்றோ?" என்ன உடன்
மகிழ்ந்து
தம்பி ரானைப் போற்றி சைத்துத் தடங்கா வேரி
நடுவணைந்தார் 885

வி,ரை:- காவிரி பிரிந்து வழிவிட்டது கண்ட சேரமான் பெருமாள் நம்பி பாதம் வணங்க நாவலூரின் பசும்பொன் போன்ற முப்புரி நூல் அணிந்த மார்பர் சுந்தரர் சேரர் பெருமானை எதிர்வணங்கித் "தேவர் தேவர் உமககென்று அளித்ததன்றோ?" என்று கூறி அவருடன் மகிழ்ந்து சிவபெருமானை இசையால் போற்றி அகண்ட காவேரியின் நடுவில் வந்து சேர்ந்தார்.

காவேரி கடந்து சென்றது

செஞ்சொற் றமிழ்நா வலர்கோனும் சேரர் பிரானும்
தம்பெருமான்
எஞ்ச லில்லா நிறையாற்றின் இடையே அளித்த மணல்
வழியில்
தஞ்ச முடைய பரிசனமும் தாமும் ஏறித் தலைச்சென்று
பஞ்ச நதிவா ணரைப் பணிந்து விழுந்தார் எழுந்தார்
பரவினார். 886

வி.ரை:- செந்தமிழ்ச் சொல் நாவலர் கோனும் சேரர் கோனும் தம்பெருமான் மிச்சமில்லாத நிறைந்த ஆற்றுப் பெருக்கின் இடையே அளித்த மணற்பாதையில் அவர்களை அண்டி வந்த ஏவலர்களும் தாமும் சென்று கரைஏறி அவ்விடம் சென்றடைந்து ஐயாறடிகளைப் பணிந்து விழுந்து எழுந்து போற்றினார்.

அ.ரை:- எஞ்சல் — குறைதல். தலைச்சென்று — செல்லவேண்டிய இடம் சென்று. பஞ்சநதிவாணர்— ஐயறடிகள்.

வந்தவழியே திரும்பியதும் காவிரி மீண்டும் பெருக் கெடுத்தது

அங்கண் அரனார் கருணையினை ஆற்றா தாற்றித் திளைத் திறைஞ்சித்
தங்கள் பெருமான் திருவருளால் தாழ்ந்து மீண்டுந் தடம் பொன்னிப்
பொங்கு நதியின் முன்வந்த படியே நடுவு போந்தேறத்
துங்க வரைபோல் நின்றநீர் துரந்து தொடரப் பெருகியதால். 887

வி.ரை :- அழகிய கண்ணார் அரனார் சிவபெருமான் கருணையினை ஆற்ற இயலாது தாங்கித் திளைத்து வணங்கித் சிவபெருமான் திருவருளால் தாழ்ந்து வணங்கிச் மீண்டும் அகன்ற பெரிய காவேரி ஆற்றில் முன்வந்தபடியே நடுவில் சென்று கரை யேறப் பளிங்கு மலைபோல் உயர்ந்திருந்து நின்ற நீர் தொடர்ந்து பெருக்கெடுத்தோடியது.

அ.ரை :- துங்கவரை—உயர்ந்தமலை.

கொங்கு நாடடைந்தது

ஆய செயலின் அதிசயத்தைக் கண்டக் கரையில் ஐயாறு
மேய பெருமான் அருள்போற்றி வீழ்ந்து தாழ்ந்து மேல்பாற் போய்த்
தூய மதிவாழ் சடையார்தம் பதிகள் பிறவுந் தொழுதேத்திச்
சேய கொங்கு நாடணைந்தார் திருவா ரூரர் சேரருடன். 888

வி.ரை:- காவேரி பிரிந்து வழி விட்டதனைக் கண்டு அக்கரையில் ஐயாறில் அமர்ந்த பெருமானின்

திருவருளைப் போற்றி வீழ்ந்து வணங்கி மேற்குப் பக்கம் சென்று பிறை அணிந்த சடையப்பர் பதி பலவும் வணங்கிப் போற்றி திருவாரூரர் சேரர் பெருமானுடன் கொங்கு நாடு சென்றடைந்தார்.

மலைநாட் டெல்லையடைந்தது

கொங்குநாடு கடந்து போய்க் குலவு மலைநாட் டெல்லையுற
நங்கள் பெ மான் சோழனார் நம்பி தம்பி ரான்தோழர்
அங்கன் உடனே அணைய எழுந் தருளா நின்றார்
எனும் விருப்பால்
எங்கும் அந்நாட்டுள்ளவர்கள் எல்லாம் எதிர்கொண்
டின்புறுவார் 889

விரை :- கொங்கு நாட்டைக் கடந்து சென்று குலவும் மலைநாட்டு எல்லையை அடைந்திடத் தங்கள் பெருமானது தோழனான நம்பி என்னும் தம்பிரான் தோழர் அங்கு சென்றடைய எழுந்தருளினார் எனும் விருப்பினால், அந்த நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் எதிர்கொண்டு இன்புற்றனர்.

வரவேற்பு அலங்காரங்கள்

பதிக ளெங்கும் தோரணங்கள் பாங்க ரெங்கும்
பூவனங்கள்
வதிக ளெங்கும் குளிர்பந்தர் மனைக ளெங்கும் அகிற்
புகைக்கார்
நதிக ளெங்கும் மலர்ப்பிறங்கல் ஞாங்க ரெங்கும்
ஓங்குவன
நிதிக ளெங்கும் முழவினொலி நிலங்க ளெங்கும்
பொலஞ்சுடர்பூ. 890

வி.ரை :- கோயில்களிலெங்கும் தோரணங்கள் பக்கங்களில் எங்கும் மலர்ச்சோலைகள், வழிநெடுகக் குளிர்ந்த நிழல் தரும் பந்தல்கள், வீடுகளில் எங்கும் கார் அகிற்புகை மணக்கும், நதிகளிலெங்கும் மலர் மலைகள் போன்று குவிந்தன. பக்கங்களில் எங்கும் மிகுதியாகக் கிடப்பன நிதிகள். எங்கும் முழவின்ஒலி, நிலங்களில் எங்கும் பொன்னொளி வீசும்மலர்கள்.

அ.ரை :- பதி - சிவாலயங்கள். பாங்கர் — பக்கம் வதிகள்—வீதிகள். பிறங்கல்—மலை. ஞாங்கர் எங்கும் ஓங்குவள நிதி— பக்கங்களில் எங்கும் ஓங்கியிருப்பன செல்வம். பொலம்—பொன்.

கொடுங்கோளூரில் வரவேற்பு

திசைகள் தோறும் வரும்பெருமை அமைச்சர் சேனைப்
பெருவெள்ளம்
குசைகொள் வாசி திரைவெள்ளம் கும்ப யானைஅணி
வெள்ளம்
மிசைகொள் பண்ணும் பிடிவெள்ளம் மேவுஞ் சோற்று
வெள்ளங்கண்
டசைவில் இன்பப் பெருவெள்ளத் தமர்ந்து கொடுங்கோ
ளூரணைந்தார் 891

வி.ரை :- சேரர்கோன் சுந்தரருடன் வருகிறார் எனும் பெருமையில் திசைகளெங்கும் அமைச்சர்களது சேனைப் பெருவெள்ளமும், கடிவாளம் அணிந்த குதிரைகளின் வெள்ளமும், மத்தகமுடைய யானை களின் அணிவகுத்த கூட்டமும், மேற்கண்ட அலங்கார முடைய பெண் யானைகளின் கூட்டமும், பொருந்திய சோற்று மலைகண்ட இசைவினால் இன்பப் பெரு வெள்ளத் தமர்ந்து கொடுங்கோளூர் சென்றடைந்தார்.

அ.ரை :- குசை கொள்வாசி—கடிவாளம் அணிந்த குதிரை. கும்பயானை —மத்தமுடைய யானை. பிடி—பெண் யானை.

அலங்காரங்கள்

கொடுங்கோ ளூரின் மதில்வாயில் அணிகோ டித்து
மறுகில் உடுத்
தொடுங்கோ புரங்கள் மாளிகைகள் ஒளி குளிர் சாலைகள்
தெற்றி
நெடுங்கோ நகர்கள் ஆடரங்கு நிரந்த மணித்தா மங்கமுகு
விடுங்கோ தைப்பூந் தாமங்கள் நிரைத்து வெவ்வே றலங்
கரித்து 892

வி.ரை:- திருக்கொடுங்கோளூரின் மதிலின்வாயிலை அழகாகச் சோடித்து தெருக்களில் நட்சத்திரங்களைத் தொடும் கோபுரங்கள், ஆடல் அரங்குகள், நிலா முற்றங்கள், குளிர்ந்த சாலைகள், திண்ணைகள், நீண்ட தலை நகரங்கள், ஆடல் அரங்குகள், பரவிய இரத்தின மாலைகள், கமுகு, விடும் கோதைப் பூந்தாமங்கள் அதாவது தொங்க விடப்பட்ட மாலைகள். வரிசையாக நாட்டி வெவ்வேறாக அலங்கரித்தனர்.

அ.ரை:- கோடித்து— சோடித்து, அலங்காரம் செய்து. மறு—தெரு. உடு—நட்சத்திரங்கள். தெற்றி—அடித்து, கோநகர்—தலைநகர். பூந்தாமங்கள்—தொங்க விடப்படும் மலர்மாலைகள், நிரைத்து—வரிசைப்படுத்தி.

திருவஞ்சிக்களம்

நகர மாந்தர் எதிர்கொள்ள நண்ணி எண்ணில் அரங்கு
தோறும்
மகரக் குழை மாதர்கள் பாடி ஆட மணிவீ தியில் அணைவார்

சிகர நெடுமாளிகை அணையார் சென்று திருவஞ்சிக்களத்து
நிகரில் தொண்டர் தமைக்கொண்டு புகுந்தார்
உதியர் நெடுந்தகையார் 893

வி.ரை:- நகர மாந்தர்கள் எதிர்கொண்டழைத்திடச் சென்று எண்ணற்ற அரங்குகளிலெங்கும் எண்ணிலி டங்கா மகர மீன் வடிவிலான குழை அணிந்த ஆடல் மகளிர் பாடி ஆடி வரவேற்க அழகு வீதியில் சென்று மலைச் சிகரமென உயர்ந்த மாளிகை சென்றடையாது திருவஞ்சிக்களத்துக்கு நிகரற்ற வன்தொண்டரை அழைந்துக் கொண்டு சென்றார்.

திருப்பதிகம் பாடியது

இறைவர் கோயில் மணிமுன்றில் வலங்கொண் டிறைஞ்சி
எதிர்புக்கு
நிறையுங் காத லுடன் வீழ்ந்து பணிந்து நேர்நின் றாரூரர்
முறையில் விளம்புந் திருப்பதிகம் 'முடிப்பது நங்கை'
என்றெடுத்துப்
பிறைகொள் முடியார் தமைப்பாடிப் பரவிப் பெருமாளுடன்
தொழுதார் 894

விரை:- திருவஞ்சிக்களத்தில் எழுந்தருளிய சிவ பெருமான் கோயில் சென்று அழகிய முன்றில் வலம் வந்து வணங்கி எதிர் சென்று பெருகும் அன்புடன் விழுந்து வணங்கிச் சந்நதி முன் நின்ற ஆரூரர் முறைப் படி பாடும் திருப்பதிகம் "முடிப்பது கங்கை" என் றெடுத்துப் பிறை சூடிய முடியார் சிவபெருமானைப் பாடிப் பரவசமடைந்து சேரர் பெருமாளுடன் தொழுதார்.

ஆரூரரை யானை மீதேற்றி சேரன் சாமரை வீசியது

தொழுது திளைத்துப் புறம் போந்து தோன்றப் பண்ணும் பிடிமேற்பார்
முழுதும் ஏத்த நம்பியை முன் பேற்றிப் பின்பு தாமேறிப்
பழுதில் மணிச்சா மரைவீசிப் பைம்பொன் மணிமாளிகையில் வரும்
பொழுது மறுகில் இருபுடையும் மிடைந்தார் வாழ்த்திப் புகல்கின்றார் 895

விரை:- தொழுது மகிழ்ந்து புறம் வந்து கண்ணைக் கவரும் ஒரு பெண் யானையின் மீது ஏற்ற வேண்டியவற்றை எல்லாம் ஏற்றி அலங்கரித்து நம்பிர் ஆரூரரை முன்பு ஏற்றி அதன் பின்பு சேரர் ஏறிக் குற்றமற்ற மணிகள் பதித்த சாமரை சுந்தரருக்கு அரசன் வீசிக் கொண்டு பசும்பொன்னாலான அழகிய மாளிகையின் பக்கம் வரும்பொழுது இருபக்கமும் இருந்தவர்கள் வாழ்த்துக் கூறினர்.

மக்கள் வாழ்த்தி வரவேற்றது

''நல்ல தோழர் நம் பெருமாள் தமக்கு நம்பி இவ'' ரென்பார்.
''எல்லை இல்லாத் தவம் முன்பென் செய்தோம் இவரைத் தொழ'' என்பார்
''செல்வம் இனியென் பெறுவது நஞ் சிலம்பு நாட்டுக்'' கென உரைப்பார்
''சொல்லுந் தரமோ பெருமாள் செய்தொழிலைப் பாரீர்'' எனத் தொழுவார் 896

விரை:- ''நம் பெருமாள் தோழர் நல்லவர் நமக்கு நம்பி இவர்'' என்பர் சிலர். ''முப்பிறவியில் எல்லை

யில்லாத தவம் என் செய்தோமோ இவரைத் தொழு தற்கு'' என்பர் சிலர். நம் சேர நாட்டுக்குச் செல்வம் இனி என்ன பெறுவது? வேறு ஒன்றும் வேண்டாம் என்பர் சிலர். சேரர் பெருமாள் நம்பிக்குக் கவரி வீசுவது சொல்லுந்தரமோ? வந்து பாரீர் என்று பலர் சொல்லித் தொழுவார்கள்.

அ ரை:- சிலம்பு நாடு—சேரநாடு.

பூவும் பொரியும் பொன்துகளும் பொழிந்து பணிவார்
''பொருவில் இவர்
மேவும் பொன்னித் திருநாடே புவிக்குத் திலதம்'' என
வியப்பார்
பாவுந் துதிகள் எம்மருங்கும் பயில வந்து மாளிகையின்
மாவுங் களினும் நெருங்குமணி வாயில் புகுந்து
மருங்கிழிந்தார் 897

வி.ரை :- மலரும் பொரியும் பொன்துகள்களும் பொழிந்து வணங்குவார்.' 'இவர் அவதரித்த பொன்னித் திருநாடுதான் உலகுக்குத் திலகம் என்னும் வியப்பாகப் பாடல்களும், துதித்தல்களும் எல்லாப் பக்கமிருந்தும் ஓங்க மாளிகையின் முன் குதிரைகளிலும், யானைகளி லும் அமர்ந்து வந்தவர்கள் அழகிய கோயிலின் பக்கம் வந்து இறங்கினர்.

அ.ரை :- திலதம்—திலகம். மா—குதிரை.

சிம்மாசனத்தில் அமர்த்தியது

கழறிற் றறியுந் திருவடியுங் கலைநா வலர்தம் பெருமானும்
முழவிற் பொலியுந் திருநெடுந்தோள் முனைவர் தம்மை
உடன்கொண்டு

விழவிற் பொலியும் மாளிகையில் விளங்கு சிங்கா
சனத்தின் மிசை
நிழல்திக் கொளிரும் பூணாரை இருத்தித் தாமும்
நேர்நின்று 898

வி.ரை :- கழறிற்றறியும் சேரர் பெருமாளடிகளாரும், கலையில் சிறந்த நாவலர்தம் பெருமானாகிய மத்தளம் போன்று பொலியும் திருநெடுந்தோள்களையுடைய முதல்வரை விழாக்கோலம் கொண்டு பொலியும் மாளிகையில் விளங்கும் சிம்மாசனத்தின் மீது திக்குகளிலெல்லாம் ஒளி வீசும் ஆபரணமணிந்த ஆரூரரை அமர்த்தித் தாமும் எதிர்நின்றார்.

அ.ரை :- திருவடியும்—திருஅடிகளாகும். முழவு—மத்தளம். முனைவர்—முதல்வர். விழவில்—விழாவில் நிழல்திக்கு ஒளிரும்—திசையெங்கும் ஒளிவீசும் நிழல்—வென்கொற்றக் கொடை நிழல்.

பாத பூசை செய்ய 'இது தகாது' என்றது

செம்பொற் கரக வாசநீர் தேவி மார்கள் எடுத்தேந்த
அம் பொற் பாதந் தாம்விளக்கி அருளப் புகலும், ஆரூரர்
தம் பொற் றாளை வாங்கி 'இது தகா'தென் றருளத் தரணி
யில் வீழ்ந்
''தெம் பெற் றிமையால் செய்தன இங் கெல்லாம் இசைய
வேண்டும்'' என 899

வி ரை :- பசும் பொன்னாலான கும்பத்தில் வாசனையுள்ள நீர் அரசமாதேவியர் எடுத்து ஏந்திவர, ஆரூராது அழகிய பொன்போன்ற பாதங்களைத் தாம் கழுவி அருளப் புகும்போது. ஆரூரர் தமது பொன் போன்ற திருப்பாதங்களை வாங்கி 'இது தகாது' என்று சொன்னதும் சேரர்பிரான் மண்ணில் விழுந்து எமது

அன்பின் தன்மையால் செய்தனம் இங்கு இதற்கு இசைய வேண்டும்'' என்றார்.

அ.ரை :- கரகம்—கும்பம். விளக்கி—கழுவி. எம் பெற்றிமை—எமது அன்பின் தன்மை.

பாதபூசையுடன் மன்னருடன் அமுது செய்தது

பெருமாள் வேண்ட எதிர்மறுக்க மாட்டார் அன்பிற் பெருந்
தகையார்
திருமா நெடுந்தோள் உதியர்பிரான் செய்த எல்லாங்
கண்டிருந்தார்
அருமா னங்கொள் பூசனைகள் அடைவே எல்லாம்
அளித்ததற் பின்
ஒருமா மதிவெண் குடைவேந்த ருடனே அமுது
செய்து வந்தார் 900

வி.ரை :- அன்பில் பெருந்தகையரான சுந்தர மூர்ந்தி சுவாமிகள் சேரர்பெருமாள் வேண்டுகோளுக்கு எதிர்மறுக்க மாட்டாதவராய், திருஅமர்ந்த நீண்ட பெரிய தோள்களையுடைய சேரர்பிரான் செய்த சேவைகளையெல்லாம் கண்டு பேசாதிருந்து, அரிய மாண்பு கொண்ட பூசனைகள் அத்தனையும் செய்ததற் பின்பு ஒப்பற்ற மதிய நிலவு போன்ற வெண்கொற்றக் குடையையுடைய வேந்தர் சேரர்பெருமானுடன் அமுது செய்து வந்தார்.

அ.ரை :- உதியர்—சேரர். அருமானம் — அரிய மாண்பு.

அமுது செய்தபின் செய்த மரியாதை

சேர ருடனே திருஅமுது செய்த பின்பு கைகோட்டி
ஆரம் நறுமென் கலவை மான் மதச்சாந் தாடை அணி
மணிப் பூண்

ஈர விரைமென் மலர்ப்பணிகள் இனைய முதலா யின
வருக்கம்
சார எடுத்து வன்தொண்டர்ச் சாத்தி மிக்க
தமக்காக்கி 901

வி.ரை :- சேரர் பெருமாளுடன் அமுது செய்த பின்பு, சேரமான் பெருமாள் நாயனார் தமது கையை வளைத்து மாலை, வாசனை மிக்க சந்தனச்சாந்து, கஸ்த்தூரிக்கலவை, ஆடை அணிகலன்கள், குளிர்ந்த மணம் வீசும் மென்மையான மலர் முதலியன தூவும் பணிகள் முதலானவற்றை விதவிதமாக முழுமையாக எடுந்து வன்தொண்டருக்குச் சாத்தி மீதமுள்ளவற்றைத் தமக்கு பூசிக்கொண்டார்.

அ.ரை :- கைகோட்டி—கைவளைத்து. மான்மதம்-கஸ்த்தூரி. ஈரம்—குளிர்ந்த. வருக்கம்—வகை வகையாக. சார—சேர்ந்து. மிக்க—மீதி.

ஆடல், பாடல் மகளிருடன் விளையாடல்

பாடல் ஆடல் இன்னியங்கள் பயிறல் முதலாம்
பண்ணையினில்
நீடும் இனிய விநோதங்கள் நெருங்கு காலந்தொறுநிகழ
மாடு விரைப்பூந்தருமணஞ்செய் ஆராமங்கள் வைகுவித்துக்
கூட முனைப்பா டியர்கோவைக் கொண்டு மகிழ்ந்தார்
கோதையார் 902

வி.ரை :- இன்னிசை முழங்க ஆடலுடன் பாடலும் நெருங்கி ஆடும் விளையாடல்களும் மேன்மையான விநோதாங்கள் அடுத்தடுத்துக் முக்காலமும் நிகழப் பக்கத்திலுள்ள மணம் வீசும் மலர்கள் நிறைந்த மரங்கள் மிகுந்த சோலைகளில் திருமுனைப் பாடியர் தலைவரான சுந்தரரை அங்கு அவரைக் சேரநாட்டு மகளிர் மகிழ்வித்தனர்.

அ.ரை :- இன்னியங்கள்—இன்னிசைகள். பயிறல்—நெருக்கமாகச் சேர்ந்து. பண்ணையினில்— விளையாட்டினில். விநோதங்கள் — செயற்கரியன. மாடு—பக்கம். தரு— மரம். ஆராமங்கள்—சோலைகள்.

செண்டாடுந் தொழில் மகிழ்வுஞ் சிறு சோற்றுப் பெருஞ் சிறப்பும்
வண்டாடு மலர்வாவி மருவியநீர் விளையாட்டும்
தண்டாமும் மதகும்பத் தடமலைப் போர் சலமற்போர்
கண்டாரா விருப்பெய்தக் காவலனார் காதல் செய்நாள் 903

வி.ரை:- பந்து விளைடி மகிழ்ந்தும் சோலைகளில் சிறு சோறு சமைத்து உண்டு மகிழும் பெருஞ் சிறப்பும் வண்டுகள் விளையாடும் மலர்கள் நிறைந்த நீர் நிலைகளில் ஆணும் பெண்ணும் கலந்து விளையாடும் நீர் விளையாட்டும் குறையாத மும்மதத்தையுடைய மத்தகம் பொருந்திய பெருத்த மலை போன்ற யானையின் சண்டையும் தனித்து ஒருவருக்கொருவர் செய்யும் மல்யுத்தமும் ஆரூரர் கண்டு மகிழ்ந்திருக்கக் கண்ட சேரமான் சுந்தரர் மீது காதல் செய்யும் நாளில்.

அ.ரை:- செண்டாடும்—பந்தாடும். சிறு சோறு—இல்லத்திற்கு அப்பால் வெளியிடங்கள் சோலை முதலியவற்றில் ஒன்று சேர்ந்து சமைத்துண்ணும் உணவும் ''சிறு சோறு'' என்பது சிறுவர் வீட்டுக்கு வெளியே ஒன்று சேர்ந்து சமைத்துண்பது. அதனைக் கூட்டாஞ்சோறு என்றுங்கூறுவர். ஆனால் அப்பொருள் இங்கு பொருந்தாது. தண்டாமும்—தணியாத, குறையாத. கும்பம்—மத்தகம்- சலமற்போர்—தனித்தனியே செய்யும் மற்போர்.

திருவாரூரரை நினைந்து பாடியது

நாவலர் தம் பெருமானும் திருவாரூர் நகராளும்
தேவர்பிரான் கழலொருநாள் மிகநினைந்த சித்தையராய்

''ஆவியைஆ ரூரானை மறக்கலுமா மே'' என்னும்
மேவிய சொற் றிருப்பதிகம் பாடியே வெருவுற்றார் 904

வி.ரை:- நாவலர் தம் பெருமான் சுந்தர மூர்த்தி யாரும் ஒருநாள், திருவாரூர் நகரை ஆளும் தேவாதி தேவனது திருக்கழல்களை மிகவு நினைந்த மனத்தின ராய் ''அவியை ஆரூரானை மறக்கலுமாமே'' எனும் சொல்திருப்பதிகம் பாடி மயக்கமடைந்தார்.

திருவாரூர் தொழஎழுந்தபோது சேரனும் புறப்பட்டது

திருவாரூர் தனை நினைந்து 'சென்று தொழு வேன்''என்று
மருஆர்வத் தொண்டருடன் வழிக்கொண்டு செல்பொழுதில்
ஒருவாநண் புள்ளுருக உடனெழுந்து கைதொழுது
பெருவான வரம்பனார் பிரிவாற்றார் பின்செல்வார் 905

வி.ரை:- திருவாரூரில் அமர்ந்த வன்மீக நாதரைச் சென்று தொழுவேன் என்று மிகுந்த ஆர்வத்துடன் தொண்டர்களுடன் புறப்பட்டு வழியே செல்லும் பொழுதில், நீங்காத நட்பு உள் உருக்கச் சேரமான் பெருமாளும் உடன் எழுந்து சுந்தரரைக் கைதொழுது அன்புக்கு பெருவானமே எல்லையாக உடைய வன் தொண்டரது பிரிவைத் தாங்காதவராய் பின் தொடர்ந் தார்.

அ.ரை:- ஒருவா—ஒருபோதும் நீங்காத பெருவான வரம்பனார்—சுந்தரர்.

சேரமான் பிரிவாற்றது கூறியது

வன்தொண்டர் முன்னெய்தி மனமழிந்த உணர்வினராய்
''இன்றுமது பிரிவாற்றேன் என்செய்கேன் யான்'' என்ன

"ஒன்று நீர் வருந்தாதே உமதுபதி யிலகணிருந்
தன்றினார் முனைமுருக்கி அரசாளும்'' என மொழிந்தார் 906

வி.ரை:- திருவாரூர் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த வன்தொண்டர் முன் சென்று "உமது பிரிவை நான் தாங்க இயலேன் என் செய்வேன்" என்று கூற, சுந்தரமும் "நீர் ஒன்றும் வருத்தப்பட வேண்டாம். உமது இடத்திலிருந்து கொண்டு பகைவரைப் போரில் வென்று அரசாண்டு கொண்டிரும்'' என மொழிந்தருளினார்.

அ.ரை :- அன்றினார் முனைமுருக்கி — பகைவரது கூர்மையைப் போக்கி, பகைவரை வென்று.

ஆரூர் மொழிந்தருள அதுகேட்ட அருட்சேரர்
"பாரோடு விசும்பாட்சி எனக்குமது பாதமலர்
தேரூரும் நெடுவீதித் திருவாரூர்க் கெழுந்தருள
நேரூரும் மனக்காதல் நீக்கவும் அஞ்சுவன்'' ஏன்றார் 907

வி.ரை :- ஆரூரர் சொன்னது கேட்ட அருள்மிகு சேரர் பெருமான் இந்த உலகத்துடன் வானமே எல்லையாக உடைய ஆட்சி என்பது தேவரீரது பாத மலர்களேயன்றி வேறு ஒன்றும் இல்லை. தேர் ஊர்ந்து செல்லும் நீண்ட வீதியையுடைய திருவாருருக்கு எழுந்தருள நீங்காது எழும் மன அன்பு நீக்கி இங்கிருக்க அச்சம் கொள்வேன'' என்றார்.

வன்தொண்டர் மேலும் கூறியது

மன்னவனார் அதுமொழிய வன்தொண்டர் எதிர்மொழிவார்
"என்னு யிருக் கின்னுயிராம் எழிலாரூர்ப் பெருமானை
வன்நெஞ்சக் கள்வனேன் மறந்திரேன் மதியணிந்தார்
இன்னருளால் அரசளிப்பீர் நீர் இருப்பீர்'' என இறைஞ்ச 908

வி.ரை:- சேரமான் அவ்வாறு கூறக்கேட்ட சுந்தரர் "எனது உயிருக்கு இனிதான உயிரான எழில் மிகு ஆரூர்வன்மீக நாதர் பெருமானைக், கொடிய நெஞ்சனாகிய நான் மறந்து இங்கு இருக்கமாட்டேன். நிலவையணிந்த சடையப்பரது இனிமை அருளால் நீர் இங்கிருந்து அரசாட்சி செலுத்துவீர்" என வேண்டி மறு மொழி கூறியபொழுது.

மன்னன் மந்திரிக்கு ஆணையிட்டது

மற்றவரும் பணிந்திசைந்தே மந்திரிகள் தமைஅழைத்துப்
"பொற்புநிறை தொன்னகரில் இற்றைக்கு முன்புகுந்த
நற்பெரும் பண் டாரநா னாவருக்க மானவெலாம்
பற்பலவாம் ஆளின் மிசை ஏற்றிவரப் பண்ணும்" என
909

வி.ரை :- வன்தொண்டர் மொழி கேட்ட மன்னவனாரும் அமைச்சரை அழைத்து, அழகுமிக்க இந்நகரில் இன்றைக்கு நம் கருவூலத்தில் வந்து சேர்ந்த பலவகையான செல்வங்களையும் வகைவகையாகப் பிரித்து ஆட்களின் மேல் ஏற்றிவரச் செய்யும்" என்றார்.

வகை வகையான செல்வம் சுமந்து வந்தது

ஆங்கவரும் அன்றுவரை ஆயமா கியதனங்கள்
ஓங்கியபொன் நவமணிகள் ஒளிர்மணிப்பூண் துகில் வருக்கம்
ஞாங்கர் நிறை விரையுறுப்பு வருக்கமுதல் நலஞ்சிறப்பத்
தாங்குபொதி விளைஞர்மேல் தலமலியக் கொண்டணைந்தார் 910

வி.ரை:- அமைச்சரவர்களும் அன்றுவரை கருவூலத்தில் வந்து குவிந்த செல்வம், மிகுந்த பொன் நவ

மணிகள் ஒளிவீசும் மணிகள் பதித்த ஆபரணப் பட்டாடை வகைகள், ஆங்கிருந்த வாசனைப் பொருட்கள் வகை வகையாக நன்மை சிறப்புறப் பொதி சுமக்கும் ஆட்கள் தலையில் சுமந்து கொண்டு வந்து சேர்ந்தனர்.

அ.ரை :- ஆயம்—கருவூலம். ஞாங்கர் — பக்கம். விரையுறுப்பு—வாசனைப் பொருட்கள்

பெருஞ்செல்வமேற்றிச் சென்றது

மற்றவற்றின் பரப்பெல்லாம் வன்தொண்டர் பரிசனத்தின்
முற்படவே செலவிட்டு முனைப்பாடித் திருநாடர்
பொற்பதங்கள் பணிந்தவரைத் தொழுதெடுத்துப் புனை அலங்கல்
வெற்புயர்தோ ளுறத்தழுவி விடை அளித்தார் வன்தொண்டர் 911

வி.ரை :- சேரமான் பெருமாள், பொதிசுமப்போருடன் கொடுத்த செல்வமத்தனையும் வன்தொண்டரது ஏவலாட்களின் முன்செல்ல அனுப்பி விட்டு திருமுனைப்பாடி நாடர்சுந்தரரின் பொன்மலர்ப் பாதங்களைப் பணிந்து தொழுத சேரரைத் தாமும் தொழுது. எடுத்து, மாலை அணிந்த மலைபோன்று பருத்த தோள்களைத் தழுவி வன்தொண்டர் சேரர் கோனுக்கு விடையளித்துப் புறுப்பட்டார்.

அ.ரை :- பரப்பு—செல்வப் பெருக்கு. பொற்பதங்கள் பணிந்தார்—சேரமான். புனை அலங்கல்—தொடுக்கப்பட்ட மாலை.

திருமுருகன் பூண்டிவழிச் சென்றது

ஆரூரர் அவர்தமக்கு விடை அருளி அங்ககன்று
காருரு மலைநாடு கடந்தருளிக் கற்சுரமும்

நீருருங் கான்யாறும் நெடுங்கானும் பலகழியச்
சீருருந் திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றார். 912

வி.ரை :- திருவாரூர் சேரமானுக்கு விடை கொடுத்து அங்கிருந்து சென்று மேகங்கள் மொய்க்கும் மலைநாடு கடந்து பரல்கற்கள் நிறைந்த வழியும், காட்டாறும், நீண்டகாடும். பல கடந்து சீர்மிகு திருமுருகன் பூண்டி வழிச்சென்றார்.

புலவர் கூற்று

திருமுருகன் பூண்டி அயற் செல்கின்ற போழ்தின் கண்
பொருவிடையார் நம்பிக்குத் தாமேபொன் கொடுப்பதலால்
ஒருவர்கொடுப் பக்கொள்ள ஒண்ணாமைக் கதுவாங்கிப்
பெருகருளால் தாங்கொடுக்கப் பெறுவதற்கோ அது
அறியோம் 913

வி.ரை:- திருமுருகன் பூண்டி கடந்து சென்று கொண்டிருக்கும் போது போரிடும் காளையை உடைய சிவபெருமாள் நம்பி ஆரூரருக்கும் தாம் பொன் கொடுப்பதல்லாமல் வேறு ஒருவர் கொடுக்க அதனைக் கொண்டதனை விரும்பாமல் அதனைவாங்கிக்கொண்டு பெருகும் அருளினால் தமே கொடுக்கவேண்டும் என்பதற்கோ அறியோம்.

பூதங்கள் வேடர்வடிவம் கொண்டு வந்தது

வென்றி மிகு பூதங்கள் வேடர்வடி வாய்ச் சென்று
வன்தொண்டர் பண்டாரங் கவரஅருள் வைத்தருள
அன்றினார் புரமெரித்தார் அருளால்வேட்டுவப்
படையாய்ச்
சென்றவர்தாம் வரும் வழியில் இருபாலுஞ்
செயர்த்தெழுந்து 914

வி.ரை :- வெற்றியைந் தரும் சிவகணங்கள் வேடர் வடிவமெடுத்து வந்து வன்தொண்டர் எடுத்துச் செல்லும் செல்வங்களைக் கவர்ந்திட இறைவனார் அருள் செய்திடப் பகைவரது கோட்டை மூன்றையும் எரித்த சிவபெருமான் அருளினால் வேட்டுவப் படையாகச் சென்று அவர்கள் வரும் வழியில் இருபக்கமும் சினம் கொண்டு காத்திருந்தனர்.

அ.ரை :- வென்றி — வெற்றி. அன்றினார்— அயலார், பகைவர். செயர்த்து—சினந்து.

செல்வங்களைக் கொள்ளையடித்தது

வில்வாங்கி அலகம்பு விசைநாணிற் சந்தித்துக்
"கொல்வோம்இங் கிட்டுப்போம்" எனக்கோபத் தாற்குத்தி
எல்லையில் பண்டாரமெலாங் கவர்ந்துகொள
இரிந்தோடி
அல்லலுடன் பறியுண்டார் ஆரூரர் மருங்
கணைந்தார் 9 | 5

விரை :- நஞ்சு தோய்ந்த அம்பை வில்லின் நாணில் வைத்து இழுத்துக் "கொன்று போடுவோம் செல்வத்தை இங்கே வைத்து விட்டு ஓடிப் போங்கள்" என்று சினம் கொண்டு குத்திக் கணக்கற்ற செல்வக் குவியலைக் கவர்ந்து கொள்ள, அச்சத்தால் பல திக்குகளிலும் ஓடித் துன்பத்துடன் செல்வம் பறிபோனவர்கள் ஆரூரரிடம் சென்றடைந்தனர்.

அ.ரை :- அலகம்பு—நஞ்சு தோய்ந்த அம்பு. இரிந்தோடி—கலைந்து ஓடி.

திருமுருகன் பூண்டி கோயிலையடைந்தது

ஆரூரர் தம்பால்அவ் வேடுவர் சென்றணையாதே
நீரூருஞ் செஞ்சடையார் அருளினால் நீங்கஅவர்
சேரூராந் திருமுருகன் பூண்டியினிற் சென்றெய்திப்
போருரு மழவிடையார் கோயிலைநா டிப்புக்கார் 916

வி.ரை: கங்கையாற்றை முடியில் அணிந்த செஞ் சடையார் அருளினால் வேட்டுவ வேடம் கொண்ட பூதங்கள் ஆரூரர் கிட்டே நெடுங்காமல் நீங்க, ஆரூரரும் நீர்வளம் மிக்க திருமுருகன் பூண்டியினிற் சென்று போரிடம் இளங்காளையையுடைய சிவ பெருமான் கோயிலை நாடி உள்புகுந்தார்.

அங்கணர்தங் கோயிலினை அஞ்சலிகூப் பித்தொழுது
மங்குலுற நீண்டதிரு வாயிலினை வந்திறைஞ்சிப்
பொங்குவிருப் புடன்புக்கு வலங்கொண்டு புனிதநதி
திங்கள்முடிக் கணிந்தவர்தந் திருமுன்பு சென்றணைந்தார் 917

வி.ரை:- அழகிய கண்ணினார் சிவபெருமான் கோயிலை வணங்கிக் கைகூப்பித் தொழுது மேகத்தைத் தொடும் நீண்ட திருவாயிலை வணங்கிப் பொங்கி எழும் ஆவலுடன் வலம்வந்து புகுந்து, புனித ஆற்றையும், பிறையையும் சூடியவரது சந்நதிமுன் சென்றார்.

பதிகம் பாடியது

உருகியஅன் பொடுகைகள் குவித்து விழுந் துமைபாகம்
மருவியதம் பெருமாள்முன் வன்தொண்டர் பாடினார்
"வெருவுறவே டுவர்பறிக்கும் பெருஞ்சுரத்தில் எத்துக்கிங்
கருகிருந்தீர்? எனக் 'கொடுகு வெஞ்சிலை" அஞ்
சொற்பதிகம் 918

வி.ரை:- கைகள் குவித்து உருகிய அன்புடன் விழுந்து உமையொருபாகரான தமது பெருமான் முன் வன்தொண்டர் ''அச்சத்தை மூட்டும் வேடுவர்கள் கொள்ளையடிக்கும் கொடிய கற்கள் நிறைந்த காட்டில் எதற்காகஇங்குஎழுந்தருளியிருக்கிறீர்'' என்று ''கொடுகு வெஞ்சிலை'' என அடியெடுத்து அழகிய சொற்களால் பதிகம் பாடினார்.

கொள்ளை போன செல்வங்கள் வாயிலில் குவிந்தது

பாடியவர் பரவுதலும் பரம்பொருளாம் அவரருளால்
வேடுவர்தாம் பறித்தபொரு ளவையெல்லாம் விண்ணெருங்க
நீடுதிரு வாயிலின்முன் குவித்திடலும் நேரிறைஞ்சி
ஆடுமவர் திருவருளால் அப்படியே கைக் கொண்டார் 919

வி.ரை :- பாடி அவர் வேண்டியதும் பரம் பொருளான சிவனருளால் வேடுவர்கள் கொள்ளை யடித்துச் சென்ற பொருளெல்லாம் வானைத் தொடும் படியாக உயர்ந்த கோயிற் திருவாயிலின் முன் குவிந் திட அது கண்டு நேர்நின்று வணங்கி ஆடும் அவரது திருவருளால் செல்வங்களை எடுத்துக் கொண்டார்.

செல்வங்களுடன் திருவாரூர் சென்றது

கைக்கொண்டு கொடுப்போம் அக் கைவினைஞர் தமைஏவி
மைக்கொண்ட மிடற்றாரை வணங்கிப் போய்க் கொங்கன்று
மெய்க்கொண்ட காதலினால் விரைந்தேகி மென்கரும்புஞ்
செய்க்கொண்ட சாலியுஞ்சூழ் திருவாரூர் சென்றணைந்தார் 920

வி.ரை :- கைகளில் எடுத்துச் சுமந்து செல்லும் பொதிசுமப்போரை அழைத்து ஆணையிட்டுத் திருநீல

கண்டரை வணங்கிச் சென்று கொங்குநாடு கடந்து உண்மை கொண்ட அன்பினால் இனிமையான கரும்பும், நெல்லும் மிகுந்த வயல்களையுடைய திருவாரூர் சென்றடைந்தார்.

அ.ரை:- செய்—வயல். சாலி—நெல்,

சேரமான் அரசோச்சியிருந்தது

நாவலர்மன் னவர் அருளால் விடைகொண்ட நரபதியார்
ஆவியின்ஒன் றாநண்பின் ஆரூரர் தமை நினைந்து
மாவலரு மலர்ச்சோலை மகோதையினில் மன்னிமலைப்
பூவலயம் பொதுநீக்கி அரசுரிமை புரிந்திருந்தார் 921

வி.ரை:- நாவலர் மன்னவர் ஆரூரரது அருளினால் விடைபெற்ற சேரர் மன்னர் உயிர் ஒன்றான நட்பின் ஆரூரரை நினைந்து வண்டுகள் மொய்க்கும் மலர்ச் சோலைகள் நிறைந்த மகோதையினில் பொருந்திய மலைநாட்டில் பொதுமை என்பது நீக்கித் தனதாக்கி ஆட்சி செய்து வந்தார்.

அ.ரை :- நரபதியார்—சேர வேந்தர். மா-வண்டு.

புலவர் கூற்று

இந்நிலைமை உதியர்பிரான் எம்பிரான் வன்தொண்டர்
பொன்னிவள நாடகன்று மகோதையினில் மேற்புகுந்து
மன்னுதிரு கயிலையினில் மதவரைமேல் எழுந்தருள
முன்னர்வயப் பரியுகைக்குந் திருத்தொழில் பின்மொழி
கின்றோம் 922

வி.ரை:- இந்நிலைமையினில் சேரர் கோமான் வன் தொண்டர் வளம்மிக்க பொன்னிநாடு கடந்து கொடுங் கோவலூரின்மேல் புகுந்து நின்ற திருக்கயிலையினில்

யானை மீது எழுந்தருள அதற்கு முன்பாக வெற்றிக் குதிரையைச் செலுத்தும் திருச்செயலைப் பின் (வெள்ளானைச் சருக்கம்) கூறுகின்றோம்,

மலைமலிந்த திருநாட்டு மன்னவனார் மாகடல்போல்
சிலைமலிந்த கொடித்தானைச் சேரலனார் சுழல்போற்றி
நிலைமலிந்த மணிமாட நீள்மறுகு நான்மறைசூழ்
கலைமலிந்த புகழ்க்காழிக் கணநாதர் திறமுரைப்பாம் 923

வி.ரை:- மலைகள் மிகுந்த சேரநாட்டு மன்னவனார் கழறிற்றறிவார் பெருங்கடல்போல் வில்லேந்திய கொடியையுடைய சேரலனார் திருக்கழல்களைப் போற்றி உயர்ந்தோங்கிய மணிமாடங்கள் நிறைந்த நான்கு வேதங்கள் முழங்கும் மிகுதியான கலைகள் நிறைத்த புகழ்மிக்க சீர்காழியில் கணநாதர் பற்றிக் கூறுவோம்.

—: o :—

வெள்ளானைச் சருக்கம்

—:o:—

புலவர் கூற்று

மூல மான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த
ஞாலம் உய்ய எழுத்தருளும் நம்பி தம்பி ரான்தோழர்
காலை மலர்ச்செங் கமலக்கண் கழறிற் றறிவா ருடன்கூட
ஆலம் உண்டார் திருக்கயிலை அணைந்த தறிந்த
படியுரைப்பாம் 924

வி.ரை:- திருத்தொண்டர்புராணம் எனும் இப்பெரிய புராணத்துக்கு மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த உலகம் உயர்வுபெற எழுந்தருளும் நம்பி ஆரூரர் தம்பிரான் தோழர், காலையில் மலர்ந்த சிவந்த தாமரை போன்ற கண்ணினார் கழறிற்றறிவார் சேரமானுடன் சேர்ந்து நஞ்சுண்டீசுவரனது திருக் கயிலை சென்றடைந்ததை அறிந்தபடி கூறுவோம்,

படியில் நீடும் பத்திமுதற் அன்பு நீரிற் பணைத்தோங்கி
வடிவு நம்பி யாரூரர் செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின் களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகந் முதிர்ந்து முறுகி விளைந்ததால்
925

வி.ரை:- பூமியில் விழுந்த பக்தியாகிய வித்து ஒன்றுஅன்புஎனும் நீரில் வளர்ந்து பருத்துப் பெரியதாக நம்பி ஆரூரர் எனும் பசும்பொன்மேனி அழகு வடிவு கொண்டு கொடிய வெம்மையான இருவினை எனும்

களை களைந்தெடுத்து ஒளிபரப்பி முடிவில்லாத சிவ போகம் எனும் கதிர்முதிர்ந்து மிகுதியாக விளைந்ததாம்.

சுந்தரர் சேரரை நினைந்து புறப்பட்டது

ஆரம் உரகம் அணிந்த பிரான் அன்பர் அணுக்க
வன்தொண்டர்
ஈர மதுவார் மலர்ச்சோலை எழிலாரூரில் இருக்குநாள்
சேரர் பெருமாள் தனைநினைந்து தெய்வப்பெருமாள் கழல்
வணங்கிச்
சாரல் மலைநாடணைவதற்குத் தவிரா விருப்பி னுடன்
போந்தார் 926

வி.ரை :- பாம்பு மாலை அணிந்த பரமபிதாவின் மிகவும் நெருங்கிய அன்பர் வன்தொண்டர் தேன்சிந்தும் அழகிய மலர்ச்சோலைகள் மிகுந்த எழில் திருவாரூரில் இருக்கும் நாளில் சேரர் பெருமானை நினைந்து தெய்வப் பெருமான் சிவன் திருக்கழல்களை வணங்கி மழைச் சாரலுடைய சேரர் மலைநாடு செல்வதற்கு விரும்பிப் புறப்பட்டார்.

திருப்புக் கொளியூர் சென்றது

நன்னீர்ப் பொன்னித் திருநாட்டு நாதர் மகிழுந் திருப்பதிகள்
முன்னி இறைஞ்சி அகன்றுபோய் முல்லைப் படப்பைக்
கொல்லை மான்
துன்னி உகைக்குங் குடக்கோங்கில் அணைந்து தூய
மதிவான் நீர்
சென்னி மிசைவைத் தவர்செல்வத் திருப்புக் கொளியூர்
சென்றடைந்தார் 927

வி.ரை:- நல்ல நீர் வளமிக்க பொன்னித் திரு நாட்டு நாதர் சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளிய ஆலயங்கள் முந்திச் சென்று வணங்கிச் சென்று போய் முல்லைச் செடிகள் பூத்துக் குலுங்கும் கொல்லையில்

மான்கள் துள்ளி விளையாடும் மேற்குக் கொங்கு நாடு சென்றடைந்து, தூய நிலவும் கங்கையையும் தலையில் அணிந்தவரது செல்வம் மிக்க திருப்புக் கொளியூர் சென்றடைந்தார்.

அ.ரை:- முல்லைப் படப்பைக் கொல்லை — கொல்லையில் வளர்ந்த முல்லைச் செடிகள். துன்னி— துள்ளி. உகைக்கும்—ஆடும், குதித்தாடும். வான்நீர்— கங்கை.

மங்கல ஒலியும் அழுகையும் ஒரு தெருவில் கேட்டது

மறையோர் வாழும் அப்பதியின் மாடவீதி மருங்கணைவார்
நிறையுஞ் செல்வத் தெதிர் மனைகள் இரண்டில் நிகழ்மங்
கலவியங்கள்
அறையும் ஒலியொன் றினில் ஒன்றில் அழுகை
ஒலிவந்தெழுதலும்ஆங்
குறையும் மறையோர் களை "இரண்டும் உடனே
நிகழ்வதென்?" னென்றார் 928

வி.ரை:- அந்தணர்கள் வாழும் அந்த ஊரின் மாட வீதியில் சென்று கொண்டிருந்த போது, செல்வச் செழிப்பு மிக்க எதிர் எதிர் உள்ள இரு இல்லங்களில் ஒன்றில் மங்கல ஒலியும் மற்றொன்றில் அழுகை ஒலியும் வருவது கேட்டு ஆங்கு வாழும் அந்தணர்களை நோக்கி "இரண்டும் ஒரே நாளில். இங்கு நிகழ்வதன் காரணம் என்ன?" என்றார்.

முதலை வயப்பட்டொருவன் இறந்ததும் மற்றவன் பிழைத்ததும்

அந்தணாளர் வணங்கி "அரும் புதல்வர் இருவர் ஐயாண்டு வந்த பிராயத் தினர் குளித்த மடுவில் முதலை ஒரு மகவை

முந்த விழுங்கப் பிழைத்தவனை முந்நூல் அணியுங்
கலியாணம்
இந்த மனைமற் றந்தமனை இழந்தார் அழுகை''
என்றுரைத்தார் 929

வி.ரை :- அந்தணர்கள் சுந்தரரை வணங்கி ''அரிய புதல்வர்கள் இருவர் ஐந்து வயதினர் குளித்த மடுவில் முதலை ஒரு மகவை விழுங்க மற்றொருவன் பிழைத்து வந்தவனுக்குப் பூணூல் அணியும் கலியாணமும், இறந்த மற்றவன் வீட்டில் அழுகை ஒலியும்'' என்றனர்.

மகவிழந்தோர் வந்து வணங்கியது

இத்தன் மையினைக் கேட்டருளி இரங்குந்
திருவுள்ளத்தினராம்
மொய்த்த முகைத்தார் வன்தொண்டர் தம்மை முன்னே
கண்டிறைஞ்ச
வைத்த சிந்தை மறையோனும் மனைவி தானும் மகவிழந்த
சித்த சோகந் தெரியாமே வந்து திருத்தாள் இறைஞ்சினார்
930

வி.ரை :- இத்தன்மையினைக் கேட்டருளி மனம் இரங்கும் திருஉள்ளத்தினரான மொய்க்கும் அரும்பு மலர்மாலை அணிந்த வன்தொண்டரை முன் சென்று வணங்கி ஒரே மனத்தினரான அந்தணரும் அவர் மனைவியாரும் மகனை இழந்த மனக்கவலை தெரியாத படி வந்து சுந்தரர் திருத்தாள்களில் விழுந்தனர்.

''மைந்தனை இழந்தோர் நீரோ!'' என்றது

துன்பம் அகல முகமலர்ந்து தொழுவார் தம்மை முகநோக்கி
''இன்ப மைந்தன் தனை இழந்தீர் நீரோ!'' என்ன எதிர்
வணங்கி
''முன்பு புகுந்து போனதது முன்னே வணங்க
முயல்கின்றோம்
அன்பு பழுதா காம லெழுந்தருளப் பெற்றோம்'' எனத்
தொழுதார் 931

வி.ரை:- மனவேதனை நீக்கி முகம் மலர்ந்து வணங்கும் அந்தணர் தம்பதியினரை நோக்கி 'இன்பம் தரும் மகனை இழந்தவர்கள் நீங்கள்தானோ!' என்று கேட்க அவர்களும் எதிர்வணங்கி "நெடு நாளாகத் தேவரீரை வணங்க முயன்றோம். எங்கள் அன்பு நீங்காமல் இன்று தேவரீர் எழுந்தருளப் பெற்றோம்" என்று சொல்லித் தொழுதனர்.

"சிறுவனை முதலைவாயினின்றும் அழைத்துத் தருவோம்" என்றது

"மைந்தன் தன்னை இழந்ததுயர் மறந்து நான்வந் தணைந்ததற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும் மனைவி தானும் சிறுவனையான்
அந்த முதலை வாய்நின்றும் அழைத்துக் கொடுத்தே அவிநாசி
எந்தை பெருமான் கழல்பணிவேன்" என்றார் சென்றார் இடர்களைவார் 932

வி.ரை-- "மகனை இழந்த துயரையும் மறந்து நான் இங்கு வந்து சேர்ந்நதற்கே மனம் மகிழ்ந்தனர் இந்த அந்தணனும் அவன் மனைவியும், சிறுவனை யான் அந்த முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்த பின்பே அவிநாசியில் எழுந்தருளும் எந்தை பெருமான் சிவபெருமானது திருக்கழல் வணங்குவேன்" என்று துன்பங்களை நீக்கும் சுந்தரர் சொன்னார், சென்றார்.

இவ்வாறருளிச் செய்தருளி "இவர்கள் புதல்வன் தனைக்கொடிய
வெவ்வாய் முதலை விழுங்கு மடு எங்கே?" என்று வினவிக் கேட்

டவ்வாழ் பொய்கைக் கரையிலெழுந் தருளி அவனை
அன்று கவர்
வைவாள் எயிற்று முதலைகொடு வருதற் கெடுத்தார்
திருப்பதிகம் 933

வி.ரை :- இவ்வாறு கூறியருளிய பின்பு ''இவர்களது மகனைக் கொடிய வெவ்வாய் முதலை விழுங்கிய மடு எங்கே?'' என்று கேட்டறிந்தருளி, அந்த முதலை வாழும் ஆழமுள்ள பொய்கைக்கரையில் எழுந்தருளிச் சிறுவனை அன்று கவர்ந்து சென்ற கொடிய வாள் போன்ற பற்களை உடைய முதலை கொண்டு வருதற்குத் திருப்பதிகம் எடுத்துப் பாடினார்.

எமன் சிறுவன் உயிரை முதலை வயிற்றிலிட்டது

''உரைப்பார் உரை'' என்றெடுத்ததிருப் பாட்டு முடியா
முன்னுயர்ந்த
வரைப்பான் மையில் நீள் தடம்புயத்து மறலிமைந்தன்
உயிர் கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலை வயிற் றுடலிற் சென்ற
ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தென நிரம்ப முதலை வாயில்
தருவித்தான் 9:4

வி.ரை:- ''உரைப்பார் உரை'' என்று அடியெடுத்துத் திருப்பாட்டு முடிவதற்கு முன்னர் உயர்ந்த மலை போன்ற நீண்டு பருத்த தோள்களையுடைய எமன் சிறுவன் உயிரைக் கொண்டுவந்து அலைபாயும் நீரின் முதலையின் வயிற்றில் சென்ற ஆண்டுகளும் தரையில் இருந்தால் எவ்வளவு வளர்ந்திருப்பானோ அந்த அளவு வளர்ச்சி நிரம்ப முதலை வாயிலிருந்தும் கக்க வைத்தான்.

அ.ரை :- வரை— மலை. பான்மை— தன்மை, மறலி—எமன். வயிற்றுடலிற் சென்ற ஆண்டு — இரண்டு ஆண்டுகள்.

முதலை கரையில் வந்து சிறுவனை உமிழ்ந்தது

பெருவாய் முதலை கரையின்கண் கொடுவந் துமிழ்ந்த
பிள்ளை தனை
உருகா நின்ற தாய் ஓடி எடுத்துக் கொடுவந் துயிரளித்த
திருவா ளன்தன் சேவடிக்கீழ்ச் சீல மறையோ னோடு
மருவார் தருவின் மலர்மாரி பொழிந்தார் விசும்பில்
வானோர்கள். 935

வி.ரை :- பெரிய வாயையுடைய முதலை ஒன்று சிறுவனைக் கரையில் கொண்டு வந்து கக்கிடக் கண்ட தாய் உருகி ஓடி மகனை எடுத்துக் கொண்டு வந்து உயிர் அளித்த சுந்தரர் சிவந்த பாதங்களின் மீது சீல மிகு அந்தணனுடன் மணம் வீசும் தேவர் உலக மரத்தின் மலர்கொண்டு வானவர் ஆகாயத்திலிருந்து மலர் மாரி பொழிய விழுந்து வணங்கினாள்.

அ.ரை :- மருவார்—வாசனை மிகுந்த. தரு—கற்பக மாம்.

தேவர் மலர் மாரி பொழிந்தது

மண்ணி னுள்ளார் அதிசயித்தார் மறையோரெல்லாம்
உத்திரியம்
விண்ணில் ஏற விட்டார்த்தார் வேதநாதம் மிக்கெழுந்த
தண்ண லாரும் அவிநாசி அரனார் தம்மை அருமறையோன்
கண்ணின் மணியாம் புதல்வனையும் கொண்டு பணிந்தார்
காசினிமேல் 936

வி.ரை :- தேவர்கள் மலர்மாரி பொழிந்திட உலகில் உள்ளவர்கள் சிறுவன் உயிர் பெற்றதைக் கண்டு அதிசயித்தனர், நிலத்தேவர்கள் எல்லோரும் தமது மேலாடைகளை எடுத்து வானத்தில் ஏறும்படி

வீசி ஆரவாரம் செய்தனர். வேத ஒலி எங்கும் முழங்கியது ஆரூரரும் அந்தணனையும் புதல்வனையும் அழைத்துக் கொண்டு அவிநாசியில் அமர்ந்த சிவனார் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

பூணூல் கலியாணம் முடித்துச் சேரநாடு புறப்பட்டது

பரவும் பெருமைத் திருப்பதிகம் பாடிப் பணிந்து போந்தன்பு
விரவு மறையோன் காதலனை வெண்ணூல் பூட்டி
அண்ணலார்
முரசம் இயம்பக் கலியாணம் முடித்து முடிச்சே ரலர்தம்பால்
குரவ மலர்ப்பூந் தண்சோலை குலவு மலை
நாடணைகின்றார் 937

வி.ரை :- போற்றும் திருப்பதிகம் பாடிச் சென்று அன்பு தங்கிய அந்தணன் மகனுக்குப் பூணூல் கலியாணம் முரசுகள் ஒலிக்கச் செய்து முடித்து குரவ மலர்கள் நிறைந்த சோலைகள் நிறைந்த மலை நாட்டுக்கு மணிமுடி கவித்த சேரலரிடம் சென்றடைந்தார்.

புலவர் கூற்று

சென்ற சென்ற குடபுலத்துச் சிவனார் அடியார் பதிகள்
தோறும்
நன்று மகிழ்வுற் றின்புற்று நலஞ்சேர் தலமுங் கானகமுந்
துன்று மணிநீர்க் கான்யாறுந் தூறுநற் சுரமுங் கடந்தருளிக்
குன்ற வளநாட் டகம் புகுந்தார் குலவும் அடியேன் அகம்
புகுந்தார் 938

வி.ரை :- விளங்கும் அடியேனது அகம் புகுந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் மேற்குநாடு இடங்களில்

எல்லாம் சிவனடியார்களது இல்லம் தோறும் சென்று நன்கு மகிழ்ந்து இன்பமடைந்து நலமிக்க இடங்களும் காடுகளும் பொருந்தும் மணிகளை அடித்துக்கொண்டு வரும் காட்டாறும், மலைப்பாதைகளும் கடந்து சென்று குன்றுகள் நிறைந்த வளம் மிக்க சேரநாட்டினுள் புகுந்தார்

சுந்தரர் வரவை அடியார் சேரருக்கு அறிவித்தது

''முன்னாள் முதலை வாய்ப் புக்க மைந்தன் முன்போல் வரமீட்டுத்
தென்னாரூரர் எழுந்தருளாநின்றார்'' என்று சேரர் பிரார்க்
கந்நாட் டரனார் அடியார்கள் முன்னே ஓடி அறிவிப்பப்
பொன்னார் கிழியும் மணிப்பூணும் காசும் தூசும் பொழிந்தளித்தார் 939

வி.ரை:- ''முதலையின் வாய் புகுந்த சிறுவனை அவன் முதலையின் வாயினுள் போன காலந்தொட்டு எத்தனை அளவுகள் வளர்ந்திருப்பானோ அது போன்று மீண்டும் வர மீட்டுத்தந்த தென்நாட்டு ஆரூரர் எழுந்தருளுகிறார்'' என்று சேரமானுக்கு அந்நாட்டு சிவனடியார்கள் முன்பு ஓடிவந்து அறிவிக்க அது கேட்டு மகிழ்ந்த சேரன், செய்தி கொண்டு வந்த சிவனடியார்கட்குப் பொற்கிழியும், மணிகள் பதித்த ஆபரணங்களும் காசும், ஆடைகளும் அள்ளிக் கொடுத்தார்.

சேரர் பெருமாள் அடைந்த மகிழ்ச்சி

செய்வ தொன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்'' தென்
ஐயன் அணைந்தான் எனை ஆளும் அண்ணல் அணைந்தான் ஆரூரிற்

சைவன் அணைந்தான் என்துணையாந் தலைவன்
அணைந்தான் தரணிஎலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான்'' என்றோகை
முரசஞ் சாற்றுவித்தார் 940

வி.ரை :- சுந்தரர் வரவு கேட்ட சேரமான் மகிழ்ச்சியில் என்ன செய்வது என்று அறியாது மனம் மகிழ்ந்து களிப்பு மேலோங்க ''எனது ஐயன் வந்தான் எனை ஆளும் அண்ணல் வந்தான். ஆரூரின் சைவன் வந்தான், எமக்குத் துணையாகிய தலைவன் வந்தான், இந்த உலகம் எல்லாம் மேலோங்க வந்தான்,வந்தான்'' என்று மகிழ்ச்சி முரசு ஒலிக்க வைத்தான்.

அ.ரை:- ஓகை—மகிழ்ச்சி.

வரவேற்பு அலங்காரம்

பெருகுமதிநூல் அமைச்சர்களை அழைத்துப் பெரியோர்
எழுந்தருளப்
பொருவில் நகரம் அலங்கரித்துப் பண்ணிப் பயணம்
புறப்படுவித்
தருவி மதமால் யானையினை அணைந்து
மிசைகொண்டரசர் பெருந்
தெருவு கழிய எதிர்வந்தார் சேரர் குலம்உய்ந் திடவந்தார்
941

வி.ரை :- நூலறிவு மிக்க அமைச்சர்களை அழைத்துப் பெரியோர் ஆரூரர் எழுந்தருள ஒப்பற்ற நகரத்தை அலங்கரித்துப் பயணத்திற்கு ஏற்பாடு செய்து மதம் அருவி போன்று பாயும் யானையினைச் சென்றடைந்து, சேரர் குலம் உயர்வு பெற வந்த கழறிற்றறிவார் விருப்பம் கொண்டு தெரு கடந்து சுந்தரரை எதிர் கொண்டு வந்தார்.

இருவரும் கலந்து மகிழ்ந்தது

மலைநாட் டெல்லை யுட்புகுத வந்தவன்தொண்
டரைவரையில்
சிலைநாட் டியவெல் கொடித்தானைச் சேரர் பெருமான்
எதிர்சென்று
தலைநாட் கமலப் போதனைய சரணம் பணியத் தாவில்பல
கலைநாட் டமுத ஆரூரர் தாமுந் தொழுது கலந்தனரால்
942

வி.ரை :- மேருமலையில் கொடி நாட்டியவர் வழி வந்த வெற்றிக் கொடியையுடைய படைகளையுடைய சேரர் பெருமாள், சேரநாட்டு எல்லை புகுந்து வந்த வன் தொண்டரை எதிர் சென்று அன்றலர்ந்த தாமரைமலர் போன்ற தலையால் சரணமடைந்து பணிந்திடக் குற்ற மற்ற பலகலைகளும் வளரும் அமுது போன்ற ஆரூரரும் தாமும் தொழுது ஒன்று கலந்தனர்.

அ.ரை :- வரையில் சிலநாட்டிய—மேருமலையில் கொடிநாட்டிய தாவில்—வேறு பாடில்லாத, குற்றமற்ற

உடலும் உயிரும் ஒன்றானது

சிந்தை மகிழுஞ் சேரலனார் திருவாரூரரெனு மிவர்கள்
தந்த மணிமே னிகள் வேறாம் எனினும் ஒன்றாந்
தன்மையராய்
முந்த எழுங்கா தலிற் றொழுது முயங்கி உதியர் முதல்
வேந்தர்
எந்தை பெருமான் திருவாரூர்ச் செல்வம் வினவி
இன்புற்றார் 943

வி.ரை:- மனமகிழ்ந்திருக்கும் சேரலனார். திருவாரூரர் எனும் இவர்கள் இருவராயினும் உடலும் உயிரும் ஒன்றான தன்மையினராய், முந்திக்கொண்டு

எழும் அன்பினில் தொழுது ஒன்றுகூடி சேர முதல்வனார் எந்தை பெருமான் திருவாரூர்ச் சிறப்பு வினவி இன்பமடைந்தார்.

அ.ரை:- முயங்கி—தழுவி, செல்வம்—சிறப்பு

யானை மீதமர்த்தி வெண்குடை பிடித்தது

ஒருவர் ஒருவரிற்கலந்து குறைபா டின்றி உயர் காதல்
இருவர் நண்பின் செயல்கண்ட இரண்டு திறத்து
மாந்தர்களும்
பெருகு மகிழ்ச்சி கலந் தார்த்தார் பெருமாள் தமிழின்
பெருமாளை
வருகை வரையின் மிசைஏற்றித் தாம்பின் மதிவெண்குடை
கவித்தார் 944

வி.ரை:- இருவரும் ஒன்று கலந்து குறைபாடு ஏதுமின்றி உயர்ந்த நட்பின் செயல்திறம் கண்ட இருதிறத்து மக்களும் பெருமகிழ்ச்சி கொண்டு ஆரவாரம் செய்தனர். சேரமான் பெருமாள் சுந்தரரை யானைமீது ஏற்றித் தான் பின் அமர்ந்து அவருக்குக் குடைபிடித்தார்.

அ.ரை :- வரு கைவரை—யானை.

வஞ்சி மாநகர் வந்தடைந்தது

உதியர் பெருமாள் பெருஞ்சேனை ஓதங் கிளர்ந்த தென
ஆர்ப்பக்
கதிர்வெண் திருநீற் றன்பர்குழாங் கங்கை கிளர்ந்த தென
ஆர்ப்ப

எதிர்வந் திறைஞ்சும் அமைச்சர்குழாம் ஏறும் இவுளித்
துகள் ஆர்ப்ப
மதிதங் கியமஞ் சணிஇஞ்சி வஞ்சி மணிவா யிலை
அணைந்தார் 945

வி.ரை:- சேரர் பெருமாளின் பெரும்படை கடல் எழுந்தது போன்று ஆரவாரம் செய்ய, ஒளிவீசும் திருவெண் நீறு அணிந்த அன்பர்களது கூட்டம் கங்கை நதியே பெருக்கெடுத்தது என ஒலிக்க, எதிர் வந்து வணங்கும் அமைச்சர் கூட்டம் ஏறும் குதிரைகளின் புழுதி மேலோங்க, நிலவு வந்து உலவும் மேகங்கள் படியும் மதிள்களையுடைய வஞ்சி மாநகரின் அழகு வாயிலை வந்தடைந்தனர்.

அ.ரை:- ஓதம்—கடல், இவுளி—குதிரை. துகள்—புழுதி. மஞ்சு—மேகம். இஞ்சி—மதில், கோட்டை.

வரவேற்பின் சிறப்பு

ஆரண மொழிகள் முழங்கிட ஆடினர் குணலைகள்
அந்தணர்
வாரண மதமழை சிந்தின வாசிகள் கிளரொளி பொங்கின
பூரண கலசம் மலிந்தன பூமழை மகளிர் பொழிந்திடுந்
தோரண மறுகு புகுந்தது தோழர்கள் நடவிய குஞ்சரம் 946

வி.ரை-- வேதம் ஓதும் ஒலி முழங்கிட அந்தணர்கள் ஆடினர் குணலைக் கூத்தாடினர், யானைகள் மதமழை பொழிந்தன, குதிரைகள் கணைக்கும் ஒலி பொங்கின. நிறைகுடங்கள் எங்கும் மலிந்து கிடந்தன. மகளிர் மலர் மழை எங்கும் பொழிந்திடத் தோரணம் கட்டிய வீதியில் சுந்தரரையும் சேரரரையும் ஏற்றி வந்த யானை புகுந்தது.

அ.ரை:- ஆரணம்—வேதம். குணலை—ஒருவகை மகிழ்ச்சிக்கூத்து. வாரணம்—யானை. வாசி—குதிரை. மறுகு—தெரு, வீதி தோழர்—சுந்தரர், சேரர். நடவிய ஏற்றிவந்த. குஞ்சரம்—யானை.

அரிவையர் தெருவில் நடம்பயில் அணிகிலர் தளிரடி தங்கிய
பரிபுர வொலிகள் கிளர்ந்தன பணைமுர சொலிகள் பரந்தன
சுரிவளை நிரைகள் முரன்றன துணைவர்கள் இருவரும்
வந்தணி
விரிதரு பவன நெடுங்கடை விறல்மத கரியின் இழிந்தனர். 947

வி.ரை:- பெண்கள் தெருவில் நடமாடும்பொழுது அவர்களது அழகிய பாதங்களில் அணிந்த சிலம்பின் ஒலிகள் பெருகி எழுந்தன. பேரிகைகளின் ஒலிகள் எங்கும் பரந்தன. சங்கினங்களின் ஒலி வரிசையாக எழுந்தன. நண்பர்கள் இருவரும் அலங்காரம் விரிக்கப் பட்ட நீண்ட பெரிய அரண்மனை வாயிலில் வந்து யானையினின்றும் இறங்கினர்.

அ.ரை'- அரிவையர்—மகளிர். பரிபுரம்—சிலம்பு. பணைமுரசு—பெரிய முரசு, பேரிகை. சுரிவளை—சங்கு. விரிதரு பவனம்—அலங்கார விரிப்புகள் கொண்ட அரண்மனை. நெடுகடை — நீண்டகன்ற வாயில். விறல்—வெற்றி.

தூநறு மலர்தர எம்பொரி தூவிமுன் இருபுடை யின்கணும்
நான்மலை முனிவர்கள் மங்கல நாமநன் மொழிகள் விளம்பிட
மேல்நிறை நிழல் செய வெண்குடை வீசிய கவரி மருங்குற
வானவர் தலைவரும் நண்பரும் மாளிகை நடுவு புகுந்தனர்
948

வி.ரை:- தூயமணம் வீசும் மலர், முந்து, பொரி ஆகிய தூவி வர, இரு பக்கமும் வேதம் நான்கும் ஓதும்

அந்தணர்கள், மங்கலகரமான நல்ல சொற்கள் சொல்லி வாழ்த்திட மேலே நிழல் கொடுக்க வெண் குடையுடன் கவரி வீசி வரப் பக்கமெங்கும் தேவர்கள் நெருங்கி வரத் தலைவரும் அவர் நண்பரும் மாளிகை நடுவில் சென்றடைந்தனர்.

அ.ரை:- தரளம்—முத்து. நான்மறை முனிவர்—அந்தணர்கள். மருங்குறவானவர் — பக்கமெங்கும் நெருங்கி வரும் தேவர்கள். தலைவர் — சேரர்தலைவர் நண்பர்—சுந்தரர்.

அரியணை யதனில் விளங்கிட அடல் மழவிடை என நம்பியை
வரிமலர் அமளி அமர்ந்திட மலையர்கள் தலைவர் பணிந்து பின்
உரிமைநல் வினைகள் புரிந்தன உரைமுடி விலவென முன்செய்து
பரிசனம் மனமகிழும்படி பலபட மணிநிதி சிந்தினர் 949

வி.ரை:- சிங்காசனத்தில் வெற்றியுடைய இளம் காளையென விளங்கிட நம்பியை வரிவண்டுகள் வந்து மொய்க்கும் மலர் ஆசனத்தில் அமர்ந்திட மலை நாட்டவர் தலைவர் பணிந்து பின் செய்யத்தக்க பணிகள் செய்து ஏவலாட்கள் மகிழும்படி பலவகையான நிதி கொடுத்தார்,

அ.ரை:- அடல் மழவிடை—போரிடும் இளம் காளை. அமளி—ஆசனம், படுக்கை மெத்தை.

சேரநாடெங்கு சிவாலயங்களில் பணிந்தது

இன்ன தன்மையில் உதியர்கள் தலைவர்தாம் இடர்கெட முனைப்பாடி
மன்னர் தம்முடன் மகிழ்ந்தினி துறையுநாள் மலைநெடு நாட்டெங்கும்

பன்னகம்புனை பரமர்தந் திருப்பதி பலவுடன் பணிந்தேத்திப்
பொன்னெ டுந்தட மூதெயில் மாகோதையிற் புகுந்தனர்
வன்தொண்டர் 950

வி.ரை:- இவ்வாறு சேரர் தலைவரும் தமது துன்பம் நீங்க திருமுனைப்பாடி மன்னர் சுந்தரருடன் மகிழ்ந்து இனிதாக இருக்கும் நாளில் சேர நாடெங்கும் உள்ள பாம்பணிந்த பரமபிதா அமர்ந்த ஆலயங்கள் பல சென்று பணிந்து போற்றிப் பொன் போன்ற ஒளி வீசும் நீண்ட பழைய கோட்டையுடைய மகோதையில் வன்தொண்டர் சென்று புகுந்தார்.

அ.ரை:- பன்னகம்—பாம்பு. எயில்—மதில்.

திருக்கயிலை திரும்பும் காலம் வந்தெய்தியது

ஆய செய்கையில் நாள்பல கழிந்தபின் அரசர்கள் முதற்சேரர்
தூய மஞ்சனத் தொழிலினில் தொடங்கிடத் துணைவராம்
வன்தெண்டர்
பாய கங்கைசூழ் நெடுஞ்சடைப் பரமரைப் பண்டுதாம்
பிரிந்தெய்தும்
சேய நன்னெறி குறுகிடக் குறுகினார் திருவஞ்சைக்
களந்தன்னில் 951

வி.ரை:- இவ்வாறு பலநாள் கழிந்தபின்பு அரசர்களில் முதல்வரான சேரர் புனித நீராடப் போனபோது அவர் அன்பராம் வன்தொண்டர் பாயும் கங்கையைச் சடையில் அணிந்த நீண்ட சடையுடைய பரமபிதாவை ஆதியில் தாம் பிரிந்தது மீண்டும் அடைந்திடும் நல்ல நேரம் வந்திடத் திருவஞ்சைக்களம் சென்றடைந்தார்.

அ.ரை:- மஞ்சனத் தொழில்—புனித நீராடுதல்

திருவஞ்சிக்களம்

கரிய கண்டர்தங் கோயிலை வலங்கொண்டு காதலாற் பெருகன்பு
புரியும் உள்ளத் தருள்ளணைந் திறைவர்தம் பூங்கழ லிணை போற்றி
அரிய செய்கையில் அவனியில் விழுந்தெழுந் தலைப்புறும் மனை வாழ்க்கை
சரிய வே''தலைக் குத்தலை மாலை'' என்றெடுத்தன ர் தமிழ்மாலை 952

வி.ரை:- திருவஞ்சைக் களத்தினில் நஞ்சுண்டீசுவரர் கோயிலை வலம் வந்து காதல் மிகுதியால் அன்பு செய்யும் உள்ளத்தில் உட்சென்று இறைவர் மலர்த் தாள்களைப் போற்றிடும் அரிய செயலினால் மண்மீது விழுந்து தலைப்புறும் இல்வாழ்க்கை நீங்க 'தலைக்குத் தலை மாலை'' என்றெடுத்துத் தமிழ்மாலை பாடினார்.

சிவபெருமான் அருள் உள்ளம் கொண்டது

எடுத்த அத்திருப் பதிகத்தின் உட்குறிப் 'பிவ்வுல கினிற் பாசம்
அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும்' என் றன்பர் அன்பினிற் பாடக்
கடுத்த தும்பிய கண்டர்தங் கயிலையிற் கணத்தவ ருடன் கூடத்
தடுத்த செய்கைதான் முடிந்திடத் தங்கழற் சார்புதந் தளிக்கின்றார் 953

வி.ரை:- ''தலைக்குத் தலை மாலை'' என்று அடியெடுத்துப் பாடிய அந்தத் திருப்பதிகத்தின் உள்ளக் குறிப்பு, இவ்வுலகினில் பாசமாகிய எடுத்த வாழ்க்

கையை அறுத்திட வேண்டும் என்று அன்பர் சுந்தரர் சிவபெருமான் மேல் வைத்த அன்பினில் பாட நஞ்சைக் கழுத்தில் தேக்கிய சிவபெருமாள் கயிலையில் தமது கணத்தவருடன் கூடி அடுத்த செய்கைதான் முடித்திட தமது திருக்கழல்கால்.சுந்தரர் சார்ந்திட அருளுகின்றார்.

சிவபெருமான் தேவர்கட்கு ஆணையிட்டது

மன்ற லந்தரு மிடைந்த பூங் கயிலையில் மலைவல்லி
யுடன்கூட
வென்றி வெள்விடைப் பாகர்தாம் வீற்றிருந் தருளிய
பொழுதின்கண்
''ஒன்று சிந்தைநம் மூரனை உம்பர் வெள் ளா னையின்
உடனேற்றிச்
சென்று கொண்டிங்கு வாரும்'' என் றயன்முதற் றேவர்
கட்கருள் செய்தார் 954

வி.ரை:- மணங்கமழும் பலர் மரங்கள் நிறைந்த அழகு கயிலையில் மலைவல்லி உமாதேவியுடன் வெற்றி தரும் வெள் எருதில் தாம் அமர்ந்தருளியபோது, பிரமன் முதலான தேவர்களுக்கு 'நம்மீது நீங்காத மனம் கொண்ட நமது ஆரூரனை தேவேந்திரனது வெள்ளை யானை ஐராவதத்தின் மீது ஏற்றி இங்கு கொண்டு வாரும் என்று அருளினார்.

அரிஅயன் முதலான தேவர் யானையுடன் வந்தது

வான நாடர்கள் அரி அயன் முதலானோர் வணங்கிமுன்
விடைகொண்டு
தூந லந்திகழ் சோதிவெள் ளானையுங் கொண்டு வன்
தொண்டர்க்குத்

தேனலம்புதண் சோலைசூழ் மகோதையில் திருவாஞ்சைக் களஞ்சேரக்
கானிலங்கொள வலாப்கொண்டு மேவினார் கடிமதிற் றிருவாயில் 55

விரை:- தேவர் உலகத்து பிரம்மா மகாவிஷ்ணு முதலானோர் சிவபெருமான் முன் நின்று வணங்கி விடைபெற்றுக் கொண்டு தூய நவம் மிக்க வெள்ளை யானையையும் கொண்டுவந்து தேன் சிந்தும் சொலைகள் சூழ் மகோதையில் வன்தொண்டர்க்காகத் திருவஞ்சிக்களம் சென்று கால்கள் நிலத்தில் தோய வலம் வந்து காவல் கொண்ட திருமதில் வாயில் அடைந்தனர்.

வெள்ளானையேறி கயிலை செல்ல இசைந்தது

தேவர் தங்குழாம் நெருங்கிய வாய்தலிற் றிருநாவ லூரர்தம்
காவல் மன்னருப் புறப்பட எதிர்கொண்டு "கயிலைவீற் றிருக்கின்ற
பூவலம்தண் புனற்சடை முடியவர் அருளிப்பா" டெனப் போற்றி
"ஏவல்" என்றபின் செய்வ தொன் றிலாதவர் பணிந் தெழுந் தெதிரேற்றார் 956

வி.ரை, தேவர்களது கூட்டம் சென்றடைந்த வாயிலில் திருநாவலூரர் காவல் மன்னர் சுந்தரரும் புறப் பட்டுச் சென்று எதிர்கொண்டு, கயிலையில் வீற்றிருக் கின்ற மலர் மிகுந்த குளிர்ந்த நீர் தங்கிய சடைமுடியர் அருளிச் செய்த ஆணை" எனப் போற்றி "ஏவல்" என்ற பின்பு செய்வதொன்றும் இலாத அவர் பணிந்து எழுந்து ஏற்றருளினார்.

சுந்தரரை வெள்ளானையில் ஏற்றியது

ஏற்ற தொண்டரை அண்டர்வெள் ளானையின் எதிர்வலங்
கொண்டேற்ற,
நாற்ற டங்கடல் முழக்கென ஐ வனக நாதமீ தெழுந்தார்ப்பப்
போற்றி வானவர் பூமழை பொழிந்திடப் போதுவார்
உயிரெல்லாம்
சாற்று மாற்றங்கள் உணர்பெருந் துணைவரை மனத்தினிற்
கொடு சார்ந்தார் 957

வி.ரை:- கயிலை செல்ல வன்தொண்டரைத் தேவர்களது வெள்ளானையினை வலங்கொண்டு ஏற்ற நான்கு பக்கமும் கடல் முழக்கமென் ஐந்து வகையான இசை எழுந்து ஆரவாரம் செய்யப் போற்றி வானவர் மலர் மழை பொழிந்திட உயிரினங்கள் எல்லாம் பேசும் சொற்களை உணரவல்ல பெருதுணை வர் சேரர் பெருமானை மனத்தினில் கொண்டு எழுந் தருளினார்.

சேரர் பெருமானும் அது அறிந்து குதிரைமீது சென்றது

சேரர் தம்பிரான் தம்பிரான் தோழர்தஞ் செயலறிந்தப்
போதே
சாரநின் றதோர் பரியினை மிசைக்கொண்டு திருவஞ்சைக்
களஞ்சார்வார்,
விர வெண்களி றுகைத்துவிண் மேற்செலும் மெய்த்
தொண்டர் தமைக்கண்டார்,
பாரில் நின்றிலர் சென்றதம் மனத்தொடு பரியும் முன்
செலவிட்டார் 958

வி.உரை:- சேரர் காவலர் தம்பிரான் தோழர் செயலை அறிந்த அப்போதே அருகில் நின்ற ஒரு குதிரையைச் செலுத்தித் திருவஞ்சிக்களம் வந்தடைந் தார். அப்பொழுது வீரர்வெண்மையான யானையைச் செலுத்தி வான்மீது செல்லும் வன்தொண்டரைக் கண்டார். அந் நிலத்தில் நில்லாது குதிரையை யானை யின் முன் செல்ல ஓட்டினார்.

குதிரை யானையைத் தாண்டிமுன் சென்றது

விட்ட வெம்பரிச் செவியினிற் புவிமுதல் வேந்தர்தாம்
விதியாலே
இட்ட மாஞ்சிவ மந்திரம் ஓதலின் இருவிசும் பெழப் பாய்ந்து
மட்ட லர்ந்தபைந் தெரியல்வன் தொண்டர்மேல்
கொண்ட மாதங்கத்தை
முட்ட எய்திமுன் வலங்கொண்டு சென்றது மற்றதன்
முன்னால் 959

வி.உரை :- வானை நோக்கி விடப்பட்ட குதிரையின் காதில் புவியின் முதல் வேந்தர் ஓதவேண்டிய விதியின் படி விருப்பமானபடியெல்லாம் செய்யும் சிவமந்தி ரத்தை ஓதப் பெரியஆகாயத்தில் பாய்ந்துமணம்கமழும் பசிய மாலை அணிந்த வன்தொண்டர் மீது கொண்ட யானையை அடைந்திட முன் சென்று வலம் வந்த பின்பு அதற்கு முன்பாகச் சென்றது.

அ.உரை :- இட்டமாம் சிவமந்திரம் — விரும்பியபடி செய்யும் சிவமந்திரம், மட்டலர்ந்த பைந்தெரியல்— மணம் கமழும் பசுமையான மலர்மாலை. மாதங்கம்— யானை.

சேரர்படையினர் வாள்கொண்டு மடிந்தது

உதியர் மன்னவர் தம்பெருஞ் சேனையின் உடன் சென்ற
படைவீரர்
கதிகொள் வாசியிற் செல்பவர்தம்மைத்தங் கட்டியப்
படுமெல்லை
எதிர்விசும் பினிற் கண்டுபின் கண்டிலர் ஆதலின்
எல்லாரும்
முதிரும் அன்பினில் உருவிய சுரிகையால் முறை முறை
உடல் வீழ்த்தார் 980

வி.ரை :- சேரர் பெருமானுடன் சென்ற பெரும் படை வீரர்கள் வான்நோக்கிச் செல்லும் தம் மன்ன வனைத் தமது கண்ணுக்கு எட்டிய அளவுகண்டு பின்பு காணாதவராய் முதர்ந்த அன்பினில் அவரவர் உடை வாளால் உயிர்நீத்து விழுந்தனர்.

அ.ரை :- சுரிகை—உடைவான்.

வீர யாக்கையை மேல்கொண்டு சென்று போய் வில்லவர்
பெருமானைச்
சார முன்சென்று சேவக மேற்றனர் தனித் தொண்டர்
மேல் கொண்ட
வாரும் மும்மதத் தருவிவெள் ளானைக்கு வயப்பரி
முன் வைத்துச்
சேரர் வீரருஞ் சென்றனர் மன்றவர் திருமலைத்
திசைநோக்கி. 981

வி.ரை :- தமது உடைவாளைக் கொண்டு தமது உயிர் நீத்தவீரர்கள் புகழுடும்பை மேலே கொண்டு சென்று வில்லவர் பெருமான் சேரரை அடைந்து வழக்கம் போல சேவகம் ஏற்றனர். தனித்தொண்டர் மேல் கொண்ட அன்பாலும், மும்மதம் அருவி எனப்

பொழியும் வெள்ளை யானைக்கு வெற்றிக் குதிரையை முன்பாக வைத்துச் சேரரது வீரர்களும் திருமலைத் திசை நோக்கிச் சென்றனர்.

யானை மேல்கொண்டு செல்கின்ற பொழுதினில் இமையவர்
குழாமென்னும்
தானை முன்செலத் "தானெனை முன்படைத் தான்"
எனும் தமிழ்மாலை
மான வன்தொண்டர் பாடிமுன் னணைந்தனர்
மதிநதி பொதி வேணித்
தேன லம்புதண் கொன்றையார் திருமணத் தென்திசைத்
திருவாயில் 962

வி.ரை:- சுந்தரர் யானை மேலமர்ந்து செல்லும் பொழுது இமையவர் கூட்டமெனும் சேனை முன் செல்லத் "தானெனை முன்படைத்தான்" என்னும் தமிழ்மாலை,புகழ்மிக்க வன்தொண்டர் பாடிக்கொண்டு நிலவும், ஆறும் அணிந்த சடையர், தேன் ததும்பும் கொன்றை அணிந்தவரது திருக்கயிலை மலையின் தெற்குத் திசைத்திருவாயில் முதலில் சென்றடைந்தார்.

மாசில் வெண்மை சேர் பேரொளி உலகெலாம் மலர்ந்திட
வளர் மெய்ம்மை
ஆசில் அன்பர்தஞ் சிந்தைபோல் விளங்கிய அணிகிளர்
மணி வாயில்
தேசு தங்கிய யானையும் புரவியும் இழிந்துசேணிடைச்
செல்வார்
ஈசர் வெள்ளிமா மலைத்தடம் பலகடந் தெய்தினர்
மணிவாயில் 963

வி ரை:- குற்றமற்ற வெண்மை சேர்ந்த பேரொளி உலகெலாம் பரவிட மலர்ந்த உண்மை அன்பர் தம் மனம் போன்று விளங்கிய ஒளிவீசும் அழகு வாயிலில்

ஒளிதங்கிய யானை மீதிருந்து குதிரை மீதிருந்து இறங்கி வெகுதூரம் ஈசரது வெள்ள மாமலையின் இடம் பல கடந்து சென்று மணிவாயில் அடைந்தனர்'

அணுக்கன் திருவாயிலடைந்தது

அங்கண் எய்திய திரு அணுக்கன்திரு வாயிலின்அடற் சேர
தங்கள் காவலர் தடையுண்டு நின்றனர் தம்பிரான்
அருளாலே
பொங்கு மாமதம் பொழிந்த வெள் ளானையின் உம்பர்
போற்றிடப் போந்த
நங்கள் நாவலூர் காவலர் தண்ணினார் அண்ணலார்
திருமுன்பு 964

வி.ரை :- அங்கு சென்ற திருஅணுக்கன் திருவாயிலில் போரிடும் சேரர் அவரது காவலர்கள் தடைபட்டு நின்றனர். தம்பிரான் சிவபெருமான் அருளினால் பொங்கும் பெருமதம் பொழிந்த வெள்ளானையில் தேவர்கள் போற்றிட்ச் சென்று நாவலூர் காவலர் அண்ணலார் சிவபெருமான் முன்பு சென்றடைந்தார்.

நெற்றிக் கண்ணார் திருமுன்பு விழுந்தது

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்தெழுந்து
சேணிடை விரடட்
கன்று கோவினைக் கண்டணைந்தது எனக் காதலின்
விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை
வலப்பாகத்
தொன்றும் மேனியர் ''ஊரனே! வந்தனை'' என்றனர்
உலகுய்ய 965

வி.ரை :- காட்டில் விடப்பட்ட கன்று தாய்ப் பசுவைக் கண்டு சேர்ந்தது போன்று நெற்றிக் கண்ணர் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்தெழுந்து அன்பின் வேகத்தை அடைந்து நின்று போற்றிய ஒப்பற்ற தொண்டரை உமையம்மையை வலப்பாகமாகத் தோன்றும் உடலை யுடைய பிரான் ''ஊரனே வந்தனை'' என்று உலகம் உயர்வுபெறக் கூறினார்.

பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்கியது

''அடியனேன்பிழை பொறுத்தெனை ஆண்டுகொண்டத்
தொடக்கினை நீக்கி,
முடிவிலா நெறி தரும் பெருங் கருணை என் தரத்ததோ''
என முன்னர்ப்
படியும் நெஞ்சோடு பன்முறை பணிந்தெழும் பரம்பரை
ஆனந்த
வடிவு நின்றது போன்றின்ப வெள்ளத்து மலர்ந்தனர்
வன்தொண்டர் 966

வி.ரை :- ''அடியனேன் பாவம் மன்னித்து அட் கொண்டு பிறவித் தொடர்பை நீக்கி முடிவில்லாத பேரின்பப் பெருவாழ்வு தரும் பெருங் கருணையின் தன்மையதோ!'' என்று சிவபெருமானைத் தொழும் பரம்பரை மனத்தினுடன் பலமுறை பணிந்து எழும் இன்ப வடிவு நின்றது போன்று இன்ப வெள்ளத்தில் வன்தொண்டர் மிதந்தார்.

சேரனையும் அழைத்து வந்தது

நின்ற வன்தொண்டர் நீரணி வேனிய! நின்மலர்க்கழல் சாரச்
சென்று சேரலன் திருமணி வாயிலின் புறத்தினன்'' எனச்
செப்பக்

குன்ற வில்லியார் பெரியதே் வரைச் சென்று கொணர்கென
அவரெய்தி
வென்றி வானவர்க் ' கருளிப்பா''டென அவர் கழல்
தொழு விரைந்தெய்தி 967

வி.ரை :- வணங்கி நின்ற வன்தொண்டர் சிவபெருமானை நோக்கி நீர் தேக்கிய சடையோனே உனது மலர்போன்ற திருத்தாழ்களை அடைந்திட சேரன் அழகிய மணி வாயிலின் வெளியே கிடக்கிறான் என்று சொல்ல, மேருமலையை வில்லாக உடைய சிவபெருமான் நந்தி தேவரிடம் ''அவரைச் சென்று கூட்டி வருக, என்று அருளியதும் நந்தியம் பெருமான் சென்று சேரர் பெருமானுக்கு அருள் இப்போது கிட்டியது எனச் சேரரும் சிவபெருமான் திருக்கழல் தொழ விரைந்து சென்றார்.

அ.ரை :- வென்றிவானவர்—சேரன்.

''நாம் அழையா முன் வந்ததன் காரணம் என்ன'' என்றது

மங்கை பாகர்தந் திருமுன்பு சேய்த்தாக வந்தித்து மகிழ்
வெய்திப்
பொங்கும் அன்பினிற் சேரலர் போற்றிடப் புதுமதி
அலைகின்ற
கங்கை வார்சடைக் கயிலைநா யகர்திரு முறுவலின்
கதிர் காட்டி
''இங்கு நாம்அழை யாமைநீ எய்திய தென்?'' என்ன
அருள் செய்தார் 968

வி.ரை :- உமையம்மையை ஒருபாகமாக உடைய சிவபெருமான் முன்பு குழந்தையாக வந்து வணங்கி மகிழ்ச்சியடைந்து பொங்கும் அன்பினில் சேரர்

பெருமான் போற்றிட இளம் நிலவும் கங்கை ஆறும் அலைபாயும் அழகிய கயிலை நாயகர் புன்முறுவல் பூத்து "இங்கு நாம் அழையாமுன்பே வந்ததன் காரணம் என்ன?" என்றருளினார்.

"ஆரூரர் கழல் சேவித்து வந்தேன்" என்றது

அரசர் அஞ்சலி கூப்பிநின் "அடியனேன் ஆரூரர் கழல் போற்றிப்
புரசை யானைமுன் சேவித்து வந்தனன் பொழியுநின் கருணைத் தெண்
டிரைசெய் வெள்ளமுன் கொடுவந்து புகுதலின் திருமுன்பு வரப்பெற்றேன்
விரைசெய் கொன்றைசேர் வேணியாய்! இனியொரு விண்ணப்பம் உள"தென்று 969

வி.ரை :- சேரர் பெருமாள் கைகளைத் தலைமேல் கொண்டு அஞ்சலி செய்து" அடியேன் ஆரூரர் கழல் போற்றிக், கழுத்தில் கயிறு தொங்கிக் கொண்டிருக்கும் வெள்ளானை முன் வந்ததனால் சந்நதி முன்பு வரும் பேறு பெற்றேன். மணம் வீசும் கொன்றை அணிந்த சடையப்பரே! இன்னமும் ஒரு விண்ண்ப்பம் உளது எனறார்.

"திருஉலா கேட்டிட" வேண்டியது

"பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும் பெருமையாய்! உனை அன்பால்
திருஉலாப்புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெற வேண்டும்,
மருவு பாசத்தை அகன்றிட வன்தொண்டர் கூட்டம் வைத்தாய்" என்ன
அருளும் ஈசருஞ் "சொல்லுக" என்றனர் அன்பருங் கேட்பித்தார். 970

வி.ரை :- "என்றும் வளர்ந்து கொண்டிருக்கும் வேதம்நான்கும் முனிவர்களும் துதிப்பதற்கு அரிய பெருமை உடையோய்! உன்னை அன்பால் திருஉலாப் புறம் பாடினேன் திருச்செவி சாய்த்திட வேண்டும், பொருந்தும் பிறவிப் பாசம் நீக்கிட வன்தொண்டருடன் சேர்த்து வைத்த பரம்பொருளே!" என்று கூற அருள் உள்ளம் கொண்ட ஈசனும் "சொல்லுக" என்றதும் அன்பரும் கேட்கச் செய்தார்.

சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருஉலாப் புறங்
கொண்டு
நாரி பாகரும் நலமிகு திருவருள் நயப்புடன் அருள்
செய்வார்
"ஊர னாகிய ஆலால சுந்தர னுடனமர்ந் திருவீரும்
சார நங்கண நாதராந் தலைமையில் தங்கும்" எனறருள்
செய்தார் 171

வி.ரை :- சேரர் பெருமாள் அன்புடன் கேட்க வைத்த திருஉலாப் புறங்கொண்டு பெண்ணை ஒரு பாகமாக உடைய சிவபெருமானும் நலம் மிகு திருஅருள் விருப்பமுடன், "திருஆரூரானாகியஆலால் சுந்தரருடன் அமர்ந்து இருவரும் சேர்ந்து நமது கண நாதரது தலைமையில் தங்கியிரும்" என்று விருப்பமுடன் அருள் கூர்ந்தார்.

அ.ரை :- நாரியார்—பெண்

அன்ன தன்மையில் இருவரும் பணிந்தெழுந் தருள் தலை
மேற்கொண்டு
மன்னும் வன்தொண்டர் ஆலால சுந்தரர் ஆகித்தாம்
வழுவாத

முன்னை நல்வினைத் தொழில்தலை நின்றனர் முதற்சேரர்
பெருமானும்
நன்மை சேர்கண நாதராய் அவர்செயும் நயப்புறு
தொழில் பூண்டார் 972

வி.ரை:- இவ்வாறாக இருவரும் பணிந்து எழுந்து ஈசன் அருளைத் தலைமேல் கொண்டு பொருந்தும்; வன்தொண்டர் முன்பு போன்று ஆலால சுந்தரர் ஆகி நீங்காத நல்வினையாம் சிவபெருமானுக்குத் தொண்டு செய்யும் தொழிலை மேற்கொண்டார். சேரரும் நன்மை செய்யும் கண நாதராய் அவர்கள் செய்யும் தொழில் களைச் செய்தார்.

தலத்து வந்துமுன் னுதயஞ்செய் பரவையார் சங்கிலி
யாரென்னும்
நலத்தின் மிக்கவர் வல்வினைத்தொடக்கற நாயகி
அருளாலே
அலத்த மெல்லடிக் கமலினி யாருடன் அணிந்திதை யாராகி
மலைத்த னிப்பெரு மான்மகள் கோயிலில் தந் தொழில
வழிநின்றார் 973

வி.ரை:- பூமிக்கு வந்து முன்பு தோன்றிய பரவை யாரும் சங்கிலியார் என்னும் நலமிக்க இருவரும் தமது கொடிய வினையின் தொடர்பு நீக்கப் பெற்று பார்வதி தேவியாரின் அருளால் செம்பஞ்சு சேர்த்த காமலினி யாருடன் அணிந்திதையாராகி மலையமான் மகள் உமாதேவியின் கோயிலில் தமது பணி செய்தனர்.

அ.ரை:- தலத்து—பூமி. அலத்த—செம்பஞ்சு

வாழி மாதவ ராலால சுந்தரர் வழியிடை அருள்செய்த
ஏழு சைத்திருப் பதிகம் இவ் உலகினில் ஏற்றிட ஏறிமுந்நீர்

ஆழி வேந்தனாம் வருணனுக் களித்திட அவனும் அவ்
வருள்சூடி
ஊழி யிற்றணி யொருவர் தந் திருவஞ்சைக் களத்திலுய்த்
துணர்வித்தான் 974

வி,ரை:- மாதவனருளால் வாழ்த்துப் பெற்று ஆலால சுந்தரரது வழிப்படி அருள்செய்த ஏழு இசைகளுடன் கூடிய திருப்பதிகம் இவ்வுலகினில் அரங்கேற்றிட அலைவீசும் மூன்று தன்மை வாய்ந்த கடலின் வேந்தனான வருணனுக்குக் கொடுத்திட அவனும் அதன் அருள் கொண்டு ஏற்றுத் திருவஞ்சைக் களத்தில் கொண்டுவந்து வெளியிட்டான்.

சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்த அத்திரு உலாப்புறம்
அன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா சாத்தனார்
தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட ஊர்தனில் வெளிப்படப்
பகர்ந்தெங்கும்
நார வேலை சூழ் உலகினில் விளங்கிட நாட்டினர்
நலத்தாலே 975

வி.ரை:- சேரர் பெருமாள் விண்ணப்பம் செய்து பாடிய அந்தத் திருஉலாப்புறம் கயிலையில் கேட்ட மாசாத்தனார் கொண்டுவந்து இந்த உலகில் வேதியர் வாழும் திருப்பிட ஊரில் வெளிப்படப்பாடி எங்கும் நீர்க் கடலால் சூழப்பட்ட உலகினில் விளங்கிடும் நலத்தால் நாட்டினார்:

புலவர் வரழ்த்துரை

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்குட் நிலவி உலகெலாம் 976

விரை:- திருத்தொண்டர் புராணத்தைப் பயில்வதால் என்றும் இன்பம் பெருகும் இயல்புடையதனால் ஒன்றாக அன்பைச் செலுத்தி உள்ளமும் ஓங்கிட மன்றத்துள் ஆடுவார் அடியார்களது வானளாவிய புகழ் உலகெங்கும் நிலவி நின்றது.

—: o :—

தெய்வச் சேக்கிழார் அருளிய சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் மூலமும் கோக்கலை ஜேராஜன் உரையும் ஞற்றும்.

—: o :—